649

# நட்சத்திர சிந்தாமணி

## மூன்றாம் பாகம்

(உத்திராடம் முதல் ரேவதி முடிய)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

T.16261

சரசுவதி மகால் வெளியீடு எண் — 482

# நட்சத்திர சிந்தாமணி

**நட்சத்திரங்களைப் பற்றி அனைத்துச் செய்திகளும் அடங்கிய ஒரு கலைக் களஞ்சியம்**

## மூன்றாம் பாகம்

(உத்திராடம் முதல் ரேவதி முடிய)

விளக்கி உரை வளம் தந்து பதிப்பித்தவர் பன்மொழிப் புலவர் ஜோதிஷ பானு பேராசிரியர்

**Dr. புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார்**

சிறப்புக் கேண்மை பதிப்பாசிரியர்

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்**
**சரசுவதி மகால் நூலகம்**
தஞ்சாவூர்.

**2006** **[விலை ரூ. 200]**

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : நட்சத்திர சிந்தாமணி |
| பதிப்பாசிரியர் | : Dr. புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியர் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலாகம் தஞ்சாவூர் |
| வெளியீட்டு எண் | : 482 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : ஜூலை 2006 |
| தாள் | : 10. 6 KG. 60 GSM. Double Crown |
| நூல் அளவு | : 34 × 48 |
| பக்கங்கள் | : 440 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : துளசிராமன் அச்சகம் சிதம்பரம். |
| புத்தகக்கட்டு | : பிரிவுத்தையல் |
| பொருள் | : சோதிடம் |
| விலை | : ரூ. 200/. |

# வெளியீட்டாளர் முகவுரை

கல்விக்களஞ்சியமாய் விளங்கும் சரசுவதி மகால் நூலகத்தில் பழம்பெருமை வாய்ந்த ஓலைச்சுவடிகளிலிருந்து அரிய பல செய்திகளை பதிப்பிக்கும் பணி மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் **நட்சத்திர சிந்தாமணி** என்னும் இந்நூலின் முதல் பாகத்தில் அசுவினி நட்சத்திரம் முதல் பூர நட்சத்திரம் முடிய வெளிவந்துள்ளது. பின் இரண்டாம் பாகம் உத்திர நட்சத்திரம் முதல் பூராட நட்சத்திரம் முடிய வெளியிடப்பட்டுள்ளது. மூன்றாம் பாதம் உத்திராடம் நட்சத்திரம் முதல் ரேவதி நட்சத்திரம் முடிய வெளியிடப் படுகிறது.

இந்நூல் ஜோதிட ரத்னாகரம், நாரதீயம், ஸ்ரீதத்துவநிதி போன்ற நூல்களிலிருந்து 27 நட்சத்திரங்களைப் பற்றிய அனைத்துச் செய்திகளும் திரட்டித்தரப்பட்டுள்ளன.

இதை அடுத்து 27 நட்சத்திரங்களைப் பற்றிய பொது செய்திகள் பலவற்றை ஏறக்குறைய 130 பொருண்மைகளைத் திரட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் நூலகத்தின் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியரும், பேராசியருமான புலவர் **ஜோதிடபானு** முனைவர் **புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார்** அவர்கள் அரிதின் முயன்று பதிப்பித்து வழங்கியுள்ளார்கள். அவருக்கு என்பாராட்டுகள்.

இப்பதிப்பு வெளிவர உறுதுணை நின்ற நூலக நிருவாக அலுவலர் **திரு. சாமி. சிவஞானம்** அவர்களுக்கும், இந்நூலக

முன்னாள் வெளியீட்டு மேலாளர் திரு.எம். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கியநடுவண் அரசுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் நன்முறையில் அச்சிட்டுத்தந்த சிதம்பரம் துளசிராமன் அச்சகதாரருக்கும் என் பாராட்டுகள்.

சோதிடத்துறை நூலாகையால் சோதிடத்துறையில் ஈடுபாடுடையவர்களுக்கும், பொதுவாசகர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குனர்.
சரஸ்வதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
29—7—2006

# நட்சத்திர சிந்தாமணி
## (உத்திராடம் முதல் ரேவதி முடிய)
## ஆசிரியர் முகவுரை

எல்லாம் வல்ல என் தாய்க்கடவுளின் அருளால் நட்சத்திர சிந்தாமணி முதல் பாகம் பூரம் நட்சத்திரம் வரையிலான பகுதி **வாசகர்கள் கைகளில் தவழ்ந்துள்ளது.**

பல மூலங்களிலிருந்து நூற்றுக்கணக்கான விஷயங்களை இவற்றில் தொகுத்துள்ளது வெள்ளிடை, இது ஒரு நட்சத்திரங்களைப் பற்றிய " **கலைக் களஞ்சியம்** " என்றே சொல்லலாம்

**இந்த** மூன்றாம் பகுதியில் உத்திராடம் முதல் ரேவதி வரையிலான நட்சத்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து ஜோதிஷ ரத்னாகரம், நாரதீயம் ஸ்ரீ தத்துவ நிதி, விதி விலக்குகளுடனும் நட்சத்திர சிந்தாமணி போன்ற நூல்களிலிருந்து 27 நட்சத்திரங்களைப் பற்றிய அனைத்து செய்திகளும் திரட்டித்தந்துள்ளேன்.

இதை அடுத்து 27 நட்சத்திரங்களைப் பற்றிய பொது செய்திகள் பலவற்றை ஏறக்குறைய 130 விஷயங்களைத் திரட்டிக் கொடுத்துள்ளேன்.

இவற்றில் மூல நட்சத்திரம் ஆயில்யம், கேட்டை போன்ற பெண்களுக்கு ஆகாது என்று சொல்லப்பட்ட நட்சத்திரங்களைப் பற்றிய செய்திகளையும் விதி விலக்குகளையும் அமிருத கடிகை. விஷகடிகை நவக்கிரக நட்சத்திர லப்தை லத்தாபலன் (உதைப்பு) இன்னும் இது போன்ற பல விஷயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன

இதையும் தொடர்ந்து 27 நட்சத்திரங்களுக்கும் உரிய தானம் காரகங்கள் முதலியவையும் தனியாகக கொடுத்துள்ளேன், இன்னும் எவ்வளவோ விஷயங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இவையெல்லாம் சுவடிகளில் இல்லா விட்டாலும் பயன் கருதி என் சொந்த குறிந்பேடுகள், பிற மொழி நூல்கள் முதலிய வற்றில் இருந்து தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

ஏறக்குறைய 1995 முதல் இன்றைய வரை 6, 7 ஆண்டுகள் இதற்காக உழைத்து சிறிது சிறிதாகச் சேர்த்து எழுத வேண்டி வந்தது.

இவ்வளவுக்கும் அவ்வப்பொழுது எனக்கு ஊக்கமளித்து வந்து இன்றளவும் என் உழுவலன்பராகத்திகழும் மஹாலின் முன்னாள் வெளியீட்டுத்துறைத் தலைவர் திரு A. பஞ்சநாதன் எம். ஏ., எம். எஸ் ஐ எஸ் அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

மேலும் மஹாலில் தற்போதைய நூலகர் பணியில் உள்ள திரு. M.பாலசுப்ரமணியன் அவர்கள் இப்பதிப்பு செம்மையாக நடக்க அவ்வப்பொழுது இதன் முன்னேற்றத்தைப் பற்றி உசாவி ஆவன செய்துவந்தார். அவருக்கும் என் நன்றி உரித்து பதிப்புலகில். தமிழிலும் மட்டுமல்லாமல் வேறு எம்மொழியிலும் ஏறக்குறைய 1200 பக்கங்கள் வருமளவுக்கு நட்சத்திரங்களைப் பற்றி ஒரு பெரு நூல் இது வரை எழுதப்படவில்லை என்பது தெளிவு

இப்படி ஒரு முயற்சி வெற்றிபெறச் செய்த என் தாய்க் கடவுளின் திருவருளை எண்ணி மிகவும் மகிழ்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவையெல்லாம் எனக்குக் கிட்டும்படிச் செய்த என் ஞான ஆசான் சென்னை வித்துவான் குப்புசாமி ஆச்சாரி அவர்களை நன்றியுடன் வணங்கி அவருடைய திருவடிகளுக்கு இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

*குற்றங்கள் நீக்கி குறையற்று வாசித்தல்*
*கற்றறிந்த வல்லோர் கடன்*

தேதி
29—7—2006

அன்பன்

ஜோதிஷபானு
மந்திர மூர்த்தி வாஸ்து சாஸ்திர மார்த்தாண்ட
பேராசிரியர் Dr. புலிப்பாணி சுந்தரவரதாச்சாரியார்
New No. 66 Old No. 42 J.K. Flats தம்பையர் ரோடு'
மேற்கு மாம்பலம், சென்னை. 600033
தொ பே. 044-2471287

# பொருளடக்கம்

*அத்தியாயம் 29 உத்திராடம் நட்சத்திரம்* பக்கம் *1*

உத்திராடம் நட்சத்திர பலன்கள்

1. பொதுப்பலன்
2, பிறசெய்திகள்
3, பிறந்தவர் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்

8, உத்திராடம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்றபலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் நின்ற பலன்
3. செவ்வாய் நின்ற பலன்
4. புதன் நின்ற பலன்
5. குரு நின்ற பலன்
6. சுக்கிரன் நின்ற பலன்
7. சனி நின்ற பலன்
8. ராகு நின்ற பலன்

9. உத்திராடத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. உத்திராடத்தில் நின்ற சூரியனை

1. சந்திரன் பார்த்த பலன்
2. செவ்வாய் பார்த்த பலன்
3. புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

2, உத்திராடத்தில் நின்ற சந்திரனை

1 சூரியன் பார்த்த பலன்
2 செவ்வாய் பார்த்த பலன்
3 புதன் பார்த்த பலன்

4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

3. உத்திராடத்தில் நின்ற செவ்வாயை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3. புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

4. உத்திராடத்தில் நின்ற புதனை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 குரு பார்த்த பலன்
5 சுக்கிரன் பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

5. உத்திராடத்தில் நின்ற குருவை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 சுக்கிரன் பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

6, உத்திராடத்தில் நின்ற சுக்கிரனை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

7. உத்திராடத்தில் நின்ற சனியை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சுக்கிரன் பார்த்த பலன்

10. உத்திராடத்தில் நட்சதிர விம் சோத்திரி தசைகள்

11. உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

12. உத்திராடம் நட்சத்திர பாத பலன்

உத்திராடம் நட்சத்திர முதல் பாத பலன்

13. உத்திராடம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

14 உத்திராடம் நட்சத்திர முதல் பாதத்தில் கால சக்கர தசை

உத்திராடம் நட்சத்திர 2 ஆம் பாத பலன்

உத்திராடம் நட்சத்திர 2 ஆம் பாதத்தில்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

15 உத்திராடம் நட்சத்திர 2 ஆம் பாதத்தில் கால சுக்கிர தசை முதலயவை

16. உத்திராடம் நட்சத்திர 3 ஆம் பாத பலன்

17. உத்திராடம் நட்சத்திர 3-ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

18. உத்திராடம் நட்சத்திர 3-ஆம் பாதத்தில் கால சக்கிர தசை

19. உத்திராடம் நட்சத்திர 4-ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. உத்திராடம் நட்சத்திர 4-ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

உத்திராடம் 1- ஆம் பாத கர்ம விபாக பலன்

உத்திராடம் 2- ஆம் பாத கர்ம விபாக பலன்

உத்திராடம் 3- ஆம் பாத கர்ம விபாக பலன்

உத்திராடம் 4- ஆம் பாதி கர்ம விபாக பலன்

*அத்தியாயம் 30 திருவோணம் நட்சத்திரம்* **பக்கம் 33**

திருவோணம் நட்சத்திரம் பெயர்கள்

1· பொதுப்பலன்
2. பிற செய்திகள்
3, பிறந்தவர் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்

8. திருவோணம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2, சந்திரன் நின்ற பலன்
3. செவ்வாய் நின்ற பலன்
4, புதன் நின்ற பலன்
5. குரு நின்ற பலன்
6, சுக்கிரன் நின்ற பலன்
7. சனி நின்ற பலன்
8. ராகு நின்ற பலன்

9. திருவோணம் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. திருவோணத்தில் நின்ற சூரியனை

1. சந்திரன் பார்த்த பலன்
2. செவ்வாய் பார்த்த பலன்

3. புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

2. திருவோணத்தில் நின்ற சந்திரனை

1. சூரியன் பார்த்த பலன்
2, செவ்வாய் பார்த்த பலன்
3, புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

3, திருவோணத்தில் நின்ற செவ்வாயை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3, புதன் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

4. திருவோணத்தில் நின்ற புதனை

1. சூரியன் பார்த்த பலன்
2, சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4. குரு பார்த்த பலன்
5. சுக்கிரன் பார்த்த பலன்
6. சனி பார்த்த பலன்

5. திருவோணம் நின்ற குருவை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்

5 சுக்கிரன் பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

6. திருவோணம் நின்ற சுக்கிரனை

1 சூரியன் பரர்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

7. திருவோணம் நின்ற பலன்

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சுக்கிரன் பார்த்த பலன்

8. திருவோணம் நட்சத்திர விம் சோத்திர தசைகள்

10, திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

11. திருவோணம் நட்சத்திர பாத பலன்

திருவோணம் நட்சத்திர முதல் பாத பலன்

12, திருவோணம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்

7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

13. திருவோணம் நட்சத்திர முதல் பாதத்தில் கால சக்கர தசை

திருவோணம் நட்சத்திர 2 ஆம் பாத பலன்

திருவோணம் நட்சத்திர 2 ஆம் பாதத்தில்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

14. திருவோணம் நட்சத்திர 2 ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலியவை.

15. திருவோணம் நட்சத்திர 3- ஆம் பாத பலன்

16. திருவோணம் நட்சத்திர 3- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

17. திருவோணம் நட்சத்திர 3- ஆம் பாதத்தில் கால சக்கிர தசை

18. திருவோணம் நட்சத்திர 4- ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

19. திருவோணம் நட்சத்திர 4- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

திருவோணம் 1-ஆம் பாத கர்ம விபாக பலன்

திருவோணம் 2- ஆம் பாத கர்ம விபாக பலன்

திருவோணம் 3- ஆம் பாத கர்ம விபாக பலன்

திருவோணம் 4- ஆம் பாத கர்ம விபாக பலன்

*அத்தியாயம் 31 அவிட்டம் நட்சத்திரம்* பக்கம் 77

அவிட்ட நட்சத்திரப் பெயர்கள்

1 பொதுப்பலன்
2 பிற செய்திகள்
3 பிறந்தவர் பலன்கள்
4 பிறர் மதப்படி பிறந்தவர்களின் பலன்கள்
5 பிற நூல்களில் உள்ள செய்திகள்
6 சாந்தி
7 இதர சாதரங்கள்

8. அவிட்டம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |

9. அவிட்டத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. அவிட்டத்தில் நின்ற சூரியனை

| | | |
|---|---|---|
| 1 | சந்திரன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

2. அவிட்டத்தில் நின்ற சந்திரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த் பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

3. அவிட்டத்தில் நின்ற செவ்வாயை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

4. அவிட்டத்தில் நின்ற புதனை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 குரு பார்த்த பலன்
5 சுக்கிரன் பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

5. அவிட்டத்தில் நின்ற குருவை

1. சூரியன் பார்த்த பலன்
2. சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 சுக்கிரன் பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

6. அவிட்டத்தில் நின்ற சுக்கிரனை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சுக்கிரன் பார்த்த பலன்

7. அவிட்டத்தில் நின்ற சனியை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சுக்கிரன் பார்த்த பலன்

10. அவிட்டம் நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11. அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. அவிட்டம் நட்சத்திர பாத பலன்

அவிட்டம் நட்சத்திர முதல் பாத பலன்

13. அவிட்டம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற
2. சந்திரன் நின்ற
3, செவ்வாய் நின்ற
4, புதன் நின்ற
5. குரு நின்ற
6. சுக்கிரன் நின்ற
7. சனி நின்ற
8. ராகு நின்ற
9. கேது நின்ற

14. அவிட்டம் நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

அவிட்டம் நட்சத்திர 2ஆம் பாத பலன்

அவிட்டம் நட்சத்திர 2ஆம் பாதத்தில்

1. சூரியன் நின்ற
2. சந்திரன் நின்ற
3. செவ்வாய் நின்ற
4. புதன் நின்ற
5, குரு நின்ற
6. சுக்கிரன் நின்ற
7. சனி நின்ற
8. ராகு நின்ற
9. கேது நின்ற

15. அவிட்டம் நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலயவை

16. அவிட்டம் நட்சத்திர 3- பாத பலன்

17. அவிட்டம் நட்சத்திர 3- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்.

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் நின்ற பலன்
3. செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5. குரு நின்ற பலன்
6. சுக்கிரன் நின்ற பலன்
7. சனி நின்ற பலன்
8. ராகு நின்ற பலன்
9. கேது நின்ற பலன்

18. அவிட்டம் நட்சத்திர 3- ஆம் பாதத்தின் கால சக்கிர தசை

19. அவிட்டம் நட்சத்திர 4- ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. அவிட்டம் நட்சத்திர 4- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் நின்ற பலன்
3. செவ்வாய் நின்ற பலன்
4. புதன் நின்ற பலன்
5. குரு நின்ற பலன்
6. சுக்கிரன் நின்ற பலன்
7. சனி நின்ற பலன்
8, ராகு நின்ற பலன்
9. கேது நின்ற பலன்

அவிட்டம் 1- ஆம் பாத கர்ம விபாக பலன்

அவிட்டம் 2- ஆம் பாத கர்ம விபாக பலன்

அவிட்டம் 3- ஆம் பாத கர்ம விபாக பலன்

அவிட்டம் 4- ஆம் பாத கர்க விபாக பலன்

அத்தியாயம் 32 கும்பராசி பொது குணங்கள் பக்கம் 10

அத்தியாயம் 33 சதயம் நட்சத்திரம் 11

சதயம் நட்சத்திர பெயர்கள்

1. பொதுப் பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர் பலன்கள்
4, பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்

8. சதயம் நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4. புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்

9. சதயத்தில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. சதயத்தில் நின்ற சூரியனை

1 சந்திரன் பார்த்த பலன்
2 செவ்வாய் பார்த்த பலன்
3 புதன் பார்த்த பலன்
4 குரு பார்த்த பலன்
5 சுக்கிரன் பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

2. சதயத்தில் நின்ற சந்திரனை

1 சூரியன் பார்த்த பலன்
2 செவ்வாய் பார்த்த பலன்

| | | |
|---|---|---|
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

3. சதயத்தில் நின்ற செவ்வாயை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3. | புதன் | பார்த்த பலன் |
| 4. | குரு | பார்த்த பலன் |
| 5. | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6. | சனி | பார்த்த பலன் |

4. சதயத்தில் நின்ற புதனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

5. சதயத்தில் நின்ற குருவை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

6. சதயத்தில் நின்ற சுக்கிரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |

5 குரு பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

7. சதயத்தில் நின்ற சனியை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சுக்கிரன் பார்த்த பலன்

10. சதயம் நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11. சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

12. சதயம் நட்சத்திர பாத பலன்

13. சதயம் நட்சத்திர முதல் பாத பலன்

14. சதயம் நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

15. சதயம் நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

சதயம் நட்சத்திர 2-ஆம் பாத பலன்

சதயம் நட்சத்திர 2-ஆம் பாதத்தில்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

16. சதயம் நட்சத்திர 2-ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலயவை

17. சதயம் நட்சத்திர 3-ஆம் பாத பலன்

18. சதயம் நட்சத்திர 3-ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்.

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

19. சதயம் நட்சத்திர 3-ஆம் பாதத்தின் கால சக்கிர தசை

20. சதயம் நட்சத்திர 4-ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

21. சதயம் நட்சத்திர 4-ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்த பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |

| | | |
|---|---|---|
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

சதயம் 1-ஆம் பாத கர்ம விபாக பலன்

சதயம் 2-ஆம் பாத கர்ம விபாக பலன்

சதயம் 3-ஆம் பாத கர்ம விபாக பலன்

சதயம் 4-ஆம் பாத கர்ம விபாக பலன்

*அத்தியாயம் 34 பூரட்டாதி நட்சத்திரம்* **பக்கம் 146**

பூரட்டாதி நட்சத்திரப் பெயர்கள்

1 பொதுப்பலன்
2 பிற செய்திகள்
3 பிறந்தவர் பலன்கள்
4 பிறர் மதப்படி பிறந்தவர்களின் பலன்கள்
5 பிற நூல்களில் உள்ள செய்திகள்
6 சாந்தி
7 இதர சாதரங்கள்

8. பூரட்டாதி நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |

9. பூரட்டாதியில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. பூரட்டாதியில் நின்ற சூரியனை

| | | |
|---|---|---|
| 1 | சந்திரன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3. | புதன் | பார்த்த பலன் |
| 4. | குரு | பார்த்த பலன் |
| 5. | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6. | சனி | பார்த்த பலன் |

2. பூரட்டாதியில் நின்ற சந்திரனை

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | பார்த்த பலன் |
| 2, | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3, | புதன் | பார்த்த பலன் |
| 4. | குரு | பார்த்த பலன் |
| 5. | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6. | சனி | பார்த்த பலன் |

3. பூரட்டாதியில் நின்ற செவ்வாயை

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | பார்த்த பலன் |
| 2. | சந்திரன் | பார்த்த பலன் |
| 3, | புதன் | பார்த்த பலன் |
| 4. | குரு | பார்த்த பலன் |
| 5. | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6. | சனி | பார்த்த பலன் |

4. பூரட்டாதியில் நின்ற புதனை

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | பார்த்த பலன் |
| 2, | சந்திரன் | பார்த்த பலன் |
| 3. | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4. | குரு | பார்த்த பலன் |
| 5. | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6. | சனி | பார்த்த பலன் |

5. பூரட்டாதியில் நின்ற குருவை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

6. பூரட்டாதியில் நின்ற சுக்கிரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | குரு | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

7. பூரட்டாதியில் நின்ற சனியை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | குரு | பார்த்த பலன் |
| 6 | சுக்கிரன் | பார்த்த பலன் |

10. பூரட்டாதி நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11. பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

12. பூரட்டாதி நட்சத்திர பாத பலன்

பூரட்டாதி நட்சத்திர முதல் பாத பலன்

13. பூரட்டாதி நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |

| | | |
|---|---|---|
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

14. பூரட்டாதி நட்சத்திர முதல் பாதத்தில் கால சக்கர தசை

பூரட்டாதி நட்சத்திர 2 ஆம் பாத பலன்

பூரட்டாதி நட்சத்திர 2 ஆம் பாதத்தில்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

15 பூரட்டாதி நட்சத்திர 2 ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலியவை.

16. பூரட்டாதி நட்சத்திர 3- ஆம் பாத பலன்

17. பூரட்டாதி நட்சத்திர 3- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

18. பூரட்டாதி நட்சதிர 3- ஆம் பாததில் கால சக்கிர தசை

19. பூரட்டாதி நட்சத்திர 4- ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. பூரட்டாதி நட்சத்திர 4- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

பூரட்டாதி 1- ஆம் பாத கர்ம விபாக பலன்

பூரட்டாதி 2- ஆம் பாத கர்ம விபாக பலன்

பூரட்டாதி 3- ஆம் பாத கர்ம விபாக பலன்

பூரட்டாதி 4- ஆம் பாத கர்ம விபாக பலன்

***அத்தியாயம் 35 மீனம் ராசி பொதுக் குணங்கள்*** ***பக்கம் 176***
***அத்தியாயம் 36 உத்திரட்டாதி நட்சத்திரம்*** ***181***

உத்திரட்டாதி நட்சத்திரம் பெயர்கள்

1. பொதுப்பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்

8. உத்திரட்டாதி நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | நின்ற பலன் |
| 2. | சந்திரன் | நின்ற பலன் |
| 3. | செவ்வாய் | நின்ற பலன் |
| 4. | புதன் | நின்ற பலன் |
| 5. | குரு | நின்ற பலன் |
| 6. | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7. | சனி | நின்ற பலன் |
| 8. | ராகு | நின்ற பலன் |

9. உத்திரட்டாதி நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. உத்திரட்டாதியில் நின்ற சூரியனை

| | | |
|---|---|---|
| 1 | சந்திரன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

2. உத்திரட்டாதியில் நின்ற சந்திரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த் பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

3. உத்திரட்டாதியில் நின்ற செவ்வாயை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

4. உத்திரட்டாதியில் நின்ற புதனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

5. உத்திரட்டாதியில் நின்ற குருவை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

6, உத்திரட்டாதியில் நின்ற சுக்கிரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பரர்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | குரு | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

7. உத்திரட்டாதியில் நின்ற சனியை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | குரு | பார்த்த பலன் |
| 6 | சுக்கிரன் | பார்த்த பலன் |

10. உத்திரட்டாதி நட்சத்திர விம் சோத்திர தசைகள்

11. உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன

12. உத்திரட்டாதி நட்சத்திர பாத பலன்

உத்திரட்டாதி நட்சத்திர முதல் பாத பலன்

13. உத்திரட்டாதி நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் நின்ற பலன்
3, செவ்வாய் நின்ற பலன்
4, புதன் நின்ற பலன்
5. குரு நின்ற பலன்
6. சுக்கிரன் நின்ற பலன்
7. சனி நின்ற பலன்
8. ராகு நின்ற பலன்
9. கேது நின்ற பலன்

14. உத்திரட்டாதி நட்சத்திர முதல் பாதத்தின் கால சக்கர தசை

உத்திரட்டாதி நட்சத்திர 2ஆம் பாத பலன்

உத்திரட்டாதி நட்சத்திர 2ஆம் பாதத்தில்

1 சூரியன் நின்ற பலன்
2 சந்திரன் நின்ற பலன்
3 செவ்வாய் நின்ற பலன்
4 புதன் நின்ற பலன்
5 குரு நின்ற பலன்
6 சுக்கிரன் நின்ற பலன்
7 சனி நின்ற பலன்
8 ராகு நின்ற பலன்
9 கேது நின்ற பலன்

15. உத்திரட்டாதி நட்சத்திர 2ஆம் பாதத்தின் கால சுக்கிர தசை முதலயவை

16. உத்திரட்டாதி நட்சத்திர 3- பாத பலன்

**17. உத்திராடம் நட்சத்திர 3-ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்**

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

**18. உத்திரட்டாதி நட்சத்திர 3-ஆம் பாதத்தில் கால சக்கிர தசை**

**19. உத்திரட்டாதி நட்சத்திர 4-ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்**

**20. உத்திரட்டாதி நட்சத்திர 4-ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்**

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

**உத்திரட்டாதி 1- ஆம் பாத கர்ம விபாக பலன்**

**உத்திரட்டாதி 2- ஆம் பாத கர்ம விபாக பலன்**

**உத்திரட்டாதி 3- ஆம் பாத கர்ம விபாக பலன்**

**உத்திரட்டாதி 4- ஆம் பாத கர்ம விபாக பலன்**

## ரேவதி நட்சத்திர பெயர்கள்

1. பொதுப் பலன்
2. பிற செய்திகள்
3. பிறந்தவர் பலன்கள்
4. பிறர் மதப்படி பிறந்தவர் பலன்கள்
5. பிற நூல்களில் உள்ள செய்திகள்
6. சாந்தி
7. இதர சாதரங்கள்

8. ரேவதி நட்சத்திரத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4. | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |

9. ரேவதியில் நின்ற கோள்களை மற்ற கோள்கள் பார்த்த பலன்

1. ரேவதியில் நின்ற சூரியனை

| | | |
|---|---|---|
| 1 | சந்திரன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

2. ரேவதியில் நின்ற சந்திரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | செவ்வாய் | பார்த்த பலன் |

| | | |
|---|---|---|
| 3 | புதன் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

3. ரேவதியில் நின்ற செவ்வாயை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3. | புதன் | பார்த்த பலன் |
| 4. | குரு | பார்த்த பலன் |
| 5. | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6. | சனி | பார்த்த பலன் |

4. ரேவதியில் நின்ற புதனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | குரு | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

5. ரேவதியில் நின்ற குருவை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |
| 5 | சுக்கிரன் | பார்த்த பலன் |
| 6 | சனி | பார்த்த பலன் |

6. ரேவதியில் நின்ற சுக்கிரனை

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | பார்த்த பலன் |
| 2 | சந்திரன் | பார்த்த பலன் |
| 3 | செவ்வாய் | பார்த்த பலன் |
| 4 | புதன் | பார்த்த பலன் |

5 குரு பார்த்த பலன்
6 சனி பார்த்த பலன்

7. ரேவதியில் நின்ற சனியை

1 சூரியன் பார்த்த பலன்
2 சந்திரன் பார்த்த பலன்
3 செவ்வாய் பார்த்த பலன்
4 புதன் பார்த்த பலன்
5 குரு பார்த்த பலன்
6 சுக்கிரன் பார்த்த பலன்

10. ரேவதி நட்சத்திர விம் சோத்திரி தசைகள்

11, ரேவதி நட்சத்திரத்தில் பிறத்தவர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன.

12. ரேவதி நட்சத்திர பாத பலன்

ரேவதி நட்சத்திர முதல் பாத பலன்

13. ரேவதி நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

1. சூரியன் நின்ற பலன்
2. சந்திரன் நின்ற பலன்
3. செவ்வாய் நின்ற பலன்
4. புதன் நின்ற பலன்
5. குரு நின்ற பலன்
6. சுக்கிரன் நின்ற பலன்
7. சனி நின்ற பலன்
8. ராகு நின்ற பலன்
9. கேது நின்ற பலன்

14 ரேவதி நட்சத்திர முதல் பாதத்தில் கால சக்கர தசை

ரேவதி நட்சத்திர 2 ஆம் பாத பலன்

ரேவதி நட்சத்திர 2 ஆம் பாதத்தில்

| | | |
|---|---|---|
| 1 | சூரியன் | நின்ற பலன் |
| 2 | சந்திரன் | நின்ற பலன் |
| 3 | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5 | குரு | நின்ற பலன் |
| 6 | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7 | சனி | நின்ற பலன் |
| 8 | ராகு | நின்ற பலன் |
| 9 | கேது | நின்ற பலன் |

15. ரேவதி நட்சத்திர 2- ஆம் பாதத்தில் கால சுக்கிர தசை முதலயவை

16. ரேவதி நட்சத்திர 3- ஆம் பாத பலன்

17. ரேவதி நட்சத்திர 3- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்.

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | நின்ற பலன் |
| 2. | சந்திரன் | நின்ற பலன் |
| 3. | செவ்வாய் | நின்ற பலன் |
| 4 | புதன் | நின்ற பலன் |
| 5. | குரு | நின்ற பலன் |
| 6. | சுக்கிரன் | நின்ற பலன் |
| 7. | சனி | நின்ற பலன் |
| 8. | ராகு | நின்ற பலன் |
| 9. | கேது | நின்ற பலன் |

18. ரேவதி நட்சத்திர 3- ஆம் பாதத்தின் கால சக்கிர தசை

19. ரேவதி நட்சத்திர 4- ஆம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்

20. ரேவதி நட்சத்திர 4- ஆம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்

| | | |
|---|---|---|
| 1. | சூரியன் | நின்ற பலன் |
| 2. | சந்திரன் | நின்ற பலன் |
| 3. | செவ்வாய் | நின்ற பலன் |
| 4. | புதன் | நின்ற பலன் |
| 5. | குரு | நின்ற பலன் |
| 6. | சுக்கிரன் | நின்ற பலன் |

| | | |
|---|---|---|
| 7. | சனி | நின்ற பலன் |
| 8. | ராகு | நின்ற பலன் |
| 9. | கேது | நின்ற பலன் |

ரேவதி 1- ஆம் பாத கர்ம விபாக பலன்

ரேவதி 2- ஆம் பாத கர்ம விபாக பலன்

ரேவதி 3- ஆம் பாத கர்ம விபாக பலன்

ரேவதி 4- ஆம் பாத கர்ம விபாக பலன்

## நட்சத்திரங்களைப் பற்றிய பிற செய்திகள்

## பாகம் — 1

*ஜோதிஷ ரத்னாகரம் நாரதீயம் முதலியவற்றிலிருந்து திரட்டிய நட்சத்திர சாதகங்கள் முதலியவை*

1. அசுவனி
2. பரணி
3. கிருத்திகை
4. ரோகிணி
5. மிருகசிரிஷம்
6. திருவாதிரை
7. புனர் பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்திரம்
13. ஹஸ்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுசம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்திராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்
24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி
27. ரேவதி

# நட்சத்திரம் பற்றிய பிறசெய்திகள்

## பாகம் — 2

*ஸ்ரீ தத்துவ நிதிமற்றும் நட்சத்திர சூடாமணியில் சொல்லிய பலன்*

1. அசுவனி
2. பரணி
3. கிருத்திகை
4. ரோகிணி
5. மிருகசிரிஷம்
6. திருவாதிரை
7. புனர்பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்திரம்
13. ஹஸ்தம்
14. சித்திரை
15. சுவாதி
16. விசாகம்
17. அனுசம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்திராடம்
22. திருவோணம்
23 அவிட்டம்
24 சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி
27. ரேவதி

## பாகம் — 3

நட்சத்திரங்களைப் பற்றிய பிற செய்திகள் பல முகாத்திரங்களி லிருந்து சேகரிக்கப்பட்டவை இந்த விபரங்களின் பொருளடக்கம்

பக்கம் — முதல் வரை

## மொத்தம் 145 விஷயங்கள்

# அத்தியாயம் - 30

## உத்திராடம் நட்சத்திரம்

இது 21 வது நட்சத்திரம். இது ராசி மண்டலத்தில் 266 பாகை 40 கலை முதல் 280 பாகை வரை பரவியுள்ளது. இங்கு குறிப்பிடவேண்டிய முக்கிய விஷயம் ஒன்று உண்டு. 27 நட்சத்திரங்கள் தான் உண்மையில் 108 பாதங்களாகக் கணக்கிடுகின்றனர் ஆனால் உத்திராடம் கடைசி பாதமும் அபிஜித் என்று தனி நட்சத்திரமாகக் கருதப்படுகிறது இது முகூர்த்தங்களுக்கு, மிகச் சிறந்தது என்று சொல்லப்படும்.

இதன் :-

| | |
|---|---|
| தமிழ்ப் பெயர் | உத்திராடம் |
| வட மொழிப் பெயர் | உத்திரா ஷாடா |
| அரபுப் பெயர் | அல் பல்தா (AL BALDHA) |
| கிரேக்கப் பெயர் | சாஜிஜட்டரி (SAGIGTRARII) |
| சீனப் பெயர் | டியூ (Tew) |

இதன் அதிதேவதை விஸ்வே தேவன். அதாவது கடவுள்கள் கூட்டம் என்று பொருளுடையது. **உத்திரஷாட** என்றால் "பின்னால் (பிறகு) யாராலும் பணியவைக்க முடியாதது" என்று பொருள். **இதற்கு உலகக்** கடவுள்கள் என்றும் பெயர். விஸ்வதேவர் என்ற கடவுள் மனிதனின் மூளையின் திசுக்களை ஆட்சி செய்பவர் எனப்படும்.

'மரண கண்டி' சுவடி எண் 1500ல் சொன்ன உத்திராட நட்சத்திர பலன்.

நித்தம்நீர் ஆட வல்லான் நித்தனைத் துதிக்க வல்லான்
கொத்தலர் குழலி னாள்தன் குவிமுலை வசத்த னாகும்
சித்தம துடைய னாகும் செகந்தனிற் சலித்தோர் கீவான்
உத்தம குணத்த னாகும் உத்திராட நாளி னானே!

(இதன் பொருள்)

இவன் தினமும் நீராடுவான் நித்தியனான முழுமுதற் கடவுளை துதிப்பான். கொத்தாக மலர் அணிந்த தன் மனைவியின் குவிந்த முலைக்கு வசப்பட்டவன். அதாவது தன் மனைவியின் அழகில் வசப் பட்டவன். இவன் தன் சித்தத்தை வசத்தில் வைத்துள்ளவன். உலகத்தில் மனம் சலித்தவர்களுக்குத் தருமம் செய்பவன். உத்திராட நட்சத்திரத்தில் பிறந்த இவன் உத்தம குணம் உடையவனாவான். என்பதாகும்.

தமிழ் ஜாதகாலங்காரம் — உத்திராடப் பலன்

தத்தை தமார்க்கு இனியன் முகத்துறு மறுவன்
சரீரமும் கெட்டியன் பலவான்
புத்திமான் உயர்ந்தநாசிநல் வசனன்
உபாசனன் பிரியன் நீர்க்கஞ்சான்
பத்திமான் உறவுக்கு இனியவன் வர்மி
பார்பொருள் வேண்டியாத் தூயன்
உத்தமர்க் கினியன் நிறைந்த சொல் தியாகி
உன்னுமுத் திராடத்தி னானே.

(இதன் பொருள்)

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவன் தனக்கு முன் பிறந்த அக்காள்மார்களுக் கினியவன். முகத்தில் மறு உள்ளவன், சரீர வன்மையுடையவன், பலவான் அறிவுடையவன், நீண்ட மூக்குடையவன்· இனிமையாகப் பேசுபவன், உண்பதில் பிரியமுள்ளவன் நீரை, வெள்ளத்தைக்கண்டு அஞ்சாதவன், கடவுள் வழிபாடு உடையவன் சினேகிதர் அல்லது சுற்றத்தார்க் கினியவன். அதிக வைராக்கியமுள்ளவன், அன்னியருடைய பொருளை இச்சிக்காதவன், பரிசுத்தமானவன். நல்லவர்களால் விரும்பப்படுபவன். மாட்சிமையாக நல்லபடி உரையாட வல்லவன், தியாகியானவன் இவ்வகை குணமுள்ளவனே உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவனாவான். (தனக்கு முன்பிறந்தவள் சகோதரி)

*பிருஹத் ஜாதகம்*

வணக்கம், தருமம், அதிக நேசம் செய்நன்றி மறவாமை அனைவருக்கும் பிரியமுள்ளவன்.

*யவன ஜாதகம்*

செய் நன்றி மறவாதவன், தருமவான் சூரன், அதிக புத்திரர்களையுடையவன், வினையமுடையவன், நல்ல மனைவியை உடையவன். நல்ல வடிவமுடையவனுமாவான்.

பெண்

***உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தபெண்ணின் தன்மைகள் வடமொழி ஸ்திரீ ஜாதகம் சொல்லுவது***

உத்திராட நட்சத்திரத்தில் பிறந்த பெண் பிறர் மனம் கவரும் படியான அழகுடையவள். இவள் தனக்கு நிகரற்றவள். பல வகையான செல்வம், சுகபோகம் முதலியவற்றை அனுபவிப்பவள். எப்பொழுதும் மனநிறைவுடன் இருப்பவள். தன் கணவனை அதிகமாக நேசிப்பவள்.

**வேறு நூல்**

கற்புடையவள், இனிமையாக பிறர் விரும்பும் படி பேசுபவள், தினமும் அதிதிகளை (விருந்தாளிகளை) உபச்சாரம் பண்ணுபவள், இவை முதலான குணங்களுடையவள்.

***தமிழ் சங்கராசாரியார் மதன நூல் சொல்லுவது***

***உத்திராடத்தில் பிறந்த பெண் பிசாசு லட்சண தத்துவத்தைச் சேர்ந்தவள்***

***உச்சிசற் றுயர்ந்தா ளொன்றும் உண்மையே சிறிதும் பேசாள்***
***அச்சமும் அன்பும் இல்லாள் அடுத்தவர்க் கமுதமாகும்***
***மெச்சினார் கின்பம் சால எல்லையில் இரவு தோறும்***
***உச்சிதம் பலவும் பேசும் உத்திரா டத்தினாளே!***

(இதன் பொருள்)

இவள் உச்சந்தலை சற்று உயர்ந்திருக்கும். இவள் உண்மை பேசமாட்டாள்; சொல்லுவதெல்லாம் பொய்யாகத்தானிருக்கும். இவள் எதற்கும் பயப்படாதவள். இவள் யாரிடத்திலும் அன்பு அல்லது பாசத்துடன் இருக்கமாட்டாள். இவள் தன்னைக் கிட்டி வரும் கணவனுக்கு அமுதம்போல இனிப்பான காம சுகத்தைத் தடையின்றி உடன் பட்டுத் தருபவள். அதுவும் இரவுகளில் தன் கணவனுடன் உண்மையான பொருத்தமான காதல் சரசசல்லாபாமாகப் பலவிதமாகப்பேசியும் இன்பம் செய்பவள். இவளே உத்திராடத்தில் பிறந்த பெண்ணாவாள் என்பதாம்.

***உத்திராடம் பற்றி சுவடி எண் 1500***

***மரணகண்டியில் கண்ட பிற செய்திகள்***

இன்னானுக்குத் தெய்வம் ஆதித்தன். பூதம் வாயு. சாதி வைசியன். கோத்திரம் வசிஷ்டன் யோனி - மலட்டுப்பசு, பட்சி - வலியன், குருவி,

கணம் மனுஷ கணம் நட்சத்திரம் இரண்டாய் இருக்கும் வியாழக்கிழமை ஜென்மம் வாரம்.

பொன் பூண, கோடியுடுக்க, அகமெடுக்க, விதை விதைக்க, வாழை வைக்க உகந்ததாம்.

இந்நாளில் பெண்திரளில் தன தான்ய முடையவள் புத்திரரைப் பெறுபவள். இந்நாளில் வருஷம் பிறக்கில் விலை இறங்கும். இந்நாளிற்கு 20 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். வெதுப்பு தோன்றில் 4 நாளில் தீரும் தீராத போது நெய்யும் கருப்பஞ்சாறும் கலந்து மந்திரம் சொல்லி ஓமம் பண்ணுவது. பொரி, பயறு எள்ளு பாலும் கூட்டி ஓமம் பண்ணுவது. மூன்று நாளில் விடும்.

இந்நாளில் ஞாயிறு கூடில் விஷயோகம், வெள்ளி கூடில் அமிர்தயோகம்' புதன் கூடில் சித்தயோகம்.

இவன் குணம் தெய்வபக்தியுடையவன். குருக்களுக்கு நல்லவன், தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் நல்லவன், நல்வார்த்தையுடையவன், தான தருமம் செய்பவன். இவன் குணம் அளவிட முடியாது. முகத்திலாவது. மார்பிலாவது மறு உண்டு. தொழுதால் தொழுதவர்க்கு வழங்குபவன் கோபம் வரும். உடன் ஆறி அடங்கும்.

இந்நாளில் யாத்திரை போக வேண்டுமானால் பால் குடித்து வழிச் செல்லலாம்.

### உத்திராட நட்சத்திரம் பற்றி வேறு நூல் செய்திகள்

2 நட்சத்திரங்கள் கொண்டு கட்டில் கால் உருவில் உள்ளது இது, இது முக்கால் நட்சத்திரம் என்பர், இது தலையற்றது. இதன் இடம் சூன்யம் இதற்குரிய ஒலி 'ஏ' இது எல்லா நல்ல காரியங்களிலும் பயன் படுவதால் "மங்கல விண்மீன்" எனப்படும். இப்படி இருந்தாலும் முகூர்த்த சாஸ்த்திரப் படி இது பயணத்திற்கு ஏற்றதல்ல, எள்சாதம் உண்டு மேற்கு தெற்கு திசை பயணம் செய்யலாம்.

இதில் திரளும் பெண்கள் கற்பில் சிறந்தவர்கள் புண்ணிய காரியங்களில் ஈடுபடுவார்கள்.

ஏறக்குறைய விவாகம், வளைகாப்பு, சீமந்தம், உபநயனம், வேத அத்யயனம், வித்யாரம்பம் முதலான எல்லா சுப காரியங்களுக்கும் ஏற்ற நாள் இது, புதுமனை புகல், பதவி ஏற்பு, பயிர்த் தொழில், முடி ஆடல் போன்றவற்றிற்கும் இது ஏற்றதே.

இந்த நட்சத்திரத்தை ஆகஸ்ட்மாத நள்ளிரவில் காண முடியும்.

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நெடுங்காலம்வாழ்வார்கள்.

"உத்திராடப் பிள்ளையும் ஊர்கோடியில் நிலமும் போல" என்ற பழமொழி இதன் உயர்வைக் காட்டும். இந்த நட்சத்திரம் இரண்டு ராசிகளில் வருவதால் காலற்ற நட்சத்திரம் என்பர். இதன் அதிதேவதை விக்னேஸ்வரர் என்றும் கூறுவர். திங்கட்கிழமை உத்திராடம், மரணயோகம் இதில் பிறந்தவர்கள் பரிகாரம் செய்து கொள்ள வேண்டும். இதன் பக்ஷி பிங்களம் என்பர் சிலர். இது யானை குதிரை வாங்க, யானை, குதிரை ஏற்றம் தொடங்கவும் நல்லது. சனிக்கிழமை மிருத்யு யோகம். வெள்ளிக் கிழமை ஆனந்தயோகம். திருதியை சேர்ந்தால் மரண யோகம். சிவந்த மேகம் கண்டால் 11 நாளில் மழை பெய்யும்.

சுரம் கண்டால் 20 நாள் பீடை; 5 வகைப் பக்ஷணங்கள் நிவேதனம் பஞ்சவர்ண புஷ்பங்களால் பூஜை. (ஐந்து நிறம் ஐந்து வகை) "விஸ்வே தேவாகதா" என்பது பூஜாமந்திரம். கந்தண்டு நெய்யும் தானியமும் கலந்த பலகாரம் நைவேத்யம் 'சாவித்திரி' மந்திரத்தால் 108 தடவை ஹோமம் 10 முதல் 20 நாளைக்குள் சுகம்.

***தமிழ் ஜாதகாலங்காரம் சொல்லும் உத்திராட நட்சத்திர பாத பலன்***

*ஏர்பெறு நல்ல புத்திமான் ஈகை*
*யான்தகு நூல்பல அறிவான்*

ஏதிலா தாசான் தனையுப சரிப்பான்
　　எனப்புக லுத்திரா டத்தின்
ஓரதாங் காலில் உயர் பெரு வாக்கி
　　லோபியாம் பிலுக்கன்நற் திடவான்
உச்சிதமாய் கருமம் ராச்சியத் தியற்றும்
　　உடனிரண் டாகிய காற்கே
கூரிய கர்வி பெருமொழி யாளன்
　　குரூரனாம் கலங்கிய மனத்தான்
கோபியாந் தூல வடிவுள னென்றே
　　கூறிய மூன்றதாம் காற்கே
வீரியன் நல்லன் நன்மமே முடிப்பன்
　　விசேஷ கரியமுளன் வோத
வியாபார முடையான் பந்துபக்ஷ முள்ளன்
　　வேண்டிய நாற்பதம் வந்தோன்

(இதன் பொருள்)

1) உத்திராடம் முதல் பாதத்தில் பிறந்தவன் எந்நாளிலும் குன்றாத அறிவுள்ளவன், தருமங்களை செய்ய முயற்சிப்பவன், தரும சாஸ்திரங்கள் முதலான நூல்களையும் தெரிந்தவன் குற்றமில்லாத ஆசானைப்பணிபவன்; அவர்களை உபசரிப்பவன் ஆவான் என்பர்.

2) இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் பெருவாக்குடையவன் அல்லது படபடப்பாகப் பேசுபவன், தருமம் செய்யாதவன், அற்பகுண முடையவன். பலமுடையவன், தன் சொந்த நாட்டில் உசிதமான செய்கைகளைச் செய்பவன், கஞ்சன், அற்பன் ஆவான்.

3) மூன்றாம் காலில் பிறந்தவன். அகங்கார முடையவன் பேசும் போது சாமர்த்தியமாகப் பேசுபவன். குரூர குணமுடையவன், மனம்

தெளிவில்லாதவன். கோபமுள்ளவன். தடித்த இரட்டை நாடியான உடலுள்ளவன் என்பர்.

4] நான்காம் பாதத்தில் பிறந்தவன் நல்லவன் தைரியம் பலம் இவையுள்ளவன். அரிய அறமறிந்து தியாகமும் செய்பவன், பற்பல விஷயங்களை அறிந்தவன், பற்பல தேசங்களில் கொள் முதல் மற்றும் விற்றல் போன்ற வாணிபம் செய்பவன், தன் உறவினருக்கு அன்புடையவனாகவும் இருப்பான் என்பதாம்.

*ஜாதக சார தீபம் சொல்லும் உத்திராட நட்சத்திரம் பாத பலன்*

1) முதல் பாதம் அரசனாக அல்லது அவனுக்குச் சமான மானவன். மித்திரர்களுக்கு விரோதியானவன்.

2] இரண்டாம் பாதம் மானமுள்ளவன், தர்ம நெறி தவறாதவன்.

3) மூன்றாம் பாதத்தில் பிறந்தவன், சமத்துவம் உள்ளவன், மான முள்ளவன்.

4) நான்காம் பாதம் வித்வானாக இருப்பவன் தரும நெறி யுள்ளவன்.

*சுவடி எண் 1500 மரணகண்டி கூறும் உத்திராட நட்சத்திர முதல் பாத பலன்*

*சிறிதே யுண்ணும் பொய்சொல்வான் சிவந்த கண்ணன் செறி குழலான்*
*அறிவு மிகுந்த பெருங்குணத்தான் அடைந்தோர்க் கன்பன் அழகியனாம்*
*பொருள்சேர் மைந்தன் மனையாளை பொருட்டாய் எண்ணான் புகழ்விளங்கும்*
*வெறிசேர் குழலின் மடமாதே வியாழன் காலிற் பிறந்தோனே!*

(இதன் பொருள்)

உத்திராடம் முதல் பாதத்தில் பிறந்தவன், பொய் சொல்லாதவன் சிவந்த கண்களை உடையவன் நெருக்கமான சுருண்ட தலைமயிர் உள்ளவன், அறிவு மிகுந்தவன்; நல்ல பெருந்தன்மையான குணமுள்ளவன், தன்னை அடைந்தவர்களிடம் அன்புடையவன், உதவுபவன், தன் பெண்டாட்டி மற்றும் பிள்ளை, பொருள் அதாவது பணமுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களை எதற்கும் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டான். வாசனை வீசும் கூந்தலுள்ள இளைய பெண்ணே! இவையே குருவின் அங்கிஷத்தில் பிறந்தவன் குணமாகும் என்பதாம்.

*இதற்குக் கால சக்கர தசை*

| | | |
|---|---|---|
| 1. | மேஷச்செவ்வாய் | - 7 வருடம் |
| 2. | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 3. | மிதுன புதன் | - 9 வருடம் |
| 4. | கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 5. | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 6. | கன்னி புதன் | - 9 வருடம் |
| 7. | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 8. | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| 9. | தனுசு வியாழன் | - 10 வருடம் |
| | ஆக வயது | - 100 வருடம் |

*உத்திராட நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்கள் குணம்.*

*ஆரையும் அறிந்து பேசும் அரும்பொருட் கன்ப னாகும்*
*சீரிய செய்ய வேண்டி சிலவது செய்வன் மிக்க*
*வாதிய பொய்கள் சொல்வான் மனம்பிறர்க் கறிய வொண்ணான்*
*காரியங் கிஷத்தில் வந்த கருத்துடைக் காளை தானே!*

(இதன் பொருள்)

இவன் எவரிடமும் அவர்களைத் தெரிந்த பின்தான் பேசுவான். அரிய செல்வத்தின் மேல் பற்றுள்ளவன். சிறப்பான செயல் களையே செய்ய திட்ட மிட்டு அவற்றில் சிலவற்றையே செய்து முடிப்பான். பெரிய பொய்கள் எதையும் சொல்லமாட்டான். இவன் மன ஆழத்தை யாராலும் அறிய முடியாது. இவனே சனியின் அங்கிஷத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

*இதற்குக் கால சக்கர தசை*

1. மகரச்சனி - 4 வருடம்
2. கும்பச் சனி - 4 வருடம்
3. மீன வியாழன் - 10 வருடம்
4. விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்
5. துலாம் வெள்ளி - 16 வருடம்
6. கன்னி புதன் - 9 வருடம்
7. கடகச் சந்திரன் - 21 வருடம்

8. சிங்க ஆதித்தன் - 5 வருடம்

9. மிதுன புதன் - 9 வருடம்

ஆக வயது - 85 வருடம்

*உத்திராட நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவன் தன்மைகள்*

*ஊனம துடைய னாகும் உறவொடு பகையும் சேரான்*
*மானம துடைய னாகும் வழக்கறிந் துரைக்க வல்லான்*
*மேனியும் உருவும் நல்லான் மிக்கதோர் அறிவு முண்டாம்*
*கானகம் திரிந்து வர்ழும் காரியங் கிஷத்தி னானே!*

(இதன் பொருள்)

இவன் ஏதாவது ஒரு வகையில் ஊனமுடையவன் (உடல்) உறவு, பகை இருவகையில் யாரையுமே சேர்ந்து வாழ மாட்டான். இவன் மானம் கௌரவம் உள்ளவன். நன்றாக வழக்காடி வாதத்தில் ஜெயிக்க வல்லவன். இவன் உருவம் அழகாகவும் நிறம் சிவப்பாகவும் இருக்கும். இவன் மிகுந்த அறிவுள்ள புத்திசாலியாவான். இவன் கானகம் எல்லாம் திரிந்து வாழ வல்லவன். அதிகம் பயணம் செய்பவன், இவனே சனியின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

1. ரிஷப வெள்ளி - 16 வருடம்

2. மேஷச் செவ்வாய் - 7 வருடம்

3. மீன வியாழன் - 10 வருடம்

4. கும்பச் சனி - 4 வருடம்

5. மகரச் சனி - 4 வருடம்

| | | | |
|---|---|---|---|
| 6. | தனுசு வியாழன் | - 10 | வருடம் |
| 7. | மேஷச்செவ்வாய் | - 7 | வருடம் |
| 8. | ரிஷப வெள்ளி | - 16 | வருடம் |
| 9. | மிதுன புதன் | - 9 | வருடம் |
| | ஆக வயசு | - 83 | வருடம் |

***உத்திராட நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவன் குணங்கள்.***

***மாந்துளிர் போலு மேனி மனத்துடன் கல்வி கற்கும்***
***ஏந்திய குலத்துக் கெல்லாம் இசைந்ததோர் ராசனாகும்***
***காந்தலில் நடக்க மாட்டான் கனங்குழை யார்க்கு நல்லான்***
***சேர்ந்தவர்க் கன்ப னாகும் செய்ய பொற் காலினானே!***

(இதன் பொருள்)

இவன் உடல் நிறம் மாந்தளிர் போல சிவந்த நிறமாக இருக்கு கல்வியை மன தூன்றிப் படிப்பான். தன்குலத்துக் கெல்லாம் இவ அரசன் போன்று முக்கியஸ்தனாக இருப்பான். இவன் வெயிலில் நடக் மாட்டான். இவன் தான் விரும்பும் காதணி அணிந்த அழகியான பெ களுக்கினியவன், நல்லவன். இவன் தன்னைச் சேர்ந்தவர்க்கு இனியவ அன்பு செய்து உதவுவான். இவனே குரு அங்கிஷத்தில் பிறந்தவனாவா என்பதாம்.

***இதற்குக் கால சக்கரதசை***

| | | | |
|---|---|---|---|
| 1. | கடகச்சந்திரன் | - 21 | வருடம் |
| 2. | சிங்க ஆதித்தன் | - 5 | வருடம் |
| 3. | கன்னி புதன் | - 9 | வருடம் |

4. துலாம் வெள்ளி - 16 வருடம்

5. விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்

6. தனுசு வியாழன் - 10 வருடம்

7. மகரச் சனி - 4 வருடம்

8. கும்பச் சனி - 4 வருடம்

9. மீன வியாழன் - 10 வருடம்

ஆக வயது - 86 வருடம்

இந்த நட்சத்திரத்திற்கு விம்சோத்தரி தசை

1. சூரியன் - 6 வருடம்

2. சந்திரன் - 10 வருடம்

3. செவ்வாய் - 7 வருடம்

4. ராகு - 18 வருடம்

5. குரு - 16 வருடம்

6. சனி - 19 வருடம்

7. புதன் - 17 வருடம்

8. கேது - 7 வருடம்

9. சுக்கிரன் - 20 வருடம்

ஆக வயது - 120 வருடம்

**இனி இவனுக்குத் தோன்றும் நோய் கண்டம் முதலியன**

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் தத்து 3 வயதில் கல்லெறியால் காயம்; 5 வயதில் சுரத்தால் கண்ணோயால், சிறங்கால்; 12 வயதில் நான்கு கால் மிருகத்தால், 16 வயதில் நீரால், 24 வயதில் பெண்களால்; 27 வயதில் உயரத்தில் ஏறி விழுதல், 28 வயதில் நீரால், 30 வயதில் ராசாவால், 32 வயதில் பெண்கள் மருந்தீட்டால்; 38 வயதில் வெதுப்பால் விஷத்தால்; 45 வயதில் இடது பக்கம் வியாதி, மற்றும் சுரம் சிலேத்துமம்; 57 வயதில் வாத, சன்னியால்; 60 வயதில் வெதுப்பு சன்னியால், 86 வயதில் சிலேத்துமம், சுரம் ஆகியவை நிகழலாம்.

அதன் பின் 100 வயது சென்று மாசி மாதம் பூர்வபட்சத்து ஞாயிற்றுக் கிழமையும் உத்திராடம் நட்சத்திரம் கூடிய நாளில் உத்திராடம் உதித்த 14 நாழிகைக்கு மேல் பால் சோறுண்டு பின் பித்தம் ஒடுங்கி இறைவனடி சேர்வார்.

இவன் பிறந்த லக்னம் சூரியன் சாரமாகில் - சீமான்

| | | |
|---|---|---|
| சந்திரன் சாரமாகில் | - | பிரதானியாவான் |
| செவ்வாய் சாரமாகில் | - | நோயாளியாவான் |
| புதன் சாரமாகில் | - | வித்துவானாவான் |
| குரு சாரமாகில் | - | புத்திரருடையவன் |
| வெள்ளி சாரமாகில் | - | வாகன முடையவன் |
| சனி சாரமாகில் | - | மிடியன், தரித்திரன் |
| இராகு சாரமாகில் | - | கள்ளன் |
| கேது சாரமாகில் | - | துஷ்டன் |

இதன் முதல்கால் - மாதாவுக்கு அரிட்டம்; மூன்றாம் கால் தகப்பனுக்கு ஆகாது, இதற்கு மகேஸ்வரன், ஆதித்தன் பூசை செய்யவும், கருப்பு நிற தானியம் தானம் தரவும்.

## உத்திராடம் நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களின் பூர்வ ஜென்ம பாவமும் சாந்தி பரிஹார முறைகளும்

***உத்திராடம் 1ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ ஜென்ம பாவமும் பரிஹார முறைகளும்,***

சிவபெருமான் சொல்லுகிறார்!

அயோத்யா நகரத்தை யொட்டி ஸ்வேத பர்வம் என்ற புண்யதீர்த்த முண்டு. அங்கு தன் குலத் தொழிலை விட்டு விட்டு வியாபாரம் பண்ணி ஒரு கன்யாகுப்ஜ பிராமணன் வாழ்ந்து வந்தான். இவன் தினமும் குதிரை, எருமை மாடு மற்ற மிருகங்களின் தோல், மேலும் துணி முதலியவையும் விற்று வந்தான், இவன் குடிகாரனாகவும் தினமும் பரஸ்த்ரீ லோலனாகவும் வேசிகளிடம் கூடி சுகிப்பவனாகவும் இருந்தான். இவன் சூதாடியாகவும் இருந்தான். குரு, அந்தணர், பெரியோர் முதலியவர்களை மதிப்பதில்லை. இப்படி பலகாலம் வாழ்ந்து இவன் இறந்தான். இவன் பாவங்களுக்காக நரக வேதனை நீண்ட காலம் அனுபவித்தபின் குறங்காகப் பிறந்தான். அதன் பின் கழுதையாகவும், குதிரையாகவும் பிறவி பெற்றபின் கடைசியில் மனிதனாகப் பிறந்தான்.

இப்பிறவியில் இவன் பணக்காரனாக இருந்தும் இவனுக்கு சந்ததி யில்லை. ஒரு கால் பிறந்தாலும் அவை உடன் இறந்து விட்டன. அதன் பின் ஒரு பெண் குழந்தைதான் பிறந்தது.

இப்பொழுது ஆண்குழந்தை ஏற்பட இவனுக்குச் சாந்திமுறை வரு மாறு: இவன் தன் வீட்டின் தனத்தின் ஆறில் ஒரு பங்கை முதலில் தானம் செய்யவேண்டும். இவன் போன ஜென்மத்தில் வாளால் தன் இளைய சகோதரனைக் கொன்றான்; இதனால் தான் இவனுக்கு குழந்தை கள் தங்க வில்லை

இதன் பின் இவன் காயத்திரி மந்திரத்தினை ஐந்து லட்சம் முறை ஜபம் செய்ய வேண்டும். தினமும் கோவிந்தனை உபாசித்துப் பூசிக்க வேண்டும். அறுகோண ஓம குண்டம் கட்டி அதில் நெய்யும் கலந்து ஓமம் பண்ண வேண்டும். அதன்பின் பிராமணன் ஒருவனை சிவ பெருமானாகவே எண்ணி அவனுக்குப் பத்து நிறமுள்ள பசுவைத் தானம் செய்ய வேண்டும்.

அதன் பின் பூமி தானம் பண்ண வேண்டும். படுக்கை தானம் பண்ண வேண்டும். அதன் பின் 18 தோலா எடையுள்ள தங்கத்தால் தம்பியின் பிரதிமை ஒன்றைச் செய்து மந்திரங்களால் சிவபெருமானை வழிபட்டு தான் செய்த பாவத்தைச் சொல்லி வருந்திப் பூசிக்க வேண்டும். அதன் பின் அந்த தங்க உருவை ஒரு வேத மறிந்த அந்தணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் வேதமறிந்த பிராமணர்களுக்கு லட்டு பாயசத்துடன் விருந்து செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பூர்வ ஜென்ம பாவங்கள் நாச மாகின்றன. இவனுக்கும், உடல் நலம் ஏற்பட்டு இவன் மனைவியும் மலடித்தன்மை நீங்கி ஆண் குழந்தைகள் பிறக்கும் இதன் பின். இவர்கள் சுகமாக வாழ்வார்கள்.

## உத்திராடம் 2ம் பாதம்

***உத்திராடம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ வினையும் சாந்தி பரிஹாரமும்***

சிவபெருமான் சொல்லுகிறார்!

சங்கரேஸ்வர் என்ற ஊரில் ஒரு பிராமணோத்தமன் வாழ்ந்து வந்தான். ஆனால் தன் குலத்துக்கு ஒவ்வாத கீழ்த்தரமான பேச்சுக்களையே பேசி வந்தான். மிலேச்சர் என்னும் கீழ்த்தரமான கெட்டவர்களுக்கே சேவை செய்தும் வந்தான். இவன் கீழ் மக்களின் வித்தைகளில் தேர்ச்சி பெற்று மட்டமான காரியங்களையே செய்து வந்தான். மீன் மாமிசம் போன்ற தன் குலத்துக்குத் தகாத உணவு வகையையே உண்டு

வந்தான் இப்படியே பல வகைப் பாவச் செயல்களிலேயே இவன் ஆயுள் கழிந்து வந்தது. தான் சம்பாதித்த தனம் முழுவதையும் வீட்டிலேயே புதைத்து வைத்தான். இதற்கிடையில் இவன் தம்பியின் மகன் ரத்தின வியாபாரம் செய்ய இவன் வீட்டில் வந்து தங்கினான். இவனிடம் நிறைய ரத்தினங்கள் இருந்தன. இவற்றை அபகரிக்க இவன் பெரிய தகப்பனான பிராமணனின் மனைவி ஒரு நாள் இரவு இவனைக் கத்தியால் குத்திக் கொன்றாள். இவன் பணத்தையும், ரத்தினங்கள் முழுவதையும் எடுத்துக் கொண்டு இவனை பூமியில் புதைத்து விட்டாள். தானமும் கொடுக்க வேண்டும். பரங்கிப் பூஷணி குடுவையிலும் தேங்காய்க் குடுவை யிலும் ரத்தினங்களை நிரப்பி, முன்சொன்ன தங்கப்பிரதிமையுடன் தானம் பண்ண வேண்டும், இப்படி செய்வதால் இவன் பாபங்கள் நாசமா கின்றன. இவனும் நோய் நீங்கப் பெற்று இவன். மனைவிக்கும் உடல் நலம் ஏற்பட்டு ஆண்குழந்தை பிறக்கும். இதன் பின் இவர்கள் சந்தோஷமாக வாழ்ந்தனர்.

## உத்திராட நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ ஜென்ம கர்மமும் சாந்தி முறையும்.

சிவபெருமான் சொல்கிறார்!

தேவீ! யவன தேசத்தில் ஜயதேவன் என்ற ஒழுக்கமுள்ள உத்தம பிராமணன் வாழ்த்து வந்தான். இவன் வேதம் ஓதியும் நெறிதவறாமலும் வாழ்ந்தான். இவனுக்கு மிகவும் நல்ல குணமுள்ள நல்ல மனைவி இருந்தாள். இவனுக்கு 3 ஆண்குழந்தைகள் பிறந்தனர்.

இவர்களில் மூத்த பையனுக்கு திருமணம் நடந்தது. இதற்கு அவன் தங்கை வந்தாள். திரும்பிப் போகும் போது அவள் அண்ணன் இடத்தில் வைரத்தோடு பரிசாகக் கேட்டாள். இதனால் அவன் மனைவி மிகவும் கோபம் கொண்டாள். இவளை மிகவும் கடுமையாகத் திட்டினாள். இதனால் மனம் நொந்து அவன் தங்கை தன் மகனுடன் வீடு திரும்பினாள். அதனால் அவள் வருத்தப்பட்டு இறந்து போனாள். வெகுகாலம் கடந்து

அந்த பிராமணன் இறந்தான். அவன் மனைவியும் அவனுடன் உடன் கட்டை ஏறி இறந்தாள்.

இந்த புண்யத்தால் இவர்கள் சத்யலோகத்தில் 3 கோடி வருஷம் போகம் சுகம் அனுபவித்து வந்தார்கள், புண்யம் தீர்ந்த உடன் மீண்டும் மனிதனாகப் பிறவி பெற்றான். பூர்வ ஜென்ம பாவத்தால் (தன் உடன் பிறந்தவள் இறப்புக்குக் காரணமானதால்) இவனுக்கு சந்ததி இல்லாமல் போயிற்று. உடலில் பிணிகளும் பற்றிக் கொண்டன. அவன் மனைவிக்கு குழந்தைகள் பிறந்து இறந்தன. இவள் காகவந்த்யை ஆனாள். இதனால் மேற்கொண்டு புத்திர சந்தானம் ஏற்படவில்லை. இதன் பின் கணவனும் மனைவியும் தினம் செலவு செய்து வந்தனர். வெகுகாலம் சென்று பிராமணன் இறந்தான். இதன் பின் மனைவியும் இறந்து போனாள் இதன் பின் இவர்கள் இருவரும் 60 ஆயிரம் வருஷங்கள் நரகத்தில் தள்ளப் பட்டனர். இங்கு மிகவும் துன்பம் அனுபவித்து அதன் பின் யானையாகவும், ஆமையாகவும் பிறந்தனர், அதன்பின் பாம்பாகவும் பிறந்தனர். அதன்பின் சரயூநதிக்கரையில் உத்தம குடும்பத்தில் மனிதப் பிறவி அடைந்தனர். இவன் பாக்யவானாகவும், நல்ல குணமுள்ள வனாகவும் இருந்தான், இவ்வளவு இருந்தும் இவனுக்குக் குழந்தை ஏற்பட வில்லை. இவன் அரசராலும் பெரியோர்களாலும் மிகவும் போற்றப்பட்டான். தம்பியின் மகனைக் கொன்றதாலும், தன் குல ஒழுக்கத்தை விட்டுக் கீழ்த்தனமாக நடந்ததாலும், இந்த பாவங்களால் இவனைப் பல நோய்கள் பற்றிக் கொண்டன. போன ஜென்மத்தில் இவன் யானையையும்' பிராமணர்களுக்கு படுக்கையும் தானம் பண்ணினான், அதனால் இவன் செல்வந்தனாகப் பிறந்தான். இவன் போன ஜன்மத்தில் அனாசார நடத்தையால் இப்பொழுது இவனுக்குப் பெண் குழந்தைகளே பிறந்தன. இப்பொழுது இதற்கு சாந்தி முறையைச் சொல்லப்படுகிறது.

முதலில் இவன் 5 லட்சம் முறை ஜபம் பண்ணவேண்டும். தன் சொத்தின் 8ல் ஒரு பாகத்தைத்தானம் பண்ணவேண்டும். நல்ல முறையில் அமைக்கப்பட்ட ஹோம குண்டத்தில் ஹோமமும் தர்ப்பணமும் பண்ண வேண்டும். அதன் பின் மார்சனமும் பண்ணவேண்டும். தன் தம்பியின்

பிள்ளையின் உருவத்தை 40 தோலா தங்கத்தில் செய்து. பின் முறைப்படி கணபதி மந்திரத்தையும் சொல்லி பூஜை செய்து உபாசனையும் முடிக்க வேண்டும். அதன் பின் லட்சுமியையும், சிவபெருமானையும் நந்திகேஸ்வரரையும் பூஜை செய்ய வேண்டும். வெள்ளிப்பாத்திரத்தில் பிரதிமையை வைத்து பூஜிக்கவேண்டும். கந்த புஷ்ப தாம்பூலாதி உபசாரங்களையும் செய்ய வேண்டும். தன் மனைவியுடன் ஞாயிற்றுக்கிழமையில பூஜை செய்யவேண்டும். இப்படி 7 வருஷம் பூஜை விரதம் செய்ய வேண்டும். இப்படி முறைப்படி பூஜை முடிக்க வேண்டும். அதன்பின் தக்ஷிணை இட்டபொழுது இதற்கு சாந்தி முறை வருமாறு, முதலில் இவன் தன் சொத்தின் 6ல் ஒரு பாகத்தைப் புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். பின் பாழடைந்த கிணறுகளை சரிப்படுத்த வேண்டும். சாலை யோரங்களில் யாத்ரிகர்கள் வசதிக்காக நலல் தோட்டங்கள் அமைக்க வேண்டும். இதன் பின் 2 லட்சம் முறை காயத்திரி மந்திர ஜபம் செய்ய வேண்டும். முறைப்படி 10ல் ஒருபங்கு ஹோமமும் மற்ற புரஸ்சரணமும் செய்யவேண்டும். இப்படி செய்வதால் இவனுக்கு குணசாலியான ஆண்மகன் பிறப்பான். இவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள்

இருப்பினும் 2 தோலா தங்கம் பிராமணனுக்குத் தானம்பண்ண வேண்டும் பின்னால் எல்லாவித அணிகலன் களுடன் ஒரு பிராமண தம்பதிக்குத்தானம். பண்ணவேண்டும். அவர்களை சிவனும் பார்வதியுமாகப் பாவித்து பூஜித்து அவர்களுககு விருந்து படைக்க வேண்டும். இதனால் இவர்கள் பாவம் விலகி முன் சொன்னபடி நல்ல ஆண்குழந்தைகள் பிறக்கும். இவர்களும் அதன்பின் சந்தோஷமாக வாழ்வார்கள்.

## உத்திராடம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம வரலாறும் சாந்த பரிஹாரமும்.

சிவபெருமான் சொல்கிறார்!

கூர்ஜர நகரத்தில் பலபத்திரர் என்ற ஞானியான பிராமணன் வசித்து வந்தான். இவன் தினமும் 4 வேதங்களைவும் ஓதிவந்தான். இதனால் சதுர் வேதி எனப்பட்டான். ஒரு சமயம் மிலேச்ச தேசத்தில் ஒருவன் இறந்து விட்டான். அவன் ஈம சடங்கு செய்வதற்குமுன் இவன் சாப்பிட்டு விட்டான்

இந்த பிராமணன் சங்கள்வர் என்ற நகரத்தில் இறந்துபோனான். இறந்த மிலேச்சனின் சொத்தை இவனும் இவன் மனைவியும் நன்றாக அனுபவித்தனர். பின்பு இவன் கிழவனாளான் பின் இறந்தான். இதன்பின் இவன் நரகத்தில் தள்ளப்பட்டான். தண்டனைக்குப்பின் உலகில் புறாவாகவும் கோழியாகவும் பிறந்தான். அதன்பின் மனிதப்பிறவியைப் பெற்றான். இவன் பண்டிதனாகவும் ஞானியாகவும் இருந்தான். போன ஜென்மத்தில் மிலேச்சன் வீட்டின் போஜனம் பண்ணிய பாவத்தால் இதனால் இவன் சரீரத்தில் நோய்கள் பற்றிக்கொண்டன. இவன் மனைவியும் மலடியானாள். குழந்தைகள் பிறக்க வில்லை. இதற்கு சாந்திமுறையைக் கவனிப்போம்.

முதலில் தன் வீட்டு சொத்தில் 8ல் ஒருபாகத்தை பிராமணருக்கு தானம் பண்ணவேண்டும். பின் காயத்ரி மந்திரஜபம் ஒருலட்சம் முறைஜபம் செய்ய வேண்டும். அதன்பின் ஹோமம் தர்ப்பணம் செய்யவேண்டும். முறைப்படி புரன்சரணமும் முடிக்கவேண்டும். 10 நிறம் கொண்ட பசுவைத்தானம் செய்யவேண்டும். அதன்பின் பறங்கிஓட்டில் மற்றும் தேங்காய் குடுவையில் ரத்னங்கள் நிறைத்துத் தானம் பண்ணவேண்டும். இதை கங்கை பிரவாஹத்தின் நடுவில் செய்யவேண்டும். இதனால் இவன் பாவங்கள் முழுவதும் நாசமாகின்றன. அதன் பின் இவர்கள் உடல் நோய்கள் குணமாகி இவர்கள் நலம் பெறுவர். அதன்பின் ஆண்குழந்தை பாக்கியமும் ஏற்படும். பின்பு இவர்கள் சுகமாக வாழ்கின்றனர்.

*பிறர் மதப்படி உத்திராட நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்*

*பொதுப்பலன் - ஆண்கள்*

*உருவ அமைப்பு*

எல்லா உறுப்புக்களும் அளவெடுத்து அமைந்தது போன்ற கட்டுக் கோப்பான உடல் அமைப்பு உடையவன். தலை அகலமாக இருக்கும். உயர்ந்த உருவமும். நீண்டநாசியும், ஒளிமிகுந்த கண்களும் உடலுக்கு அழகுசேர்க்கும். அழகான தெய்வீக தோற்றம் கொண்ட இவன்நிறம் அழகிய சிவப்பு.

*குணங்கள்;*

கள்ளம்கபடு இல்லாத வெகுளியான முகத்தோற்றம் கொண்ட இவனது உள்ளம் சுத்தமானது. மென்மையாகப் பேசுவான். பண்புள்ளவன். சமூகத்தில் பெரும் 'பொசிஷனில்' இருக்க நேர்ந்தால் ஆடம்பரங்களையும், வெளிப் பகட்டையும், விளம்பரத்தையும் விரும்பாதவன். உடைகளை 'கிறுக்கன்' போல் அணிந்திருப்பான். பொதுவாக எல்லோருக்கும், முக்கியமாக பெண்மணிகளுக்கு அதிக மரியாதை கொடுப்பான். கடவுளுக்கு பயந்து காரியங்கள் செய்வான். இவனிடம் உள்ள நல்லது கெட்டதை என்ன முயன்றாலும் பிறர் அறிவது கஷ்டமான செயல். வெகு நாட்கள் இவனுடன் பழகிய பின்னும், நெருங்கிய தொடர்பு கொண்ட பின்னரும் தான் இவனுடைய பழக்க வழக்கங்களையும், எண்ண ஓட்டத்தையும் ஒருவன் அறியமுடியும். முகம் அல்லது இடுப்புப் பகுதியில் கறுப்பு மச்சம் சிலருக்குத் தென்படும். கண்கள் சற்று சிவந்தாற் போல் இருக்கும்.

தான் செய்யும் செயல்களை எதையும் ஒளிக்காது வெளிப்படையாகச் செய்வான். எடுக்கும் எந்த காரியத்தையும் 'சின்சியராக' செய்து முடிப்பான். பிறரை வஞ்சகம் செய்து ஏமாற்றமாட்டான் பிறருக்கு எந்த இடஞ்சலையும் தொந்தரவையும் தரமாட்டான். இந்த இவனுடன் பிறந்த நல்ல குணத்தால் தேவையில்லாத பிரச்சினைகள் அடிக்கடி தோன்றும். இவனுடைய வெள்ளை மனது காரணமாக, பிறர் கொடுக்கும் கட்டாயத்துக்கு உட்பட மாட்டான். எவர்மீதும் முழு நம்பிக்கையும் வைக்க மாட்டான். ஆனால் ஒருவன்மீது நம்பிக்கை வைத்து விட்டால், அந்த நம்பிக்கையை யாராலும் குலைக்க முடியாது. முகஸ்துதிக்கு அடிமை ஆவான். பிறர் தன்நலனை காக்கவேண்டும் என எதிர்பார்ப்பான். அவசரப்பட்டு எந்த திடீர் முடிவுக்கும் வரமாட்டான். எந்த தீர்மானத்தையும் செய்வதற்கு முன்னால் சம்பந்தப்பட்ட துறையில் நம்பிக்கைக்கு உரியவர்களைக் கலந்து ஆலோசிப்பான். எடுக்கும் எந்த காரியத்தையும் ஊக்கத்துடன் செய்து முடிப்பவன். ஆனாலும் இவன் ஒரு சோம்பேறியே.

சண்டை, வாக்குவாதம் ஏற்படும் சமயத்தில் கூட எதிராளியின் மீது கடுமையான வார்த்தைகளை உபயோகிக்க மாட்டான். பிறருடன் கருத்து

வேறுபாடு ஏற்படும் சமயத்தில் தன்னுடைய சந்தோஷமின்மையை வெளிப்படுத்த மாட்டான். பிறருடன் எதாவதொரு விஷயத்தைப் பற்றி விவாதிக்கும் போது, தன்னுடைய அதிருப்தியை வெளிப்படையாகக் காட்டமாட்டான். சிறுவயதில் இவன் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும். இதன் காரணமாக, நல்ல அனுபவம் பெற்று, பிற்காலத்தில் எந்த பொறுப்புள்ள வேலையையும் ஏற்று கச்சிதமாக செய்து முடிக்கும் திறமையைப் பெறுவான். எந்த சமயத்திலாவது இவன் செய்யும் காரியங்கள் அல்லது பேசிய பேச்சுக்கள் தவறானவை என்பதை எடுத்துக் காட்டினால், அந்த தவறை ஏற்றுக்கொண்டு தான் செய்த வற்றுக்கு வருந்தவோ அல்லது மன்னிப்புக் கேட்கவோ தயங்க மாட்டான்.

இவனுடைய ஒவ்வொரு செயலையும். மற்றவர்கள் அங்கிகரிக்க வேண்டும் என விரும்புவான். இல்லையேல் மனம் வருத்த மடைவான். ஒருசமயம் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருப்பான். இன்னொரு சமயம் மிகுந்த வருத்தத்துடன் காணப்படுவான். இது இவனது விசித்திரமான மனோபாவம்.

*கல்வியும் - தொழிலும்*

விவாதத்திற்குரிய விஷயங்களை இவன் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். கூட்டு சேரும்போது அந்த நபர்களை நன்கு வடிகட்டி நல்லவர்கள் என தெரிந்த பின்பே கூட்டு சேர வேண்டும். இல்லாவிட்டால் தோல்வி ஏற்படுவது நிச்சயம். 38 வயதிற்குப் பிறகு எல்லா விஷயங்களிலும் வெற்றியும், வாழ்க்கையில் வளமும் உண்டாகும்.

*குடும்ப வாழ்க்கை*

பொதுவாக இளமைப் பருவம் நன்றாகவே இருக்கும். வாலிப வயதில் எதிர்பாராத கெடுதல்களும் பிரச்சினைகளும் குடும்பத்தில் உருவாகும். 28-லிருந்து 31 வயது வரை உள்ள காலகட்டத்தில் குடும்பத்தில் முக்கியமான ஒரு மாற்றம் அல்லது திருப்புமுனை ஏற்படும்.

கிட்டத்தட்ட மணவாழ்க்கை இன்பமுள்ளதாகவே இருக்கும். பொறுப்புள்ள நேசிக்கும் மனைவியைப் பெறுவான். இவன் மனைவியின் உடல்நலம் பாதிக்கப் படுவதால் கவலை உள்ளவனாக இருப்பான். இவன் மனைவிக்கு வயிற்றில் 'அஸிடிடி'' அல்லது "கருப்பையில்', கோளாறு ஏற்படும். இவனுடைய பிள்ளை களாலும் இவனுக்கு மனக்கவலை ஏற்படும். அவர்களால் இவனுக்கு சந்தோஷம் இராது.

### உடல் ஆரோக்கியம்

வயிற்றுக் கோளாறு, நுரையீரல் வியாதிகள், கைகால்களில் பாரிச வாயு போன்றவை இவனை எளிதாக பீடிக்கும் நோய்களாகும். கண்பார்வை குறைவு படும். கண்களில் ஏதாவது குறை இருக்கும்.

### *பொதுப் பலன் — பெண்கள்:*

### *உருவ அமைப்பு*

அகலமான நெற்றியும், பெரிய நாசியும், அழகான பற்களும், கொண்ட வளாயிருப்பாள். கண்கள் கவர்ச்சி மிகுந்து காணப்படும். பலம்மிக்க கட்டான உடலமைப்பு இருக்கும். தலைமுடி அவ்வளவு அழகாக இராது.

### *குணங்கள்*

இவளிடம் உள்ள விரும்பத்தகாத ஒரு குணம், இவள் 'ஒரு பிடிவாதக்கார பிசாசாக' இருப்பதுதான். எதைப் பேசுகிறோம் என்று தெரியாமலேயே பேசுவாள். யோசனையே செய்யமாட்டாள். பிறர் சொல்லுக்கு 'எதிர்சொல்' பேசுவது இவளது ரத்தத்தில் ஊறியது. தான் சொன்னதுதான் சரி என்று பிடிவாதமாக சாதிப்பாள். 'தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்றும் இவளிடம் முயலின் 4 கால்களைக் காட்டினாலும், ஒரு காலை வெட்டிவிட்டு. இப்பொழுது பாருங்கள் 3 கால்தான் என்பாள், இவள் எளிய வாழ்க்கையே வாழ்வாள்.

*கல்வி - தொழில்*

இவர்கள் நன்கு படித்தவர்களே. டீச்சராக, வங்கி ஊழியராக, மத ஸ்தாபனங்களில் ஊழியராக வேலை பார்ப்பார்கள். புதனுடன் சந்திரன் சேர்ந்திருந்தால் எழுத்தாளியாக அல்லது பப்ளிஷராக சம்பாதிப்பாள்.

*குடும்ப வாழ்க்கை*

மண வாழ்க்கையே சந்தோஷமாக இருக்காது. கணவன் இவளை விட்டுப் பிரிவதாலும் அல்லது கணவன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இவளை தாக்குவதாலும் நிம்மதியின்றி கவலை உடையவளாக இருப்பாள். மத, தெய்வ சம்பந்தமான வழிபாடுகள், சடங்குகள் செய்து தன் கவலைகளை மறக்க முயலுவாள்.

இவள் ரேவதி அல்லது உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் பிறந்தவனை கணவனாக அடைந்தால் வாழ்க்கையில் திருப்தியும் முழு சந்தோஷமும் பெற முடியும்.

*ஆரோக்கியம்*

வாயு சம்பந்தப்பட்ட ரோகம், ஹெர்னியா, யூடரஸ் தொந்திரவு-ஆகியவை கஷ்டப்படுத்தும்.

***உத்திராட நட்சத்திரத்தில் உள்ள கிரகங்களை இதரகிரகங்கள் பார்த்த பலன்***

இதற்கு மூலம் நட்சத்திரத்திற்கு சொல்லிய பலன்களைப் பார்க்கவும்.

***உத்திராட நட்சத்திர பாதங்களில் கிரகங்கள் தரும் பலன்***

***உத்திராடம் 1ம் பாதத்தில் இருக்கும் சூரியன் தரும் பலன்***

இவன் முன்கோபமும், வைராக்கியமும், உள்ளவனாக இருப்பான். மத கோட்பாடுகளை ஒழுங்காக கடைபிடிப்பான். செல்வந்தகையும், பிரபலமாகவும் இருப்பான். இடுப்பு பகுதியில் தசைகளில் பிடிப்பு ஏற்பட்டு கஷ்டப்படுவான்

### உத்திராடம் 1ம் பாதத்தில் இருக்கும் சந்திரன் தரும் பலன்

சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவன். பிற பெண்களிடம் Sex உறவில் இன்பம் காண்பான். இவனுக்கு பற்கள் பெரிதாக, மாட்டின் பல்லைப்போல் இருக்கும். தந்தையின் பூர்விக சொத்துக்களும், செல்வமும் இவனை வந்தடையும். தன் உறவினர்களுடன் சுமுகமான உறவு இருக்காது. இவனது 5 வது வயதில் உடல்நிலை மிகவும் மோசமாக பாதிக்கப்படும். 7 வது வயதில் 'ஜலகண்டம்' ஏற்பட்டு தண்ணீரில் முழுகும் அபாயம். இருப்பதால் அந்த வயதில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்த சந்திரனை பாபிகள் பார்த்திருந்தால், அவ்வமயம் பக்கத்தில் உள்ளவர்கள் இவனை தண்ணீரிலிருந்து எடுத்து காப்பாற்றி விடுவார்கள்.

### உத்திராடம் 1ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

இந்த செவ்வாயுடன் சூரியனும், சனியும் இருந்தால் மெஷினரி சம்பந்தப் பட்ட வேலை கிடைக்கும். இவனுடைய கல்வியில் பல தடங்கல்கள் ஏற்படும் படிப்பில் கவனம் செலுத்த மாட்டான். தந்தையின் தொழிலை இவன் செய்வான்.

### உத்திராடம் 1ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

விஞ்ஞான அறிவும், திறமையும் பரிபூரணமாக பெற்றவன். உயரமாகவும் பலம் மிகுந்த உடலும் பெற்ற வனாக இருப்பான். உயர்ந்த கல்வி கற்று பல டிகிரிகளை வாங்குவான். அதனால் இவன் 25 வயதிற்குப் பிறகே உத்தியோகத்தில் சேர வாய்ப்புக்கிடைக்கும்.

### உத்திராடம் 1ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

இந்த இடம் லக்னமாக அமைந்து, குருவும் சனியும் சேர்ந்து இங் கிருந்தால் ஜாதகன் உயர்ந்தபட்டப் படிப்பைப் பெறுவான்.

### உத்திராடம் 1ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

உடலில் 'ட்யூமர்' டயபிடிஸ், மங்கிய பார்வை முதலிய நோய்கள் ஏற்படும் இவனது 28 வயதில் திருமணம் நடைபெறும் பெண்ணாகஇருந்தால் 24 ம் வயதில் திருமணம் ஆகும்.

### உத்திராடம் 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

பெரிய உடலும், நடுத்தரமான நிறமும் கொண்டவன். பிறருக்கு உதவி செய்யும் குணம் உள்ளவன் எல்லோரிடமும் அன்பாக நடந்து கொள்வான்.

### உத்திராட ம்1 ம்பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

லக்னமும் இதில் அமைந்தால் ஜாதகனுடைய பற்கள் பெரிய அளவில் இருக்கும். குறுகிய மனப்பான்மை உடையவன் தன்னை மிகைப்படுத்திக் காட்டிக்கொள்வான். கொள்கை அல்லது குறிக்கோள் இல்லாத வாழ்க்கையை நடத்துவான். குறும்புத்தனமும், வக்ரமான குணங்களும் நடவடிக்கைகளும் உடையவனாக இருப்பான்.

### உத்திராடம் 1ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

இங்குள்ள கேது, ஒருவனை அவன் இருக்கும் துறையில் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவான் மற்றொரு சமயத்தில் உயர்ந்த நிலையிலிருப்பவனை தாழ்ந்த நிலைக்கு தள்ளிவிட்டு விடுவான்.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

ஜாதகன் மிகவும் அமைதியானவன் ஆனால் கவலையினால் மனநோய்க்கு ஆனாவான். பாரபட்சம் இல்லாதவன் சுறுசுறுப்பானவன். சந்தேகத்துக் குரியவன் சங்கீதத்தில் வித்வத்வம் உடையவன். சங்கீதம், கலைகள் மூலம் பணம் சம்பாதிப்பான்.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

கவுரவமான மனிதன் நன்கு படித்தவன். செல்வத்தையும் சந்தோஷத்தையும், உடையவன். மனைவி மக்களிடம் அதிக அன்பு வைத்திருப்பவன். அவர்களைச் சார்ந்து இருப்பான். தருமவான் போல் வேஷம் போடுவான். உண்மையில் இவன் ஒரு கருமி, தந்திரசாலி. 10 வயதாகும்போது மரத்திலிருந்து கீழே விழுவான் 12 வது வயதில் ஆயுதத்தால் காயப்படும் அபாயம் உண்டு.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

65 வயது வரை ஆயுள் உள்ளவன். குருவும் இங்கு இருந்தால் உயில்கள் மூலம் சொத்து இவனை வந்து அடையும். விவசாயம் அல்லது கால் நடைகள் மூலம் வருமானம் உண்டாகும்.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

பின் விளைவுகளைப் பற்றி சிந்திக்காமல் செய்யப்படும் செயல்களையும் வேலைகளையும் உடையவன். தந்திர குணம் படைத்தவன். அதிகாரத்தையும் மரியாதையையும் விரும்புபவன். இந்த செயல்களால் பல விரோதிகளை சம்பாதித்துக் கொள்வான். மேலும் இவனுக்குத் தேவைப்படும் சமயத்தில் உதவி செய்ய ஒருவரும் முன்வரமாட்டார்கள். கீழ்மட்ட உத்தியோகம் பார்ப்பான். இவனை குரு பார்த்தால் இவன் ஏதாவது பிஸினஸ்ஸில் ஈடுபடலாம், ஆனால் அதில் அதிக முன்னேற்றத்தைக் காண முடியாது.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

செவ்வாய் நீச்சம் அடைந்திருந்தால், ஜாதகன் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பிரமுகராக இருப்பான். கை கால் மூட்டுக்கள் வீங்கிக் கொண்டு அளவற்ற வலியைத்தரும் நுரையீரல் அபோப்லக்ஸி நோய் உண்டாகும்,

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

எப்போதும் இன்பங்களைத் தேடி அலைவான். இவனது திருமணம் 23 வது வயதில் 32 வது வயதில் தான் ஏற்படும். பெண்ணாக இருந்தால் திருமணம் காலங்கடந்து 28 வயதில்தான் நடைபெறும்.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இந்த சனியுடன், சூரியன், சுக்கிரன், சந்திரன் மூவரும் திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகனின் தந்தை ஒரு வியாபாரியாக இருப்பான். நடுத்தரக் கல்வி அறிவை உடையவன். தன்னுடைய உத்தியோகத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பான். இவன் மனைவி நோயாளியாக இருப்பாள், பொருளாதாரச் சரிவுகள் எற்படும். கலங்கிய, வருத்தமான மனதை உடையவன்.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

திடகாத்திரமான உடலும், கறுத்த நிறமும் கொண்டவன். ஆச்சார சீலம் உடையவன். மிகவும் கெட்டிக்காரன். தனிமையை விரும்புபவன் மெக்கானிக்கல் சயன்ஸில் திறமை பெற்றவன். பெண்கள் மூலமாக பணம் சம்பாதிப்பான். அதாவது இவன் மனைவியோ அல்லது உறவினர் களோ வேலையிலமர்ந்து சம்பாதித்து இவனுக்குத் தருவார்கள். தனக்காக பைசா செலவழித்துக் கொள்ள மாட்டான். ஆனால் குடும்பத் தினருக்காகச் செலவு செய்ய தயங்காதவன்.

### உத்திராடம் 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

சூரியன் இவனுடனிருந்தால் இவன் தந்தை அரசாங்க உத்தியோகத் தில் இருப்பார். இருந்தாலும் ஜாதகன் தன் தந்தையிடமிருந்து எந்த நன்மைகளையும் பெற முடியாது. ஜாதகன் கூர்ந்த மதி உடையவன் மதசார்பு உடையவன். உடலில் வலிகள் ஏற்படும்.

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

எல்லா 'எக்ஸர்ஸைஸி'லும் கெட்டிக்காரன். இந்த இடத்தில் லக்னம் அமைந்து செவ்வாயின் பார்வையை பெற்றிருந்தால் ஜாதகனுக்கு ஆஸ்துமா, டீபி ஏற்படும்

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

உடலின் இடுப்புக்கு மேல் உள்ள பகுதி ஒல்லியாக இருக்கும் மேல் பகுதி பெரிதாகவும் புஷ்டியாகவும் இருக்கும். குளிர்ந்த சீதோஷ்ண ஸ்திதி இவனுக்கு ஒத்துக்கொள்ளாது. இவனுடைய 20 வது வயதில் அதிக சுரம் ஏற்பட்டு நீண்ட நாட்களுக்கு தொடர்ந்து இருக்கும். எந்த வைத்தியத்திற்கும் கட்டுப்படாது. 35 வது வயதில் உடலின் இடது பாகம் தீயினால் வெந்து போகும் அபாயம் உண்டு.

சந்திரன் உத்திராடத்தின் எந்த பாதத்தில் இருந்தாலும் 90 வயது உடையவன். இவன் மரணம் சிரவண மாதத்தில் சுக்லபக்ஷ தசமியில் செவ்வாய் கிழமையில் கேட்டை நக்ஷத்திரத்தில் நிகழும்.

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

ஜாதகன் அரசனுக்கு சமமான செல்வம், பதவி, அதிகாரம், பொஸிஷன் எல்லாவற்றையும் அனுபவிப்பான். உயர்ந்த ஸ்தானத்தை அடைவான்.

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

உத்திராடம் 2ம் பாதத்தில் தந்த பலனையே இங்கும் தருவான்' இவனை சந்திரன் பார்த்தால் ஜாதகன் ஆரம்பத்தில் தாழ்ந்த நிலையில் உத்தியோகத்தில் இருப்பான். 30 வயதிற்குப்பிறகு வெளிநாடுகளுக்குச் சென்று பிரயாணங்கள் செய்து தேவையான செல்வத்தை சேமிப்பான்.

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

கவலை உள்ள மனத்துடன் ஊர் ஊராக அலைந்து கொண்டிருப்பான். அழகும் கவர்ச்சியும் உடையவன். பரந்த செல்வாக்கு உடையவன். கவித்வம் கலை உணர்வு கொண்ட மனத்தினன். தாய்வழி உறவினர்கள் மூலம் திரண்ட செல்வத்தையும், சொத்துக்களையும் பெறுவான்.

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

நீதியும், நேர்மையும், தைரியமும், இரக்கமும் கொண்ட நல்லவன். வளர்க்கும் பிராணிகள் மீது அன்பு கொண்டவன். அதிகப்படியான செக்ஸ் விளையாட்டுகளில் ஈடுபடுவான். அதனால் பெண்வியாதி ஏற்படும். உடலில் ட்யூமர், டயபிடிஸ் போன்ற நோய்கள் உண்டாகும். சிலருக்கு ஆஸ்துமா நோயும் ஏற்பட வாய்ப்புண்டு.

### உத்திராடம் 3 பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

அரசாங்கத்திடமிருந்து அதிக நன்மைகளைப் பெறுவான். ஏதாவது ஸ்தாபனத்தில் தலைமைப்பதவியை பெறுவான். அதிகம் படித்தவன். தன்னுடைய சொந்த நிதி நிலைமையைப்பற்றி சிறிதும் கவலைப்படமாட்டான். ஆனால் பிறருடைய நிதி நிலைமையை உயர்த்துவதற்கு மிகவும்பாடுபடுவான்.

### உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

சராசரி உயரம் கொண்டவன். கீழ்சாதி பெண்களை அதிகம் விரும்புபவன் வஞ்சகமும், ஒழுக்கமற்ற நெறியும் கொண்டவன். பணத்திற்காக தன் மனைவியைக்கூட விற்கத்தயங்காத அயோக்கியன். தன் மனைவி மக்களிட மிருந்து எந்த சுகத்தையும் சந்தோஷத்தையும் வசதிகளை அனுபவிக்க மாட்டான். இவனுடைய குழந்தைகள் இவனை வெறுக்கும். இவனை அடியோடு விரும்ப மாட்டார்கள். இந்த இடத்தில் உள்ள ராகு. ஜாதகனை வயதான காலத்தில் வீட்டை விட்டு விரட்டி விடுவான்.

**உத்திராடம் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

கேது இங்கிருக்கையில் சந்திரன் கேட்டை நக்ஷத்திரத்தில் இருந்தால், ஜாதகன் ஒரு லாயராக ஆவான். 55 வயதிற்குப் பிறகு பிரதானமான அரசியல் வாதியாக திகழ்வான். சந்தோஷமான வாழ்க்கையை நடத்துவான்.

**உத்திராடம் 4ம் பாதத்தில் உள்ள கிரகங்களின் பலனை அறிய 'அபிஜித்' நக்ஷத்திரத்திற்கு சொல்லப்பட்ட பலன்களைப் பார்க்கவும்**

**உத்திராடம் 4ம் பாதத்தில் கோள்கள் நின்ற பலன்**

**1. உத்திராடம் 4ம் பாதத்தில் சூரியன் நின்ற பலன்**

இங்கு சூரியனின் உச்ச பலத்தைவிட அதிக வலிமை உள்ளவன். இப்பாதத்தில் சூரியன் நின்றவனுக்கு நீண்ட நெடிய ஆயுள் உடையவன் சூரியனே இவனுக்குக் கவசமாக இருப்பான். தான் பிறந்த நாட்டில் அல்லது இடத்தில் மிகவும் அதிகம் ஆளும் திறமை மற்றும் செல்வாக்கு செல்வம் முதலியவை உடையவனாவான்.

**2. உத்திராடம் 4ம் பாதத்தில் சந்திரன் நின்ற பலன்**

அதிக ஆரோக்யம், செல்வம் எல்லாம் உள்ளவன்.

**3. உத்திராடம் 4ம் பாதத்தில் செவ்வாய் நின்ற பலன்**

பெரிய அதிகாரியாக இருப்பான். பாதுகாப்புத்துறை, போலீஸ்துறை முதலியவற்றில் பணி புரிவான். அரசியலில் ஈடுபாடு உண்டு. ஆனால் அரசியலை விட மற்றதுறைகளில் அதிக உயர்வும் சாதகமும் உண்டு.

**4. உத்திராடம் 4ம் பாதத்தில் புதன் நின்ற பலன்**

நல்லது கெட்டது இரண்டும் மற்ற மத்திம பலன் நடக்கும்.

**5. உத்திராடம் 4ம் பாதத்தில் குரு நின்ற பலன்**

இங்கு இவன் நீசமாக இருந்தாலும் மிகவும் வலுவுள்ளவன். இங்கு 4 சுபக்கோள்களின் கொடுமை பாதிப்பு எதுவும் இராது. பதவியில் மிகவும்

உயர்ந்த இடத்தை அடைவான் மந்திரி M.P. போன்ற நிலைகளையும் அடைவான்.

### 6. உத்திராடம் 4ம் பாதத்தில் சுக்கிரன் நின்ற பலன்

இங்கு சுக்கிரன் நின்றால் இதில் பிறந்தவனுக்கு திருமணம் தாமதமாகும் காதல் திருமணம் தன் ஜோடியுடன் சிலநாள் பழகும் வாய்ப்பும் அதன்பின் திருமணமும் கூடும் வாய்ப்பும் உண்டு. அன்யோன்யமான தாம்பத்யமும் சுகசௌக்கியமும் உண்டு.

### 7. உத்திராடம் 4ம் பாதத்தில் சனி நின்ற பலன்

இவன் வாழ்க்கையில் மிகவும் கஷ்டப்படுவான். எதிர்பாராத கஷ்டமான திருப்பங்கள் ஏற்படும். சுப பலன் எதுவும் ஏற்படாது.

### 8. உத்திராடம் 4ம் பாதத்தில் ராகு நின்ற பலன்

இதில் இராகு ஜாதகனுக்கு மிகவும் கஷ்டமான கெட்ட பலன்கள் ஏற்படும். பலசிக்கல்களும் பிரச்சனைகளும் உண்டாகும். சுபக் கோள்கள் பார்வை இருந்தால் கெடுதி குறையலாம்.

### 9. உத்திராடம் 4ம் பாதத்தில் கேது நின்ற பலன்

இதில் பிறந்தவனுக்கு உச்ச குரு, சுக்கிரன் இவர்களில் முழுச்சுபபலனும் உண்டாகும் இவன் அறிவாளி வித்துவான். அரசாங்கத்தில் அந்தஸ்தில் உள்ள பெரிய பதவி ஏற்படும். இவன் தொழிலதிபதியாகவும் வாய்ப்புண்டு.



# அத்தியாயம் - 31

## திருவோணம் நட்சத்திரம்

இது 22வது நக்ஷத்திரம் இது ராசி மண்டலத்தில் 280 பாகை முதல் 293 பாகை 20 கலை வரை பரவி உள்ளது. (அபிஜித் என்ற நக்ஷத்திரத்தை கணக்கில் கொண்டால் திருவோணம் 280 பாகை 54 கலை 13 விகலை முதல் 293 பாகை 20 கலை வரை பரவியுள்ளது)

இதன்

| | | |
|---|---|---|
| தமிழ்ப்பெயர் | - | திருவோணம் |
| வடமொழிப் பெயர் | - | சிரவணம் |
| அரசுப் பெயர் | - | அல்புலா (Al-bula) |
| கிரேக்கப் பெயர் | - | அக்குவாரில் (Aquaril) |
| சீனப்பெயர் | - | நூ (Nu) |

திருவோணம் என்பதன் வடமொழி சிரவணம் என்ற சொல்லுக்கு செவியால் கேட்கும் திறன் என்று பொருள் இது 3 நக்ஷத்திரங்களால் ஆனது.

இந்த நக்ஷத்திரத்தின் அதிதேவதை பகவான் விஷ்ணு அல்லது திருமால் "திரு" என்ற அடைமொழி 27 நக்ஷத்திரங்களில் 2க்கு மட்டும்தான் உண்டு ஒன்று சிவபெருமான் நக்ஷத்திரமான திருஆதிரை - வடமொழி ஆரித்ரா,

2வது திருமாலின் நக்ஷத்திரமான இந்த திருவோணம் ஆகும். ஓணம் என்று தனித்தும் சொல்லப்படும் இது இலக்கியங்களிலும் வரும் "திருவோணத் திருவிழாவில்" என்று நாலாயிர திவ்ய பிரபந்தம் கூறும்

"கணங்கொள் அவுணர் கடந்த பொலந்தார்
மாயோன்மேய ஓண நந்நாள்"

என்று சங்க இலக்கிய மதுரைக் காஞ்சியில் இது போற்றப்படுகிறது. மணிமேகலை காப்பிய நாயகியின் மகளுக்கே "ஆதிரை" என்றும் திருவாதிரை என்று பெயர் உண்டு. இதில் "ஆதிரை" பிச்சை இட்ட காதை" என்றே தனியாக வருகிறது. சரஸ்வதியின் நக்ஷத்திரமாகவும் இது கருதப்படுகிறது கலைவாணி முக்கியமாக சுக்ல பஞ்சமியில் (பெரும்பாலும் சூரியன் திருவோண நக்ஷத்திரத்தில் இருந்து சந்திரன் ரேவதியில் இருக்கும் போதும்) உபாசிக்கப் படுகிறாள்.

*இப்போது சுவடி எண் 1500 மரண கண்டிகையில் சொல்லப்பட்ட திருவோண நக்ஷத்திரத்தில் பிறந்தவர்கள் பலன் வருமாறு:*

*194 "ஓதிய பொருளும் வல்லான் உயர்ந்திடும் புகழும் பூண்பான்*
*தாதவிழ் குழலி னார்க்குத் தனத்தொடு முயல வல்லான்*
*நீதியும் உடைய னாகும் நினைத்தது முடிக்க வல்லான்*
*தீதொரு நாளும் செய்யான் திருவோண நாளினானே"*

*இதன் பொருள்*

திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவன் நன்கு கற்பவன். இவனுக்கு நல்ல புகழ் உண்டு. மகரந்தத் தாது மணம் வீசும் கூந்தல் உள்ள இளம் பெண்களுக்கு (தன் மனைவி உட்பட) பணந்தேடி முயற்சிசெய்து அவர்களுடன் மகிழ்ந்திருப்பவன். இவன் நீதி நியாயம் தெரிந்தவன். தான் நினைத்த காரியத்தை முடிக்க வல்லவன். ஒருபோதும் யாருக்கும் எந்த தீங்கும் செய்யாதவன் என்பதாம்.

### தமிழ் ஜாதகலங்காரம் சொல்லும் திருவோண நக்ஷத்திரப் பலன்

195. தக்கதோர் கல்விமான் ஒரு போக்கன்
சற்றினில் கோப மாறிடுவான்
பக்கமும் முன்பின் பார்த்துமே நடப்பான்
பதிஉளங் காலுயர்த்திருக்கும்
மைக்கணார்க் கினியன் பரிமளம் பிரியன்
மயிர்முடி அழகன்உற் சாகன்
சிக்கன வானும் ஏற்பவர்க் கீவான்
திகழ்ந்திடு வோணநா ளானே.

### இதன் பொருள்

திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவன் நல்ல கல்வி கற்பான் ஒரே வழியே பின்பற்றி நடப்பவன் கோபம் பொத்துக் கொண்டு வந்தாலும் உடனே தணிந்து ஆறிவிடுவான். அக்கம் பக்கம் பார்த்து எதையும் அளந்து நிதான மாகவே பேச வல்லவன். பதிகின்ற இவன் உள்ளங்கால் உயர்த்திருக்கும். பெண்களுக்கு இனியவன். இவனைப் பெண்கள் பலரும் விலும்புவர் அவர்களுடன் மகிழ்ந்திருப்பான்- இவன் தலைமுடி சுருண்டு நீண்டு வளர்ந்திருக்கும். சுருள்சுருளாக அலையும் கூந்தல் உடையவன், உற்சாகம் உள்ளவன், சிக்கனம் உள்ளவன். ஆனால் தன்னை அண்டி கேட்டவர்களுக்கு தரும தானம் செய்யும் உயர்பண்பு உடையவன். இவனே திருவோண நக்ஷத்திரத்தில் பிறந்தவன் குணங்களாகும் என்பதாம்.

### யவன ஜாதகம்

திருவோண நக்ஷத்திரத்தில் பிறந்தவன் வள்ளல் தன்மையுள்ள கொடையாளி; சாஸ்த்திரம் அறிந்த பண்டிதன், தனவான். எல்லா கலைகளை யும் பயிற்சி செய்பவன். எல்லா விஷயங்களையும் அறிந்தவன். தர்மங்களை அறிந்து செய்பவன் என்பதாம்.

*பிருஹத் ஜாதகம்*

இவன் நல்ல அதிக ஐஸ்வர்யம் உள்ளவன். கல்வி கேள்வி உடையவன் சிறந்த குணமுள்ள அழகிய மனைவி அமையப் பெற்றவன். தன்னிறைவு நிறைந்த புகழ் எல்லாம் உடையவன் என்பதாம்.

***பெண்***

***திருவோணத்தில் பிறந்த பெண்ணின் தன்மைகள் வடமொழி ஸ்திரீ ஜாதகம் கூறுவது***

திருவோணத்தில் பிறந்த பெண் நல்ல அழகிய ரூபவதி புத்தி கூர்மையுள்ளவள். சாஸ்த்திரங்களைக் கற்றவள் எப்பொழுதும் தானம் வழங்குவதில் ஆசையுள்ளவள். பதி விரதையாகவும் பணிவுள்ளவளாகவும் இருப்பாள், நிறைய செல்வம் உள்ளவள். பிறருக்கு உதவி செய்யும் குணமுள்ளவள் என்பதாம்.

***வேறு நூல்***

பணிவுள்ளவள் சிரத்தை உள்ளவள், கதை நாடகம் கவிதைகளில் பற்றுள்ளவள். தன் குலத்தில் சிறந்த புகழுடன் விளங்குபவள் என்பதாம்.

***சங்கரர் மதன நூல் கூறும் திருவோணத்தில் பிறந்த பெண்ணின் தன்மைகள்:***

இவள் தெய்வ தத்துவ லக்ஷணத்தைச் சேர்ந்தவள்,

***196*** ***சிவந்தழ குடையளாகும் சீரிய செல்வி யாகும்***
***அவம்பட உரையாள் ஒன்றும் அறிவுடன் அன்பும் உள்ளாள்***
***தவிர்த்திடும் கோபத் தாலும் சிந்தையால் தணிவு முண்டாம்***
***உவந்தவர்க்கு அன்பு செய்யும் ஓண நாள் தோன்றி னாளே!***

(இதன் பொருள்)

திருவோண நக்ஷத்திரத்தில் பிறந்தவள் சிவந்த நிறமுடையவள். நல்ல அழகி. உயர்ந்த நல்ல நிறைந்த செல்வமுடையவள் இவள் வீண் பேச்சு எதுவும்பேச மாட்டாள். அறிவும் அன்பும் உடையவள். கோபத்தைப் பெரிதும் தவிர்ப்பவள். அப்படி கோபம் வந்தாலும் உடன் தணியும் குளிர்ந்த சுபாவம் உள்ளவள். தன்னிடம் வந்தவர்களுக்கு உவகையுடன் அன்புகாட்டுபவள். இவளே திருவோணத்தில் பிறந்தவள் ஆவாள் என்பதாம்.

*பிற செய்திகள்*

***சுவடி எண் 1500 மரண கண்டிகையில் சொல்லப்பட்ட திருவோண நக்ஷத்திரம் பற்றிய பிற செய்திகள்***

இன்னானுக்குத் தெய்வம் மகாவிஷ்ணு. யோனி பெண் குரங்கு. பட்சி மாடப்புறா. விருட்சம் எருக்கு. ராசி மகரம். நட்சத்திரம் மூன்றாய் இருக்கும். வாரம் சனி. இந்த நட்சத்திரம் உழவுக்கோல் போன்றிருக்கும். இந்த நாளில் வருஷம் பிறக்கில் தானிய விலை குறையும். தைமாதம் சூனியம் 20நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். தெய்வ கணம் இந்நாளில் வெதுப்பு தோன்றில் 7 நாளில் விடும். விடாதபோது நெய்யும் நல்லெண்ணையும் கலந்து ஓமம் பண்ணுவது. அதன் பின் 3 நாளில் தீரும். இதில் பெண் திரளில் புத்திரனைப் பெறுவாள். ஞாயிறு கூடில் நாச யோகம். முடிசூட பிரதிஷ்டை பண்ண நல்ல நாள். வாழைமரம்வைக்க, அகமெடுக்க, அன்னப் பிராசானம் செய்ய, விதை தெளிக்கவும் நல்ல நாள்,

**இவன் குணம்**

பூஜை படைக்க வல்லவன், ராஜப் பிரதாப முடையவன் தன தான்ய முடையவன். முன்கோபி நீராட வல்லவன். ஸ்த்ரீ போகத்தில் நாட்டம் உள்ளவன். தெய்வத்திற்கும், குருக்களுக்கும், பிராமணர்களுக்கும் நல்லவன் அறிவுடையவன். சிறு திண்டிகளில் விருப்பமுள்ளவன். வலது பக்கத்தில் மறுஉடையவன் பகைவர்களை வெல்லும் திறமைபெற்றவன்.

*பிற நூற் செய்திகள்*

இந்த நக்ஷத்திரம் பல தேவதைகள் தோன்றிய சிறப்புடையது. இது திருமாலின் நட்சத்திரம். கேரள நாட்டினர்க்கு முக்கியமான ஓணம் பண்டிகையின் சிறப்பு இந்த நக்ஷத்திரத்தை ஒட்டியதுதான்.

இந்த நக்ஷத்திரக் காரர்கள் சுகந்த பரிமளங்களையும், மலர்களையும் சூடும் ரசிகர்கள். இவர்கள் ஸ்தூல சரீரம் உள்ளவர்கள். பிற பெண்கள் மேல் நாட்டமுள்ளவர்கள் பாக்கியசாலி. பரந்த மனப்பான்மை உடையவர்கள். உறவினர் சூழ இருப்பவர்கள்; வாக்கு வன்மையுடையவர். அகபோகி, அதிகம் பிரயாணம் செய்பவர். சபல சித்தமுள்ளவர். நெஞ்சுறுதி இல்லாதவர். மறை விடங்களில் மச்சமுள்ளவர்கள். அறிவாளிகள்.

இது செப்டம்பர் மாதம் இரவு 9-30 மணிக்குமேல் உச்சியில் தெரியும்

இவர்களுக்கு பொதுசேவையில் ஈடுபாடு உண்டு. இவர்களுக்கு எருக்கு ராசியான தாவரம். எருக்கு விநாயகர்வழிபாடு சிறப்பு தரும். 15 முதல் 30 வயது வரைசில உடல் உபாதைகள் ஏற்படும் தீர்க்காயுள் உள்ளவர்கள்,

சிவந்த நிறம், கட்டான தேகம், அழகு உள்ளவர்கள். குடும்பத்தில் இவர் களுக்குத்தனி மதிப்பு உண்டு. சிக்கனம் உண்டு; தனிக்குடித்தனத்தில் பிரியமுண்டு; இதற்கு மற்றொரு அதிதேவதை குபேரன்.

வெள்ளிக்கிழமையில் திருவோணம் வந்தால் அது மரண யோகமாகும் இப்படிப்பட்ட தினத்தில் பிறந்தவர்கள் தகுந்த சாந்தி பரிஹாரம் செய்து கொள்ளவேண்டும்,

இது 3 நக்ஷத்திர தாரை, குச்சி போன்ற உருவம் மேல்நோக்கு நாள் எழுத்து "ம" காரம் இந்த நாளில் 10 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷகடிகை நீர்பருகி யாத்திரை மேற்கொள்ளலாம். சாந்திமுகூர்த்தம், சீமந்தம், நாமகரணம், செஷனம், அபிஷேகம், ஆபரணம் அணிதல் பயிர்த் தொழில் விதை விதைத்தல், கர்ணபூஷணம் விவாஹம், சிரார்த்தம், யாகம் முதலியவைக்கு ஏற்ற நாள். மார்கழி சூன்ய மாதம்.

இதில் விவகாரம் ஜெயமாகும் திங்கள்கிழமையில் உதயாதி 2 வது அம்சத்தில் மனைகோல நன்று, கிரஹப்பிரவேசத்திற்கும் நல்லது. சுரம் ஏற்பட்டால் 2 மாதம் வரை ஆகாது. மரண சந்தேகம் உண்டு. பால் சர்க்கரை, நெய் முதலியவை நைவேத்யம், ஜாதி பூஷ்பத்தால் பூஜை தசாங்கம் தூபம் "அதோ தேவா" என்பது பூஜை மந்திரம். சிவப்பு அரிசியால் ஹோமம், சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஓமம். சந்தனம் புஷ்பம் பலி இதில் மாதம் பிறந்தால் தான்ய விருத்தி உண்டு.

*தமிழ் ஜாதகாலங்காரம் சொல்லும் திருவோண நக்ஷத்திர பாத பலன்*

*197 வந்திடும் புத்திமான் தூலதேகி*
*மைந்தரி லான் போக வானாம்*
*மன்னுமுற் சாகி கலகவான் கர்வி*
*யாந்திரு வோணத்தின் முதற்கால்*
*சந்ததம் பிரம ஞானியாம் காமி*
*தயவிலான் உலோபியாம் சினேகம்*
*தானிலா லென்ற சாற்றுவ ரிரண்ட*
*தாகிய காலதாம் பலனே.*
*தந்திடும் காமி ரோகிநற் போகி*
*தனமுளன் மெத்தவே உதாரன்*
*தயவிலான் என்றே உரைத்திடு வார்கள்*
*அருப்பத மூன்றினாம் பலனே.*
*சிந்து நுதல்வே சையர்விருப் புடையான்*
*சீலவான் தருமவான் தியாகி*
*சிறப்புளன் தனவான் பயிரிடு வானாம்*
*செப்புநாற் கால் பல வகையே.*

### 1. திருவோணம் முதல் பாதத்தில் பிறந்தவன்

அறிவாளி திடமான சரீரம் உள்ளவன். மக்கட் பேறில்லாதவன் ஸ்த்ரீ சுகம் மிக உள்ளவன். எக்காலமும் நீங்காத சந்தோஷமுள்ளவன். கோள் சொல்லுபவன். அகங்காரம் உடையவன் என்பதாம்.

### 2) திருவோணம் 2ம் பாதத்தில் பிறந்தவன்

எப்போழுதும் ஆன்மீக ஈடுபாடு, சன்யாசம் இவற்றில் பற்றுள்ளவன். இறந்த காலம் நிகழ் காலம் எதிர்காலம் இவற்றை அறிந்து சொல்பவன். போக இச்சை உள்ளவன், ஈவு, இரக்கம் இல்லாதவன். தரும குணம், இன் சொல், அன்பு இவை இல்லாதவனுமாவான் என்பதாம்.

### 3) திருவோணம் 3ம் பாதத்தில் பிறந்தவன்

மோகத்தில் ஆழ்ந்தவன், நோயாளி, ஸ்த்ரீ சுகம் அனுபவிப்பவன், நிறைந்த செல்வம் உடையவன். யார் எதுகேட்டாலும் தடையின்றி பதில் சொல்லும் திறமையுடையவன். இரக்கமென்பது கொஞ்சமும் இல்லாதவன் என்பதாம்.

### 4) திருவோணம் 4-ம் பாதத்தில் பிறந்தவன்

தன் நெற்றியில் சிந்தூரப் பொட்டணிபவன். தாசிகளிடம் ஆசை யுடையவன், சுத்தமாக இருப்பவன். ஈகைக் குணமுள்ளவன், தியாகி. உபகாரி யாவரும் புகழத்தக்கவன். செல்வமுடையவன். நிறைந்த செல்வமுடையவனும் ஆவான் என்பதாம்.

### ஜாதக சாரதீபம் சொல்லும் திருவோண நக்ஷத்திர பாத பலன்கள்

1-ம் பாதம்: தீர்க்காயுள் உள்ளவன்

2-ம் பாதம்: பலவகை நோய் கவலை முதலியவற்றால் பீடிக்கப்பட்டவன்

3-ம் பாதம்: மிகவும் பயந்த சுபாவம் உடையவன்

4-ம் பாதம்; அதிக ஸ்த்ரீசுகமும் அவர்கள் நேசமும் உள்ளவன் என்பதாம்

*சுவடி எண் **1500** மரண கண்டிகை நூல் கூறும் திருவோண நக்ஷத்திர பாத பலன்கள்*

*திருவோணம் முதல் பாதத்தில் பிறந்தவன் தன்மைகள் வருமாறு*

*193 வெட்டெனப் பேசவல்லான் வெகுளிமுன் னுடையனாகும்*
*சிட்டரைச்சேர்ந்து வாழும் சிறுகுடி அழகனாகும்*
*பட்டயமணிந்த தோளான் படைக்கெல்லாம் தலைவனாகும்*
*எட்டுணை ஒன்று மஞ்சான் எரியின் அங்கிஷத்தி னானே!*
*[சுவடி எண் **1500**]*

*இதன் பொருள்*

திருவோணம் 1-ம் பாதத்தில் பிறந்தவன் வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனத் தெளிவாகப் பேசவல்லான். முன்கோபம் உடையவனாவான். உயர்நத சான்றோர்களுடன் சேர்ந்து வாழ்பவன். இவன் அழகன் சிறிய குடும்பத்தைச் சார்ந்தவன். தோள் வளையம் என்ற அணிகலனை அணிந்தவன், இவன் எல்லாப் படைகட்கும் தலைவனாகும் தகுதி பெற்றவன். சிறிதளவுகூட எதற்கும் அஞ்சமாட்டான். இவனே செவ்வாயின் அங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான்.

*இதற்குக் கால சக்கர தசை*

| | | |
|---|---|---|
| தனுசு வியாழன் | - 10 | வருடம் |
| மகரச் சனி | - 4 | வருடம் |
| கும்பச் சனி | - 4 | வருடம் |

| | | |
|---|---|---|
| மீன வியாழன் | - | 10 வருடம் |
| மேஷச் செவ்வாய் | - | 7 வருடம் |
| ரிஷப வெள்ளி | - | 16 வருடம் |
| மிதுன புதன் | - | 9 வருடம் |
| சிங்க ஆதித்தன் | - | 5 வருடம் |
| கற்கடக சந்திரன் | - | 21 வருடம் |
| ஆகவயது | - | 86 வருடம் |

***திருவோண நட்சத்திரம் 2-ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்***

***199*** *மார்பகன் றுயர்ந்திருக்கும் மதிமுக மருவு முண்டாம்*
*சீர்தரும் உண்டி பேணும் செய்யதாம் கொடுங்க ணாளன்*
*ஆதர உடைய னாகும் அறிவுடன் நன்கு கற்கும்*
*சார்வதும் மாதர் தம்பால் தரும்புகர்க் காலினானே!*
[சுவடி எண்: 1500]

***இதன் பொருள்:***

திருவோணம் 2-ம் பாதத்தில் பிறந்தவன் அகன்ற மார்பும் உயரமாகவும் இருப்பான். சந்திரன் போன்ற அழகிய வட்டமுகமும் அதில் மருவும் உடையவனாவான். சிறப்பான ஊட்ட சத்துள்ள உணவையே தேர்ந்து சாப்பிடுபவன். சிவப்பான் கோபத்தால் சிவந்த கண்ணுடையவனாவன். இவன் அனைவர் ஆதரவும் பெற்றவனாவான்.

அறிவுடன் நன்கு கவனத்துடன் நன்றாக கல்வி கற்பவன். பெண்கள் சாவகாசமும் அவர்களால் சுகமும் அனுபவிப்பவனும் ஆவான். இவன் சுக்கிரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

*இதற்குக் கால சக்கரம் வருமாறு*

| | | |
|---|---|---|
| 1. கன்னி புதன் | - 9 | வருஷம் |
| 2. துலாம் வெள்ளி | - 16 | வருஷம் |
| 3. விருச்சிகச் செவ்வாய் | - 7 | வருஷம் |
| 4 மீன வியாழன் | - 10 | வருஷம் |
| 5. கும்பச் சனி | - 4 | வருஷம் |
| 6. மகரச்சனி | - 4 | வருஷம் |
| 7. தனுசு வியாழன் | - 10 | வருஷம் |
| 8. மேஷச் செவ்வாய் | - 7 | வருஷம் |
| 9. ரிஷப வெள்ளி | - 16 | வருஷம் |
| ஆக வயது | - 83 | வருஷம் |

*திருவோணம் 3-ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்:*

***200 மந்திர மறைகள் கற்கும் மாதரால் அருளு முண்டாம்***
***சுந்தரப் பலன்கள் சொல்லும் தோளிலே திசையும் தோன்றும்***
***அந்தரப் பொய்கள் சொல்லான் அரும்பொருள் நெருங்கி வாழும்***
***புத்தியிற் பெரியனாகும் புதனினங் கிஷத்தினானே!***

*இதன் பொருள்:*

இவன் வேதங்களை நன்றாகக் கற்றுத் தேர்ந்தவன். பெண்களின் நேசமும், உதவியும் இவனுக்கு உண்டு. அழகாக எதிர்கால ஜோதிடப் பலன்களைச் சொல்வதில் தெளிந்தவன். இவன் தோள்கள் அகன்று அழகாக

இருக்கும். இவன் புத்தியிற் சிறந்த பெரியவனாவான். இவனே புதனின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

*இதற்குக் கால சக்கர தசை*

| | | |
|---|---|---|
| 1. | கன்னி புதன் | - 9 வருடம் |
| 2. | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 3. | கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 4. | மிதுன புதன் | - 9 வருடம் |
| 5. | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 6. | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| 7. | தனுசு வியாழன் | - 10 வருடம் |
| 8. | மகரச் சனி | - 4 வருடம் |
| 9. | கும்பச் சனி | - 4 வருடம் |
| | ஆக வயது | - 85 வருடம் |

***திருவோண நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்***

*201 நீணியன் செய்யன் சால நிபுணனாம் நேசம் செய்வான்*
*மாளிகை மனையில் வாழும் மன்னரால் மகிழ்ச்சி உண்டாகும்*
*வாளிசேர் கண்ணினான் மேல் மனமது சார நில்லான்*
*காளிசேர் வடிவைப் பேணும் கதிரவன் காலி னானே*

(சுவடி எண் *1500*)

(இதன் பொருள்)

திருவோண நட்சத்திரம் 4ம் பாதத்தில். பிறந்தவன். நீண்ட உயரமான நெட்டை வடிவம் உடையவன் நேர்மையானவன். நிபுணனாக வாழ்பவன். எவரிடமும் நேசமுடன் இருப்பவன். இவன் மாளிகைபோல பெரிய வீட்டில் வாழ்பவன். இவனுக்கு அரசர்களால் உதவியும் மகிழ்ச்சியும் உண்டாகும். அம்பு போன்ற அழகிய கண்கள் உள்ள தன் மனைவி மேல் மனம் விரும்பி இருப்பவன். இவன் காளியின் வடிவை கும்பிடும் வழிபாடுடையவன். இவனே சூரியன் அங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான்.

*இதற்குக் கால சக்கர தசை*

| | | |
|---|---|---|
| 1. | மீன வியாழன் | - 10 வருடம் |
| 2. | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| 3. | இடப வெள்ளி | - 16 வருடம் |
| 4. | மிதுன புதன் | - 9 வருடம் |
| 5. | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 6. | கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 7. | கன்னி புதன் | - 9 வருடம் |
| 8. | துலா வெள்ளி | - 16 வருடம் |
| 9. | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| | ஆக வயது | - 100 வருடம் |

## வடமொழி கர்ம விபாகம் சொல்லும் திருவோண நட்சத்திர - பூர்வ கர்ம சாந்தி பரிகாரம்.

### திருவோணம் 1ம் பாதம்

யவன தேசத்தில் மாநத நகரம் என்ற ஊரில் கௌதமன் என்ற வேதம் மறவாத அந்தணன் ஒருவன் இருந்தான். இவன் மனைவியின் பெயர் மாலினி என்பதாம். இந்த பிராமணன், கீழ் மக்களின் சேவை புரிந்து நிறைய சொத்து சேர்த்தான். நல்ல ஒழுக்கமுள்ள தவம் பண்ணும் உத்தமி பிராமணன் மற்றொருவன் இவனிடம் வந்தான். ஒரு வருஷம் கழித்து இந்த இரண்டாமவன் தன்னிடம் இருந்த தங்கம், வெள்ளி மற்றும் 'இதர பொருட்களை இவனிடம் கொடுத்து விட்டு காசி யாத்திரை சென்றான். ஆனால் அவன் காசியில் இறந்துவிட்டான். கௌதமன் தன் தனத்தை எல்லாம் பூமியில் புதைத்து வைத்துவிட்டு இரண்டாமவன் கொடுத்து சென்ற பொருளையே செலவு செய்து பிழைத்து வந்தான். கடைசியில் இறந்தான். இவன் செய்த சிறு புண்ணியத்தால் இவன் கந்தர்வலோகத்தில் கந்தர்வப் பெண்ணுடன் 2000 ஆண்டுகள் போகம் அனுபவித்தான். புண்ணியம் தீர்த்த பின் அன்ன மாகவும். மானாகவும் பிறந்து கடைசியில் மனிதப் பிறவியை அடைந்தான்.

இவன் பணக்காரனாக இருந்தான். போன ஜன்மத்தில் இவன் பிராமணன் கொடுத்த பொருளைத் திருப்பாத பாவத்தால் இப்பிறவியில் இவனுக்கு சந்ததி இல்லாமல் போயிற்று பிறந்த குழந்தைகள் இறந்து போயின இவனைப் பல நோய்கள் பற்றிக் கொண்டன.

***இதற்கு சாந்திமுறை வருமாறு:***

இவன் "காயத்ரி" மந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜபம் செய்ய வேண்டும் அதன் பின் அதற்குரிய "புரச்சரண" முறையையும் முடிக்க வேண்டும் ஒரு கன்றுடன் கூடிய பசுவை தம்பதியான உத்தம பிராமணனுக்குத் தானம்பண்ண வேண்டும். அவனுக்கு விருந்தளித்து, "மிருத்யஞ்சய ஜபமும் பண்ண வேண்டும். பாகவத பாராயணம், சண்டி சப்தசதி பாராயணமும், செய்ய

வேண்டும். தானமும் செய்ய வேண்டும். இதனால் இவன் பாவங்கள் விலகி நோய் நீங்கி நல்ல ஆண் குழந்தைகள் பிறக்கும். இதன் பின் அவன் குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழ்வான்.

## திருவோணம் 2ம் பாதம்

சிவபெருமான் சொல்லுகிறார்!

காந்தார தேசத்தில் குணபூரம் என்ற ஊரில் தன் குல ஒழுக்கம் தவறிய பிராமணன் ஒருவன் இருந்தான். இவன் பணக்காரன். ஆனால் முறையற்ற செயல்களையே செய்து வந்தான். எப்பொழுதும் கீழ்மக்களிடையே வாசம் பண்ணி வந்தான். ஒட்டகம் முதலிய பிராணிகளை விற்றுப் பிழைத்து வந்தான் இவன் கீழ்மக்களுக்கும் சேவையும், கீழ் இனப் பெண்களுடன் பழகியும் சுகமும் அனுபவித்து வந்தான். வயதான உடன் இறந்தான். அவனை எமதூதர்கள் கொடூரமான நரகத்தில் தள்ளினார்கள். அங்கே 6000 வருடங்கள் வேதனை அனுபவித்தான். அதன்பின் ஆடாகவும், கழுதையாகவும், கரடியாகவும் பிறந்து கஷ்டப்பட்டான்.

அதன்பின் மத்திய தேசத்தில் மனிதப் பிறவி பெற்றான். போன ஜென்மத்தில் தன் மகனுடன் கீழ் மக்களுடன் உணவு அருந்திய பாவத்தால் இவனுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. இவனும் நோயாளி ஆனான். இதற்கு சாந்தி வருமாறு.

ஒரு லக்ஷம் முறை ''காயத்ரி'' மந்திரம் ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் முறைப்படி அதற்குப் புரஸ்சரணம் பண்ண வேண்டும். அதன்பின் காளைகளுடன் கூடிய 5 பசுக்களைத் தானம் பண்ண வேண்டும். அதன்பின் 1000 குடங்கள் தானம் செய்தபின் மீண்டும் கோதானம் செய்ய வேண்டும். இப்படிப் பட்ட பரிஹாரத்தால் இவன் பாவங்கள் தீர்கின்றன. இவன் உடல்நலம் பெற்று இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் பெண குழந்தைகள் பிறக்கும். அதன்பின் இவன் சந்தோஷமாக வாழ்ந்தான்.

## 3. திருவோண நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிகாரமும்

காஷ்மீர தேசத்தில் கண்ட சர்மா என்ற பிராமணன் வசித்து வந்தான் இவன் மனைவி கங்கா மிகவும் கொடுமைக்காரி. எப்பொழுதும் கணவன் பேச்சைக் கேட்பதே இல்லை. நெய், காய்கறிகள், வெல்லம் முதலியவற்றை விற்று ஆதாயம் பெற்று வந்தாள். கண்ட சர்மா ஆகிய பிராமணன் குதிரை, எருது, தோல், உலோகங்கள் முதலியவற்றை விற்றுப் பிழைத்து வந்தான். இவன் கிழவனான பின் இறந்தான்.

இவனைப் பிடித்து எமதூதர்கள் "கர்தமம்" என்ற நரகத்தில் 60 வருஷங்கள் தள்ளினர். அங்கு அளவற்ற துன்பம் அனுபவித்தபின், செம்மறி ஆடு, கழுதை, மற்றும் தவளை யாகவும் தொடர்ந்து பிறந்தான். பின்பு மத்ய தேசத்தில் ஒரு பணக்காரக் குடும்பத்தில் மனிதப் பிறவி பெற்றான். போன ஜென்ம மனைவியே இவனுக்கு மனைவியானாள். இவன் சந்ததி அற்றவனாக இருந்தான். இவனை நிறைய நோய்களும் பற்றிக் கொண்டன. போன ஜென்மத்தில் தன் குலத் தொழிலை விட்டதால் இவன் அளவற்ற கஷ்டத்திற்காளானான். இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு.

முதலில் இவன் தன் சொத்தில் 6ல் ஒரு பாகத்தை உத்தம பிராமணர்களுக்குத் தானம் பண்ண வேண்டும். இவன் அதன் பின் 1000 முறை காயத்திரி மந்திரத்தையும்; சிவபெருமானின் பஞ்சாக்ஷர மந்திரத்தையும் ஒரு லட்சம் முறை ஜபம் செய்ய வேண்டும். அதன்பின் இந்த மந்திரங்களுக்கு முறைப்படி புரஸ்சரண முறையை செய்து முடிக்க வேண்டும். அதன்பின் பிராமணர்களுக்கு போஜனம் பண்ணி வைத்து தகுந்த தக்ஷிணையும் கொடுக்கவேண்டும். அதன்பின் பிரயாகை புண்ணிய தீர்த்தத்தில் மனைவியுடன் நீராட வேண்டும். அதன் பின் இளநீர் குடுவை, சுரைக்குடுவை இவற்றில் பஞ்ச ரத்தினங்களை நிரப்பித் தானம் பண்ண வேண்டும். இதனால் இவன் பாவங்கள் விலகுகின்றன. இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண்குழந்தைகள் பிறக்கும். அதன் பின் இவன் குடும்பத்துடன் சந்தோஷத்துடன் வாழ்வார்கள்.

## திருவோண நட்சத்திரத்தில் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி முறையும்.

சிவபெருமான் சொல்கிறார்!

அடக தேசத்தின் மேற்கு திசையில் யாதவபுரம் என்றொரு ஊரில் சித்தலால் என்ற பிராமணன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவியின் பெயர் தேவி என்பதாகும். இவள் ஒழுக்கமுள்ளவளாகவும் இனிமையாகப் பேசுபவளாகவும், பதிவிரதையாகவும் இருந்தாள். ஆனால் கணவனாகிய சித்தலால் என்பவனோ திருடும்களவும் செய்தே சம்பாதித்து குடும்பத்தைப் போஷித்து வந்தான். கடைசியில் இவன் இறந்தான். இவன் மனைவி இவனுடன் உடன்கட்டை ஏறி உயிர்த்தியாகம் செய்தாள். இவளுடைய புண்யத்தால் பிராமணன் சத்திய லோகத்தில் வெகுகாலம் சுவர்க்க சுகம் அனுபவித்தான். அதன் பின் அதே புண்ணியத்தால் இவன் ஒரு பணக்கார குடும்பத்தில் பிறந்தான். ஆனால் தன் குலத் தொழிலை விட்டு ஈனத்தொழில் செய்ததால் இந்த பாவம் காரணமாக இவனுக்குச் சந்ததி இல்லாமல் போயிற்று. இதற்கு சாந்தி பரிகாரம் பின் வருமாறு

தன் சொத்தின் 8ல் ஒரு பகுதியைப் புண்ணிய காரியங்களில் செலவு செய்ய வேண்டும். அதன் பின் பத்து வண்ணம் கொண்ட பசு ஒன்றை கன்றுடன் தானம் செய்யவேண்டும். அதன் பின் உத்தமர் ஒருவருக்கு படுக்கை தானம் பண்ண வேண்டும். அதன் பின் "காயத்ரி" மந்திரத்தையும் விஷ்ணு மந்திரத்தையும் ஒரு லட்சம் முறை ஒவ்வொன்றையும் ஜபம் செய்ய வேண்டும். அதன்பின் "புரஸ்சரணம்" என்ற சடங்கை முறைப்படி செய்யவேண்டும். குடமும் தானம் பண்ண வேண்டும்.

இப்படிச் செய்வதால் இவன் பாபங்கள் தொலைந்து இவனுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண். பெண் குழந்தைகள் பிறப்பார்கள். இவர்கள் இதன் பின் மகிழ்ச்சியுடன் வாழ்க்கை நடத்துவார்கள்.

***இனி இந்த திருவோண நட்சத்திரத்திற்குரிய விம்சோத்தரி தசைகள்:***

1. சந்திர தசை - 10 வருஷம்

2. செவ்வாய் தசை - 7 வருஷம்

3. ராகு தசை - 18 வருஷம்

4. குரு தசை - 16 வருஷம்

5. சனி தசை - 19 வருஷம்

6. புதன் தசை - 17 வருஷம்

7. கேது தசை - 7 வருஷம்

8. சுக்கிர தசை - 20 வருஷம்

9. சூரிய தசை - 6 வருஷம்

ஆக மொத்தம் 120 வருஷங்கள்

*இனி இவனுக்கு ஏற்படும் நோய் கண்டம் முதலியன*

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் கண்டம். 7 வயதில் வெதுப்பால் கண்டம். 13 வயதில் உதரரோகம் 16 வயதில் துர்காண்டம் 23 வயதில் 4 கால் மிருகம் தாக்குவதால்: 25 வயதில் மீண்டும் வெதுப்பு அப்புறம் வயிற்றுக் கடுப்பால் கண்டம் 30 வயதில் மருந்தீட்டால் 35 வயதில் சத்துருவால் 37 வயதில் அரசால் 40 வயதில் கள்ளரால் 55 வயதில் வியாதியால் வயிற்றுக் கடுப்பால். 65 வயதில் காது நோயால் 90 வயது சென்று மாசி மாதம் அமரபக்ஷம் பிரதமையும், செவ்வாய்கிழமையும் திருவோண நக்ஷத்திரமும் கூடிய நாளில் 29 நாழிகையில் சோறு அடைத்து விக்கி இறைவனடி சேர்வான்

இவன் பிறந்த லக்னசாரம் சூரியனாகில் - சீமான்

இவன் பிறந்த லக்ன சாரம் சந்திரனாகில் - மந்திரியாம்

இவன் பிறந்த லக்னம் சாரம் செவ்வாயாகில் - சேவகன்

| | | |
|---|---|---|
| இவன் பிறந்த லக்ன சாரம் புதனாகில் | - | குருக்கள், பண்டிதன் |
| இவன் பிறந்த லக்ன சாரம் குருவாகில் | - | மந்திரியாம் |
| இவன் பிரந்த லக்ன சாரம் வெள்ளியாகில் | - | வெள்ளாண்மை |
| இவன் பிறந்த லக்ன சாரம் சனியாகில் | - | கள்ளனாம் |
| இவன் பிறந்த லக்ன சாரம் ராகு வாகில் | - | கோளான் |
| இவன் பிறந்த லக்ன சாரம் கேதுவாகில் | - | தரித்திரன் |

## *பிறர் மதப்படி திருவோணம் நக்ஷத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்*

### *பொதுப் பலன் - ஆண்கள்*

### *உடல் அமைப்பு*

அழகாகவும், கவர்ச்சிகரமானதாகவும் உடல் அமைப்பு இருக்கும். பொதுவாக குட்டையாக இருப்பார்கள். முகத்தில் மச்சம் அல்லது குறி இருந்து முகத்தின் அழகை கெடுக்கும். சிலரிடம் தோள் பட்டைக்குக் கீழே கறுப்பு மச்சம் இருப்பதைக் காணலாம்,

### *குணங்கள் - பொது நிகழ்ச்சிகள்*

இனிக்க இனிக்கப் பேசுவார்கள். இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். எந்த வேலையச் செய்தாலும் அதில் ஒரு ஒழுங்கு முறையைக் காணலாம். வாழ்க்கையில் ஒரு சில கொள்கைகளைக் கடை பிடிப்பான். தான் இருக்கும் சுற்றுப்புறம் சுத்தமாக இருப்பதை விரும்புவார்கள் சுத்தத்தைக் கடைபிடிக்காத நபர்களைக் கண்டால் இவர்களுக்குப் பிடிக்காது. ஒருவன் சுத்தமில்லாமல் இருப்பதைக் கண்டால், இவனால் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்க முடியாது. ஏதாவது கூறிவிடுவான். பிறர் பரிதாப நிலையில் இருந்தால் இவன் மனம் பொறுக்காது. தன்னால் இயன்ற

உதவியைச் செய்து அவர்கள் கஷ்டத்தை நீக்க ஆவன செய்வான். இவன் சுத்தமான சுவைமிக்க உணவை விரும்புவான். இவன் ஒரு சிறந்த விருந்தை பிறருக்குத் தருவான். விருந்தோம்பலில் சிறந்தவன்.

எந்த வேலையையும் கடவுளுக்குப் பயந்து செய்வான். ''குரு பக்தியில்'' சிறந்தவன். "சத்யமேவ ஜயதே" என்ற கொள்கையில் நம்பிக்கை உடையவன். இவனிடம் உதவி பெற்றவர்களிடமிருந்து பதிலுக்கு எதையும் எதிர்பார்க்க மாட்டான். இந்தக் கொள்கையால் இவனை ஏமாற்றுபவர்களும் உண்டு. இவன் ஒரு திருடனை கையும் களவுமாகப் பிடித்தாலும், அவன் ஏன், எந்த சூழ்நிலையில் திருடினான் என்று ஆராய்ந்து அவன் கூறுவதில் உண்மை இருந்தால் தண்டிக்காமல் விட்டுவிடுவான். அப்படிப்பட்ட ஒரு விசித்திரமான கொள்கையை உடையவன்.

இவனுடைய அமைதியான தோற்றம், விஷயங்களைக் கையாளும் திறமை இரண்டும் பொது ஜனங்கள் மனதை ஊடுருவிச் சென்று இவன் மீது மரியாதை செலுத்தத் தூண்டும். ஆதலால் இந்த நாகரீக உலகில் அரசியல் வாதியாக இருப்பதற்கு மிகவும் பொருத்தமானவன். இவனுடைய ஒரு புன் சிரிப்பே பிறரை கவர்வதற்குப் போதுமானது. இவனால் ஒருமுறை கவரப் பட்டவர்கள் இவனை மறப்பது என்பது முடியாததாகும். இவனுடைய வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகள் அனேகம் உண்டு. ஆனால் இவன் நிலையாக வாழ்வில் உச்சத்தில் இருப்பதோ அல்லது இறக்கத்தில் இருப்பதோ கிடையாது. எப்போதும் ஒரேமாதிரி சராசரி வாழ்க்கையை நடத்திக்கொண்டு அதில் சந்தோஷத்தை அடைவான்.

இந்த நக்ஷத்திரத்தில் பிறந்ததற்குறிகள் கூட நல்ல மனப்பக்குவத்தைப் பெற்றவர்களாக இருப்பார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தனது அறிவை வளர்த்துக்கொள்வார்கள்.

இவன் மிகச் சிறந்த ஆலோசகன். தனிப்பட்ட அல்லது பொதுப்படையான பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள பலர் இவனிடம் ஆலோசனைக்கு வருவார் கள். இவன் ஒரு புகழ்மிக்க "ஜீனியஸ்", ஒரே சமயத்தில் பலவித வேறுபட்ட

வேலைகளைச் செய்ய இவனால் முடியும். அதிகாரமும் அதாரிட்டியும் உள்ள வேலையில் இவன் அமர்ந்தால் அதில் இவன் மிகவும் பிரகாசிப்பான். அதிகாரம் மிகுந்த வேலைகளையே இவன் தேடிச் செல்வான்.

இவன் பல பொறுப்புகளைத் தாங்க வேண்டி இருப்பதால் எப்போதும் பணமுடை உள்ளவன். இவன் தன்னுடைய மோசமான எதிரியைக்கூட பழிவாங்க எண்ணாதவன். மாறாக, கடவுள் அவர்களுக்குத் தண்டனை தருவார் என்று இருந்துவிடுவான்.

*கல்வியும்-தொழிலும்*

30 வயது வரை வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். 30லிருந்து 45 வயது வரையிலான காலத்தில் வாழக்கையில், தொழிலில் எல்லாவற்றிலும் ஸ்திரத்தன்மை ஏற்படும். நல்ல கிரகங்களின் அமைப்பினால் ஜாதகன் 65 வயதுக்கு மேல் உயிர் வாழ்ந்தால், அதன் பிறகு பொருளாதாரத்திலும், சமூக வாழ்விலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.

மெக்கானிக்கல் அல்லது பிற டெக்னிக்கல் என்ஜினீரிங் வேலைக்கு லாயக்கானவன். பெட்ரோலியம் அல்லது எண்ணை சம்பந்தப்பட்ட துறையில் சம்பந்தப்பட்டு இருக்கலாம்.

*குடும்ப - வாழ்க்கை*

குடும்ப வாழ்க்கையில் அசாதாரணமான சந்தோஷத்தைப் பெறுவான் ஒரு மனைவிக்கு வேண்டிய எல்லா நல்ல குணங்களும் பெற்ற, அடக்கமுள்ள கீழ்ப்படியும் சுபாவமுள்ள மனைவி வாய்ப்பாள். இருந்தாலும் உடல் பசியை தீர்த்துக் கொள்ள எப்பொழுதாவது பிற பெண்களை நாடுவான்

*ஆரோக்கியம்*

காது, தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்படும். எக்ஸிமா. ருமாடிஸம் அஜீர்ணம், டீ.பி. போன்ற நோய்களும் வரலாம்.

*பொதுப் பலன் - பெண்கள்*

*உடல் அமைப்பு*

இந்தப் பெண்கள் ஒல்லியாவும் உயரமாகவும் இருப்பார்கள். உடலுடன் ஒப்பிடுகையில் தலை சற்று பெரிதாக இருக்கும். அகலமான முகமும், பெரிய பற்களும் உடையவர்கள். முன் பற்களுக்கு இடையில் இடைவெளி இருக்கும். மூக்கு பிரதானமாய்த் தெரியும்.

*குணங்கள்*

தரும காரியங்களில் நம்பிக்கை உடையவள். மதாச்சாரங்களை தீவிரமாகப் பின் பற்றுவாள். அடிக்கடி கோயில், குளம், புண்ணிய தீர்த்தங்கள், ஸ்தலங்கள் என்று போய் வருவாள். ஆனால் உள்ளூர தந்திரம் மிக்கவள். ஏழைகளிடமும், பலவீனமானவர்களிடமும் இரக்கம் உள்ளவள். தேவைப்பட்டவர்களுக்கு உதவும் பெருந்தன்மை உள்ளவள். பகட்டையும் ஆடம்பரத்தையும் விரும்புபவள். சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்ளும் திறமை பெற்றவள். ஆனால் தன் கணவனிடம் மட்டும் இந்த குணத்தைக் காட்ட மாட்டாள். நாவடக்கம் இல்லாதவள். எல்லோரிடமும் வம்பு பேசுவதில் சளைக்க மாட்டாள்.

*கல்வி - தொழில்*

இவள் சிறந்த நாட்டியக்காரி. பலதரப்பட்ட கலைகளிலும் ஈடுபாடு உடையவள். கல்வி அறிவில்லாத பெண்கள் விவசாய வேலைகளில் ஈடுபடுவார்கள். குளம் கிணறு வெட்டுதல் போன்ற கூலி வேலை செய்வார்கள். மற்ற கல்வி அறிவுள்ள பெண்கள் சுமாரான கல்வி பெற்று கிளார்க், டைப்பிஸ்ட், ரிஸப்ஷனிஸ்ட் ஆக வேலை செய்வர்.

*குடும்ப வாழ்க்கை*

குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பாள். இவள் எல்லாவற்றிலும் - அதாவது

செய்யும் வேலைகளில், குறை இல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைப்பதால் கணவனுடன் இது சம்பந்தமாக அடிக்கடி தகராறுகள் ஏற்படும். எல்லோரிடமும் "பெர்பக்ஷன்" இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாததால் குடும்பத்தில் அமைதி நிலவ, இவள் இந்த குணத்தை அதிகமாக செயல்படுத்தாமல் இருக்க வேண்டும். எல்லோருடனும் எந்த சூழ்நிலையிலும் ஒத்துப்போகும் குணமுடையவள்; ஆதலால் இந்தப் பிரச்சினை குடும்பத்தில் ஏற்படாமல் வெளியாருடன் தான் ஏற்படும். இவள் தன் கணவனை எப்போதும் ஜென்டில் மேனாகத்தான் பார்ப்பாள்.

### *ஆரோக்கியம்*

தோல்வியாதிகள் இவளை பீடிக்கக் கூடும். எக்ஸிமா, பைலேரியா, சீழ்கட்டிகள் அல்லது புண்கள் TB, குறைந்த வீரியமுள்ள லெப்ரஸி போன்றவை இவளை எளிதில் பீடிக்க வாய்ப்புண்டு. காதுகளிலும் தொந்தரவு ஏற்படும். இந்த நட்சத்திரத்தில் "பூப்படையும் பெண்களுக்கு நல்ல குழந்தைகள் பிறக்கும் என்று பரவலான நம்பிக்கை உண்டு.

## *திருவோண நட்சத்திரத்தில் உள்ள கிரகங்களை இதர கிரகங்கள் பார்த்த பலன்*

## சூரியன்

### *திருவோணத்தில் உள்ள சூரியனை சந்திரன் பார்த்த பலன்*

பிறருடன் ஏற்படும் தகராறினால் செல்வத்தை சம்பாதிப்பான் சிலர் லாயராகவும் இருந்து பணம் சம்பாதிப்பர். சிலசமயம் அந்த தகராறினால் பணத்தை இழக்கவும் நேரும். நோயாளியாக இருப்பான். கற்பனை உலகில் வாழ்வான்.

### *திருவோணத்தில் உள்ள சூரியனை புதன் பார்த்த பலன்*

இவனது பழக்கவழக்கங்கள் ஒரு "அலி"யைப் போல் இருக்கும். மற்றவர் களுடன் பழகும் போதே "அலி"யைப் போலவே பழகுவான். பிறருக்குத்

துன்பம் விளைவிப்பதில் இன்பம் காண்பான். நல்ல மனிதர்கள் இவனை வெறுத்து ஒதுக்குவார்கள்.

*திருவோணத்தில் உள்ள சூரியனை குரு பார்த்த பலன்*

மனிதவர்க்கத்துக்குப் பல நன்மைகளைச் செய்வான். அறிவாளியாக இருப்பான். நல்ல மனது கொண்டவன். உதவி என்பது எல்லா இடங்களில் இருந்தும் இவனுக்குக் கிடைக்கும்.

*திருவோணத்தில் உள்ள சூரியனை சுக்கிரன் பார்த்த பலன்*

செல்வமும் சௌகரியங்களும் உடையவன். பெண்களிடமிருந்து செல்வம் கிடைக்கும்.

*திருவோணத்தில் உள்ள சூரியனை சனி பார்த்த பலன்*

அகங்காரமும், அடாவடியும் உள்ளவன், எதிரிகளை வெற்றிகொள்வான். ஆள்பவருக்கு நெருக்கமானவர். அவர்களிடமிருந்து பல நன்மைகளைப் பெறுவான்.

**சந்திரன்**

*திருவோணத்தில் உள்ள சந்திரனை சூரியன் பார்த்த பலன்*

அரசனுக்குச் சமமான செல்வம், அதிகாரம். எல்லாம் பெறுவான்.

*திருவோணத்தில் உள்ன சந்திரனை செவ்வாய் பார்த்த பலன்*

நன்கு படித்த அறிஞன்

*திருவோணத்தில் உள்ள சந்திரனை புதன் பார்த்த பலன்*

இவன் ஒரு லக்ஷாதிபதி

**திருவோணத்தில் உள்ள சந்திரனை குரு பார்த்த பலன்**

இவன் ஒரு மந்திரியாக ஆவான்.

**திருவோணத்தில் உள்ள சந்திரனை சுக்கிரன் பார்த்த பலன்**

பிச்சைக்காரனாக இருப்பான்.

**திகுவோணத்தில் உள்ள சந்திரனை சனி பார்த்த பலன**

இவன் ஒரு பிறவி மிராசுதார்

**செவ்வாய்**

**திருவோணத்தில் உள்ள செவ்வாயை சூரியன பார்த்த பலன**

கறுப்பு நிறத்தை உடையவன். தோற்றத்தில் முரடனாகத் தெரிவான். மனைவி மக்களுடன் சந்தோஷமான வாழ்க்கையை நடத்துவான்.

**திருவோணத்தில் உள்ள செவ்வாயை சந்திரன் பார்த்த பலன்**

தாயின் அன்பையும் சுகத்தையும் அறியாதவன். சுமாரான பணக்காரன் யாருடனும் நீண்ட கால நட்புவைத்துக் கொள்ளமாட்டான்.

**திருவோணத்தில் உள்ள செவ்வாயை புதன் பார்த்த பலன்**

மென்மையான கனிவான பேச்சை உடையவன், பிரயாணங்கள் மூலம் வருமானம் வரும் ஒல்லியான தேகம் கொண்டவன். ஆனால் உடல் பலம் உள்ளவன், பொய்கள் அதிகம் பேசுவான்.

**திருவோணத்தில் உள்ள செவ்வாயை குரு பார்த்த பலன்**

நீண்ட ஆயுளும் நற்குணங்களும் கொண்டவன். தன் உறவினர்களை ஆதரிப்பான். ஆட்சியாளருக்கு நெருங்கியவன்.

### திருவோணத்தில் உள்ள செவ்வாயை சுக்கிரன் பார்த்த பலன்

செக்ஸ் இன்பம் பெற ஏராளமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். அதிர்ஷ்டம் உள்ளவன். எதிலும் விவாதம் செய்யும் மனப்போக்கு உள்ளவன்.

### திருவோணத்தில் உள்ள செவ்வாயை சனி பார்த்த பலன்

அரசாங்கத்திடமிருந்து பல நன்மைகளை அடைவான். பெண்களைக் கண்டு வெறுப்பான். அறிவாளி. நல்ல புகழை அடைவான்.

## புதன்

### திருவோணத்தில் உள்ள புதனை சூரியன் பார்த்த பலன்

ஜாதகன் குத்துச் சண்டையில் கெட்டிக்காரன். தந்திரமும், உடலில் பலமும் இருப்பதால், தான் விரும்புவதை சாதிக்க நினைக்கும் குணம் உண்டு.

### திருவோணத்தில் உள்ள புதனை சந்திரன் பார்த்த பலன்

தண்ணீரில் உற்பத்தியாகும் பொருள்களால் வருமானம் வரும் கணிசமான செல்வம் உள்ளவன். பிறரைக் கண்டு பயப்படுவான்.

### திருவோணத்தில் உள்ள புதனை செவ்வாய் பார்த்த பலன்

செல்வந்தனாயிருப்பதால் சிறிய, கடைநிலை ஊழியங்களைச் செய்ய மாட்டான். கொடூரமனம் கொண்டவன்.

### திருவோணத்தில் உள்ள புதனை குரு பார்த்த பலன்

ஒரு கிராமம் அல்லது டவுன் அல்லது கவர்மெண்ட் டிபார்ட்மெண்ட் அல்லது தொழிற்சாலையில் தலைமைப் பதவியை வகிப்பான்.

### திருவோணத்தில் உள்ள புதனை சுக்கிரன் பார்த்த பலன்

இவனுடைய குழந்தைகள் விகார தோற்றத்துடன் இருப்பார்கள். படித்தவர்களால் விரும்பப் படாதவன். தீயவர்களின் பாதை வழியை பின்பற்றுவான்,

### திருவோணத்தில் உள்ள புதனை சனி பார்த்த பலன்

கொடூரமான செய்கைகளை செய்வான். ஏழையாகவும், வாழ்க்கையில் சந்தோஷம் இல்லாதவனாகவும் இருப்பான்.

## குரு

### திருவோணத்தில் உள்ள குருவை சூரியன் பார்த்த பலன்

அழகிய, பிறரைக் கவரும் படியான பர்ஸனாலிடி உடையவன். ஒளிவிடும் முக வசீகரம் உள்ளவன். சிறந்த சொற்பொழிவாளன். பிறருக்கு உதவும் பண்பாளன்

### திருவோணத்தில் உள்ள குருவை சந்திரன் பார்த்த பலன்

தன் குடும்பத்தின் வமிசத்தில் சிறந்தவன்; சமூகம் அல்லது சாதியினரின் தலைவனாகவோ அல்லது மந்திரியாகவோ இருப்பான்.

### திருவோணத்தில் உள்ள குருவை செவ்வாய் பார்த்த பலன்

ஆட்சியாளரின் நம்பிக்கையைப் பெறுவான். அவர்களுடைய பழக்கத்தின் மூலம் செல்வத்தை அடைவான்.

### திருவோணத்தில் உள்ள குருவை புதன் பார்த்த பலன்

அமைதியை விரும்புவான். பல பெண்கள் இவனிடம் அன்பாக இருப்பார்கள். மதாச்சாரங்களில் ஈடுபாடு உடையவன்.

### திருவோணத்தில் உள்ள குருவை சுக்கிரன் பார்த்த பலன்

நற்செய்கைகளும் குணங்களும் கூடியவன். அதிக அளவு படித்தவன். அரசாங்கம் அல்லது மந்திரிக்கு மிகமிக வேண்டியவனாக இருப்பான்.

### திருவோணத்தில் உள்ள குருவை சனி பார்த்த பலன்

இவன் வாழ்க்கையில் விரும்பியவைகள் எல்லாம் கிடைக்கும். நினைத்த ஆசைகள் பூர்த்தியாகும்.

## சுக்கிரன்

### திருவோணத்தில் உள்ள சுக்கிரனை சூரியன் பார்த்த பலன்

தன் குணங்களை இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து கடைபிடிப்பாள். தைரியசாலி, செல்வந்தன்.

### திருவோணத்தில் உள்ள சுக்கிரனை சந்திரன் பார்த்த பலன்

கவர்ச்சியான பர்ஸனாலிடி உடையவன். தன் வேலைகளில் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டே இருப்பான். எப்போதும் சிரித்த முகமாக காணப் படுவான்.

### திருவோணத்தில் உள்ள சுக்கிரனை செவ்வாய் பார்த்த பலன்

கடினமாக உழைப்பான் அதனால் களைப்படைந்தவனாக இருப்பான். பொருளாதாரம், மனம் இரண்டும் பாதிக்கப்படுவதால் கஷ்டங்களை அடைவான்.

### திருவோணத்தில் உள்ள சுக்கிரனை புதன் பார்த்த பலன்

மதசம்பந்தமான சாஸ்திரங்களில் விற்பன்னன். அவைகள் மூலம் வருமானத்தை அடைவான். பெயரும் புகழும் கூட இவனை வந்தடையும்.

### திருவோணத்தில் உள்ள சுக்கிரனை குரு பரர்த்த பலன்

சங்கீதத்திலும், கலைகளிலும் ஆர்வம் உடையவன். பணக்காரனாயிருப்பான்.

### திருவோணத்தில் உள்ள சுக்கிரனை சனி பார்த்த பலன்

அழகிய உருவ அமைப்பு உடையவன். அதிர்ஷ்டமான வாழ்க்கை அமையும். "செக்ஸில்" புகுந்து விளையாடுவான்.

**சனி**

### திருவோணத்தில் உள்ள சனியை சூரியன் பார்த்த பலன்

கோரமான உருவமுள்ள மனைவியைப் பெற்றவன். பரம ஏழை. பிறரால் அளிக்கப்படும் உணவை உண்டு காலத்தைக் கழிப்பான்.

### திருவோணத்தில் உள்ள சனியை சந்திரன் பார்த்த பலன்

தாயின் கவனிப்பும், சுகமும் அறியாதவன். உயர்ந்த நன்னெறி உடையவன். இரண்டு பெயர்களை உடையவன். தனம், மனைவி, மக்களைப் பெற்று சந்தோஷமாக இருப்பான்.

### திருவோணத்தில் உள்ள சனியை செவ்வாய் பார்த்த பலன்

"பராலிஸிஸ்" ஸினால் கஷ்டப்படுவான். பிறருக்கு பிடிக்காத காரியங்களைச் செய்வான், அநேகமாக வெளியூர்களில் வசிப்பவனாக இருப்பான்.

### திருவோணத்தில் உள்ள சனியை புதன் பார்த்த பலன்

புண்ணியவான். பணக்காரன். அரசாங்கத்திடமிருந்து அதிகபட்ச நன்மைகளைப் பெறுவான் அல்லது சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளவர்களிடமிருந்து பல நன்மைகளைப் பெறுவான்.

### திருவோணத்தில் உள்ள சனியை குரு பார்த்த பலன்

ஒரு மந்திரியாக அல்லது அதற்கு இணையான அந்தஸ்தைப் பெற்றிருப்பான். அல்லது பாதுகாப்பு டிபார்ட்மெண்டில் தலைமைப் பதவியை அடைவான். பலம்மிக்க உடலும், மென்மையான மனமும் கொண்டவன்.

## 7. திருவோண நக்ஷத்திரத்தின் பாதங்களில் கிரகங்கள் நின்ற பலன்

### திருவோணம் 1ம் பாதத்தில் சூரியன் நின்ற பலன்

சூரியனும் சந்திரனும் இங்கு இருந்து சனியால் பார்க்கப் பட்டால், ஜாதகனின் பெற்றோர் இருவருக்குமே உயிர் கண்டத்தை ஏற்படுத்துவான்,

இந்த இடம் லக்னமாக அமைந்து சூரியன், சனி, செவ்வாய் மூவரும் இதே இடத்தில் புதன் அல்லது குரு அல்லது சுக்கிரன் மூவரில் எவர் ஒருவரின் சேர்க்கையும் இல்லாமல் இருந்தால், ஜாதகன் பிறந்த உடனேயே ஜாதகனின் தந்தையும் தந்தை வழிபாட்டனாரும் மரிப்பார்கள்.

### திருவோணம் 1ம் பாதத்தில் சந்திரன் நின்ற பலன்

இந்த இடத்தில் சந்திரனுடன் லக்னமும் அமைந்து சனியும் செவ்வாயும் ஆயில்ய நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் குடிப்பழக்கத்துக்கு அடிமையாகி அதனால் வயிற்றில் புண் ஏற்பட்டு ஆபரேஷனுக்கு ஆட்படுவான் கலியாணம் நடப்பது கூட அரிதாகும்.

### திருவோணம் 1ம் பாதத்தில் செவ்வாய் நின்ற பலன்

செவ்வாய் இங்கு இருக்கையில், சனி புனர்பூசம் நட்சத்திரம் முதல் பாதத்தில் இருந்தால் ஜாதகன் ஒரு திருடன். இன்னொரு திருடனுக்கும் இவனுக்கும் சண்டை ஏற்படும். அவனால் இவனுக்கு உடலில் காயங்கள் ஏற்படும்.

### திருவோணம் 1ம் பாதத்தில் புதன் நின்ற பலன்

இங்கு புதன் இருக்கும் போது, லக்னம் மூல நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் தன் பூர்வீக சொத்துக்களை அழித்து விடுவான்.

இந்த புதனை சந்திரன் பார்த்திருந்தால் நஷ்டத்தின் அளவு அதிகமாக இருக்கும்

***திருவோணம் 1ம் பாதத்தில் குரு நின்ற பலன்***

இந்த குருவுடன் சூரியன், சந்திரன், செவ்வாய் மூவரும் சேர்ந்தால் ஜாதகனின் 5வது வயதில் மரணத்தை ஏற்படுத்துவார்கள்.

***திருவோணம் 1ம் பாதத்தில் சுக்கிரன் நின்ற பலன்.***

ஜாதகன் பார்வைக்குத் தன் வயதை விட இளமையாகத்தோற்ற மளிப்பான். சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்ள இவனால் முடியும். பெரிய லட்சியங்களை உடையவன். அதனால் இவன் உயர்ந்த ஸ்தானத்தை அடைய முடியும்.

***திருவோணம் 1 பாதத்தில் சனி நின்ற பலன்***

ஒல்லியான தேகத்தை உடையவன். கெட்டிக்காரன். ஆனால் சுய நலவாதி தன் மனைவியின் உறவினர்களிடமிருந்து உயில் மூலம் சொத்துக்களை அடையும் வாய்ப்பு உண்டு. இருந்தாலும் மனம் திருப்தி அடையாமல் மேலும் மேலும் சொத்துக்களை சேர்க்க அதீக ஆசை ஏற்படும்.

***திருவோணம் 1ம் பாதத்தில் ராகு நின்ற பலன்***

லக்னம் ஆயில்யத்தில் அமைந்து, இங்குள்ள ராகுவை பாபிகள் பார்த்தால் இந்த ஜாதகன் பிறந்த 10 வருடங்களுக்குள் மரணமடைவான் வேறு சில கிரந்தங்களின் படி மரணம் 16 வயதிற்குள் உண்டாகும்.

***திருவோணம் 1ம் பாதத்தில் கேது நின்ற பலன்***

இதே இடத்தில் லக்னமும் அமைந்தால் ஜாதகனுக்கு நெடுங்காலம் நிலைத்து நிற்கும் செல்வமும் குழந்தைகளும் ஏற்படும்.

### திருவோணம் 2ம் பாதத்தில் சூரியன் நின்ற பலன்

மூல நட்சத்திரத்தில் லக்னம் இருந்து, இங்கு சூரியனும் சந்திரனும் சேர்ந்து இருந்தால் ஜாதகனுக்கு ஒரே ஒரு மனைவியும் ஒரே ஒரு குழந்தையும் இருப்பார்கள். இந்த சூரியனின் இருபக்கமும் பாபிகள் இருந்து ஜனனம் பகல். காலத்தில் ஏற்பட்டால் ஜாதகனுடைய தந்தை சீக்கிரம் இறந்து விடுவார்.

### திருவோணம் 2ம் பாதத்தில் சந்திரன் நின்ற பலன்

இந்த சந்திரனுடன், லக்னமும் சுக்கிரனும் சேர்ந்து இருந்து இவர்களை சூரியன் பார்த்தால் இந்த ஜாதகியும் அவள் தாயும் சேர்ந்து வேசித் தொழில் செய்வார்கள். இதனால் இருவரும் பெண் வியாதி பிடித்து மிகவும் கஷ்டப்படுவார்கள்.

### திருவோணம் 2ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

இந்த செவ்வாயுடன், லக்னமும் சதய நட்சத்திரத்தில் இருந்து பிறந்த ஜாதகன் கண்வியாதிகளுக்கு ஆளாவான். இவர்களுடன் சூரியன் சந்திரன், சனி இவர்களும் சேருவார்களேயானால் ஜாதகன் 40 வது வயதில் ஆக்ஸிடன்டில் இறந்து போவான்.

### திருவோணம் 2ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

புதனும் சுக்கிரனும் இங்கிருந்து, லக்னம் புனர் பூசத்தில் இருந்தால் ஜாதகனுக்கு வெகுகாலம் வரை திருமணமே ஆகாது. ஆனால் இவர் களுக்கு சுபரின் பார்வை இருந்தால் ஜாதகன் 40 வயதிற்குப் பிறகு மனைவியின் சுகத்தை அனுபவிப்பான்.

### திருவோணம் 2ம் பாதத்தில் குரு இருந்த பலன்

திருவோணம் நட்சத்திரத்தில் உள்ள லக்னம் இந்த குருவுடன் சேர்ந்தால், அப்போது குருவுக்கு பாபிகளின் பார்வையும் ஏற்பட்டால் இந்தக் குழந்தை பிறந்த 11 நாட்களுக்குள் பரமபதத்தை அடையும்.

### திருவோணம் 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

எளிமையாகவும், தாராளமானவனாகவும் இருப்பான். பணிவும் அடக்கமும் கொண்ட இவன் கடவுளுக்குப் பயந்து எதையும் செய்வான், 32 வது வயதிலிருந்து திடீரென பல வழிகளிலிருந்தும் நிறைய பணம் வந்து குவியும். 44வது வயதில் இந்த சுக்கிரன் இதே இடத்தில் ஜாதகத்தில் வரும்போது பயங்கர நஷ்டங்கள் ஏற்படும்.

### திருவோணம் 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

நடுத்தரமான உயரமும் உருவமும் பெற்றவன். இவனுடைய செய்கைகள் பழிவாங்குவது போல் அமையும், தன் ஊரைவிட்டு வெளியூர்களில் வாழ நேரலாம். சுகமான வசதியான வாழ்க்கைக் கிட்டும் இவனுடைய மனைவி நோயாளியாக இருந்த போதிலும் மண வாழ்க்கை இன்பமனதாகவே இருக்கும்.

### திருவோணம் 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இவன் உண்மையானவன், நம்பிக்கையானவன். அமைதியும் தாராள மனப்பான்மையும் உள்ளவன். நல்ல மனைவியின் சுகத்தை இவனால் அடைய முடியாது. இவன் கஷ்டப்பட்டு உழைத்தாலும் அதற்கு உண்டான கூலியையும், தேவையான பொருட்களையும் பெறமுடியாத துரதிர்ஷ்சாலி.

### திருவோணம் 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

தன் பெண்களின் காரணமாக மன நோய்க்கு ஆளாவான். இந்த கேதுவை பாபிகள் பார்த்திருந்தால் இவனுடைய குழந்தைகள் மிகுந்த துன்பத்தைக் கொடுத்து வாழ்க்கையை நரகமாக்குவார்கள்.

### திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

சூரியன் இங்கிருக்கையில், லக்னம் ரேவதி நட்சத்திரத்தில் அமைந்து பல பாபக்கிரகங்களின் பார்வை சூரியனுக்கு இருக்குமானல் இந்தக் குழந்தை

பிறந்த உடனேயே இறந்துவிடும். ஒரே ஒரு பாபிமட்டும் சூரியனைப் பார்த்தால மரணம் 1 மாதத்திற்குள்ளாக சம்பவிக்கும்.

**திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

பலவகை சாஸ்திரங்களையும் அறிந்த நிபுணன். பல குழந்தைகளுக்குத் தந்தை. பெரியவர்களிடத்தில் மரியாதை உள்ளவன். எல்லா தத்துவம் புராணம் இதிகாசங்களையும் கேட்பதிலும், படிப்பதிலும் ஆர்வம் உள்ளவன்.

**திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

இங்குள்ள செவ்வாயுடன், லக்னமும் கேட்டை நட்சத்திரத்தில் இருந்தால், பழங்கால சோதிட நூல்களின் கருத்துப்படி இந்த ஜாதகனின் மூத்த, இளைய சகோதரர்கள் இருவரையுமே அழித்து விடும்.

இந்த பலன் ஆண்களுக்கு மட்டும் தான் பொருந்தும். பெண் ஜாதகிகளுக்குப் பொருந்தாது என இந்த புத்தகத்தின் ஆசிரியர் கருதுகிறார்.

எப்படி இருந்தாலும் இங்குள்ள செவ்வாய் இளைய சகோதரர்களை தாய்க்கு அபார்ஷன் ஏற்படுத்துவதன் மூலம் அழித்து விடுவான். குழந்தை பிறந்த பிறகு அழிக்க மாட்டான். அதனால் இந்த ஜாதகன் தான் மூத்தவன். ஆகவே மூத்த சகோதரத்தை அழிப்பான் என்ற பேச்சுக்கே இடமில்லை.

**திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

பிஸினஸ் செய்வதில் பணம் சம்பாதிப்பான். எக்கனாமிக்ஸ் அல்லது காமர்ஸில் டிகிரி வாங்குவான் அல்லது இவைகளில் பரந்த அறிவு பெற்றவன். ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் இருப்பான். தன்னலமற்றவன்.

### *திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

சூரியன், புதன், சந்திரன் மூவரும் இந்த குருவுடன் சேர்ந்தால் ஜாதகன் 5 வயதிற்குள் உயிர்விடுவான்.

### *திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

இந்த சுக்கிரனுடன் சேர்ந்த சனியும் சூரியனும் சிசு மரணத்தைத் தருவார்கள். இந்த கிரகங்களை குரு பார்த்தால் மரணம் சற்று தாமதித்து 9ம் வயதில் ஏற்படும்.

### *திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

நல்ல அறிஞனாகவும், கெட்டிக் காரனாகவும் இருந்தாலும் சந்தேகப்படும் பேர்வழி. இவன் தன் சொந்த தாய் தந்தையரைக் கூட நம்பாதவன். பிறரைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? இந்த சந்தேக குணத்தினால் மற்றவர்களும் இவனை நம்பமாட்டார்கள்.

### *திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

நன்கு கல்வி கற்றவன். புத்தி கூர்மை உள்ளவன். இவனின் பழிவாங்கும் குணம் பலரிடம் விரோதத்தை உண்டாக்கும். இருந்தாலும் சுமாரான வசதிகளையும், சந்தோஷத்தையும் வாழ்க்கையில் உடையவன்.

### *திருவோணம் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்*

இவன் மனைவியே இவனுக்கு ஒரு பிரச்சினை; பல விதத்திலும் குழப்பத்தை ஏற்படுத்துவாள். மனைவியின் தலையீட்டினால் வாழ்க்கையின் முன்னேற்றங்கள் தடைபடும்.

### *திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்*

பேராசையும், நிலையற்ற மனதையும் கொண்டவன். அலைந்து திரிவதில் ஆசை உள்ளவன். வேசிகளுடன் உறவு கொள்வான்.

பெற்றோருடனும் உறவினர்களுடனும் தகராறும் சண்டையும் ஏற்படுவதால் பல நஷ்டங்கள் ஏற்படும். மறைமுக எதிரிகள் அனேகர் இருப்பார்கள். மிகுந்த துன்பங்களை அனுபவிப்பான்; சுப கிரகத்தின் பார்வை இந்த சூரியனுக்கு ஏற்பட்டால் தீயபலன்கள் குறைந்து காணப்படும்

### திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

மத குருக்களுக்கும், தீவிர தெய்வ வழிபாடு செய்பவர்களுக்கும் மரியதை செலுத்துவான். பக்திமான். எல்லோரையும் அதிகாரம் செய்யும் மனப்பாங்கு உள்ளவன். இந்த சந்திரன் சரியாக 290 வது பாகையில் இருந்தால் இந்தக் குழந்தையின் ஆயுள் சந்தேகத்துக்குரியது. இவனது 20 ஆவது வயது ஆபத்தானது. கண்டம் ஏற்பட வாய்ப்புண்டு.

### திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

ஜாதகன்தான் மூத்த மைந்தனாக இருப்பான். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இவனுக்கு ஒரு தம்பி பிறப்பான். இந்த செவ்வாயின் அமைப்பு, ஜாதகனை ஒரு வெற்றி மிகுந்த டாக்டராக்க வல்லது. இவனை குரு பார்த்தால், ஜாதகன் அரசாங்கத்தில் ஆபீசராக இருப்பான்.

### திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

ஹோட்டல் நடத்தும் டெக்னிக் அறிந்தவன். ஹோட்டல் தொழில் மூலம் நிறைய சம்பாதிப்பான். இவன் சொத்துக்களை வாங்கி விற்கும் ஏஜண்டாகவோ அல்லது கமிஷன் வாங்கும் ஏஜண்டாகவோ கூட இருக்கலாம். தந்திரகுணமும், கஞ்சத்தணமும் உடையவன். எல்லா விஷயங்களிலும் ஒரே விதமான ஸ்டைலை கடைபிடிக்கமாட்டான். அடிக்கடி மாற்றிக் கொண்டே இருப்பான்.

### திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

எல்லோரிடமும் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளும் பழக்கமுடையவன். ஆனால் தாராள மனப்பான்மை இவனிடம் உண்டு.

பிறருக்கு எரிச்சலூட்டும் படி நடந்து கொள்வான். நிலையான மனதையே செய்கைகளையோ உடையவன் அல்ல. தன் 32 வது வயது வரை வாழ்க்கையில் மிகுந்த கஷ்டங்களை அனுபவிப்பான். 37 வது வயதிற்குப் பிறகுதான் சிறிது நிரந்தரத் தன்மையை எதிர்பார்க்க முடியும்.

### *திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

நிறைய ஆசைகளை வைத்திருப்பான். ஆனால் கொள்கை அற்றவன். ஒழுங்கான நோக்கம் அற்றவன். வேஷதாரி, தன்னைத் தானே பிரபலப்படுத்திக் கொள்வான் பலவீனமான தேகத்தை உடையவன். நிறைய விஷயங்களைக் கற்றறிந்தவன்.

### *திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

கறுத்த நிறமும் ஒல்லியான உடலும் கொண்டவன். சிலருக்கு எலும்புகள் வெளியே கண்கூடாகத் தெரியும். இவன் அதிகம் பேச மாட்டான். உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருப்பான். சொல்வதைக் கேட்கிறானா அல்லது தாங்கள் பேசுவது இவனுக்குப் பிடிக்க வில்லையா என்ற குழப்பத்தில் ஆழ்வார்கள்.

### *திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

நகைச் சுவையுடன் பேசுவான். சாமர்த்தியம் நிறைந்தவன். சின்ன மனசும், தீமையான செயல்களும் கொண்டவன். சர்க்கஸில் உள்ள கோமாளி போன்றவன். அதாவது இவன் பிறரது கவலைகளைப் போக்குவான். ஆனால் இவன் கஷ்டத்தைப் போக்க யாரும் இருக்க மாட்டார்கள். வாழ்க்கையின் பெரும்பகுதி துக்கமும் வேதனையும் மிகுந்ததாக இருக்கும்.

### திருவோணம் 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

ஜாதகன், பிராங்கைடிஸ், நிமோனியா, அல்லது க்ஷயம் நோய்களால் தாக்கப்படக் கூடும். இவன் மனைவி மக்கள் இருவருமே இவனுக்கு ஆபத்தை விளைவிப்பார்கள்.



# அத்தியாயம் - 32

## அபிஜி'த் நட்சத்திரம்

*பிறர் மதப்படி "அபிஜித்" நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்*

இந்த அபிஜித் நக்ஷத்திரம் 276 பாகை 40 TO 280 பாகை 54' 13 பாகை வரை உள்ளதாகும். அதாவது உத்திராடம் 4ம் பாதத்தின் சிறிதும், திருஓணத்தின் முதல் பாதத்தில் சிறிதும் சேர்த்து உருவானது. இந்த நட்சத்திரத்தை 27 நட்சத்திரங்களில் ஒன்றாக விளங்கிய போதும் ஜோதிட உலகில் இதை கணக்கில் சேர்த்து பலன் சொல்லப்படாததின் காரணம் தெரியவில்லை, சில முற்கால ரிஷிகள் அதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். சிலர் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஆயிலும் ஏற்றுக் கொண்ட ரிஷிகளின் கருத்துப்படி இங்கு பலன்கள் சொல்லப்பட்டிருக் கின்றன. ஆனால் இது மிகவும் சுப நட்சத்திரமாக கருதப்படுகிறது.

*பொதுப்பலன் - ஆண்கள்*

***உருவ அமைப்பு***

சராசரி உயரமும். அளவான உறுப்புக்களும் கொண்ட உடலை உடையவன். பெருந்தன்மையான தோற்றம் கொண்டவன். தெய்வீக ஒளி வீசும் முகத்தை உடையவன். பார்வை பிறரை ஊடுருவி பார்க்கும் சக்தி கொண்டவை.

***குணங்கள்***

ஜாதமன் நன்கு படித்து கற்றறிந்தவன், படித்தவர்களாலும், கௌரவம் மிக்கவர்களாலும் மரியாதை செய்யப்படுவான். இவனுடைய

பழகுமுறை மிகவும் மரியதையுடனும் பணிவுடனும் இருக்கும். ஏதாவது ஒரு துறையில் மிகப்பிரபலமாக விளங்குவான். கடவுளுக்குப் பயந்து வாழ்வான். மத ஆச்சாரங்களை அனுஷ்டிப்பவன். மென்மையாகவும் இனியமையாகவும் பேசுவான்.

''எல்லாம் நன்மைக்கே'' என்ற நோக்கமும் நல்லது நடப்பதில் எதிர்பார்ப்பும் உள்ளவன். மறைந்து கிடக்கும் விஞ்ஞான புதிர்களை அறிந்து கொள்ள ஆர்வம் உண்டு

*கல்வி-தொழில்*

மிக உயர் கல்வி பெற்ற அறிஞன். குடும்பத்தில் மிகவும் புகழ் பெற்றவன். உயர்ந்த ஸ்தானத்தை அடைவான். அந்த நட்சத்திரத்தில் சனி இல்லா விட்டால் அதிகாரமும் அதாரிட்டியும் உள்ள உயர்ந்த பதவியில் இருப்பான். சனி இந்த நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் பல வகையான உத்தியோகங்களை பார்ப்பான். அடிக்கடி உத்தியோகத்தை மாற்றுவான. பிஸினஸ் லைனில் இருந்தால் ஒரு பிஸினசை மாற்றி வேறொரு பிஸினஸ் என்று மாற்றிக் கொண்டே இருப்பான்.

*குடும்ப வாழ்க்கை*

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவி அமையும். 23 வது வயதில் திருமணம் நடைபெறும். குழந்தைகள் நிறைய பிறக்கும். குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரிக்க மாட்டான், 27 வது வயதுவரை பொருளாதார சிக்கல்கள் இருக்கும். அதற்குப் பிறகு பணத்தட்டுப்பாடே ஏற்படாது. குழந்தை களுக்கு 20 வயதாகும் போது ஒன்றிரண்டு இறந்து போகும், உயிருடன் இருக்கும் குழந்தைகள் நல்ல பொஸிஷனை அடைவார்கள். வசதியுடன் வாழ்வார்கள். இவன் தன் மூத்த மகனுடனேயே வாழ்வதை விரும்புவான்.

*ஆரோக்கியம்*

இளம்பிராயத்தில் ஆரோக்கியம் நன்றாக இராது. உடல் நிலை மோசமடைவதால், இவன் பொற்றோர்கள் பல மணி நேரங்கள், உயிர் பிழைக்க வேண்டுமே என்ற கவலையுடன் கழிக்க நேரும். ஆயினும் 20 வயதிற்குப் பிறகு உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். ''பைல்ஸ்'' ''ஜாண்டீஸ்'' போன்ற நோய்கள் தாக்கக் கூடும். இந்த 19, 20 வயதுகளில் கண்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இதில் இவன் தப்பிப் பிழைத்து விட்டால் அதன் பிறகு இவனுக்கு சீரியஸ்சான ஆரோக்ய பிரச்சனை எதுவும் வராது.

*பொதுப்பலன் பெண்கள்*

நீண்ட முகமும், ஒல்லியான உடலும் பெரிய பாதங்களும் கொண்ட இவள் முகவாயில் பள்ளம் விழுந்திருக்கும். இரண்டு முகவாய் உள்ளது போன்ற தோற்றம் தரும். ஆனால் இவள் 16 வயது வரை குண்டாக இருப்பாள்.

*குணங்கள்*

18 வது வயதில் இவள் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். அப்போது இவள் நல்ல முதிர்ந்த மனப்பக்குவத்தைப் பெற்றிருப்பாள். பல நிகழ்ச்சிகளின் அனுபவம் காரணமாக வாழ்க்கையின் மதிப்பை உளர்ந்திருப்பாள். இவள் எல்லா இடங்களிலும் இருப்பாள். ஒரே சமயத்தில் பல வேலைகளைச் செய்யும் திறமை உள்ளவள். பிறரை வேலை வாங்குவதிலும் கெட்டிக்காரி. முதலாளி தொழிலாளி என்ற பாகுபாட்டில் நம்பிக்கை இல்லாதவள். இவளே தொழிலாளி இவளே முதலாளி, இவளே சொந்தக்காரி என்று எல்லா வேலைகளையும் சிறப்பாகச் செய்வாள். தன்னுடைய ஊழியர்களுடனும், மேலதிகாரிகளுடனும் கலந்து பணி புரிவாள். தன் சுய முயற்சியால் குறிப்பிடத்தக்க அளவு சம்பாதிப்பாள்.

*கல்வித் தொழில்*

எல்லாவற்றையும் நல்ல நோக்குடன் எதிர்பார்ப்பதால் இவள் தன்னுடைய உத்தியோகத்துறையை தானே அமைத்துக் கொள்வாள். உத்தியோகத்தை விட பிஸினஸ் செய்வதற்கு பிரதானம் கொடுப்பாள்.

*குடும்ப வாழ்க்கை*

12-24 வது வயதில் ஏற்பட்ட செக்ஸ் பலாத்காரத்தால், இவர்கள் ஆண்களையே வெறுத்து கல்யாணத்தையே விரும்ப மாட்டார்கள். ஆயினும் இவளது திருமணம் 27-30 வயதில் நடைபெறும் திருமண வாழ்க்கை. நல்ல விதத்தில் அமைந்து நன்மக்களைப் பெற்றெடுப்பாள்,

*ஆரோக்கியம்*

சிறு பிராயத்தில் உடல் நிலை மிகவும் மோசமான நிலையில் இருக்கும் கக்குவான், இருமல், ருமாடிஸம், தோல் விபாதிகள், ஆர்த்ரிடிஸ் போன்ற நோய்கள் இவளைத் தாக்கக் கூடும். 15 வயது மிகவும் சோதனையான காலம். இவள் பெற்றோர்கள் இவளை திட்டாமல், கண்டிக்காமல் சர்வ ஜாக்கிரதையாக, இந்த காலத்தில் இருக்க வேண்டும். மாறாக ரகசியமாக கண்காணித்துக் கொண்டும் அன்புடனும், ஆதரவுடனும் இவளை நடத்த வேண்டும். இவளுடைய தோல்விகளைக் கண்டு மனம் கலங்க விடாமல், எடுத்துச் சொல்லி அவளுக்குப் புரிய வைக்க வேண்டும். 18 வயதிற்குப் பிறகு இவள் பிழைத்திருந்தால் பிறகு இவளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. அதன் பின் இவள் நல்ல நிலைமைக்கு வந்து விடுவாள்.

*அபிஜித் நட்சத்திரத்தில் சூரியன் இருந்த பலன்*

இந்த நட்சத்திரத்தில் உள்ள சூரியன், உச்சமடைந்த சூரியனை விட அதிக பலமுள்ளவன். இதில் சூரியனின், கிரணங்களை அபிஜித் கிரஹித்துக் கொள்வதால் சூரியன் "ஸ்தம்பனமாக" சிலகாலம்

இருப்பான். அதில் சூரியன் இருக்கும் போது பிற கிரகங்களினால் ஏற்படும். கெடுதல்கள் எதுவும் பாதிக்காது. அதனால் தீர்காயுள் ஏற்படும். தன்னுடைய ஊரில் மதிப்பும், அதிகாரமும் பெற்று சிறக்க வாழ்வான்.

*அபிஜித்தில் சந்திரன் இருந்த பலன்*

மனது, உடல் இரண்டின் பாதிப்பைத் தவிர சந்திரன் இந்த நட்சத்திரத்தில் வேறு எதுவும் செய்வதற்கு அதிகாரமற்றவன். முன்பே சொல்லியபடி இந்த இரண்டும் எந்த பாதிப்பும் அடையாது.

*அபிஜித்தில் செவ்வாய் இருந்த பலன்*

டிபன்ஸ் அல்லது ஏர்லைன்ஸில் பெரிய அதிகாரி ஆவான். அரசியல் வட்டாரத்தில் சம்பந்தம் ஏற்படும். இவர்களுக்கு வேறு துறையில் பெருமையும். புகழும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அரசியலில் பங்கேற்கக் கூடாது.

*அபிஜித்தில் உள்ள புதன் தரும் பலன்*

இதில் புதன் நல்லது, கெட்டது எதையும் தர சக்தி அற்றவன்.

*அபிஜித்தில் உள்ள குரு தரும் பலன்*

குரு இங்கு நீச்ச மடைந்தாலும், மிக்க பலத்தை அபிஜித்தில் இருந்ததால் பெறுகிறான். மற்ற கிரகங்கள் பாப கிரக பார்வை சேர்க்கைப் பெற்றிருந்தாலும் அந்த தோஷத்தை இங்குள்ள குரு போக்கி விடுவான். ஜாதகன் அரசாங்கத்தில் மந்திரி அல்லது நிர்வாகியாக "டாப் பொஸிஷனில்" இருப்பான்.

*அபிஜித்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

திருமணம் தாமதப்பட்டாலும், நிலையானதாகவும் ஒற்றுமை மிக்கதாகவும் இருக்கும். சில வருட பழக்கத்துக்குப் பிறகு காதல் திருமணம் செய்து கொள்ளவும் வாய்ப்புண்டு.

### அபிஜித்தில் உள்ள சனி தரும் பலன்

பல இன்னல்களும், சோதனைகளும், எதிர்பாராத தாழ்வுகளும், ஜாதகனுக்கு ஏற்படும்.

### அபிஜித்தில் உள்ள ராகு தரும் பலன்

வாழ்க்கை சிதையும், உறவினர்கள், நண்பர்கள், சமூகத்தினர்கள் இவர்களுக்கு பல பிரச்சினைகளை உண்டாக்குவான். குருவுடன் சேர்ந்தோ அல்லது குருவின் பார்வை பெற்றாலோ தீமைகள் மறைந்து நன்மைகள் ஏற்படும்.

### அபிஜித்தில் கேது தரும் பலன்

உச்சகுரு, சுக்கிரன் இவர்கள் தரும் பலனை கேது இங்கிருந்தால் தருவான். அறிஞன், கவர்மெண்டில் உயர்ந்த பதவியில் வகிப்பான், அல்லது தொழில் அதிபராக இருப்பான்.

# அத்தியாயம் - 33

## அவிட்ட நட்சத்திரம்

23 வது நட்சத்திரம் இது ராசி மண்டலத்தில் 293 பாகை 20 முதல் 306 பாகை 40 வரை பரவி உள்ளது.

| | | |
|---|---|---|
| தமிழ்ப் பெயர் | - | அவிட்டம் |
| வடமொழிப் பெயர் | - | தனிஷ்டா |
| அரபுப் பெயர் | - | ஸாத்-அஸ்-ஸஉத் (மிகவும் சந்தோஷமுள்ள |
| கிரேக்கப் பெயர் | - | டெல்பினி |
| சீனப்பெயர் | - | ஹிய்யு |

இதற்கு ஸ்ரவிஷ்டா என்ற பெயரும் உண்டு. இந்த சொல்லுக்கு மிகவும் புகழ் பெற்ற என்ற பொருளும் உண்டு.

இதற்கு அதிதேவதை அஷ்ட வசுக்களாகும். இவர்கள் பெயர் தரா, துரபன், சோமன், விஷ்ணு. அனலன், அனிலன், பிரத்தியுஸ் மற்றும் பிரோவாசன் என்பதாம். இவர்கள் கங்கையில் அல்லது கங்கா தேவிக்குப் பிறந்தவர்கள் எனச் சொல்லப்படும்.

*அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தன்மை சுவடி எண் 1500ல் உள்ள பாடல்)*

202 முன்னுரை உடையனாகும் முகமலர்ந் தினிது பேசும்
தன்னுடன் பிறத்த மாமன் தாயுடன் களித்து பேசும்
பொன்னுடன் பணியும் முத்து ம புகழ்பெற அணிய வல்லான்
அன்னமின் நடையினாளே அவிடட நாள் தோன்றி னானே!

(இதன் பொருள்)

இவன் புகழ் உடையவன். பிறருடன் மலர்ந்த முகத்துடன் இனிமையாகப் பேசுவான். தன் மாமன், தாய் இவர்களுடன் மிகவும் அன்பாக இருப்பான். பொன். இரத்தினம், முத்து இவற்றாலான நகைகளை அலங்காரமாக அணியவல்லவன். அன்னம் போன்ற நடையுள்ள பெண்ணே இவனே அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவனாவான்.

இந்நாளுக்குத் தெய்வம் பரமேஸ்வரன் யோகினி சாமுண்டி. ஜாதி பிராமணன். கோத்திரம் புலஸ்தியன். யோனி - பெண் சிங்கம்; பட்சி வண்டு, விருட்சம் - வன்னி, ராக்ஷச கணம். ஜென்ம வாரம் - சனி கிழமை இது உதித்து 10 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம்.

இந்நாளில் பெண் திரளில் தன தான்ய. புத்ர சம்பத்துடன் இருப்பாள்.

இந்நாளில் வருஷம் பிறக்கில் - தான்ய உற்பத்திக் குறையும். தைமாதம் சூன்யம். இந்நாளில் பிறந்தவன் முன்கோபி. ஒன்றுக்கும் அஞ்சான். கைகால் அழகியவன். தெய்வ பக்தி குரு பக்தி யுடையவன். பசு, எருமை, கன்றுகாலி விருத்தி செய்பவன். புறவடி உயர்ந்தவன். இவன் சொல்லுக்கு நிறைய மதிப்புண்டு. கண்ணீர் மிகவுமுடையவன்.

இதில் சுரம் தோன்றில் 4 நாளில் நீரும். தீரா விட்டால் அரசங்கொழுந்து நெய்யுடன் கலந்து ஓமம் பண்ண வேண்டும். பால் சோறு சமைத்து பலி செய்ய வேண்டும் (நைவேத்யம்).

இவன் பொன்னும் பொருளும் நிறையத் தேடுவான். இந்நாள் எல்லா நற்கருமங்களுக்கும் நன்று. சீமந்தம், அன்ன பிராசானம், பண்ண பொன் பூண, கோடியுடுக்க, விதை விதைக்க உத்தம யாத்திரை செய்ய பனை வெல்லம் உண்டு கிளம்ப நன்று.

*இந்த நட்சத்திரம் பற்றி பிற நூல் செய்திகள்*

அவிட்டம் உயர்ந்த நட்சத்திரம் என்பர். அவிட்டத்தில் பிறந்த பெண் தவிட்டுப்பானை யெல்லாம் பொன்'' என்றும் "அவிட்டத்தில் பிறந்தால் தொட்ட தெல்லாம் பொன்னாகும்'' என்னும் பழமொழிகள் இதன் சிறப்பைப் பறைசாற்றும். இது மிருதங்க வடிவத்தை உடையது இதை அரை நட்சத்திரம் என்றும், குருட்டு நட்சத்திரம் என்றும் சொல்வதுண்டு' மேல் நோக்கு நாள் என்பது வழக்கு. இந்த நட்சத்திரத்தில் தான் புதன் என்னும் கிரஹம் பிறந்தான் என்பர். முன்னால் சொன்ன காரியங்கள் தவிர சிற்பவேலை, தண்ணீர் துறை அமைத்தல், காடு வளர்ப்பது முதலியவற்றுக்கும் நன்று.

இந்த நட்சத்திரத்தை செப்டம்பர் மாதம் இரவு ரிஷப லக்ன நேரத்தில் வானத்தில் காணலாம்.

இதில் பிறந்தவர்களுக்கு 30 வயதுக்கு மேல் நல்ல வாழ்வு அமையும். இவர்கள் குணத்தால் சிங்கம் போன்றவர்கள். இதில் பிறந்தவர்கள் அனேகமாகக் குள்ள வடிவமுடையவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு உறவில் திருமணம் இல்லை, சந்ததியும் அற்பம்.

இது நான்கு நட்சத்திரங்கள் கொண்டதாகும். இது பெண் நட்சத்திரம் அபசவ்யமாகும். இது குபேரதிக்கான வடதிசையில் உள்ளதாகும். அதன் அதிதேவதை குபேரன் என்ற கொள்கையும் உண்டு. இவரே அஷ்டதிக்கு பாலகராகிறார். ஞாயிற்றுக்கிழமை வரும் அவிட்டம் மரண யோகமாகும். புதன்கிழமையில் வருவது பிரபலாரிஷ்டம் எனவே இவை இரண்டும் நற்காரியங்களுக்கு ஆகா.

இது 5 தாரை கொண்டது என்றும் கூறப்படும். சர நட்சத்திரம்''ம்'' என்ற மெய்யெழுத்தே இதன் அசட்ரமாகும். அவிட்டச் செவ்வாய்க் கிழமை விஷயோகம். இது லக்னத்திருக்க யூத்தாரம்பம். செய்யலாம் இந்த நாளில் சிவந்த மேகம் கண்டால் 20 நாளில் மழை பெய்யும். காய்ச்சல் கண்டால் 5 நாள் பீடை; பாயசம் நைவேத்யம். தாமரைப் புஷ்பம் பூஜை குங்கலிய தூபம். செய்ய வேண்டும்.

"த்ராயந்தா மிதி" என்ற மந்திரத்தால் உரு மற்றும் பூஜை ஹோமம் முதலியன வில்வம், அத்தி அரசு சமித்துகளால் "சாவித்திரி" மந்திரத்தால் 10த் தடவை ஹோமம். நெய் சேர்ந்த பயறு வசுக்களுக்குப் படைக்க வேண்டும். வருஷம் பிறந்தால் விளைச்சல் நடுத்தரம் தான்.

*203 அவிட்டம் பற்றி தமிழ் ஜாத காலங்காரம்*

*நெறிபெரும் கருமந்தன் சொல்மேல் ஆனோன்*
*நின்றவர்க் கஞ்சிடான் தியாகி*
*உறுபுற அடி நாசியும் உயர்ந்திருப்பான்*
*ஒருவர்சொல் பொருள்நல் ஊண் பிரியன்*
*பெரும்பொருள் தேடுவான் அழகன்*
*அறிவுடன் அடக்கம், பிறர்பொருள் வல்லான்*
*அவிட்ட நட்சத்திரத்தி னானே!*

(இதன் பொருள்)

அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவன் உயர்வான ஒழுங்கான தொழில் செய்பவன். தன் சொல்லையே மேன்மையாகக் கூறுபவன் எதிர்த்து நிற்பவர்களுக்குச் சிறிதும் பயப்படாதவன். கொடையாளன். புறங்காலும் மூக்கும் உயர்ந்திருப்பவன். பிறர் இழி சொல்லைப் பெறாதவன். நல்ல உணவுப் பிரியன், சாப்பாட்டு ராமன். தாய் தந்தை மேல் விருப்பமுள்ளவன். பெண்களுக்கு இனியவன். அவர்கள் நேசமும் உதவியும் உண்டு. பெரும் பொருள் சம்பாத்தியமுள்ளவன். அறிவுடையவன் அடக்கம் உடையவன்; அன்னியர். பொருள் சொத்தில் இச்சை இல்லாதவன் என்பதாம்.

*யவன ஜாதகம் கூறும் பலன்*

இவன் தர்மிஷ்டன். விசனமுடையவன். குரூரன். க்ஷய ரோகமுடையவன். கூடமாக அதாவது இரகசியமாக அபராதம் செய்பவன். அன்னிய ஸ்த்ரீ மோகமுடையவன் எனப்படும்.

*பிரஹகத் ஜாதகம்*

இவன் பராக்கிரமம் உடையவன்; தக்க சமயத்தில் உதவி செய்யும் குணமுள்ளவன். இசையில் பற்றுள்ளவன். பிறர்க்கு தருமம் தானம் செய்யவும், கொடுக்கவும் மன மில்லாதவன், தியாகியாகவும் இருப்பான் என்பதாம்,

*பெண்*

*இதில் பிறந்த பெண்ணின் குணங்கள்*

வடமொழி நூல் கூறுவது:- இவள் புண்ணிய கதைகள் கேட்பதில் ஆர்வமுள்ளவள். நிறைய சாப்பாட்டு வசதியுண்டு. உயர்ந்த ஆடை அலங்காரம் நகைகள் அணிபவள். பிறருக்கு கொடுக்கும் இரக்கக் குணம் உள்ளவள். எல்லா உயிர்களிடத்தும் தயையுள்ளவள். நல்ல குணமுள்ளவள்.

*பிற நூல்*

பொருள் உள்ளவள், அதற்காக பலவகையிலும் சம்பாதிப்பவள். புஷ்பம், பரிமளம், கந்தம் பரிமளப்பொருள் இவற்றை பூசிக்கொள்பவள். பறிர் மேல் விருப்பமுள்ளவள் என்பதாம்.

***சங்கரா சாரியார் மதன நூல் கூறும் பெண்ணின் குணங்கள்***

***இந்த நட்சத்திரம் கந்தருவ தத்துவ லக்ஷணமுடையதாகும்.***

***224 கண் விழிப் பெரியளாகும் கருப்புபோல் இனிதாய் பேசும்***
***பெண்மையு முடையளாகும் பெருகிடும் பெருமை பேசும்***
***உண்மையே உரைப்பாள் உற்றர்க் குடன் கொடுத்து இனிது வாழ்வாள்***
***நண்ணினார்க் கமுதமாவாள் நல்லவிட் டத்தி னாளே.***

இவள் பெரிய கண்கள் உள்ளவளாவாள், கரும்பு போல இனிக்க இனிக்கப் பேசுபவள். பெண்மையின் முழு நளினமும் அழகும் உடையவள். தன்னைப் பற்றி பெருமையாகப் பேசிக் கொள்வாள். எப்பொழுதும். உண்மையே பேசுவாள். தன் உறவினர்கள் மேல் மிகவும் அன்புள்ளவள், தன்னை நாடி வரும் கணவனுக்கு முழு இன்பமும் தந்து அமுதமாக இனிப்பவள். இவளே அவிட்டத்தில் பிறந்தவளாவாள் என்பதாம்.

*அவிட்ட நட்சத்திரம் பாத பலன்கள்*

***225 தமிழ் ஜாதகாலங்காரம் கூறும் பாத பலன்கள்***

***வகையிலான் காமி பசிபொறான் மனதில்***
***வசையுறு கிலேசநிட் டூரன்***
***வளம்பெறு தூல சரீரவான் கரியன்***
***மருவிய அவிட்டத்தின் முதல் கால்***
***தகையிலான் மனதில் பேதக முடையான்***
***சத்தியன் புத்திமான் முடியன்***
***சாத்திர வாதி ஊக்கமுள் ளவனாம்***
***தருமவா னிநபத என்பர்***
***திகை செறி குணவான் குறுகிய மெய்யன்***
***சேர்ந்திடு திடமுளன் மானி***
***செப்பு நன்னடையான் செந்நிற வானாம்***
***தெரிந்திடு மூன்றதாம் காலில்***
***தொகைமிகு தனவான் குரூரவான் தூல***
***தேகவான் கர்வியே தகனாம்***
***துலங்கிய உரோம அழகுடை யோனாம்***
***சோர்வது நாற்பதம் தொட்டோன்!***

1) அவிட்டம் முதற்காலில் பிறந்தவன் எந்த விஷயத்தையும் ஆராய்ந்து பார்த்துத் தெளியும் சக்தி இல்லாதவன். ஸ்த்ரீ லோலன். பசி பொறுக்காதவன், சந்தேக நெஞ்சுடையவன் பருத்த சரீர முடையவன் கரிய நிறமுடையவன் என்பதாம்.

2) தகுதியற்றவன் சந்தேக மனமுடையவன். பேத புத்தியுடையவன் சத்தியம் அதாவது உண்மையே பேசுபவன். அழகிய முகம், முடி இவை உடையவன். சாத்திரம் தெரிந்தவன், ஊக்கமுள்ளவன், தரும புத்தியுமுடையவனாகும் என்பர்,

3) மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் எந்த காரியங்களிலும் சந்தேக குணமுடையவன், நற்குணமும் குள்ளமான மெல்லிய தேகமுடையவன், சிவந்த நிறமும் உடையவன் என்று கூறுவர்.

4) நான்காம் பாதத்தில் பிறந்தவன். கணக்கற்ற செல்வம் படைத்தவன். துர்செய்கை யுடையவன். பருமனான சரீரம் படைத்தவன். அகங்காரமுடையவன், குற்றம் நினைப்பவன்; கோள் சொல்பவன்; அழகுடைய உரோம முடையவனும் ஆவான் என்பதாம்.

*ஜாதக சார தீபம் சொல்லும் பாத பலன்*

முதல் பாதம் - தீர்க்காயுள் உள்ளவன்.

இரண்டாம் பாதம் - துன்பத்தால் பீடிக்கப்பட்டவன்.

மூன்றாம் பாதம் - பயந்த சுபாவமுள்ளவன்.

நான்காம் பாதம் - அழகான நல்ல உத்தமமான பெண்ணை மனைவியாக உடையவன்.

*சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் அவிட்ட நட்சத்திர பாத பலன்கள்*

**முதல் பாத பலன்**

226 *தலையது கறண்ட மாகும் தன்மனம் பெரியோனாகும்*
*மலைதரு வாலி பத்தின் வடிவுடன் சிறந்த மேனி*
*கலைபல நன்று கற்கும் கடிமதக் காளை யாகும்*
*மலையென வளர்ந்த தோளான் மதியினங் கிஷத்தினானே!*

இதன் பொருள்

இவன் தலை கமண்டலம் போன்று உருண்டு திரண்டு இருக்கும். இவன் விரிந்த மனப்பான்மை உடையவன். இவன் பிறர் மலைத்து பிரமிக்கும் படியான அழகிய வடிவமுள்ள சிறந்த உடல்வாகு உள்ளவன். இவன் பலதுறைக் கல்வியும் கற்று தேர்வான். இவன் மதம் கொண்ட காளை போன்று எப்பொழுதும் இளமைப் பொலிவு உள்ளவன். இவன் தோள்கள் வளர்ந்த மலை போன்று உயர்த்தவை. இவனே சந்திரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

*இதற்கு காலச் சக்கர தசை வருமாறு*

| | | | |
|---|---|---|---|
| 1 | மீன வியாழன் | - | 10 வருடம் |
| 2 | கும்பச் சனி | - | 4 வருடம் |
| 3 | மகரச் சனி | - | 4 வருடம் |
| 4 | தனுசு வியாழன் | - | 10 வருடம் |
| 5 | விருச்சிகச் செவ்வாய் | - | 7 வருடம் |
| 6 | துலாம் வெள்ளி | - | 16 வருடம் |
| 7 | கன்னி புதன் | - | 9 வருடம் |
| 8 | சிங்க சூரியன் | - | 5 வருடம் |

9 கடகச் சந்திரன் - 21 வருடம்

ஆக வயது - 86 வருடம்

***சுவடி எண் 1500ல் சொல்லிய அவிட்டம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்களின் பலன்***

***227 மேதையாம் அனங்கன் சால வேந்தரால் விருப்பமுண்டாம்***
***மாதுமால் உருவ மாதம் மனம் பிறர்க் கரிய வொண்ணான்***
***தாதுசேர்குழலி னாள் மேல் தனமரு சார நில்லான்***
***மீதுறு வலக்கை வேலான் மிதுன அங் கிஷத்தி னானே!***

(இதன் பொருள்)

இவன் சிறந்த அறிவாளி. அரசர்களால் மிகவும் விரும்பப்படுவான். பெண்கள் கண்டு மயங்கும் வடிவழகுடையவன். இவன் மனதைப் பிறர் அறிய முடியாதவன். இவன் பரிமளம் மிகுந்த வாசனையுள்ள கூந்தலுடைய தன் மனைவியிடம் கை செலவுக்கும் பணத்திற்கும் எதிர்பார்க்க மாட்டான். இவன் தன் வலக்கையில் வேல் தரித்துள்ளவன் இவன் வீரன். இவனே மிதுன அங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான் என்பதாம்.

***இதற்குக் காலச் சக்கர தசை***

1. மிதுன புதன் - 9 வருடம்
2. இடப வெள்ளி - 16 வருடம்
3. மேஷச் செவ்வாய் - 7 வருடம்
4. தனுசு வியாழன் - 10 வருடம்
5. மகரச் சனி - 4 வருடம்

6. கும்பச் சனி - 4 வருடம்

7. மீன வியாழன் - 10 வருடம்

8. மேஷச் செவ்வாய் - 7 வருடம்

9. இடப வெள்ளி - 16 வருடம்

ஆகவயது - 83 வருடம்

*சுவடி 1500 மரணகண்டியில் சொன்ன அவிட்டம் 3ம் பாதப்பலன்*

***228 தெள்ளிய தியாகி நல்வான் சேயிழை யாரைப் பேணும்***
***நள்ளிய கண்ணினான்மேல் ஒண்பொருள் சார நில்லான்***
***பள்ளியும் பலவும் கற்கும் பாக்கிய முடையனாகும்***
***வெள்ளியங் கிஷத்தில் வந்த விருப்புடை காளை யாம்.***

**(இதன் பொருள்)**

இவன் தெளிவான சிந்தனை உள்ளவன். தியாகியாவான். நல்லவன் தன் மனைவி மற்றும் தான் விரும்பும் பெண்களைக் காப்பாற்றுபவன். ஒளி பொருந்திய கண்களுடைய தன் மனைவியை பணம் மற்ற சௌகரியங் களுக்காக எதிர் பார்க்க மாட்டான். பல பள்ளிகள், கல்லூரிகள் முதலியவற்றில் உற்று உயர்ந்த கல்வி பெறுபவன். பாக்கியசாலி. இவனே சுக்கிரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவன் என்பதாம்.

*இதற்குக் காலச் சக்கர தசை வருமாறு*

1) மிதுன புதன் - 9 வருடம்

2 சிங்க ஆதித்தான் - 5 வருடம்

3 கடகச் சந்திரன் - 21 வருடம்

| | | |
|---|---|---|
| 4 | கனனி புதன் | - 9 வருடம் |
| 5 | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 6 | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| 7 | மீன வியாழன் | - 10 வருடம் |
| 8 | கும்பச் சனி | - 4 வருடம் |
| 9 | மகரச் சனி | - 4 வருடம் |
| | ஆக வயது | - 85 வருடம் |

***சுவடி எண் 1500 மரண கண்டிகை சொல்லும் அவிட்ட நட்சத்திரம் 4ம் காலில் பிறந்தவன் பலன்***

*209 குறுகிய உருவ மெய்யன் குதலைசேர் மொழியன் வாயன்*
*மறுகிய மனத்தன் பெண்மேல் மனமது சார நில்லான்*
*முறுகிய கொடுமை செய்யும் முது கினில் மறுஉண் டென்பர்*
*செறிகருங் கூந்தல் பேணும் சேயினங் கிஷத்தினானே.*

(இதன் பொருள்)

இவன் குறுகிய குள்ளமான உருவம் உள்ளவன். மழலை மாறாத இளங்குழந்தை போல் பேச்சுடையவன். இவன் முரண் பாடான மனம் உள்ளவன். பெண்கள் வசப்படாதவன். இவன் கொடூரமான மாறுபட்ட செயல் உள்ளவன். இவன் முதுகினில் மறு அல்லது மச்சமும் உண்டு. அடர்த்தியான அழகான சுருண்ட தலைமுடி நீளமாக உள்ளவன் தன் ஆசை நாயகியை பாதுகாத்து அன்பு காட்டுவான். இவனே செவ்வாயின் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்குக் காலச் சக்கர தசை வருமாறு**

| | | |
|---|---|---|
| 1. | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| 2. | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 3. | மிதுன புதன் | - 9 வருடம் |
| 4. | கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 5. | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 6. | கன்னி புதன் | - 9 வருடம் |
| 7. | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 8. | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| 9. | தனுசு வியாழன் | - 10 வருடம் |
| | ஆக வயது | - 100 வருடம் |

**அவிட்ட நட்சத்திரம் விம் சோத்தரி தசை**

| | | |
|---|---|---|
| 1. | செவ்வாய் தசை | - 7 வருடம் |
| 2. | ராகு தசை | - 18 வருடம் |
| 3. | குரு தசை | - 16 வருடம் |
| 4. | சனி தசை | - 19 வருடம் |
| 5. | புதன் தசை | - 17 வருடம் |
| 6. | கேது தசை | - 7 வருடம் |
| 7. | சுக்கிர தசை | - 20 வருடம் |
| 8. | சூரிய தசை | - 6 வருடம் |

9. சந்திர தசை - 10 வருடம்

ஆக வயது - 120 வருடம்

### இந்த நட்சத்திரக்காரர்களுக்கு ஏற்படும் நோய் கண்டம் முதலியன

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் கண்டம்; 7 வயதில் - காய்ச்சல் வெதுப்பால் கண்டம். 13 வயதில் உதர நோயால் தொல்லை. 16 வயதில் நீர் கண்டம், 22 வயதில் மீண்டும் காய்ச்சல் வெதுப்பால் கண்டம்; 23 வயதில் மீண்டும் காய்ச்சல் வெதுப்பால் தொல்லை. 25 வயதில் வயிற்றுக் கடுப்பால், 30 வயதில் பெண்கள் மருந்தீட்டால் 35 வயதில் நித்திரை வியாதியால் (ஏட்டில் நெத்திரை என்றுள்ளது என்ன நோய் என்று புரியவில்லை இது தூக்கமின்மையாகவும் இருக்கலாம்). 46 வயதில் கள்ளரால் கண்டம். 50 வயதில் வெதுப்பு வயிற்றுக் கடுப்பால். 65 வயதில் நெத்திரை (நித்திரை இன்மை) வியாதியால் சன்னியால் கண்டம், 75 வயதில் வெதுப்பு சிலந்தி நோயால் சிலேத்துமத்தால் கண்டம்.

இது கடந்து 95 வயது சென்று மாசி மாதம் பூர்வ பட்சத்து ஏகாதசியும் அவிட்ட நட்சத்திரம் கூடிய நாளில் 7 நாழிகை சென்று பித்தம் சீறி இறைவனடி சேருவான்.

இவன் பிறந்த லக்ன சாரம்

சூரியன் சாரமாகில் - சீமானாம்

சந்திரன் சாரமாகில் - மந்திரியாம்

செவ்வாய் சாரமாகில் - தனபதியாம்

புதன் சாரமாகில் - கல்விமானாம்

குரு சாரமாகில் - திசைமுகயோகவான் (எல்லா திக்குகளிலும் புகழ், செல்வம்)

சுக்ரன் சாரமாகில் - வேளாண்மை சிறப்பான்

சனி சாரமாகில் - வேடனாம்

ராகு சாரமாகில் - பல நாடுகள் சுற்றி பொருள் ஈட்டுவான்

கேது சாரமாகில் - தரித்திரன், கள்ளன்

இந்த நட்சத்திரத்தில் 3ம் காலில் பிறந்தவனுக்கு பிதாமரணம், 4ம் காலில் பிறந்தவனுக்கு தமையன் மரணம்.

இதற்குப் பரிகாரமாக இவனுக்கு பூமாதேவியின் பெயரிடவும். (பூபதி என்னலாம்)

பிறந்த இடந்தைப் பால் கொண்டு மெழுகவும் பிராமணர்களுக்கு விருந்தளிக்கவும். வெள்ளை வஸ்திர தானம் கொடுக்கவும்.

***கர்ம விபாகம் வடமொழி நூலில் சொல்லியுள்ள அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம பலனும் பரிஹாரங்களும்***

## அவிட்டம் 1ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்ம பலனும் சாந்தி பரிஹாரமும்

சிவபெருமான் சொல்லுகிறார்!

பஞ்சாப் தேசத்தில் கக்ஷகாபுரி என்ற நகரத்தில் தன் குலத் தொழிலை விட்டு விட்டு பயிர்த் தொழிலை செய்து வந்த ஒரு பிராமணன் வாழ்ந்து வந்தான். ஒரு சமயம் இவன் தன் வயலில் சோறு சமைத்தான். இரவு வந்தது. இவன் தங்கை மகன் இருந்த சோற்றில் கால் பாகத்தை சாப்பிட்டு விட்டான். அதனால் கோபம் கொண்ட அந்த பிராமணன் அந்த பையனைத் தடியால் அடித்துக் கொன்றுவிட்டான். இதன் பின் வெகு நாள் சென்று பிராமணனும் இறந்து போனான். இந்த பாவத்திற்காக எமதூதர்கள் இவனை பிடித்து நரகத்தில் தள்ளினார்கள். அவன் நரகத்தில் 88 ஆயிரம் வருஷங்கள் நரக வேதனை அனுபவித்தான். அதன் பின் பூனையாகப் பிறந்தான், அதன் பின் ஓநாயாகவும் அதன்பின் கோழியாகவும் பிறந்தான். அதற்குப்பின் ஒரு பணக்கார குடும்பத்தில்

மனிதப் பிறவி எடுத்தான். அவன் மிகவும் கெட்டிக் காரனாகவும் சிறந்த பேச்சாளனாகவும் தன் குலத் தொழிலை மறக்காமல் கடமையை செய்து வந்தான். போன ஜன்மத்தில் தன் மருமகனைக் கொன்ற பாவத்தால் இந்தப் பிறவியில் இவனுக்கு சந்ததி இல்லை. அவன் அடிக்கடி பல நோய்களால் கஷ்டப்பட்டான்.

இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு - முதலில் தன் சொத்தின் 6ல் ஒரு பாகத்தை புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். அதன் பின் காயத்ரி மந்திரம் மற்றும் த்யென சாந்தி என்ற மந்திரத்தையும் த்ரயம் பக மந்திரத்தையும் ஒவ்வொன்றையும் ஒரு லட்சம் முறை ஜபம் செய்ய வேண்டும். அதற்கு புரஸ்சரண சடங்கையும் முடிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து பலவகை இனிப்புகளுடன் 50 அந்தணர்களுக்கு விருந்து உண்பிக்க வேண்டும். இதன்பின் மாநிறங் கொண்ட பசுவும் தானம் செய்ய வேண்டும். பஞ்ச பாத்திரம் தானம் பண்ண வேண்டும். பிண்ட பிரதானமும் பண்ண வேண்டும். அதன் பின் தான் கொன்ற மருமகனைப் போல் 40 தோலா எடை தங்கத்தால் ஒரு உருவம் செய்து அதன் பின் அதை முறைப்படி பூசிக்க வேண்டும். பின் அந்த உருவையும் தானம் பண்ண வேண்டும். இதனால் இவன் பாவங்கள் விலகும். பிறகு இவனுக்கு தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறந்து இவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள்.

## கர்ம விபாகம் சொல்லும் அவிட்டம் இரண்டாம் பாதத்தில் பிறந்தவர்களின் கர்ம வினையும் சாந்தி முறைகளும்

சிவபெருமான் சொல்லுகிறார்!

மேற்கு பிரதேசத்தில் மஹா நந்தி என்ற ஊரில் தங்கள் தொழிலில் சிறந்த கீழ்வகுப்பைச் சேர்ந்த பெரும் பாலானோர் இருந்து வந்தனர். அவர்கள் நடுவில் அவர்களுடன் ஒரு பிராமணனும் இருந்து வந்தான். அவர்களுடன் உணவு உண்டு, தன் குலத் தொழிலை மறந்து, சூதாடல்

குடித்தல். களவாடல், ஏமாற்றிப் பிழைத்தல் போன்ற செயல்களால் வயிறு வளர்த்து வந்தான்.

இந்த பிராமணன் இந்த விதமாக ஆயிரக் கணக்கான தங்க நாணயங்கள் இரத்தினங்கள் யானைகள் போன்றவற்றை சேர்த்து வைத்தான். வெகு நாள் சென்று அவன் அந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் பாம்பு கடித்து இறந்தான். இவன் குல வழக்கம் விட்டு தீய தகாத தொழில்களைச் செய்து வந்தான் இவன் ரௌரவம் என்ற நரகத்தில் தள்ளப்பட்டான். அந்த நரகத்தில் 60000 வருஷங்கள் தண்டனை அனுபவித்தான். நரகத்திலிருந்து விடுப்பட்ட பின் முதலில் கழுதையாகவும் பின் ஆமையாகவும் பிறந்தான். அதன் பின் மனிதனாகப்பிறந்தான். போன ஜென்ம தீய ஒழுக்கத்தால் இவனுக்குச் சந்ததி உண்டாக வில்லை. இவன் போன ஜென்மத்தில் சந்தியா வந்தனம் முதலியன செய்யாமல், மீன், மாமிசம் முதலியவை உண்டு வந்ததால் இப்பொழுது இவனைப் பல நோய்கள் பற்றிக் கொண்டன. அதற்குப் பரிகாரம் வருமாறு.

முதலில் தன தான்யம் முதலியவை நிறைந்த அழகான வீடு ஒன்றை உத்தமபிராமணன் ஒருவனுக்குத்தானம் பண்ண வேண்டும். காயத்ரி மூலமந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜபம் செய்ய வேண்டும் அதற்குப் புரச்சரணம் செய்ய வேண்டும். ஞாயிற்றுக் கிழமையில் வரும் சப்தமி அன்று சூர்யவழிபாடு செய்ய வேண்டும். அதன் பின் "ஜாத வேதசே" என்ற மந்திரத்தை ஒரு லக்ஷம் முறை ஜபம் செய்ய வேண்டும். அதன் பின் வஸ்த்ரா பரணங்கள் பூட்டிய ஒரு கன்றுடன் கூடிய கபில நிறமுள்ள பசுவை உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். குதிரை, சாமரம், குடை முதலியனவும் தானம் பண்ண வேண்டும்.

இப்படிச் செய்வதால் இவன் பாவங்கள் நசிக்கின்றன. இவன் முழுவதும் உடல் நலம் பெறுகின்றான். இதன் பின் இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கும். இவனும் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்வான் என்பதாம்.

## அவிட்ட நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி முறைகளும்

சிவபெருமான் சொல்லுகிறார்

வேதங்களில் விதித்த கர்மங்களையும் தர்மங்ளையும் செய்த பலனை பரலோகத்தில் அனுபவிக்கிறார்கள். சௌராஷ்ட்ர தேசத்தில் ஒரு க்ஷத்திரியன் தன் கடமை தவறாமல் வேட்டையாடல் போன்ற காரியங்களைச் செய்து மக்களைக் காப்பாற்றியும் வந்தான். அப்படி இருக்கும் ஒரு நாள் அவன் வேட்டையாடச் சென்றான். காட்டில் உள்ள கர்பமாயிருந்த ஒரு மானைக் கொன்று விட்டான். அவன் தன் புத்திரியுடன் அவன் அதனுடைய மாமிசத்தை உண்டு தீர்த்தான். இவன் முதுமையடைந்தான். பின் இறந்தான். அவன் செய்த பாவத்திற்காக அவனை யம தூதர்கள் நரகத்தில் தள்ளினார்கள். அதன்பின் ஆண் எருமையாகவும் பன்றியாகவும் பிறந்தான்.

அதன் பின் புனித தேசத்தில் தன தான்யம் நிறைந்த ஒரு குடும்பத்தில் மனிதனாகப் பிறந்தான். இவன் கற்பமாக இருந்த மானைக்கொன்றதால் இப்பிறவியில் இவனுக்குச் சந்ததி இல்லை. பிறக்கும் குழந்தைகளும் இறந்தன. இவனுக்குப் பல நோய்கள் தொற்றிக் கொண்டன. இதற்குச் சாந்தி முறை வருமாறு.

முதலில் தன் சொத்தில் 8ல் ஒரு பாகத்தைப் புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். பிறகு "காயத்ரி" மந்திரம் ஒரு லட்சம் முறை ஜபம் பண்ண வேண்டும். அதற்கு முறைப்படி புரஸ் சரணமும் முடிக்க வேண்டும். அதன் பின் 20 தோலா தங்கத்தாலான கற்பவதி மான் உருவம் ஒன்று செய்து சிவஸ்வரூட்மான சிவனடியாரான பிராமணன் ஒருவனுக்குத் தானம் பண்ண வேண்டும். 10 நிறமுள்ள பசு ஒன்றையும் தானம் பண்ண வேண்டும். அதன் பின் படுக்கை தானம் பண்ண வேண்டும். நெடுஞ்சாலை ஓரங்களில் கிணறு குளங்களையும் வெட்டிட வேண்டும். அதன்பின் லட்டு முதலியவற்றுடன் பிராமணர்களுக்கு போஜனம் பண்ணுவிக்க வேண்டும்.

இதன் பின் இவன் பாபங்கள் தீரும் இவனைப் பற்றிய நோய்கள் குணமாகின்றன. இவன் மனைவிக்கு இப்பொழுது கற்பம் தங்கி தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறக்கும். அவன் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்வான்.

## அவிட்ட நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ பாவ பலனும் சாந்திமுறையும்

சிவபெருமான் ' சொல்லுகிறார்!

மதுரா (வடநாடு) நகருக்கு தெற்கே சித்திபுரம் என்ற ஊரில் வைணவனான ஒரு பணக்காரனும் ஞானியுமான ஒரு சாயத்தொழிலாளி இருந்து வந்தான். இவனுக்கு 3 ஆண் குழந்தைகள் உண்டு. கடைசீ பையன் மேல் இவனுக்கு அலாதியான பிரியம் உண்டு. இவன் நிறைய பணம் சம்பாதித்தான். அதைப் பங்கு போடும் போது இவன் பிள்ளைகளிடையே சண்டை ஏற்பட்டது. இவனுக்கு ஒரு பிராமண நண்பன் இருந்தான். இவர்கள் பூசலைக் கேட்டு அவன் இவர்களிடம் வந்தான். ஆனால் இவர்கள் பூசலைத் தீர்த்து வைத்த அவனை அவர்கள் கொன்று விட்டார்கள் அந்த சாயத்தொழிலாளி சொத்து முழுவதையும் கடைசி பையனுக்கு கொடுத்து விட்டான்.

வெகு காலம் சென்று சாயத்தொழிலாளி இறந்தான். இவன் ஓரவஞ்சனை பாவத்திற்காகவும் பிராமணன் இறந்ததற்கு காரணமான பாவத்திற்காகவும் இவனை எமதூதர்கள் நகரத்தில் தள்ளினார்கள். ஒரு லட்சம் வருடம் இவன் நரக தண்டனை அனுபவித்தான். அதன் பின் புலியாகப் பிறந்தான். அதன் பின் காக்கையாகப் பிறந்தான். அதன்பின் கழுதையாகவும் பிறந்தான். இதன்பின் ஒரு பணக்கார குடும்பத்தில் மனிதனாகப் பிறந்தான். ஆனால் இவன் செய்த பாவத்தால் இவன் சந்ததியற்றவனானான் ஆனால் இவனை நிறைய வியாதிகள் பற்றிக் கொண்டன.

*இதற்கு சாந்தி முறை வருமாறு*

முதலில் தன் வீட்டின் சொத்தின் ஆறில் ஒரு பாகத்தைப் புண்ய காரியங்களில் செலவழிக்க வேண்டும். பாபம் தொலைய ஒரு பத்து வண்ணம் கொண்ட பசுவைத் தானம் பண்ண வேண்டும்.

காயத்திரி மந்திரத்தையும் சூரிய மந்திரத்தையும் ஒரு லட்சம் முறை ஜபம் செய்ய வேண்டும். அவற்றிற்கு புரஸ்சரணத்தையும் முடிக்க வேண்டும். அதன் பின் வேதமறிந்த 100 பிராமணர்களுக்கு சுவையான போஜனம் பண்ணி வைக்க வேண்டும். அதன் பின் குடத்திலும், தேங்காய் குடுக்கையிலும் நிறைய ரத்தினங்களையும் நிறைத்து சத்திய விரதம் அனுஷ்டிக்கும் பிராரணனுக்குத் தானம் பண்ண வேண்டும். இப்படி செய்வதால் இவன் நோய்கள் தீர்ந்து தீர்க்காயுள் உள்ள குழந்தைகள் பிறந்து இவன் குடும்பத்துடன் சந்தோஷமுடன் வாழ்வான்.

*பிறர் மதப்படி அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்*

*பொதுப்பலன் ஆண்கள்*

*உருவ அமைப்பு*

நெட்டையான உருவத்துடன் ஒல்லியான உடலுடையவன். சிலர் தேகம் கட்டுமஸ்தாக இருக்கலாம்.

*குணங்கள்*

எடுத்துக் கொள்ளும் வேலைகளை சிறந்த முறையில் செய்து முடிக்கும் திறமைசாலி. கூர்மையான மதிபடைத்தவன் எல்லாவற்றிலும் சிறந்த அறிவு உள்ளவன். தன் மனம், வாக்கு. செய்கையால் எவருக்கும் தீங்கிழைக்காதவன், பக்தி சிரத்தையாக மதாச்சாரங்களைக் கடைப்பிடிப் பான். எப்பொழுதும் தன் சுயமுயற்சியாலும், திறமை. சக்தியினால் வாழ்வதையே விரும்புவான். பிறர் சொல்வது அல்லது செய்வது

இவனுக்கு உடன்பாடு இல்லாவிட்டால் அதை கடைசீ வரை சொல்ல மாட்டான். அவிட்ட நட்சத்திரக்காரர்கள் பிறரை பழிவாங்க வேண்டு மானால், சந்தர்ப்பம் கிடைக்கும்வரை பொறுமையுடன் காத்திருந்து, கணக்கைத் தீர்த்துக் கொள்வார்கள்.

### *கல்வி தொழில்*

பெரும்பாலான சயின்டிஸ்ட்கள், சரித்திர ஆராய்ச்சியாளர்கள் அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறார்கள். இவர்கள் எந்த ரகசியத்தையும் காப்பாற்றும் குணம் கொண்டவர்கள். ஆதலால் "சீக்ரட் சர்வீஸ்" பெரிய ஆபிசர்களின் "பிரைவேட் செக்ரட்டரி" போன்ற தொழில்களுக்கு பொருத்த மானவர்களாக இருப்பார்கள். இவனுடைய கல்வித் தகுதி எப்படி இருந்தாலும் இவர்களது "அறிவுத்திறன்" அசாதாரணமானது. விவாதங்களில் கூட மற்றவர்களை விட முன்னணியில் இருப்பான். லாயர் வேலைக்கு மிகமிகப் பொருத்தமானவன். சாதாரணமாக 24 வயதுக்குப் பிறகு சம்பாதிக்கும் வகையில் முன்னேற்றம் ஏற்படத்துவங்கும். இவன் செய்யும் உத்தியோகம் அல்லது வியாபாரத்தில் பலரை நம்பி செயல்பட வேண்டியிருப்பதால் மற்றவரை நம்பும் முன் மிகமிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

### *குடும்ப வாழ்க்கை*

குடும்ப நிர்வாகத்தில் சமர்த்தன். இவனுடைய உறவினர்கள் இவனுக்கு பல சங்கடங்ளையும், தொந்தரவுகளையும் உருவாக்குவார்கள். தன்னுடைய சகோதர சகோதரிகளிடம் மிகுந்த வாஞ்சையுடன் இருப்பான். கிரகங்களின் இருப்பிடம் நல்லவிதமாக ஜாதகத்தில் அமைந்திருந்தால் பூர்வீக சொத்துக்கள் நிறைய உள்ளவன். தன் மனைவியின் உடன் பிறப்புகள் பெற்றோர்களிடமிருந்து அதிக நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்த குறை மனைவியின் நல்ல குணங்களால் நீங்கி விடும். ஸ்ரீ மகாலக்ஷிமியின் அவதாரம் போல் இவன் மனைவியினால்

இவனுக்கு அதிர்ஷ்டக் காற்று வீசி பொருளாதாரத்துறை சிறக்கும்

அவிட்ட நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் சூரியனும் புதனும் சேர்ந்து இருந்தால் அவர்கள் திருமணம் ஆகாமலேயே இருந்து விடுகிறார்கள். அதே போல செவ்வாயும் சுக்கிரனும் தங்களுடைய எதிரிகளின் நட்சத்திரத்தில் இருந்தால் அந்த ஜாதகனின் மனைவி இறந்து விடுவாள். இந்த பலன்கள் பல ஜாதகங்களை ஆராய்ந்ததில் தெரிய வருகிறது.

### *ஆரோக்கியம்*

உடல் ஆரோக்கியம் அவ்வளவாக சுகமாக இராது. அப்போது கூட தன் ஆரோக்கியத்தை இவன் சரிவர பேணிக்காக்க மாட்டான். தன் உடல் நிலை மிகவும் சீர்கெட்டு, வியாதி உச்சநிலையை அடைந்த பிறகு தான் வைத்தியனைத் தேடிப் போவான். கடுமையான நோயாலும் அது பூரண குணமாகும் முன் சிறிய முன்னேற்றம் தெரிந்தாலும் வேலை செய்யக் கிளம்பி விடுவான். கக்குவான் இருமல், அனீமியா என்பவை இவனை எளிதாகத் தொற்றிக் கொள்ளும். எனினும் இவனுக்கு நீண்ட நாள் இருக்கும் நோய்கள் எதுவும் வராது.

## *அவிட்டம் - பொதுப்பலன் - பெண்கள்*

### *உடல் தோற்றம்*

மிகவும் அழகாக இருப்பாள். வயதானாலும் கூட இளவயது தோற்றத்துடன் இருப்பாள். தடித்த உதடுகள் உள்ளவள். இவள் தோற்றம் பிறருக்கு இவளைத்தேடி வர அழைப்பு விடுப்பது போல் இருக்கும். சில பெண்களுக்கு பற்கள் உதட்டுக்கு வெளியே துருத்திக் கொண்டு முக அழகைக் கெடுக்கும்.

### குணங்கள்

வாழ்க்கையில் அனேக அபிலாஷைகள் உடையவள். ஊதாரித்தனமாக செலவழிப்பவள். தன்மையான, தாராள மனப்பான்மை கொண்டவள். பலவீனமானவர்களிடம் இரக்கம் கொள்பவள். திருவோண நட்சத்திரக் காரர்களைப் போல பிறரை தன் சொற்படி நடந்து கொள்ள கட்டாயப் படுத்தும் மனப்போக்கு உள்ளவள். குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் நிலவ வேண்டுமானால், இவள் இந்த கெட்ட குணத்தை கட்டுப்படுத்திக் கொள்ள அல்லது விட்டொழிக்க வேண்டும்.

### கல்வி - தொழில்

கல்வித் துறையில் பலவிதமான திறமைகள் பெற்றவள். சிலர் இலக்கியத்தில் நாட்டம் உள்ளவர்கள். சிலருக்கு விஞ்ஞானத்தில் ஆர்வம் இருக்கும். சிலருக்கு கணிதத்தில். இவ்வாறு ஒவ்வொருவருக்கு, ஒவ்வொரு பாடங்களில் ஈடுபாடு இருக்கும். ஆகவே சாதாரணமாக டீச்சர், லெக்சரர் அல்லது ஆராய்ச்சியாளாராக இருப்பார்கள்.

### குடும்ப வாழ்க்கை

குடும்ப நிர்வாகத்தில் தலை சிறந்தவள்.

### ஆரோக்கியம்

இவள் நல்ல ஆரோக்கியத்தைப் பெற்றவள் அல்ல. ரத்த சோகை, கருப்பைக் கோளாறுகள், இரத்தம் கெடுதல் பேயன்றவை இவளை எளிதில் பீடிக்கக் கூடியநோய்கள்.

இந்த நட்சத்திரத்தில் ஒரு பெண் புஷ்பவதி ஆனால், செல்வம் பல வழிகளில் வந்து குவியும் என்று நம்பப் படுகிறது.

***அவிட்ட நட்சத்திரத்தில் உள்ள கிரகங்களை இதர கிரகங்கள் பார்த்த பலன்களுக்குத் திருவோண நட்சத்திரத்திற்கு இந்த பகுதியில் சொல்லப் பட்ட பலன்கள் பொருந்தும்***

## அவிட்ட நட்சத்திர பாதங்களில் இருக்கும் கிரகங்கள் கொடுக்கும் பலன்

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

எப்போதும் தன்னைப் பற்றி, தான் அடைந்த வெற்றிகளைப் பற்றியும், தன் திறமைகளைப் பற்றியும் பெருமை அடித்துக் கொண்டிருப்பான். சுயநலம் மிக்கவன். நல்ல சிவப்பான நிறத்துடன் குட்டையாக இருப்பான். விவாகரத்து செய்த பெண்களிடமும், விதவை பெண்களிடமும் ஆசையும், அன்பும் உறவும் கொள்பவன்.

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

சனியும், செவ்வாயும் ஆயில்யம் 2ம் பாதத்தில் இருந்து: சந்திரன் அவிட்டம் 1ம் பாதத்தில் இருந்தால் பெண் ஜாதகியானால் அனேக கருச்சிதைவுகள், கருகலைப்புக்களும் ஏற்படும். ஆண் ஜாதகன் ஆனால் பிரசவித்தபின் மனைவி இறந்து விடுவாள். அல்லது இவனுக்குக் குழந்தைகளே பிறக்காது.

ஜாதகனுக்கு 5 வயதாகும் போது இவன் உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்படும். 10 வது வயதில் ஏதாவது ஆக்ஸிடண்டுக்கு ஆளாவான். 12வது வயதில் ஆயுதங்களால் காயங்கள் ஏற்படும்.

### அவிடடம் 1ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

செவ்வாய் இங்கு இருப்பதற்கு மிகவும் சிறந்த இடம். செல்வச் செழிப்பும், புகழும், சந்தோஷமும் உள்ளவனாக இருப்பான். அரச போகத்தை ஆனந்தமாக அனுபவிக்கும் அதிர்ஷ்டசாலி.

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

பெரும்பாலும் ஒரு ஆபிசருக்குக் கீழே உத்தியோகம் பார்ப்பான். சங்கீதத்திலும், கலையிலும் ஆர்வமுள்ளவன். எப்போதும் கடனில் உழலுவான் வயிற்றுப் புண்களாலும், ருமாடிசத்தாலும், ரத்தம் கெட்டுப் போவதால் ஏற்படும் வியாதிகளாலும் கஷ்டப்படுவான்,

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

இந்த குருவுக்கு சந்திரனின் பார்வை இல்லாமல் இருந்தால். கையில் பைசா இல்லாத ஏழை. ஒரு வேலைக்காரனாக தொழில் புரிவான். துயர மான வாழ்க்கை அமையும்

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

சுக்கிரன் இங்கு இருக்கும் போது, ஹஸ்தத்தில் அமைந்த லக்கினத்தை குரு பார்த்திருந்தால் ஜாதகனின் மனைவி திருமணம் முடிந்த உடனே மரணம் அடைவாள். சுக்கிரன் மட்டும் இருந்தால் மனைவியை கொல்ல மாட்டான். ஆனால் மனைவி நிரந்தர நோயாளியாக இருப்பாள். அந்த நிலையிலும் இவனுக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கும்.

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இந்த சனியுடன் புதன் சேர்ந்து இருந்தால் ஜாதகனை கோடீஸ்வரனாக்கும். எல்லா வகையிலும் சுபிக்ஷத்தை அடைவான்.

இந்த சனியுடன் ஆயில்யம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் அமைந்தால் ஜாதகன் டிபன்ஸ் டிபார்ட் மெண்டில் தலைமைப் பதவியை அடைவான். பற்கள் முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும். சலனமான மனதை உடையவன். தாயிடம் பக்தி உள்ளவன். அப்படி "டிபன்ஸில்" இல்லாத பக்ஷத்தில், ஏதாவது நகரம் அல்லது ராஜதானி நிர்வாகத்துறையில் இருப்பான். 70 வயது வரை ஆயுள் உடையவன்.

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இந்த ராகு ஒருவனுக்கு உயர்ந்த பட்ச கல்வியையும், அதிக பட்ச செல்வத்தையும் அளிப்பான். இருந்தாலும் இவன் தந்திரமும் குரூர குணமும் கொண்டவன். குடும்பத்தினர் இவனை வெறுத்து ஒதுக்குவார்கள்.

### அவிட்டம் 1ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

மத ஆச்சார அனுஷ்டானங்களில் தீவிர சிரத்தை உடையவன். தன் உடன் பிறந்தவர்களுடன் சுமுகமான உறவு வைத்துக் கொள்ள மாட்டான். சொத்து சம்பந்தமாக குடும்பத்தில் தகராறுகள் ஏற்படும். சுபர்கள் சம்பந்தம் இருந்தால் ஜாதகன் அந்த தகறாறுகளில் வெற்றி பெற்று ஆதாயமடைவான்.

### அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

இந்த சூரியனுடன், சந்திரன். செவ்வாய், சனி மூவரும் சேர்ந்தால் இந்த குழந்தையை 5 வயதிற்குள் கொன்று விடுவார்கள். நல்ல பர்ஸனாலிடியுடன் இருக்கும். இவன் கீழ்த்தரமான குணங்களைக் கொண்டவன். கஞ்சக் கருமி. இவனுக்கு அதிக நண்பர்கள் இருக்க மாட்டார்கள்.

### அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

மிகுந்த செல்வத்தை உடையவன். எதையும் எளிதில் நம்பி விடுவான். தொடையிலும், கழுத்திலும் சதை கட்டியாக இருக்கும். ஆனந்தமாக இருப்பான். 20 வது வயதில் மஞ்சட் காமாலையும், ஜுரமும் இவனை பீடிக்கும். 25வது வயதில், உடலின் பாகங்களில் கடுமையான பாதிப்பு ஏதாவது ஏற்படும்.

### அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

இந்த செவ்வாயின் பார்வையை சூரியன், சந்திரன், குரு மூவரும் பெற்றால் ஜாதகன் இந்த உலகத்தையே ஆள்வான்.

செவ்வாய் இங்கு இருக்கும் போது சந்திரன் ஆயில்யம் 4ம் பாதத்தில் இருந்தால் ஜாதகன் தன் எதிரிகளை வெற்றி கொள்வான். தலைவனாக இருப்பான். மந்திர சாஸ்திரங்களிலும் அறிஞன். ஆயுதங்களை உபயோகிக்கும் கலையை நன்கறிந்தவன். ஒரு மாகாணத்தை ஆளுவான்.

அல்லது நிர்வகிப்பான் தன்னுடைய 70 வது வயதில் நெருப்பினாலோ அல்லது ஆயுதங்களாலோ மரணமடைவான்.

### *அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

எந்த கிரகத்தின் பார்வையும் பெறாமல் புதன் மட்டும் இங்கு தனித்திருந்தால் ஜாதகன் டவுன் அல்லது நகரத்தை ஆள்பவனாக ஆக்குவான். இவனால் சந்தோஷமான குடும்ப வாழ்க்கையை அனுபவிக்க முடியாது. இதற்குக் காரணம் இவனது குடிப்பழக்கமும், கீழ்த்தரமான பெண்களிடம் சிற்றின்பம் அனுபவிப்பதும்தான். 44 வது வயதில் கடுமையான ஆரோக்கியக் குறைவு ஏற்படும். ஹார்ட் அட்டாக் ஏற்படவும் வாய்ப்புண்டு.

### *அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

இந்த குரு ஜாதகனுக்கு, ஆசிரியர், டைப்பிஸ்ட், கிளார்க்கு போன்ற வேலைகளைத் தருவான். இந்த குருவுடன் புதனும் சேர்ந்து சுக்கிரனின் பார்வையை பெற்றால் ஜாதகன் சாஸ்திரங்களிலும், ஜோதிடக் கலையிலும் நிபுணன். இவன் தன் சாதி சனங்களின் சார்பாக பலவேறு கலாச்சார மத சார்புடைய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்பான். வெளிநாடுகளுக்கு பிரயாணம் செய்யும் வாய்ப்பும் ஏற்படும்.

### *அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

இந்த சுக்கிரனுடன் குருவும் சேர்ந்து இருந்தால் ஜாதகன் தொழிலில் மட்டுமல்லாது, சமுகத்திலும் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தும். ஆச்சார அனுஷ்டானங்களில் தீவிரமாக ஈடுபட்டு அவற்றின் மூலம் பெரும் பணத்தை சம்பாதிப்பான். இவ்வளவு நல்ல பலன்களை பெற்றாலும். குடும்ப வாழ்க்கையில் இன்பம் காண்பது குதிரைக் கொம்புதான்.

### *அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

பிறர் அஞ்சும்படியான உருவத் தோற்றம் கொண்டவனாயிருப்பான். பயங்கரமாக கோபம் வரும். ஆனால் அடக்கிக் கொள்வான், இதில் ஒரு

முக்கியமான விஷயம் என்ன வென்றால், இவனைக்கண்டு பிறர் பயப்படும்படியான தோற்றம் கொண்டவனாக இருந்தாலும் ஒரு முறை இவனுடன் பேசி பழகிவிட்டால், இவனைப் போல் கண்ணியமும், அன்பும். சந்தோமும் கொண்டவன் யாரும் இருக்க மாட்டார்கள். அதன் பிறகு இவனைக் கண்டு பயப்படுவதை விட்டு விடுவார்கள். இவன் மேல் தானாகவே பிரியமும் மரியாதையும் ஏற்பட்டுவிடும்.

### அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இந்த ராகுவும் ஜாதகனுக்கு உயர்ந்த படிப்பையும், நிறைய செல்வத்தையும் அளிப்பான். இந்த ராகுவை சனி பார்த்திருந்தால் சரும நோய்கள் உண்டாகும். சிலருக்கு "லெப்ரஸி" யும் ஏற்படலாம்.

### அவிட்டம் 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

இவன் உடலில் ஆபரேஷன் செய்யும் சந்தர்ப்பம் உண்டாகும். அடிக்கடி விபத்துக்களும் ஏற்படும். ஆதலால் இவர்கள் வண்டி வாகனங்களை ஓட்டக் கூடாது.

### அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

மிகுந்த நுண்ணறிவு கொண்டவன். அழகிய உடலை உடையவன். பற்கள் சிறிதாகவும் வரிசையாகவும் விளங்கும். முதிர்ந்த, வளர்ச்சியடைந்த முகம் தனிக்களையுடன் விளங்கும். 76 வயது வரை ஆயுள் உள்ளவன். அந்த சூரியனுக்கு சுப பார்வை ஏற்பட்டால் ஜாதகனை அடிக்கடி நோய் பீடிக்கும். ஆனால் இளம் வயதில் மரணத்தை ஏற்படுத்தாது.

### அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

ஜாதகன் மிக்க தைரியசாலி. அன்புள்ளம் கொண்டவன். உண்மையானவன். சாப்பாட்டு ராமனாக இருப்பான். இந்த பழக்கத்தினால் வயிற்றில் கோளாறு ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் நீண்ட நாள் சிகிச்சை பெறுவான்.

இது இவனது 22 வயதில் ஏற்படும். ஆதலால் இவர்கள் உணவு விஷயத்தில் கட்டுப்பாடுடன் இருப்பது நலம். கண்ட இடத்தில் கண்டதை வாங்கி சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்.

### *அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

இவன் தந்திரசாலியாகவும், கெட்டிக்காரனாகவும் இருப்பான். நிலம் மற்றும் ஸ்திர சொத்துக்களை சம்பாதிப்பான். இந்த இடத்து செவ்வாய் மெக்கானிக்கல் அல்லது கெமிக்கல் என்ஜினீயரிங்கில் தொழிலைத் தருவான். இவனுடன் சந்திரனும் புதனும் சேர்ந்தால் டாக்டர் தொழிலைத் தருவான் இந்த செவ்வாயைப் பார்த்த குரு ஆசிரியர் தொழிலைத் தருவான்.

### *அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இங்குள்ள புதன் அவிட்டம் 2ம் பாதத்தில் கொடுத்த பலனையே இங்கும் தருவான். இருந்த போதிலும் ஜாதகன் பெரிய பணக்காரன் ஆக முடியாது. மேலும் 35 வது வயதில் பைத்தியம் பிடிக்கும் ஆபத்து உண்டு.

### *அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

இந்த குருவை சந்திரன் அல்லது சூரியன் பார்த்தால் ஜாதகன் பிறந்த இடத்திலிருந்து வெகு தூரத்தில் வசிப்பான். நடக்கும் தசைகள் அனுகூலமானதாக இல்லாவிட்டால், வெளியூர்களில் 24 வயது வரை அலைந்து திரிந்து துன்பத்தை அனுபவிப்பான். அதன் பிறகு ஏதாவது டெக்னிக்கல் தொழில் பெற்று நிலமை சீரடையும்

இந்த இடம் லக்கினமுமாக அமைந்து சனியாலும் சந்திரனாலும் பார்க்கப் பட்டால் ஜாதகனின் தாய்க்கு ஆபத்தை விளைவிக்கும். தனித்த சுக்கிரன் மட்டும் சுமாரான செல்வத்தையும் சந்தோஷத்தையும் அளிப்பான். அவன் திருமணம் 26 வது வயதில் நடைபெறும்.

### அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

பெரிய முகமும், தலையும், உயர்ந்த உடலும் கொண்ட இவன் நல்ல நிறத்துடன் காணப்படுவான். எளிமையும். பெருந்தன்மையும் கொண்ட அழகிய உருவத் தோற்றம் உடையவன். கலை அல்லது விஞ்ஞானத்தில் இவன் கல்வி அமையலாம். மதுவுக்குவும், மாதுவுக்கும் அடிமையானவன். பேச்சில் கடுமையும் வேகமும் தொனிக்கும் நெருப்பைப் போன்ற குணமுடையவன்.

### அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இந்த ராகு ஜாதகனை பிடிவாதக்காரனகாவும் கொடூரமானவனாகவும், மற்றவர்களுக்குத் துன்பத்தைத் தருபவனாகவும், ஆக்குவான். இந்த ராகுவை சூரியன் அல்லது புதன் பார்த்தால் ஜாதகனை எதிர்பாராத அளவுக்கு உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வான். பின் திடீரென எதிர்பாராத கீழ்நிலைக்கு தள்ளி விடுவான். 24, 31, 47 வது வயதுகள் இவனுக்குத் தாழ்வைத் தரும் காலகட்டமாகும்.

### அவிட்டம் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

இவன் வீட்டில் திருட்டுப் போகும் அபாயம் உண்டு. பெண்களுக்கு அடிக்கடி "அபார்ஷன்" ஆகும். மேலும் "மாதவிடாய்" கோளாறுகளும் ஏற்படும்.

### அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

அனுபவிக்கும் சந்தோஷத்திற்கு குறை ஏற்படும். அழகிய நிறமும், கருணை பொங்கும் பார்வையும், உடல் ஆரோக்கியமும். சந்தோஷமும் கொண்டவன். சங்கீதத்திலும், பொழுது போக்குகளிலும் ஆசை உள்ளவன். ஆரம்ப காலத்தில், அதாவது 35 வயது வரை தன் குடும்பத்தை சரிவர கவனிக்க மாட்டான். அதன் பிறகு தான் செய்த தவறை உணர்ந்து குடும்பத்தைக் கவனித்து சந்தோஷமுள்ள குடும்பமாக மாற்றுவான்.

இருந்த போதிலும் தந்தையும் இவனும் ஒருவரை ஒருவர் விரோதியாக பாவிப்பார்கள்.

*அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்*

2 மனைவிகள் ஏற்படுவர். 2 குழந்தைகளே உண்டு. பிற பெண்களுடன் "செக்ஸ்" ஆட்டம் ஆடுவான். இடது கையில் பிறப்பு அடையாளக் குறி ஏதாவது இருக்கம். 5வது வயதில் நெருப்பினால் புண் ஏற்பட வாய்ப்புண்டு. 12வது வயதில் விஷத்தினால் கண்டம் ஏற்படலாம். 28 வது வயதில் திருடர்களால் தாக்கப்பட்டு காயம் ஏற்படும்.

அவிட்டம் எந்த பாதத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும் 90 வது வயதில் "பாத்ரபத" மாத்தில் கிருஷ்ணபக்ஷ சதர்த்தியில் வெள்ளிக்கிழமை, ப்ரணி நக்ஷத்திரம் கூடிய நாளில் மரணத்தை அடைவார்கள்.

*அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

இவனை சனி பார்த்தால் ஜாதகன் "காக்கை வலிப்பு" நோயாலும், டி.பி.யாலும், கஷ்டப்படுவான். சிலர் காக்கை வலிப்பு வந்து பின்னர் அது பைத்தியமாக மாறுவதையும் பார்க்கலாம். பொதுவாக இவர்கள் இரும்பு தயாரிக்கும் பாக்டரியில் வேலையில் அமருவார்கள்.

*அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இந்த புதனுடன் சுக்கிரன் சேர்க்கை ஏற்பட்டால் இவனுடைய திருமணம் போட்டியின் அடிப்படையில் நடைபெறும். பெண்ணைப் பெற்றவர்கள் போட்டிப் போட்டுக் கொண்டு பெண்ணை கொடுக்க முன் வருவார்கள். எல்லாவற்றையும் சமாளிக்கக் கூடிய திறமை பெற்றவனாக இருப்பான். ஆனால் கல்யாணமாகி 7 வருடங்களுக்குப் பிறகு மனைவி "டைவர்ஸ்" வாங்கிக் கொள்வாள். அல்லது இவனைப் பிரிந்து வெகு காலத்துக்கு தனியாக சென்று விடுவாள். இந்த பிரச்சினையை இவனால் சமாளிக்க முடியாது.

### அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

வாழ்க்கையின் இன்பங்களை நன்கு அனுபவிப்பான். நல்ல உடல் ஆரோக்யம் உள்ளவன். இவனை புதன் பார்த்தால் அரசாங்கத்தில் நல்ல ஸ்தானத்தை உடைய உத்தியோகத்தில் அமருவான். அது நிர்வாகம் சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

### அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

இவன் கல்யாணம் ஆன பெண்களின் பின்னால் சுற்றுவான். ஒருபக்கம் இவன் அன்புள்ளவனாகவும் தாராளத்துடனும் நடந்து கொள்வான். ஆனால் இதற்குப் பின்னால் காரியார்த்தமான உள்நோக்கம் இருக்கும். அப்படி நடந்து கொள்வதனால் ஏற்படும் ஆதாயத்தை மனம் கணக்கு போட்டுக் கொண்டே இருக்கும்.

### அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

பொதுவாக வாழ்க்கையில் நல்ல நிலையில் இருப்பான். இவனை குரு பார்த்தால் ஒரு கிராமத்தின் அல்லது நகரத்தின் அல்லது அரசாங்க ''டிபார்ட் மெண்டின்'' தலைமைப் பதவியில் இருப்பான். மனைவியின் பக்கத்திலிருந்து நிலபுலன்களைப் பெறுவான். இவன் மனைவியும் உத்தியோகம் பார்ப்பவளாயிருப்பாள்.

### அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

ராகு சந்திரனுடன் சேர்க்கை கொண்டு, லக்னம் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்தால், ஜாதகன் 7 வயதாகும் போது அவன் தாய்க்கு கண்டம் ஏற்படும். ஜாதகியாக இருந்தால் ஒரு சகோதரியும், ஆணாக இருந்தால் ஒரு சகோதரமும் ஏற்படும்.

### அவிட்டம் 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

கேதுவுக்கு இந்த இடம் கொஞ்சம் பரவாயில்லை. ஜாதகன் அரசாங்க

உத்தியோகத்தில் இருப்பான். இவனுடைய சந்தானங்களில் ஒருவன் பணக்காரனாகவும் புகழ் பெற்றும் விளங்குவான்.



# அத்தியாயம் - 34

## கும்ப லக்னம்

### கும்ப லக்னத்தில் பிறந்தவர்கள் மற்றும் கும்ப ராசிக் காரர்களின் தன்மைகள்

220 *சீர்மையும் உடையனாவன் சிறந்ததோர் கல்விகற்பான்*
*நீர்மையும் உடைய னாவன் நெறிஅறிந் துறைக்க வல்லான்*
*வார் அணி தோகை மாதர் மனம்கொளும் மனத்த னாகும்*
*கூர்மையும் உடைய னாவன் குலாவிய கும்பத்தானே*
(சுவடி எண் *1500*)

(இதன் பொருள்)

*சீலன்* கல்விமான், குணசாலி, முறை அறிந்து பேச வல்லான் பெண்கள் மனம் கவரும் அழகன், கூர்மையுள்ள புத்தியுள்ளவன் இவைகளே கும்ப ராசியில் அல்லது லக்னத்தில் பிறந்தவன் தன்மைகளாகும். நன்கு, கல்வி கற்பான்,

இது பதினொன்றாவது ஸ்திர ராசி; ஆண்ராசி; பஞ்ச பூதத்தில் காற்று ராசி; ஆண் ராசி; வணங்கா முடி தனிப்பட்டவனை அன்றி சில சமயங்களில் முழுச் சமூகத்தையும் குறிக்கும் உலக நாட்டம் கொண்டவன் சிரசால் உதயமாகும் ராசி. எனவே எதையும் முறையாகவே செய்வார்கள்.

பெருந்தலை, மேட்டு நெற்றி, சதுரமுகம், ஒட்டிய கன்னம், குழிந்த கண் மெலிந்த உயந்த உருவம். வெகுளியான சிறந்த சுபாவம், பரஸ்த்ரீகளிடம் இச்சையும் மோகமும் உள்ளவன். பிறர் பொருளின் மேல் ஆசையுண்டு உயர்வு தாழ்வு மாறி மாறி வரும். இவ்வளவு இருந்தும் துறவு மனப் பான்மை ஆன்மீக நாட்டம் அதிகம் உண்டு.

சமூக சேவை, அரசியல் ஈடுபாடு, துறந்து மடம். மதத்தலைமை ஆனால் விஞ்ஞானி, நீதி மருத்துவம் பொறியியல் போன்ற துறைகளில் தொழில் அமையலாம்,

*பெண்கள்*

இதில் பிறந்த பெண்கள் அவ்வளவு அழகிள் அல்லர். இருந்தாலும் பார்க்கும் அளவுக்கு கவர்ச்சியுண்டு. நெட்டையான சதைப்பற்றற்ற உருவம். தாமே விரும்பி காதலிக்கும் நாட்டம் இருக்காது. சேர்க்கையில் தனக்கென நாட்டம் இராத ஆனால் கணவனுக்குக் குறை வைக்க மாட்டார்கள். பற்றற்ற நிலை அதிகமானதால் நகைநட்டு புடவை முதலிய வற்றில் அதிகம் நாட்டம் இராது.

*சத்தியா சார்யர் மதப்படி*

கல்வி குலத்தில் உயர்ந்தவன். பித்த வாயு சரீர வாகு உள்ளவன். கிடைத்த திரவியத்தை (பணத்தை) செலவு செய்வான். அதிகம் வேலைக் காரர்கள் உள்ளவன். எந்த காரியத்தையும். அதிகம் செலவு செய்தே முடிப்பவன். பெரியோர்கள் உற்றார் உறவினர்களிடம் விரோத பாவத்தில் பற்றுள்ளவன். அழகிய சரீர முள்ளவன். பல வழிகளில் லாபம் உள்ளவன். கபடமாக நின்று ரவர்த்திப்பவன். தேவ பூஜை செய்பவன். எப்பொழுதும் கலகம் செய்யும்பாரியை உடையவன். கபரோக வியாதியுடையவன். இருதய நோயும் உள்ளவன். வயிற்று வலி, வாந்தி, ஸ்திரீகளால் மருந்தீடு முதலிய ரோகங்கள் ஏற்படலாம். அதனால் மரணமும் ஏற்படும்.

*பிருகு சம்மிதைப்படி கும்பலக்னத் தன்மைகள்*

இதில் பிறந்தவன் நெடிது உயர்ந்தவன். கழுத்தும் பெருத்தவன். சஞ்சல சுபாவமுள்ளவன். வாத தேகி தேஜஸ் உள்ளவன். அதிகம் தண்ணீர் குடிப்பவன். அதிகம் பேசுபவன். டம்பம், அஹங்காரம், பொறாமை இவை உள்ளவன். ஸ்திர புத்தியுடையவன். உடன் பிறப்புடன் பகையுள்ளவன். பெரிய சிறந்த மனிதர்களுடன் சிநேகிதம் உள்ளவன். எல்லோராலும்

விரும்பப்படுவான். பரஸ்த்ரீ மோஹம் உண்டு. ஆனால் தானே ஈடுபாடு கொள்வதில்லை.

இந்த ஜாதகன் ஆரம்ப தசையில் துக்கப்படுபவன் மத்திம வயதில் சுகப்படுபவன். கடைசீ காலத்தில் தனம், பூமி, வீடு, புத்திரர்களால் சுகம் இவற்றுடன் சந்தோஷமாக இருப்பவன்.

பிறரை வலுவில் பேசி நட்பு செய்வதில் வல்லவன். மனத்தால் எப்பொழுதும் பயனுள்ளவற்றையே நினைத்து செயல்படுத்தி முடிப்பவன். திண்மையானவன். இயல்பாகவே முன்முயற்சி இன்றி செய்து முடிப்பவன் இந்த ராசிக்கு மனோ சக்தி உண்டு. இது நீர் தத்துவம். உடன் எதையும் எடை போட்டு பார்க்கும் தன்மை உண்டு. இது காற்று தத்துவம். இவர்கள் இரண்டும் கலந்த முழு மனிதர். இது சமூகத்தினடையே அவர்களுக்காக பற்றற்று சேவை செய்யும் தன்மையுள்ள மனிதனைக் குறிக்கும்.

*பிற நூல்கள்*

கும்ப லக்னத்தில் பிறந்தவர்கள் நேர்மையும் ஒழுக்கமும் உள்ளவன். உயர் கல்வி, நற்குணம் தீர்க்க ஆலோசனை, அறிவுத் திறம், வாக்கு வன்மை இவை உள்ளவன். இவன் சிற்றின்ப இச்சையும் உள்ளவன். ஸ்திர புத்தியுள்ளவன். அழகிய உருவத் தோற்றம் உள்ளவர். புத்திர மித்திரர் மேல் பற்றுவைப்பவர். சஞ்சலர் ஏமாற்று வித்தைகாரர். எல்லாரையும் பற்றுவைப்பவர். சஞ்சலர் ஏமாற்று வித்தைகாரர். எல்லோரையும் பகைத்துக் கொள்வதால் இவர்களுக்கு வேண்டாதவர்களே அதிகம்.

கறுப்பு நிறமுடைய உயர்ந்த உடல் வாகு, முட்டை போன்ற நீள்வட்ட முகம். ஒட்டிய கன்னம் அழகிய தோள்கள் பெருத்த வயிறு இவை எல்லாம் கலந்த அழகில்லாத தோற்றமே இவர்களுடையது. பெரும் பாலும் இவர்களுக்கு நோய் எதுவும் வராது.

இவர் கலை இலக்கியம் நாட்டியப் பயிற்சி, சிற்பக்கலை முதலியவற்றில் தேர்ந்தவர். மனித இனத்திற்குச் சேவை செய்யும் மனப்பான்மை உடையவர். வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு நியாயம் வழங்குவதில் சமர்த்தர்- இதனால் நீதிபதி போன்ற பதவிகளையும் வகிப்பவர். எழுத்துத் தொழில், வேதாந்தம், தத்துவம், ஞானம் போன்ற வற்றில் ஈடுபாடு உண்டு. விஞ்ஞானத் துறையிலும் ஈடுபாடு உண்டு எதை மேற்கொண்டாலும் அதைத் திறம்படச் செய்து முடிப்பார்கள். தியானம் யோகம். ஆசனம் ஜபம், பூஜை, பிராணாயாமம் வாசிப் பழக்கம் இவற்றில் பற்றும், ஆன்மீகத் துறையில் அதிக நாட்டமும் உண்டு. மறை முகமாக யாருக்கும் தெரியாமல் பிறருக்கு உதவி செய்பவர்கள்.

இல்லறம் இவர்களுக்குப் பெரும் பாலும் வெற்றி அடைவதில்லை ஜோடிப் பொருத்த மற்ற திருமணமாகவே நேரலாம். சீதனப் பாதிப்பு இதயநோய், வாத நோய், வெண்குஷ்டம் போன்ற தோல் நோய்கள், கால் இழுத்துக் கொள்ளும் வாதம், வலிப்பு, இதனால் கால் முடமாதல், மூட்டு வலிகள் போன்றவை இவர்களுக்கு ஏற்படுவதுண்டு.

9, 10, 11, 20, 30, 32 ஆகிய வயதுகளில் சுரம் மிகுந்த ஜன்னி, வாத பித்த ஜுரம் முதலியவற்றால் அவதிப்பட வேண்டிய வரலாம். லக்னாதிபதி, அஷ்ட மாதிபதி ஆயுள் காரகர் மூவரும் ஜாதகத்தில் வலுத்தால் இவர்கள். 30 வயது வரை வாழ்ந்திருப்பர்.

***இந்த லக்னத்துக்கு சுபர் அசுபர் முதலியவை***

1) முழுமையான யோகம் தருபவர் - 1) சுக்கிரன் தனியாக
2) புதன் + சனி

2) சாதாரண சராசரி யோகம் தருபவர்

1) சுக்கிரன் + சனி

2) சுக்கிரன் + புதன்

3) சுக்கிரன் + செவ்வாய்

3) பலன் தராதவர்

1) புதன் + சூரியன்

***கோள்கள்;***

சூரியன் - சப்த மாதிபன் என்ற வகையில் இந்த லக்னத்திற்கு இவன் மாரகன்

இல்லை நல்லது செய்யும் (யோக) காரகன்.

சந்திரன் -6ம் அதிபன் என்றாலும் நடுநிலைக் கோள்

செவ்வாய் -3, 10க்குடையவன் - பாவியே

புதன் -5, 8க்குடையவன் - பாவியே

குரு - தனலாபாதி பதி - மாரகன் - பாவியே

சுக்கிரன் - சுக பாக்யாதிபதி - முழுச் சுபன் முழுயோகக்காரகன்

சனி - லாப, விரயாதிபதி இவன் காரகன் என்ற சுப பலன் தருபவர்

பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வகையில்

1) பாபர் - குரு, சந்திரன்

2) சுபர் - சுக்கிரன்

3) கிரக சேர்க்கையால் பலன் தரும் யோக காரகர்

1) செவ்வாய் + சுக்கிரன்

சுக்கிரன் ஒருவனே யோககாரகன்

4) பாதகன் - சுக்கிரன் பலத்த யோககாரகனாயினும் ஸ்திர லக்னத்திற்கு 9க்குடையவன் என்ற முறையில், கெட்டதும் செய்பவன் ஆனால் சிறந்த ராஜயோகத்தையும் தருபவன்.

5) மாரகர் - குரு, புதன்

விளக்கம் - 2,10க்குடைய வகையில் குரு பலத்தமாரகன். 6க்குடைய வகையில் சந்திரன் பாபன்

இந்த ராசிக்கு லக்னத்திற்கு அதிர்ஷ்ட நாட்கள் - வியாழன் ,வெள்ளி. திங்கள்

அதிர்ஷ்ட நிறங்கள் - மஞ்சள், நீலம், சிகப்பு, வெள்ளை

அதிர்ஷ்ட ரத்தினம் - நீலம், கனக புஷ்பராகம்

இவர் 80 வது வயதில் சித்திரை மாதம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி திருவாதிரை நட்சத்திரம் கூடிய வியாழக் கிழமையில் உதய காலத்தில் இயற்கை எய்துவார்.

# அத்தியாயம் - 35

## சதயம் நட்சத்திரம்

இது 25 வது நட்சத்திரம் 306 பாகை - 40 முதல் 320 பாகை வரை ராசி மண்டலத்தில் பரவியுள்ளது.

தமிழ்ப் பெயர் - சதயம்

வடமொழிப் பெயர் - சதபிஷா

அரபுப் பெயர் - "சத்-அல்-மெலிக்"

கிரேக்கப் பெயர் - அக்குவாரி

வடமொழி சொல்லில் 'அபிஷஜா'' என்றால் மருத்துவர் - சதம் என்றால் நூறு. இதிலிருந்து இந்த நட்சத்திரம் 100 நட்சத்திரக் கூட்டம் கொண்டது என்பது தெளிவாகிறது.

இதன் அதிதேவதை - வருணன். இவர் 12 ஆதித்தியர்களில் ஒருவன். மேகங்களில் உலவி கதிரியக்கங்களை ஏற்படுந்தி மேகத்தை மழை பொழிய வைக்கும் தேவதை தான் வருணன். இவன் நிருதியிடம் மிகுந்த நல்ல காரியங்களுக்கு ஏற்படும் தடைகளிலிருந்து காப்பாற்றும் தேவதை எனப்படும் அவனே மருந்துக்களுக்கும் தலைவன்.

***சதய நட்சத்திரத்தைப் பற்றி சுவடி எண் 1500 மரண கண்டி கூறும் பலன்***

*211. ஞானமும் தேட வல்லான் நற்பொருள் ஈட்ட வல்லான்*
*மால் தனை நினைக்க வல்லான் வழக்கறிந்துறைக்க வல்லான்*
*சீலம் துடையனாகும் திறமுடைய செல்வனாகும்*
*சாலவே அறிந்து சொல்லும் சதயநாள் தோன்றி னானே.*

(இதன் பொருள்)

சதய நட்சத்திரத்தில் பிறந்தவன் ஞானத்தைச் சான்றோர்களிடம் சென்று தெரிந்து கொள்வதில் வல்லவன். நல்ல செல்வத்தைச் சம்பாதிக்க வல்லவன். திருமால் மேல் பக்தியுள்ளவன். வழக்காடி எதையும் வெல்லும் சக்தி உண்டு (அதாவது வக்கீல் தொழிலில் சிறப்படையவன்) உயர்ந்த ஒழுக்க முடையவன். சிறந்த பெரிய பணக்காரனாவான். எல்லா விஷயங்களையும் அறிந்துள்ளவன். சதய நட்சத்திரத்தில் பிறந்தவன் என்பதாம்.

இந்நாளுக்கு தெய்வம் சந்திரன்-பூதம்ஆகாயம், சாதி - பிரலோமன், யோனி - பெண் குதிரை - பட்சி அண்டழ் காக்கை - விருட்சம் கடம்பமரம் கணம் இராட்ச கணம். இந்த நட்சத்திரம் ஒரு கொத்து போன்றிருக்கும் வாரம் சனி, மாசி மாதம் சூனியம். புரட்டாசி மாதம் பகை (யோனி-பெண் யானையுமாம்) இந்நாளில் ஆண்டு பிறக்கில் தானிய விளைச்சல் குறையும். இந்நாளில் 18 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். வெதுப்பு தோன்றில் 9 நாளில் தீரும். தீராத போது இதன் அதிதேவதையை மந்திரத்தால் நெய்யால் ஓமம் பண்ணுவது. இதன் விருட்சத்தினடியிலாவது கடற்கரையிலாவது ஓமம் பண்ணுவது. நல்லது சனிவாரம் அமிர்தயோகம் செவ்வாய் கூடில் நாசயோகம்.

இந்நாளில் விவாகம். அன்ன பிராசானம் வாழைமரம் வைக்க, விதைக்க, மருந்துண்ண நல்லது. யாத்திரைக்கு கொள்ளு தின்று செல்லவும். இவன் கையும் காலும் உடம்பும் அழகியவன். முரட்டுபுருஷன் கொடியவன். பிறரிடம் சுகம் கொள்ள வல்லவன். தெய்வ சகாய முடையவன். முன்கோபி இந்நாளில் பெண் திரளில் பெண் குழந்தை பெறுவாள். இந்நாளில் நோய் தோன்றில் எள்ளு, சோறு, மாவு இவை கலந்து நிவேதித்து வேத மந்திரம் செபித்து. உடுத்திய வஸ்திரம் கம்பளை ஆடு இவைகளைத் தானம் புண்ண வேண்டும்.

இவன் கண்கள் பெண்களுடையவை போல் அழகாக இருக்கும். சகல காரியங்களையும் விரும்பிச் செய்து முடிப்பவன். ராஜ புருஷன்.

***இந்த நட்சத்திரம் பற்றி பிற நூற் செய்திகள்***

இது ஒட்டகம் போன்ற உருவ அமைப்பு கொண்டது என்று கூறப்படும். இது பெண் நட்சத்திரம் அல்லது அலி நட்சத்திரம் என்றும் சிலரது கருத்து. இதன் நிறம் சிவப்பு.

நாமகரணம் உபநயனம், வித்யாப்யாசம் பெரியோர்களைக் காணச் செல்லவும் உகந்த நட்சத்திரம் இது. முதலீடு செய்ய, விக்ரஹ பிரதிஷ்டை, கொடுக்கல் வாங்கல் முதலிய வற்றிற்கும் ஆகும். பயணத்திற்கு அவ்வளவு உகந்த நாளல்ல, இதில் சூரியன் சஞ்சார காலத்தில் அதாவது மாசி மாதத்தில் விலைவாசி ஏறும்.

அக்டோபர் மாதம் இரவில் 11 மணிக்கு மேல் வானில் இது கண்ணுக்குத் தெரியும்.

சதயத்தில் பிறந்தவர்கள் வீரர்கள் என்றும் சொல்லப்படும்,. சிலருக்கு முதுகில் மச்சம் உண்டு.

இது தராசின் உருவமுடையது என்று சிலர் கூறுவர். இது வடதிக்குக்கு உரியது ஆகையால் குபேரனே இதற்கு அதிபரி என்றும் கூறுவர்.

இது மேல் நோக்கு நாள் என்றும் கூறுவர். இதன் அக்ஷர சுரம் "ர" என்பதாம். ஞாயிறு, செவ்வாய் கிழமைகளில் மருந்துண்ண நன்று.

சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஹோமம் வருணனுக்கு பாயசான்னம் நைவேத்யம். மாதம் பிறக்கில் விளைச்சல் குறையும்.

***தமிழ் ஜாதகாலங்காரத்தில் இதற்குச் சொன்ன பலன்***

*212 பத்தியு முள்ளான் வெகுண்ட சொல் பொறாதான்*
*பழுதிலா ரோகவான் இனியன்*
*புத்திமான் கைகால் வலியன்வாய் அழகன்*
*பொய்பொறான் மன்னவர்க்கு இனியன்*

*வித்துவான் சூரன் மாதருக்கு அன்பன்*
*மிகுந்தநீர் ஆடவும் பிரியன்*
*சத்துரு பயன்பொன் உளன்வழக்(கு) உரைப்பான்*
*சதயநட் சத்தி ரத் தானே.*

(இதன் பொருள்)

சதய நட்சத்திரத்தில் பிறந்தவன் பக்திமான். கோபம் பொறுக்கா வன். பெரிய நோய் வராது சிறு சில்லரை ரோகங்களால் பீடிக்கப் படுபவன். அனைவர்க்கும் பிரியமானவன். அறிவுடையவன். கைகால்களில் வலிமை யுடையவன். வாய் சிறிதாக அழகாக இருக்கும். பொய் சொல்லாதவன். அரசர்கட்கும் பிரியமானவன். பண்டிதன், வீரமுயைடவன். பெண்களுக்குப் பிரியமானவன். அவர்களால் விரும்பப்படுபவன். நீராடுவதில் மிகவும் ஆசை யுள்ளவன். எப்பொழுதும் பகைவரை வெற்றி கொள்பவன். தனவான் வழக்காடி வெல்பவன்.

இது நூறு நட்சத்திரங்கால் ஆனதால் சதம் என்பது சதயம் என்று பெயர் பெற்றது (சதம் - நூறு).

*யவன ஜாதகம் கூறுவது*

இவன் நல்ல புத்தியுள்ளவன், சுகவான் தனவான் தருமசீலன். எப்பொழுதும் முன்கோபம் உண்டு. பெரியோர் பிராமணர்களிடத்தில் விசுவாச முள்ளவன்.

*பிருஹத் ஜாதகம்*

தெளிந்த வார்த்தைகள் பேசுபவன். ஸ்த்ரீகளிடம் அன்பும் அவர்களால் காம சுகமும் பெறுபவன். குடி சூதாட்ட விருப்பமுண்டு சத்துரு நாசம் செய்பவன். முன் ஆலோசனை கிடையாது. எதற்கும் கட்டுப்பட மாட்டான் என்பதாம்.

*பெண்கள்*

*வடமொழி ஸ்த்ரீ ஜாதகம் கூறுவது.*

இவள் அதாவது சதய நட்சத்திரத்தில் பிறந்த பெண் தானதருமம் பண்ணும் நல்ல குணமுள்ளவள். மற்ற பெண்களுக்கு ஆலோசனை, அறிவுரை வழங்குபவள். குடும்ப தேவதையை விடாமல் பூஜை செய்பவள் இவள் தன் வீட்டில் எல்லோரையும் சந்தோஷமாக வைத்துக் கொள்பவள்.

*பிற வடமொழி நூல் கூறுவது*

பாப கர்மம் செய்பவள். சண்டைக்காரி. தினமும் கோபத்துடன் சீறுபவள். ஆனால் பரோபகாரியாவாள் என்பதாம்.

***சங்கராசாரியார் "மதன" நூல் கூறும் சதய நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் பலன்***

இவள் கந்தருவதத்துவ லட்சணத்தைச் சேர்ந்தவள்.

***213** புருவங்கள் நெறிய நீண்டு புகன்றவேல் அனையகண்ணாள்*
*பெருந்தன முலையாள் பெண்மை பேசுவாள் குணங்கள் கூறி*
*மருந்தறி மங்கை யாகும் மாந்தரை மருட்டும் போகம்*
*தரமொடு செய்ய வல்லாள் சதயநாள் தோன்றி னாளே.*

*இதன்பலன்*

சதயத்தில் பிறந்த பெண்கள் புருவங்கள் நீண்டு அழகியவாய் இருக்கும். வேல் போன்ற கூர்மையான பிறரைச் சுண்டி இழுக்கும் அழகிய கண்களுடையவள். பெரிய திரண்டுருண்ட அழகிய முலைகள் உள்ளவள். இவள் பெண்மையில் நளினத்துடன் எல்லோரிடமும் பேச வல்லவள். இவள் மருத்துவத்தில் வல்லவள். (டாக்டருக்குப் படிக்கும் வாய்ப்புள்ளவள்) தன்னைச் சேர்ந்த கணவன் தன்னிடத்தில் மயங்கி மகிழும்படி அவனுடன் வகை வகையாக போகம் செய்து தன்னுக்குள் வைத்துக் கொள்பவள் என்பதாம்.

நட்சத்திர பாத பலன்

தமிழ் ஜாதகாலங்காரம் கூறும் நட்சத்திர பாத பலன்

214 தொட்டநற் குணவான் அழகுளன் உதாரன்
சுகியனாம் விப்பிரர் மேலும்
துலங்கிய பசுக்கள் மேலும்நற் பிரியன்
நிதியுளன் சதயமொன்றாங்கால்
பொட்டெனக் கோப முடையவன் கிலேசி
பொருந்துதுற் போதகம் புரிவான்
புனிதம தில்லான் இழி குலம் தன்னில்
பொருந்துவான் இரண்டதாம் காலே
பட்டு நற் கருமம் பொருத்தமாய் முடிப்பான்
பசியுடன் வயிற்றுநோய் உள்ளான்
பண்ணுடன் சேவகா விருத்தியும் பித்தன்
பண்ணுவான் மூன்றதாம் காலே
நட்டுணை யுணர்வான் உத்தேசி மானி
நாடிய காரியம் முடிப்பான்
நல்லவன் சுகவான் நாற்பத மென்றே
யுரைப்பர்நான் மறையினர் அவரே!

இதன் பொருள்)

முதல் பாதம்

இவன் நற்குணங்கள் உள்ளவன். அழகுள்ளவன். உதார குண முள்ளவன். தூய்மையாக இருப்பவன். பிராமணர்கள் பெரியோர்களிடம் பிரியம் மரியாதையுள்ளவன். பசுக்களை விரும்பி போஷிப்பவன், நிறைய பணமுள்ளவன் என்பதாம்.

*இரண்டாம் பாதம்*

திடீரென அடிக்கடி கோபம் கொள்பவன். மனக்கிலேச முள்ளவன். பிறரைப் பிரித்து வைக்கும் பேத புத்தியுடையவன். தூய்மை, நன்நெறி இல்லாதவன். இழிகுலத்தினருடன் பழகி அவர்களுடன் கூட வாழ்பவன். இவை இரண்டாம் காலில் பிறந்தவன் குணங்களாம்.

*மூன்றாம் பாதம்*

இவன் நல்ல காரியங்களை திருத்தமாகச் செய்து முடிப்பவன். பசி பொறான். ஆனால் வயிற்று நோயாலும். அவதிப்படுவான். நன்றாக ஊழியம் செய்யவல்லவன். சிலசமயம் பயித்தியம் போன்றிருப்பான் என்பதாம்.

*நான்காம் பாதம்*

தன் துணையான உறவினர் நண்பர்களைப் பெரிதும் நேசிப்பவன். மானமுள்ளவன். எந்த காரியத்தையும் திறமையாக செய்து முடிப்பவன். நல்லவன்சுகவாசி. (துக்க மற்றவன்) நல்ல சிந்தனா சக்தியும் உள்ளவன் என்பதாம்.

*ஜாதக சார தீபம் சொல்லும் பாத பலன்*

முதல் பாதம்

நல்ல வாக்கு வன்மையுடையவன் சிறந்த பேச்சாளன்

இரண்டாம் பாதம்

பணக்காரன்

மூன்றாம் பாதம்

சுகபுருஷன் கவலையில்லாதவன்

நான்காம் பாதம்

நல்ல அறிவாளிகளான குழந்தைகள் உள்ளவன் என்பதாம்.

*சுவடி எண் 1500 மரணகண்டிகை கூறும் சதய நட்சத்திர பாத பலன்*

*215. சதயம் 1ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்*

*மாந்துளிர் போல மேனி மனசொத்துக் கல்வி கற்கும்*
*ஏந்திய சனத்துக் கெல்லாம் இசைந்ததோர் ராச னாவான்*
*காய்ந்த பின் நடக்க மாட்டான் கனங்குழை யார்க்கு நல்லான்*
*சேர்ந்தவர்க் கன்ப னாகும் செய்யபொற் காலி னானே.*

(சுவடி எண் *1500*)

(இதன் பொருள்)

சதயம் முதல் பாதத்தில் பிறந்தவன் இவன் மாந்துளிர் போன்ற சிவந்த மேனி உடலுள்ளவன். நன்றாக மனம் லயித்து கல்வி கற்றுத் தெரிவான். தன் குலத்துக்கே அரசன் போன்று நல்ல சமூக அந்தஸ்து உள்ளவனாக இருப்பான். வெயில் அதிகமான பின் வெயிலில் இறங்கி நடக்கமாட்டான், தன் மனைவிக்கும், தன்னை விரும்பும் மற்ற பெண் களுக்கும் இதமாக இருப்பவன். வெயில தன்னைச் சேர்ந்தவர்களுக்கு இவன் நண்பன் போன்று உதவி முதலியன செய்வான். இவனே குருவின் அங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான் என்பதாம்.

*இதற்குக் கால சக்கர தசை*

1) மீன வியாழன் - 10 வருடம்

2) கும்பச் சனி - 4 வருடம்

3) மகரச் சனி - 4 வருடம்

4) தனுசு வியாழன் - 10 வருடம்

5) விருச்சிக செவ்வாய் - 7 வருடம்

6. துலாம் வெள்ளி - 16 வருடம்

7. கன்னி புதன் - 9 வருடம்

8. சிங்க மாதித்தன் - 5 வருடம்

9. கற்கடக சந்திரன் - 21 வருடம்

ஆகவயது - 86 வருடம்

*சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் சதயம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பலன்*

*216 ஊனம துடையனாகும் உறவொடு பழியும் சேரான்*
*மானம துடைய னாகும் மனம்பிறர்க் கறிய ஒண்ணான்*
*மேனியும் உருவு நல்லான் மிக்கதோர் அறிவு முண்டாம்*
*கானகந் திரிந்து வாழும் காரியங் கிஷத்தி னானே!*

*(சுவடி எண் 1500)*

(இதன் பொருள்)

இவன் ஏதாவது உடல் ஊன முள்ளவனாவான். உறவினரிடம் அதிகம் பாசம் வைக்க மாட்டான். பழி ஏற்படுத்தும் செயலோடு சேரமாட்டான். இவன் மான முள்ளவன். இவன் மனத்தாழம் மிகுந்தவன். இவன் மனத்தை யாராலும் அறிய முடியாது. இவன் உருவமும் உடலும், அழகானவன். இவன் சாதாரண மனிதன், அதிக அறிவாளியுமல்ல. இவன் காடு நகர மெல்லாம் திரிபவன். இவனே சனியின் அங்கிஷத்தின் பிறந்தவனாவான்.

*இதற்குக் கால சக்கர தசை*

1. மிதுன புதன் - 9 வருடம்

| | | |
|---|---|---|
| 2. ரிஷப வெள்ளி | - 16 | வருடம் |
| 3. மேஷச் செவ்வாய் | - 7 | வருடம் |
| 4. தனுசு வியாழன் | - 10 | வருடம் |
| 5. மகரச் சனி | - 4 | வருடம் |
| 6. கும்பச் சனி | - 4 | வருடம் |
| 7. மீன வியாழன் | - 10 | வருடம் |
| 8. மேஷச் செவ்வாய் | - 7 | வருடம் |
| 9. ரிஷப வெள்ளி | - 16 | வருடம் |
| ஆக வயது | - 83 | வருடம் |

*சுவடி எண் 1500 மரண கண்டிகை சொல்லும் சதய நட்சத்திரம் 3ம் பாத பலன்*

*217 ஆரையும் அறிந்து பேசும் அரும் பொருள் நெருங்கி வாழும்*
*சீரிய செய்ய வொண்ணான் சிதைவதே செய்வ தெல்லாம்*
*வாரிய பொய்கள் சொல்லான் வழக்கறிந் துரைக்க வல்லான்*
*காரியங் கிஷத்தில் வந்த கருத்துடைக் காளை தானே!*

[இதன் பொருள்]

இவன் எல்லோரையும் நன்கு தெரிந்து புரிந்து கொண்டு பேசுவான். தேடற்கரிய பொருளை தனத்தை சேகரித்து அதனுடன் நெருக்கமான பணக்காரனாக இருப்பான். இவன் சிறந்த திருத்தமான காரியங்களைச் செய்ய மாட்டான். இவன் செய்யும் செயல்கள் எல்லாம் பாழாகிவிடும். ஆனால் பொய்களை அள்ளி வீச மாட்டான். இவன் மனதை யாராலும் அறிய முடியாது. இவனே சனியின் அங்கிஷத்தில் பிறந்த காளையாவான்.

இதற்குக் காலசக்கர தசை வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | மிதுன புதன் | - 9 வருடம் |
| 2 | கற்கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 3 | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 4 | கன்னி புதன் | - 9 வருடம் |
| 5 | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 6 | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| 7 | மீன வியாழன் | - 10 வருடம் |
| 8 | கும்பச் சனி | - 4 வருடம் |
| 9 | மகரச் சனி | - 4 வருடம் |
| | ஆக வயது | - 85 வருடம் |

சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் சித்திரை நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன் வருமாறு

218. சிறிதே உண்ணும் பெரிச்சொல்லான் சிவந்த கண்ணன் செறிகுழலான்
அறிவு மிகவே பெருங்குணத்தான் அடைந்தோர்க்கன்பன் அழகியனாம்
பொறிசேர் மைந்தன் மனையாளைப் பெரிதாய் எண்ணான் புகழ் விளங்கும்
வெறிசேர் கூந்தல் மடமாதே வியாழன் காலிற் பிறந்தோனே!

(இதன் பொருள்)

சதயம் 4ம் காலில் பிறந்தவன் சிறிதளவே உண்பான். பொய் சொல்ல மாட்டான். சிவந்த கண்களும் செறிந்து நெருங்கி சுருண்ட தலைமயிர் உள்ளவன். இவன் அறிவாளி. பெரிய குணசாலி. தன்னை அடைந்தவர்களை ஆதரித்து அன்பு செய்பவன். தன் மனைவி மக்கள் மேல் அதிக பாசம் வைத்திருந்தாலும் அவர்களை ஒரு பொருட்டாக மதிக்கப்பட்டான். வாசனை பரிமளம் கமழும் இளம் பெண்ணே இவனே குருவின் அங்கிஷத்தில் பிறந்தவன் குணங்களாகும் என்பதாம்.

*இதற்குக் கால சக்கர தசை வருமாறு*

| | | |
|---|---|---|
| 1 | தனுசு வியாழன் | - 10 வருடம் |
| 2 | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| 3 | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 4 | கன்னி புதன் | - 9 வருடம் |
| 5 | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 6 | கற்கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 7 | மிதுன புதன் | - 9 வருடம் |
| 8 | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 9 | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| | ஆகவயது | - 100 வருடம் |

*சதய நட்சத்திரத்திற்குரிய விம்சோத்தரி மகா தசை*

| | | |
|---|---|---|
| 1. | ராகு தசை | - 18 வருடம் |
| 2. | குரு தசை | - 16 வருடம் |

3. சனி தசை - 19 வருடம்

4. புதன் தசை - 17 வருடம்

5. கேது தசை - 7 வருடம்

6. சுக்ர தசை - 20 வருடம்

7. சூரிய தசை - 6 வருடம்

8. சந்திர தசை - 10 வருடம்

9. செவ்வாய் தசை - 7 வருடம்

ஆக வயது - 120 வருடம்

*இவனுக்குத் தோன்றும் வியாதி கண்டர் முதலியன*

இவன் பிறந்த வயதில் பிள்ளைப் பிணியால் கண்டம். 3 வயதில் சிலந்தியும் சிறங்கும் 5 வயதில் வெதுப்பு 7 வயதில் வயிற்று நோய் 13 வயதில் நீர் கண்டம் 16 வயதில் உயரத்தில் ஏறி விழதலால் 18 வயதில் மாதாவுக்குக் கண்டம் 19 வது வயதில் உளரலால் (HYSTRIA) 20 வயதில் விவாகம்- அச்சமயம் உடல் நலம் கெடல், 26 வயதில் பெண்களால்-மருந்திடு நோய் 30 வயதில் அரசால் கஷ்டம். 35 வயதில் 4 கால் மிருகத்தால் - 37 வயதில் மண்டை இடியால்.. 40 வயதில் வாத நோயால் 45 வயதில் போட்டியால் 50 வயதில் வலது பக்க வாதத்தால், 53 வயதில் சத்துருவால் 60 வயதில் வாதத்தால். 73 வயதில் ஒரு கண் குருடு ஆதல் 77ல் மீண்டும் கண்ணோயால் 83 வயதில் கோழை, சிலேத்துமத்தால், 85 வயதில் வயிற்றுக் கடுப்பால் 86 ல் வெதுப்பு ஆகியவை நிகழலாம். அதன் பின் 100 வயது கடந்து பூர்வபட்சத்து ஏகாதசி மார்கழி மாதம் வியாழக் கிழமையும் கூடும் நாளில் மதியம் உதித்து 15 நாழிகைக்குமேல் சோறு விக்கலால் மரணம்.

*இந்த சதய நட்சத்திரமுள்ளவர் பிறந்த லக்னம்*

| | | |
|---|---|---|
| சூரிய சாரமாகில் | - | வேளாண்மை பலிக்கும் |
| சந்திரன் சாரமாகில் | - | வியாபாரி |
| செவ்வாய் சாரமாகில் | - | அழகியவன் |
| புதன் சாரமாகில் | - | கல்விமானாம் |
| வியாழன் சாரமாகில் | - | தனவான் |
| சுக்கிரன் சாரமாகில் | - | கள்ளன் |
| சனி சாரமாகில் | - | துஷ்டன் |
| ராகு | - | ராகு சாரமாகில் |
| கேது சாரமாகில் | - | அலங்காரமுடையவன் |
| கேது சாரமாகில் | - | தூங்குமூஞ்சி |

இதில்

முதல் கால் மாமனுக்கு ஆகாது. அதற்கு பரிஹாரமாக மஹேஸ்வர பூஜை பண்ணவும். இந்நாளில் அபிஷேகம் பண்ண, நமஸ்காரம் பண்ண மனை கோல, நாற்றுவிட, விதை தெளிக்க மருந்துண்ண நன்று.

**கர்ம வியாகம் வடமொழி நூலில் கூறும் சதய நட்சத்திரக் காரர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிஹாரமும்.**

*சதய நட்த்திரத்தின் முதற்காலில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் பரிஹாரமும்*

சிவபெருமான் சொல்லுகிறார்.!

வடமதுரை நகரில் நிறையகால் நடைச் செல்வமுள்ள கோபால் என்ற

இடையன் வாழ்ந்து வந்தான். இவனுக்கு மிக அழகான சதி என்ற மனைவி இருந்தாள். ஒரு சமயம் மாரிக்காலத்தில் எருதுகள், பசுக்கள் கன்றுகளுடன் நிறை மழையால் நனைந்து இறந்து விட்டன.

சில காலம் சென்று கோபால் இறந்து விட்டன. கால் நடையை பாதுகாக்காமல் இறக்க விட்ட பாவத்திற்காக எமபடர்கள் இவனை நரகத்தில் 60 ஆயிரம் ஆண்டுகள் தள்ளி தண்டித்தார்கள். அதன் பின் குள்ள நரியாகப் பிறந்து. கடைசியில் மனிதனாகப் பிறந்தான்.

பசுக்களைப் பாதுக்காத்த புண்யத்தால் நல்ல பணக்கார வசதியான குடும்பத்தில் பிறந்தான். ஆனால் செய்த பாவத்தால் இவனைப் பல நோய்கள் பற்றிக் கொண்டன. இதனால் இவனுக்கு ஆண்மை போயிற்று குழந்தைகளும் பிறக்கவில்லை. அவன் போன ஜன்மத்தில் ஒருதுகளை விரை அடித்த ஆண்மையற்றவை ஆக்கியதால் இவனுக்குப் பெண் குழந்தைகளே பிறந்தன. இவன் மனைவி கற்பமும் அடிக்கடி கலைந்து போகிறது. இதற்கு சாந்தி முறை வருமாறு.

முதலில் வந்தருது வான சித்திரை வைகாசி மாதங்களில் 1000 குடங்கள் தானம் பண்ண வேண்டும். ஏகாதசி விரதமிருந்து திரிவேணி சங்கமத்தில் புண்ணிய நீராடவேண்டும். அதன் பின் பத்துநிறமுள்ள, பசுவைத்தானம் பண்ண வேண்டும். அதன் "ஆக்குஷ்னே" என்ற மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜபம் வேண்டும். இதன் புரஸ்சரணத்தையும் செய்து முடிக்க வேண்டும். இப்படி செய்வதால் இவன் பாபங்கள் நீங்கும். இவன் நோய்கள் நீங்கி நலம் பெறுகின்றான். அதன் பின் இவனுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. அதன் பின் அவர்கள் சந்தோஷமாக வாழ்கின்றனர்.

**சதய நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ ஜென்ம கர்மமும் சாந்தி முறையும்.**

சிவபெருமான் சொல்லுகிறார்!

மத்திய தேசத்தில் மிருகாரி என்ற பெயருடைய ஒரு வேடன் இருந்து

வந்தான். இவன் வேட்டையாடி பிராணிகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை விற்று பிழைத்து வந்தான். அந்த தனத்தால் மக்களை அனுபவித்தும் காத்தும் வந்தான். இப்படி ஆயுள் பூராவும் இப்படியே வாழ்ந்து கடைசியில் இறந்தான். இவன் செய்த பாவத்திற்காக எம தூதர்கள் இவ்னை ரௌரவம் என்ற நரகத்தில் தள்ளி 70000 வருடங்கள் தண்டித்தார்கள்.

அதன் பின் இவன் பிணம் உண்ணும் கழுகாகப் பிறந்தான். அதன் பின் நரியாகப் பிறந்தான். இதற்குப் பிறகு மனிதனாகப் பிறந்தான். இவன் போன ஜன்மத்தின் விலங்குகளின் குட்டிகளையும் பறவைகளின் குஞ்சுகளையும் கொன்ற பாவத்தால் இவனுக்கு ஆண் சந்ததி இல்லாமல் போயிற்று ஒன்றிரண்டு பிறப்பதும் பெண்ணாகப் பிறந்தன. இப்பொழுது இதற்கு சாந்தி முன்றவருமாறு.

"காயத்ரி" மற்றும் "ஜாதவேதசே" என்ற இரண்டு மந்திரங்களை லட்சம் தடவை ஜபம் செய்ய வேண்டும். அவற்றிற்கு புரஸ்சரணமும் முடிக்க வேண்டும் பத்து பசுக்களைத் தானம் பண்ண வேண்டும். தன்னுடைய சொத்தின் மேல் ஒரு பாகத்தை புண்ணிய காரியங்களில் செலவு செய்ய வேண்டும். கோதானம் பண்ண பின் சுவர்ணதானமும் பண்ண வேண்டும். அதன் பின் ஹரிவம்ச புராண பாராயணம் பண்ண வேண்டும். இதற்குப் பின் மாசித் திருவோண நாட்களிலும் ஏகாதசியன்றும் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். அதன் தன் சக்திக்குத் தக்க படி பிரமணர்க்கு போஜனம் பண்ணி வைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் நலமடைகிறான். இவன் மனைவிக்கும் கற்பாசயக் கோளாறுகள் அகல்வின்றன. அவளும் கற்பவதியாகி அவர்களுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தை பிறக்கிறது. அவர்கள் அதன் பின் சந்தோஷமாக வாழ்கின்றனர்.

**சதய நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்ம பலனும் சாந்தி பரிஹாரமும்.**

கோமதி நதி தீரத்தில் துரந்தர புரம் என்ற ஊர் உள்ளது. அந்த ஊரில் சல்லலவர்கள் நடுவில் தன் குலத்தொழிலை மறந்து, குடி, சூது.

வேசியர் பழக்கம், இவையுடன் சேர்ந்த வேதத்தையும் நல்லவர்களையும் பழித்து வந்த ஒரு பிராமணன் இருந்து வந்தான். வெகு காலம் சென்று அவன் இறந்தான்,

இவனை தர்மராஜன் சேவகர்கள் மிகக் கொடிய நரகத்தில் தள்ளி ஒரு லட்சம் வருடங்கள் தண்டித்தார்கள். அதன் பின் இவன் செம்மறி யாடாகவும் அதற்குப் பின் பன்றியாகப் பிறந்தான். அதன் பின் மிகவும் பவித்திரமான தேசத்தில் மனிதனாகப் பிறந்தான். போன ஜன்மத்தில் மனிதனாகப் பிறந்தான். போன ஜன்மத்தில் அதிகம் குடித்தால் அவன் சரீரத்தில் அதிக ரோகங்கள் பீடித்துக் கொண்டன. போன ஜென்மத்தில் வேசியரிடம் பழகியதால் இந்த ஜென்மத்தில் இவன் வம்சம் விளங்காமல் போயிற்று இதற்குக் சாந்தி பரிஹாரமும் வருமாறு.

முதலில் தன் சொத்தின் 6 ல் ஒரு பாகத்தைப் புண்ணிய காரியத்தில் செலவழிக்க வேண்டும். ''விஷ்ணோரர்'' என்ற மந்திரத்தை லட்சம் முறை ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் அதன் புரஸ்சரண சடங்கை முடிக்க வேண்டும். காராம் பசு ஒன்றை கன்னுடன் உத்தம பிராமணன் ஒருவனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் 40 தோலா எடை தங்கத்தால் லக்ஷ்மீ நாராயணன் மூர்த்தி ஒன்றைச் செய்ய வேண்டும். அதேபோல் வெள்ளியால் ஒரு கௌரிச்சங்கரன் மூர்த்தியையும் செய்ய வேண்டும். இவற்றை முறையுடன் பூஜிக்க வேண்டும் பாவங்களை மன்னிக்கும் படி உருக்கமாகவேண்டி அவர்களின் நாமாவளி, மற்றும் மந்திரங்களைச் சொல்லி பூசைசெய்ய வேண்டும்; சுகந்த பரிமள தூப தீப ஆரத்திகள் வேண்டும். அதன் அந்த இரண்டு மூர்த்திகளையும் தகுந்த தட்சணையுடன் உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும்.

இதனால் இவன் பாபங்கள் எல்லாம் நாசமாகி இவன் நோக்கம் தீர்கின்றன. அதன் பின் இவனுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தை பிறக்கும். அதன் பின் அவர்கள் சந்தோஷமாக வாழ்கின்றனர்.

## சதய நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்கள் பூர்வ கர்மமும் சாந்தி பரிஹாரமும்.

சிவபெருமான் சொல்லுகிறார்.

வடமதுரைக்கு வடக்கே வேத மந்தகபுரம் என்ற ஊர் உண்டு. அங்கு குகர்மன் என்ற பெயருடைய புகழ் பெற்ற ஒரு வைசியன் வசித்து வந்தான். இவன் தொழிலில், நிறைய பணம்சம்பாதித்து சேர்த்து வைத்தான். இவனுக்கு பார்வதி என்ற அழகிய மனைவி இருந்தாள், வைசியன் வீண் கௌரவத்திற்காக பணத்தை செலவழித்து விட்டான். இதனால் இவனுக்கு வறுமைமேலிட்டது. இதனால் மிகவும் வருந்திய வைசியன் ஒரு பிராமணனிடம் தன் செலவுக்காக 500 பொற்காசுகள் கடன் வாங்கிக் கொண்டான். அதைக் கொண்டு அவன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். ஆனால் சம்பாதிக்க முடியாமல் 500 பொற்காசு களையும் செலவழித்து விட்டான். வெகுகாலம் சென்று வைசியனும் அவன் மனைவியும் இறந்தனர். இவன் புண்ணியத்தலமான வட துரையிலேயே இறந்ததால் இவருக்கும் சுவர்க்க யோகம் கிடைத்தது. 10 லட்சம் ஆண்டுகள் சுவர்க்க போகம் அனுபவித்து புண்யம் தீர்ந்தபின் ஒரு புண்ணிய ஸ்தலத்தில் மனிதப் பிறவியைப் பெற்றான். இந்த பிறவியிலும் இவன் பெரிய பணக்காரனானான். போன ஜென்மத்தில் பிராமணனிடம் வாங்கிய கடனைத் திருப்பித் தராததால் இவனுக்கு இப்பொழுது சந்ததி இல்லாமல் போயிற்று.

### *இதற்கு சாந்தி பரிஹாரம் வருமாறு.*

முதலில் தன் சொத்தில் ஆறில் ஒரு பங்கை புண்ய காரியங்களில் செலவு செய்ய வேண்டும். அதன் பின் "ஆக்ருஷ்ணேன" என்ற மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் அதற்குரிய புரஸ் சரணசடங்கையும் முடிக்க வேண்டும். அதன் பின் ஹரிவம்ச புராண பாராயணம் செய்ய வேண்டும். அதன் பின் தேவீ மாஹாத்மயம் என்னும் தேவி சப்தியைப் பாராயணம் செய்ய வேண்டும். அதன் பின் சிவ பூஜை செய்ய

வேண்டும். பய பக்தியுடன் வேதோந்தம பிராமணர்களுக்கு முறைப்படி போஜனம் செய்விக்க வேண்டும். பின் பத்து நிறமுள்ள பசுவைக் கன்றுடன் அப்படியே தானம் பண்ண வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாபங்கள் அழிகின்றன. இவன் நோய் நீக்கப் பெற்று உடல் நலம் பெறுகின்றான். அதன் பின் இவனுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. இவன் குடும்பத்துடன் சந்தோஷமாய் வாழ்வான்.

*பிறர் மதப்படி சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்*

*பொதுப் பலன் - ஆண்கள்*

*தோற்றம்*

உடல் மென்மையாக இருக்கும். முன் நெற்றி அகலமாகவும். முகம் ஒளி பொருந்தியதாகவுமிருக்கு. கவர்ச்சியான கண்களும், கூர்மையான நாசியும் கொண்டவன். உப்பிய வயிற்றை உடையவன் முதல் பார்வையிலேயே பெரிய வம்சத்தில் உதித்தவன் போல தோற்றம் இருக்கும். நல்ல ஞாபக சக்தி உடையவன்.

*குணம்*

"வாய்மையே வெல்லும்" என்ற கொள்கை உடையவன். உண்மையை நிலை நாட்டுவதற்காக தன் உயிரையும் தியாகம் செய்யத் துணிவான். சில கொள்கைகளை விடாமல் பின்பற்றுவதனால் அடிக்கடி மற்றவர்களுடன் மோத வேண்டியிருக்கும். "சுய நலமற்ற சேவை" இவனது லக்ஷியம். குல ஆசார அனுஷ்டானங்களை பின்பற்றுவான். ஒரு விதத்தில பிடிவாத குணமும் உடையவன் ஒரு முறை முடிவெடுத்துவிட்டால், அந்த முடிவை மாற்ற யாராலும் இயலாது. அறிவுத்திறன். திறமை எல்லாம் உடையவன். இளகிய மனம் கொண்டவன். நல்லதும் கெட்டது கலந்த குணம் உள்ளவன்.

இவனை யாராவது சீண்டினால் வேட்டை நாய் போய் வீறு கொண் டெழுவான். ஆனால் அந்த கோபம் விரைவிலேயே தணிந்து விடும். ஆடம்பரத்திலும், விளம்பரத்துலும் நம்பிக்கை இல்லாதவன். ஆதலால், தன்

திறமையை வெளிப்படுத்துவதில் வெட்கப்படுவான்., ஆனால் இவனுடைய பேச்சுக்கள், சம்பாஷனைகள் எல்லாம் மிகவும் விரும்பத்தக்கதாயும், போதனை அளிக்கக் கூடியதாயும் ஆலோசனை மிக்கதாயும், அறிவு பூரணமாகவும் இருப்பதால் இவனுடைய திறமைகள் தானாகவே வெளிப் படுத்தப்பட்டு விடும்.

*கல்வி - தொழில்*

தொழில் வகையில் 34 வயது வரை சோதனை மிகுந்த காலமாக இருக்கும். அதன் பிறகு நிலையான முன்னேற்றம் ஏற்படும். ஜோதிடம், மனோதத்துவம் வியாதிகளை குணப்படும் கலை போன்ற வேலைகளுக்கு மிகவும் பொருத்தமானவர்களாக இருப்பார்கள். சிறுவயதிலிருந்தே இவனது இலக்கிய அறிவும், உயர்வும் பிறரால் உணரப்பட்டு விடும். உயர் கல்வியை அடைய அருகதை உள்ளவன். சதய நட்சத்திரம் மருத்துவத் துறையில் பிரபல டாக்டர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் உருவாக்கி இருக்கிறது.

*குடும்ப வாழ்க்கை*

உறவினர்கள், நெருக்கமானவர்கள் இடமிருந்து பல பிரச்சினைகள் உண்டாக்கி அவற்றை சமாளிக்க வேண்டியிருக்கும். இருந்த போதிலும் இவன் அவர்கள் கேட்காமலேயே தன் உதவிக் கரத்தை நீட்டுவான். தன் சகோதரர்களால் இவன் மிகுந்த மனோவியா கூலத்தை அனுபவிக்க வேண்யிருக்கும். இவன் தன் தகப்பனின் அன்பையும் ஆதரவையும் பெற முடியாது.. ஆனால் முழு அன்பையும் பாசத்தையும் தன் தாயிடமிருந்து பெறுவான்.

இவன் தன் வாழ்க்கையை சந்தோஷமாக நடத்தும் திறமை இல்லாதவன். ஜாதகங்களில் சனியும் குருவும் மிகவும் கெட்டிருந்தால் அவர்கள் திருமண மின்றி கடைசீ வரை பிரம்மச் சாரியாகவே இருந்து விடுகிறார்கள். இவன் வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்க முடியவில்லை என்றாலும் இவன் மனைவி எல்லா நற்குணங்களும் அமையப் பெற்றவன்.

### ஆரோக்கியம்

மேலுக்கு ஆரோக்கியவானாகத் தோன்றினாலும் உள்ளூர பலவீன மானவன். உடலுக்கு ஏற்படும் சிறு துன்பத்தைக் கூட இவனால் தாங்கிக் கொள்ள முடியாது. டயபெடிஸ். மூத்திர மற்றும் சுவாச சம்பந்தமான நோய்கள் இவனை பாதிக்கும். உடலுறவில் அதிகமாக ஈடுபடுவதால் பெண் வியாதிகள் இவனை பீடிக்கலாம். இவன் பிற பெண்களுடன் வைத்திருக்கும் ரகசிய உறவு பிறருக்குத் தெரியாமல் கடைசீ வரை ரகசியமாகவே இருக்கும். தவடைகளில் பிரச்சினை ஏற்படும். வயிற்றில் புண்கள் ஏற்பட்டு கஷ்டப்படுத்தும். இவன் குளிர் காற்று. குளிர் மாற்றம் சீதோஷ்ண ஸ்திதிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.

## பொதுப் பலன்-பெண்கள்

### உருவத்தோற்றம்

ஒல்லியாகவும், உயரமாகவும், சுமாரான அழகுடனும் இருப்பார்கள். சதை பிடிப்பான உதடுகளும், கன்னங்களும் உள்ளவர்கள். முன் நெற்றியும் பிருஷ்ட பாகங்களும் பிறரைக் கவரும். கம்பீரமான தோற்றம் உள்ளவர்கள்.

### குணங்கள்

பொறுமையும், அமைதியான குணமும் கொண்டவள். சில சமயங் களில் கோபமும் உள்ளவளாவாள். கடவுளுக்கு பயந்தவள். குல ஆச்சார ஆனுஷ்டானங்களில் ஈடுபாடு உள்ளவள். இவளுடைய கோபத்தின் காரணமாக குடும்பச் சண்டையில் அடிக்கடி மாட்டிக் கொள்ள நேரும். இதனால் மன நிம்மதி போய் விடும்.

நல்ல ஞாபக சக்தி உடையவள். இரக்க குணமும், தாராள மனப் பான்மையும் உடையவள். மனித நேயமுள்ள காரியங்களை இவள் பிரதிபலன் எதிர்பாராமல் செய்வாள். ஆனால் இதை பெறும் ஜனங்களும் குடும்பத்தினரும் தவறான கண்ணோட்டத்திலேயே காண்பார்கள்

*கல்வி-தொழில்*

விஞ்ஞானக் கல்வியில் ஆர்வமுள்ளவள். பெரும்பான்மையான பெண் டாக்டர்கள் சதய நட்சத்திரத்தில் பிறந்தவர்களே!

*குடும்ப வாழ்க்கை*

தன் கணவனை காதலித்தாலும் இவள் வாழ்க்கை பிரச்சனைகள் நிறைந்ததாகவே இருக்கும். சில சமயம் கணவரிடமிருந்து நீண்ட நாள் பிரிவும் சிலருக்கு வைதவ்யமும் ஏற்படும். சதய நட்சத்திரத்தில் பெண்கள் பூப்படைந்தால் அதிக பெண் குழந்தைகளைப் பெற்றெடுப்பார்கள்.

*ஆரோக்யம்*

இவள் ஆரோக்கியமே இவளுக்கு பெரிய கவலையாக இருக்கும், சிறுநீர் கோளாறும், கருப்பை கோளாறும் ஏற்படும். நெஞ்சுவலியும் வயிற்றுக் கோளாறும் ஏற்படும்.

*சதய நட்சத்திரத்தில் இருக்கும் கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்த பலன்.*

இதற்கு திருவோண நட்சத்திரத்திற்கு கொடுத்துள்ள பயன்களை பார்க்கவும்.

*சதய நட்சத்திரத்தின் பாதங்களின் இருக்கும் கிரகங்கள் தரும் பலன்*

*சதயம் 1ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்*

சூரியன் இதில் இருக்கையில் சனி பூரத்தில் இருந்தால் ஜாதகன் குல தெய்வத்தின் சாபத்தினால் தன் குழந்தைகளின் அழிவுக்கு காரணமாயிருப்பான்.

*சதயம் 1ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்*

ஜாதகன் டாக்டராக இருக்கலாம். இவன் மிக்க தைரியசாலி.

துக்கத்துடன் இருப்பவன். கனிவாகப் பேசுவான். மத சார்பு உடையவன். இரண்டிற்கு மேற்பட்ட மனைவிகளை உடையவன். இடது கையில் அடையாளக் குறி இருக்கும். 5,12,28ம் வயது ஆபத்தானவை.

பிடிவாதக் காரன். வெளித்தோற்றம் அருள் மயமாக இருக்கும். அவன் மனதில் உள்ள எண்ணங்களை எவராலும் அறிய இயலாது. தன் தாயைத் தவிர மற்றவர்களைப் பற்றிய கவலையே இல்லை நல்ல நடத்தை அற்றவன்.

## *சதயம் 1ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலம்*

தீயமனிதர்கள் இவனை சுற்றி இருப்பார்கள். இவர்களால் ஜாதகன் சீண்டப்படுவதால் கவலை உள்வனாக இருப்பான். இதைத்தவிர. இவன் நல்ல குணசாலியாக இருப்பான். கௌரவம் மிக்கவனாகவும், தாராள மனதுடையவனாகவுமிருப்பான். தன்னுடைய உற்றார் உறவினர்களுக்கு தன் கடமையைச் செய்வான். கண்கள் வெளியே வந்திருக்கும்.

## *சதயம் 1ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இத்துடன் லக்னமும் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்தால் இந்தக் குழந்தைகள் 11 வயதுவரையே ஜீவித்திருக்கும். இவன் தன் சகோதரனுடன் சேர்ந்து பிஸினஸ் செய்வான். பிஸினஸ் ஒரு நிலையில்லாமல் லாப நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இதில் ஸ்திரத்தன்மை இவனது 40 வயதுக்குப் பிறகே ஏற்படும்.

## *சதயம் 1ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

இவன் சிறுவனாக இருக்கும்போது இவனும் இவன் தாயும் பெரிய பெரிய கஷ்டங்களை எதிர் நோக்குவார்கள். இவர்கள் இருவரையும் இவனது தகப்பனார் கவனித்துக் கொள்ளமாட்டார். மற்ற உறவினர்களின் ஆதரவில் வளருவார்கள். பின் ஜாதகனுக்கு அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்கும். பின் வாழ்க்கை செம்மையாக நடக்கும். ஆனால் இவனது 31 வயது நெருங்கும் போது மோட்டார் வண்டியினால் விபத்து ஏற்பட வாய்ப்பு

உள்ளதால் அந்த கால கட்டத்தில் இவன் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

*சதயம் 1ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

சுக்கிரன் தன் உச்சத்தை நோக்கிச் செல்வதால் ஜாதகன் நல்ல வாழ்க்கையை அனுபவிப்பான். இவனுடைய திருமணம் இளம் வயதிலேயே அதாவது 20 வயதிலேயே நடந்து விடும். ஆனால் இந்த நவீன காலத்தில் 20 வயதில் திருமணம் நடப்பது அபூர்வம்,. ஆதலால் இவன் 20 வயதளவிலேயே திருமண இன்பத்தை நுகர்வான் என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

*சதயம் 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

நல்ல மனைவி மக்களையும் செல்வத்தையும் பெற்றிருப்பான். பணிவும் அடக்கமும் உடையவன். உண்மையானவன். கடினமாக உழைப்பவன். தன் வாழ்க்கையின் பெருபான்மையான காலத்தை விஞ்ஞான ஆராய்ச்சியில் செலவழித்து அதில் கௌரவமும் புகழும் அடைவான்.

*சதயம் 1ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

சூரியனும் புதனும் இந்த ராகுவை பார்த்திருந்தால் இவன் ''டீபி'' யால் பாதிக்கப்பட்டு மரணமடைவான்.

*சதயம் 1ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்*

இந்த கேது சுபர்கள் சம்பந்தப்படாமல் இருந்தால், வாழ்க்கையில் எல்லாவித கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்க நேரும். மாறாக, இவன் சூரியன், புதன் இவர்களுடன் சேர்ந்து குருவால் பாக்கப்பட்டால் ஜாதகனுக்கத் துன்பமில்லை கஷ்டமும் இல்லை. உயர்பட்டப் படிப்பில் ''டிஸ்டிங்ஷன்'' வாங்குவான். ஒரு நல்ல என்ஜினீராகவும் ஆகலாம்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்*

லக்னம் உத்திரட்டாதியில் இருந்து, சூரியனும் சந்திரனும் இங்கு

இருந்தால் ஜாதகன் கண்கள் குருடாகும். இந்த சேர்க்கையை செவ்வாய் பார்த்தால் முழுக்குருடாம்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்*

இங்குள்ள சந்திரன் ஜாதகனை புகழ் மிக்க சோதிடனாக ஆக்குவான். சதயம் முதல் பாதத்தில் பிறந்தவர்களைப் போல் அல்லாமல் ஜாதகனுக்கு ஒரு மனைவியே அமையும். அவளை இவன் மிக மிக நேசிப்பான். இவனுக்கு ஒரே ஒரு குழந்தை தான் பிறக்கும். மோட்டார் விபத்து அல்லது தீய மனிதர்களால் ஆபத்து ஏற்படும் வாய்ப்பு இவனது 28வது வயதில் ஏற்படும். ஆதலால் அவ்வமயம் இவன் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

நன்மையும் தீமையும் கலந்த பலன்கள் இவனுக்கு ஏற்படும். சில சமயம் உச்சத்தில் இருப்பான். சில சமயம் தாழ் நிலைக்கு வந்து விடுவான். சீட்டாடும், பழக்கம் சூதாட்டப்பழக்கம் இரண்டும் இவனிடம் உள்ளதால், அவை இவன் வாழ்க்கையை துயர் உள்ளதாகச் செய்யும்,

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

இந்த இடத்தில் லக்னமும் அமைந்து மக நட்சத்திரத்தில் சுக்கிரன் இருந்தால், இந்த செவ்வாய் அடுத்த சுற்றில் இந்த இடத்துக்கு வரும் போது இச்குழந்தை இறந்து விடும்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இவன் சகோதரன் பலமான "தனயோகத்தை" அனுபவிப்பான் ஜாதகனுக்கு இவன் பெரிய சகோதரன் வேண்டிய உ.தவிகளைச் செய்வான். இந்த புதன் சுக்கிரனுடன் சேர்ந்து இருந்தால். ஆணானால் 25 வயதிலும் பெண்ணானால் 22 வயதிலும் திருமணமாகும்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

இந்த குருவுடன், மக நட்சத்திரத்தில் சனியும் இருந்தால் ஜாதகன் தன்னைவிட வயதில் பெரியவளை மணப்பான், இந்த சேர்க்கையுடன்,

சுக்கிரன் ரோகிணி நட்சத்திரத்தில் இருந்தால், இவன் மனைவி உத்தியோகத்தில் நல்ல பொஸிஷனில் இருப்பாள். 35 வயது வரையில் வாழ்க்கையில் இருவருக்குள்ளும் ஒற்றுமை இராது.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

ஜாதகன் டாக்டர் அல்லது கெமிஸ்டாக இருப்பான். பெண்ணானால் ரிஸப்ஷனிஸ்ட் அல்லது நர்ஸாக இருப்பாள். இவர்களுக்கு கூட சீக்கிரமாகவே கல்யாணமாகிவிடும்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

செக்ஸ் உணர்வு அதிக முள்ளவன். ஆதலால் எப்போதும் பிறர் மனைவி அழகாக இருந்தால் அவர்களை போகிக்க ஆசை கொள்வான். பேசுகையில் கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பான். நெருப்பு போன்றவன்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

இந்த இடம் லக்னமுமாகி பாவிகள் பார்வை ஏற்பட்டால் இக்குழந்தை 10 வயதிற்குள் மரித்து விடும். இதை குரு பார்த்தால் குழந்தை பிழைத்து விடும். மேலும் வாழ்க்கையில் உன்னத நிலையை அடையும். இவன் திருமணம் கூட அன்யோன்யமுள்ளாதாக இருக்கும்.

*சதயம் 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்*

கேதுவுக்கு சதயம் 1ம் பாதத்தில் கூறப்பட்ட பலன்களே நடக்கும். அத்துடன் ஜாதகன் வயிற்று "அல்சர்" கடுமையான ஜலதோஷம் இருமலால் அவதிப்படுவான்.

*சதயம் 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்*

சதயம் 3ம் சூரியன் செவ்வாய் சனி மூவரும் இருந்து, லக்னம், மிருகசீர்ஷத்தில் இருந்தால், ஜாதகன் வெளியூரில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் போது விபத்து அல்லது நெருப்பின் காரணமாக மரணத்தைத் தழுவுவான்.

**சதயம் 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்**

ஒல்லியான உருவம் இருந்தாலும், மிக்க தைரியமானவன். பயமில்லாதவன். பிஸினஸ் "மாக்னட்டுகள்" அல்லது அரசியல் வாதிகள் அல்லது அரசாங்கத்திடமிருந்து அதிக நன்மைகளைப் பெறுவான். இருந்தாலும் தன் வருமானத்தின் பெரும் பங்கை குடிப்பதிலும் மற்ற மனமகிழ்ச்சி தரும் களியாட்டங்களிலும் செலவழிப்பான். 5, 12, 28ம் வயதுகள் இவனுடைய விதியை நிர்ணயம் செய்யும் காலமாக அமையும்

பல இறக்கங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டாலும் இவன் தன்னுடைய கீழ்த்தரமான செயல்களை விடமாட்டான். இவன் மேல் கிரிமினல் வழக்கு ஏற்படும். ஆனால் சுபர் பார்வை இருந்தால் இந்த வழக்கு ஏற்படாது. இவன் பெரும் செல்வத்தை அடைவான்.

**சதயம் 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்**

லக்னமும் இதில் அமைந்து, சூரியன் மகம் நட்சத்திரத்தில் இருந்தால், இந்த குழந்தை பிறந்த உடனேயே உயிர் பிரிந்துவிடும்.

**சதயம் 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்**

இந்த புதன் சனியுடன் சேர்ந்திருந்தால், ஜாதகன் அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்து உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவான். செவ்வாயுடன் சேர்ந்திருந்தால் ஜாதகன் தன் 31ம் வயது வரை சொல்ல முடியாத கஷ்டங்களையும் துயரத்தையும் அனுபவிப்பான். 31 வயதுக்குப் பிறகு இவன் வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டு, மேன்மையும், நிரந்தரமான செழிப்பும் ஏற்படும். தன் மனைவியின் சொத்து சுகத்தில் வாழ்க்கையை நடத்துவான். ஆனால் திருமண வாழ்க்கையில் சந்தோஷம் இருக்காது.

**சதயம் 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்**

ஜாதகன் தன் பெற்றோரின் சீமந்த புத்திரனாக இருப்பான். லக்னம் ஆயில்ய நட்சத்திரத்தில் இருந்து குரு இங்கிருக்கையில் பிறந்த குழந்தை 11 நாட்களே வாழும்.

*சதயம் 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

பிறரைக் கவரும்படியான உருவ அமைப்பைக் கொண்டவன். எல்லோரிடம் நல்ல விதமாகப் பழகுவான். சாமர்த்திய சாலி, இவன் காம விளையாட்டில் அதிகமாக ஈடுபடுவான் ஆணாக இருந்தால் 26 வயதுக்கு முன்னும், பெண்ணாக இருந்தால் 19 வயதுக்கு முன்னும் திருமணம் ஆகாது!

*சதயம் 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

இவன் ஒரு "ஜீனியஸ்" எதையும் செய்ய திறமைப் பெற்றவன். கஷ்டமான காரிய என்று பிறரால் கைவிடப்பட்டதை செய்து முடிக்கும் சாமர்த்தியம் படைத்தவன். அதனால் இவன் போலீஸ் "டிபன்ஸ்" அல்லது பாதுகாப்பு செக்யூரிடி டிபார்ட்மெண்டுகளில் ஊழியம் புரிவான்.

*சதயம் 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

இங்குள்ள ராகு, சனியுடன் சேர்ந்தால் ஜாதகன் திருடன் அல்லது கள்ளக் கடத்தல் காரனாக இருப்பான். ஆனால் இவன் மிகவும் தாராள மனதும் ஏழைகளிடம் அன்புகொண்டவன். ஒரு டவுனின் தலைவனாக இருப்பான்.

*சதயம் 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்*

இவன் வீட்டில் திருட்டு போவதா மிகுந்த நஷ்டம் ஏற்படும் அரசாங்கத்தால் தண்டிக்கப்படலாம். எல்லாவற்றிலும் ஏமாற்றம் அடைவான். குரு பார்வை ஏற்பட்டால் இந்த தீய பலன்கள் குறையும்.

*சதயம் 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்*

ஜாதகன் ஒன்றும் அறியாதவன். ஆனால் இழந்த நடத்தையும், தந்திரமும். பொல்லாத்தனமும் கொண்டவன். சிறு பொருட்களை விற்கும் பிஸினஸ் செய்வான். அல்லது சிறிய தொரு வேலையில் சேரப்பான். அதில் போதுமான வருமானம் இருக்காது. ஏழையாகவே கடைசி வரை இருப்பான். பிறருடைய பொருட் செலவில் எதையும் அனுபவிக்க ஆர்வம்

உள்ளவன். இப்படி இருந்தாலும் இந்த சூரியனை ஒரு பார்த்திருந்தால் நல்ல பணக்காரனாயிருப்பான். வசதிகள் பெருகும். உத்தியோகத்திலும், வாழ்க்கையிலும் உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுவான்.

### *சதயம் 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்*

சூரியனும் செவ்வாயும் உத்தரம் துல் பாதத்தில் இருந்தால் இந்த குழந்தை ஒரு வாரமே உயிர் வாழும். சந்திரன் மட்டும் இங்கிருந்தால் குழந்தைக்கு தீர்காயுள் உண்டாகும். எனினும் குழந்தைக்கு 5 வயது ஆகும் போது தீக்காயம் ஏற்படும் 12 வயதாகும் போது இவனுக்கு ஜா கண்டமும். 30 வயதாகும் போது ஏதாவது விபத்தும் ஏற்படும் அபாயம் உண்டு.

### *சதயம் 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

பெருமாலும் ஜாதகன் "பிஸினஸ்" லைனில் இருப்பான். அந்த பிஸினஸ்ஸில் எப்போதும் லாபம் உண்டாகும். இவனுடைய தமையன் இவனுக்கு யோசனையும், உதவியும் செய்து இவன் முன்னேற்றத்துக்கு உதவி புரிவான். அல்லது வழிகாட்டுவான். ஆஸ்துமா அல்லது நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட ஏது உண்டு.

### *சதயம் 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இந்த புதனுடன் சூரியன், சந்திரன், குரு மூவரும் சேர்வார்களேயானால், ஜாதகன் பணக்கார குடும்பத்தில் பிறந்தவனாயிருந்தாலும் கூட பணம் இன்றி தவிப்பான், அரசனாயிருந்து ஆண்டியாகி விடுவான். ஆனால் இங்கு புதன் மட்டும் தனித்திருந்தாலோ அல்லது, சனி அல்லது சுக்கிரனுடன் சேர்ந்திருந்தாலோ ஜாதகனுக்குத் தேவையான பணவசதி இருக்கும். இவன் தனது 23, 28 வது வயதுகளில் சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

### *சதயம் 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

குருவுக்கு 3ம் பாதத்தில் சொல்லிய பலன்கள் இங்கும் நடைபெறும்.

ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால் குரு மட்டும் தனியாக, பிற கிரகங்களின் பார்வை இல்லாமல் இருந்தால் ஜாதகனுக்கு தீர்காயுளும் மத்திய தர வாழ்க்கையும் உண்டாகும்.

### சதயம் 4ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

இந்த சுக்கிரன் புதனுடன் கூட இருந்தால் ஜாதகன் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பான். ஆரம்பத்தில் கடை நிலை ஊழியத்தில் சேருவான். போகப் போக உயர்வு ஏற்பட்டு மேல் நிலையை அடையவான். சிலருக்கு படிப்பில் தடை ஏற்படும்.

### சதயம் 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

பொதுவாக தன் சொந்த ஊரை விட்டு வெளியூரில் வாழ்வான். ஏகப்பட்ட தனத்தை சம்பாதிப்பான். பின் தன் வயதான காலத்தில் தன் சொந்த ஊருக்கே திரும்பி வந்து மீதி நாட்களைக் கழிப்பான். நல்ல மனைவியும் குழந்தைகளும் வாய்ப்பார்கள். இவனது 55வது வயதில் மனைவிக்கு சித்தபிரமை ஏற்பட்டு அவள் வைத்தியத்துக்காக தன் செல்வத்தின். பெரும்பகுதியை செலவழிப்பான்

### சதயம் 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இங்கு சந்திரனும் ராகுவும் சேர்ந்து, லக்னம் ஹஸ்தம் அல்லது ஆயில்யமானால் இவனுடைய தாய் இளம்வயதிலேயே இறந்து போவாள். தந்தை தன் மனைவியின் பிரிவால் பைத்தியமாகி விடுவார். அல்லது ஜாதகனைத் துறந்து சென்றுவிடுவார்.

***சதயம் 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்***

பெரும் பணத்தையும். அதிகார பலத்தையும் இழப்பான். வேலைக் காரிகளுடன் உடல் இன்பம் பெறுவான். இதை உறவினர்கள் கண்டு பிடித்து விடுவதால் ஊரைவிட்டே ஓடி விடுவான். 40 வயதுக்கு பிறகு வாழ்க்கையில் "செட்டில்" ஆவான். அதுவரை கையைக் கட்டிக்கொண்டு உட்கார வேண்டியது தான்.

சதயம் நட்சத்திரக்காரர்களின் சராசரி வயது 88.



# அத்தியாயம் - 34

## பூரட்டாதி நட்சத்திரம்

இது 25 வது நட்சத்திரம் இது ராசி மண்டலத்தில் 32000 பாகை முதல் 333 பாகை 20 கலை வரையில் பரவியுள்ளது.

தமிழ் பெயர் - பூரட்டாதி

வடமொழிப்பெயர் - பூர்வா பத்ர பாதா

அரபுப் பெயர் - அல் பர்க் அல் முக்டிம் (AL FARGAL MUTIDIM) (தண்ணீர் ஜாடி ஒன்றின் நான்கு கிண்டி போல் துளை உள்ளது என்று பொருள்)

சீனப்பெயர் - சீ (CHI)

பூர்வ என்பது. கடந்த காலம் - பத்ரம் - என்பது மங்களத்தை தரக் கூடியது. பாதம் என்பது கால்கள், பழம் காலம் தொட்டு இது குருவின் நட்சத்திரமானதால் மங்களத்தைத் தருக் கூடியது என்று கூறப்படும். ஆனால் முகூர்த்த சாத்திரத்தில் இது நல்ல காரியங்களுக்கு எடுக்கவில்லை (பரணிமுப்பூரம் கேட்டை.,) என்ற பாடலைப் பலரும் அறிவர். இது இரண்டு நட்சத்திரங்களாலான சங்கு போன்ற உருவமுள்ளது என்பர்.

இந்த நட்சத்திரத்திற்கு தேவதை அஜேக பாதர் என்ற ருத்ரனாவார் (ஒரு காலுடைய ஆடு என்று பெயர்) ஆனால் இந்தப் பொருள் தவறு அஜன் என்றால் பிறப்பில்லாதவன் எனவே பிறப்பில்லாத தானே தோன்றிய முழுதற்கடவுளாக ஒரே பாதத்தில் நிற்பவர் என்பது தான் சரியான பொருள்.

இதில் பிறந்தவன் நடுத்தர உயரம்,, பருமன் கை கால்கள் உள்ளவன். அகன்ற கொழு கொழு கன்னங்களும் பருத்த அழகான உதடுகளும் உள்ளவன் என்று சொல்லுவர்.

அடுத்து "மரண கண்டிகை" சுவடி எண் 1500 கூறும் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தன்மைகள்.

218. மெத்தநாணத்தைப் பேணும் வெகுளிசொல் பேசான் வல்லன்
கைத்தலம் கமலம் ஒக்கும் கருமங்கள் பலவும் பேசும்
மூத்தொடு மணியும் பொன்னும் முறைமையால் அணியவல்லான்
பொத்திடும் பொய்யும் சொல்லான் பூரட்டாதி நாளி னானே.

(இதன் பொருள்)

இதில் பிறந்தவன் மிகவும் மானம் உள்ளவன். கோபித்துக் கடுத்துச் சிறிதும் பேசமாட்டான். செய்யும் காரியங்கள் எல்லாம் சொல்லியபடியே செய்வான். இவன் கைகள் தாமரை போன்று நளினமானவை. முத்து. ரத்தினம், பொன்னாலான ஆபரணங்களைத் தேர்வு செய்து அணிபவன் மனதிற்கு உறுத்திடும் பொய் ஒன்றும் பேசமாட்டான். இவனே பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன் ஆவான் என்பதாம்.

இன்னானுக்குத் தெய்வம் ஈஸ்வரன். பூதம் பிரிதிவி கோத்திரம் அகஸ்த்தியன் சாதி பிராமணன் வைசியன். யோனி புருஷாமிருகம் ஆண் சிங்கம். பட்சி உள்ளான். விருட்சம் தென்னை மரம். மனுஷ கணம் இதற்கு யோகினி-இந்திராணி. மாசி மாதம் இந்த நட்சத்திரம். 19 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம் வெதுப்பு தோன்றில் 7 நாளில் தீரும். இதற்கு நெய்யும் கருப்பஞ்சாறும் கலந்து மந்திரம் கூறி நைவேத்யம் மற்றும் ஓமம் செய்வது திசை தானம் செய்ய வேண்டும். இதில் பெண் திரளில பிள்ளை பெற்று இறப்பாள்.

இவன் குணம்

ஒருவருக்கும் விட்டுக் கொடுக்காத முன்கோபி. தெய்வ வழிபாடுடையவன். காலும், கையும், உடலும் அழகாய் இருப்பவன். மெய் வருத்தி உழைக்க வல்லவன்.

*பிற நூற் செய்திகள்*

இது கட்டில் கால் போல் உருவமுள்ளது. சிலர் சுத்தி போன்று உள்ளது என்றும் கூறுவர். இதற்கு முக்கால் நட்சத்திரம் என்ற பெயரும் உண்டு. இதைச் சம தாமரை என்றும் கூறுவர்.

இதில் செய்யத் தக்கவை மந்திரோபதேசம் பெறல், கிணறு வெட்ட ஏற்றது விக்கிரக பிரதிஷ்டை, வழிபாட்டுக்கும் ஏற்றது, பயிர்த் தொழில் மெஷின் மற்ற கருவிகள் வாங்க நல்ல நாள் செங்கல் சூளை பிரிக்க ஏற்ற நாள். கொடுக்கல் வாங்கல் செய்ய, கால் நடை புதிததாக வாங்கவும் விற்கவும் இது நல்லது.

இதில் பிரயாணம் செய்தல் வர்ஜிதம். நிபர்ந்தமானால் தேன் கலந்த ஆகாரம் உண்டு கிழக்கு திக்கில் மட்டும் பயணம் செய்யலாம்.

இதை அக்டோபர் மாதத்தில் நள்ளிரவுக்கு மேல் பார்க்கலாம்.

இது இக வாழ்வில் வெற்றி காணும் நட்சத்திரம் வாய்ச் சொல்லில் வீரர். ஆனால் பெண்களுக்கு அடங்கிப் போவார்கள். மனைவி மூலம் சொத்து பணம் உண்டு.

முகத்திலும் மற்ற விடத்திலும் மச்சமுண்டு. இடத்தில் பெண் திரளில் முதல் இரண்டு பாதம் அசுபம் இதற்கு தேவப் பிரீதியும் சாந்தியும் செய்ய வேண்டும்.

"பூரட்டாதி பிறவி பொன் பிறவி" என்ற வாக்கு இவர்கள் பணத் தட்டுபாடு இல்லாதவர் என்பதை வலியுறுத்தும்.

திங்கள், செவ்வாய், சனி கிழமைகளில் பூரட்டாதி மரணயோகமாம். இதில் ஜனனமானால் சாந்தி செய்ய வேண்டும்.

இது அதோமுக நட்சத்திரமாக "வ" அல்ல "ச" என்பது இதன் அக்ஷரம் சுரமாகம். இதில் பணம் கடன் கொடுக்கக்கூடாது. வேறு எந்த பொருளையும் இரவலுக்குக் கூடக் கொடுக்கக் கூடாது.

கடைசி அம்சம் நாகபலிக்கேற்றது. 2வது அம்சத்தில் வெள்ளி முளைக்கும் போது கிணறு வெட்டலாம். இந்நாளில் சிகப்பு மேகம் தோன்றினால் 8 நாளில் மழை சுரம் உண்டானால் 22 நாள் பீடை தயிர் நெய் நைவேத்யம். எருக்கம் பூவால் பூஜைத சாங்கம் அல்லது ஔஷதம் கலந்து தூபம்.

தன "சன்னோ அத ஏகபாத்" என்ற மந்திரம் நெய் பூசணிக்காய் (ஓம) திரவியம் சாவித்திரி மந்திரத்தால் 108 தடவை ஓமம், சந்தனம் புஷ்பம். ஏகபாத மூர்த்திக்கு பலி.

இந்த ராசி தேவைகளுக்கும் அஷ்டதிக்கு பாலர்களுக்கு சாதம் பலி செய்ய வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் மரணம் இதில் மாதம் பிறந்தால் பயிர் விளைச்சல் குறையும்.

***தமிழ் ஜாதகாலங்காரம் கூறும் பூரட்டாதி நட்சத்திர பலன்***

*219. பூரட்டாதி பொறான் பிறர் பொத்துச் சொல்
நேரிட்டார் வழக்கன்பால் நெய்க்கு அன்பினான்
வாரிட்டார் முலை மாதருக்கு ஈவிலான்
ஓரிட்டார் கல்வி மான் நாசி உன்னதன்.*

(இதன் பொருள்)

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன் பிறர் கூறும் கொடிய அல்லது வகைச் சொற்களைப் பொறுக்க மாட்டான். வழக்குகளை தீர்க்க வல்லவன் பால் நெய் இவைகளை உண்பதில் பிரியமுள்ளவன். பெண்களுக்காக அதிகம் செலவு செய்யாதவன் ஒப்பற்ற நுண்ணிய கல்வியுடையவன். இவன் உயர்ந்த மூக்கு உள்ளவனுமாவான் என்பதாம்.

பூர்வ பத்ர பாதம்-பசுவின் முன்கால்களைப் போல் காணப்படுவதால் இது பூர்வ பத்ர பாதம் என்று பெயர் பெற்றது. இதுவே தமிழில் பூரட்டாதி எனத் திரிந்து எனப்பட்டது.

*யவன ஜாதகம்*

மிக்க விசன முடையவனும். பெண்களுக்கு கீழ்படிபவனும் முட்டாள் தனமுடையவனும், பிறரைக் தூஷணை செய்பவனும். அதர்மம் செய்வதில் துணிந்தவன் வீரமுடையவனும் ஆவான்.

*பிருஹத் ஜாதகம்*

எதிலும் கவலை பயம், ஸ்தீரிகளால் தங்களுக்கு ஆதிக்கம் உள்ளவன். தனமுள்ளவன் நன்றாகப் பேசுபவன். பொருள் ஈட்டுபவதில் வல்லவன். ஆனால் யாருக்கும் தருமம் செய்யாதவன். இப்படி பல குணங்களை யுடையவன் என்பதாம்.

**பெண்கள்**

*வடமொழி ஸ்த்ரீ ஜாதகம் கூறுவது*

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவள் மிகவும் பணம் மிகுந்தவள் புண்ணிய கதைகள் கேட்பதில் பிரியமுள்ளவள். பேராசை உடையவள். ஆனால் நல்லவர்களுக்குத் தானம் பண்ணுவதில் பிரயமுள்ளவள். சாதுக்கள், பெரியயோர்களிடம் விசுவாசம் மரியாதையும் உடையவள். அவர்களிடம். ஞானம் அடையும். ஆசை உடையவள். எப்படியும் இவளிடம் நிறைய தனம் குவியும்.

*வேறு நூல்*

இவள் எப்பொழுதும் பாவகர்மமே செய்பவள். நிறைய உண்பவள் (பெருந்தீனிக்காரி). மாயாஜலம் பண்ணுபவள். ஆனால் தேவதா பக்தி உடையவள்.

*சங்கராசாரியர் மதன நூல் கூறுவது, இது அரக்கி தத்துவ நட்சத்திர மாகும்.*

*220. ஆருக்காகிலும் இச்சையில் அன்பில்லார்*
*பூரத் தோள் நல் பணைத்தெழும் கொங்கையாள்*
*ஆருக் காகிலும் உற்றார்க்கும் உட்கிடாள்*
*பூரட்டாதி பிறந்ததோர் பாவையே*

(இதன் பொருள்)

பூராட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த பெண் யாரிடத்திலும் அன்போ ஆசையோ இல்லாதவள் பருத்த தோள்களும் அளவுக் கதிகமான பருத்த நிமிந்துந்தெழுந்த கொங்கைகள் உள்ளவள். ஊர் மக்களுக்கோ உறவினர்களுக்கோ பயப்படாதவள் என்பதாம்.

*பூராட்டாதி நட்சத்திர பாத பலன்*

*221. மறையவன் பரந்த முகமுளன் பலவான்*
*மனைவிமேற் பிரியன்போர் புரிபவன்*
*மனவுணர் வுடைய னுத்தேசி சுகவான்*
*மன்னு பூரட்டாதி முதற்கால்*
*இறையவன் சிரேஷ்ட மந்திர மறிவான்*
*இளைத்திடான் மனதுமே ஒல்கி*
*எவர்க்குமே வணங்கிக் காரிய முடிப்பவன்*
*இருபதம் சந்தோஷ வானாம்*
*பொறையுளான் நல்லன் நடையுடையப் புலவன்*
*பிறர்மனைப் போசனப் பிரியன்*
*போதம் செய் பித்த ரோகிய னாகும்*
*புத்திமான் பேசிடு மூன்றில்*
*தரைபுகழ் குணவான் சத்தியன் அழகன்*
*தாழ்வுறு சினே சிதப்பிரியன்*
*நற்றொழில் புரியும் சுகமுளன் சீமான்*
*சாற்றுநாற் பதமுறு நாளே!*

(இதன் பொருள்)

1) பூரட்டாதி முதல் பாதத்தில் பிறந்தவன் வேதங்களைக் கற்றுணர்பவன், விசாலமான பரந்த முகத்தையுடையவன். தன் மனைவியிடம் அதிக இச்சையுள்ளவன். போர் செய்யும் திறமையுள்ளவன், மன ஆலோசனை ஆராய்ச்சியுள்ளவன், சுக சௌக்ய தேகமுடையவன் என்பதாம்.

2) பூரட்டாதி 2ம் பாதத்தில் பிறந்தவன் பரமார்த்த தரிசனத்துக்கூரிய மந்திரங்களை அறிந்து தேர்ந்தவன். எக்காரியத்திலும் சலிப்படையாதவன். அனைவருக்கும் கீழ்ப்படிபவன் தன் காரியதையும் முடித்துக் கொள்பவன்.

3) பூரட்டாதி மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் எந்நாளிலும் துன்பத்தைச் சிறிதும் அறியாதவன். நன் மார்க்கங்களை அறிந்தவன். செய்பவன் நன்னடத்தையுள்ளவன். கௌரவத்தையே அனுபவிப்பவன். மேலும் வேதங்களை அறிந்த சாஸ்திர சித்தன் வெளியார் இல்லங்களில் உண்ணும். பழகும் ஆசையுள்ளவன். பித்த ரோகமுள்ளவன். நன்மையே செய்வதில் ஆர்வமுடையவன்.

4) பூரட்டாதி நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவன் இப்பூமியில் உள்ள அனைவரும் புகழ்ந்து பேசும் நற்குணமுடையவன். தானுரைத்த மொழி பிரகாதவன், பூரண தேஜசுடையவன், என்னாளும் தாழ்வடையாத நட்புடையவன்.. சன்மார்க்கமுடையவன். சௌக்கியமுடையவன் தனவந்தனும் ஆவான் என்பதாம்.

*ஜாதக சார தீபம் சொல்லும் சதயம் நட்சத்திர பாத பலன்*

### முதல் பாதம்

1) முதல் பாதத்தில் பிறந்தவன் சூரன் வீரன்

2) இரண்டாம் பாதம் அதிக புத்திமான்.

3) மூன்றாம் பாதம் நகர வாசத்தில் சுகப்படுபதன்

4) நான்காம் பாதம் போக போக்யங்கள் அனுபவிப்பவன்.

**சுவடி 1500 மரண கண்டி கூறும் பூரட்டாதி நட்சத்திர பாத பலன்கள்**

**பூரட்டாதி நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன்**

**222.** *குறுகிய உருவன் மெய்யன் குரலுடைய குதலை வாயன்*
*மறுகிய மனத்தான் பெண் மேல் மனமது சார நில்லான்*
*முறுகிய கொடுமை செய்யும் முதுகினில் மருவு முள்ளான்*
*சீர்தரும் உண்டி பேணும் சேயினங் கிஷத்தினானே.*

(இதன் பொருள்)

இவன் குள்ளமான உருவமுடையவன். இனிய குரலில் குழந்தையின் மழலைபோல் மதுரமாகப் பேசுபவன். அன்புள்ள மனத்தன் பெண் வசப்படாத மன முள்ளவன். சமயம் வரும்போது பெரும் கொடுமையான காரியமும் செய்பவன். இவன் முதுகில் மச்சமுண்டு நெருங்கிய கூந்தலுள்ள அழகியான மனைவியை. நன்கு பாதுகாப்பவன். இவனே செவ்வாய் அங்கிஷத்தில் பிறந்தவன் ஆவான் என்பதாம்.

**இதற்கு காலசக்கர தசை**

1. மேஷச் செவ்வாய் - 7 வருடம்
2. ரிஷப வெள்ளி - 16 வருடம்
3. மிதுன புதன் - 9 வருடம்
4. கடகச் சந்திரன் - 21 வருடம்
5. சிங்க ஆதித்தன் - 5 வருடம்
6. கன்னி புதன் - 9 வருடம்
7. துலா வெள்ளி - 16 வருடம்
8. விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்

9. தனுசு வியாழன் - 10 வருடம்

ஆகவயது - 100 வருடம்

**பூரட்டாதி 2ம் காலில் பிறந்தவன் பலன்**

**சுவடி 1500 மரணகண்டி சொல்லும் பலன்**

**223. தெள்ளிய தியாகி நல்லான் சேயிழையாரைப் பேணும்**
**ஒள்ளிய கண்ணினாள் மேல் தனம்பொருள் சார நில்லான்**
**பள்ளியும் பலவும் கற்கும் பாக்கிய முடைய னாகும்**
**வெள்ளியின் அங்கிஷத்தில் வந்த விருப்புடைக் காளை தானே.**

**(இதன் பொருள்)**

இவன் தெளிவான சிந்தையுள்ளவன். தியாக புத்தியுள்ளவன் தான் நேசிக்கும் பெண்களைப் பாதுகாப்பவன். ஒளி பொருந்திய கண்ணுள்ள அழகியான தன் மனைவியின் பணம் பொருள் மேல் உதவி எதிர்பார்க்காதவன். பள்ளிகள் கல்லூரிகள் இவற்றில் படித்து பெருங்கல்வி பெறுபவன். இவன் மிகவும் பாக்கியசாலி. இவனே சுக்கிரன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

**இதற்க்குக் காலச் சக்கர தசை வருமாறு**

1. மகரச் சனி - 4 வருடம்
2. கும்பச் சனி - 4 வருடம்
3. மீன வியாழன் - 10 வருடம்
4. விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்
5. துலாம் வெள்ளி - 16 வருடம்
6. கன்னி புதன் - 9 வருடம்
7. கற்கடக சந்திரன் - 21 வருடம்

8. சிங்க ஆதித்தன் - 5 வருடம்

9. மிதுன புதன் - 9 வருடம்

ஆகவயது - 85 வருடம்

***சுவடி எண் 1500 மரணகண்டி கூறும் பூரட்டாதி நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவன் பலன்.***

***224. மேதையான் அனங்கன் நல்லான் வேந்தரால் விருப்பமுண்டாம்***
***மாதுமால் உருவ மாகும் மனம்பிறர்க் கறிய ஒண்ணான்***
***தாது சேர் குழலினாள் மேல் தனமது சார நில்லான்***
***மீதுரு வலக்கை வல்லான் மிதுனவங் கிஷத்தி னானே!***

**(இதன் பொருள்)**

இவன் அறிவாளி மன்மதன் போல் அழகானவன். பெண்ணும் மயங்கும் அழகுடையவன். இவன் மனதைப் பிறரால் அறிய ஒண்ணாமன அழுத்தமுடையவன். தன் மனைவியின் கையை காசுபணம் எதற்கும் எதிர்பார்க்காதவன். இவன் வலக்கையின் அதிக பலமுள்ளவன். இவனே மிதுன அங்கிஷத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

***இதற்குக் கால சக்கரம் வருமாறு***

1. ரிஷப வெள்ளி - 16 வருடம்

2. மேஷச் செவ்வாய் - 7 வருடம்

3. மீன வியாழன் - 10 வருடம்

4. கும்பச் சனி - 4 வருடம்

5. மகரச் சனி - 4 வருடம்

| | | |
|---|---|---|
| 6. தனுசு வியாழன் | - | 10 வருடம் |
| 7. மேஷச் செவ்வாய் | - | 7 வருடம் |
| 8. இடப வெள்ளி | - | 16 வருடம் |
| 9. மிதுன புதன் | - | 9 வருடம் |
| ஆகவயது | - | 83 வருடம் |

*சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் பூரட்டாதி 4ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்*

*225. தலையது தடும னாகும் தன்மனப் பெரியோனாகும்*
*மலைதரும் வல்ல பத்தன் வடிவுடன் சிறந்த மேனி*
*கலைபல நன்று கற்கும் கடிமதக் காளை யாகும்*
*மலையென வளர்ந்த தோளன் மதியினங் கிஷத்தி னானே!*

*(இதன் பொருள்)*

பூரட்டாதி நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவன் தலை சிறிது பெருத்து காணும் பிறர் மலைத்து ஆச்சரியப் படும் அளவுக்கு திறமையும் வல்லமையும் உடையவனாகும். இவன் மனம் விசாலமான பரந்த நோக்கம் கொண்டவனாகும். பலவிதமான கலைகளையும் கல்வியையும் கற்றுத் தேர்பவனாகும். இவன் மிகவும் மதம் கொண்ட முரட்டு வீரம் கொண்டவனாகும். இவன் பெருத்த மலைபோல வளர்ந்த உயர்ந்த தோள்கள் உடையவனாவான். இவனே சந்திரனின் அங்கிஷத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

*இதற்குக் கால சக்கர தசை வருமாறு*

| | | |
|---|---|---|
| 1. கடகச் சந்திரன் | - | 21 வருடம் |
| 2. சிங்க ஆதித்தன் | - | 5 வருடம் |
| 3. கன்னி புதன் | - | 9 வருடம் |

| | | |
|---|---|---|
| 4. துலாம் வெள்ளி | - 16 | வருடம் |
| 5. விருச்சிகச் செவ்வாய் | - 7 | வருடம் |
| 6. தனுசு வியாழன் | - 10 | வருடம் |
| 7. மகரச் சனி | - 4 | வருடம் |
| 8. கும்பச் சனி | - 4 | வருடம் |
| 9. மீன வியாழன் | - 10 | வருடம் |
| ஆகவயது | - 86 | வருடம் |

**பூரட்டாதி நட்சத்திரத்திற்கு விம்சோத்தரி தசைகள் வருமாறு**

| | | |
|---|---|---|
| 1. குரு தசை | - 16 | வருடம் |
| 2. சனி தசை | - 19 | வருடம் |
| 3. புதன் தசை | - 17 | வருடம் |
| 4. கேது தசை | - 7 | வருடம் |
| 5. சுக்கிர தசை | - 20 | வருடம் |
| 6. சூரிய தசை | - 6 | வருடம் |
| 7. சந்திர தசை | - 10 | வருடம் |
| 8. செவ்வாய் தசை | - 7 | வருடம் |
| 9. ராகு தசை | - 18 | வருடம் |
| ஆகவயது | - 120 | வருடம் |

**இவனுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன**

இவன் பிறந்த ஆண்டில் சனி தோஷத்தால் கண்டம் 3ம் வயதில் வெதுப்பால், 5 வயதில் ஜலத்தால் 7வது வயதில் வைசூரியால் தொல்லை.

9 வது வயதால் கல்லால் அடிப்படுதலால் 12 வயதில் வெதுப்பு உதர ரோகத்தால், 19 வது வயதில் மரத்தில் இருந்து விழுதலால் 22வது வயதால் பெண்கள் சூழ்ச்சியால், 34 வயதில் சூலை வாதத்தால், 35 வயதில் அரசனால் (தண்டனை கண்டம்) 42 வயதில் மிருகத்தால் (முட்டுதல் முதலிய வற்றால்) 46 வயதில் வயிற்று வலியால் 50 வயதில் வாதத்தால், 55 வயதில் காய்ச் சலால், நீர் கண்டத்தால், 60 வயதில் மீண்டும் வாதத்தால் 83 வயதில் வெதுப்பால் இருமலால், அதன் பின் 10) வயது சென்று மாசி மாதம் பூர்வ பட்சத்து, பஞ்சமியும் பூரட்டாதி நட்சத்திரம் உதித்து 13 நாழிகை சென்று மரணம்.

*இவன் பிறந்த லக்னம்*

1) சூரியன் சாரமாகில் - சீமானாவான்
2) சந்திரன் சாரமாகில் - புரோகிதன்
3) செவ்வாய் சாரமாகில் - கள்ளன், நோயாளி, அழகன்
4) புதன் சாரமாகில் - வித்துவான்
5) குரு சாரமாகில் - ராஜாவாம்
6) சுக்கிரன் சாரமாகில் - மந்திரியாம்
7) சனி சாரமாகில் - தன் குலம் விட்டு மதம் மாறுவான், கள்வன்
8) ராகு சாரமாகில் - கலகம் பண்ணுபவன்
9) கேது சாரமாகில் - தரித்திர முடையவனாம்.

***கர்ம விபாகம் வடமொழி நூல் கூறும் பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி முறைகளும்.***

**கர்ம விபாகம் வடமொழி நூல் கூறும் பூரட்டாதி நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிகாரமும்.**

**சிவபெருமான் சொல்லுகிறார்.**

**வட மதுரையில் ஒரு வேளாளன் காய்கறி வியாபாரம் பண்ணி வந்தான்.**

இவன் பெயர் தேசவாதாஸ் என்பதாம். இவன் விஷ்ணு பக்தனாகவும்., புண்யாத்மாவாகவும் இருந்தான். இவனுக்கு ராதிகா என்ற மனைவியுண்டு. இவன் தன் பூரோஹிதனின் பணத்தின் முதலால் தன் வியாபாரம் நடத்தி பிழைத்து வந்தான்.

சில நாள் கழித்து இவனிடம் ஒரு பிராமணன் வந்தான். வேளாளன் தன் மனைவியுடன் அவனை வரவேற்று மரியாதை பூஜை முதலியவற்றைச் செய்தான். ஆனால் நாலாவது நாள் வேளாளன் பிராமணனுக்கு விஷம் கொடுத்தான். அந்தணன் இறந்தான். ஆனதால் பூசல் ஏற்படட்தால் இவன் வட மதுரையைவிட்டு, காசிக்குச் சென்றான். ஹடயோகப் பிரயோகம் பண்ணி உயிரை விட்டான். இவன் மனைவியும் இவனுடன் உடன்கட்டை ஏறினாள். இந்த புண்ணியத்தால் சுவர்க்கலோகத்தில் வெகு காலம் சுகம் அனுபவித்து வேளாள மரபில் பிறந்தான். போன பிறவியில் மனைவியே இப்பொழுதும் இவன் மனைவியானாள். இவன் தன தான்யம், கல்வியுடன் கூடி தன் குடும்பத்தில் முக்கிய உள்ளவனாகவும், சிவந்த நிறமுள்ளவனாகவும்,. புத்திசாலியாகவும் இருந்தான்.

போன ஜென்மத்தில் பிராமணனுக்கு விஷம் கொடுத்ததால் இவன் மனைவி பாவியானாள். மாத விலக்கிருந்தும் இவளுக்குக் குழந்தை பிறக்க வில்லை இதற்குச் சாந்தி வருமாறு.

முதலில் தன் சொத்தின் 8ம் ஒரு பாகத்தை புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும் இதன்பின் "காயத்ரி" மந்திரத்தையும் "ஜாத வேதஸே" மற்றும் "த்ரயம்பகம்" இந்த மந்திரங்களை முறைப்படி 3 லட்சம் முறை புரஸ்சாரண முறையும் செய்து ஜபம் செய்து முடிக்க வேண்டும். அதன்பின் 60 தோலா எடை தங்கத்தால் பிராமணின் மூர்த்தியைச் செய்ய வேண்டும். அதன்பின் சிவாச்சனையும் பூஜையும் செய்ய வேண்டும். சனகாதி நால்வர் மரபில் வந்த பிராமணர்களுக்கு இனிப்புடன் போஜனம் செய்விக்க வேண்டும். மூர்த்தியையும் பூஜை செய்து வேதப்பிராமணர் களுக்குத் தானம் பண்ண வேண்டும். பின்பு பட்டு போர்த்திய காளை மாட்டையும் 10 நிறம் கொண்ட பசுவையும் தானம் பண்ண வேண்டும். ஞாயிற்றுக்கிழமையில் வரும் சப்தமி திதியில் சூரிய பூஜை செய்ய வேண்டும்.

இதனால் இவர்கள் பாபம் எல்லாம் அழிகின்றன. நோய்கள் நீங்கி தீர்க்காயுள் உள்ள ஆண், பெண், குழந்தைகள் பிறக்கின்றன.

## வடமொழி கர்ம விபாகம் கூறும் பூரட்டாதி 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிஹாரமும்.

சிவபெருமான் சொல்லுகிறார்!

அறம் அல்லது தருமம் அல்லது தன் ஒழுக்கம் தவறாமையால் தான் செல்வம் உண்டாகிறது. தருமம் வழுவாமையால் தான் நோய்கள் தீருகின்றன. தருமம் தவறாமல்இருப்பதால் தான் நல்ல புத்திர பாக்யம் உண்டாகிறது. அதனால் ஒவ்வொரு மனிதனும் தன் கடமை தவறாமல் தருமத்தைப் பாதுகாக்க வேண்டும்.

காம்பில்ய நகரத்தில் ஒரு பிராமணன் வசித்து வந்தான். வேதம் தெரிந்தவன். குல ஒழுக்கம் மிகுந்தவன். பெருத்த பணக்காரனாகவும் இருந்தான். இவன் மனைவியும் உத்தமியாக இருந்தாள்.

ஒரு சமயம் இவன் பெண் தன் பிள்ளையுடன் இவன் வீட்டுக்கு வந்து தங்கினாள் நெடுங்காலம் சென்றது பிராமணன் தன் பெண்ணின் தங்கத்தை அபகரித்துக் கொண்டான்., இவளுடைய பையனிடம் இவனுடைய பாட்டனாகிய பிராமணன் தான் அவன் தாயின் சுவர்ணம் பூராவும் அபகரித்து கொண்டான் என்று தெரிவித்து விட்டனர். அதனால் இவனுக்கு தன் பாட்டன் மேல் அதிக கோபம் கொண்டான். அவன் கோபங் கொண்டு விஷம் குடித்துக் இறந்தான். இந்த பேரனுடைய மனைவியும் உடன் கட்டை ஏறி உயிர் நீத்தாள். இதனால் இவர்கள் நெடுங்காலம் சுவர்க்க சுகம் அனுப வித்தனர்.

இவன் பாட்டனும் நெடுங்காலம் கடந்து இறந்தான். பிறகு தனவானான் குடும்பத்தில் மனிதப்பிறவி அடைந்தான். ஆனால் தன் பேரன் சொத்தை அபகரித்ததால் இவனுக்கு ஆண் சந்ததி இல்லை. பெண்களே பிறந்தன. இவன் உடல் நலமும் பலவகை காய்ச்சலும் நோய்களம் பற்றிக் கொண்டன இவனுக்குப் பகைவர்கள் அதிகம் ஏற்பட்டனர். எள்ளத்தனையும் சுகம் ஏற்படவில்லை.

இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு. முதுகில் தன் சொத்தில் 6ல் ஒரு பாகத்தை புண்ணிய காரியங்களில் செலவு செய்ய வேண்டும். "காயத்திரி "த்ரயம்பகம்" மற்றும் "ஸ்ரீஸ்சதே" இந்த மந்திரங்களை ஒவ்வொரு லட்சம் ஜபம் பண்ணி அவற்றின் புரஸ்சரண காரியங்களையும் செய்து முடிக்க வேண்டும். அதன் பின் பிராமண போஜனமும், கோதானமும் செய்ய வேண்டும். அதன் பின் ஒரு குடம் மற்றும் ஒரு தேங்காயைக் குடைந்த குடுக்கையில் நவரத்தினத்தையும் நிரப்பிட கங்கையில் நீராடி அந்த ஆற்றின் நடுவில் இருந்து உத்தம பிராமணனுக்குத் தனம் செய்ய வேண்டும். இளம் காளை மாடுகளை அலங்கரித்து அவற்றையும் தானம் பண்ண வேண்டும். மேலும் அவர்களுக்கு படுக்கை தானமும் பண்ண வேண்டும்.

இப்படி செய்வதால் இவன் பாபங்கள் எல்லாம் நாசம் ஆகின்றன. இதனால் சீக்கிரமாக இவன் உடல் நோய் நீங்கி இவனுக்கு இதன் பின் இவர்க்கு ஆண், பெண், குழந்தைகள் பிறக்கின்றன.

**கர்ம விபாகம் வடமொழி நூலில் கூறிய பூரட்டாதி 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிகாரமும்.**

சிவபெருமான் சொல்கிறார்!

காந்தார நகரத்தில் தயாசர்மா என்ற பிராமணன் வசித்து வந்தான். இவன் தன் குல ஒழுக்கத்தை விட்டு எப்பொழுதும் குடிகாரனாகவும் சூதாடியாகவும், வேசிக்கள்ளனாகவும் தாழ்த்தப்பட்டவர்களுடன் பழகியும் அவர்களுடனே அவர்கள் உணவே உண்டும் மோசமான அசுத்தமான மனிதனாகக் காலம் தள்ளி வந்தான். இவன் பணம் சம்பாதிக்காமல் கீழினப் பெண்களுடன் போகம் பண்ணியும், தன் ஒழுக்கத்தில் சிரத்தை இல்லாமலும் தாய் தந்தையரைப் பழித்தும் வந்தான். இப்படிப் பல காலம் வாழ்ந்து இவன் இறந்தான். இவனை எமதூதர்கள் பிடித்து "மயாக்ரகச்சம்" என்ற கொடிய நரகத்தில் தள்ளினர். அங்கு 60 ஆயிரம் வருடங்கள் துன்பம் அனுபவித்து விட்டு பல்லியாகவும் பச்சோந்தியாகவும் பிறவி எடுத்தான். அதன் பின் பறவையாகப் பிறந்தான். பிறகு நல்ல இடத்தில் மனிதப் பிறவி அடைந்தான். தன்னை அறியாமல் செய்த புண்ணியத்தால் தன தான்யம் உள்ள பணக்காரக் குடும்பத்தில் பிறந்து நல்ல தனம் சொத்து உள்ளவனாக

ஆனால் இருந்தான் குல ஒழுக்கத்தை விட்டு நீசத் தொழில் பழக்கம் உள்ளவனாக இருந்த பாவத்தால் இவனுக்குச் சந்ததி இல்லாமல் போயிற்று. இவனுக்குப் பல ஆண் குழந்தைகள் அடிக்கடி பிறந்து இறந்தன. தன் தாய் தந்தையாரை கை விட்டதால், இவனுக்குப் பல நோய்கள் பற்றிக் கொண்டன. இவன் மனைவியும் நோயாளியும் யோனியில் ஆறாத ரணமுள்ளவனாகவும் கஷ்டப்பட்டு, பின் கற்பமே ஏற்படாமல் கஷ்டப்பட்டாள்.

இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு. தன் வீட்டில் உள்ள தனம், சொத்தில் 8ல் ஒரு பாகத்தைப் புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும். இதன் பின் 20 தோலா தங்கத்தினால் கணேச விக்ரஹம் செய்து கணேசரின் மந்தர நாமங்களால் பூஜிக்க வேண்டும். புஷ்பம் பழம் வைத்து புசித்து அந்த கணேச மூர்த்தியே உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் காவி நிறப் பசுவை அலங்கரித்துக் கன்றுடன் உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் கணபதி மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜபம் செய்து புரஸ்சரணம் செய்ய வேண்டும். அதன் பின் முறைப்பட பிராமண போஜனம் செய்விக்க வேண்டும். அதன் பின் அவர்களுக்கு நிறைய தட்சணையும் தரவேண்டும்.

இப்படிச் செய்வதால் இவன் செய்த பாவங்கள் விலகி, உடல் நலம் பெறுகிறான். இவன் மனைவியும் நோய் நீங்கி இவர்களுக்கு நல்ல தீர்காயுள் உள்ள ஆண் சந்ததி ஏற்பட்டு இவன் தன் மனைவியுடம் சந்தோஷமாக வாழ்கிறான்.

**கர்ம விபாகம் வடமொழி நூல் கூறும் பூரட்டாதி நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிஹாரமும்.**

சிவபெருமான் சொல்லுகிறார்!

மத்திய தேசத்தில் கோமதி நதி தீரத்தில் பல பத்ரபுரி என்ற நகரத்தில் வேத ஒழுக்கத்தை கைவிட்டு யுத்தத் தொழிலே புரிந்தும் நிறதிக்கத்தகச் செயல்களையும் செய்து வந்த ஒரு பிராமணன் இருந்தான். இவனுக்கு இரண்டு மனைவிகள் உண்டு. ஒருத்தையைத் தள்ளி வைத்துவிட்டு, மற்றவளுக்கு புடவை, நகை எல்லாம் வாங்கிக் கொடுத்து ஆசையாக

இருந்து வந்தான். இந்த மனைவிகளில் மூத்தவளுக்கு நிறைய ஆண் குழந்தைகள் பிறந்தனர். இந்த பிராமணன் வேட்டையாடி விலங்குகளைக் கொன்று உண்டு வந்தான். இவன் பிராமணர்களிலேயே கடைப்பட்டவனாக இருந்தான். ஒரு சமயம் இவன் காட்டில் புகை போட்டு வேட்டையாடும் போது இறந்து போனான்.

பிராமணன் இறந்த பின், இவனின் வியபச்சாரியான இரண்டாவது மனைவியும் இறந்து போனாள். இருவரையும் எமதர்மராஜன் 70000 வருடங்கள் கொடிய நரகத்தில் தள்ளித் தண்டித்தான். நரகத்தில் வெளிப்பட்டு கழுதையாகப் பிறந்தான். அதன்பின் எருமையாகப் பிறந்தான். அதன் பின் மனிதனாகப் பிறந்தான். இவன் இந்த ஜன்மத்தில் பணக் காரனாகப் பிறந்தான். ஆனால் வேசிகளை வைத்துத் தொழில் நடத்தினான் ஆனால் பெரியோர்களுக்கும் நல்லவர்களுக்கும் தொண்டு புரிந்து வந்தான். இவன் பாவத் தொழிலால் இவனுக்குப் பெண் குழந்தைகளாகப் பிறந்தனர். இவன் காட்டில் தீமூட்டி வேட்டையாடியதால் இவனுக்கு நீங்காத காய்ச்சல் பற்றிக் கொண்டது இதற்குச் சாந்தி பரிகாரம் வருமாறு.

இவன் கோபால மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜபம் செய்ய வேண்டும். அதற்கு முறைபடி புரஸ்சரண சடங்கும் செய்ய வேண்டும் எப்பொழுதும் கோபாலனையே தியானம் செய்ய வேண்டும். கோபல சங்கீர்த்தனம் பண்ண வேண்டும். அதன் பின் வெள்ளி பொன்னுடன் சாலிக்கிராமச்சில் ஒன்றை உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ணவேண்டும். அதன் பின் வெள்ளை ஆடையுடன் சாலிக்கிராமச் சிலையைத் தானம் பண்ண வேண்டும். பூமி தானம், கோதானம் இரண்டும் செய்ய வேண்டும். அதன் பின் உத்தம பிராமணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டும். இதன் பின் பாவங்கள் நீங்கி இவன் நலம் பெறுகிறான். அதன் பின் இவனுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கிறார்கள்.

***பிறர் மதப்படி பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்***

***பொதுப் பலன் - ஆண்கள்***

***உருவத் தோற்றம்***

நடுத்தரமான உயரமும், உடலும் கொண்ட இவர்கள் அகன்ற

கன்னங்களும், சிவந்த உதடுகளும் பெற்றிருப்பார்கள். இவர்கள் உருவ அமைப்பில் காணப்படும் ஒரு விசித்திரம் என்னவென்றால் இவர்கள் கணுக்கால் சற்று உயர்ந்தாற் போல் இருக்கும்.

*குணங்கள்*

பொதுவாக அமைதியை விரும்பும் குணமுள்ளவர்கள். எப்பொழுதாவது வெகுண்டு எழுவதும் உண்டு. முட்டாள் தனமான டைப். இவர்கள் கொள்கை பிடிப்பு உடையவர்கள் ஆதலால் சின்னஞ்சிறு எதிர்ப்பு அல்லது பிரச்சினையைக் கூட மனதில் உளப்பிக் கொண்டு, அதனால் ஏற்படும். மன எழுச்சியால் கஷ்டப்படுவார்கள். இவர்கள் நல்ல அறுசுவை உணவை விரும்புபவர்கள். நன்றாக வயிறு புடைக்க சாப்பிடுவார்கள். டிரஸ் செய்து கொள்வதில் அவ்வளாவாக அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள் கிடைத்ததை மாட்டிக் கொண்டு கிளம்பி விடுவார்கள்.

பாரபட்சம் பார்க்காமல் தன் கருத்தைக் கூறி விடுவார்கள். மதசம்பந்தப் பட்ட குருட்டுக் கொள்கைகளில் நம்பிக்கை இல்லாதவர்கள். தேவைப் பட்டவர்களுக்கு உதவி செய்வதில் எப்போதும் முன் நிற்பார்கள். இருந்தாலும் கூட இவர்களுக்கு பலனாக கிடைப்பது அவர்களின் வெறுப்பும், தடுப்பும் தான். இவர்கள் பொருளாதார நிலை பலவீனமாகத்தானிருக்கும். பிறருடைய மரியாதையும் நம்பிக்கையையும் எளிதாக பெற்று விடுவார்கள். கடவுளுக்கு பயந்த இவர்கள், மத நூல்களில் கூறப்பட்ட விதிகளின் படி சடங்குகளைச் செய்வார்கள். போதுமான அளவிற்கு பொருள் உள்ள பணக்காரன். தேவைக்கு மேல் பணம் சேர்க்க விரும்ப மாட்டார்கள். இருப்பது போதும் என்ற மனம் உண்டு. பொது ஜனங்களிடமிருந்து மரியாதையும் கௌரவத்தையும் பெற ஆசைப்படுவார்கள். தன் கருத்துக்களை பாரபட்சமின்றி கூறிவிடுவான். அதனால் ஏற்படும் சாதக பாதங்களைப் பற்றியும் பின் விளைவுகளைப் பற்றியும் கவலைபபட மாட்டான்.

*கல்வி தொழில்*

பிறவிலேயே கெட்டிக்காரர்கள். புத்தி கூர்மை உள்ளவர்கள். அதனால் இவர்கள் எடுத்துக் கொள்ளும் எந்த வேலையிலும் பிரகாசிப்பார்கள்.

அரசாங்க உத்தியோகத்தில் இருந்தால் எதிர்பாராத லாபங்களையும், பிரமோஷன்களையும் பெறுவார்கள். சமூக பொருளாதாரம் இரண்டிலும் சுதந்திரமாக வாழ்க்கையை தனித்து நடத்தும் சக்தி இவர்களுக்கு உண்டு. 24 லிருந்து 33 வயது வரை உள்ள கால கட்டம் இவன் வாழ்க்கையில் குறிப்பிடும் படியான முன்னேற்றத்தை எல்லா வகையிலும் ஏற்படுத்தும் இருந்தாலும் இந்த கால வரையில் எப்போதாவது மனம் டென்ஷன் அடைவதை தடுக்க இயலாது.

40 வயதிலிருந்து 54 வது வரையில் உள்ள காலம் இவனுக்கு பொன்னான காலமாகும். இவன் தன்னை நல்ல நிலையில் நிலை நிறுத்திக் கொள்வான். செலவினங்களை மிகவும் கட்டுப்படுத்திக் கொள்வான்.

இவன் பிஸினஸ், பாங்கிங், கவர்ண்மெண்ட வேலை, டீச்சர், நடிப்பு அல்லது எழுத்தாளன். ஆராய்ச்சி சோதிடன், வான சாஸ்திரி என்னும் துறைகளில் புகுத்தால் எந்த துறையிலும் பிரகாசிப்பான். அரசாங்கத்தில் இருந்தால் ரெவின்யூ கலெக்ஷன் அல்லது பணம் புழங்கும் இடங்களில் வேலையில் இருப்பான்.

*வாழ்க்கை*

தன் தாயின் முழு அன்பையும் பாதத்தையும் இவனால் அனுபவிக்க முடியாது, சோதிடத்தின்படி தன் தாயிடமிருந்து பிரிவையோ அல்லது தாயின் மரணத்தினால் பிரிவையோ இளம் வயதிலேயே அடைவான். ஆனால் அனுபவத்திற்கு இது ஒத்து (மரணம்) வரவில்லை. வேலையின் நிமித்தமாக ஏற்படும் பிரிவினால் அன்பை தாயிடமிருந்து பெற முடியாது என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். தாய் உத்தியோகம் பார்ப்பதால் இவன் பெரும்பாலான சமயம் அவளை பிரிந்து இருக்க நேரும். ஆதலால் பண்டைய கால முனிவர்கள் எழுதியது சரியே. ஆனால் அது தாயின் மரணம் வரை செல்லாது. தாயின் மரணம் ஏற்பட மற்ற கிரகங்களின் நிலைகளும் உதவி புரிய வேண்டும். நட்சத்திரத்தை மட்டும் வைத்துக் கொண்டு மரணத்தை நிச்சயிக்கக் கூடாது. இதில் ஒரு சாதகமான நிலை என்ன வென்றால் இவன் தன் தகப்பனாரைக்கண்டு பெருமை கொள்வதுதான். கிரகங்களின் நிலை நன்கு அமைந்திருந்தால் தந்தை புகழ் பெற்றவராகவும், நன்நெறி

கொண்டவராயும் இருப்பர். அந்த புகழ் கலைகள், சொற்பொழிவு, அல்லது எழுத்து மூலம் வந்ததாக இருக்கும். இத்தகைய நல்ல குணங்கள் இருப்பினும் ஜாதகன் தன் தந்தையுடன் கருத்து வேற்றுமை கொள்வான். சில சமயம் எதிர்ப்புகளும் இருக்கும்.

### ஆரோக்கியம்

அஸிடிடி, டயபிடிஸ், பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு. கால் பாதம், நெஞ்சில் உள்ள எலும்பு, பிருஷ்டபாகம் இவற்றில் பிறச்சினைகள் ஏற்படும்.

### பொதுப் பலன் - பெண்கள்

ஆண்களுக்குச் சொல்லப்பட்டவைகளில் பெரும்பாலான பலன்களை இவர்களுக்கும் பொருந்தும் அவற்றுடன் கீழ்க்கண்ட பலன்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

### உருவம்

அதிக உயரமும் இல்லாமல் அதிக குட்டையும் இல்லாமல் இருப்பாள். அதேபோல் அதிக குண்டும் இல்லை அதிக ஒல்லியும் இல்லாத உருவம். சிலருக்கு மிக ஒல்லியான உருவமும் இருப்பதுண்டு. எப்படியிருந்தாலும் மிகவும் அழகானவள்.

### குணம்

நேர்மையும் உண்மையும் மிக முக்கியமான குணங்களாக இவர்களுக்கு இருக்கும். தலையே போனாலும் நேர்வழியில் செல்வதே இவர்களுக்கு கொள்கையாக இருக்கும். அதிலிருந்து பிறழ மாட்டார்கள். இவள் ஒரு பிறவித் தலைவி. பிறரிடமிருந்து வேலை வாங்குவதில் மிகவும் கெட்டிக்காரி. ஆதலால் இவளுக்கு அதிகாரம் பலம் இரண்டும் கிடைத்தால் மிகவும் வெற்றிகரமாக எல்லாவற்றிலும் செயல்படுவாள். எல்லாம் நன்மைக்கே எதுவும் நல்ல படியாகவே நடக்கம் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவள். அதில் இவள் ஒரு உதரணமாகத் திகழ்வாள். இவளிடம் மனித நேயம்

இருந்தாலும், அந்த அன்பும், தாராளத் தன்மையும், மனிதாபிமானமும் கருணையும், தன்னை உதவி நாடி வந்தவர்களுக்கு உண்மையிலேயே உதவி தேவைப்படுகிறது என்று இவளுக்கு நம்பிக்கை ஏற்பட்டால் தான், அவர் களுக்கு கிடைக்கும். இவளுடைய நடவடிக்கைகளில் ஒரு விசித்திரமான "அடக்கம்" இருக்கும்.

### கல்வியும் - தொழிலும்

இவளுடைய கல்வி, விஞ்ஞானம் அல்லது டெக்னிகல் துறையில் அமையும். அதனால் இவளுக்கு டீச்சர். புள்ளி விபரம், சோதிடம், ரிஸர்ச் போன்ற இனங்களில் தொழில் அமையும்.

### குடும்ப வாழ்க்கை

கணவனிடம் அதிக ஒட்டுதலும் அன்பும் கொண்டவள். நன் மக்களைப் பெற்றெடுப்பாள். குடும்ப நிர்வாகத்தில் திறமை உள்ளவள். தன்னுடைய மக்களிடமிருந்து அதிக நன்மையைப் பெறுவாள். ரோகிணி நட்சத்திர பையனை மணந்து கொண்டால், குழந்தைகள் எண்ணிக்கை அதிகமிருக்கும்.

### ஆரோக்யம்

குறைந்த ரத்த அழுத்தம், டிராப்ஸி, வீங்கிய கணுக்கால், எபிலப்ஸி, படபடப்பு காலில் எப்போதும் வியர்வை, உப்பிய கல்லீரல் போன்ற வியாதிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

### பூரட்டாதி நட்சத்திரத்தில் உள்ள கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்த பலன்

இதற்கு திருவோண நட்சத்திரத்திற்குச் சொல்லிய பலன்கள் பொருந்தும்.

### பூரட்டாதி நட்சத்திரக் கால்களில் கிரகங்கள் நின்ற பலன்

### பூரட்டாதி 1ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்

சூரியன் மட்டும் இங்க தனித்து இருந்தால், ஜாதகன் தன் குழந்தை களைப் பிரிந்து வெளியூர்களில் இருப்பான். கீழ்த்தரமான மனப்போக்கும்.

ஏழ்மைத் தனமும் கொண்டவன். இந்த சூரியனுக்கு சுப பார்வை ஏற்பட்டிருந்தால் சுமாரன செல்வமும், மனைவி மக்களின் அரவணைப்பும் கிடைக்கும். அப்படியும் கூட இவன் குழந்தைகள் வெளியூரிலேயே வாழ நேரும்.

### *பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்*

செவ்வாயும் சூரியனும் இந்த சந்திரனுடன் சேர்ந்து லக்னம் திருவோணத்தில் இருந்தால், அத்துடன் இந்த கிரகங்களுக்கும், லக்னத்திற்கும் சுபர் பார்வை இல்லாமல் இருந்தால் இந்த சிசு 9ம் வயதில் இறந்து போகும். சூரியன், சனி, செவ்வாய், லக்னமும் எல்லாம் இந்த இடத்தில் அமைந்து குருவின் பார்வை இவர்களுக்கு இல்லாமல் இருந்தால் குழந்தை பிறந்த உடனேயே இறந்து விடும். சந்திரன் முதல் டிகிரியில் இருந்தால் மரணம் 21 ம் வயதில் நிகழும்.

### *பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

வருத்தமும், எரிச்சலூட்டும் குணமும் கொண்டவன். தன்னுடைய வருமானத்துக்காக அடிக்கடி பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். வெளி வேஷம் போடுவது இவனது பிறவிக் குணம், 40 வயதுக்குப் பிறகு ஸ்திரத் தன்மை ஏற்படும். திருமணம் கூட தாமதித்து நடக்கும்.

### *பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இவனுடன் உத்திரட்டாதியில் குருவும் இருந்தால் ஜாதகன் "சட்ட நிபூணன்". இவன் பிறருடைய தகராறுகளை தீர்த்து வைப்பான். ஆனால் அதே சமயம் தானே தகராறுகளில் மாட்டிக் கொள்வான்.

### *பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

இவன் ஒரு பிலாசபர் அல்லது ஆசிரியர் அல்லது சர்ஜன் ஆக இருப்பான். இடுப்பு பிடிப்பினால் அவதிப்படுவான். சாதாரண குடும்பத்தில் பிறந்தவனாக இருப்பான். ஆனால் தன்னுடைய உண்மையான உழைப்பாலும், இடைவிடாத கடின முயற்சியாலும் உயர்ந்த தகுதியைப் பெறுவான். இந்த

குருவுடன். சுக்கிரனும் சித்திரை 4ம் பாதத்தில் இருந்தால் இந்த ஜாதகனின் பார்ட்னர் ஒரு டாக்டராக அல்லது மருந்து டீலராக இருப்பான்.

### பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

ஜாதகன் கற்றறிந்தவனாகவும், பெற்றோர்களிடம் ஒட்டுதலாகவும் இருப்பான். இந்த அமைப்பு ஆராய்ச்சி வேலைகள் செய்வதற்கு சிறந்தது. மேலும் அடிக்கடி வெளி நாட்டுப் பயணங்களை மேற்கொள்ளச் செய்யும் அல்லது வெளிநாட்டில் செட்டிலாகி விடுவான்.

### பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இந்த சனியை புதன் பார்த்தால், ஜாதகன், ஒரு நல்ல தனியார் கம்பெனியில் வேலைக்கமர்ந்து தன்னுடைய 35 வது வயதில் நல்ல பெயரையும் புகழையும் சம்பாதிப்பான். 39 வது வயதில் நிலபுலன்கள் வாங்குவான். இவனுக்கு 2 குழந்தைகள் பிறக்கும்

### பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இந்த அமைப்பு லக்னமாகவும் அமைந்து அதை பாபிகள் பார்த்தால் அக்குழந்தை 7 வது வயதில் மரணம் அடையும்.

### பூரட்டாதி 1ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

இவனுடன் செவ்வாயும் சேர்ந்திருந்தால் ஜாதகன் ஒரு கிராமத்தின் தலைவனாக இருப்பான். இந்த கேதுவுடன், சுக்கிரன் திருவாதிரை நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகனுக்கு 2 மனைவிகள் இருப்பார்கள். இவனுடைய ஒரு சகோதரன் டாக்டராக இருப்பான்.

### பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

தன் மனைவியின் சகோதர சகோதரிகள் மற்றும் பெற்றோர்கள் மூலம் வருமானத்தை அடைவான். பொருட்களை தயாரிக்க முக்கியமாக தண்ணீர் உபயோகமாகும் பிஸினஸ்சில் ஈடுபடுவான். அதாவது சாஃப்ட்டிரிங்க், ஹாட்ரிங் தயாரிக்கும் வேலையில் இருப்பான்,

### பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

ஜாதகனின் உருவம் ஒல்லியாக இருக்கும். ஆனால் பேச்சு தைரியமான தாக இருக்கும். பிடிவாத குணம் உள்ளவன். இந்த பிடிவாத குணம் அவனுக்கு அதிகமான பிரச்சினைகள் உருவாக்கும். இவன் பிறருடைய பேச்சுக்களை எந்த விஷயத்திலும் கேட்டுக் கொள்ள தயாராக இருக்க மாட்டான். இவன் என்ன நினைக்கிறானோ, என்ன செய்கிறானோ அதுவே சரி. 33வது வயதில் ஒரு விபத்தில் மாட்டிக் கொள்வான். இவன் பிறருடன் அனாவசிய தகராறுகள் அல்லது சண்டைகள் வைத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் அவர்களால் தாக்கப்பட்டு காயம் ஏற்பட வாய்ப்புண்டு.

### பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

லக்னமும் செவ்வாயும், இங்கமைந்து, சுக்கிரன் பூரத்தில் இருந்தால், செவ்வாய் இவன் ஜாதகத்தில் இருக்கும் இடத்திற்கு. கோசாரத்தில் செவ்வாய் அதே இடத்திற்கு வரும்போது மரணத்தைத் தருவான்.

### பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

புதன் இங்கிருக்கையில், லக்னம் ஹஸ்தத்தில் அமைந்தால் 11 வது வயதில் மரணம் ஏற்படும். இவன் ஒரு நாவலாசிரியனாக, அல்லது பிரசுரம் செய்பவனாக இருப்பான். தீவிர அஜீரணக் கோளாறு ஏற்பட்டு வயிற்றில் ஆபரேஷன் செய்து கொள்ள நேரும்.

### பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

ஜாதகன் கோர்ட் அல்லது சட்டம் சம்மந்தப் பட்ட வேலையிலோ அல்லது அது சம்பந்தமான தொழிலிலோ இருப்பான். காலில் வீக்கம் ஏற்பட்டு தொந்தரவு தரும் தனக்கு திறமை உள்ள துறையில் பிரபலமாக இருப்பான். இவனுடன் சூரியன் ஆயில்ய நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் அரசியலில் ஈடுபட்டு தன் 45 வது வயதில் மந்திரி பதவியை அடைவான்.

### *பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

கவிஞன் அல்லது பாடகன் அல்லது பெயிண்டர் ஆவதற்கு இது ஒரு நல்ல அமைப்பு., தோல் வியாதிகள், எக்ஸிமா அல்லது டிராப்ஸி, அல்லது பல்வியாதிகள் இவனை எளிதாகப் பற்றும்.

### *பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

உயர்ந்த உருவமும், பெரிய தலையும் முகமும் உடையவன்,. வழுக்கைத் தலை உடைபவன். எடுத்துக் கொள்ளும் காரியங்களில் தெளிவான, அனுபவ பூர்வமான அணுகுமுறை இருக்கும். இவனுக்கு மனைவி மூலம் சொத்து வரும். அல்லது மனைவி நல்ல வருமானம் உள்ள வேலையில் இருந்து இவனுக்கு சம்பாதித்துக் கொடுப்பாள்.

### *பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

சந்திரனும் இதில் அமர்ந்து சனி சூரியன் இருவர் பார்வையும் பெற்றால் இவனுடைய தாய் இவனுக்கு 10 வயதாகும் முன்பே இறந்து விடுவாள். ராகு மட்டும் தனியாக இருந்தால், ஜாதகனுக்கு நிறைந்த செல்வமும், கௌரவமும் கிடைக்கும். ஆனால் வாழ்க்கையில் சந்தோஷம் இராது.

### *பூரட்டாதி 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்*

நிறைய செல்வம் சம்பாதிப்பான். மனைவியின் உடல் ஆரோக்கியம் இவனுக்கு நிரந்தரமான பிரச்சனையைத் தரும்.

### *பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்*

சனி, செவ்வாய், சந்திரன் இந்த இடத்தில் கூடி இருந்தால் குழந்தையின் ஆயுள் 3 வருடத்திற்குள் முடிந்து விடும். லக்னம் திருவோணத்தில் இருந்து இந்த இடத்தில் சூரியனும், சந்திரனும் சேர்ந்து இருந்தால் அந்தக் குழந்தையின் உயிர் 3 நாட்களுக்குள் பிரியும்.

### *பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்*

வெளிப்படையாக குறும்புத்தனம் உள்ளவனாகத் தெரிவான். **ஆனால்** நல்லமனம் கொண்டவன். பிறருக்குத் தீங்கிழைக்க மாட்டான்.

ஆண் ஜாதகனுக்கு இரண்டு மனைவியர் இருப்பர். பெண் ஜாதகியானால், காதல் வசப்படுவாள். ஆனால் அது கல்யாணத்தில் முடியாது. ஆனால் இவள் கல்யாணம் செய்து கொண்ட கணவனுடன் நெடுங்காலம் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவாள். தன் கணவனிடமும் குழந்தைகளிடமும் மிகவும் பாசம் கொண்டவள்.

### *பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

இவனுடைய வெளிப்பாடுகள் குறும்பு நிறைந்ததாக இருக்கும். ஆனால் மனதில் உள்ளது நல்ல எண்ணமே. மனதில் நினைப்பது ஒன்றாகவும். செய்வது வேறாகவும் இருக்கும். இவன் தைரியம் நிறைந்தவன். ஆராய்ச்சி செய்வதில் மனம் செல்லும். அதில் கடைசியில் வெற்றியும் பேரும் புகழும் பெறுவான்.

### *பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

இந்த புதனுடன் லக்னமும் சேர்ந்தால் ஜாதகன் கான்ஸர் வந்து கஷ்டப்படுவான். புதன் மட்டும் தனித்து இருந்தால் ஜாதகன் கணிதத்தில் புலமை பெற்றவன். என்ஜினீராகவும் ஜோதிடனாகவும் பரிமளிப்பான். இவன் மனைவி இவனைவிட சிறந்த அறிவாளியாக இருப்பாள்.

### *பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

நல்ல குடும்பம் அமையும். பாங்கில் பணம் சேரும். ஆரம்பத்தில் நல்ல உத்தியோகம் பார்ப்பான். பின்னர் பிஸினஸ் செய்ய ஆரம்பிப்பான். ஒரு துறையில் நல்ல கல்வியைப் பெறுவான். ஆனால் உத்தியோகம் பார்ப்பதோ அதற்கு முற்றிலும் மாறுபட்ட துறையாக இருக்கும்.

### *பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

ஜாதகன் சமூக சேவகனாக இருப்பான். இன்டீரியர் டெகரேட்டராகவும் இருப்பான். பெண்கள் உபயோகிக்கும் தோல் பொருள்கள் தயாரிப்பு / விற்பனை பிஸினஸ் செய்வான்.

### பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

நடுத்தரமான உருவ அமைப்பு உடையவன். அணுகு முறையிலும் ஒரு காரியத்தை செய்து முடிப்பதிலும் ராஜதந்திரத்தை கையாளுவான். மது. மாது இரண்டிற்கும் அடிமையாவான். இந்த சனியுடன் லக்னமும் சேர்ந்தால் ஜாதகன் அழகிய கை கால்களைப் பெற்றிருப்பான். நன்கு படித்தவனாகவும். ஒரு மந்திரியாகவும் இருப்பான். கிராமத்தையும் நகரத்தையும் ஆளுவான்.

### பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இந்த ராகுவுக்கு பாபிகளின் பார்வை இருந்தால் இந்த குழந்தையை 7 வருடத்திற்குள் கொல்வான். குருவுடன் சேர்ந்தால், ஜாதகன் பிழைப்புக்காக ஊர் ஊராக சுற்றித் திரிவான். வழியில் ஏகப்பட்ட எதிர்பாராத சம்பவங்கள் நடக்கும். எனினும் 34 வயதிற்குப் பின் இவன் வாழ்க்கையில் "செட்டில்" ஆவான்.

### பூரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

ஜாதகன் பிராங்கைடிஸ் அல்லது "டி.பி. யால்" கஷ்டப்படுவான். சிலருக்கு மனம் பாதிக்கும் இவன் குழந்தைகள் கூட இவனுக்கு சந்தோஷத்தை தரமாட்டார்கள்.

### பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

அமைதி இல்லாத குணம் உடையவன். பிறப்பிலேயே அன்பு, மன எழுச்சி, அமைதியான மனபலம் உடையவனாயிருப்பான். கண்ணுக்குப் புலப்படாத சக்தியில் நம்பிக்கை உடையவன். தண்ணீர் சம்பந்தப்பட்ட பொருட்களில் விருப்பம் உடையவன்.

### பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

ஜாதகன் பணக்காரனாயிருப்பான். சுயமரியாதை உள்ளவன். தன்னை விட வயதானவர்களிடம் மரியாதை உள்ளவனாக இருப்பான். முக்கியமாக தன் பெற்றோர்களுக்கு மரியாதை காட்டுவான். 5 வயதாகும் போது

இவனுக்கு ஜலத்தினால் ஆபத்து ஏற்படும். 22 வயதாகும் போது மூளை பாதிப்படையும். 24 வயதாகும் போது உத்தியோகத்தைத் தேடி தன் பிறந்த ஊரை விட்டு கிழக்கு நோக்கி செல்வான்.

பழங்கால ஜோதிட வல்லுனர்களின் கூற்றுப்படி இவன் 90 வயது வரை வாழ்வான். அதன் பின் அஸ்வினி மாதத்தில், விதியை திதியில் (கிருஷ்ணபக்ஷம்) குருவாரத்தில் கிருத்திகை நட்சத்திரத்தில் ஒருநாள் இவன் உயிர் பிரியும்.

### *பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

ஜாதகன் ஒரு உலோகம் அல்லது மெக்கானிக்கல் என்ஜினீயரிங். சம்பந்தப்பட்ட துறையில் வேலை பார்ப்பான். வீடுகள் நிர்மாணிக்கும் பணி யிலும் இருக்கலாம். அல்லது ஒரு கசாப்புக் கடைக்காரனாகவும் ஆகலாம். ஜாதகன் ஏராளமாக செல்வம் சொத்துக்களை சம்பாதிப்பான். பாப கிரகங் களின் பார்வையோ, சேர்க்கையோ இல்லாமலிருந்தால் வாழ்க்கை மகிழ்ச்சி உள்ளதாக அமையும்.

### *பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

சட்ட விரோதமாகவும், ஒழுங்கீனமாக நடவடிக்கைகளாலும், நேர்மையற்ற முறையிலும் சம்பாதிப்பான். வேலைக் காரர்களிடமும், கீழ்சாதி அல்லது கீழ்மட்ட மக்களிடமும் வாஞ்சை உடையவன்.

### *பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

ஜாதகன் ஒரு விஞ்ஞானியாக திகழ்வான். அல்லது பெரிய தொழிற் சாலையின் நிர்வாகத்துறையில் தலைவனாக இருப்பான். அல்லது அரசாங்க நிர்வாகத்தில் முக்கியமான உயர்ந்த பதவியில் இருப்பான். பைனான்ஸ் எக்ஸிகூடிவ் அல்லது மெடலர்ஜிஸ்டாக இருப்பான்.

### *பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

இவன், தன் மனைவி நன்கு படித்தவனாகவும் தனக்கு சமமான

வளாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புவான். குழந்தைகளுக்கு வைத்தியம் செய்யும் டாக்டராக இருப்பான்.

### பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

ஒரு முக்கியமான ஸ்தானத்தைப் பெறுவான். இவனை குரு பார்த்தால் ஒரு என்ஜினீயர் அல்லது கட்டிடக்கலை நிபுணனாக ஆவான், பிறரை ஏமாற்றும் குணம் கொண்டவன். தன் முதலாளியின் சொத்தையும், செல்வத்தையும் அகபரிப்பான்.

### பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

இது ஒரு விதத்தில் ராகுவுக்கு நல்ல இடம் இவனுடன் குரு சேர்ந்தால் ஜாதகன் பூமியை ஆள்வான். பல இண்டஸ்டீரிகளுக்கு முதலாளியாக இருப்பான்.

### பூரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

ஸ்பெகுலேஷனில் ஈடுபடுவான். டயபிடிஸ், கார்டியாக் கோளாறுகளால் அவஸ்தை படுவான். சுமாரான செல்வம் உடையவன்.



# அத்தியாயம் 35

## மீன லக்னம் (அல்லது) ராசியில் பிறந்தவர்கள் தன்மைகள்

*பூரட்டாதி 4ம் பாதம், உத்திரட்டாதி ரேவதி இந்த நட்சத்திரக் காரர்கள்*

*222. பொற்கொடி மடந்தை மாதர் பொருந்திடும் தேச மெங்கும்*
*கற்றறிந் தோர்க்கு நல்லான் கண்டவர்க் கினிய னாகும்*
*நெற்பயிர் விளைக்க வல்லான் நீருகந் தாட வல்லான்*
*வெற்றியு முடையனாகும் விளங்கிய மீனத் தானே!*

**(சுவடி எண் 1500)**

(இதன் பொருள்)

பெண்கள் விரும்பித் தழுவும் அழகன் பல நாடுகளுக்கும் செல்பவன். கற்றறிந்தவர்களுக்கு நல்லவன். முகம் கோணாதவன். காண்பவர்க்கு இனியவன். நீந்தும் கலையில் வல்லவன். எல்லா வெற்றி அடைபவன். இவனே மீன ராசி அல்லது லக்னத்தில் பிறந்தவன் தன்மைகளாகும்.

இது 12வது உபய ராசி பஞ்ச பூதத்தில் நீர் இராசி. இவர்கள் எல்லோரையும் அனுசரித்துப் போவான். நீர் இராசியாகையால் எளிதில் உணர்ச்சிவசப்படுவர். இரண்டு மீன்கள் முறை மாறி கால் தலையாகப் பின்னிக் கொண்டிருக்கும். உருவம் இந்த இராசியுடையது. இதனால் சில சமயம் எதையும் முறையாகச் செய்ய முடியாமல் முன்னுக்குப் பின் செய்து மீண்டும் ஆரம்பம் முதல் தொடங்கி எந்த காரியத்தையும் முடிப்பவர். இவர்களுக்குக் கருணையும் கனிவும் உண்டு. உபயோதர ராசியாகையால் எதையும் முடிவு செய்ய முடியாத சஞ்சல புத்தி உடையவர். இவர்கள் பெரும்பாலும் மிகப் படித்தவர்கள் சிலர் கவிஞர்கள். கற்பனைத் திறன் உள்ளவர்கள்.

*பெண்கள்*

சிறிய உருவம் படைத்தவர்கள். அழகியர்கள். திட சித்தம் இல்லாதவர்கள் கணவனையே எதற்கும் சார்ந்து நிர்பவர். கணவனையே எதற்கும் சார்த்து

நிர்ப்பவர். தானே செயல்படும் தைரியம் குறைவே. உருவம் சிறிதானாலும் கவர்ச்சி உள்ளவர்கள் அதிகம் உழைப்பில்லாத வேலைகளையே விரும்புபர்கள். சுகம் விரும்புபவர்கள், ஆசிரியர் இசைக் கலைஞர் வழக்கறிஞர், எழுத்தாளர், நடிகர், மருத்துவம், மீன், வாரியப் பணி, கப்பல் தொழில் கடற்படை போன்ற தொழில்களில் இருப்பவர்கள்.

*சத்யாசார்யர் மதப்படி*

பெருத்த உதடு மீன் போன்ற கண், பெருத்த மூக்கு இவைகளையுடையவர். கபவாதத் தன்மையுள்ள உடல்வாகு பரந்த நோக்கமுள்ள சுபாவமுள்ளவர். கர்மரோகம் ஏதாவதுண்டு. நிலைத்த ஒரே விதமான புத்தி இல்லாதவர். தர்மத்துல் பற்றுள்ளவன். பெற்றோர்களைப் போஷிப்பவன். நல்ல அழகுள்ளவன். ஈன நடத்தையுள்ள பார்வை சிலசமயம் அமையும். வலுத்த சத்துரு அமையும். மிகவும் கெட்ட சுபாவமுள்ள பழிவாங்கும் சத்துரு ரத்த சம்பந்தமான ரோக முண்டு. பாம்பு சிங்கம் இவைகளிலிருந்து பயம் உண்டு. பிறரால் மதித்தும் பூசிக்கப் படுபவர்கள் குதத்தில் அல்லது மர்ம ஸ்தானத்தில் நோய் உண்டு. அபிசாரம், மிருந்தீடு, உபவாசம், பிரயாணத்தின் போது துன்பம், இப்படி ஏதாவதொன்றினால் மரணம் நேரலாம்.

*பிருகுசம்மிதை மதம்*

சிறிய உருவம், தணிந்த சதைப்பற்றுள்ள உடல் வாகு. இவை அழகிய கண்கள் உடையவர்கள். அமைதியான வணக்கமுள்ள பணிவான குணமுண்டு. கவலை இல்லாதவர்கள். பழமை விரும்பி. தன் குலப்பழக்கதை விடாதவர்' தெய்வ நம்பிக்கை அதிகம் உண்டு. பரோபகாரி. எதற்கும் சங்கோசப்படும் தயக்கம் உற்சாகம் உண்டு சாமர்த்தியசாலி. பெரும் குடும்பம் உள்ளவர். நன்கு படித்தவர். நல்ல இல்லறம் நடத்துபவர். பெரும் ஆசைகள் உள்ளவர்கள். (தகுதிக்கு மீறி) நல்ல நண்பர். வரலாறு பண்பாடு, பழம் இலக்கியம், நுண்கலைகள், அமானுஷ்யமான ஜோதிஷம், மந்திரம். அபிசாரம் போன்ற வித்தைகளில் வல்லவர்கள். பலவழிகளிலும் பணம் சம்பாதிப்பவர். இவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள்.

எதையும் செய்து விட்டுப் பின்னால் வருத்தப்படுவர். தாக்ஷண்ய புத்தி உள்ளவர்கள். பிறருக்கு உதவி செய்பவர். யோசிக்கும் திறனும் அதிகம் எந்த சூழ் நிலைக்கும் தன்னை சரி ஒத்துப்போக நடப்பவர். உலக நாட்டம். ஆன்மீக நாட்டமும் இரண்டும் உண்டு.

*பிற நூல் கொள்கைகள்*

அழகிய பெண்களுடன் பழகுபவர். கற்றவர்க்கும் மற்றவர்க்கும் நல்லவர். பயிர்த்தொழிலால் நல்ல சம்பாத்ய முள்ளவர். நிறைய நிலபுலம் உடையவர். எல்லாக் காரியங்களிலும் வெற்றி அடைபவர்.

ஞானி, பெரியோர், அந்தணர் அவர்களிடத்தில் பக்தி பணிவு உள்ளவர். சத்திய சந்தர், அழகர் வீரர், செல்வச் சீமான். வாசனைப் பொருள்களில் பிரியமுள்ளவர். அதிக செலவாளி. இரக்கமுண்டு. எச்சரிக்கை யுமுண்டு. கண், காது நோய்கள் ஏற்படுவதுண்டு.

பருத்த வாளிப்பான் தோற்றமுண்டு. கீர்த்திமான். சிடுசிடுப்பும் கவலையும் தயக்கமும் உள்ளவர். கெட்டிக்காரர் அளவாக உண்பவர். ஆடை அணி அலங்காரப் பிரியன். கூர்மையான பார்வை உடையவர்.

நடுத்தர உயரம், ஒளி வீசும் உடல். அளவான அங்கங்கள். நீர்வட்டம் அல்லது முக்கோணம் வடிவம் உள்ள முகம் உடையவர்கள். நடுத்தர சாதாரண அழகுத் தோற்றம் உள்ளவர். மாநிறம் அல்லது சென்னிறம் உண்டு. விரைந்து பேசும் சுபாவம் விரைந்து நடப்பவர்.

சாந்த சுபாவாம். சதா ஆகாசக் கோட்டை கட்டும் கற்பனா சீலர். உதார குணம் உண்டு. இவர் சாது பூசல் சண்டை இவற்றை விரும்பாதவர். அஹிம்சையில் பற்றுண்டு. சிக்கல்கள் வரும் போது சமாளிக்கும் தைரிய மற்றவர்கள். அதனால் எளிதில் சோர்டைவார்கள். சாத்வீக குணமுள்ள வர்கள். லக்னம் அசுப சம்பந்தம் பெற்றால் சிற்றின்பத்தில் இச்சை அதிகம் உண்டு. சாத பெண்களைப் பார்த்து மகிழும் குணம் உண்டு. எல்லாம் சுமுகமாமவே செய்து முடிப்பதில் விருப்பம் உள்ளவர்.

காவியம் நாடகம் சங்கீதம், நடனம் இவற்றின் ஈடுபாடு உண்டு. சோக முடிவுள்ள கதை கற்பனைகளால் இவர் மனம் சதா வேதனைப் படுபவர். தந்திர புத்தியுள்ளவர். அமானுஷ்யமான விஷயங்களை ஆராய்வதில் வல்லவர். மானசீகத் தொழில்களே இவர்களுக்குப் பெரும் பாலும் அமையும் தியான யோகத்தில் சாதனை அதிகம்.

நீர் நிலை கடல் சம்பந்தமான,. தொழில்கள் அமையும். திரைப்படத் துறை, கல்வித்துறை, இவற்றிலும் தொழில் அமையலாம். ஏழையாக இருப்பினும் சுயமுயற்சியால் வசதிகளை ஏற்படுத்திக்கொள்பவர். இவர் நண்பர்கள் மத்தியிலேயே இவருக்கு மறைமுகமான எதிரிகள் உண்டு. சிலேத்தும் வகை நோய்கள் ஏற்படும்.

3,4,7,12 இந்த வயதுகளில் இருமல், சுரம், உஷ்ண ரோகம் இவற்றால் பீடைகள் உண்டாகலாம். சாதாரணமாக அஷ்ட மாதிபதி, லக்னாதிபதி, ஆயுள் காரர் இவர்கள் வலுத்தால், 100 வயதுவரை கூட வாழ்ந்திருக்க வயது.

*இந்த லக்னத்துக்கு யோக காரகா முதலியவை*

1. முழுயோக மளிப்பவர் - சந்திரன் + குரு
   செவ்வாய் + குரு

2) சாதாரண யோகம் தருபவர் - சந்திரன் + புதன்

3) பலன் தராதவர் - செவ்வாய் + புதன்

***கோள்கள்***

சூரியன் - ஆறாம் அதிபன் - அபனில்லை - நடு நிலைக்கோள்

சந்திரன் - பஞ்ச மாதிபன் - பலன் தரும் (யோக) காரகன்.

செவ்வாய் - தன பாக்யதிபதி ஆயினும் பலன் தராத காரகர்.

புதன் - 4,7க்குடையவர் நடுநிலைக் கோள் பாதகாதிபத்தியம் அவ்வளவு பாதிப்பு இல்லை.

குரு - லக்ன நசமாதிபதி - காரகர் அதாவது யோகம் தருபவர்.

சுக்கிரன்-3,8க்குடையவர் -அகாரகன், அதாவது யோகம் செய்யாத பாபி

சனி - லாப விரயாதிபதி - இவனும் அகாரகன் சுக்கிரனைப் போன்றே.

பெரும் பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை

1) பாபர் - சனி, சுக்கிரன், சூரியன்

2) சுபர் - குரு, சந்திரன், செவ்வாய்

3) கிரக சேர்க்கையால் நன்மை - குரு + செவ்வாய். செவ்வாய் யோககாரகர்.

4) பாதகர் - புதன்

5) மாரகர் - புதன், சனி

*விளக்கம்*

7 க்குடைய வகையில் உபய ராசியாகிய மீனத்திற்கு பாதகன். இவனே மாரகனுமாகலாம். ஆனால் 4 க்குடைய வகையில் இவனே சுபன். 11 க்குடைய வகையில் சனி மாரகனே.

*இந்த ராசிக்கு*

1) அதிர்ஷ்ட நாள் - வியாழன், செவ்வாய், ஞாயிறு மற்று சனி

2) அதிர்ஷ்ட நிறம் - வெளிர் சிவப்பு, மஞ்சள், ரோஸ், ஆரஞ்சு

3) அதிர்ஷ்ட ரத்தினம் - புஷ்பராகம் மற்றும் பவளம்

4) அதிர்ஷ்ட எண் - 3, 5

கவலை தொல்லை முதலியவற்றால் 85ம் வயதில் ஆடிமாதம் சனிக் கிழமை விசாக நாள் அமர பட்சத்தில் அஸ்தமிக்கும் சமயம் இவர் இயற்கை எய்துவர்.

*குறிப்பு*

இந்த லக்னத்திற்கு சரியான நிரியாண சமயம் எந்த நூலிலும் கிடைக்க வில்லை. "மரண கண்டியில்" கூறிய கால சக்கர தசையில் மீனத்தின் நடு நவாம் சத்துக்குக் கூறிய விவரம் இங்கு கொடுக்கப் பட்டது.

# அத்தியாயம் - 36

## உத்திராட்டாதி நட்சத்திரம்

இது 26வது நட்சத்திரம். இராசி மண்டலந்தில் 333 பாகை 20 கலை முதல் 346 பாகை 40 கலை வரை பரவி உள்ளது.

தமிழ்ப் பெயர் - உத்திரட்டாதி

வடமொழிப் பெயர் - உத்திரா பத்ர பாதா

அரபுப் பெயர் - அல்-பர்க் - அல் முகிர் (AL PARGH - AL-MUHIR) தண்ணீர் பானையின் பின் குழாய் என்று பொருள்

கிரேக்கப் பெயர் - அண்ட்ரோமே டே (ANDRO ME DAE)

சீனப் பெயர் - பி (PI)

உத்தராபத்ர பாதா - என்றால் இடது பாதம் பத்ரம் - மங்களம் - எல்லா மங்களங்களையும் அருளும் இறைவனின் இடது பாதம் என்று பொருள். இறைவன் இடது பாதம் தூக்கி ஆடினான் அவன் அம்பிகையை இடது பாதத்தில் கொண்டான். ஆகவே எல்லா நலமும் தரும் அம்பிகையின் திருவடி என்று பொருள்.

இது நெடுத் தொலைப் பயணத்தையும், எல்லாம் துறந்து ஆன்மீக முன்னேற்றம் பெறுவது என்றும் பொருள்.

இதற்கு "அஹிர் புந்தியன்" என்பது அதிதேவதை என்பர். ஆதாவது பாம்பை அடக்கக் கூடிய உண்ணக் கூடிய கருடன் என்று பெயர். கருட மந்த்ரம் உபயோகங்களைக் கூறும் "அஹிர் புந்தய சம்ஹிதை" என்ற நூலும் உண்டு.

இதில் பிறந்தவன் கோபத்தை வெல்லக் கூடியவனும் உலக இயலைக் கைவிட்டு ஆன்மீகத்தை நோக்கி நெடுந்தொலைப் பயணம் மேற் கொள்பவன் என்றும் சொல்லப்படுபவன்.

*இனி சுவடி எண் 1500 மரண கண்டிகை கூறும் உத்திராட்டாதி நட்சத்திரப் பலன் வருமாறு.*

*223 கற்றவன் சிறந்த மேனி கடுகியே நடக்க வல்லான்*
*பொற் புடை வடிவனாகும் புகழ் பெற வாழ வல்லான்*
*வெற்றியில் இனிய னாகும் மெய்யழ குடைய னாகும்*
*உத்தம குணத்த னாகும் உத்திரட்டாதி யானே!*

(குறிப்பு இது சுவடியில் செய்யுள் மிகவும் பிழைபட்டு அமைந்துள்ளதால் அச்சிட்ட "மரண கண்டிகை" நூலிலிருந்து ஆளப்பட்டது)

*இதன் பொருள்)*

இவன் மிகவும் கற்றவன், அறிவாளி, மிகவும் விரைவாக நடக்க வல்லவன். இவன் புகழுடன் (நல்ல உயர்ந்த செயல்களைச் செய்து) வாழ வல்லவன். இவன் அழகிய வடிவம் (தோற்றம்) உடையவன். எப்பொழுதும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெறுபவன். இவன் உடலழகுடையவன், உத்தம குணம் உள்ளவன். இவை எல்லாம் கூடியவனே உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவனாவான்.

முதலில் "வடிவழகு" என்றது முழுத் தோற்றத்தையும் இரண்டாவது "மெய்யதகு" என்றது உடலும் அதன் உறுப்புக்களும் சாமுத்திரிகா இலக்கணப்படி அழகாக அமைந்தவன் என்பதையும் குறிக்கும்,

இந்த நட்சத்திரம் கட்டில் கால் போல் இருக்கு என்பர்.

இன்னானுக்கு தெய்வம் பிராம்மா, பூதம் பிரிதிவி. சாதி - சத்திரியன். யோனி - பசு. பட்சி - கோட்டான். விருட்சம் - வேப்ப மரம். கணம் - மானுட கணம்,

இதில் வருஷம் பிறந்தால் தானிய உற்பத்தி குறையும். பங்குனி மாதம் சூனியம் 24 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். வெதுப்பு தோன்றில் 9 நாளில் தீரும். தீராவிட்டால் நெய்யாலே ஓமம் பண்ணுவது. உதிரமும் (குங்கும நீரும்) சந்தனமும் கலந்து பலி இடுக. திசைதோறும் தானம் பண்ணுக. இப்படிச் செய்தால் மூன்று நாளில் தீரும்.

இதற்கு எலுமிச்சை மரம் என்பாரும் உண்டு. இதன் ப க்ஷி சக்ரவாகம். அக்ஷர சுரம் "க்ஷ" மற்றும் "ஸ".

ருதுசாந்தி, சீமந்தம், நாமகரணம் அன்னபிராசானம். க்ஷௌளம் (மொட்டை அடித்தல்), விவாஹம் வாஸ் புஜை. உபநயனம், ஸ்னானம், விதை விதைத்தல், புதிய கோடி உடுத்தல், பொன் பூணல், அபிஷேகம் முதலிய நல்ல காரியங்களுக்கு ஏற்ற நட்சத்திரமாகும் இது: இது வியாதியஸ்தர் குளிக்க நன்று திரிதியை சேர்ந்தால் மரண யோகம், ஆவணி மார்கழி மாதங்கள் சூன்யம். செவ்வாய் மிருத்யுயோகம். ஞாயிறு சித்தயோகம் இரண்டாம் பாதத்தில் சிவப்பு மேகம் கண்டால் 11வது நாளில் மழை, ஜ்வரம் கண்டால், 10 நாள் ஆகாது வெல்லம் கலந்த சோறு நைவேத்யம்.

கரஞ்ச பத்ரம் பூஷ்பத்தில் பூஜை அர்ச்சனை. நெய்தீபம் "விஷ்ணோர் யோனி" என்ற மந்திரத்தால் பூஜை. நெய் சேர்த்த உளுந்து, பயறு திரவியம், சாவித்திரி மந்திரம் 108 தடவை ஹோமம். சந்தனம் புழ்ப பூஜை ."அஹிர்புந்த்திலனுக்கு" பலி மாதம் இதில் பிறந்தால் தானிய விருத்தி.

***தமிழ் ஜாதகாலங்காரம் சொல்லும் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் பலன்***

*224 நித்தம் நீராடி தமருளன் தோளன்*
*நீதி பொன் பிறர்க்கு பகாரி*
*வித்தை தாம் பூலப் பிரியன்சஞ்சாரன்*
*விரிவுள காதுமார்பு உடையவன்*
*புத்திமான டாதர்க்கு இனியன்சா துரியன்*
*பொய்யன்மற் றவர் தொழில் புரிவான்*

*உத்தமர்க்கு இனியன் வழக்கினில் பலவான்*
*உத்திரட் டாதிநா ளானே!*

(இதன் பொருள்)

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவன் எப்பொழுதும் நீராட ஆசையுள்ளவன். பந்து ஜனங்களை உடையவன். பழமொழிகளை உதிர்ப்பவன். நடுநிலை உடையவன். இவன் நீதி உடையவன். புத்தி உடையவன். தன் (உடன்) பிறப்புகட்கு நல்லவன். சஞ்சனை செய்யான், வல்லவன். வலது புறத்தில் மறு உண்டு. பிறருக்கும் நல்லவன். பல மூடையவன். நன்றிமறவான். உறவுக்கு, பழகுவதற்கு நல்லவன். மார்பு அகன்றவன். முன்கோபி. கோபித்த போது கோபம் சாந்தமாகும். அரசர்களுக்கு நல்லவன். தானியமுடையவன். நீராடும் பிரியமுள்ளவன். பொய் சொல்லாதவன். செவி அகன்றிருக்கும். பெண்களைப் போன்று மருளும் மயக்க மளிக்கும் கண்களுள்ளவன். தாய் தந்தையரைக் காப்பாற்றுபவன். இவன் ஒருவரிடமும் யாரிடமும் தோல்வி அடையாதவன். குருவுக்கு நல்லவன். பாக்கு வெற்றிலைப் பிரியன் சிறு திண்டியில் பிரியமுடையவன்.

*உத்திரட்டாதி பற்றி பிற நூற் செய்திகள்*

இது இரண்டு நட்சத்திரங்களால் ஆனது. நீண்ட தடி போன்ற வடிவம். "திண்டாக்ருதி" என்று கூறப்படும். இது உறுதி குலையாதது. இதனை "துருவதாரா" என்று கூறுவர்.

இது ஒரு மேல் நோக்கு நாள். பயிரிட, புதுநகை அணிய, ஆலயம் செய்ய, கோயில் அஸ்திவாரம் தோண்ட நல்லது பால் இனிப்பு உண்டு வடக்கு கிழக்கு திக்குகளில் பிரயாணம் மேற்கொள்ளலாம். மந்திரோப தேசம் திருமணம் முதலிய சுபகாரியங்களுக்கும் ஏற்ற நாள். இதில் காய்ச்சல் கண்டால் தங்க வடிவம் பெற்ற தெய்வத்திற்கு பூசை செய்தால் நோய் நீங்கும் என்று சொல்லப்படும்.

உத்திரட்டாதி நட்சத்திரம் அக்டோபர் மாதம் நள்ளிரவில் நடுவானில் தோன்றும்.

இந்த நட்சத்திரத்தில் ருதுவாகும் பெண்கள் நல்ல குடும்ப வாழ்க்கை வசதி மக்கட் செல்வம் இவற்றுடன் வாழ்வார்கள்.

இவர்களுக்கு மரம் வேம்பு என்பாரும் உண்டு 18 வயது வரை நலிவு கஷ்டமும் அதைத் தாண்டினால் வசதியாகவும் தீர்க்காயுளுடனும் இருப்பார்கள்:

இவர்களுக்குத் திருமணம் தாமதப்படலாம். வசதியான இடமாக வாய்க்கும், பிற்பாதியில் தான் இவர்களுக்கு யோக வாழ்க்கை உண்டு. அன்னியர்க்கு உபகாரம் செய்பவன், கல்வி உடையவன். தாம்பூலத்தில் பிரியமுள்ளவன், வெளிநாடுகளில் வெளி ஊர்களிலும் சஞ்சாரம் செய்பவன். அகன்ற மார்பு காதுகளை உடையவன். அறிவுடையவன். பெண்களுக்கு அன்பானவன். சாமர்த்தியவான், பொய் சொல்லுபவன். பிறருடைய காரியங்களைச் செய்பவன், நல்லவர்க்கட்கு விருப்பமுடையவன். வழக்காடு வதில் வல்லவனும் ஆவான் என்பதாம்.

உத்திரா பத்ர பாதம் - பசுவின் பின்னங்கால்களைப் போல் காணப் படுதலின் - உத்ராபத்ரபாதம் என்று பெயர் பெற்றது (உத்திரம் - பின் - பத்ரம் - பசு - பாதம் - கால் - என்பர்.)

*யவன ஜாதகம் கூறும் உத்திரட்டாதியின் பலன்*

நல்ல சந்தான பாக்யமுள்ளவன். தர்மத்தில் இஷ்டமுள்ளவன், நன்றாகப் பேசுபவன். சத்துருக்களை வெற்றி கொள்பவன், சௌக்யத்தைத் தருபவன். திடமான நியாயமுள்ளவன், எப்போதும் காம இச்சை உள்ளவன் என்பதாம்.

*பிருஹத் ஜாதக கூறும் உத்திரட்டாதியின் பலன்*

வாக்குத் திறன் உள்ளவன். சுகம், சந்ததி உள்ளவன், சத்ருஜெயம் செய்வதில் வல்லவன் என்பதாம்,

*பெண்கள்*

*வடமொழி நூல் ஸ்த்ரீ ஜாதகம் கூறும் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் பலன்*

எப்பொழுதும் தன் கணவனுக்குச் சேவை செய்பவள், பொறுமையுள்ளவள். பெரியோர்களிடம் மதிப்பும் மரியாதையுடன் உள்ளவள், அமைதியான குணம் உள்ளவள், சிறிது அபிமானம் என்றும் கர்வம் உள்ளவள். நல்ல சந்ததியும் சுக சௌக்ய வாழ்க்கையும் உடையவள் என்பதாம். எப்பொழுதும் உண்மையின் பிரியமுள்ளவள் என்பதாம்.

*வேறு வடமொழி நூல் கூறும் கருத்து*

நல்ல புத்தியுள்ளவள், நியாயமானவள் நல்ல குணவதி இன்னும் இது போன்ற நல்ல குணங்கள் உள்ளவள்.

*சங்கராசாரியர் மதன நூல் கூறும் பலன்*

இதில் பிறந்த பெண் தெய்வ தத்துவத்தைச் சார்ந்தவள்.

225 *உளப்பொருந் தொடைய ளாகும் ஒன்றுக்கும் இச்சை செய்யாள்*
*வளமிகு மதலை இன்சொல் உள்ளடிக் கணைக்கால் நொத்தி*
*அளவுபட் குருவமாகி அணைந்தவர்க் கன்புமுள்ளான்*
*உளமற வெளியளான உத்திரட்டாதி யாளே!*

(இதன் பொருள்)

பருத்த திரண்ட தொடை யுள்ளதள், இவளும் எதிலும் பற்று வைக்காதவள். கொஞ்சும் மழலைப் பேச்சும், மெல்லிய கணைக் காலும் பாதமும் உள்ளவள், அளவாகப் பண்ணி வைத்தது போன்ற அங்கங்கள் உள்ள அழகு வடிவமுள்ளவள். தன் தாயிடத்தில் அன்பும் ஆவலும் உள்ளவள் கபடமற்ற வெகுளியான நல்ல குணமுள்ளவள் என்பதாம். இவளே உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்நவளாவாள் என்பதாம்.

**உத்திரட்டாதி நட்சத்திர பாத பலன்**

**ஜாத காலங்காரம் சொல்லும் உத்திரட்டாதி நட்சத்திர பாத பலன்**

226 நடடொறும் கோபி சஞ்சலன் தாதா
நாடிய உடம்பினன் மயிரன்
நலம்பெறும் சிரேட்டன் பிரதான மென்றே
நல்உத் திரட்டாதி முதற்கால்
நீடுறும் ரோசக் காரனாம் சாது
நிறைந்திடு மிடியள்நற் குணவான்
நிலைத்தநன் னபைடபான் அறிவுளா னென்றே
நிகழ்துவ றிரண்டதாங் காற்கே
கோடுறு புத்தி யிலான் பக்தி மான்முன்
கோபிசந் தோஷிசெம் மயிரான்
போளனா மூன்றாங் காற்பல மென்றே
கூறுவர் மறை உணர் புலவர்
பிடறும் சொற்கேட் டான்மிக வாடும்
பேதிய னுதாரனற் பயிரைப்
பேணுவான் கோபி கிலேசவா னாம்
பெட்புநாற் காற்பலன் தானே

(இதன் பொருள்)

**முதல் பாதம்**

உத்திரட்டாதியின் முதல் காலில் பிறந்தவன் உலகில் உள்ளவர்களின் மிகுந்த சினமுள்ளவன். வருத்த முடையவனும் தனமுள்ளவன், உடலில் உரோமம் நிறைந்தவன், மேலானவனுமாவான்.

**இரண்டாம் பாதம்**

இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் நல்ல வைராக்யம் ரோஷ

முள்ளவன், நற்சிந்தையுள்ளவன். குணவான், தரித்திரன் மற்றும் பொறுமையுமுள்ளவனுமாவான் என்பதாம். அறிவுடையவனுமாவான்.

**மூன்றாம் பாதம்**

துன்மார்க்கமுள்ளவன் அறிவில்லாதவன், கடவுள் பக்தியுள்ளவன், திடீரெனக் கோபம் கொள்பவன்,. எக்காலத்திலும் இன்பம் சுக சௌக்யத் தோடிருப்பவன். உடலில் செம்மை நிறமயிருள்ளவன், கலக மூட்டு விருப்பனென்பதாம்.

**நான்காம் பாதம்**

தான் செய்யும் தொழில்களிலும் எதிலும் எப்பொழுதும் சத்திய வாக்குடையவன். மற்றவர் சொற்களைக் கேளாதவன்,. உதார குணமுடையவன். பயிர்த் தொழில் செய்ய வல்லவன். கோபமுள்ளவன், எப் பொழுதும் ஏதாவது வருத்தப்பட்டுக் கொண்டிருப்பவன். இவனே உத்திரட்டாதி நான்காம் பாதத்தில் பிறந்தவன்.

*வடமொரு ஜாதக சார தீபம் கூறும் உத்திரட்டாதி பாத பலன்*

1ம் பாதம் - அரசனாக இருப்பவன், ராஜயோகமுள்ளவன்.

2ம் பாதம்- திருட்டுத் தனம், களவு செய்பவன்

3-ம்பாதம் - நல்ல சந்ததி விருத்தியுள்ளவன்.

4ம்- பாதம் - மிகவும் சௌக்ய சுகமுள்ளவன்.

*சுவடி 1500 "மரண கண்டி" நூல் கூறும் உத்திரட்டாதி நட்சத்திர பாத பலன்.*

*உத்திரட்டாதி நட்சத்திர முதல் பாதத்தில் பிறந்தவன் பலன் (சுவடி 1500 மரண கண்டி கூறுவது)*

*227 நீரியன் செய்யன் சால நிபுணனாம் நேசம் உள்ளான்*
*மாளிகை மனையில் வாழும் மன்னரால் மாட்சி உண்டாம்*
*வாளிசேர் கண்ணி னான்மேல் வலதிசை மருங்கில் வாழும்*
*காளிசேர் வடிவைப் பேணும் கதிரவன் காலி னானே!*

(இதன் பொருள்)

உத்திரட்டாதி முதல் மாதத்தில் பிறந்தவன் நீண்ட நெட்டையான வடிவமுடையவன். மிகவும் புத்திசாலி. அன்பும் பாசமும் உள்ளவன். உயர்ந்த மாட மாளிகையில் வாழ்பவன். இவனுக்கு அரசரால் மேன்மை உண்டு (அரசாங்கத்தால் உயர்வு உண்டு) இவன் அன்பு போன்று கூர்மையான அழகிய கண்ணுடைய, அழகான மனைவியைப் பிரியாமல் அவளுடன் வாழ்பவன்,. இவன் காளியின் வடிவத்தைப் பூசிப்பவன். இவனே சூரியனங் கிஷத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

*இனி இதற்குக் கால சக்ரதசை வருவாறு*

| | | |
|---|---|---|
| 1. | விருச்சிகச் செவ்வாய் | - 7 வருடம் |
| 2. | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 3. | கன்னி புதன் | - 9 வருடம் |
| 4. | கற்கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 5. | சிங்காதித்தன் | - 5 வருடம் |
| 6. | மிதுன புதன் | - 9 வருடம் |
| 7. | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 8. | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| 9. | மீன வியாழன் | - 10 வருடம் |
| ஆகவயது | | - 100 வருடம் |

*சுவடி எண் 1500 'மரண கண்டிகை" கூறும் உததிரட்டாதி நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்*

*228. மந்திர மறைகள் கற்கும் மாதரால் மகிழ்வுமுண்டாம்*
*சுந்தரன் பலன்கள் சொல்வான் தோன்றலும் இசைத்து தோன்றும்*
*சுந்தரன் பொய்கள் சொல்லான் அரும் பொருள் அன்பால் சேரும்*
*புத்தியே பெரியனாகும் புதனினங்கிழத்தினானே*
*(சுவடி எண் 1500)*

(இதன் பொருள்)

உத்திராடம் 2ம் பாதத்தில் பிறந்தவன் மந்திரத்திரங்களையும் வேதங்களையும் நன்கு கற்று தேர்வான் இவனுக்கு பெண்களால் இன்ப முண்டாகும். இவன் எதிர்காலப்பலன்களை பொய்களை சொல்லமாட்டான் இவன் பொருளையும் தனத்தையும் அக்கரையுடன் சேர்ப்பான் இவன் புத்திசாலி. அறிவாளி. இவனே புதன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

*இனி இதற்கு கால சுக்கிர தசை வருமாறு.*

1) கும்பச்சனி - 4 வருடம்

2) மகர சனி - 4 வருடம்

3) தனுசு வியாழன் - 10 வருடம்

4) மேஷச் செவ்வாய் - 7 வருடம்

5) ரிஷப வெள்ளி - 16 வருடம்

6) மிதுன புதன் - 4 வருடம்

7) கடகச்சந்திரன் - 21 வருடம்

8) சிங்க ஆதித்தன் - 9 வருடம்

9) கன்னி புதன் - 9 வருடம்

ஆக வயது - 85 வருடம்

*மரண கண்டிகை சுவடி எண் 1500 கூறும் உத்திரட்டாதி நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பலன்*

*229. மார்பகன் றுயர்ந்திருக்கும் மதிமுக மறுஉண்டென்னும்*
*சீர்தரும் உண்டி வேணும் செய்தரும் கொடுங்கணாளன்*
*ஆதரவுடைய பெண்மேல் அண்டினன் நன்கு கற்கும்*
*சார்வது மாதர் தம்பால் தரும் புதற்காலினானே.*

(இதன் பொருள்)

உத்திரட்டாதி 3ம் காலில் பிறந்தவன் அகன்றுயர்ந்த மார்பை உடையவன். சந்திரன் போன்ற அழகிய இவன் முகத்தில் மச்சம் இருக்கும் தான் மணந்த பெண்கள் ஆதரவுடன் அன்பு செய்பவன் நன்றாக கல்வி கற்பவன் பெரும்பாலும் பெண்கள் நடுவிலேயே இருப்பான். இவனே சுக்கிரன அங்கிஷத்தில் பிறப்பவனவான் என்பதாம்,

*இதற்கு கால சக்கர தசை வருமாறு*

1) துலாம் வெள்ளி - 16 வருடம்

2) விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்

3) தனுசு வியாழன் - 10 வருடம்

4) மகரச்சனி - 4 வருடம்

5) கும்பச் சனி - 4 வருடம்

6) மீன வியாழன் - 10 வருடம்

7) மேஷச்செவ்வாய் - 7 வருடம்

8) ரிஷப வெள்ளி - 16 வருடம்

9) மிதுன புதன் - 9 வருடம்

ஆக வயது 83 வருடம்

**நான்காம் பாதம்**

*மரண கண்டிகை 1500 சுவடி எண் கூறும் உத்திரட்டாதி நட்சத்திரம் பாதத்தில் பிறந்தவர்கள் பலன்*

*230 வெட்டெனப் பேச வல்லான் வெகுளி முன் உடையனாகும்*
*சிட்டரைச் சேர்ந்து வாழும் சிறுகுடி யாள னாகும்*
*பட்டய மணிந்த தோளான் படைக் கெலாம் தலைவனாகும்*
*இட்டருக் கினியனாகும் எரியினங் கிஷத்தி னானே*

*(இதன் பொருள்)*

இவன் தெளிவாக வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்னலாம் படி பேச வல்லவன், இவன் முன் கோப முள்ளவன் நல்லவர்களுடன் சேர்ந்து வாழ்பவன். சிறிய அழகிய குடும்பமுள்ளவன். தோள்வளையம் அணிந்த தோளுடையவன் இவன் படைத்தலைவனாகவும் இருப்பான். தன்னைச் சேர்ந்தவர்களுக்கு இவன் இன்பம் செய்யும் இனியவன். இவனே செவ்வாய் அங்கிலத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

*இதற்குக் கால சக்கரம் தசை வருமாறு*

1. கடகச் சந்திரன் - 21 வருடம்

2. சிங்க ஆதித்தன் - 5 வருடம்

3. கன்னி புதன் - 9 வருடம்

4. துலாம் வெள்ளி - 16 வருடம்

5. மேஷச் செவ்வாய் - 7 வருடம்

| | | |
|---|---|---|
| 6. மீன வியாழன் | - 10 | வருடம் |
| 7. கும்பச் சனி | - 4 | வருடம் |
| 8. மகரச் சனி | - 4 | வருடம் |
| 9. தனுசு வியாழன் | - 10 | வருடம் |
| ஆக வயது | - 86 | வருடம் |

**இந்த நட்சத்திரத்திற்கு மகா தசைகள் வருமாறு**

| | | |
|---|---|---|
| 1. சனி தசை | - 19 | வருடம் |
| 2. புதன் தசை | - 17 | வருடம் |
| 3. கேது தசை | - 7 | வருடம் |
| 4. சுக்ர தசை | - 20 | வருடம் |
| 5. சூரிய தசை | - 6 | வருடம் |
| 6. சந்திர தசை | - 10 | வருடம் |
| 7. செவ்வாய் தசை | - 7 | வருடம் |
| 8. ராகு தசை | - 18 | வருடம் |
| 9. குரு தசை | - 16 | வருடம் |
| ஆக வயது | - 120 | வருடம் |

**இவனுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன**

இவன் பிறந்த ஆண்டில் பிள்ளைப் பிணியால் கண்டம் 3 வயதில் வெதுப்பால் 5 வயதில் அக்கினியால் 7 வயதில் வை சூரியால் கண்டம் 15 வயதில் மிருகத்தால், 22 வயதில் கள்ளரால் ஸ்த்ரீகளால் 25 வயதில்

மருந்தீட்டால் 30 வயதில் ராஜ பிளவையால். 32 வயதில் சுரத்தால் 35 வயதில் நெருப்பால் 47 வயதில் அரசாங்கத்தால் 60 வயதில் தலை நோயால், வயிற்றுக் கடுப்பால் 80 வயதில் பித்தத்தால் சுரத்தால் இவை கடந்தால் 86 வயது சென்று ஐப்பசி மாதம் புர்வபட்சத்து பஞ்சமி திதியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற உத்திரட்டாதி நாளில் 13 நாழிகை சென்று மூச்சுத் திணறி மரணம்.

*இனி இவன் பிறந்தசாரம்*

*இவன் பிறந்த லக்ன சாரம்*

| | | |
|---|---|---|
| சூரியனாகில் | - | புரோகிதன் |
| சந்திரன் சாரமாகில் | - | சேனாதிபதி |
| செவ்வாய் சாரமாகில் | - | மாட்சிமைக்காரன் - உயர் அந்தஸ்து உள்ளவன் |
| புதன் சாரமாகில் | - | மணியக்காரன் |
| குரு சாரமாகில் | - | புத்திமான்,. மந்திரியாம் |
| சுக்கிரன் சாரமாகில் | - | சுகவான், வாழ்க்கை நிம்மதி ஆனால் கபட நாடகதாரி |
| சனி சாரமாகில் | - | குணவான், குருடன் |
| இராகு சாரமாகில் | - | தரித்திரன் அல்லது முடவன் |
| கேது சாரமாகில் | - | விஷ வைத்தியன். |

இதில் பெண் திரளில் பணம் காசுள்ளவனாவாள். மாதம் பிறக்கில்-தானியம் விலையேறும் சுரம் தோன்றில் 4 நாளில் விடும் விடாத போது வேத மந்திரம் சொல்லி நெய்யாலே ஓமம் செய்து இதன் மரத்தடியில் ரத்தமும் சோறும் பலி இடவும்.

இன் நாளில் பிறந்தவன் இறைச்சி தின்று ஊர் போகவும் (உளுந்து வடை தின்றும் போகலாம்). மிதுன லக்னத்தில் 8 நாழிகை செல்லும் போது இந்த நட்ச்த்திரம் உச்சம் (வலிமை) பெறும்.

*இந்த நட்சத்திரம்*

முதற்கால் - தாய்க்குத் தோஷம்

2ம் கால் - **மாமனுக்குத் தோஷம்**

3ம் கால் - நல்லது

இதில் ஏற்படும் தோஷங்களுக்கு பிராமண போசனம் செய்வித்து மகேசுர பூஜை செய்யவும்.

**வடமொழி கர்ம விபாகம் கூறும் உத்திரட்டாதி நட்சத்திர பூர்வ கர்ம சாந்தி பரிஹாரம்**

***முதல் பாதம் உத்திரட்டாதி பூர்வ கர்மமும் சாந்தி பரிகாரமும் சிவபெருமான் சொல்லுகிறார்.***

உஜ்ஜெயினி நகரத்தில் ஒரு க்ஷத்திரியன் தன் குலத் தொழிலை விட்டு வைஸ்யனின் வாணிபத் தொழிலை நடத்தி வந்தான். இவன் பொருள்களை விற்று வாங்கி சம்பாதித்து வந்தான். இவன் மனைவி தீய ஒழுக்கம் உள்ளவளாகவும் விபசாரியாகவும் இருந்தாள். இவனோ தினமும் ஆட்டுக்கறி உண்டு வந்தான். தன் தகப்பன். திதியன்று வந்த புரோகிதனை கண்டபடி திட்டி கெட்ட வார்த்தைகளைப் பொழிந்தான். இதனால் அந்த புரோகிதன் மனம் நொந்து இறந்தான். அதன் பின் பல காலம் சென்று இந்த க்ஷத்திரியனும் இறந்து போனான். இதனால் யமதர்ம ராஜனின் தூதர்கள் இவனை மிகவும் கொடிய கும்பீபாகம் என்ற நரகத்தில் தள்ளினார்கள். 60 ஆயிரம் வருஷம் இங்கு கொடுத்துன்பம் அனுபவித்தபின், முதலில் பாம்பாகப் பிறவியடைந்தான். அதன் பின் கோழியாகப் பிறந்தான். அதன் பின் ஒரு புண்ய பூமியில் இவன் மனிதனாகப் பிறவி பெற்றான் தன் குல ஒழுக்கத்தை விடாமல் செய்தும் தேவதை, குரு இவர்களை வழிபட்டும் வந்தான்,. இருந்தும் இவனுக்கு பல ஆண் குழந்தைகள் பிறந்தும் அவை

எல்லாம் இறந்தன. இவனுக்கும் பல நோய்கள் பற்றிக் கொண்டன. இடதிற்கு இப்பொழுது சாந்தி முறையைக் கேட்பாயாக.

முதலில் 40 தோலா எடையுள்ள தங்கத்தால் ஒரு பிராமணனின் உருவம் பண்ணி வைக்க வேண்டும். அதை ஆடை அணிவித்து முறைப்படி பூஜை செய்ய வேண்டும். சிவபூஜை அதற்குரிய பல மந்திரங் களால் செய்ய வேண்டும். "ஒம் நம சிவாய" என்ற ஆறெழுத்து மந்திரத்தை ஒரு லட்சம் முறை உச்சரித்து அதற்கு புரஸ்சரணமும் செய்ய வேண்டும். அதன் பின் பொன்னாலான ஆபரணம், ஆடை இவற்றால் அலங்கரித்த கபில நிற (செங்காவி நிறம்) முள்ள பசுவை பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும்.

பூஜை செய்த சிவபெருமானின் தங்கத்தாலான விக்ரஹத்தை உத்தம பிராமணனுக்குத் தட்சணை முதலியவற்றுடன் தானம் பண்ண வேண்டும். பின்பு உத்தம பிராமணர்களுக்குப் போஷனம் பண்ணி வைக்க வேண்டும். பிறகு தன் உறவினர்களுடன் கூடி பிராமனணர்களை, சிவன், விஷ்னு, குருவாகப் பாவித்து பிரதட்சணம் பண்ணி பய பக்தியுடன் நமஸ்காரம் பண்ணவேண்டும்.

இப்படிச் செய்வதால் இவன் பாவங்கள் விலகுகின்றன.

இவன் நோய்கள் விலகி இவனுக்கு ஆரோக்கியம் ஏற்படுகிறது. இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. இதன் இவன் குடும்பத்துடன் சந்தோஷத்துடன் வாழ்கிறான்.

***உத்திரட்டாதி நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வகர்ம விளையும் அவற்றின் பரிகாரமும்***

*சிவபெருமான் சொல்லுகிறார்*

பிரதிஷ்டா என்ற நகரத்தில் ஒரு காயஸ்தன் (பிராமணன்) இருந்து வந்தான். இவன் தன் கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்தான். இவன் தேவி உபாசனை பண்ணி வந்தான், இவனுக்கு ஒரு வைஸ்யன் நண்பனாக இருந்தான். இந்த வைஸ்யன் பெரிய பணக்காரனாக

இருந்தான். காயஸ்தன் இந்த வைஸ்யன் வீட்டுக்கு ஒருமுறை வந்தான். வைசியன் காயஸ்தனை நன்றாக மதித்து உபசரிததான். ஒரு மாதம் வரை காயஸ்தன் வைஸ்யன் வீட்டில் இருந்தான். வைசியனின் மனைவிக்கு இந்த காயஸ்தன் மேல் காதல் ஏற்பட்டு விட்டது.

அந்த காயஸ்தன் தன் வீட்டுக்குச் சென்ற போது வைசியனின் மனைவியும் அவனுடன் சென்றுவிட்டாள். இதனால் காயஸ்தனுக்கும் வைசியனுக்கும் பரம விரோதம் ஏட்பட்டு விட்டது. காயஸ்தன் வயது முதிர்ந்து இறந்தான். எம தூதர்கள் இவனை "கோரம்" என்ற நகரத்தில் 60 ஆயிரம் வருஷங்கள் தள்ளித் தண்டித்தார்கள். "கிருமி" என்ற அந்த நகரத்தில் அவன் நெடுங்காலம் கஷ்டப்பட்ட வெளி வந்து, எருதாகவும் கரடியாகவும், ஆடாகவும் பிறவி எடுத்து கடைசியில் பணக்காரக் குடும்பத்தில் மனிதப் பிறவி பெற்றான்.

இவன் தன் மனைவியை விட்டு நண்பன் மனைவியை அனுபவித்த பாவத்தால் இவனுக்கு இப்பிறவியில் குழந்தைகள் பிறக்க வில்லை. இவனும் நோயாளியாக எப்பொழுதும் நீங்காத சுரத்தால் அவதிப்பட்டான். இவனுக்கு ஒரு பெண் பிறந்தது. அதுவும் இவன் முற்பிறவியில் செய்த பாவத்தால் விதவையாகி விட்டாள். இவன் கால் தொடைகள், ஆசனம் இவற்றில் வலி ஏற்படடு விட்டது. இவன் மனைவிக்கோ குழந்தை பிறந்து இறந்து விட்டாது. இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு.

முதலில் இவன் தன் சொத்தின் 6ல் ஒரு பகுதியை புண்ய கரியங்களில் செலவு செய்ய வேண்டும். அதன் பின் காயத்ரி மந்திரத்தை ஒரு லட்சம் முறை ஜபம் பண்ணவேண்டும். அதற்குப் புரஸ்சரணமும் செய்ய வேண்டும். அதன் பின் நெய், பால், பாயசம் முதலியவற்றுடன் 60 அந்தணர்களுக்கு போஜனம் பண்ணி வைக்க வேண்டும். கோதானமும், பூதானமும் பண்ண வேண்டும். அதன் பின் பாழடைந்த் குளம், கிணறுகளை மராமத்து செய்து சரி செய்ய வேண்டும். இப்படிப் பலவழிகளில் பரிகாரம் செய்வதால் இவன் பாவங்கள் விலகுகின்றன. இவன் ஆரோக்கியம் பெற்று நலம் பெறுகிறான். இவனுக்கு தீர்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. அதன் பின் இவன் குடும்பத்துடன் சந்தோஷத்துடன் வாழ்கிறான்.

## வடமொழி கர்ம விபாகம் கூறும் உத்திரட்டாதி 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் சாந்தி பரிஹார முறைகளீ ருமாறு

நைமிசாரிணிய பிரதேசத்தில் மிஸ்ரிகம் என்ற ஊர் உண்டு. இங்கு தாமோதரன் என்ற ராஜாவின் புத்திரன் ஒருவன் இருந்தான். இவனுக்கு வம்சவதி என்ற மனைவி இருந்தாள். ராஜ குமாரன் எப்பொழுதும் பரஸ்திரீ லோலனும் துஷ்டனாகவும், கெட்ட நடவடிக்கை உள்ளவனாகவும் இருந்தான். தன் மனைவியை விட்டு விட்டு பிற பெண்களை பலரையும் சேர்த்து வைத்து அனுபவித்து வந்தான். இவன் மான்களை வேட்டையாடி அதன் மாமிசத்தை உண்டு வந்தான், பல மிருகங்களின் குட்டிகளையும் கொன்று வந்தான். இவன் வேடனாகவே வாழ்ந்து வந்தான். இப்படியே இவன் ஆயுள் புராவையும் கழித்தான் பின் இறந்தான். எமதர்மன் கட்டளை யால் இவனை சங்கிலியால் பிணைத்து மகா கொடிய நரகத்தில் தள்ளினார் கள். 70 ஆயிரம் வருஷங்கள் நரக தண்டனை அனுபவித்தான். அதன் பின் புலியாகவும் அதன் பின் குரங்காகவும் பிறந்தான். அதன் பின் மனிதனாகப் பிறந்தான். ஒரு வகையில் தான் செய்த புண்ணிய வசத்தால் இவன் வசதியுள்ளவன் குடும்பத்தினால் பிறந்தான். போன ஜன்மத்தில் பிராமணப் பெண் சம்போகம் பண்ணதால் இவன் உடலில் வலிகள் ஏற்பட்டன. போன ஜென்மத்தில் விலங்குகளையும் அவற்றின் குட்டிகளையும் வேட்டை யாடிக் கொன்றதால் இவனுக்கு இப்பிறவியல் குழந்தைகள் இல்லை. இப்பொழுது இதற்கு சாந்தி பரிகாரம் வருவாறு.

முதலில் சிவபெருமானின் வைதீக மந்திரத்தை ஒரு லட்சத் முறை ஜபம் பண்ண வேண்டும். அதன் பின் பஞ்சாட்சர மந்திரத்தை 2லட்சம் முறை ஜபம் பண்ணவேண்டும்.

அதன் பின் 40 தோலா எடையுள்ள தங்கத்தால் சிவபெருமான் வடிவம் பண்ண வேண்டும்,. அதை முறைப்படி பூஜிக்கவேண்டும். நல்லபடி ஓம குண்டம் அமைத்து ஹோமம் டண்ண வேண்டும். (பஞ்சாக்ஷரத்தால்) அதற்குப்புரஸ்சரணம் பண்ண வேண்டும். அதன்பின் பசு மாடு ஒன்றை கொம்பில் பொன் பூண் போட்டு கன்றுடன் தானம் பண்ண வேண்டும். பால்

லட்டு முதலியவற்றுடன் உத்தம பிராமணர்களுக்கு போஜனம் பண்ணி வைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாவங்கள் விலகுகின்றன. இவன் வியாதிகள் தீர்ந்து நலம் பெறுகின்றான். இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகளும் பிறக்கின்றன. அதன் பின் இவன் குடும்பத்துடன் சந்தோஷத்துடன் வாழ்கின்றான்.

**வடமொழி கர்ம விபாகம் கூறும் உத்திரட்டாதி 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிகாரமும்**

*சிவபெருமான் சொல்லுகிறார்*

உக்ர புரம் என்ற ஊரில் ஒரு வைசியன் இருந்தாள். அவன் பெயர் தண்டதாஸ் என்பதாகும். இவன் மனைவியின் பெயர் சுகோபிகா என்பதாம். இவன் கணவனை ஏமாற்றி கெட்டவழிகளில் நடந்து வந்தாள். ஒரு சமயம் இவனிடம் ஒரு பணக்கார பிராமணன் வந்து சேர்த்தான். இவள் ஒரு கோடி பணத்தை வைசியன் வீட்டில் பொருப்பில் வைத்து விட்டு நேபாள நாட்டிற்கு யாத்திரையாகச் சென்றான். இந்த தொகையை வைசியனே செலவழித்து வந்தான். ஆனால் வயது முதுமை அடைவதற்க்கு முன்பே இவன் குடும்பத்துடன் வை சூரியால் இறந்தான்.

இதன் பின் எமதூதர்கள் இவனை கொடிய கர்தமம் என்ற நரகத்தில் தள்ளினார்கள். அங்கே 60 ஆயிரம் ஆண்டுகள் துன்பம் அனுபவித்தான். அதன் பின் பன்றியாகப் பிறந்தான். அதன் பின் கரடியாகப் பிறந்தான். அதன் பிறகு எருமையாகப் பிறந்தான் அதன் பின் தான் செய்த சிறிது புண்ணியத்தால மனிதப் பிறவி அடைந்தான். ஆனால் அவன் செய்த பாவத்தால் இவனுக்கு சந்ததி ஏற்பட வில்லை.

*இதற்கு சாந்தி பரிகாரம் வருமாறு*

முதலில் காயத்ரி மந்திரத்தை ஐந்து லட்சம் முறை ஜபம் பண்ண வேண்டும்.

அதன் பின் 400 தோலா எடையுள்ள தங்கத்தாலான பிராமணின் வடிவம் செய்ய வேண்டும். அதை அணிகலன் ஆடையால் அலங்கரிக்க வேண்டும். அதனை பின் சந்தனம் துபம் தீபம் நைவேத்யம் பலவற்றுடன் பூஜை செய்ய வேண்டும். பூஜை செய்த இந்த விக்ரஹத்தை உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். பசுவுக்கு கொம்பில் பூண் மற்றும் அணிகலன்கள் அணிவித்துக் கன்றுடன் தானம் பண்ண வேண்டும். அதன் பின் பால்பாயசம் இனிப்புகளுடன் பிராமணர்களுக்கு போஜனம் பண்ணி வைக்க வேண்டும். நூறு பசுக்களையும் நெய்க் கலசங்களுடன் பிராமணர்களுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் மாசிமாசத்தில் பிராயகையில் புண்ணிய ஸ்னானம் பண்ண வேண்டும். இதன் பின் இவன் பின் இவன் பாவங்கள் விலகுகின்றன. இதனால் இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் சந்ததி ஏற்படுகின்றது. இவர்கள் அதன் பின் குடும்பத்துடன் சந்தோஷமுடன் வாழ்கின்றனர்கள்.

## *பிறர் மதப்படி உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்கள்*

### *பொதுப் பலன் - ஆண்கள்*

### *உடல் அமைப்பு.*

மிகவும் கவர்ச்சிகரமான தோற்றத்தை உடையவன். பார்ப்பதற்கு வெகுளியாக தோன்றுவான். இவனுடைய பார்வையில் இயற்கையாகவே காந்த சக்தி உண்டு. இவன் ஒருவரை புன் சிரிப்புடன் பார்த்தால் போதும். இவனுக்கு அடிமையாகி விடுவான்.

### *குணங்கள்*

பிறருடைய தகுதியில் உயர்வு தாழ்வு பாராது. ஏழை பணக்காரன் எல்லோரிடமும் சமமான உறவை வைத்துக் கொள்வான். களங்கமில்லாத இதயத்தை உடையவன். பிறருக்கு தொந்தரவு அல்லது கஷ்டத்தைத் தர விரும்பாதவன். இவனிடம் விரும்பத்தகாத குணம் இவனுக்கு கோபம் நீண்ட நேரம் இருக்காது. உடனே சாந்த நிலையை அடைந்து விடுவான். இவனிடம் அன்பு செலுத்துபவர்களுக்காக தன் உயிரையும் தியாகம் செல்யத் தயங்காதவன். ஆனால் இவனை, இவனது உணர்ச்சிகளைக்

காயப்படுத்தி விட்டால், பொறுக்க மாட்டான். சிங்கம் போல் வெகுண்டெழு வான். இவனிடம் அறிவு, விவேகம், பர்ஸனாலிடி எல்லாம் உண்டு.

கவர்ச்சிகரமாக பேசுவதில் சமர்தன். தன் எதிரிகளை அழிக்கும் திறமை பெற்றவன். வாழ்க்கையில் ஓரளவு உயர்ந்த பொஸிஷனை அடைவான். இவன் SEX ல் ஆர்வம் உள்ளவன். ஆதலால் எப்போதும் பெண்கள் இவனை சுற்றி இருக்க வேண்டும் என்று விரும்புவான்.

***கல்வி, வருமானம், தொழில்***

ஒரே சமயத்தில், பல விஷயங்களிலும் ஞானத்தையும் அறிவையும் இவனால் அடைய முடியும். நிறைவான பள்ளிப் படிப்பு இல்லாவிட்டாலும் அவனுடைய அறிவும் அதை வெளிப்படுத்தும் விதமும், நன்கு படித்த அறிஞர்களையே வியக்க வைக்கும் படி இருக்கும். இவனுக்கு லலித கலை களில் மிகுந்த ஆர்வம் உண்டு. மணிக்கணக்கில் பொருட் செறிவுடன் பேசவும், நீண்ட கட்டுரைகளும், புத்தகங்களும் எழுதும் திறமை பெற்றவன்.

தொழில் துறையில தன்னுடைய அசாதாரணமான சக்தியாலும் திறமையாலும் நன்கு பிரகாசிப்பான். சோம்பேறித்தனம் என்பது, கடுகளவு கூட இவனிடன் கிடையாது. ஒரு வேலையை செய்ய வேண்டும் என்று நினைதது அதைத் செய்யத் துவங்கி விட்டால், அந்த வேலையை செய்து முடிக்கும் வரை ஓய மாட்டான். அந்த வேலையில் தோல்வி ஏற்பட்டாலும் கூட அதற்காக கவலை கொண்டுமனம் ஓடியமாட்டான்.

இவன் உத்தியோகத்தில் அமர்ந்தால், அதன் "டாப் பொஸிஷனுக்கு உயர்வான். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள். ஆரம்ப காலத்தில் கீழ் பதவி / தகுதியில் இருந்தாலும், மெள்ள மெள்ள உயர்ந்து உன்னத ஸ்தானத்தைப் பிடிப்பதுடன், பிறரிடருந்து புகழும், பரிசுகளும் பெற்று நல்ல செல்வாக்குடன் வாழ்வதைக் காணமுடிகிறது.

இவனுக்கு வாழ்க்கையில் ஸ்திரத் தன்மையும், உயர் நிலையுல் திருமணத்திற்குப் பிறகே கிடைக்கிறது. தன்னுடைய குடும்ப வாழ்க்கையை அதாவது வேலைக்கு செல்வதை தன் இளம் வயதிலேயே 18 OR 19 வயதிலேயே தொடங்கி விடுகிறார்கள் தொழிலில் இவனுடைய 19, 21, 28. 30, 35, 42 வயதுகளில் முக்கியமான "ப்ரேக்" கிடைக்கும்.

*குடும்ப வாழ்க்கை*

இவனுடைய தந்தை மத ஆச்சார அனுஷ்டானங்களில் தீவிர பற்று உள்ளவர். முக்கிய ஸ்தானத்தை வகிப்பவர். அதனால், இவன் தன் தகப்பனார் மீது அன்பும், ஆசையும், மரியாதையும், பெருமையும் கொண்டவன். இருந்த போதிலும்,. தந்தையிடமிருந்து இவன் எந்த வித நன்மைகள், உதவிகளைப் பெற முடியாது. சிறுபிராயத்தில் இவனை யாரும் கவனித்து வளர்க்க மாட்டார்கள். ஒதுக்கப் பட்டவன் போல் வாழ நேரிடும். பொதுவாக வெளியூரில் தான் இவன் வாழ்க்கையை நடத்துவான்.

இருப்பினும் இவனுடைய மணவாழ்வு சந்தோஷத்துடன் சிறந்து விளங்கும். இவனுக்குப் பொருத்தமான இசைந்து வாழும் அற்புதமான மனைவி அமைவாள். இவனது குழந்தைகளும், அடக்கமானவர்களாகவும் மரியாதை, வணக்கம் உடையவர்களாகவும் இருப்பார்கள். குழந்தைகளே இவனுக்கு மிசுப் பெரிய சொத்தாக அமைவார்கள். நிறைய,. நல்ல பேரக் குழந்தைகளையும் பெறுவான். இவன், குடும்பத்திற்கு ஆபரணமாகத் திகழ்வான்.

*ஆரோக்யம்*

திடமான ஆரோக்யத்தை உடையவன். தன் ஆரோக்யத்தைப் பற்றி கவலைப்படாதவன் அதனால் உடலுக்கு "சீரியஸ்" ஆக ஏதாவது வந்தால் தான் டாக்டரைத் தேடிப் போவான். பக்கவாதம் 'பைல்ஸ்' ஆக ஏதாவது வந்தால தான் டாக்டரைத் தேடிப் போவான். பக்கவாதம் "பைல்ஸ்" ஹெர்னியா, வயிற்றுக் கோளாறுகள் போனற் நோய்களால் பாதிக்கப்படக் கூடும்.

*பெண்கள்*

*உருவம்*

நடுத்தர உயரமும், கட்டுமஸ்தான தேகமும் உடையவர்கள். பெரிய கண்கள் முன்னுக்கு வந்திருக்கும்.

*குணம்*

**உண்மையிலேயே** இவள் **கிருஹ "லக்ஷ்மி"** யாக விளங்குவாள். ஒரு குடும்பப் பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருப்பாள். இவளுடைய பழக்க வழக்கங்கள், நடத்தை எல்லாம் பிறர் புகழும் வண்ணம் இருக்கும். எல்லாரிடமும் பணிவுடனும், மரியாதையுடனும், சுமுகமாகவும் நடந்துகொள்வாள். சந்தர்ப்ப சூழ் நிலைக்குத் தகுந்தவாறு தன்னை **மாற்றிக் கொள்வதும்**, சந்தர்பத்திற்குத் தக்கவாறு தன்னை அதில் **பொருத்திக் கொள்வதும்**, நாட்டுக்குத் தேவை யான பட்ச பாதமில்லாமையும் இவளுடைய முக்கியமான குணங்கள்.

*கல்வி, வருமானம்*

உத்தியோகத்தில் உள்ள பெண்கள் சுய முயற்சியால் நல்ல ஸ்தானத்தை அடைவார்கள். பெண்கள், லாயர் அல்லது "ஆர்பிட்ரேட்டர்" வேலைக்கு மிகவும் பொருத்த மானவர்கள். இவர்கள் நல்ல நர்ஸ் அல்லது டாக்டராகக் கூட பரிமளிக்கக் கூடியவர்கள்.

*குடும்ப வாழ்க்கை*

இந்தப் பெண்கள் தான் பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் ஒரு ரத்தினமாக ஜொலிப்பாள். இவள் இருக்கும் வீட்டில் "லக்ஷ்மி கடாக்ஷம்" நிறைந்து இருக்கும். செல்வமும், குதூகலமும் செழித்து இருக்கும்.

இந்தப் பெண்கள், புனர்பூசத்தில் பிறந்தவனை திருமணம் செய்ய கூடாது. அப்படி மணந்தால், இவள் தன் புருஷனை இழப்பாள்.

*ஆரோக்யம்*

வாய்வு சம்பந்தமான நோய்கள், பிடிப்புகள். அஜீரணக் கோளாறு, மலர்ச்சிக்கல், ஹெர்னியா, T.B. போன்ற நோய்கள் இவளை வந்தடைய வாப்புண்டு.

***உத்திரட்டாதி நட்சத்திரத்தில் இருக்கும் கிரகங்களை, இதர கிரகங்கள் பார்த்த பலன்.***

இதற்கு மூல நட்சக்திரத்திற்கு சொல்லப்பட்ட பலன்களைப் பார்க்கவும்.

## நட்சத்திர பாதங்களில் கிரகங்கள் நின்ற பலன்கள்

### உத்திரட்டாதி முதல் பாதத்தில் சூரியன் நின்ற பலன்

இந்த சூரியன் தீய கிரகங்களால் கெட்டிருந்தால் ஜாதகன் கருப்பையில் கான்சர் ஏற்பட்டு கஷ்டப்படுவான். சூரியன் மட்டும் இங்கு நல்ல நிலையில் இருந்தால் ஜாதகன் சமூகத்தில் நல்ல ஸ்தானத்தையும், நல்ல குடும்பத்தையும், பல வித சௌகரியங்களையும் அனுபவிப்பான்.

### உததிராட்டாதி முதல் பாதத்தில் சந்திரன் நின்ற பலன்

இங்கு சத்திரன் இருக்கும் போது, சுக்கிரன் ஹஸ்தம் 2 அல்லது 3 வது பாதத்தில் இருந்தால், ஜாதகத்தில் உள்ள எல்லா தோஷங்களும், தீய பலன்களும் நீங்கிவிடும். ஜாதகன் தீர்காயுளுடன், செல்வம், ஆரோக்யம், சந்தோஷம் எல்லாம் கிடைக்கப்பெற்று நன்கு வாழ்வான்.

### உத்திரட்டாதி முதல் பாதத்தில் செவ்வாய் நின்ற பலன்

பெரும்பாலும் இந்த ஜாதகன் வெளியூரில் அல்லது வெளிநாட்டில் அலைந்து திரிந்து கொண்டிருப்பான். பிறரிடம் ஏமாந்து பெரும் தொகையை இழப்பான். கடைசியில் உறவினர்களிடம் பொருளாதார உதவியை நாடிச் சென்றால், அவர்கள் இவனுக்கு உதாவது விரட்டி அடிப்பார்கள்.

### உத்திரட்டாதி முதல் பாதத்தில் புதன் நின்ற பலன்

ஜாதகனுக்கு வற்றாத கற்பனைத் திறனும், தன் எண்ணத்தை அற்புதமாக வெளியிடும் திறமையும் உண்டு. வயதாக வயதாக இந்த கற்பனை வளமும், உள்ளுணர்வும் வளர்ந்து கொண்டே போகும்.

### உத்திரட்டாதி முதல் பாதத்தில் குரு நின்ற பலன்

இந்த குருவுடன் லக்கினமும் இதிலேயே அமைந்தால் ஜாதகனுக்கு முதலில் பிறப்பது ஆணாகவும், அடுத்து பிறப்பது பெண்ணாகவும் இருக்கும், இதை சூரியன் பார்த்தால் அரசாங்க உத்யோகம் கிடைக்கும்.

### *உத்திரட்டாதி முதல் பாதத்தில் சுக்கிரன் நின்ற பலன்*

இந்த சுக்கிரனுடன் சந்திரனும் இதே இடத்தில் இருந்து பிறந்த பெண்ணைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப்படுவார்கள். இவன் மனம் எப்போதும் சந்தோஷத்தை நாடிச் செல்லும். ஆணாக இருந்தால் அவர்கள் வஞ்சகர்களாக இருப்பார்கள்.

### *உத்திரட்டாதி முதல் பாதத்தில் சனி நின்ற பலன்*

இந்த சனியை குரு பார்த்திருந்தால் ஜாதகன் முதல் தர நிர்வாகஸ்தானக இருப்பான். அல்லது ஒரு முக்கியமான பதவியில் இருப்பான்.

### *உத்திரட்டாதி முதல் பாதத்தில் ராகு நின்ற பலன்*

கொள்கையற்றவன்,. கண்பார்வைக் கோளாறு உடையவன். கண்ணியம் இல்லாதவன். குறைவான மக்கட் செல்வம் உள்ளவன். ஆயினும் பிறருக்கு உதவிகரமாக இருப்பான்.

### *உத்திரட்டாதி முதல் பாதத்தில் கேது நின்ற பலன்*

அடிக்கடி இருப்பிடத்தை மாற்றிக் கொண்டே இருப்பான். வீட்டை விட்டு ஓடிப்போவான். 24 வயது வரை உள்ள வாழ்க்கை சோதனையும் குற்றங்குறைகள் உள்ளதாகவும் இருக்கும். அதனால் மன பாதிப்பு ஏற்படும். 24 வயதிற்குப் பிறகு ஒரு வேலையில் அமர்வான். அதனால் மன திருப்தி ஏற்பட்டு நன்றாக இருப்பான்.

### *உத்திரட்டாதி 2ம் பாதத்தில் சூரியன் இருந்த பலன்*

விவசாயம் தொடர்பான வேலைகளில் ஜாதகனுக்கு விருப்பம் ஏற்படும். சூரியன் இதில் இருக்கும் போது, சந்திரன் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்தால் இந்த ஜாதகனின் மரணத்துக்கு ஒரு பெண் காரணமாக இருப்பாள்.

### உத்திரட்டாதி 2ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்

சந்திரன் இங்கு இருக்கையில் பிறந்த குழந்தை தனது 10வது வயதிலோ அல்லது அதற்குள்ளேயோ மரணமடையும்.

### உத்திரட்டாதி 2ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலன்

இந்த செவ்வாயுடன் இதே இடத்தில் லக்னமும் அமைந்தால் இவன் கான்ஸர் நோயால் இவதிப்படலாம். பெருந்துயரை அனுபவிக்க நேரும். சுயநலவாதி. பெரியவர்களை மதிக்கப்பட்டான்.

### உத்திரட்டாதி 2ம் பாதத்தில் புதன் நின்ற பலன்

கணிதம், காமர்ஸ், சட்டம் போன்ற துறைகளில் பிரகாசிப்பான். ஜோதிடத்திலும் புகழ் பெற்றவனாக ஆக முடியும். இலக்கிய அறிவாற்றல் மூலம் அளவு கடந்த பொருளை சம்பாதிப்பான்.

### உத்திரட்டாதி 2ம் பாதத்தில் குரு நின்ற பலன்

இந்த குருவுடன் சந்திரனும் செவ்வாயும் சேர்ந்திருந்து, லக்கினமும் இதிலேயே அமைந்தால் ஜாதகனின் செல்வம் நாளுக்கு நாள் பெருகும்

### உத்திரட்டாதி 2ம் பாதத்தில் சுக்கிரம் நின்ற பலன்

இணக்கமான பொருத்தமான மனைவி அல்லது கணவன் கிடைப்பார்கள் செல்வமும் வெற்றியும் வந்து சேரும். எப்போதும் சிரித்த முகமாயும், பரந்த மனப்பான்மையும், எல்லாம் நன்மைக்கே என்ற மனப்பாங்கும் உள்ளவன் இங்கு குருவும் இழிந்தால் தலைமை அக்கவுண்ட் ஆபீசராகவும் அல்லது நிதித்துறை அல்லது ஒரு இண்டஸ்ட்ரியின் உயர்ந்த பதவியிலும் இருப்பான்.

### உத்திரட்டாதி 2ம் பாதத்தில் சனி நின்ற பலன்

சனி இங்கு இருக்கையில் ஹஸ்த நட்சத்திரத்தில் லக்னமும் சூரியனும் இருந்தால், இந்த ஜாதகனின் மனைவி, திருமணமான 3வது வருடத்திலும் பெண்ணாக இருந்தால் அவள் கணவன் மணமான 5வது வருடத்திரும் இறந்து விடுவார்கள்.

*உத்திரட்டாதி 2ம் பாதத்தில் ராகு நின்ற பலன்*

நிலமும், கட்டிடமும், பணமும் நிறைந்தவன். கற்றறிந்தவன். இந்த ராகுவுடன் சந்திரனும் சேர்ந்து அவர்களை செவ்வாய் பார்த்தால இவனுடைய தாய் அகால மரணமடைவாள்.

*உத்திரட்டாதி 2ம் பாதத்தில் கேது நின்ற பலன்*

பல வழிகளில் பல பெரும் நஷ்டங்கள் ஏற்படும். இவன் தன்னுடைய 30 வது வயது வரையில் எதிலும் முதலீடு செய்யக் கூடாது. இந்த கேதுவுடன் சுபகிரகங்கள் சேர்ந்தால் ஜாதகனை ஜெயிலுக்கு அனுப்ப வழி கோலுவார்கள். பாபகிரகங்கள் சேர்ந்தால் 30 வயதிற்குப் 30 வயதிற்குப் பிறகு வாழ்க்கையை நன்றாக அனுபவிப்பான்.

*உத்திரட்டாதி 3ம் பாதத்தில் சூரியன் இருந்த இருந்த பலன்*

இந்த சூரியனுடன் புதனும் சேர்ந்து இருப்பின் ஜாதகன் அதிபுத்திசாலி, நன்கு கற்றறிந்தவன்.

சூரியன். சுக்கிரனுடன் சேர்ந்து இங்கிருந்து சனி, ஸ்வாதி நட்சத்திரத்தில் இருந்தால், ஜாதகன் அரசாங்க உத்தியோகத்தில் இருப்பான். ஆனால் அடிக்கடி தன் உத்தியோகத்தை / தொழிலை மாற்றிக் கொண்டே இருப்பான்

*உத்திரட்டாதி 3ம் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்*

கண்ணியவான். சாத்வீக மானவன் தாராளமானவன். கற்றறிந்தவன். சந்திரன் இங்கிருக்கையில் சுக்கிரன் ரோகிணி நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகரின் தாய் இவனுக்கு 7 வயது ஆகும் போது இறந்து விடுவாள். இவன் தந்தை வழி உறவினர்களால் வளர்க்கப்படுவான். தன் தந்தையிடமிருந்து எந்த நன்மையையும் அடைய மாட்டான். அரசாங்க உத்தியோகத்தில் கிளார்க்காக அமர்ந்து 35 வது வயதில் நல்ல பதவியைப் பெறுவான்.

*உத்திரட்டாதி 3ம் பாதத்தில் செவ்வாய் இருந்த பலம்:*

உடல் ஆரோக்யம் நல்ல விதத்தில் இருக்காது வெளி தேசங்களில் சுற்றித் திரிவான். குறைவான குழந்தைகளை உடையவன். திருட்டினாலோ

அல்லது பிறரின் வஞ்சகத்தாலோ பொருள்களை இழப்பான். புகழ்ச்சியில் விருப்பமுள்ளவன்.

### உத்திரட்டாதி 3ம் பாதத்தில் புதன் இருந்த பலன்

உயர் கல்வி பெறும் அறிஞன். ஆடிட்டிங் OR சிவில என்ஜினீரிங் கற்றிருப்பான். இவன் சுதந்திரமாக தனி பிஸினஸ் கூட செய்வான். இந்த புதனுடன் குருவின் சம்பந்தம் இருந்தால் சிறந்த லெக்சரராக அல்லது புராதன வம்சங்களைப் பற்றிய ஆராய்ச்சியாளனாக இருப்பான்.

### உத்திரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

லக்கினம் பூரத்தில் அமைந்து இங்குள்ள குருவை சுபகிரகம் பார்த்தால், ஜாதகன் ஸ்தல யாத்திரை செய்யும் போது இறப்பான். இதே அமைப்பை சந்திரன் பார்த்தால் புண்ணிய நதியில் நீராடுகையில் மூழ்கி மரணம் சம்பவிக்கும்.

### உத்திரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலம்

ஜாதகன், கணக்கு வழக்கு பார்த்தல், ஆட்டோமோபைல் பிஸினஸ், மற்றும் ஸ்பெகுலேஷன் மூலம் சம்பாதிப்பான். நல்ல வெற்றியும், செல்வமும் இவனை வந்தடையும் இந்த சுக்கரனுடன் புதன் சேர்ந்தால் சிறந்த கணித நிபுணன் ஆகவோ அல்லது ஜோதிடனாகவோ இருப்பான். இவர் களுடன் சூரியனும் சேர்ந்தால் வேதங்களிலும் மெடாபிஸிக்ஸிலும் நிபுணானாக ஆவான்.

### உத்திரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இந்த சனியுடன் சந்திரன் இருந்தால். விஞ்ஞானத்தில் புலமை அடைவான். புதன் இருந்தால் ஒரு என்ஜினீயர். ஸ்டெனோ கிராபர், டைப்பிஸ்ட் அல்லது சயன்டிஸ்டாக ஆவான்.

### உத்திரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

தனவந்தனாக ஆவான். விதவைகளிடம் நேசம் கொள்வான். திக்கித் திக்கிப் பேசுவான். முகவாய்கட்டையில் மச்சம் உள்ளவன். குருவுடன் சேர்க்கை அல்லது பார்வை ஏற்பட்டால் பல கட்டிடங்களுக்குச் சொந்தக் காரனாக இருப்பான்.

### உத்திரட்டாதி 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

விவசாயத்தின் மூலம் வருமானம் பெறுவான். சிறுவயதிலேயே குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களை இழப்பான். அதனால் பெரும் பொறுப்புகளை ஏற்க நேரிடும். சிலருக்கு வழக்கு விஷயங்களில் பெரும் தொகையினை செலவிட நேருவதுடன் ஜாதகன் ஓட்டாண்டியாகும் நிலைமையும் ஏற்படும்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

உத்திரட்டாதி 4ல் சூரியனும் செவ்வாயும் இருந்து, லக்னம் ஹஸ்தத்தில் அமைந்தால் ஜாதகனின் குழந்தைகளுக்கு அபாயம் உண்டாகும்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

ஜாதகன் கொழுத்த பணக்காரன். எல்லாவித சௌகர்யங்களையும் பெற்றிருப்பான். நல்ல கடமையுள்ள மனைவி வாய்ப்பாள். ஓரிரு அபார்ஷன் மனைவிக்கு ஏற்படும். ஒரு பெண்ணும் ஒரு பையனும் மட்டும் நீண்டகாலம் வாழ்ந்திருப்பார்கள், ஜாதகனுக்கு 5 வயது வயதில் ஜலகண்டம் உண்டு. அதிக சுரமும், வயிற்றுப் போக்கு உபத்திரவமும் 8வது வயதில் ஏற்படும். எதிர்பாராத சிக்கல்கள் 22வயதில் ஏற்பட்டு அதனால் 24வது வயதில் கிழக்கு திக்கு நோக்கி உத்தியோக நிமித்தம் செல்வான்.

பூரட்டாதியில் பிறந்தவர்களைப் போலவே, உத்திராட்டாதி எந்த பாதத்தில் பிறந்திருந்தாலும் தீய கிரகங்களால் பாதிக்கப் படாமல் இருந்தால் 90 வயது வரை வாழ்ந்து ஒரு சந்தியாகாலத்தில் வியாழக்கிழமை ஐப்பசி மாதம் கிருஷ்ணபக்ஷ திவதியையில், கிருத்திகை நட்சத்திரத்தில் மரண மடைவான்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

நல்ல ஆரோக்யம் உடையவன். சுறுசுறுப்பானவன், உஷாராக இருப்பவன். இவனுடன் புதன் சேர்ந்திருந்தால் என்ஜினீர் ஆகலாம். தம்பதிகளுக்குள் ஒற்றுமை குலைந்து ஒருவர்க்கொருவர் அடிதடியில் இறங்குவார்கள்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

நல்ல மனைவி. மக்களுடன், பணக்காரனாக வாழ்க்கையை அனுபவிப்பான். அரசாங்கத்தில் உத்தியோகம் பார்ப்பான், பாபிகளால் கெட்டிருந்தால், வேலைக்காரனாகவோ, தொழிலாளியாகவோ இருப்பான்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

டாக்டராக இருப்பதற்கு பொருத்தமானவன். குருவை, செவ்வாய் பார்த்தால் பாதுகாப்புத் துறையில் சேருவான். லக்னமும் அதில் அமைந்தால், மந்திரியாகவோ அல்லது அதற்கு சமமான அந்தஸ்தில் இருப்பான் சிலர் வியாபாரம் செய்யலாம்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

ஜாதகன் கட்டிட கண்ட்ராக்டராக அல்லது கட்டிட சாமான்கள் விற்பனை மூலம் சம்பாதிப்பான். இவன் ஏராள சொத்து, பணம், சுகங்களைப் பெற்ற அதிர்ஷ்டசாலி, இந்த சுக்கிரன் சுபகிரக சம்பந்தம் பெற்றிருந்தால் பல நிறுவனங்களுக்குச் சொந்தக் காரனாக இருப்பான்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

இங்குள்ள சனி மிகுந்த கஷடத்தைத் தருவான். இந்த சனியுடன் சூரியனும் சேர்ந்து இருந்து, செவ்வாயால், பார்க்கப்பட்டால். ஜாதகன் தன் 28, 30 வயதில் விமான விபத்தில் இறப்பான். ஆயினும் பிற சுபகிரகங்களின் பார்வை இதற்கு இருந்தால், அவன் சாதாராண மோட்டார் விபத்தில் அகப்பட்டு, கடுமையாக காயமடைவான்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

ஜாதகன் பணக்காரனாக இருந்தாலும், தன்னுடைய இழிவான நடத்தையாலும், முரட்டுப் பிடிவாதத்தாலும் பெரும் நஷ்டத்தை அடைவான். அந்த நஷ்டம் பணமாகவும் இருக்கலாம். அல்லது அவனது மனைவி அல்லது குழந்தைகளின் உயிராகவும் இருக்கலாம். இந்த சனியை சனியும் செவ்வாயும் பார்த்து சுபர்கள் பார்வை இல்லாமலிருந்தால் இவனுடைய குடும்பம் முழுவதும் விபத்தில் சிக்கும்.

### உத்திரட்டாதி 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலம்

இவன் வெளி நாட்டில் வசிப்பான். தன்னுடைய பெற்றோர்களுடன் சண்டை இடுவான். தடைப்பட்ட கல்வி உடையவன். பின்னால் படிப்பு தொடர்ந்து உயர் கல்வியைப் பெறுவான். நல்ல பொஸிஷனையும் அடைவான். அங்கு அதிகார பலத்தைப் பெறுவான்.



# அத்தியாயம் - 37

## ரேவதி நட்சத்திரம்

இது 27வது கடைசி நட்சத்திரம். ராசி மண்டலத்தில் 340 பாகை 40 கலை முதல் 360 பாகை வரையில் இது மீன இராசியில் பரவியுள்ளது.

தமிழ்ப் பெயர் - ரேவதி (இரேவதி)

வடமொழிப் பெயர் - ரேவதி

அரபுப் பெயர் - அர்ரிஷ (பட்டயம்) AR-RISHA

கிரேக்கப் பெயர் - பிஸியும் (PISCIUM) (அபரிமிதமானது)

சீனப் பெயர் - கோயி KOEI

ரேவதி என்றால் அபரிமிதமான, 'பெரும் செல்வமுள்ள' என்று பொருள். இந்த நட்சத்திரத்தின் தேவதை பூஷா பூஷா என்றால் விருத்தி ஆகிக் கொண்டிருப்பவர் என்று பொருள். பூஷா என்பது ஆதித்தர்களின் ஒருவர் இது 32 நட்சத்திர கூட்டத்தைக் கொண்டது.

*சுவடி எண் 1500 மரண கண்டி நூல் கூறும் ரேவதி நட்சத்திரப் பலன்*

*231 கயல்விழி கண்ணார் தங்கள் முலைஅணை வசந்த னாகும்*
*பயனெடுத் துரைக்க வல்லான் பாவமும் பழியும் பார்க்கும்*
*வயணம துடைய னாகும் வளம்பெற வாழ வல்லான்*
*இயல் புடைச் செல்வ னாகும் இரேவதி நாளி னானே!*

(இதன் பொருள்)

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவன் மீன் போலும் துவளும் அழகிய கண்களையுடைய இளம் பெண்களின் முலைகளோடு நெருங்கி அணைக்கும் சுகமுள்ளவனாம் (பல பெண்களுடன் போகம் பண்ணுபவன்). எந்த

காரியத்தையும் அதன் பலனை விளக்கமாக எடுத்துச் சொல்ல வல்லவன். பாவம் பழி இவற்றுக்குப் பயந்து நேர்மையாக வாழ்பவன்,. எல்லா வித உணவும் வயணமாகக் கிடைக்கப் பெற்றவன். எல்லா வித வளங்களுடன் சம்பாதித்து வாழும் வல்லமை பெற்றவன் என்பதாம்.

இன்னாருக்குத் தெய்வம் ஈஸ்வரன். பூதம் - வாயு சாதி - பிராமணன் கோத்திரம் - அகத்தியன், யோனி - பெண் யானை - பட்சி வல்லூறு - பஞ்சபட்சி சாத்திரப்படி வளர் பிறையில் வல்லூறு தேய் பிறையில் மயிர் விருட்சம் இலுப்பை கணம் - தெய்வகணம். நட்சத்திரம் ஓடம் போன்றிருக்கும்· அராசி - மீனம் வாரம் – வியாழன். இது பெண் நட்சத்திரம் இவன் தர்ம தானம் செய்பவன். பொறுமையுடையவன். வெற்றியுடையவன். பொய் சொல்லாதவன். வித்துவான்களுக்கு நல்லவன். சுக சௌக்ய முடையவன். பொறுப்புகள் வகிப்பவன் புகழ் உள்ளவன்.

பங்குனி மாதம் பகை சூனியம் 25 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷம். வெதுப்பு தோன்றில் 7வது நாளில் விடும். . விடாத போது நெய்யினால் ஓமம் பண்ணுவது. பாலும் சோறும் பணியாரமும் பலி இடுவது அதன் பின் 3 நாளில் விடும். அடர்ந்த விருட்சத் தடியிலே தானம் பண்ணுவது நீர்க்கரையில் தானம் பண்ணலாம். புதன் கூடில் விஷ யோகம் வெள்ளி கூடில் சித்த யோகம் பெண் திரளில் புத்திரனைப் பெறுவான்.

**இவன் குணம்**

சத்தியவான். தன தானிய முடையவன்,. யாத்திரைக்குப் பால் குடித்து ஏழிப்போகலாம்.

***தமிழ் ஜாதகாலங்காரம் கூறும் ரேவதி நட்சத்திரப் பலன்***

***232 மெல்லியர் இடத்தில் சாலவே பிரியன்***
***மிகுசெல்வம் பாரதிநாள் விளங்கும்***
***நல்லவன் பிறர்சொல் கேட்பன் நல் குணவான்***
***நயனசிங் காரசீ மானாம்***

*சொல்லுரையில் சாதுரியன் அந்தணரைத்*
*தொழும்பக்தி யுள்ளபுத் தியினான்*
*இல்லையென் றுரையான் பழிக்கிடம் கொடாத*
*இயல்பினான் இரேவதியி னானே.*

(இதன் பொருள்)

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவன் பெண்களிடத்தில் அதிக இச்சையும் பிரியமும் உள்ளவன். தன் பாதி ஆயுசுக்குமேல் அதிகம் செல்வமுள்ளவன் மிகவும் நல்லவன். பிறர் கூறுபவற்றை கவனத்துடன் கேட்கும் பொறுமை யுடையவன். அல்லது பிறர் சொல் கேட்பவன். நல்ல குணசாலி. அழகிய கண்களுள்ளவன். தன்னை அழகு படுத்திக் கொள்பவன். நல்ல வாக்கு வன்மை பேச்சுத்திறன் உள்ளவன், அந்தணர்களிடம் பக்தி விசுவாசமுள்ளவன். தன்னை வந்து கேட்டவர்களுக்கு "இல்லை" என்று சொல்லாமல் கொடுப்பவன்,. பழிச்சொல்லுக்கு இடம் கொடாதவன். இவனே இரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

*யவன ஜாதகம் (வடமொழி) கூறும் இரேவதி பலன்*

இவன் அழகன் தனவான். போக சுக சௌக்யங்கள் அனுபவிப்பவன். திரவிய முள்ளவன். காம முள்ளவன் மலைமேல் உள்ள கோட்டைகளை வெல்பவன் வீரன். பரதேச வாசம் உள்ளவன் (FOREIGN) என்பதாம்.

*பிருஹத் ஜாதகம்*

குறை அற்ற அங்க லட்சணமுள்ளவன். சகல ஜனம் பிரியன் வீரமுள்ளவன். பிறர் பொருள் மேல் ஆசை இல்லாதவன். தனவான் என்பதாம்.

*ரேவதி நட்சத்திரம் பிற நூல் செய்திகள்*

புலவர் நக்கீரர் "மீனத்தானை விடேல் விடேல்" என்று கூறுவர். இது இந்த மீனத்தில் உள்ள ரேவதி நட்சத்திரத்தையும், மீன லக்னத்தையுமே கூட குறிக்கும். இந்த நட்சத்திரம் மீன போன்ற காணப்படும் என்பார். இதனால் தான் இது மீனம்ம் எனப்பட்டது. சிவப்பு நிறமுள்ளது என்று

மூன்று நட்சத்திரம் உள்ளது என்றும் ஜோதிட சிந்தாமணி என்ற நூல் கூறும் இது மென்மைத் தன்மையும் பெண்மையின் நளினத்தையும் கொண்ட நட்சத்திரம்.

இது எல்லா சுபகாரியங்களுக்கும் அனேகமாக ஏற்றது. கொடுக்கல் வாங்கல, மனை வாங்கல், வீடு கட்ட, வித்யாரம்பம், இசை வாத்யம் கற்க? முக்கியமானவர்களைச் சந்திக்கவும், கோடி உடுத்தல் பொன் பூணல், விவாகம் நாமகரணம் இவற்றிற்கு நல்லது.

பயிர்த்தொழிலுக்கு ஏற்றது. இந்த நாளில் எண்ணை ஸ்னானம் பண்ணக் கூடாது. வாகனம் வாங்க, பயல் நன்று.

இந்த நட்சத்திரத்தை நவம்பர் மாத இரவில் இரவு 12 மணிக்கு வானில் காணலாம்.

இது வித்ய பிரதானமானது படிப்பாளியின் நட்சத்திரமாகும். புத்தி கூர்மை அதிகம் அறிவு வளம் புலமை உள்ள நட்சத்திரம். பன வலிமை குறையும் தீர்மானம் செய்யும் திறமையும் குறைவு பயந்தாங்கொள்ளி. யானை யோனி உடையது இவர்கள் 75 வயது வரை வாழ வழி உண்டு.

இது சமநாடியும், சமநோக்கும் உள்ளது. இடது வட கிழக்கு திக்குக்கு ஆதிக்கும் வகிக்கிறது. அதில் பெண் பிறவிகள் அதிகம் இவர்களுக்குத் திருமணம் இளவயதிலேயே நடக்கக் கூடும். பெரிய இடத்து வசதியான மனைவி வாய்க்க வகையுண்டு. நல்ல சந்ததி விருத்தியுண்டு. வியாபார தொழில் இவர்களுக்கு ஏற்றது.

இந்த தாரைக்கு அதிபன் மஞ்சள் நிறம் ''ஹ'' என்ற அட்சர சுரத்தை உடையது. இது பிருஷ்டோதயம் அஷ்டமி சேர்ந்தால் விஷ சுக்ரவாரம். சம்மியும் ரேவதியில் சுரம் தோன்றினால் 12 நாளில் விடும். என் அரிசி மாவு நைவேத்யம் மந்தார புஷ்ப பூசை "குக்குலு" தீபம் ''ஹகும்ச சுசிக்ஷத்' என்ற மந்திரம் சொல்லி பூஜை நெய், மாம்பழம், வாழைப்பழம் திரவிய தானம் ''சாவித்திரி'' மந்திரம் 108 தடவை ஜபம் ஹோமம்.

## பெண்கள்

**வடமொழி "ஸ்த்ரீ" ஜாதகன் நூல் வறும் ரேவதி நட்சத்திரத்தில் பறிந்த பெண்ணின் குணங்கள்.**

ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த பெண் நல்ல வாளிப்பான உடல் வாகுள்ளவள். இவளுக்கு நிறைய சினேகிதிகள் உண்டு. தவம், விரதம் இருக்கும் தூய பண்புள்ளவள். நல்ல மினுமினுக்கும் ஒளி வீசும் மேனி வண்ணம் உள்ளவள். நிறைய கால் நடை செல்வம் உள்ளவள். தன் விரோதிகளை வெற்றி கொள்பவள். பார்ப்பதற்கு அழகாக இருப்பவள்.

**வேறு நூல்**

தாய் தந்தை (மாமனார், மாமியார்) தமையன் இவர்களுக்கு சேவை செய்பவள் மதிப்பவள். தேவதை பிராமணர்களிடம் பக்தியுள்ளவள். எப்பொழுதும் இளமை உடல் வாகுள்ள அழகானவள்.

**சங்கராசாரியார் மதன நூல் கூறும் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணின் பலன்.**

**இந்த நட்சத்திரம் பூத தத்துவத்தைச் சேர்ந்தது.**

**233.** பெரிய கண்கள் பிதுங்கி பிணக்கிடும்
பரிய வாய்மலர் பார்த்துச் சொல்லா ளென்னும்
வரிசை யாக அணைந்தவர்க் கன்பிலாள்
இருள் செறிந்த இரேவதி கன்னியே

(இதன் பொருள்)

இரேவதி நட்சத்திரத்தில் பிறந்த பெண் கரிய இருட்டைப்போன்று காமத குணமுள்ளவள். பெரிய கண்கள் உள்ளவள். கணவனிடம் எப்போதும் பிணங்குவாள். அப்பொழுது அவள் கண்கள் எரிதாகிப் பிதுங்கிப் விழிப்பது போன்றிருக்கும். முறைப்படி தன்னுடைய பழகும் கணவனிடமும் உறவினர் களிடமும் அன்பில்லாதவள் என்பதாம்.

குறிப்பு

இதில் பிறந்த ஆண்களைப் பற்றி மிக உயர்வாகச் சொல்லப்பட்டது. ஆனால் இது பூத தத்துவ நட்சத்திரம் என்று காணப்பட்டால் இதில் பிறந்த பெண்களின் குணம் மாறாக சொல்லப்பட்டது.

*நட்சத்திர பாத பலன்*

***தமிழ் ஜாதக அலங்காரம் சொல்லும் ரேவதி நட்சத்திரத்தில் நான்கு பாதங்களில் பிறந்தவர்கள் தன்மை.***

*234 தேன்மொழி கலசப் பிரியனாகும் நிபுணன்*
*செறிகுண வித்துவான் யாண்டும்*
*செப்பிய கிலேசி சந்தோஷமும் உள்ளான்*
*திடம்பெறும் ரேவதி முதற்கால்*
*தானெனும் சோரன் தீரமா மனத்தான்*
*சவுக்கியன் கோபிநற் காமி*
*சஞ்சலன் மிருதுவாம் சரீரத்தன்*
*தானிரு கால்பல னென்றே*
*பான்மொழி புத்தியி லாதவன் பாவி*
*படிறனே தனமிலா னாகும்*
*பரிந்திடு முதரான் குணமிலா னென்றே*
*பகர்ந்திடு மன்றதாம் பரமே*
*நானெனும் தீரன் சத்திய வாக்கன்*
*நவின்றிடும் குலத்தினிந் தேடன்*
*நாடிய சுகவான் சந்துருதங் காரி*
*நலம் பெறு ஆகுநாற் பதமே.*

(இதன் பொருள்)

பெருமை பொருந்திய ரேவதி நட்சத்திரத்தின் பிறந்தவன் தேன் போன்று இனிய வார்த்தைகளால் பேசி சண்டைமூட்டி விடுபவன்.

பிறரிடத்தில், பிரியமுடையவன். அறிவாளி, நிறைந்த குணமுள்ள வித்துவான். எப்போதும் ஏதாவது கலகத்துடன் மனக்கிலேசத்துடன் இருப்பவன். ஆனால் சந்தோஷமும் அடைபவன். திடமானவன் இவனே ரேவதி முதற்காலில் பிறந்தவன் தன்மையாம்.

2. தொழில் உடையவன். தைரியமான மனத்தை உடையவன். சௌக்யமான வாழ்க்கையுடையவன். கோப முள்ளவன். காம இச்சை உள்ளவன். சஞ்சல சித்தம் உடையவன். மென்மையான நளின சரீரமுள்ளவன் இவையே இரண்டாம் பாதத்தில் பிறந்தவன் தன்மையாம்.

3. ரேவதி மூன்றாம் பாதத்தில் பிறந்தவன். பாமல் போல இனிமையாகப் பேசுபவன். பக்தி கூர்மையில்லாதவன். பாவங்களையே செய்பவன்,. குற்றமுள்ள நெஞ்சமுள்ளவான். பணமில்லாதவன் இதுவே மூன்றாம் பாதத்தில் பிறந்தவன் தன்மையாம்.

4. ரேவதி நான்காம் பாதத்தில் பிறந்தவன் தானெனும் அங்காரம் உள்ளவன். தீரன் தைரியசாலி, சத்தியவாக்குள்ளவன், தன் குலத்திற்கு கேடும் கெட்ட பெயரையும் ஏற்படுத்துபவன், தன் விரும்பும் சுகங்களை அனுபவிப்பான், தன் சத்துருக்களை அழிப்பவன். இவையே நான்காம் பாதத்தில் பிறந்தவன் குணங்களாகும்.

***ஜாதக சார தீபம் கூறும் ரேவதி நட்சத்திர பாத பலன்***

***1) முதல் பாதம்***

இதில் பிறந்தவன் விஞ்ஞானியாவான்.

***2) இரண்டாம் பாதம்***

திருட்டுத் தொழிலே முக்கியமாக உள்ளவன்.

***3) மூன்றாம் பாதம்***

போரில் வெற்றியடையும் வீரமுடையவன்

*4) நான்காம் பாதம்*

எப்பொழுதும் ஏதாவது கிலேசமுள்ளவன்.

*சுவடி எண் 1500 மரண கண்டி கூறும் ரேவதி நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறந்தவன் தன்மைகள்*

*235 சிறிதே உண்ணும் பொய்சொல்லான் சிவந்த கண்ணன் செறிகழலான்*
*அறிவு மிகுந்தோன் பெரும் குணத்தான் அடைந்தோர்க் கன்பன் அழகியனாம்*
*பொருள்சேர் மைந்தன் மனையாளை பொருளென்றெண்ணான் புகழ்*
*விளங்கும் வெறிசேர் குழலி மடமாதே வியாழன் காலிற் பிறந்தோனே.*

(இதன் பொருள்)

ரேவதி நட்சத்திரன் முதல் பாதத்தில் பிறந்தவன் குறைவாகவே உண்பவன். பொய் சொல்லாதவன். சிவந்த கண்கள் உள்ளவன். காலில் நெருக்கமாக அணிந்த கழல் என்னும் அணி பூண்டவன். அறிவு மிகவும் உள்ளவன். காலில் நெருக்கமாக அணிந்த கழல் என்னும் அணி பூண்டவன். அறிவு மிகவும் உள்ளவன். பெரும் குணசாலி, தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அன்பு செய்பவன். பணம் நிறையப் பெற்றவர்களாலும் தன் மைந்தன் மனைவியாரையும் மதிக்க மாட்டான். அவர்களிடம் கையேந்த மாட்டான்.

புகழ் உள்ளவன். வாசனை வீசும் நெருங்கிய அழகிய கூந்தல் உள்ள இளம் பெண்ணே இவனே குருவன் அங்கிஷத்தில் பிறந்தவனாவான்.

*இதற்கக் கால சக்கர தசை வருமாறு*

1. மேஷச் செவ்வாய் - 7 வருடம்
2. ரிஷப வெள்ளி - 19 வருடம்
3. மிதுன புதன் - 9 வருடம்
4. கடக சந்திரன் - 21 வருடம்

5 சிங்க ஆதித்தன் - 5 வருடம்

6. கன்னி புதன் - 9 வருடம்

7. துலாம் வெள்ளி - 16 வருடம்

8. விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்

9. தனுசு வியாழன் - 10 வருடம்

ஆக வயது - 83 வருடம்

***சுவடி எண் 1500 "மரண கண்டிகை" கூறும் ரேவதி நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவன் பலன்***

***236 ஆரையும் அறிந்து பேசும் அரும் பொருட் கன்பனாகும்***
***சீரிய செய்ய வல்லான் சிதைவதே செய்யான் என்றும்***
***வாரிய பொய்கள் சொல்லான் வழக்கறிந் துரைக்க வல்லான்***
***காரியங் கிஷத்தல் வந்த கருத்துடைக் காளை தானே***

(இதன் பொருள்)

ரேவதி இரண்டாங்காலில் பிறந்தவன் யாரையும் அறிந்து காப்பாற்றுவான், கிடைத்தற் கரிய பொருள்மேல் ஆசையுள்ளவன் கருத்துடன் சம்பாதிப்பான், சீரிய நேர்மையான காரியங்கள் செய்ய வல்லவன், அழியும் காரியங்கள் எதையும் செய்யான். பெரிய பொண்கள் எதையும், அடுக்கடுக்காகவும் பொய் சொல்ல மாட்டான். வழக்குகளை அறிந்து வாதம் செய்து வெல்லும் சாமர்த்யமுள்ளவன் இவனே சனியின் அங்கிலத்தில் உதித்த கருத்துடன் செயல்படும் காளையாவான் என்பதாம்.

***இதற்குக் கால சக்கர தசை வருவாறு***

1) மகரச் சனி - 4 வருடம்

2) கும்ப சனி - 4 வருடம்

3) மீன வியாழன் - 10 வருடம்

4) விருச்சிகச் செவ்வாய் - 7 வருடம்

5) துலாம் வெள்ளி - 16 வருடம்

6) கன்னி புதன் - 9 வருடம்

7) கற்கடகச் சந்திரன் - 21 வருடம்

8) சிங்க ஆதித்தன் - 5 வருடம்

9) மிதுன புதன் - 9 வருடம்

ஆக வயது - 85 வருடம்

*சுவடி எண் 1500 ''மரண கண்டி'' கூறும் ரேவதி நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவன் பலன்*

*237 ஊனமரல் மனத்த னாகும் உறவொடு பகையும் பேணான்*
*மானம் துடையனாகும் மனம் பிறர்க் கறிய வொண்ணான்*
*மேனியு முருவும் நல்லான் மிக்கதோர் அறிவு முள்ளான்*
*கானசந் திரிந்து வாழும் கபரியங் கிஷத்தி னானே.*

(இதன் பொருள்)

ரேவதி நட்சத்திரத்தில் 3ம் பாதத்தில் பிறந்தவன் ஊனமில்லாத குற்றமற்ற மனமுள்ளவன், உறவு பகை இரண்டையும் சமமாகவே பிறப்பு வெறுப்பு இன்றி என்னுபவன் மானமுள்ளவன். இவன் மனதை யாராலும் அறியமுடியாத ஆழம் உள்ளவன்.

இவன் மேனி வண்ணமும் வடிவழகும் உள்ளவன் மிகவும் அறிவு உள்ளவன் இவனே சனியின் அங்கிலத்தில் பிறந்த வனாவன்.

*இதற்க்கு கால சக்கர தசை வருமாறு*

| | | |
|---|---|---|
| 1) | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 2) | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| 3) | மீன வியாழன் | - 10 வருடம் |
| 4) | கும்ப சனி | - 4 வருடம் |
| 5) | மகர சனி | - 4 வருடம் |
| 6) | தனுசு வியாழன் | - 10 வருடம் |
| 7) | மேஷச் செவ்வாய் | - 7 வருடம் |
| 8) | ரிஷப வெள்ளி | - 16 வருடம் |
| 9) | மிதுன புதன் | - 9 வருடம் |
| | ஆக வயது | - 83 வருடம் |

***சுவடி எண் 1500 மரண கண்டி கூறும் ரேவதி நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவன் பலன்***

***238 மாந்துளிர் போலு மேனி மனத்தொடு கல்வி கற்கும்***
***ஏந்திய குலத்துக்கெல்லாம் இசைந்ததோர் ராசனாகும்***
***காய்ந்த பின் நடக்க மாட்டான் கனங்குழை யார்க்கு நல்லான்***
***சேர்ந்தவர்க் கன்பனாகும் செய்யபொற் காலினானே***

***இதன் பொருள்)***

ரேவதி நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் பிறந்தவன் மாதந்தளிர் போல பொன்னிறமான மேனி வண்ணமுள்ளவன். மனத்தை நன்றாக ஊன்ற வைத்து நன்றாக கல்வி கற்பவன். தான் உதித்த குலத்திற்கு

எல்லாம் அதாவது மனித குலத்துக்கு ராசாவாக அதாவது தலைவனாக இருப்பவன். வெயில் காய்ந்த நேரத்தில் வெயிலில் நடக்க மாட்டான்' தான் விரும்பும் மற்றும் தன்னை விரும்பும் அழகிய காதணி அணிந்த அழகான பெண்களுக்கு நல்லவன். இவன் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு அன்பு செய்து உதவும் குணமுள்ளவன். இவனே குருவின் அங்கிலத்தில் பிறந்தவனாவான் என்பதாம்.

*இதற்குக் கால சக்கர தசை வருமாறு*

| | | |
|---|---|---|
| 1) | கடகச் சந்திரன் | - 21 வருடம் |
| 2] | சிங்க ஆதித்தன் | - 5 வருடம் |
| 3] | கன்னி புதன் | - 9 வருடம் |
| 4] | துலாம் வெள்ளி | - 16 வருடம் |
| 5] | விருச்சிகச் செவ்வால் | - 7 வருடம் |
| 6) | தனுசு வியாழன் | - 10 வருடம் |
| 7) | மகரச் சனி | - 4 வருடம் |
| 8) | கும்பச் சனி | - 4 வருடம் |
| 9) | மீன வியாழன் | - 10 வருடம் |
| | ஆக வயது | - 86 வருடம் |

*இந்த நட்சத்திரத்தில் விம்சோத்தரி மஹா தசைகள்*

| | | |
|---|---|---|
| 1) | புதன் தசை | - 17 வருடம் |
| 2) | கேது தசை | - 7 வருடம் |
| 3) | சுக்ர தசை | - 20 வருடம் |
| 4) | சூரிய தசை | - 6 வருடம் |

5) சந்திர தசை - 10 வருடம்

6) செவ்வாய் தசை - 7 வருடம்

7) ராகு தசை - 18 வருடம்

8) குரு தசை - 16 வருடம்

9) சனி தசை - 19 வருடம்

ஆக வயது - 120 வருடம்

*இந்த நட்சத்திரக் காரர்களுக்கு ஏற்படும் நோய் கண்டங்கள் முதலியன*

இவன் பிறந்த ஆண்டில் புதனால் கண்டம் 3 வயதில் காய்ச்சல் சிலந்தி நோய், 7 வயதில் சிரங்கால், 8 வயதில் கல்லில் தடுக்கி விழுதலால் 9 வயதில் 4 கால் மிருகத்தால் 12 வயதில் காய்ச்சல் 16 வயதில் விபாக தோஷம் (கர்ம வினையால் ஏற்படும் புரியா நோய்) 20 வயதில் அரையாப்பால் 22 வது வயதில் கண்ணோயால், 30 வயதில் மீண்டும், நாலுகால் மிருகத்தால் 35 வயதில் மீண்டும் நாலுகால் மிருகத்தால் 35 வயதில் உயர ஏறி விழுதலால் 45 வயதில் வெதுப்பும் பித்தமும். அரசாங்கத்தால் தொல்லை, அக்கினி பீடை 60 வயதில் ஜன்னியும் தலை நோயும், இருமலும் 66 வயதில் வெதுப்பும் கழிச்சலாலும் 70 வயதில் இருமலும் குரோதமும், 80 வயதில் வெதுப்பும் கோழை சளியும் 100 வது வயதில் பங்குனிமாதத்து அமர பட்சத்து பிரதமையும் வெள்ளிக்கிழமையும் ரேவதி நாளில் 6 நாழிகை சென்று வெதுப்பு தோன்றி இறைவனடி சேர்வார்.

*இனி இவன் உதித்த லக்ன சாரம்*

1) சூரியன் சாரமாகில் - சீமான்

2) சந்திரன் சாரமாகில் - விஷய புருஷன் (ஸ்திரீ லோலன்)

3) செவ்வாய் சாரமாகில் - தனதானிய முடையவன்

4) புதன் சாரமாகில் - வித்துவான்

5) குருவின் சாரமாகில் - தேவகன்

6) சுக்கிரன் சாரமாகில் - கல்வியுடையவன்

7) சனி சாரமாகில் - தேசாந்திர, பல ஊர் செய்பவன்.

8) ராகு சாரமாகில் - மாறு கண்ணனாவான்

9) கேது சாரமாகில் - மணியக காரன் என்பதாம்.

## வடமொழி கர்ம விபாகம் கூறும் ரேவதி நட்சத்திரத்தின் பூர்வ கர்மமும் பரிஹாரமும்

*ரேவதி நட்சத்திரம் 1ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் அதற்குச் சாந்தி முறைகளும்*

*சிவபெருமான் சொல்லுகிறார்.*

வைண்டபுரம் என்ற ஊரில் சேவகன் என்ற பெயர் உடைய உயிர்களை வேட்டையாடும் வேடன் ஒருவன் இருந்தான். இவன் மனைவி மிகவும் கொடிய சுபாவம் உள்ளவளாக இருந்தாள். வேடனோ மிகவும் இரக்கமற்றவனாகவும் பக்ஷிகள் விலங்குகளையும் வேட்டையாடிக் கொன்றும் அவற்றின் இறைச்சியை விற்றும் பிழைத்து வந்தான். இவன் ஆயுள் முழுவதும் இப்படியே கழிந்தது. வயது முதிர்ந்து இவன் இறந்து போனான் எமதர்மன் கட்டளையால் எமபடர்கள் இவனை ஊசி முளையால் குத்தும் மூக்கு நுனி உள்ள பூச்சிகள் நிறைந்த நரகத்தில் தள்ளி 60 ஆயிரம் ஆண்டுகள் தண்டித்தார்கள் அதிலிருந்து வெளிப்பட்டு இவன் முதலில் மானாகப் பிறவி எடுத்தான் அதன் பின் கரடியாகப் பிறந்தான். கடைசியில் ஒரு வசதியான பணக்காரக் குடும்பத்தில் மனிதப் பிறவி பெற்றான், வேடனாக இருந்தும் போன ஜென்மடத்திற்கு இவன் குடிநீர் வழங்கி வந்தான் அதனால் பணக்காரனாகப் பிறந்தான். ஆனால் உயிர்க்கொலை பண்ண பாவத்தால் இவனுக்குக் ஆண் குழந்தைகள் பிறந்து இறந்தன. அடுத்து இவனுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. போன ஜென்ம பாவத்தால் இவனுக்கு பல நோய்கள் பற்றிக் கொண்டன தீராத காய்ச்சல் ஏற்பட்டது. இப்பொழுது இப்பாவம் விலக சாந்தி முறைகள் வருமாறு.

முதலில் இவன் தன் வீட்டிலுள்ள பணம் பொருள் இவற்றின் ஆறில் ஒரு பாகத்தை புண்ணிய காரியங்களில் செலவழிக்க வேண்டும்.

அதன் பின் காயத்திரி மந்திரத்தையும் பஞ்சாட்சரி மற்றும் "ஜாத வேதஸே" என்ற மந்திரத்தையும் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு லட்சம் முறை ஜபம் செய்ய வேண்டும். அதன் பின் அவற்றின் புரஸ்ச்சாரண காரியத்தையும் செய்து முடிக்க வேண்டும். அதன் பின் கோதானமும், அலங்காரிக்கப்பட்ட காளையொன்றையும் தானம் செய்ய வேண்டும்.

இதன் பின் 20 தோலா எடையில் பொன்னவான மேரு உடன் கூடிய மணிமாலை ஒன்றையும் அதனுடன் படுக்கை விரிப்பையும் உத்தம அந்தணனுக்குத் தானம் பண்ண வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாவங்கள் விலகி நோய்கள் எல்லாம் நீங்கி உடல் நலமும் பெற்றான். இதன் பின் இவனுக்கு தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. இவனும் குடும்பத்துடன் சந்தோஷத்துடன் வாழ்ந்தான்.

***கர்மவிபாகம் சொல்லும்***

## ***ரேவதி நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி பரிஹாரமும்***

***சிவபெருமான் சொல்லுகிறார்***

முன்பொரு காலத்தில் ஸ்ரீபுரம் என்ற ஊரில் புத்திரர் பேரன்களுடன் வாழ்ந்து வந்த தன் குல ஒழுக்கத்தை மறந்து மிகவும் பணக்கார பிரமணன் ஒருவன் இருந்தான். இவன் எருமை, காளை, தோல், முதலியவற்றை வாங்கிவிற்று வைஸ்யன், தொழிலையே செய்து வந்தான். இதனால் நிலைய பணம் சம்பாதித்துச் சேர்த்தான். இந்த நிலையில் இவனுடை குரு இவன் வீட்டுக்கு வந்தார். இவன் குருவை மிகவும் உபசரித்தான். ஒரு மாதம் இவனிடம் இருந்து விட்டு அவர் ஹரித்துவாரம் சென்று விட்டார்.

அதன் பின் குருவின் புத்திரன் இவனிடம் வந்தான். தன்னடையவும், தன் தந்தையுடையவும் தங்க படிமங்களை, பொன் பொருளுடன் தானம் பண்ணி விட்டு அவனும் ஹரித்துவாரம் சென்று விட்டான். இதன் பிராமணன்

இந்த இரண்டு வடிவங்களையும் விற்று வந்த பொருளையும் செலவு செய்தான். வெகு நாள் சென்றதும் மூத்த இந்த பிராமணன் இறந்தான். எமர்தன் ஆணையால் எமதூதர்கள் கர்தமம் என்ற கொடிய நரகத்தில் தள்ளி 60 ஆயிரம் வருடங்கள் தண்டித்தனர். அதன் பின் இவன் புலியாகப் பிறந்தான். அதன் பின் இவன் பூனையாகப் பிறந்தான். இதன் பின் இவன் பவித்தரமான வசதியான பிராமண குடும்பத்தில் மனிதப் பிறவி பெற்றான். ஆனால் இவன் ஒழுக்கம் கெட்டவனாகவும் பரஸ்த்ரீ லோலனாகவும் இருந்து வந்தான். இவனுக்கு ஒரு பெண்ணும் இரண்டு பிள்ளைகளும் பிறந்தார்கள். ஆனால் இம்மூன்று குழந்தைகளும் அற்பாயுளில் இறந்தனர்.

அதன் பின் இவனுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. இவன் மனைவி அழகிய, நீண்ட கூந்தலும் மெல்லிய உடலும் சிவந்தவளாகவும் இருந்தாள் இவனுக்கு குழந்தை பிறக்கவும் பாவங்கள் விலகவும் சாந்தி பரிகாரம் வருமாறு

முதலில் இவர்கள் ஹரிவம்ச பாராயணம் பண்ண வேண்டும். அதனுடன் கோபால உபாசனையும் பண்ண வேண்டும். அதன் பின் இவன் ''கோபால' மந்திரத்தினையும் ''காயத்திரி'' மந்திரத்தையும் ஒவ்வொன்றையும் 2 லட்சம் முறை ஜயம் பண்ண வேண்டும். ஒரு துளசிவனத்தை ஸ்தாபித்து அதன் பின் அதன் நடுவில் விஷ்ணு பகவானை நிர்மாணித்து பூசிக்க வேண்டும். அதன் பின் பத்து வண்ணமுள்ள பசு ஒன்றை பூசித்து ஒரு பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும்.

இப்படி செய்வதால் இவர்களின் பாவங்கள் விலகி இவனும் நோய் நீங்கி நலம் பெறுகின்றான். அதன் பின் இவர்களுக்குத் தீர்க்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறக்கின்றன. இவர்கள் சந்தோஷமாக வாழ்கின்றனர்.

**கர்மவிபாகம் வடமொழி நூல் கூறும் ரேவதி நட்சத்திரம் 3ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் சாந்தி முறைகளும்.**

*சிவபெருமான் சொல்லுகிறார்.*

மாணிக்க புரி என்ற ஊரில ஒரு உப்பு உற்பத்தி செய்து வியாபாரம் பண்ணும் விவசாயி இருந்தான். இவன் தினம் வியாபாரம் பண்ணி லாபத்தைச் செலவழித்து வந்தான். இந்த நிலையும் மிகவும் தங்கம்

இரத்தினங்களையும் எடுத்துக் கொண்டு ஒரு பணக்கார பிராமணன் இவனிடம் வந்தான். விவசாயின் மனைவி மிகுந்த வஞ்சனையும் கெட்ட எண்ணம் கொண்டவனாகவும் இருந்தாள். ஒரு மாதம் கழிந்தபின் இவள் பிராமணன் உணவில் விஷம் வைத்தாள். இது விவசாயிக்குத் தெரியவில்லை அன்று நள்ளிரவில் பிராமணன் இருந்தான். இவன் பிணத்தை விவசாயி ஆற்றில் தூக்கிப்போட்டு விட்டான் சுத்த பிராமணன் இறந்தான். இவன் பிணத்தை விவசாயி ஆற்றில் தூக்கிப்போட்டு விட்டான்· அந்த பிராமணனின் தனம் பொன் பொருள் எல்லாவற்றையும் செலவழித்துக்கொண்டான்.

வெகு காலம் சென்று இவன் இறந்தான். அதன் பின் அவன் மனைவியும் இறந்தாள். எமதர்ம ராஜன் தூதர்கள் இவர்களைக் கும்பீபாகம் என்ற நரகத்தில் தள்ளி. இதன் பின் அந்த யுகம் முடிவு வரை விவசாயி நரக வேதனை அனுபவித்தான். இதன் பின் பன்றியாகவும் அதன் பின் காக்கையாகவும் பிறந்தான். பின் ஒரு புனித பிரதேசத்தில் மனிதனாகப் பிறந்தான· இவன் முன் ஜென்மத்தில் குரு க்ஷேத்திரத்தில் இறந்ததால் இப்போழுது இவனுக்கு நிறைய செல்வம் உண்டாற்று. ஆனால் செய்த பாவத்தால் இவனுக்கு சந்ததி ஏற்படவில்லை. இவனுக்குத் தீரா நோய்கள் பற்றிக் கொண்டன இதற்கு சாந்தி பரிஹாரம் வருமாறு.

முதலில் தன் பொன் பொருள் எல்லாவற்றினுடைய எட்டில் ஒரு பாகத்தை ஒரு உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். இதன் பின் "காயத்திரி" "த்ரயம்பகம்" "ஜாதவேதசே" என்ற மந்திரங்களை ஒரு லட்சம் முறை (ஒவ்வொன்றையும்) ஜபம் பண்ண (வைக்க) வேண்டும். அதன் பின் சதுரமான ஓம குண்டம் அமைத்து பத்தில் ஒரு பங்கு ஓமம் பண்ண வேண்டும். அதன் பின் புரஸ்சரண மற்ற அங்கங்களும் செய்து முடிக்க வேண்டும். பின் வைர ஊசி வஸ்திரம் அணிவித்த கன்றுகளுடன் கூடிய பசு ஒன்றைத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் உத்தம பிராமணர்களுக்குப் போஜனம் பண்ணி வைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாபங்கள் நீங்கி இவன் முழு உடல் நலம் பெறுகிறான். அதன் பின் இவர்களுக்க தீர்காயுள் உள்ள ஆண் குழந்தைகள் பிறந்தனர். இவனும் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ்கின்றான்.

## வடமொழி கர்ம விபாகம் கூறும் ரேவதி நட்சத்திரம் 4ம் பாதத்தில் பிறந்தவர்களின் பூர்வ கர்மமும் அதன் சாந்தி பரிஹாரமும்

*சிவபெருமான் சொல்லுகிறார்.*

அளகாபுரம் என்ற ஊரில் சந்திவர்மா என்ற க்ஷத்திரியன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ரேவதி என்ற மனைவி இருந்தாள். இவன் தன் குலத் தொழில்தவறாத வாழ்க்கை வாழ்ந்தான். இவனுக்கு கிருஷ்ணதாசன் என்ற என்ற புரோஹித பிராமணன் நண்பனாக இருந்தான். அந்த க்ஷத்திரியன் தன் புரோகிதனுக்கு சில நில புலன்களைத் தானம் பண்ணினான். நாட்டில் ஒரு சமயம் போர் மூண்ட போது. க்ஷத்திரியன் வெளியூர் சென்றான். திரும்பித் வந்து தன் நிலப் பகுதியைத் திருப்பிக் கேட்டான். அவன் திருப்பித் தர மறுத்துவிட்டான். இதனால் கோபமடைந்த க்ஷத்திரியன் பிராமணனைக் கண்ட படி பேசினான். இதனால் மன முடைந்த பிராமணன் இறந்து போனான். வெகு காலம் கடந்து க்ஷத்திரியனும் இறந்து போனான். யமதூதர்கள் இவனைக் கொடிய நரகத்தில் தள்ளினார்கள். அங்கு வெகுகாலம் அவன் தண்டனை அனுபவித்தான். அதன் பின் இவன் பேயாக அலைந்தான். அதன் பின் பன்றியாகவும் பிறந்தான். அதன் பின் விந்தியமலை மற்றும் இமயமலை நடுவில் உள்ள பிரதேசத்தில் இவன் மனிதனாகப் பிறந்தான். முன் செய்த புண்ணியத்தால் இவன் பணக்கார குடும்பத்தில் பிறந்தான். இவன் பெரியோர் மற்றும் அந்தணர்களுக்கும் சேவை செய்து வந்தான். இவன் முன் ஜென்மத்தில் அந்தணனைக் கடுஞ் சொல் பேசி அவன் இறந்து போன பாவத்தால் இப்பிறவியில் இவனுக்குச் சந்ததி இல்லாமல் போயிற்று. ஓரிரண்டு பிறந்தன. ஆனால் அவை இறந்து போயின. இவனுக்கு கடும் நோய்கள் ஏற்பட்டன. அதிகமாகக் காய்ச்சல் கண்டது. தணியவில்லை. இதன் சாந்தி பரிஹாரம் வருமாறு.

முதலில் தன் வீட்டில் உள்ள பொன் பொருள் முதலிய எல்லாவற்றின் 6ல் ஒரு பாகத்தை ஒரு உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் "காயத்ரி" மூல மத்திரத்தை 5 லட்சம் முறை ஜபம் பண்ண (வைக்க) வேண்டும். அதன் புரஸ்சரண அங்கத்தையும் செய்து முடிக்க வேண்டும். அதன் பின் 20 தோலா எடையுள்ள தங்கத்தில்

ஒரு பிராமணன் உருவத்தை வடித்து அதற்கு ஆடை அணிகலன்கள் பூட்டி முறைப்படி தூபதீப நைவேத்யத்துடன் அதைப் பூசிக்க வேண்டும். அதன் பின் மஹா விஷ்ணுவை முறைப்படி பூஜிக்க வேண்டும். புற்று மண்ணால் குண்டம் அமைத்து மங்கள திரவியங்களுடன் சர்தோ பத்ரம் என்ற சக்கரம் அமைத்து விஷ்ண மந்திரங்களைச் சொல்லி ஓமம் பூஜை முதலியவை முறைப்படி செய்ய வேண்டும். அதன் பின் அந்த மூர்த்தியை சிகப்பு துணியால் மூடி அலங்கரித்து அதை ஒரு உத்தம பிராமணனுக்குத் தானம் பண்ண வேண்டும். அதன் பின் உத்தம அந்தணர்களுக்கு போஜனம் செய்விக்க வேண்டும். தட்சணையுடன் தாம்பூலமும் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இவன் பாவங்கள் நீங்கி உடல் நலம் பெறுகின்றான். இவனுக்குத் தீர்காயுள் உள்ள ஆண் குழந்தைகளும் பிறக்கின்றார்கள். அதன் பின் இவர்கள் குடும்பத்துடம் சந்தோஷத்துடன் வாழ்கின்றனர்.

### பிறர் மதப்படி ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் பலன்

### பொதுப் பலன் - ஆண்கள்

#### உடல் தோற்றம்

நல்ல உடல்கட்டும் சுமாரான உயரமும் பெற்றவர்கள். சிவந்த நிறமும் அளவான உறுப்புக்களும் உடையவர்கள்.

#### குணம்

இதயத்தால் சுத்தமானவன். பேச்சில் மென்மையானவன். கொடுக்கள்-வாங்கலில் நாணயமானவன். சந்தர்ப்பத்திற்குத் தக்கப்படி பிறருடன் காரியமாற்றுவதில் கெட்டிக்காரன். அனாவசியமாகப் பிறருடன் பேச்சு வார்த்தை வைத்துக்கொள்ளமாட்டான். அவர்கள் பேசுவதையும் செவிமடுக்க மாட்டான். சுதந்திரமான தனி வாழ்க்கை வாழ்வதால் எதிர்ப்பு ஏற்படும் போதும் மிகவும் துன்பமடைவான். எதையும் வெகு காலத்துக்கு ரகசியமாக வைத்துக் கொள்ள இவனால் முடியாது. தனக்கு பிரியமான, வேண்டியவர் களைக் கூட கண்மூடித்தனமாக நம்ப மாட்டான். ஆனால் ஒருவரை தன் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக ஏற்றுக் கொண்டு விட்டால் அவர்களை இவனால் தன்னை விட்டு ஒதுக்கி வைக்க முடியாது.

இவன் மகா முன் கோபக்காரன். எது சேர்ந்தாலும் தன் உள் மனம் சொல்வதையே செய்வான். இதுவே இவனது கொள்கை, தனக்குச் சரி என்று தோன்றும் கொள்கைகளை கடைசி வரை கடைபிடிக்க முயற்சி செய்வான். அறை குறை முடிவுக்கு அடிக்கடி வந்து விடுவான் எந்த விஷயத்திலும் கடவுளுக்கு பயந்தவன்' மூடப்பழக்கங்கள் / நம்பிக்கைகள் உடையவன். பழங்கால கொள்கை, திட நம்பிக்கையும், பலவற்றை அடைய வேண்டும் என்ற எழுச்சியும் கொண்டவன். இவன் யோசனையில், எண்ணத்தில் சிறு தோல்வி அல்லது தடங்கள் ஏற்பட்டாலும் அதிகமான மன வருத்தத்தை அடைவான். 28 நட்சத்திரங்களிலும் ரேவதியில் பிறந்தவர்கள் கடவுள் பக்தியும், குலாச்சார அனுபவமும் கொண்டவர்கள். ஆதாலால் கடவுளின் கருணை இவர்கள் பக்கம் எப்போதும் இருக்கும்.

*கல்வி, தொழில்*

விஞ்ஞான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஆர்வம் உள்ளவனாக இருப்பான். சரித்திர ஆராய்ச்சியிலும் புராதன பண்பு, கலாச்சாரம் இவை களை ஆராய்வதிலும் ஆர்வமுள்ளவன். மேற்சொன்ன ஏதாவது ஒரு துறையில் பிரபலமானவனாக பொதுமக்களால் அறியப்படுவான். புராதன கலாச்சாரம் என்பதில் ஜோதிடமும், வான இயலும் கூட அடங்கும்.

இவன் ஒரு சிறந்த கவியாக, டாக்டராக. ஜோதிடனாக ஆகக் கூடும். அரசாங்க உத்தியோகத்தில் இருந்தால் மிகவும் வெற்றி பெற்றவனாக எல்லோராலும் புகழப்பட்டவனாக விளங்குவான். ரேவதியில் பிறந்தவர்கள் பெரும்பாலானவர் அயல் நாடுகளில் செட்டில் ஆகி விடுகிறார்கள். அதாவது உள்நாட்டிலேயே பிறந்து ஊரிலிருந்து வெகு தொலைவில் உள்ள ஊராகவும் இருக்கலாம். தன் சுய முயற்சியாலேயே வாழ்க்கையில் முன்னுக்கு வருவான். இவனுடைய புத்திசாலித்தனமும், சாமர்த்தியமும், திறமையும் இவனுடன் பிறந்தவை. இவன் எந்த ஒரு வேலையிலும் நீண்ட காலம் நிரந்தரமாக இருக்க மாட்டான்.

இவனுடைய 50 வயது வரை, இவன் செய்யும் வேலைக்கும், அதற்கு கிடைக்கும் சன்மானமும் உயர் விகிதத்தில் இருக்காது. அதாவது வேலைக்கு தகுந்த ஊதியம் கிடைக்காது. 23 லிருந்து 26 வயது வரை

நல்ல கால கட்டமாக அமையும். 26 லிருந்து 42 வயது வரை உள்ள காலம் சோதனைகள் நிறைந்தது. பொருளாதார அளவிலும், மன அளவிலும், சமூக அளவிலும் பல பிரச்சினைகள் ஏற்பட்டு துயரமடைவான். 50 வயதுக்கு மேல் தான், கவலையற்ற, நிலையான வாழ்க்கையை அனுபவிக்க முடியும்.

### குடும்ப வாழ்க்கை

இவன் தன் உறவினர்களிடமிருந்தும், தந்தையிடமிருந்தும் எந்த வித உதவியும் பெற முடியாது. அதாவது தன் உற்றார் உறவினரிடமிருந்தும் எந்த வித சுகத்தையும் அனுபவிக்க முடியாத துர்பாக்யசாலி. எனினும் மணவாழ்க்கை இன்ப, சுக துக்கங்கள் சுமாராகத் தான் இருக்கும். இவன் மனைவி அமைதியானவளாயும் அனுசரித்துப் போகக் கூடியவளாயும் இருப்பாள்.

### ஆரோக்யம்

சுரம், வயிற்றுப் போக்கு, பல்வியாதி, காது வலி, குடல் புண்கள் போன்ற வியாதிகள் உண்டாகும்.

### பொதுப் பலன் - பெண்கள்

### தோற்றம்

மிக அழகி. இவள் அழகிய தோற்றத்தால் ஆயிரக்கணக்கானவர்கள் உள்ள கூட்டத்திலும் எளிதாக அடையாளம் கண்டுபிடிக்கக் கூடியவளாக இருப்பாள்.

### குணம்

பிடிவாதக்கார குணம் சற்று உண்டு. பிறரை அடக்கி அதிகாரம் செய்ய விருப்பம் கொண்டவள். ஆண்களைப் போலவே இவளும் தெய்வ நம்பிக்கை, பக்தி. தான தர்மங்களை கடுமையாக பின் பற்றுதல், மிகுந்த மூடநம்பிக்கை ஆகிய குணங்களைக் கொண்டவள்.

### கல்வி - தொழில் - வருமானம்

கலைகள், இலக்கியம் அல்லது கணிதம் இவற்றில் கல்வி அமையும்.

பொதுவிரன் தொழில் அமையும், அதாவது, டெலிபோன் ஆபரேட்டர், டைப்பிஸ்ட் டீச்சர். கம்பெனி பிரதிநிதி போன்றவை. சுபர்களின் பார்வை இருந்தால் "அம்பாசிடராக" இருப்பாள். அல்லது வெளிநாட்டில் கலை கலாச்சாரம், அரசியல் ஆகியவற்றின் பிரதிநிதியாக செயல்படுவாள்.

*குடும்ப வாழ்க்கை*

இவள் திருவாத்திரையில் பிறந்த பையனை மணக்கக் கூடாது ஏனென்றால் இவனுடன் பரஸ்பர நம்பிக்கை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, ஒற்றுமை ஏற்படாது. சில சமயம் "டைவர்ஸ்" கூட ஏற்பட நேரும். வாழ்க்கையில் மிகுந்த ஒற்றுமை, சந்தோஷத்தைக் காண்பாள்.

*ஆரோக்கியம்*

பாதத்தில் ஊனம் ஏற்படும். குடல் புண்கள் வயிற்றுக் கோளாறுகள், காது கேளாமை போன்றவை ஏற்படலாம்.

*ரேவதியில் உள்ள கிரகங்களை மற்ற கிரகங்கள் பார்த்த பலனுக்கு மூலம் நட்சத்திரத்திற்கு சொல்லப்பட்ட பலன்களைக் காண்க*

*ரேவதி நட்சத்திர பாதங்களில் கிரகங்கள் இருந்த பலன்*

*ரேவதி முதல் பாதத்தில் சூரியன் இருந்த பலன்*

பிரபலமானவன். பணக்காரன் கூர்ந்த மதி உடையவன். நல்ல படிப்புள்ளவன்.. பிறவிப் பண்டிதன். தைரியசாலி. வீரமுள்ளவன். எந்த சண்டையிலும் எதிரியை வெற்றியக் கூடும் திறமைபடைத்தவன். சரியான பாதையில் சென்று வாழ்க்கையை நன்கு அனுபவிப்பான். பிறருடைய செல்வம் அல்லது பெண்டிரும் கவரும் எண்ணம் துளியும் இல்லாதவன்.

*ரேவதி முதல் பாதத்தில் சந்திரன் இருந்த பலன்*

இந்த சந்திரனுடன்,, சூரியனும் செவ்வாயும் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்தால் ஜாதகன் ஆயுள் 14 வருடங்கள் தான். அப்படி இல்லாவிட்டால், ஜாதகன் எல்லோரிடமும் அன்புள்ளவன். உடலில் பெரிய அளவில் அடையாளக் குறி உடையவன். ஆலோசனைகள் சொல்லுவதில் கெட்டிக்

காரன், நல்ல குடும்பம், குழந்தைகள் நண்பர்களைப் பெற்று தொடர்ந்த லாப்பதுடன் வாழ்க்கையை அனுபவிப்பான்.

*ரேவதி முதல் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்*

நிலங்கள் மூலம் பணவரவில் லாபத்தை அடைவான். ஆரோக்யமாயும், சுறுசுறுப்பாகவும் உஷாராகவும் இருப்பான். மாடர்ன் டெக்னிக்கை உபயோகித்து எந்த வேலையையும் செய்ய திறமை உள்ளவன்.

*ரேவதி முதல் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

அதற்கும் "சட்" டென பதில் சொல்லும் திறமை கொண்டவன். அந்த பதிலும் ஒத்துக் கொள்ளக் கூடிய விதத்தில் அமையும். பல வித பாஷைகளைக் கற்றுக் கொள்வதில் விருப்பம் உடையவன். ஸ்பெகுலேஷன் செய்வதில் ஈடுபாடு உண்டு. அக்கவுண்டன்ட் அல்லது நிர்வாகத்தில் வேலை செய்வான்.

*ரேவதி முதல் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

குரு அதிலும், லக்னம் அனுஷம் 2ம் பாதத்திலும் பிறந்த பெண்ணுக்கு 5 ஆண் குழந்தைகள் பிறக்கும் இவன் எல்லரையும் ஏமாற்றவும், காட்டிக் கொடுக்கவும் மாட்டான். கொழுத்த உடலைப் பெற்றவன். வேலை செய்யும் துறையில் உயர்ந்த ஸ்தானத்தை அனுபவிப்பான்.

*ரேவதி முதல் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

சுக்கிரன் இதிலும், லக்னமும் சித்திரை முதல் பாதத்திலும் இருக்கப் பிறந்த பெண், மிக மிக அழகானவளாயும், கணவனால் விரும்பப் படுபவளாகவும், கணவன் குடும்பத்திற்கு ஒரு ஆபரணம் போன்றும் இருப்பாள்.

*ரேவதி முதல் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

இங்குள்ள சனியுடன், லக்னம் ஹஸ்தத்தில் இருந்தால் அந்த ஜாதகனின் திருமணம் காலங்கடந்து நடைபெறுவதுடன், மனைவி அல்லது கணவனை விட ஜாதகன் / ஜாதகி அதிக வயதானவளாக இருப்பாள்.

இவர்கள் எதையும் கெடுதலாகவே எண்ணுவார்கள். அதனால் இவர்கள் எந்த விஷயத்திலும் "அட்ஜஸ்ட்" செய்து கொள்ள மாட்டார்கள். இங்கு சனி தனியாக இருந்தாலும், அல்லது சுபர்கள் பார்வை பெற்றிருந்தாலும் சுமாரான செல்வமும் சந்தோஷமும் அடைவார்கள்.

### ரேவதி முதல் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

லக்னம் புனர் பூசமாய் அமைந்து, ராகு இங்கு இருந்தால் "கான்ஸர்" ஏற்பட காரணமாயிருப்பார்கள்.

இங்குள்ள ராகுவுடன் செவ்வாய் சேர்ந்து புதன் பார்வையைப் பெற்றால் என்ஜினீயரிங் வேலையும், கவர்ண்மெண்ட் வேலையும் நிச்சயம். இவன் தொழில் தண்ணீர் சம்பந்தப்பட்டதாக இருக்கும்.

### ரேவதி முதல் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

இந்த கேதுவுடன் சுக்கிரனும் சேர்ந்திருந்தால் ஜாதகன் "மகப்பேறு" டாக்டராக ஆக முடியும். சூரியனுடன் சேர்ந்திருந்தால் "கண்" சர்ஜன். தொழிலில்பேரும் புகழ் பெற்றாலும், குடும்ப வாழ்க்கை கொந்தளிப்பு உள்ளதாக இருக்கும்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

லக்னம் அவிட்டம் 2ம் பாதத்தில் இருந்து சூரியன் இங்கு சந்திரனுடன் இருந்தால், இக்குழந்தை பிறக்கும் போதே நோயுடன் பிறந்து 3 நாட்களில் மரித்து விடும்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலம்

செவ்வாய் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்து லக்னம், சூரியன், சனி மூவரும் ரேவதி 2ல் இருந்தால் இந்த ஜாதகன் இயந்திர விபத்தில் கொல்லப்படுவான்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

இந்த ஜாதகன் பிறரை எரிச்சலூட்டி, தானும் எரிச்சல் அடையும் குணம் கொண்டவன். காக்கை வலிப்பு மூளைக் கோளாறு இவற்றுக்கு ஆட்படுவான். இவன் ஒரு "frod" ஆக இருப்பான். அல்லது பிறரிடம் ஏமாறுபவனாயிருப்பான்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

இந்த புதனை குரு பார்த்தால் ஜாதகன் தெளிவான சிந்தனையும், சரியான முன்நோக்கும், நல்ல தீர்ப்பும், புத்திசாலித்தனமும் உடையவனா யிருப்பான். தத்துவ மனம் கொண்டவன். எழுத்தாளனாக, நிருபராக அல்லது ஆடிட்டராக பிரகாசிக்க முடியும்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்

குரு இங்கிருந்து, லக்னம் மூலம் அல்லது பூராட நட்சத்திரத்தில் அமைந்தால் ஜாதகனுக்கு ஏற்பட விருக்கும் எல்லா கெடுதல்களில் இருந்தும் - குழந்தையில் மரணம் உட்பட - காப்பாற்றப்பவான். வெகு காலம் வளர்ப்பத்துடன் வாழ்வான்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்

பெண் ஜாதகிக்கு, இங்குள்ள சுக்கிரனுடன், லக்னமும் ஹஸ்த நட்சத்திரத்தில் இருந்தால், இவள் கணவன் புகழ் பெற்றவனாகவும்.. பாதுகாப்பு துறையுடன் சம்பந்தப்பட்டவனாகமிருப்பான். ஜாதகியும் அப்ஸரஸ் போன்ற அழகும் கருணை பொங்கும் முகமும், கலைகளில் ஆர்வமும், நிறைய செல்வமும் ஆபரணங்களும் கொண்டவளாக இருப்பாள்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்

ஜாதகன் யோசனையும், சிந்தனையும், அனுபவ ஞானமும், சக்தியும் உடையவன். ஜியாலஜி, மினராலஜி கணிதம், புள்ளிவிவரம் இவற்றில் ஞானம் உடையவன்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்

ராகு இங்கு இருந்து, லக்னம் பூர நட்சத்திரத்தில் அமைந்தால் ஜாதகருக்கு "கான்ஸர்" நோயைத் தருவார்கள்.

ராகு இங்கு இருந்து செவ்வாய் பார்வையைப் பெற்றால் அக்குழந்தை அக்குழந்தை 7 வருடங்களே உயிர் வாழும்.

### ரேவதி 2ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

இவனுக்கு செல்வமும் ஆரோக்கியமும் இருக்கும். ஆனால் 40 வயது வரை வாழ்க்கையில் சந்தோஷம் என்பது இராது. 35 வயது வரை குடும்பத்தை விட்டுப் பிரிந்து வெளியூரில் வாசம் செய்வான். இவன் தன் மனைவியைப் பற்றி சந்தேகப்படுவதை நிறுத்த வேண்டும். இந்த சந்தேகம் தான் இவன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வாசம் செய்வதற்கு முக்கிய காரணம். இருந்தாலும் 35 வயதிற்குப் பின்னர் குடும்பத்தில் மனைவியுடம் சேர்ந்து கொள்வான்.

### ரேவதி 3ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

இந்த இடமே லக்னமுமாக அமைந்து, சந்திரன் சித்திரை நட்சத்திரத்திலும், சுக்கிரன், ரோகிணியிலும் இருந்தால் ஜாதகனை அவன் மனைவியே, அவன் சொந்த வீட்டிலேயே கொன்றுவிடுவாள்.

### ரேவதி 3ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

இந்த ஜாதகருக்கு ஒரு வயது முடியும் வரை உயிருக்கு அபாயம் இருப்பதால், அதற்குப் பின்னரே ஜாதகரின் பலன்களைக் கூறவேண்டும்.

### ரேவதி 3ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

குருவும், செவ்வாயும் இங்கு சேர்ந்தால், ஜாதகர் நினைப்பதை எல்லாம் அடைவார். தான் செய்யும் தொழிலில் தலைமைப் பதவியை அடைவார்.

ஆனாலும் இவருக்கு கீழ் வேலை செய்யும் உதவியாளர்களால் பலவித பிரச்சினைகள் தோன்றும். அதற்குக் காரணம், அவர்களுடன் இவர் பழகும் முறைதான்.

*ரேவதி 3ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்*

சட்டத்தில் புலியாக இருக்கலாம். தன்னுடைய மனைவியின் காரணமாக கோர்ட்டில் அபராதம் செலுத்த நேரலாம். தந்திரக்காரன். பொல்லாதவன். தன் மனைவியின் உறவினரிடமிருந்து நிறைய செல்வத்தைப் பெறுவான். இந்த புதனை 2 அல்லது அதற்கு மேற்பட்ட பாபிகள் சேர்ந்திருந்தாலும் அல்லது பார்த்திருந்தாலும், இவன் தன் மனைவியின் மரணத்துக்கு காரணகர்த்தாவனாக இருப்பான்.

*ரேவதி 3ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

ஜாதகன் மிகவும் சோஷியலாக இருப்பான். மதசார்பு கொண்டவன். நீண்ட தூர பிராயணங்களை ஏற்பான். வெளியூர் வாசம் ஏற்படலாம். மர்ம மான விஷயங்களில் ஆர்வம் காட்டுவான். மர்மக்கதைகள் எழுதுவான். ஹெர்னியா, ஜாண்டிஸ், காடராக்ட், மூளையில் பாதிப்பு, வயிற்று உப்புசம், உடல் வீங்குதல், கட்டிகள் போன்ற நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

*ரேவதி 3ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

இந்த சுக்கிரனுடன் சந்திரன் இருந்து லக்னம், அனுஷத்தில் இருந்தால், இவனுக்குப் பிறக்கும் பெண்கள், ஆண்களைவிட அதிர்ஷ்ட சாலிகளாக விளங்குவார்கள்.

*ரேவதி 3ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

ஷிப்பிங் ஏஜன்ஸி, டிராவல் ஏஜன்ஸி, டிரான்ஸ் போர்ட், சினிமா, பொழுது போகும் - போன்றவைகள் மூலம் சம்பாதிப்பான்.

*ரேவதி 3ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

இங்கு ராகு பலமில்லாதவன். அதனால் எந்த நன்மையும் அல்லது

தீங்கையும் ஜாதகனுக்குத் தர சக்தியற்றவனாகிறான். இங்கு' பலனை' மற்ற கிரகங்களின் பார்வையைப் பொருத்தும், மற்ற கிரகங்கள் தரும் பலனைப் பொருத்தும் சொல்ல வேண்டும்.

### ரேவதி 3ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்

பிரயாணம் அதிகம் இருக்கும் வேலையில் இருப்பான். வாழ்க்கை சுலபமானதாயும், சந்தோஷம் நிரம்பியதாயும் இருக்கும்.

### ரேவதி 4ம் பாதத்தில் உள்ள சூரியன் தரும் பலன்

சூரியன் இருப்பதற்கு இது அருமையான இடம் இவனை குரு பார்த்தால் மிகப் பெரிய உயர்ந்த ஸ்தானத்தை அடைவார்கள். மந்திரியாகவோ, அதற்கு சமமான பொஸிஷனை அடையக் கூடும். இவரது 44வது வயது இவருக்குப் பொன்னான காலமாக அமையும்.

### ரேவதி 4ம் பாதத்தில் உள்ள சந்திரன் தரும் பலன்

இங்கு இருக்கும் சந்திரன், ஜாதகனாக இருந்தால் அவன் தந்தைக்கும், ஜாதகியாக இருந்தால் அவள் தாய்க்கும், மரணத்தைத் தருவான். சந்திரன் இங்கும், சூரியன் கிருத்திகையிலும், லக்னம் புனர்பூசத்திலும் இருந்தால் அப்படி பிறக்கும் குழந்தை ஒரே இரவுதான் உயிர் வாழும்.

### ரேவதி 4ம் பாதத்தில் உள்ள செவ்வாய் தரும் பலன்

இந்த இடம் சுக்கிரனின் உச்ச ஸ்தானமாதலால் இங்குள்ள செவ்வாய் அதிக செல்வத்தையும், புகழையும் தருவான். ஆனால் ஜாதகன் திருமண சுகத்தையும், இன்பத்தையும் அனுபவிக்க முடியாது. சிலருக்கு மனைவியிடம் இருந்து நீண்ட காலம் பிரிந்து இருக்க நேரும். சிலருக்கு டைவர்ஸ் கூட ஏற்படலாம்.

### ரேவதி 4ம் பாதத்தில் உள்ள புதன் தரும் பலன்

ஜாதகன் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கலாம். இந்த புதனுடன்.

செவ்வாய் சேர்ந்தால் டிபன்ஸில் டெக்னிகல் துறையில் இருப்பான். சுக்கிரன் சேர்ந்தால் உலகம் முழுவதும் பரவலாக பிராயணம் செய்வான். குரு சேர்ந்தால் அரசாங்கத்தில் அல்லது அரசியலில் உயர்ந்த பொஸிஷனில் இருப்பான்.

*ரேவதி 4ம் பாதத்தில் உள்ள குரு தரும் பலன்*

இதில் குரு இருக்கும் போது சந்திரன் ஹஸ்தத்தில் இருந்தால், ஜாதகனின் கை அல்லது பாதத்தில் சூலம், மீன், அம்பு போன்ற குறிகள் அமைந்திருக்கும். தண்ணீர் விளையாட்டுக்களில் விருப்பம் உடையவன். சிவந்த அழகிய முகத்தோற்றம் உடையவன். டவுன் அல்லது நகரத்தை ஆளுவான். 100 வருடங்கள் வாழ்ந்து தன்னுடைய முடிவை காட்டில் தேடிக் கொள்வான்.

*ரேவதி 4ம் பாதத்தில் உள்ள சுக்கிரன் தரும் பலன்*

இந்த சுக்கிரன் உடன் குரு சேர்ந்து இருந்து சந்திரன் கிருத்திகை 2ம் பாதத்தில் இருந்தால், ஜாதகன் அரசியலில் மிக உயர்ந்த பொஸிஷனுக்கு வருவான். ஜனாதிபதி, பிரைம் மினிஸ்டர் அல்லது இவர்களுக்கு அடுத்தபடியாக உள்ள ஸ்தானத்தைப் பெறுவான். அளவற்ற "பவர்" பெற்றவன். சுக்கிரன் மட்டும் தனித்து இருந்தால் ஜாதகன் 70 வயது வரை உயிர் வாழ்வான்.

*ரேவதி 4ம் பாதத்தில் உள்ள சனி தரும் பலன்*

ஆடம்பரப் பொருள்கள், சங்கீதம், ரேடியோ, எலக்ட்ரானிக் பொருட்கள் ஜீவல்லரி, பெயிண்டிங் போன்றவை மூலம் நன்கு சம்பாதிப்பான். இவன் எந்த விஷயத்திலும் நிபுணத்துவம் பெறுவதற்கு ஏதாவது தடை ஏற்பட்டு வரும். எனினும் ஜாதகன் நல்ல ஞாபக சக்தியும், அனுபவ பூர்வமான அணுகு முறையும் உடையவன்.

*ரேவதி 4ம் பாதத்தில் உள்ள ராகு தரும் பலன்*

இங்கும் ராகு நல்லதையோ அல்லது கெட்டதையோ தருவதற்கு

பலமில்லாதவன். பலனை பிற கிரகங்களின் பார்வை. சேர்க்கை இவற்றைக் கொண்டே சொல்ல வேண்டும்.

**ரேவதி 4ம் பாதத்தில் உள்ள கேது தரும் பலன்**

கேதுவை இங்கு கொண்ட பலர் ஏதாவது காண்ட்ராக்ட்வேலை எடுத்துப் பிழைக்கின்றனர். பிறரின் கீழ் வேலை செய்வது இவர்களுக்கு "அலர்ஜி". அதனால் பிறர் தலையீடு இன்றி தனியாக பிஸினஸ் அல்லது வேறு தொழில் செய்கின்றனர்.



# நட்சத்திரங்களைப் பற்றிய

## பிற செய்திகள்

## 1

**நட்சத்திரங்களைப் பற்றி பிற செய்திகள்**

***ஜோதிஷ ரத்னாகரம் நாரதீயம் முதலியவற்றிலிருந்து திரட்டிய நட்சத்திர காரகங்கள் முதலியவை***

**நட்சத்திர காரகங்கள்**

**அசுவனி**

*குணம்*

ஆண், வைசியன், ஆன்மீகம் முன் சோக்கு, பார்வை - பலவீனம் 3 நட்சத்திரங்கள் கொண்டது, அதிதேவதை அஸ்வினி குமாரர்கள் (தேவ வைத்தியர்) வியாபாரிகள், குதிரை முகம் போன்ற வடிவம், குட்டையான வடிவம் குலம்

*மனித உடல்*

தலை முழங்கால், உள்ளங்கால் பாதத்தின் மேல் பாகம், மூளையின் பாகங்கள்.

*நோய்கள்*

மூளையின் அடைப்பு, இதய ரோகம், காக்கை வலிப்பு, மயக்கம், தலையில் அடி மூளையில் ரத்தக் குறை, அதிக ஒற்றைத் தலைவலி, மூளை ரத்த நாள வெடிப்பு, பக்க வாதம், மலேரியா பெரியம்மை, மறதி நிலை கோமா. முதலியவை

*தொழில்கள்*

குதிரை வாணிபம், குதிரை சவாரி, குதிரை ஓட்டல். மருத்துவர் தளபதி, வேலைக்காரர், சிறைப்பணி, வன்முறை விசாரணை நீதி மன்றம் காவல்துறை படைத்துறை.

*செய்யக் தக்கவை*

விக்கிரஹ பிரதிஷ்டை தலை மழித்தல், முகக்ஷவரம், கல்வி, ஆரம்ப-பயிர்த்தொழில் மிருகம் - குதிரை.

*பொருட்கள்*

ஆடை வகை, அணி கலன்,. வாகனம், இரும்பு, செம்பு.

**பரணி**

*குணம்*

ஆண் தன்மை, சமூகத்துடன் சேராமை, பிற்போக்கு தன்மை, சுமாரான கண் பார்வை, 3 நட்சத்திரங்கள் கொண்டது. பெண் ஒருவ அமைப்பை உடைய வடிவம். அராஜக குணம்.

*மனித உடல்*

நெற்றி தலை, கால் விரல்கள், முழங்காலுக்கு கீழ், தலைக்குக்குள் இருக்கும் நரம்புகள், கண்கள், மூளையின் பாகங்கள்.

*நோய்கள்*

பெற்றியில் அடி. மூளை நோய், உடல் மெலிவு பால்வினை நோய், கண்பார்வை குறைவு, மூத்திரப்பை பாதிப்பு, ஜலதோஷம், கெட்ட பழக்கங்களால் உடல் நலம் பாதிக்கப்படுவது.

*தொழில்கள்*

வாய்ப்பாட்டால் வருமானம், சித்திரம் வரைதல், விளம்பரத்துறை,

விளையாட்டுத்துறை, கண்காட்சி, விலங்கியல் மருத்துவதுறை, வன்முறை விசாரணை காபி-தேயிலை எஸ்டேட், இறைச்சிக் கடை.

*செய்யத் தக்கவை*

வன்முறை, தீயணைப்பு, ஆயுதம் செய்தல், விஷத்தன்மையுள்ள மருந்துகள் தயாரித்தல், மற்றவர்களை துன்புறுத்துதல், கொல்வது, ஏமாற்றுவது (அதிலும் பண விஷயத்தில்)

*பொருட்கள்*

ஆயுதங்கள், விஷம்

இடங்கள் - கிணறு, குளம்.

**கிருத்திகை**

*குணங்கள்*

ஆண்மை, பிராமணர், பிறபோக்கு நட்சத்திரம் தீர்க்கமான கண்பார்வை, 6 நட்சத்திரங்கள், சாந்தமும், கோபமும் கலந்த குணம், குட்டையான கத்தி போல் முனை உடைய உருவம் அதிதேவதை அக்னி.

*மனித உடல்*

புருவங்கள், இடுப்பு, தலை, தொண்டை.

*நோய்கள்*

மலேரியா, யானைக்கால் நோய், மூளை ஜீரம், அம்மை நோய், தீவிபத்து, கண்நோய், தொண்டையில் அடிக்கடி நோய், உடற் சூடு.

*தொழில்கள்*

ஜோதிடர் மந்திர சாஸ்திரம் அறிதல், யாகம் செய்தல், தீப்பெட்டி தொழிற்சாலை, இராசயனத் துறை, போலிஸ், வரித்துறை, பொறியியல் துறை. நாடகம், நாட்டியம், சிற்பம் செதுக்குதல், வெளிநாட்டு ஏற்றுமதி,

இறக்குமதி, பால் வினை நோய் நிபுணர், கவிபாடும் திறமை வண்ணம் பூசும் தொழில்.

*செய்யத் தக்கவை*

வெளிநாட்டவருடன் நட்பு, எதிரிகளை வெல்லுதல், முதலாலியாக இருப்பது, நல்ல உழைப்பு, வாதாடும் திறன்.

*பொருட்கள்*

தீயணைப்பு பொருள், போர் ஆயுதங்கள் மருந்துகள் முதலியவை.

*இடம்*

சுரங்கம்.

**ரோகிணி**

*குணங்கள்*

ஆண் தன்மை, வேளாளர் முன்நோக்கு நாள், பிறரை காப்பாற்றுதல், மங்கிய கண் பார்வை, அல்லது குருடர்கள், ஸ்திரமான, பலமான குணம் 5 நட்சத்திரங்கள் கொண்ட வண்டியை போன்ற உருவம், அதிதேவதை பிரம்மா.

*மனித உடல்*

கண்கள், நெற்றி, நாக்கு, கழுத்து, வாய், பின் கழுத்து.

*நோய்கள்*

வீக்கம், மார்பகத்தில் வலி, தொண்டை வலி, இருமல், ஜலதோஷம், கால்வலி, தூரக்கோளாறு, மூளை பாதிப்பு.

*தொழில்கள்*

நீதிபதி, மாடு, குதிரை வண்டி ஓட்டுதல், கல்யாண தரகர்,

பழவியாபாரம், வாகனங்கள் பழுது பார்த்தல், பிளாஸ்டிக் கண்ணாடி பொருட்கள், வாசனை திரவிங்கள் தயாரித்தல், கப்பல் துறை, முத்து. சந்தனம் வியாபாரம், இனிப்பு சுவையுள்ள மாத்திரைகள் தயாரித்தல், மதுவகைகள் தயாரித்தல்.

*செய்யத் தக்கவை*

விக்கிரஹ பிரதிஷ்டை, தலை மழித்தல், சாஸ்திரிகள், வீடு கட்டுதல், கல்யாணம் செய்து வைத்தல்.

*பொருட்கள்*

முத்து, பவழம், ரத்ன கற்கள். நகைகள், அழகான துணிவகைகள்.

*இடங்கள்*

ஹோட்டல், மது அருந்தும் இடம், மலைப்பாங்கான இடம், லாட்ஜ் ஆகியவை.

**மிருகசீரிஷம்**

*குணங்கள்*

ஆண்மை, பிறர்க்கு உதவுதல், முற்போக்கு எண்ணம், பணி செய்வது. மங்கிய கண்பார்வை, சாந்தமான குணம், 3 நட்சத்திரங்கள் கொண்டது' மானின் தலை போன்ற உருவ அமைப்பு. அதிதேவதை சந்திரன்.

*மனித உடல்*

மூக்கு கண், புருவம், கன்னம். புஜங்கள் தொண்டை குழி.

*நோய்கள்*

முகப்பரு, தொண்டை வலி, மலச்சிக்கல், பால்வினை நோய், அரிப்பு, அடிபடுதல், எலும்பு முறிவு, தோல் பட்டை வலி, ஆஸ்த்துமா, இருமல், காதுவலி, மறைவிடங்களில் நோய் அல்லது சரியான அமைப்பின்மை.

*தொழில்கள்*

பாடுதல், தையற்கலை நிபுணர், பழ வியாபாரி, சாக்லேட் தயாரிப்பு, நகை வியாபாரம், கார் ஓட்டுதல், பொறியாளர், சினிமாத்துறை, வருமான வரி, விற்பனை வரி, கணக்காளர், வீடு கட்டுதல், திருடுதல் electronic items, புத்தகம், நாளேடு துறையில் ஈடுபாடு, மருத்துவம் ஆயுதங்கள் தயாரித்தல் ஆகியவை.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, பூசை போடுதல், மழித்தல், வீடுகட்டுதல். கல்யாணம் செய்து வைத்தல், ஒட்டக சவாரி, யானைச் சவாரி.

*பொருட்கள்*

வாசனை திரவியம், ஆபரணங்கள், நீர் பொருட்கள்.

**திருவாதிரை**

*குணங்கள்*

பெண்மை, வெறுக்கத்தக்க, உணர்ச்சி வசப்படுதல், முற்போக்கு, மிதமான பார்வை, முரட்டு குணம், 1நட்சத்திரம் உடைய, பளபளக்கும் கல் போன்ற உருவமைப்பு, அதிதேவதை சிவன்.

*மனித உடல்*

காது, தலைமுடி, மூளை, கண்மள், புஜங்கள்

*நோய்கள்*

தொண்டை புண், பொன்னுக்கு வீங்கி, ஆஸ்த்துமா, இருமல் ஈசினோபீலியா, காது வலி.

*தொழில்கள்*

பொய் சொல்லுதல், திருடுதல், கொலை செய்தல், ஆடுமாடு, வெட்டுதல், கலப்படம் செய்தல், மந்திரம், ஸ்லோகங்கள் ஓதுதல், புத்தக

வியாபாரி, சிறந்த முறையில் எழுதுதல், வாகனங்கள் ஓட்டுதல், பணம் கொடுக்கல் வாங்கல், பூ வியாபாரம்' எழுத்தாளர் ஆகியவை,

*செய்யத் தக்கவை*

சண்டை - சச்சரவுகளை தீர்த்து வைத்தால், பிரிந்து வாழ்தல், ஆபரேஷன் செய்தல்.

*பொருட்கள்*

கொடி, கோட்டை

*குறிப்பிடும் நபர்கள்*

கொலைகாரர்கள், கலப்படம் செய்பவர், அபிசாரவித்தை தெரிந்தவர்கள்.

**புனர்பூசம்**

*குணங்கள்*

ஆண்மை, வைசியன் பொருள், நல்ல பார்வை, முற்நோக்கு, பலமுள்ள 4 நட்சத்திரங்கள் கொண்டது. கட்டிட அமைப்பு உடையது.

*மனித உடல்*

கன்னங்கள், விரல்கள், மூக்கு, மூளை

*நோய்கள்*

நுரையீரல் நோய், நிமோனியா, காதுவலி, வயிற்றுவலி, பித்தம்

*தொழில்கள்*

உண்மை பேசுவது அழகுகளை நியுணர், வக்கீல் தொழில், உயர்தர பொருட்கள் விற்பது, சுத்தம் செய்வது, சுத்தமாக இருப்பது, மதிக்கும் வகையில் நடந்துக் கொள்வது, நர்ஸ்வேலை, ஆசிரியர், ஜோதிடர், கணக்காளர், கதை எழுதுதல்.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், கட்டிட வேலை, மழித்தல், வெளியில் செல்வது, வங்கியில் வேலை, சாஸ்திரிகள், பூசாரிகள்.

*பொருட்கள்*

ஆடை ஆபரணங்கள். ஆயுதங்கள்.

*குறிப்பிடும் நபர்கள்*

உண்மை பேசுபவர்கள், சுத்தத்தை விரும்புவர், பிறரை மதிக்கத்தக்க குணம், அழகான, புத்தியுள்ள இவர்கள் புத்தியுள்ள, பிரபலமான மனிதர்கள், பணக்காரர்கள், வக்கீல்.

**பூசம்**

*குணங்கள்*

பெண்மை, க்ஷத்திரியர், மேல்நோக்கும் தன்மை, கடவுள் பக்தி, மயங்கி கண்பார்வை, 3 நட்சத்திரங்கள் கொண்டவை அம்பு போன்ற உருவம் அதிதேவதை பிரஹஸ்பதி.

*மனித உடல்*

உதடு, முகம், வாய், காது.

*நோய்கள்*

அல்சர், நுரையீரல் நோய், இருமல், புற்றுநோய், மஞ்சட்காமலை, மார்பக வலி, வாயுவுத் தொல்லை.

*தொழில்கள்*

மந்திரி, ஆட்சி புரிதல், சுரங்கவேலை, கிணறு தோண்டுதல், அணை கட்டுதல், நிலக்கரி, எண்ணெய் முதலியவற்றில் ஈடுபடுதல், சிறைச்சாலை காப்பாளர்.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை பூணூல் போடுதல் போடுதல், கல்யாணம், புதுவீடு புகுதல், வெளி பிரயாணம் செய்தல், மழித்தல்.

*இடங்கள்*

காடுகள்.

**ஆயில்யம்**

*குணங்கள்*

பெண்மை, சமூகத்தில் சேராமை, ஆன்மீகம், மங்கலான பார்வை, கீழ்நோக்கி இருத்தல், முரட்டுத்தன்மை, 5 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை சர்பம், சக்கரம் போன்ற உருவ அமைப்பு உடையது.

*மனித உடல்*

தாடை, நகம், காது, உதடு. இரப்பை

*நோய்கள்*

வைட்டமின், "பி" குறைவு, ஜலதோஷம், வயிற்றுவலி, மூச்சுத் திணறல், கால், மூட்டு வலி ஹிஸ்டீரியா,. நரம்பு தளர்ச்சி, செரியாமை.

*தொழில்கள்*

வைத்தியம், நர்ஸிங், வெளிநாட்டு வியாபாரம், பொருட்களை பல இடங்களில் விற்பது, இங்கு தயாரித்தல், ஆசிரியர், கணக்காளர், விமானப் பணிப்பெண், ஜோதிடர், துணிகளை டிசைன் செய்வது, நூல் வியாபாரம்.

*செல்யத் தக்கவை*

வணிகம், வாதாடுதல், சூதாடுதல்

*பொருட்கள்*

நெருப்பு, விஷம், நீர்.

**மகம்**

*குணம்*

பெண், வேளாளர், ஜடபொருள் கீழ்நோக்கு, மிதமான பார்வை, 5 நட்சத்திரங்கள் கொண்டது அதிதேவதை பிதார், வீடு போன்ற அமைப்பு அராஜக தன்மை உடையது.

*மனித உடல்*

கழுத்து, மூக்கு, கன்னம், தாடை, உதடு இருதயம், முதுகு, முதுகு தண்டுவடம்

*நோய்கள்*

நெஞ்சு வலி, கடுமையான விஷம், பின்புறம் வலி, காலரா, மூத்திரப்பையில் கல், இருதய நோய், மயக்கம்.

*தொழில்கள்*

இரசாயனம், மருந்து உற்பத்தி, கிரிமினல் வக்கீல் ஆயுதப்படை துறை, அறுவை சிகிச்சை கருவிகள் தயாரித்தல், கவரிங் நகைகள் செய்தல் ஆகியவை.

*செய்யத் தக்கவை*

விவசாயம், வணிகம், கல்யாணம் செய்தல் பாடுதல், ஆடுதல், விஷமருந்துகள் தயாரித்தல், ஆயுதம் செய்தல்.

*இடங்கள்*

தானிய கிடங்கு

*குறிப்பிடும் நபர்கள்*

பெண்களை வெறுப்பவர், மாமிச பிரியர்கள், பணக்காரர்கள், மலைவாழ் தாய் தந்தையரை மதிப்பவர்கள், வியாபாரிகள், தைரியசாலிகள்.

**பூரம்**

**குணம்**

பெண், பிராமணர், மென்மை, கீழ்நோக்கல், தீர்க்கமான பார்வை, 2 நட்சத்திரங்கள் கொண்ட அதிதேவதை சூரியன், உயரமான மேடையை போன்ற உருவம்.

**மனித உடல்**

புஜங்கள், உதடு, வலக்கை விரல்கள், இதயம்

**நோய்கள்**

நெஞ்சில் வலி, வீக்கம், காதல் தோல்வி, இரத்த சோகை, கால் வலி, இரத்த அழுத்தம், இரத்த குழாய் அடைப்பு.

**தொழில்கள்**

நாட்டியம், கயிற்றில் நடப்பது, பாடுவது, நடிப்பது, அரசாங்க வேலை, பழைய சாமான்களை வண்ணம் பூசுதல், நினைவுச் சின்னங்களை சேகரிப்பது, புகைபடம் எடுத்தல், கால் நடை வளர்ப்பு, சிகரெட் தயாரித்தல், பால் வினை நோய் மருத்துவர், பல்கலைகழக அதிகாரி,. மகப்பேறு மருத்துவம்.

**செய்யத் தக்கவை**

வாதாடுதல், வன்முறை செயல்கள், கறிவியாபாரம். ஆயுதம் தயாரித்தல், விஷம் தயாரித்தல்.

**பொருட்கள்**

பருத்தி. தேன், உப்பு,. ஆயுதம், விஷம்

**இடங்கள்**

கறிக்கடை, மியூசியம்.

**உத்திரம்**

**குணம்**

பெண், க்ஷத்திரிய, ஆத்மானுபவம், மேல் நோக்கு நாள்,. குருட்டு

நட்சத்திரம், ஸ்திரமான பலமான நட்சத்திரம், 2 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை சூரியன் படுக்கை உருவத்தை உடையது.

*மனித உடல்*

இதயம், உதடு, இடதுகை, மறைவிடங்கள், கழுத்து, முதுகு தண்டு வடம்.

*நோய்கள்*

ஜுரம், பிளேக், தலைவலி, முதுகு வலி, இரத்த அழுத்தம், மயக்கம். இரத்தம் முனையில் உறைந்து அதனால் சிறிது நாள் பைத்தியமான நிலை, இதய வால்வுகள் சரிவர இயங்காமை. தொண்டை வலி, வயிற்று வலி.

*குறிப்பிடும் நபர்கள்*

கடமை உணர்வு உள்ளவர்கள், நல்ல வசதியுள்ளவர், தான தருமம் செய்பவர்கள், சாஸ்திரத்தில் நல்ல புலமை உடையவர்கள், ஆட்சி புரிபவர்கள், நல்ல படிப்பாளிகள்.

*தொழில்கள்*

அரசாங்க வேலை, கப்பலில் வேலை, பங்கு மார்க்கெட், இதய நோய் மருத்துவர், ஜோதிடம், விண்கோள் ஆய்வு, பல கம்பெனிகள் சேர்த்து நடத்துவது' பிறப்பு - இறப்பு கணக்காளர். கடித - தந்தி துறை, வெளி நாட்டு தூதுவரகத்தில் வேலை, புத்தகம் வெளியிடுவது.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், புதுவீடு புகல், வீடு கட்டுதல் கௌரவித்தல்.

*பொருட்கள்*

இரும்பு, ஆடை, கல்.

## ஹஸ்தம்

### குணம்

பெண், வைசியன், சேவை மனப்பான்மை, முன் நோக்கு. மங்கிய பார்வை, குள்ளமான வடிவம், 5 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை சூரியன் ஆயுதம் போன்ற வடிவமைப்பு.

### மனித உடல்

கைகள், மார்பு, விரல்கள் சுரப்கள்

### நோய்கள்

வைட்டமின் பற்றாக்குறை, வயிறு உப்புசம், கை வலி, மூச்சுத் திணறல் ஹிஸ்டீரியா, வயிற்றுப் போக்கு, டைபாய்டு, காலரா, வயிற்றில் பூச்சி தொந்தரவு.

### குறிப்பிடும் நபர்கள்

யானைப் பாகன்,. திருடர்கள், வக்கீல் வியாபாரி, அணை கட்டுபவர். துணி வியாபாரி, எழுதும் மை தயாரிப்பவர், அரசியல் வாதி, கடிதம் - தந்தி எடுத்து செல்பவர்.

### தொழில்கள்

நூல் தயாரித்தல், ஏற்றுமதி இறக்குமதி செய்தல், வண்ணம் பூசுவது, தானம் செய்வது, சித்திரம் வரைந்து கொடுப்பது, துணி வியாபாரம் செய்வது

### செய்யத் தக்கவை

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், மழித்தல், வீடு கட்டுதல் கல்யாணம் செய்தல்.

### பொருட்கள்

நகைகள், ஆடைகள்.

**சித்திரை**

***குணம்***

பெண், விவசாயி, முன்நோக்கு, மிதமான பார்வை, மென்மை, 1 நட்சத்திரம் கொண்டது. அதிதேவதை விஸ்வகர்மா - முத்தை போன்ற வடிவம் கொண்டது.

***மனித உடல்***

மார்பு, நெற்றி, கழுத்து, வயிறு, முதுகு தண்டு.

***தொழில்கள்***

நகைவியாபாரம், வாசனை திரவியங்கள் செய்தல், பாடுதல், வண்ணம் பூசுதல் நெய்பவர், சிறைச்சாலை காப்பாளர், வருமான வரி கணக்கெடுப்பு, சுரங்கத்தில் வேலை, விளையாட்டு பொருட்கள் விற்பது, வானொலி விற்பது, சோப்பு தயாரித்தல், சிகரெட் தயாரித்தல்.

***நோய்கள்***

அல்சர், உடல் வலி, விஷக்கடி, அரிப்பு, பூழு, மூத்திரப்பளையில் கல் வீக்கம், கிட்னி பழுது, அதிக வெயிலினால் தாக்குதல். மூளை ஜீரம், வயிற்று வலி.

***குறிப்பிடும் நபர்கள்***

நகை வியாபாரி, வக்கீல், அறுவை சிகிச்சை மருத்துவர், விஞ்ஞானி, போலீஸ், கணக்காளர், கல்யாண தரகர், பெட்ரோல் விற்பவர், ஜோதிடர் வானொலி, தொலைக் காட்சி விற்பவர், சோப்பு வாசனை திரவியங்கள் விற்பவர், பெட்ரோல் விற்பது, கைரேகை நிபுணர், சிகரெட் விற்பவர்.

***செய்யத் தக்கவை***

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், மழித்தல், புது வீடு புகுதல், வீடு கட்டுதல்.

### பொருட்கள்

ஆடை ஆபரணங்கள்.

## சுவாதி

### குணங்கள்

பெண், ஜடபொருளாினது, கீழ் நோக்கு, தீர்க்கமான பார்வை, அசையும் தன்மையுடையது 1 நட்சத்திரம் கொண்டது, மிகவும் பொல்லாத தன்மையுடையது, அதிதேவதை வாயு.

### மனித உடல்

வயிற்று பகுதி, நெஞ்சு, மூத்திரப்பை, தோல், பல், குடல் பகுதி.

### நோய்கள்

வாயுத் தொல்லை, மூத்திரப்பையில் தொற்றுக் கிருமி, தோல் வியாதி குஷ்டரோகம், குடல் இறக்கம்.

### தொழில்கள்

மாடு மேய்ப்பது, குதிரை ஓட்டுவது, பொருட்காட்சி வைப்பது, எக்ஸ்ரே எடுப்பது கைவேலைப்பாடு செய்வது, சென்ட் தயாரிப்பது, பட்டு நூல் தயாரித்தல்.

### குறிப்பிடும் நபர்கள்

விவசாயி, பயணம் - போக்குவரத்து துறை, வியாபாரி, வாகன பகுதிகள் விற்பது, வாகனங்களை பழுது செய்பவர், சென்ட் விற்பவர், பட்டு துணிகள் விற்பவர், துணிகளை நெய்தல், சமையல்காரர், கீழ்தரமான எண்ணம் உடையவர்களின் சேர்க்கை கொண்டவர்கள்.

### செய்யத் தக்கவை

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், விவசாயம், அறுவடை செய்தல், தலை மழித்தல், வீடு கட்டுதல்.

*பொருட்கள்*

குதிரை. யானை.

**விசாகம்**

*குணங்கள்*

EUNUCH, OUTCAST, தெய்வீக தன்மை, கீழ்நோக்கு நட்சத்திரம், குருட்டு நட்சத்திரம், மென்மையும், கடின தன்மையும் கலந்தது, 4 நட்சத்திரங்களைக் கொண்டது, அக்னியும், இந்திரனும் அதிதேவதை நுழைவாயிலை போன்ற உருவ அமைப்பு.

*மனித உடல்*

கை, புஜங்கள், மார்பகங்கள், இடுப்புப் பகுதி, கண், குடல் பகுதி. மூத்திரப்பை, அடிவயிறு.

*நோய்கள்*

சார்க்கரை வியாதி, தோல் வியாதி, மூளை பாதிப்பு, கிட்னி சரீவர இயங்காமை, கருப்பையில் வியாதி, ஆண்குறியில் வீக்கம், மூக்கீல் இரத்தம், வீட்டு விலக்கு சரிவர இல்லாதிருத்தல், இரத்தக்கட்டி, இரத்தம் உறைதல், இரத்தத்தில் அதிக நீர், கர்ப்பப்பையில் கட்டி.

*தொழில்கள்*

எழுதுதல். ஆடுவது, பாடுவது, இயந்திரத்தை இயக்குதல், குதிரை ஓட்டுதல், சூதாட்டம், இரசாயண உற்பத்தி, பங்கு தரகு வியாபாரம், ஆயுர்வேத மருந்துகள் தயாரித்தல், அமைதிப்படையில் வேலை.

*குறிப்பிடும் நபர்கள்*

விவசாயி, குதிரை ஜாக்கி, ஆயுள் காப்பு ஏஜென்ட், குற்றவியல் வக்கீல், ஆயுர்வேத மருத்துவர்.

*பொருட்கள்*

ஆடை, ஆபரணங்கள், இரும்பு, கல்.

**அனுஷம்**

*குணங்கள்*

EUNCH, வேளாளர், ஆன்மீகம், முன்நோக்கு, மங்கிய பார்வை, மென்மையான, 3 நட்சத்திரங்கள் கொண்டது, அதிதேவதை சூரியன், அகலமான, தட்டையான முனைகளில் உருண்டை போன்ற வடிவத்தைக் கொண்டது.

*மனித உடல்*

இடுப்புப் பகுதி, மார்பகங்கள், வயிறு, கர்ப்பபை, நெஞ்சு,. மக்கு எலும்புகள், பிறப்புறுப்பு பகுதியின் அருகில் உள்ள எலும்புகள் ஆசனாவாய்.

*நோய்கள்*

மாதவிடாய் கோளாறுகள், மலச்சிக்கல், ஆசனவாயில் கட்டி, தொண்டையில் வலி, இடுப்பு எலும்பு, முறிவு ஜலதோஷம், மூக்கடைப்பு.

*குறிப்பிடும் நபர்கள்*

தைரியசாலிகள், நல்ல பழக்க வழக்கமுள்ள நண்பர்களை கொண்டவர், அமைச்சர்கள், பெரிய பொறுப்புள்ள பதவியில் இருக்கும் அரசாங்க அதிகாரிகள், பல் மருத்துவர்.

*தொழில்கள்*

வாத்தியங்கள் வாசிப்பது, சுரங்க வேலை, குற்றவியல் வக்கீல், அறுவை சிகிச்சை நிபுணர், ஹோமியோபதி மருத்துவம், மண்ணெண்ணெய் விற்பது, நிலக்கடலை வாங்கல், விற்றல், சிறைச் சாலையில் பணி, வாட்ச்மேன், தோல் பதனிடுதல்.

*செய்யத் தக்கவை*

கல்யாணம், புதுவீடு புகுதல், நவக்கிரஹ பூஜை. பூணூல் போடுதல், புதுவீடு கட்டுதல், விக்ரஹ பிரதிஷ்டை.

*பொருட்கள்*

கம்பளி, ஆடை, ஆபரணங்கள்.

**மூலம்**

*குணங்கள்*

EUNUCH, விவசாயி, பொருள், முன்நோக்கு மிதமான பார்வை, கடினத் தன்மையுடைய. 3 புட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை இந்திரன், காது வளையம் போல் உருவ அமைப்பைக் கொண்டது.

*மனித உடல்*

இடுப்புப் பகுதி, கழுத்து, கர்ப்பக் குழாய், ஆசனவாய், பிறப்புறுப்பு

*நோய்கள்*

மாதவிடாய் கோளாறு, மல நோய், கட்டி, கை தோள்பட்டை வலி, உடல் மெலிவு

*குறிப்பிடும் நபர்கள்*

அறுவை சிகிச்சை நிபுணர், பெருந்தன்மை உள்ளம் கொண்டவர்கள். திருடர்கள், தனிகட்சி புரிபவர்கள், தட்டெழுத்து நிபுணர்கள், இரசாயனப் பொறியாளர்கள்.

*தொழில்கள்*

விளம்பரம், கப்பல் தொழில், தொலைபேசி இணைப்பு, வயல் பண்படுத்துதல் ஆயுள் காப்பீடு பகுதி, புத்தகம், நாளோடு எழுதுதல்.

*செய்யத் தக்கவை*

மழித்தல், வணிகம், எழுதுதல், ஆடுதல் பாடுதல்

*பொருட்கள்*

ஆயுதங்கள், கல், இரும்பு

*இடங்கள்*

மின்சாரம் உருவாக்கம் பகுதிகள்.

**கேட்டை**

*குணங்கள்*

ஆண், கம்பீரம், கீழ்நோக்கு, பிடிவாதம், நல்ல தீர்க்கமான பார்வை ஆகியவை கொண்ட நட்சத்திரம், 11 நட்சத்திரங்கள் உடையது, அதிதேவதை இராட்சஷன், சிங்கத்தின் வால் போன்ற உருவம்.

*மனித உடல்*

இடுப்பின் கீழ் பகுதி, கால் பாதங்கள், இடுப்பிலிருந்கு பிரியும் நரம்புகள், தொடை எலும்பு.

*நோய்கள்*

மூடக்குவாதம், இடுப்புப் பகுதியில் வலி, இரப்பையில் தொந்தரவுகள்

*தொழில்கள்*

மருத்துவம், வணிகம், ஆடுதல், பாடுதல், பழ வியாபாரம், மாநகராட்சியில் தலைவராக பொறுப்பு, எழுதுதல், ஏற்றுமதி, குதிரை பந்தயம், விவசாயம்.

*குறிப்பிடும் நபர்கள்*

படித்தவர்கள், மளிகை சாமான் வியாபாரி, பழ வியாபாரி, மருத்துவர்,

வக்கீல், வெளிநாட்டு தூதுவர், சமூக சேவை செய்பவர், ஆசிரியர், கோவில் பூசாரி, சாஸ்திரிகள்.

*செய்யத் தக்கவை*

சண்டை, வன்முறை செயல்கள், கல்யாணம்,. தியானம் செய்தல்

*பொருட்கள்*

இரும்பு, கல், ஆயுதங்கள்

உத்திராடம்

*குணங்கள்*

ஆண், பிராமணர், கீழ்நோக்கு குருட்டு நட்சத்திரம், சேவை மனப்பான்மை, 4 நட்சத்திரங்கள் கொண்டது, தந்தத்தை போன்ற உருவ அமைப்பு.

*மனித உடல்*

ஆண் / பெண் குறி தொடை, முதுகு எலும்பு, நரம்புகள், இடுப்பு.

*நோய்கள்*

நீரிழிவு, வாதம், செரியாமை, நுரையீரல் புற்றுநோய், கடுமையான ஜலதோஷம், இரத்தசோகை.

*குறிப்பிடும் நபர்கள்*

மென்மையான உள்ளம் கொண்டவர்கள், உண்மையானவர்கள், பணக்காரர்கள், மீனவர்கள், வக்கீல், கணக்காளர், விமானத்தில் வேலை செய்பவர்கள்.

*தொழில்கள்*

பங்கு விற்பனை, இறைச்சி வியாபாரம், மேம்பாலம் கட்டுதல், கப்பல் ஓட்டுதல், அன்னிய செலாவணி மாற்றுதல், மணத்தை எண்ணி கணக் கெடுத்தல்.

*செய்யத் தக்கவை*

வன்முறை செயல்கள், தீயணைப்பு படை, விஷ மருந்துகள் தயாரித்தல் வாதாடுதல்.

*பொருட்கள்*

நெருப்பு, விஷம், ஆயுதங்கள்.

**பூராடம்**

*குணங்கள்*

ஆண், க்ஷத்திரிய, சேவை மனப்பான்மை, மேல் நோக்கு, மங்கிய பார்வை, அதிக பலமான, 4 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை விஸ்வதேவர். சமமான மேடை போன்ற உருவ அமைப்பு.

*மனித உடல்*

தொடை, மார்பு, முழங்கால், கண்

*குறிப்பிடும் நபர்கள்*

முதல் மந்திரி, குத்துச் சண்டை வீரர், நாட்டியக்காரர், சிறைச்சாலை அதிகாரி, வங்கியில் வேலை செய்பவர், பணத்தை வட்டிக்கு விடுபவர், அரசியலில் ஈடுபடுவர்கள், சுங்கத்துறையில் வேலை செய்பவர்கள்.

*தொழில்கள்*

குத்துச் சண்டை பயிற்சி, விவசாயம், வாணிகம், மருத்துவமனையில் வேலை, கப்பலில் வேலை, ஹோமியோபதி மருத்துவம், விஞ்ஞான ஆராய்ச்சி, வருமான துறை அதிகாரி, நிலக்கரி சுரங்கம்.

*நோய்கள்*

தோல் வியாதி, முழங்கால் வலி, குஷ்ட ரோகம், வாதம், வயிற்று உப்புசம், வயிற்று வலி, செரியாமை, நெஞ்சு வலி, சீரான இருதய துடிப்பு இல்லாமை.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, சல்யாணம், பதவி ஏற்றல், பூணூல் போடுதல், புதுவீடு புகுதல், வீடு கட்டுதல்

*பொருட்கள்*

ஆடை, இரும்பு, கால்

## திருவோணம்

*குணங்கள்*

ஆண், பொருள், மேல் நோக்கு தீர்க்கமான பார்வை. நகரக் கூடியது. 3 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை விஷ்ணு. குள்ளமான உருவத்தைக் கொண்டது.

*மனித உடல்*

வயிறு, காது முழுங்கால் கர்பப்பை, பிறப்புறுப்பு, தோல், இரத்த நாளங்கள்.

*நோய்கள்*

தோல் வியாதி, குஷ்டரோகம், யானைக்கால், காச நோய், வாதம், தீப்புண், செரியாமை.

*குறிப்பிடும் நபர்கள்*

தொழிலதிபர், உண்மை பேசுபவர்கள், கடவுளிடம் சிறந்த பக்தி கொண்ட பக்திமான், நேர்மையானவர்கள்.

*தொழில்கள்*

எரிபொருள் விற்பனை, சமையல் வாயு, மண்ணெண்ணெய் விற்பனை, விவசாயம், சிறந்த பெரிய பதவி வகுத்தல், மந்திரி, சுரங்க வேலை, மின்சார பொருள் விற்பனை, குறையில் வேலை, குழாய் பழுது பார்த்தல்.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், மழித்தல், புது வீடு புகுதல், பழைய வீடுகளை பழுது பார்த்தல்.

*பொருட்கள்*

வாகனங்கள்.

## அவிட்டம்

*குணங்கள்*

ஆண், விவசாயி, ஆன்மீகம், மேல்நோக்கு, குருட்டு, நகரக் கூடிய, 4 நட்சத்திரங்களைக் கொண்டது. அதிதேவதை வசு. மிருதங்கத்தை போன்ற உருவ அமைப்பு.

*மனித உடல்*

முழங்கால் எலும்பு, கணைக்கால், தொடை, ஆசனவாய், இடுப்புமையம்.

*நோய்கள்*

மலேரியா, யானைக்கால், வறட்டு இருமல், இவ்வாமை, மூச்சு இறைப்பு, காலில் அடி, தீப புண் மயக்கம், அதிக இரத்த அழுத்தம், இருதயம் இயங்காமை, இரத்த சூடு, கால் எலும்பு முறிவு.

*குறிப்பிடும் நபர்கள்*

ஆண்மை குறைவு, மலடி, பெண்களை வெறுப்பவர், செல்வந்தர், திருப்பதி பெருமாளை வணங்குபவர். சேவை மனப்பான்மை உள்ளவர், ஹோமியோபதி, ஆயுர்வேத மருத்துவர், சிறைச்சாலை பாதுக்காப்பாளர்.

*தொழில்கள்*

சுரங்க மேற்பார்வை மறுவாழ்வு மையம், உலோகத் தகடு செய்தல், அறுவை சிகிச்சை போலிஸ், தோல் பதனிடுதல், புத்தக வெளியீடு அச்சகம், விவசாயம், ரேஷன் ஆபிஸில் வேலை, மின்சாரத் துறை..

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, தலை மழித்தல், பூணூல் போடுதல், மருந்து எடுத்துக்கொள்ளுதல், புதுவீடு கட்டுதல்.

*பொருட்கள்*

நகைகள், ஆடைகள், இரும்பு ஆயுதங்கள்.

**பூரட்டாதி**

*குணங்கள்*

ஆண், பிராமண, பொருள், மேல் நோக்கு மிதமான பார்வை. 2 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை சூரியன். உயரமான சமமான மேடையை போன்ற உருவம்.

*மனித உடல்*

கால், குதிகால், ஆசனவாய், இடது தொடை, கால் விரல். குடல்

*நோய்கள்*

பற்சிதைவு, கால் வீக்கம், மஞ்சட் காமாலை, பெருங்குடலில் நோய், வயிற்றில் கட்டி, குறைந்த இரத்த அழுத்தம், இதயம் சரிவர இயங்காமை.

*குறிப்பிடும் நபர்கள்*

திருடர்கள், குத்துச்சண்டை வீரர்கள், புள்ளி விவரம் எடுப்பது, ஆசிரியர், வாணியல் ஆராய்ச்சி, கடல் தாண்டி வங்கியில் வேலை, மாநகராட்சியில் பெரும் பதவியில் இருப்பவர். பிறப்பு - இறப்பு கணக்கெடுப்பவர். மந்திரி, நீதி துறையில் வேலை செய்பவர்கள், வக்கீல், அறுவை சிகிச்சை மருத்துவர், கோவில் பூசாரி.

*தொழில்கள்*

வெளிநாட்டு பயணம், அந்நிய செலாவணி, பூஜை செய்வது, அரசியல், ஆசிரியர் மருத்துவம், ஆராய்ச்சி, வக்கீல், வங்கி மேலாளர்.

*செய்யத் தக்கவை*

வன்முறையில் ஈடுபாடு, விஷம் கொடுத்தல், ஆயுதம் தயாரித்தல், மாமிசம் விற்பது.

*பொருட்கள்*

விஷம், நெருப்பு, ஆயுதம்

**இடங்கள்**

கோவில்.

**சதயம்**

*குணங்கள்*

ஆண், ஆன்மீகம், மேல்நோக்கு, மங்கிய பார்வை, நகரக் கூடிய வெறுக்கத் தக்க கொடூரமான 100 நட்சத்திரங்கள் கொண்டது. அதிதேவதை வருணன், உருண்டையான வடிவத்தைக் கொண்டது.

*மனித உடல்*

முழங்கால், கணுக்கால், தாடைப்பகுதி, தொடை

*நோய்கள்*

உணர்ச்சி வசப்படுதலால் இதய தாக்குதல், அதிக இரத்த அழுத்தம் பக்கவாதம், குஷ்ட ரோகம், குடல் புழு, மலர்ச்சிக்கல், சீரான இதய துடிப்பு இல்லாமை, உடலில், ஏதேனும் ஒரு பகுதியில் அறுவை சிகிச்சை, நினைவு தப்புதல்.

*குறிப்பிடும் நபர்கள்*

பன்றி வளர்ப்பவர்கள், மதுவகைகளை விற்பவர்கள், வானியல் ஆராய்ச்சி, விஞ்ஞானி பறவைகளை வேட்டையாடுபவர்கள், மீனவர், வண்ணான் தொழில் செய்பவர், ஏமாற்றுபவர்கள், ஜோதிடர்கள், சிறைச்சாலை காப்பாளர்கள்.

*தொழில்கள்*

பழைய ஏடுகளை புதுப்பித்தல், விமானப்பயணம், வேட்டையாடுதல். புத்தகங்களை எழுதுதல், ரேஷன் அலுவலகத்தில் வேலை.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை., புதுவீடு கட்டுதல், பூணூல் போடுதல். குதிரை ஓட்டுதல்; மழித்தல்.

*பொருட்கள்*

தண்ணீரில் வாழும் பிராணிகள், தண்ணீரில் மிதப்பவை. கம்பளி, பட்டு துணிகள்.

**உத்திரட்டாதி**

*குணங்கள்*

ஆண், க்ஷத்ரிய, மேல் நோக்கு, நல்ல துர்க்கமான பார்வை, நிலையான, பலம் பொருந்திய 5 நட்சத்திரங்கள் கூடிய இரட்டையர் போன்ற உருவ அமைப்பு.

*மனித உடல்*

குதிக்கால்கால், கணுக்கால்.

*நோய்கள்*

குடல் இறக்கம், வாதம், செரியமை, மலச்சிக்கல், கால் எலும்பு முறிவு, நுரையீரல் சளி.

*குறிப்பிடும் நபர்கள்*

ஆட்சி புரிபவர், பலியிடுபவர், செல்வந்தர், பிராமணர். பிறர்க்கு உதவி செய்பவர், தவம் புரிபவர், சிறைச்சாலையில் வேலை, மருத்துவர், மீனவர் பொரியாளர்.

*தொழில்கள்*

ஏற்றுமதி - இறக்குமதி, புகலிடத்தில் வேலை, உளவு அறியும் தொழில், குடை தயாரித்தல், வாய்க்கால் கட்டுதல், தொழிற்சாலையில் வேலை, பொறியியல் துறை, ஆடுபவர், சுரங்கத்தில் வேலை.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல், புதுமனை புகுதல், வீடு கட்டுதல், கல்யாணம்.

*பொருட்கள்*

துணி, இரும்பு, கல், பாலால் செய்யப்பட்ட பண்டங்கள்.

*இடங்கள்*

முதியோர் இல்லம், சுற்றுலா மையம், சிறைச்சாலை, கோவில்கள், இரும்பு உருக்காலை.

*மிருகம்*

குதிரை, யானை

**ரேவதி**

*குணங்கள்*

ஆண், வேளாளர், குருட்டு, முன்நோக்கு, பணிவான, மிருதுவான, 32 நட்சத்திரங்கள் கொண்ட அதிதேவதை பூஷா மிருதங்கத்தை போன்ற உருவ அமைப்பு.

*மனித உடல்*

வயிறுக் குழி, கால், கணுக்கால், விரல்கள்

*நோய்கள்*

குடல் புண், குடலிறக்கம், காலில் நோய், செவிட்டுதனம், காதில் சீழ்,

*குறிப்பிடும் நபர்கள்*

உண்மையுள்ள, இரக்கமுள்ள, மேதைகள், சுறுசுறுப்பானவர், கோவில் பூசாரி. கணித மேதை ஜோதிடர், கணக்காளர்.

*தொழில்கள்*

படகோட்டி, வாசனை திரவியங்கள் தயாரித்தல் அல்லது விற்பது பங்கு தரகு நிர்வாகம், பொறியியல் துறை, புத்தக வெளியீடு. ஆசிரியர், அரசியல் வாதி, வெளிநாட்டு தூதுவர். குமாஸ்தா. தொலைபேசி துறை, ஜோதிடம், செய்திகள் எழுதுதல், கணக்கு, வானொலியில் விளம்பரங்கள் தருவது.

*செய்யத் தக்கவை*

விக்ரஹ பிரதிஷ்டை, பூணூல் போடுதல் தலை மழித்தல், புதுவீடு புகுதல், போதை மருந்துக்கு அடிமையாதல்.

*மிருகங்கள்*

நீரில் வாழும் பிராணிகள்

*பொருட்கள்*

உப்பு, முத்து, ஆடை, ஆபரணங்கள், விலை மிகுந்த கற்கள், வாசனை திரவியங்கள்.

*இடங்கள்*

பங்கு மார்கெட், இராசாயண இயந்திரங்கள், பல்கலைகழங்கள், வெளிநாட்டு தூதுவரகம்.

# பாகம் 2

# நட்சத்திரங்களைப் பற்றிய

## பிற செய்திகள்

### நட்சத்திரங்களை பற்றிய பிறசெய்திகள்

*"ஸ்ரீ தத்வ நிதி" யில் உள்ளிட்ட*

***நட்சத்திர சூடாமணியில் சொல்லிய நட்சத்திர பலன்கள்***

**அசுவனி**

அசுவதீ நட்சத்திரத்தில் யானை குதிரைகளைப் பிடித்துக் கட்டுவது ரதங்கள், யாத்திரை, செய்வதற்கான வாஹனங்கள் தேவதைகள், இவைகளை பிரதிஷ்டை செய்வது. யாத்திரை செய்வது, பட்டாபிஷேகம் செய்வது, வேள்வி செய்வதற்தற்காக தீக்ஷை செய்து கொள்ளுவது, குடுமி வைப்பது. உபநயனம் செய்வது, சாந்திகரமான காரியங்களைச் செய்வது ஆகிய காரியங்களைச் செய்கின்றார்கள்.

அசுவதீ நட்சத்திரங்கள் 3 நட்சத்திரங்களாம். இவைகள் குதிரையின் முகத்தைப் போன்றிருப்பவைகளாம், சு, சே, சோ, லா, இந்த எழுத்துக்கள் 'அசுவதீ நட்சத்திரத்தின் எழுத்தக்களாம்,. கருப்பு நிறம் 3 நட்சத்திரங்கள்,. குதிரையின் முகத்தை போன்ற உருவமுடையது. நகரம் இருப்பிடம். புருஷனாம். தேவகணம்,. திர்யக் முகம், குறுக்கான முகம், பார்வை குறைவு, வேகமாகச் செல்லக் கூடியது. அல்லது துரிதகதியுடையதும் வெளியிலிருப்பதுமாகும். விஷமுட்டி மரம், பேருண்டம் பக்ஷி, வைசிய ஜாதி 4 கால்களுடையது,. அசுவயோநி, அசுவநீ தேவர்கள் தேவைகள், அகாராக்ஷரம் ஸ்வரமாம். இந்த நட்சத்திரத்தில் அசுவத்தாமா பிறந்தார். 50 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷ நாடியாம்,. உளுந்து உருண்டையைத் தின்றுவிட்டு வடகிழக்கில் பிராயணம் செய்ய சுபகரமாகும்.

இந்த நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால் 9 நாள் அரிஷ்டமாம்., அதன் தோஷத்தை விலக்குவதற்கு. அச்விநீ தேவதைகளைப் பூஜிக்க வேண்டும். வெளுப்பு வஸ்திரம். சந்தனம், நீலோத்பல புஷ்பம், குங்கிலியம், தூபம் பாலும் சோறும் நைவேத்தியம், ''தேவஸ்யத்வா'' என்னும் மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து, பால் ஸமித்து, நெய் இவைகளினாலே, காயத்திரியினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம், (புஷ்பங்களுடன் வெல்லம் கலந்த மாஷாந்நத்தை / மாஷம் - உளுந்து) வடக்கு திக்கில் பலிஹரணம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்தால் 9 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில், முதல் முதல் ரஜஸ்வலையாகும் கன்னிகை (ரஸ்வில - புஷ்பவதீ) புத்திரபாக்கிய முடையவள் ஆவாள்.

இந்த நட்சத்திரத்தில் விதை, விதைத்தல் குதிரை வாங்குவது ஆடைகளணிவது, ஆபரணங்கள் அணிவது, காது குத்துவது, குடுமிவைப்பது, உபநயனம் செய்வது, மருந்து செய்வது, உண்பது. யுத்தம் செய்வது அல்லது துவக்குவது இவைகள் சிறந்த பலனையளிப்பவைகளாம்.

***இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் குணங்கள்***

நீண்ட ஆயுளையுடையவனாவான். பருத்த சரீரம் உடையவனாவான்,. விசாலமான கண்கள், மனோஹரமான சிறந்த அழகு இவைகளை யுடையவனாவான். அரசனாலே பூஜிக்கப்படுவான், நீண்ட முகமுடையவனாவான். மிகவும் கூர்மையான அல்லது கொடூரமான மனதுடையவனாவான். அலங்காரம் செய்து கொள்ளுவதில் பிரியமுடையவனாவான். அயோக்கியர்களைத் தோழர்களாகக் கொண்டவனாவான். பிடிவாத முடையவனாவான். ஆசை உடையவனாவான். லோபியாவான். போகத்தில் ஆசையுடையவனாவான் காரியங்களை நிலைத்திருக்குப்படி துவக்குகின்றவனாவான். இடுப்பில் மச்சமுடையவனாவான். சோம்பேறித்தனம் உடையவனாவான். 86 வயது ஜீவீத்திருப்பவனாவான். இவை முதலானவைகளை, ஜீயோதிஷ கிரந்தங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பரணி**

யுத்தத்தில் எதிரியைத் தாக்குவது, வதை செய்வது பந்தனம் (கைது) செய்வது, அல்லது விலக்கிடுவது, விஷம் அக்னி, ஆயுதங்கள் ஸ்ம்பந்தமான காரியங்களைச் செய்வது, பேதகரமான காரியங்களைச் செய்வது, முற்றுகையாலே பயத்தையுண்டு பண்ணுவது, சண்டையிடுவது, அல்லது பிடுவாதமாக இருப்பது, திருடுவது, சூதாடுவது, ஆபிசாரங்கள் செய்வது, மந்திரங்கள் செய்வது, குகையில் பிரவேசிப்பது. கன்னிகை ஸ்ம்பந்தமான காரியங்களைச் செய்வது, இவைகள் பரணி நட்சத்திரத்தில் ஸித்தியைக் கொடுப்பவைகளாம்.

பரணியானது 3 நட்சத்திரங்களைக் கொண்டு யோநி வடிவமாக இருப்பதாகும். லீ, லு, லே, லோ இந்த எழுத்துக்கள் பரணியைக் குறிப்பவைகளாகம். வெளுப்பு நிறம். 3 நட்சத்திரங்களுடையது. முக்கோண வடிவமானது. வைசியஜாதி, ஸ்திரீ ஜாதி, மனிதகணம். அதோமுக (கீழ்நோக்கான) நட்சத்திரம். மங்கலான பார்வையுடையது. கிராமம் இருப்பிடம். உக்கிரமான நட்சத்திரம். 4 கால்களுடையது. அக்கிநி மண்டலத்தைப் போன்றது. நெல்லிமரமாம். காக்கை பக்ஷியாகும். யோதி யானையாகும். யமன் தேவதையாவார். யகாரம் உகாரங்கள் அக்ஷர ஸ்வரங்களாம். இந்த நட்சத்திரத்தில் துரியோதனன் பிறந்தான். 24 நாழிகைகளுக்குப் பிறகு 4 நாழிகைகள் விஷநாடி காலமாகும். யாத்திரை (பிரயாணம்) செய்யலாகாது அல்லது (அவசியமாக நேர்ந்தால் அப்பொழுது) 7 நாழிகைக்குப் பிறகு எள்ளும், அரிசியும் கலந்து தின்றுவிட்டு. வடகிழக்கில் பிராயணம் செய்வது சுபகரமாகும். இந்த நட்சத்திரத்தில் ஜீவரம், வந்தால் அது பிராண பயத்தையுண்டு பண்ணும். 4வது பாதத்தில் வந்தால், மரணத்தையளிக்கும். 3வது பாதத்தில் வந்தால் 2 நாட்கள் துன்பத்தை யளிக்கும். அல்லது 11 தினங்கள் அரிஷ்டத்தையளிக்கும். அதை சமனம் செய்வதற்கு, யமதேவதையை பூஜை செய்ய வேண்டும். அதற்கு நீல வஸ்திரம், செவ்வரளிப்பூ, கருங்காலிச் சந்தனம் மஹிஷாக்ஷ (குங்கிலியம்) தூபம், சர்க்கரைப் பொங்கல் நிவேதனம், இவைகளுடன் பூஜை செய்ய வேண்டும். .'யமாய ஹோமம்'' என்ற மந்திரத்தினாலே ஷோடச உபசார பூஜை செய்து, எள்ளு, நெய் அல்லது எள்ளுடன் கூடிய நெய்யினாலே, காயத்ரியினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம்,

புஷ்பங்களுடன் வெல்லமும் எள்ளும் கலந்த அன்னத்தை தெற்கு திக்கிலாவது வடக்கு திக்கிலாவது பலி கொடுக்க வேண்டும். (இவ்விதம் செய்வதால்) 11 நாளில் சௌக்யமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலில் பூஷ்பவதியாகின்றவள் விதவையாவாள் (கணவனை இழப்பாள்). இந்த நட்சத்திரத்தில் உக்கிரமான காரியங்களைச் செய்வது சிறந்ததாம். (புகழ்ச்சிக் குறியதாம்).

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் குணங்கள்*

சிற்றின்பத்தில் ஆசையுடையவனாவான். பிள்ளைகள் (குழந்தைகள் உடையவனாவான். சாஸ்திரங்களை அறிந்தவனாவான். அழகான முகமுடையவனாவான். வசீகரமுடையவனாவான். நீண்ட ஆயுளையுடையவனாவான். உண்மை பேசுகின்றவனாவான். நல்ல ஆகாரத்தை புஜிப்பவனாவான். ஸ்தீரிகளிடத்தில் பிரீதியுடையவன் ஆவான். கடுமையான தூக்கமுடையவனாவான். சிவந்த கண்களையுடையவனாவான். சிவந்த மயிருடையவனாவான். போகங்களை அனுபவிக்கக் கூடிய சரீரத்தை யுடையவன். ஆவான். தொப்புளில் எள்ளைப் போன்ற மச்சமுடையவன் ஆவான். 86 வயது பரமாயுள்னாகும்.

**கிருத்திகை**

**ஆ**தாரம் (அக்கிநி காரியங்களைச் செய்வதற்காக அக்கிநி காரியத்தைத் துவக்குவது) ஹோமம் செய்வது, யாகத்திற்காக தீக்ஷை செய்து கொள்ளுவது, அக்கிநியைப் பூஜிப்பது, தாயங்கள் (தானங்கள் செய்வது) ஸ்வர்ணம் முதலிய தாதுக்களாலே செய்யத்தக்க ஆபரணங்களைச் செய்வது. அக்கினியில் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்வது, முதலிய காரியங்களை கார்த்திகை நட்சத்திரத்தில் செய்தால் ஸித்திக்கும்.

கிருத்திகை 6 நட்சத்திரங்களைக் கொண்டது. கத்தியை போன்ற வடிவமுடையது. அ, ஆ, ஊ, எ இவைகள் கிருத்திகா நட்சத்திரத்திற்குரிய அக்ஷரங்களாம். சிவப்பு நிறம். 6 நட்சத்திரங்கள். கத்தியைப் போன்ற வடிவம் உடையது. இது ஸ்தீரீ நட்சத்திரமாகும். ராக்ஷஸ கணம் ஆட்டு

யோனி, பிராம்ஹண ஜாதி 3 கால்களுடையது,. அக்கினி. தேவதையாவார். கீழ் நோக்கு நட்சத்திரம், நல்ல கண்ணுடையது,. ஸாதாரணமானது, சமமான நட்சத்திரம் அந்தம் (முடிவு) இருப்பிடம் சூனிய பிரதேசம். அக்கினி மண்டலம். அத்தி மரம், மயில் பக்ஷி, ஞகாரமும் டகாரமும் அக்ஷஸ்வரமாம். 30 நாழிகைகளுக்குப் பிறகு 4 நாழிகை காலம் விஷநாடியம். இதில் பிரயாணம் செய்யக் கூடாது (அவசியமானால்) 19 நாழிகைக்குமேல் தயிரை உண்டு விட்டு வடகிழக்கில் அல்லது வடக்கிலும் கிழக்கிலும் பிராயணம் செய்ய நன்மையுண்டாம்,. இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராண பயத்தையுண்டு பண்ணும். அல்லது 9 நாட்கள் கெடுதி செய்யும். அதற்குப் பரிஹாரம்,. அக்நியை பூஜிக்கவேண்டும். அதற்கு சிவப்பு வஸ்திரம். செஞ்சந்தனம், செவ்வரளிப்பூ. நெய்யும் குங்குலியமும். அல்லது நெய்கலந்த குங்கிலியம் தூபம், நெய்யுடம் அன்னம் நிவேதநம் (இவைகளை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும்) "அக்நீ நாக்நிஸ்ஸளதித்யதே" "அக்நயே ஸமித மாஹார்ஷம்" என்னும் மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து நெய், தேன் இவைகளினாலே, காய்த்திரியினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும்.

இந்த நட்சத்திரத்தில் குரூரமான காரியங்களைச் செய்வது சிறந்த தாகும். இதில் நோய்கண்டால் 9 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவதாக புஷ்பவதியான பெண் ஏழ்மையை அடைவாள்.

### இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்

தேஜஸ் உடையவனாவான். சிறந்த அறிவு படைத்தவனாவான். பிரஸ்த்னதியுடையவனாவான். அதிகமாகப் புஜிப்பவனாவான். ஸ்தீரிகளிடத்தில் ஆசையுடையவன் ஆவான். பெரும் புகழுடையவனாவான். அல்லது பிறர் கண்டு அஞ்சக்கூடிய தன்மையையுடையவனாவான். தான் ஸம்பாதித்துச் சேர்த்த செல்வமுடையவனாவான். துக்கத்தையடைகின்றவனாவான் வெளுப்பு மயிருடையவனாவான். 86 வயது பரமாயுஸ் ஆகும். இது முதலிய பலன்களை இதர நூலில் கண்டு கொள்ள வேண்டும்.

*இதில் செய்யத்தக்கவை*

பட்டாபிஷேகம், கிருஹப்பிரவேசம், மாடிக்கட்டிடத்தில் பிரவேசம், பட்டணப் பிரவேசம், ஹோமம் முதலிய சாந்திகமான காரியங்கள். விவாஹம், விவாஹவிதி (விவாஹம் செய்தல்) நெல் பயிரிடுதல், கரும்பு பயிரிடுதல், மரங்கள் நடுவது, விரதத்திற்கு ரக்ஷாபந்தனம் செய்து கொள்வது, வாஹநங்கள் ஸ்ம்பந்தமான காரியங்கள்,. புதிதான ஆடை ஆபரணங்கள் பூஷணங்கள் ஸம்பந்தமான காரியங்கள். இவைகளை ரோஹிணி நட்சத்திரத்தில் செய்வதாகும்.

**ரோகிணி**

ரோகிணியானது, வண்டியைப் போலிருப்பதாகும். 5 நட்சத்திரங்களுடையது. ஊ. வா வீ, ஆ இந்த எழுத்துக்கள் ரோகிணி நட்சத்திர எழுத்துக்களாம். கருப்பு நிறம் 5 நட்சத்திரங்கள். வண்டியைப் போன்ற உருவமுடையது. புருஷ நட்சத்திரம். மனித கணம். ஸர்ப்ப யோநி, பிரஹ்ம தேவர் தேவதை. வேளாள ஜாதி,. 4 கால்களுடையது. மேல் நோக்கு நட்சத்திரம். பொட்டைக் கண். ஸ்திர நட்சத்திரம். மத்திய தாரை. பட்டணம் இருப்பிடம். இந்திர மண்டலம். நாவல் மரம். கோழி பக்ஷி உகாரம் ருகாரம் இவைகள் எழுத்துக்கள்.

இந்த நட்சத்திரத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானும்,. பீமஸேநனும் பிறந்தார்கள். 40 நாழிகைகளுக்கு மேல் 4 நாழிகை விஷ நாடியாகும். நெய் கலந்த பாயஸத்தை உண்டு வடகிழக்கில் பிரயாணம் செய்ய க்ஷேமமுண்டாகும். இந்த நட்சத்திரத்தில் ஜுவரம் வந்தால், 7 நாட்கள் அரிஷ்ட காலமாகும். அதன் பரிகாரத்திற்கு பிரஹ்மாவை பூஜிக்க வேண்டும். அதற்கு கருப்பு வஸ்திரம். கஸ்தூரி அல்லது கஸ்தூரி கலந்த சந்தனம், செங்கமுனீர்ப்பூ குங்கிலிய தூபம்,. க்ஷீராந்தம் (பால் கலந்த அல்லது பாலில் பக்குவம் செய்த சோறு) நைவேத்தியம் "நமோ பிரஹ்மணே" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து. நெய் கலந்த ஸப்த ( 7 ) தாநியங்களினாலே காய்த்திரியினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும் சந்தனம் புஷ்பங்களுடன். பால் கலந்த அன்னத்தை. கிழக்கு திக்கில் பலி கொடுக்க வேண்டும்.

இந்த நட்சத்திரத்தில் முதல் புஷ்பவதியாக ஆகின்றவள், கணவனின் அன்பிற்குரியவளாகவும் புத்திரபாக்கிய முடையவளாகவும் இருப்பாள்.

இந்த நட்சத்திரத்தில், புஷ்பவதியாவது, ஸீமந்தம் பும்ஸவநம், சௌளம் உபநயனம், வேதசாஸ்திர அப்பியாஸம் ஸமாவர்த்தநம் (வேதவிரதஸமாப்தி) விவாஹம் எண்ணைதேய்த்துக் கொள்ளுதல், புதிய ஆபரணமனிதல் ராஜாபிஷேகம் (பட்டாபிஷேகம்) ஸிம்ஹாஸநமேருதல், ஊஞ்சலேருதல், புதிதான வீடு, நகரம், கிராமம் இவைகளைக் கொள்ளுதல், இவைகளில் பிரவேசம் செய்வது கிருஹப் பிரவேசம், தேவதர பிரதிஷ்டை கிரய விக்கிரயம், கேள்வி அத்தியயநம் (வித்தை கற்பது) ஹோமம், சாந்திகமான, காரியம், புஷ்புகரமான காரியம், தனம், தானியம் சேகரித்தல், தடாகம் (குளம் முதலிய ஜலாசயம்) வெட்டுதல் முதலான சுபகரபான காரியங்களைச் செய்வது சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவன். சிறந்த அழகுடையவனாவான் ஸாமர்த்தியமுடையவனாவான். நுட்பமான புத்தியுடையவனாவான். தானியங்களுடையவனாவான். பல விதமான ஆடைகளையணிந்து கொள்ளுவதில் பிரியமுடையவனாவான். நேத்திரரோகமுடையவனாவான். சிறிது வருந்தத்தக்கவனாவான். பீநஸரோகமுடையனாவான். கால், கை. தோள், நெற்றி, இவைகளை குறைந்திருப்பவனாவான். தனது மாமனுக்குப் பகைவனாவான். 88 வயது பரமாயுளையுடையவனாவான்.

மிருகசீர்ஷ நட்சத்திரத்துடம் கூடிய தினத்தில், மங்களகரமான காரியங்கள், விரதம், ஹோமம் தானம் தபஸ்ஸீயஜ்ஞ ஸாதனம், பயிரிடுதலின் துவக்கம், வாணிபம், கிருஹப்பிரவேசம், யாத்திரை, க்ஷௌரம், மனைவியுடன் கூடுதல் சாந்திகரமான ஸ்நானம் அல்லது சாந்திகரமான காரியம் ஸ்நானம், அரசனுடைய பட்டாபிஷேகம் நியமங்கள் விரதாதிகள் - தேவதைகள், அக்னி, பிதிருக்களை பூஜித்தில், சாந்திகரமான காரியம், முதலான காரியங்களைச் செய்வது சுபகரமாகும்.

**மிருகசீரிஷம்**

மிருகசீர்ஷ நட்சத்திரம் 3 நட்சத்திரங்களின் வடிவமுடையதாகும். மான் தலையைப் போன்ற வடிவம் உடையதாகும். வே, வோ, கா, கீ, இந்த எழுத்துக்கள் மிருகசீர்ஷ நட்சத்திரத்துக்குறிய எழுத்துக்களாம். வெளுப்பு நிறம். 3 நட்சத்திரங்களைக் கொண்டது. மானின் தலையைப் போன்ற வடிவமுடையது. **அலி நட்சத்திரம். தேவகணம். திர்யக் முகம் (மக்கள்** நீங்கிய ஜாதியின் அதாவது மிருகத்தின் முகம்) ஸர்ப்பயோநி,. சந்திரன் தேவதையாவார். உபஜீவ ஜாதி (முக்கியமல்லாத அல்லது மக்களல்லாத ஜாதி) 2 காலுடையது. மங்கிய அல்லது மெள்ளப் பார்க்கும் சக்தியுள்ள கண். மிருதுவானது (மந்த ஸ்வபாவ முடையது) ஸம நட்சத்திரமாம் இருப்பிடம் நகரம். வாயு மண்டலம். கருங்காலி மரம். கோழி பக்ஷி ருகார அக்ஷரம் ஸ்வரம். ஜீவனற்ற ஜாதி. இந்த நட்த்திரத்தில் புருஷ மிருகமானது ஜனித்தது. 18 நாழிகைக்கு மேல் 4 நாழிகை விஷ நாடியாகும். மானுடைய மாமிஸத்தைப் புசித்து கிழக்கு வடக்கு திக்கில். பிரயாணம் செய்ய மங்கள முண்டாகும்.

இந்த நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால் பிராணபயமாம். அல்லது ஒரு காலம் துன்பத்தைத் தரும். அதற்குப் பரிஹாரத்திற்காக சந்திரதேவதையைப் பூஜிக்க வேண்டும்.

அதற்கு வெளுப்பு வஸ்திரம். வெண் சந்தனம். முல்லைப் பூ, குங்கிலிய தூபம், பரமாந்நம் (பாயஸம்) நைவேத்யம். ஸம்பாதித்திக் கொள்ள வேண்டும். "நவோ நவோ" என்ற மந்திரத்தினாலே சோட சோபசார பூஜை செய்து பாலுடன் நெய்யைக் கலந்து அதனாலே காய்த்திரியினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம், புஷ்பங்களுடன் பால் கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். ஒரு மாத காலத்தில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதல் புஷ்பவதியாகின்றவள் பிள்ளைக் குழந்தைகளைப் பெறுவாள்,

இந்த நட்சத்திரத்தில், பும்ஸவநம், ஜாத கர்மா, நாம கரணம், அன்னப்பிராசதம், சௌளம். உபநயனம். அக்ஷராம்பம் (பும்ஸவனம்) பிள்ளை பிறப்பதற்காகச் செய்யும் ஸ்ம்ஸ்காரம் இதனை மூக்குப் பிழிதல் என்று கூறுவார்கள். ஜாதகர்மா குழந்தை பிறந்தவுடன் அந்தக் குழந்தை களுக்குச் செய்யப்படும் ஸம்ஸ்காரம். நாமகரணம் - பெயர் வைப்பது அன்னப்பிராசனம் - அன்னம் கொடுப்பது. சௌளம் - குடுமிவைப்பது. உபநயனம் - பூநூல் போடுவது. அக்ஷராரம்பம் - எழுத்துக்களைக் கற்பிப்பது) வேதங்களைக் கற்பது.. சாஸ்திரங்களைக் கற்பது. ஸமாவர்தநம் (வேத வீரத தீக்ஷையை முடித்துக் கொள்ளுவது) தைலங்கள், தேய்த்துக் கொள்ளுவது, புதிய ஆபரணங்கள் வஸ்திரங்களை தரிப்பது. வீடு கட்டத் துவக்குவது, கிராம பிரவேசம், பட்டண பிரவேசம் கிருஹப்பிரவேசங்கள், பயிரிடுதல், விதை விதைத்தல் மருந்துண்பது, முதலான சுபகாரியங்களைச் செய்வது சிறந்ததாகும். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்.

எப்பொழுதும் உத்ஸாஹமுடையவனாவான். பாபச் செயலில் பயமுடையவன். தாய், தகப்பனிடத்தில் பக்தியுடையவன். தரன் விருப்பம் போல் நடப்பவன்,. நீண்ட ஆயுளுடையவன். வணக்கம் நிறைந்தவன். பருத்த மார்புடையவன். அழகான முகமுடையவன். மெதுவாக அல்லது நயமாகப் பேசுகின்றவன். சிறந்த அறிவு படைத்தவன். அதிகக் கொடுமை யுடையவன். நீண்ட கைகளுடையவன்,. ஒரே தடவையில் கிரஹிப்பவன், தர்மத்தில் ஆசையுடையவன். 84 வயது பரமாயுளாம்.

### திருவாதிரை

திருவாதிரை நட்சத்திரத்தில், பகைவர்களைக் கொல்லுவது காட்டுத் தீயினாலே பொசுக்குவது. மிகக் கொடியே துஷடனை நன்கு சிக்ஷப்பது, அஸ்திரம் சஸ்திரங்களை கிரஹிப்பது, திருடச் சொல்லுவது, தூதன் வந்திருப்பதை வெளியிடுவது அல்லது தூதனுடைய வருகை, பூட்டியிருக்கும் கதவைத் திறப்பது, பலி கொடுப்பது, முதலான கொடிய கரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

திருவாதிரை நட்சத்திரமானது தளிரைப் போன்ற நிறமுடைய ஒரே நட்சத்திரமாகும். கூ, கம் ங, ச இந்த எழுத்துக்கள் திருவாதிரை நட்சத்திற்குரியவைளாகும்.

இந்த நட்சத்திரமானது சிவப்பு நிறமானது., ஒரே நட்சத்திரம் ஸ்ரிரீ நட்சத்திரம்,. மனித கணம் நாய் யோநி 4 கால்களுடையது,. உக்கிர நட்சத்திரம்,. மேனோக்கு நட்சத்திரம். நடுத்தரமான கண் க்ஷத்திரிய ஜாதி சூனியமான இடம். வருணமண்டலம்,. ருத்தின் தேவதையாவார். சிவப்புக் கருங்காலி மரம் கிரௌஞ்சம் பகஷி (கிரௌஞ்சம் கொக்கு அல்லது காடை) ஏகார அக்ஷரம் ஸ்வரம். 21 நாழிகைக்குமேல் 4 நாழிகை காலம் விஷ நாடியாகும். யாத்திரை செய்யக் கூடாது. அல்து 14 நாழிகைகளுக்குப் பிறகு மானுடைய ரத்தத்தைக் குடித்துவிட்டு, கிழக்கு, வடக்கு திசையில் பிராயணம் செய்ய சௌக்கியமுண்டாகம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராணபயம் உண்டாகும். அல்லது ஒரு மாத காலம் அரிஷ்டமாகும் அந்த தோஷத்தை பரிஹாரம் செய்வதற்கு ருத்திர தேவதையை பூஜை செய்ய வேண்டும். இதற்கு வெளுப்பு வஸ்திரம். வெள்ளைச் சந்தனம். ஊமத்தம் பூ. பில்வ பத்திரம், மஹிருக்குளு (கருங்குங்கிலியம்) தூபம், அல்லது கங்காலி தூபம், பலவித அன்னங்கள் நிவேதனம்.

''நமஸ்தே ருத்ர'' என்ற மந்திரத்தினாலவது, ''நமச்சம்பவே'' என்ற மந்திரத்தினாலாவது, ஷோட சோபசார பூஜை செய்து காய்த்திரியினாலே, எள்ளுதானியத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும்.

சந்தனம் புஷபங்களுடன் பால் கலந்த அன்னத்தை பல கொடுக்க வேண்டும். வெளப்பு நிறமான பசுவை தானம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்தால் ஒரு மாத காலத்திற்குள் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் ஆயுதங்களினாலே தாக்குவது அக்கினி, பிரயோகம் (தீ வைப்பது) எழுத்துக்களைக் கற்பது ஆயுதங்களைக் கற்பது. திருடச் செல்லுவது, பூதங்களை உபச்சாடனம் செய்வது (பேய், பிசாசு

முதலியவைகளை விரட்டுவது) மந்திரங்கள்-யந்திரங்களை பிரயோகம் செய்வது வசமான தேவதைகளை பிரதிஷ்டை செய்வது, பூதங்களை பிரவேசிக்கச் செய்வது (பூத, பிரேத பிசாசாதி கிரஹங்களை குறிப்பிட்ட சரீரத்தில் வர வழைத்து ஆட்டி வைப்பது முதலியன செய்வது) சிரார்த்தம் முதலியவைகள் செய்வது, முதலான குரூரமான காரியங்களைச் செய்வது சிலாக்கியமாகும்.

***இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்***

ஆசாரத்துடனிருப்பவனாவான், விலைக்கு வாங்குவதிலும் விலைக்கு விற்பதிலும் ஸாமர்த்திய முடையவன் ஆவான். சூரனாவான். கொடியவனாவான். துன்புறுத்துகின்றவனாவான். செய்நன்றி கொன்றவனாவான். அல்பனான பகைவனை உடையவாவான். ஸ்திரமான ஆயுளை உடையவனாவான். (நீண்ட ஆயுனை உடையவனாவான்) 87 வயது வரையில் பரமாயுளையுடையவனாவான்.

**புனர் பூசம்**

புனர்பூச நட்சத்திரத்தில், சீமந்தம், பும்ஸவனம் புஷ்டிகரமான காரியம், சௌளனம், உபநயணம், வேத விரதங்கள் (பற்பலவிதமான வேதம், சாஸ்திரம் முதலியனவகளைக் கற்றல்) இவைகள் சிறந்தவைகளாகும். ஊஞ்சல் (தொட்டி) இடுவது. சிறந்த வாஹனங்களில் ஏறுவது, சாஸ்திரங்கள் (கத்தி முதலிய ஆயுதங்கள்) பயிலுவது. புதுப் படுக்கையில் படுப்பது, ஆபரணங்களை அணிந்து கொள்வது. இவைகளைச் செய்ய வேண்டும்.

புணர்வசுவனாது. குளத்தை போன்ற வடிவமுடையதும் 5 நட்சத்திரங்களுடையதுமாகும். கே, கோ, ஹா, ஹீ, இந்த எழுத்துக்கள் புனர்பூசம் நட்சத்திரத்திற்குரிய எழுத்துக்களாகும். கருப்பு நிறம் 5 நட்சத்திரங்கள்' குருஹதண்டத்தைப் போன்றது (கிருஹதண்டம், உத்தரம்) புருஷ நட்சத்திரம். தேவகணம், பூனையோநி, அதிதிதேவதை வைசிய ஜாதி 3 காலுடையது, குறுக்கான முகம் (நீண்ட முகம்) அழகான கண், சர நட்சத்திரம். இருப்பிடம் பட்டணம். வாயு மண்டலாம் மூங்கில் மரம். பக்ஷி

அன்னம். ங என்ற எழுத்து சுரம் இந்த நட்சத்திரத்தில் காம தேனு உண்டாயிற்று. 20 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷ நாடியாம்.

பாலைக் குடித்துவிட்டு, கிழக்கு, வடக்கில், பிராயணம் செய்து சுபமுண்டாகும்.

இந்த நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால் 7 நாள்கள் கெடுதலாகும். அந்த தோஷம் நீங்குவதற்கு, அதிதியை பூஜிக்க வேண்டும். அதற்கு மஞ்சள் வஸ்திரம், குங்குமப்பூ கலந்து சந்தனம், ஆம்பல் பூ, அல்லது மல்லிகைப் பூ, சந்தன தூபம். சர்க்கரைப் பொங்கள் நிவேதனம் (இவைகளை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும்).

''ஆதிதிர்த்யௌரதிதி'' என்னும் மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து. நெய் எள்ளு, அரிசி, இவைகளினாலே காய்த்தீரி மந்திரத்தினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் பூஷ்பங்களுடன் சர்க்கரை பொங்கலை பலி கொடுக்க வேண்டும். 7 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில், முதலாவது பிரௌடையானவள் பல மனிதர் களை மனதில் நினைத்திருப்பவளாவாள்.

இந்த நட்சத்திரத்தில், ருதுமதியாக ஆவது சிறந்ததாம். இந்த நட்சத்திரத்தில். பும்ஸ்வனம், சீமந்தம், நாமகரணம் (பெயரிடுவது) அன்னப்பிராசனம், கர்ணவேதனம் (காது குத்துவது) சௌளம் (குடுமி வைப்பது) உபநயனம் அக்ஷராரம்பம், வேதாப்பியாஸம், சாஸ்திரப்பியாஸம், சித்திரம் கற்பது, ஆடை, ஆபரணங்களை, அணிந்து கொள்ளுவது அரசனுக்கு பட்டாபிஷேகம் செய்வது, ஸிம்ஹாஸநத்தி லேறுவது. ஊஞ்சலில் ஏறுவது, படுக்கையில் படுப்பது, ஆபரணங்களணிந்து கொள்ளுவது,. புதுவீடு கட்டதுவக்குவது பட்டணத்துக்குள் பிரவேசிப்பது. கிராமத்திற்குள் பிரவேகீப்பது குகைக்குள் (கிருஹத்தில்) பிரவேசிப்பது, யாத்திரை செய்வது மருந்துண்பது,. முதலான சுபகாரியங்களைச் செய்வது சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்.*

நீண்ட ஆயுளுடையவனாவான். ஸ்திரீகளிடத்தில் பிரியமுடையவனாவான். நல்ல ஆசையுடையவனாவான். செல்வத்தை விரும்புகின்றவனாவான். கெட்ட புத்தியையுடையவனாவான். உயரமாக இருப்பவனாவான். தணிந்த குரலுடையவனாவான். உயரமாக இருப்பவனாவான். தணிந்த குரலுடையவனாவான். மாமிசத்தில் பிரியமுடையவனபவான். நல்ல புத்தியையுடையவனாவான். வயிற்றில் மச்சமுடையவனாவான். 86 வயது பரமாயுளுடையவனாவான்.

**பூசம்**

புஷ்ய நட்சத்திரத்தில், வேதங்களைக் கற்பது சிறந்த சாஸ்திரங்களைக் கற்பது, ஆயுதங்களையும் அஸ்திரங்களையும் கற்றக் கொடுப்பது. மந்திரங்களினாலே தேவதைகளை ஆராதிப்பது. தேவதைகளைப் பூஜிப்பது வைத்தியர்களுக்கு உரிய காரியங்களைச் செய்வது, புஷ்டிகரமான காரியங்களைச் செய்வது, அரசர்கள் விஜய யாத்திரை செய்வது, பட்டாபிஷேகம் செய்வது சிறந்த சித்திரங்களை வரைவது, வஸ்திரங்களை தரித்துக் கொள்வது, ஆபரணங்களை அணிந்து கொள்வது இவைகளைச் செய்ய வேண்டும்.

புஷ்ய நட்சத்திரமானது (தொடுத்த) மாலையைப் போன்ற 3 நட்சத்திரங்களைக் கொண்டதாகும். ஹீ, ஹே, ஹோ, டா இந்த 4 எழுத்துக்களும் புஷ்ப நட்சத்திரத்தைக் குறிக்கும் எழுத்துக்களாம். வெளுப்பு நிறம் 3 நட்சத்திரங்களைக் கொண்டது. அம்பைப் போன்ற வடிவமுடையது. புருஷ நட்சத்திரம், தேவகணம். ஆட்டு யோநி, பிருகஸ்பதி தேவதை,. க்ஷத்திரியஜாதி. 4 கால்களுடைய. மேல் நோக்குடையது. கொட்டைக் கண் க்ஷிப்பிரம் வெளியிலுள்ளது. ஸம (ஸ்வபாவமுடைய) நட்சத்திரம். இருப்பிடம் கிராமம். அக்கினி மண்டலம். அரசுமரம். பக்ஷி நீர்க்காக்கை, அ என்னும் எழுத்து ஸ்வரமாகும். இந்த நட்சத்திரத்தில் பங்கஜம் (தாமரைமலர்) சுகம் (கிளி) இவ்விரண்டும் உண்டாயின. 20 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷ நாடி ஆகும். பாயஸத்தை ஆஹாரம் செய்து ஸகல திக்குகளிலும் பிரயாணம் செய்ய நன்மையுண்டாகும்.

இந்த புஷ்ப நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால். 7 நாட்களுக்கு அரிஷ்டமாகும். அதற்கு, பரிஹாரமாக பிருஹஸ் பதியைப் பூஜிக்க வேண்டும், அதற்கு, மஞ்சள் வஸ்திரம், குங்கும கந்தம் (குங்கமப் பூ) கலந்த சந்தனம் தாமரைப் பூ அஹில்தூபம், கல்கண்டுப் பொங்கல் நிவேதனம் (இவைகளை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும்.)

''பிருஹஸ்பதே அதியதர்யோ அர்ஹா'' என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து,. பரமாந்நத்தினாலே (பாயஸத்தினாலே) காயத்ரீ மந்திரத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் புஷ்ப மாலையுடன் (புஷ்பங்களுடன்) பால் கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். 7 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில், வேள்வி, பும்ஸவநம், ஸீமந்தம், நாமகரணம் அந்நப்பிராசநம், கர்ணவேதனம் சௌளரம் சௌளம், உபநயணம், வேதங்கள் சாஸ்திரங்களை அப்பியஸித்தல், யந்திரங்கள் மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்ததல் எண்ணை தேய்த்துத் கொள்ளுதல், புதிய வஸ்திரம் ஆபரணங்களை அணிதல் அரசர்களின் பட்டாபிஷேகம் ஸிம்ஹாஸனத்தில் ஏறுதல் (சதுரங்க பலங்களை, ரதம், கஜம். குதிரை காலாட்படை, என்ற 4 வகை படைகளைக்) கொள்ளுதல், ஊஞ்சல்லேறுதல், யானை குதிரைகளைப் பழக்குதல், யானை குதிரைகளில் ஏறுதல், வீடு கட்டத்துவக்குதல், பட்டணம், வீடு கிராமங்களில் பிரேவசித்தல், யாகபூமியில் நுழைதல், குருவினிடத்தில் உபதேசம் பெற்றுக் கொள்ளுதல், பெரிய உதஸ்வங்கள் வாத்தியங்களைக் கற்றல், நாட்டியம் சொல்லி கொள்ளுதல், சாந்திகரமும் புஷ்டிகரமுமான காரியங்களைச் செய்தல், சேவகர்களை ஏற்றுக் கொள்ளுதல், பசுக்களை (ஆடுமாடுகளைச்) வாங்குவது. விற்றல், பயிரிடுதல் விதை விதைத்தல், தந்திரங்களைக் கையாளுதல், மருந்துகளைச் செய்தல், இவைகளைச் செய்வது சிறந்து பயனுள்ளவைகளாம்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தோர் குணங்கள்*

ஸகல விஷயங்களையும் கற்றவனாவான். சிறந்த அறிவாளியாவான். சீக்கிரத்தில் கோபமுடையவனாவான். முக்கியமானவனாவான் (தலைவனாவான்) தைரியமுடையவனாவான். பந்துக்களுக்கு உபகாரம்

செய்பவனாவான். இனிமையாகப் பேசுகின்றவனாவான். மந்திரங்களைக் கற்றவனாவான். தானென்ற அகம்பாவமுடையவனாவான். நீண்ட ஆயுளுடையவனாவான். நுட்பமாகப் பேசுகின்றவனாவன். தனிமையில் பிரியமுடையவனாவான். கைகளிலும் கால்களிலும் மச்சமுடையவனாவான். 90 வயது பரமாயுளையுடையவனாவான். இவை முதலிய எல்லாவற்றையும் இந்த நூலில். காண்க.

**ஆயில்யம்**

ஸ்ர்ப்பத்தைத் தேவையாகக் கொண்ட ஆயிலிய நட்சத்திரத்தில் மந்திரங்களின் பிரயோகம், ஏவல். நெருப்பினாலே பொசுக்குவது, உடற்பயிற்சி, தாதுவாதம். சரகாரியம் (சரம் பார்ப்பது அல்லது அம்புகளா லாகும் காரியங்கள் ) விபரீதமான பாகம். அனுகூலமான பாகம், குந்தம் [ உலக்கையைப் போன்ற ஆயுதம் ) கத்தி, சக்தி, என்றும் ஆயுதம். அம்பு, வில், முதலிய ஆயுதங்களை ஸங்கிரஹிப்பது [எடுத்துப் பழகுவது இவை களை சேகரம் செய்துவைப்பது ] விஷம் தோய்ந்த ஆயுதங்களைச் செய்வது. இவைகளைச் செய்ய வேண்டும்,

ஆயிலிய நட்சத்திரமானது ஸர்ப்பத்தை [ பாம்பை ] ப் போன்ற வடிவ முடைய 6 நட்சத்திரங்களைக் கொண்டதாகும், டீ . டு, டே, டோ, இவைகள் ஆயிலியத்திற்குரிய எழுத்துக்களாம், சிவப்பு நிறம், 6 நட்சத் திரங்களைக் கொண்டது, பாம்பைப் போன்ற வடிவமுடையது. பெண் நட்சத்திரம், ராஷிஸகணம். பூனை யோநி, ஸர்பம் தேவதையாம், சண்டலாஜாதி 4 பாதங்களுடையது, கீழ்நோக்கானது. மங்கிய பார்வை கொடிய குணமுடையது வெளியிலுள்ளது, அர்த நட்சத்திரம் (அர்தம் - ஸரிபாதி ] இருப்பிடம் சூனியமான இடம் (பொட்டல்) வருணமண்டலம். புன்னை மரம் சிட்டிக்குருவி பக்ஷி. இந்த நட்சத்திரத்தில் தர்மராஜர் தருமபுத்திரர் பிறந்தார். 32 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷநாடியாம். இந்த நட்சத்திரத்தில் யாத்திரை செய்யக் கூடாது. அல்லது (அவசியமாக செல்ல நேர்ந்தால்) 14 நாழிகைக்குப் பிறகு, பாயஸத்தை ஆஹாரம் செய்து, பிறகு, கிழக்கு வடக்கில் பிராயணம் செய்ய நன்மையுண்டாம்.

இந்த ஆயிலிய நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால், பிராண பயமாம். அல்லது ஒரு மாத காலம் அரிஷ்டத்தை யுண்டு பண்ணும். அதற்கு பரிகாரமாக ஸர்ப்தேவதையை பூஜை செய்ய வேண்டும். (அதற்கு) தேன், மஞ்சள் நிறமான வஸ்திரம், குங்கமப் பூ கலந்த அகில், கந்தம் (சந்தனம்) ஆத்திப் பூ, நெய் கலந்த குங்குலியம் தூபம், பாயஸான்னம் நைவேத்தியம் (பாயஸமும் அன்னமும், அல்லது பால் கலந்த சோறு) இவைகளை சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

"நமோ அஸ்து ஸர்பேப்ய" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து, பாயஸத்துடன் நெய்யைக் கலந்து அதனாலே, காயத்ரீ மந்திரத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் மலர்மாலையுடன் பலி கொடுக்க வேண்டும், சிவப்பு நிறமான பசு மாட்டை தானம் செய்ய வேண்டும். ஒரு மாத காலத்தில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதல் பிரௌடையானவள். கணவனை இழப்பாள். கெட்ட நடத்தையுடையவளாவாள்.

இந்த நட்சத்திரத்தில், தாக்குதல், விஷப்பிரயோகம், அக்னி பிரயோகம் வித்தையில் வாதாம் செய்தல், வில் முதலிய ஆயுதங்களைப் பயிலுவது,, மந்திரபிரயோகம், பரதாரகமனம். துரவு, கிணறு, குளம் ராஜ மார்க்கம், அகழ், இவைகளைச் செய்ய சிறந்ததாகும்.

***இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்***

அரசர்களினாலே பூஜிக்கத் தக்கவனாவான். கொடியவனாவான். காமமுடையவனாவான்,. தூரதேசம் சென்று வசிப்பவனாவான்,. உடலில் எள்ளைப் போன்ற மச்சமுடையவனாவான். வெகுநேரம் போகம் செய்பவனாவான். மெதுவாக நடப்பவனாவான். போகியாவான். (வஸ்திரம் அலங்காரம் முதலிய சுகபோகங்களில் ஆசையுடையவனாவான்) 86 வயது பரமாயுளையுடையவனாவான். இது முதலிய எல்லாவற்றையும். அறிக

அக்கினி, ஆதானம், சகல மந்திரங்களின் பிரயோகம், சிராத்தம் திருக்களுக்கு தர்பணம், சூதாட்ட ஆரம்ப காரியம், வாதம், பிலம் (சுரங்கம்)

பிதிருகாரியத்தில் மத்தியம் வில்லாலே செய்யப்படும் காரியங்கள், இவைகளைச் செய்ய வேண்டும்,

**மகம்**

மக நட்சத்திரமானது ஊஞ்சலைப் போன்றது. 5 சக்கிரங்களின் தொகுதி, மா, மீ மூ, மே, இவைகள் மகா நட்சத்திரத்தைக் குறிப்பிடும் எழுத்துக்களாம்.

கருப்பு நிறமானது. 5 நப்சத்திங்களுடையது. ஊஞ்சல் கழியைப் போன்ற வடிவமுடையது. கீழ்நோக்கான நட்சத்திரம் புருஷ நட்சத்திரம். ஸ்தீரி வடிவம். ராட்சஸ கணம் மூஞ்சூர் யோனி, பிதிருக்கள் தேவதைகளாவார்கள். சூத்திர ஜாதி. 4 பாதங்களுடையது. நடுத்தரமான பார்வையுடையது. கொடூரமானது. கோடியிலுள்ளது. சமமான நட்சத்திரம், இருப்பிடம் பட்டணம். அக்கினி மண்டலம். ஆல்மரம், கோழி பறவை க, ஸ எழுத்துக்கள்.

இந்த நட்சத்திரத்தில் யமன் பிறந்தார். 20 நாழிகைகளுக்குள் பிறகு 4 நாழிகை விஷ நாடியாம். இந்த நட்சத்திரத்தில் யாத்திரை செய்யக் கூடாது. அல்லது (அவசியம் தேர்ந்தால் அப்பொழுது ) 11 நாழிகைக்குப் பிறகு, 22 நாழிகைக்குள், எள்ளைத் தின்றுவிட்டு தெற்கு - மேற்கு இவைகளில் பிரயாணம் செய்ய நன்மையுண்டாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் அது ஞாயிற்றுக் கிழமையாகவுமிருந்தால் பிராணபயமாம். அல்லது 20 நாட்கள் துன்பத்தையளிப்பதாம். இந்த தோஷத்திற்குப் பரிஹாரம் பிதிருதேவதையை பூஜிக்க வேண்டும். இதற்கு, கருப்பு வஸ்திரம், கருங்காலிகந்தம், சம்பக மலர் நெய், அகில், குங்கிலியம் இவைகள் தூபம், நெய் கலந்த சோறு, அதிரஸம் இவைகள் நைவேத்தியம். இவைகள் முக்கியமானவைகளாம். "உதீரதாமவரே" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து, எள்ளு அரிசி கலந்த அன்னத்தினாலும், நெய்யினாலும் காயத்திரீ மந்திரத்தினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும், சந்தனம் மலர்களுடன் எள்ளுடன் கூடிய அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். கருப்பு நிறமான பசுவை,

தானம் செய்ய வேண்டும். 20 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதல் தடவையாக பிரௌடையான பெண் துக்கமடைவாள்.

இந்த நட்சத்திரத்தில், ஸமாவர்தனம் (வேத, விரத, பூர்தி ) விவாஹம், ஸகல மந்திர, தந்திர பிரயோகம் ராஜிய பாரத்தை ஏற்பது, தாஸியை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல், விலைக்கு வாங்குவது, விற்பது, ஏர் உழுவது, விதை விதைப்பது, சூதாட்டம்,. புதையல் [ எடுப்பது ] மை [செய்வது உபயோகிப்பது] கன்னியாதானம், வாதம், யந்திரங்ளைக், உபயோகிப்பது. லாபிகள் - கிணறுகள் - குளங்கள் வெட்டுவது சிராத்தம் பிதிரு தர்பணம், இவைகளைச் செய்வது சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

சிறந்த வித்துவானாவான். வணக்கத்தில் ஆசை யுடையவனாவான், தாய் தகப்பனிடத்தில் பக்தியுடையவனாவான். அநேக குணங்களுடையவான், வெகுக்காலம் ஜீவித்திருப்பவனான். பந்துகளுக்கு உதவி செய்கின்றவனாவான், தெளிவாக பேசுகின்றனவான். பகைவர்களின் தொகுதிகளை தனது வசப்படுகின்றவனாவான். சின்னப் புத்தியுடையவனவான். சடுதியில் ரோகமடைகின்றவனாவான், தனது ஸ்திரீயினிடத்தில் பிரியமுடையவனாவான். சிவந்த கண்களையுடையவனான். வயிற்றில் மச்சமுடையவனாவான். 97 வயது பரமாயுளுடையனாவான்.

பட்டணப் பிரவேசம் செய்வ நகரத்தை தகற்பது, பயம், ரோகம், துக்கங்களையுண்டு பண்ணும் விஷப் பிரயோகம் செய்வது. மந்திரங்கள் ஔஷதங்கள் செய்து காருட மந்திரவாதம் செய்வது இவைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

**பூரம்**

பூர்வ பல்குனி, உத்திரபல்குனி, இந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும், இரண்டு இரண்டு நட்சத்திரங்களின் வடிவமானவைகளாம். இந்த 4

நட்சத்திரங்களும் ஓர் கட்டிலின் கால்களைப் போலிருப்பவைகளாம். மோ, டா, டீ, டு, இந்த எழுத்துக்கள் 4ம் பூர்வபல்குனி நட்சத்திரத்திற்குறியவை களாம், வெளுப்பு நிறம், 2 நட்சத்திரம் தடியைப் போன்றது. பெண் நட்சத்திரம் மனித கணம் மூஞ்சூர் யோனி, பகன் தேவதை பிராம்ண ஜாதி 4 காலுடையது. கீழ் நோக்கு நட்சத்திரம். நல்ல கண்களுடையது. உக்கிர மரன நட்சத்திரம். உட்புறம். சம நட்சத்திரம். கிராம இருப்பிடம், அக்கினி மண்டலம், கழுகு பறவை மரம் புரசு, ஸ்வரம் அக்ஷரம், 20 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷநாடியாம், யாத்திரை கூடாது. அல்லது 18 நாழிகை க்கு மேல் யாத்திரை செய்ய சுபமாம். இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராமண பயமாம், அல்லது ஒரு மாதமாவது, ஒன்பது தினங்களவது, 2 மாதமாவது அரிஷ்டமாம். அந்த தோஷ பரிஹாரத்திற்கு அர்யமண தேவதையை பூஜிக்க வேண்டும். அதற்கு சிவப்பு வஸ்திரம், செஞ்சந்தனம் இவைகளை சேகரித்துக் கொள்ள வேண்டும்.

அர்யமணம் என்ற மந்திரத்தினாலே, அரளிப்பூ, பில்வதூபம், கிருஸராந்நம் [எள்ளுந்சாதம்] நைவேத்தியம், இவைகளுடன் ஷோதாட சோபசார பூஜை செய்து, உளுந்தஞ்சாதம் நெய் இவைகளாலே காய்த்திரியினாலே 108 உரு ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் புஷ்ப மாலையுடன் சாமைச் சோற்றினாலே பலி கொடுக்க வேண்டும். 1 மாதத்தில் சுகமடையவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவது புஷ்பவதியானவள் கணவன் பிள்ளையற்றவளாவான்.

### *இந்த நட்சத்திரததில் பிறந்தவனுடைய குணங்கள்*

அழகுடையவனாவான். அடக்கமுடையவனாவான். உலகமக்களுக்குப் பிரியமானவானவான். கீதம் வாத்தியங்களில் பிரியமுடையவனாவான். ஆபரணங்களை அணிந்திருப்பவனாவான். அத்தியனம் செய்வதில் பிரியமுடையவனாவான். பெண் சித்தமில்லாதவனாவான். அல்லது காமியாவான். தாயற்றவனாவான். 96 வயது பரமாயுஸ்ஸீ உடையவனாவான்.

**உத்திரம்**

கிணறு. குட்டை குளம், ஏரி, இவைகளை வெட்டுவது. நகரம் உப்பிரிகை, (மாடிக்கட்டிடம்) அல்லது ராஜகிரஹம் தேவாலயம். இவைகளை நிர்மாணம் செய்வது, படுக்கை ரத்னாபரணங்கள் முதலியவைகளைச் செய்வது, அல்லது அணிந்து கொள்ளுவது. சிம்மாசனத்தில் அமறுவது, மங்கள குளியல் செய்வது, திருமணம், ராஜாபிஷேகம், (பட்டாபிஷேகம்) பயிரிடுதல் பட்டணப்பிரவேசம். இவைகளைச் செய்வது ஆகிய எல்லாவற்றையும், அர்யம தேவதாகமான உத்திர நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.

பூரம், உத்திரம் ஒவ்வொன்றும், 2,2 நட்சத்திரங்களைக் கொண்டு, இவ்விரண்டு நட்சத்திரங்களும் சேர்ந்து கட்டில் கால்களைப் போன்ற வடிவமுடையவைகளாம், டே, டோ, பா, மீ, இவ்வெழுத்துக்கள் உத்திர நட்சத்திரத்தைக் குறிப்பவைகளாம். இது சிவப்பூ நிறமானது. 2 நட்சத்திரங்களுடையது. தண்டத்தைப் போன்ற வடிவமுடையது. பெண் நட்சத்திரமாம் மனுஷ்யகணம். பசு மாட்டு யோநி.. பகன் தேவதை. சத்திரிய ஜாதி, 3 கால்களுடையது. மேனோக்கு நட்சத்திரம், பொட்டைக்கண் துருவ நட்சத்திரம் (துருவம் - ஸ்திரம்) எல்லைக் கோடி, அத்தியர்த்தாரை இருப்பிடம் சூனியப்பிரதேசம். இலந்தை மரம். பறவை. கழுகு ஐகராம் ரகாரங்கள் எழுத்துக்கள். இந்த நட்சத்திரத்தில் பிரஹஸ்பதி பகவான் பிறந்தார். 18 நாழிகைக்குப பிறகு 4 நாழிகை விஷநாடிகையாம். காய்கறிகளுடன் மாமிசம் புஜித்துவிட்டு தெற்கு மேற்கு திக்குகளில் பிராயணம் செய்ய சுபமாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் 7 நாட்கள் அரிஷ்டமாகும் இந்த தோஷத்திற்கு பரிஹாரமாக, பக தேவதையை பூஜிக்க வேண்டும். அதற்கு குங்குமப்பூ கலந்த சந்தனம், நீலோத்பல புஷ்பம், வில்வ தூபம், சிவப்பு சம்பாச்சோறு. நிவேதனம். இவைகளை சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

"பக ப்ரணேதா'' என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து, நெய் கலந்த அன்னத்தினாலே காயத்திரியினாலே 108 தடவை ஹோமம் செய்து, கந்தம் புஷ்பங்களுடன் நெய் கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். ஒரு வார காலத்தில் (7 நாட்களில்) சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவது ரஜஸ்வதியாகும். கன்னிகை, தருமாசாரமுடையவளும் பிள்ளைகளையுடையவளுமாவாள்.

இந்த நட்சத்திரத்தில், யாகம், பும்ஸவநம், சீமந்தம் நாமகரணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம், சௌளம் உபநயனம், திருமணம்' ஸமாவர்தனம், இவைகளைச் செய்வது வஸ்திரம். ஆபரணங்களை அணிந்து கொள்ளுவது பட்டாபிஷேகம் செய்வது ஸிம்ஹாஸனமேறுவது ஊஞ்சலிலேறுவது. பட்டணப்பிரவேசம், கிராமப்பிரவேசங்கள் கிரஹப் பிரவேசங்களைச் செய்வது, வேதாப்பியாஸம் செய்வது,. யாகம் செய்வது, விதை விதைப்பது, தோரணங்களை அலங்காரம் செய்வது முதலிய நிலையான காரியங்களைச் செய்வது, இவைகள் சிறந்தவைகளாம்.

### *இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

காவியங்களைப் படிப்பவனாவான். தானென்ற அபிமானமுடைய வனாவான். தருமத்தையறிந்தவனாவான். அழகாக இருப்பவனாவான். ஸாமர்த்தியசாலியாவான். சிறந்தவனாவான பெண்களிடத்தில் ஆசையுடை யவனாவான். ரோகமுடையவனாவான். கருத்த சரீரமுடையவனாவான். வணக்கத்தில் பிரியமுடையவனாவான். ஸவல்ப சௌக்கியமுடையவனாவான் பண்டிதனாவான். உடம்பிய மச்சமுடையவனாவான். 84 வயது பரமாயுளையுடையவனாவான்.

பாணிகிரஹணம் செய்வது, பலிஹரணம் செய்வது, மங்களகரமான காரியங்களைச் செய்வது, யாத்திரை செய்வது, ராஜா பிஷேகம் (பட்டாபிஷேகம்) செய்வது, வீடு, அரண்மனை தேவாலயங்களை நிர்மாணம் செய்வது சித்திரவஸ்திரங்கள், சிறந்த வாகனங்கள், இவைகளைத் தரிப்பது, பயிரிடுவதற்குத் துவங்குவது முதலிய ஸகல சுபகாரியங்களையும் செய்ய வேண்டும்.

## ஹஸ்தம்

ஹஸ்த நட்சத்திரமானது, 5 நட்சத்திரங்களுடன் கூடியதாக உள்ளங்களைப் போன்ற வடிவமுடையதாகும். பூ, ஷம், ணா, டா இவைகள் ஹஸ்த நட்சத்திரத்திற்குரிய எழுத்துக்களாகும்.

கருப்பு நிறம். 5 நட்சத்திரங்களைக் கொண்டது. கையைப் போன்ற வடிவமுடையது. புருஷ நட்சத்திரம். தேவகணம், எருமை யோனி, சூரியன் தேவதை, வைசிய ஜாதி, 4 கால்களுடையது கோணலான முகம். இலேசானது, மெலிந்த பார்வையுடையது க்ஷிப்பிர நட்சத்திரம், இருப்பிடம் நகரம், வாயு மண்டலம்புன்னை மரம். கிளி பறவை. லா எழுத்து. இந்த நட்சத்திரத்தில் நகுலனும் சஹதேவனும் பிறந்தார்கள்.

21 நாழிகைக்குப்பிறகு 4 நாழிகை விஷநாடி காலமாகும். அரிசியைத் தின்றுவிட்டு எல்லா திக்குகளிலும் பிரயாணம் செய்ய சுப முண்டாகும்.

இந்த நட்சத்திரத்தில் ஜுரம் வந்தால் பிராயணபயமாம். அல்லது 15 நாள் அரிஷ்ட காலமாம். அதற்கு பரிஹாரமாக சவிதா என்னும் தேவதையை (சூரியனை) பூஜிக்க வேணடும். அதற்கு சிவப்பு துணி., செஞ்சந்தனம். செவ்வரளிப் பூ, தசாங்கம் தூபம். அபூபமெனப்படும் அதிரஸம் நைவேத்தியம் இவைகள் அவசியமாம்).

"உதுத்யம்" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து எருக்கு ஸமித்துக்களாலேயும் நெய்யுனாலேயும் காயத்ரீ மந்திரத்தினாலே 108 உரு, ஹோமம் செய்து சந்தனம் மலர்களுடன் உளுந்து கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். (இவ்விதம் செய்தால்) 15 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவது பிரௌடையாகின்றவள். பிள்ளை களைப் பெறுவாள்.

இந்த நட்சத்திரத்தில் வேள்வி, பும்ஸவனம், அன்னப் பிராசனம், கர்ணவேதனம், சௌளம், உபநயனம், வேதம் சாஸ்திரங்களைக் கற்றல்,

ஸமாவர்தனம் திருணம், தைலம் தேய்த்துக் கொண்டு குளித்தால், கோடி யுடுத்தல், ஆபரணம் அணிதல், சாந்திகரமான புஷ்டிகரமான காரியங்களைச் செய்வது, மஹோத்ஸவங்களைச் செய்வது, ஊஞ்சல், ரதம், குதிரைகளிலேறி சவாரி செய்வது பசுக்களை (ஆடு மாடுகளை) வாங்குவது விற்பது, பயிரிடத் துவங்குவது,. விதை விதைப்பது தானியங்களை சேகரிப்பது புது துணியை அணிந்து கொள்வது. சிறந்த ரத்னங்களை சேகரிப்பது. மந்திர சாஸ்திரத்தைக் கற்பது. யாத்திரை செய்வது, மருந்துண்பது, முதலிய காரியங்களைச் செய்வது சிறந்ததாகும்.

### *இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

பிரசித்தி பெற்றவனாவான். கம்பீரமாகப் பேசுகின்றவனாவான். அநேக சாஸ்திரங்களில் சிறந்த ஆற்றலுடையவனாவான். சாமர்த்தியமுடைய வனாவான். செல்வம் படைத்தவனாவான். பெண்லோலனாவான். தன் மனைவியை அனுசரித்து இருப்பவனாவான். பிறர் காரியங்களில் அனுகூல மாக இருப்பவனாவான். பிராமணர்களையும். குருவையும் பூஜிப்பவனாவான். புகழுடையவளாவான். பகைவர்களை யழிப்பவனவான். (பிறருடைய) மனைவியை அபஹரிப்பவனாவான். உடம்பில் மச்ச முடையவனாவான் 88 வயது பரமாயுளையுடையவனாவான்.

விசித்திரமான ஆடை ஆபரணங்களை அணிந்து கொள்வது சித்திரங்கள் வரைவது முத்துக்கள் வாங்குவது, அணிந்து கொள்ளுவது. கர்ண வேதனம் செய்வது, பவழங்கள் வாங்குவது அணிந்து கொள்வது. துவஷ்டா என்னும் தேவனை வேண்டி விரதமிருப்பது,, உபநயனம் செய்வது க்ஷௌரம் செய்து கொள்வது, சங்கீதம், நாட்டியம் கற்றுக் கொள்ளுவது, பற்பல முயற்சி செய்து வாத்தியங்களைக் கற்றுக் கொள்ளுவது (முதலிய காரியங்களை, சித்திரா நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்).

### *சித்திரை*

சித்திரை நட்சத்திரமானது ஓர் முத்தைந் போன்ற வடிவமுடையதாகும், பெ, பொ, ரா, பு இவ் வெழுத்துக்கள் சித்திரை நட்சத்திரத்திற்குரிய வைகளாம் வெளுப்பு நிறம் ஒரே நட்சத்திரம். முத்தைப் போன்ற

வடிவமுடையது. புருஷ நட்சத்திரம்,. ராட்சஸ கணம். புலியோனி துவஷ்டா என்னும் தேவதையை பூஜிக்க வேண்டும். அதற்கு சித்திரவஸ்திரம், குங்கமப்பூ கலந்த சந்தனம், சித்திர (பற்பல விதமான) மலர்,. சர்ஜரஸ தூபம் (சர்ஜம்-சாலமரம்) மோதகம் (கொழுக்கட்டை) நிவேதனம்,. இவைகளை சம்பாதித்துக் கொள்ளவேண்டும்.

"சித்ரம் தேவானாம்" என்ற மந்திரத்தினாலே ஷோட சோபசார பூஜை செய்து சித்தரான்னம், நெய் இவைகளினாலே காயத்திரீ மந்திரத்தினாலே 108 தடவை ஹோமம் செய்து சந்தனம் மலர்களுடன் சித்திரான்னத்தை பலி கொடுக்க வேண்டும். 11 நாளில் சௌக்கியமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவது பிரௌடையானவள் சாமர்த்திய முடையவளாவாள்.

இந்த நட்சத்திரத்தில் பெண்களுடன் புணர்ச்சி செய்வது நாமகரணம், அன்னப்பிராசனம். கர்ணவேதனம், சௌளம், உபநயனம், அக்ஷராரம்பம் வேத சாஸ்திரப்பியாஸம் இவைகளைச் செய்வது, தைலம் தேய்த்துக் கொண்டு குளியல் செய்வது, சித்திர வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் அணிந்து கொள்ளுவது, யானை குதிரைகளுக்கு ரக்ஷா பந்தனம் செய்வது, ரதசிக்ஷை, நாட்டியம் கற்றுக் கொள்ளுவது, திவ்விய கோபனம் (தைவீகமான விஷயங்களை மறைத்து வைப்பது). பெண்ணை மறைத்து வைப்பது, பற்பல வித்தைகளைக் கற்கத் துவங்குவது, பற்பல வனஸ்பதிகளிலிருந்து மருந்துகளைச் செய்வது, மருந்து உண்பது, முதலிய சுபகார்யங்களைச் செய்வது சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

செல்வத்தில் ஆசையுடையவனாவான். சுக போகங்களை அனுபவிப் பவனாவான். காமியாவான். 84 வயது பரமாயுளுடையவனாவான்.

பயிடுதல், தோட்டம் வளர்ப்பது, நகரம், தேவாலயம், வீடு அரண்மனை இவைகளைக் கட்டுவது, ஆடிக்கொண்டு இருக்கின்றன. ஊஞ்சலில் உட்காருவது, ஒட்டகை, குதிரைகளில் மீது ஏறுவது வித்தையை கற்கத்

துவங்குவது. திருமணம், புஷ்டிகரமான காரியம், பயிரிடுதல், முதலிய பல காரியங்களைச் செய்வது பற்பல ஆபரணங்களை அங்கங்களில் அணிந்து கொள்ளுவது. முதலிய காரியங்களை ஸ்வாதி நட்சத்திரத்தில் செய்ய வேண்டுமென்று புத்திமான்கள் கூறியிருக்கிறார்கள்.

**ஸ்வாதி**

ஸ்வாதி நட்சத்திரமானது, ஒரு மாணிக்கத்தை போன்ற உருவமுடைய தாகும். ரூ, ரே, ரோ, தா என்ற எழுத்துக்கள். ஸ்வாதி நட்சத்திரத்தைக் குறிப்பவைகளாம் சிவப்பு நிறமானது. தேவகணம் எருமை யோனி, வாயு தேவதை, வேளாளஜாதி, 4 கால்களுடையது. சர நட்சத்திரமாகும். சாய்வானமுகமுடையது., அழகான கண்களுடையது. இருப்பிடம் பொட்டல் வெளி, வாயு மண்டலம். மருது மரம், பறவை கழுகு. வகாரம் எழுத்து 14 நாழிகைக்குப் பிறகு. 4 நாழிகை விஷநாடியாம். யாத்திரை செய்யக் கூடாது. அல்லது 14 நாழிகைக்குப் பிறகு. நெல்லிக்காய் கலந்த மாவைத் தின்று விட்டு தெற்கு திக்கு மேற்கு திக்குகளில் பரயாணம் சுபமாம்.

இந்த நட்சத்திரத்தில் நரஸிம்ஹ மூர்த்தி அவதரித்தார்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராயண பயத்தை யுண்டு பண்ணும். அல்லது ஒரு மாதகாலம் அரிஷ்டத்தைக் கொடுக்கும். அந்த தோஷ பரியாரத்திற்காக வாயு தேவதை பூஜிக்க வேண்டும். அதற்கு கருங்காலி சந்தனம் மாதவீ மலர் (மாதவீ - கொடி மலர்) கருங்காலி தூபம், தயிர்ச்சோறு நிவேதனம் (இவைகள் அவசியமாம்) "தவ வாய வ்ரதஸ்பதே" என்ற மந்திரத்தினாலே ஷோட சோபசார பூஜை செய்து பொரி நெய் இவைகளினாலே காயத்திரியினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். தந்தனம், மலர் இவைகளுடன் தயிர்சாதத்தை பலி கொடுக்க வேண்டும் ஒருமாத காலத்தில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதல் புஷ்பவதியாகின்றவள். நல்வழியில் செல்லுகின்றவளும் சகல சௌபாக்கியங்களும் உடையவளுமாவாள்.

இந்த நட்சத்திரத்தில் பெண் போகம், நாம கரணம், அன்னபிராசம் சௌளம், உபநயனம், அக்ஷராரம்பம், ஜீயோதிஷம் முதலிய சாஸ்திராப் பியாஸம். சமாவர்தனம் திருமணம்,. தைல குளியல் புதிய வஸ்திர

மூடுத்துதல், முத்துக்களாலான ஆபரணங்களையணிந்து கொள்ளுவது நிருத்தம் கீதம், வாத்தியங்களைத் துவங்குவது, யானை, குதிரை, பல்லக்கு களிலேறி சவாரி செய்வது. மாளிகை வீடு அல்லது அரண்மனைக் கட்டத்துவங்குவது, பயிரிடத்துவங்குவது, விதை விதைப்பது, முதலிய சுபக்காரியங்களைச் செய்ய சிறந்த பலனுண்டாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

செளபாக்கியமுடையவனாவான். அமைதியுடையவனாவான். கொடை யாளியாவான். தைரியமுடையவனாவான். நீண்ட (உயரமான) சரீரமுடை யவனாவான். அழகான சரீரமுடையவனாவான். விஸ்தாரமான கண்களை யுடையவனாவான். விசித்திரமான (ஆச்சரியத்தை யுண்டு பண்ணக் கூடிய) நடத்தையும் மனமுடையவனாவான் பிரஸித்தி பெற்றவனாவான் ரோஷ முடையவனாவான், பிராமணர்கள், குருக்கள், தேவதைகளை பூஜிக்க வருகின்றவனாவான், தனத்தை [நல்வழியில்] செல விடுகின்றவனாவான். பந்துக்களிடத்தில் பிரீதியுடையவனாவான். காவியகளைப் படிக்கும் குணமுடையவனாவான். மிகுந்த சாமர்த்தியமுடையவனாவான். சிரிப்பில் பிரியமுடையவனாவான். சுதந்திரமக இருப்பவனாவான். 90 வயது பரமாயுளுடையவனாவான்.

விசாக நட்சத்திரத்தில், ரத்தனங்கள், தங்கம். இவைகளாலான ஆபரணங்களை வாங்குவது அணிந்து கொள்ளுவது. யாகம் செய்வது' ஹோமம் செய்வது, உபவாஸமிருப்பது, விருதங்களை அநுஷ்டிப்பது, அக்கினி காரியங்களைச் செய்வது ஸ்நேகம் செய்து கொள்ளுவது முதலிய காரியங்களைச் செய்ய வேண்டும்,

அக்கினியை முக்கிய தேவதையாகக் கொண்டு, அக்கினி இந்திரன் இருவரையும் அதிதேவதையாகக் கொண்ட இந்த நட்சத்திரத்தில், தாதுப் பொருள்களாலே செய்யப்படும் காரியங்களையும், தேவபூஜை, குரு பூஜை பிதிரு பூஜைகளையும் செய்ய வேண்டுமென்று. உலகத்தில் சிறந்த முனிவர்கள் கூறுகிறார்கள்.

## விசாகம்

விசாக நட்சத்திரமானது. குயவன் சக்கரத்தைப் போன்ற உருவமுடையதும், 5 நட்சத்திரங்களைக் கொண்டதுமாகம். தோ, து, தே, தீ இந்த எழுத்துக்கள் விசாக நட்சத்திரத்தைக் குறிப்பிடும் எழுத்துக்களாகும்,

இது சிவப்பு நிறமானது. 5 நட்சத்திரங்களைக் கொண்டது. புருஷ நட்சத்திரம், ராட்சஸ கணம். கீழ் நோக்குடையது. பொட்டை நட்சத்திரம். யோனி புலி, சாதாரண நட்சத்திரம் ண என்பன எழுத்துக்கள், விகதம் (விகங்கதம்) மரம். (விகங்கதம் - ஸ்ருக்கு. ஸ்ருவங்களை செய்வதற்குரிய மரம் இதன் பழமானது இலந்தைப் பழத்தைப் போல் சிறியதாக இருக்கும். இதற்கு ஸ்ருவ விருஷம் என்னும் பெயருண்டு பறவை நீர்க்காக்கை. இந்திரன், அக்கினி, இருவரும் தேவதைகளாவார்கள். சத்திரிய ஜாதி, 3 கால்களுடையது. ஸம நட்சத்திரம் தோரனம் போன்ற (கோட்டையின் வெளி வாயிலைப் போன்ற) உருவமுடையது. இருப்பிடம் வெட்டவெளி அக்கினி மண்டலம். 14 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷ நாடியாம். யாத்திரை கூடாது. இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராண பயத்தையுண்டு பண்ணும் அல்லது 15 நாள் அரிஷ்டத்தைக் கொடுக்கும். அந்த தோஷத்திற்கு பரிஹாரமாக இந்திரன், அக்கினி இவர்களை பூஜிக்க வேண்டும். அதற்கு சிவப்பு வஸ்திரம், அஷ்டகந்தம், வெளுப்புப் பூ. கருங்காலி தூபம், ரக்தாங்காரோதனம் நைவேத்தியம், சேர சோபசார பூஜை செய்து,' நெய் கலந்த அன்னத்தினாலே காயத்தீர மந்திரத்தினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். ரக்தம் கலந்த அன்னத்தை சுரையுடன் (சுர-கள்ளு) பலி கொடுக்க வேண்டும்.

### *இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

வித்துவான்களிடத்தில் பிரியமுடையவனாவான். வணக்கமுடையவனாவான். வெகுகாலம் ஜீவித்திருப்பவனாவான். செல்வம் படைத்தவனாவான். காரியங்களில் சாமர்த்தியமுடையவனாவான். பந்து ஜானங்களுக்கு உபகாரம் செய்பவனாவான். அல்ப (சின்ன) புத்தியுடையவனாவான்.

சடுதியில் ரோகமுடையவனாவான். மனதை அறிந்து கொள்ளுகிற வனாவான். தன மனைவியிடம் பிரியமுடையவனாவான். சிவந்த கண்களை யுடையவனாவான். வயிற்றில் மச்சம் உடையவனாவான். 90 வயது பரமாயுளையுடையவனாவான்.

## அனுஷம்

சித்திரம் எழுதுவது, தங்கம், ரத்னங்களை பரிசோதனை பார்ப்பது குதிரை, காளை, யானை இவைகளில் ஏறி சவாரி செய்வது சூரணங்களை பிரயோகிப்பது, கண்ணுக்கு மை போடுவது மருந்துண்பது, யாத்திரை செய்வது, அனுஷ நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.

அனுஷ நட்சத்திரமானது, மலரைப் போன்ற வடிவமுடைய 3 நட்சத்திரங்களை கொண்டதாகும். நா, நீ, நூ, நே இந்த எழுத்துக்கள் அனுஷ நட்சத்திரகுரியவைகளாம். வெளுப்பு நிறம். 3 நட்சத்திரங்களைக் கொண்டது. ஆண் நட்சத்திரம், தேவகணம், மலரைப் போன்ற வடிவமுடையது. நண்பன் தேவதை. சூத்திர ஜாதி. மான்யோனி குறுக்கான (சாய்வான) முகம். மந்தமான பார்வை. மிருதுவான நட்சத்திரம் குளியல் பட்டனம். இந்திர மண்டலம்,. மகிழமரம் பறவை கோட்டான். த, தீ இவைகள் எழுத்துக்கள். இந்த நட்சத்திரத்தில் நந்தவனம் உண்டாயிற்று. 10 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷ நாடியாகும். கொள்ளைத் தின்று விட்டு, எல்லாத் திசைகளிலும் பிராயணம் செய்வது சுபகரமாகும்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால், பிராணபயமாகும். அல்லது ஒரு மாத காலம் அரிஷ்டமாகும். அதற்கு பரிஹாரமாக மித்தர தேவதையை பூஜிக்க வேண்டும். அதற்கு சிவப்பு துணி குங்குமப்பூ கலந்த சந்தனம். வில்வ இலைகள். வில்வ தூபம். கிருஸராந்தம் (சிருஸரம் - வெல்லம் கலந்த எள்ளு) "தேவஸ்யத்வா" என்ற மந்திரத்தினாலே ஷோட சோபசார பூஜை செய்து, காய்கள் கிழக்குகள் - பழங்கள் - இவைகளை நெய்யும் கலந்து காயத்திரியினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் மலர்களுடன் சர்க்கரை பொங்கலை கிழக்கு திக்கில் பலி கொடுக்க வேண்டும். ஒரு மாத காலத்திற்குள் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் பிரௌடையானவள் செல்வமும் நற்குணமுள்ள பிள்ளைகளுமுடையவளாவாள்.

இந்த நட்சத்திரத்தில், புஷ்பவதியாவது, பும்ஸவனம் - சீமந்தம் - நாமகரணம் - அன்னப்பிராசம் - கர்ணவேதனம் சௌளம் உபநயனம் - வேதாப்பியாஸம் - சாஸ்திராப்யாஸம் சமாவர்த்னம் - திருமணம் - தைலாப்யங்கம் - புதிய துணி தரித்தல் - நவரத்தனங்களாலான அல்லது புதிததாக ரத்தனங்களாலே செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்து கொள்ளுதல் - பட்டாபிஷேகம் - ரதம் - ஊஞ்சல் - (பல்லாக்கு)களில் ஏறி சவாரி செய்தல், வீடு கட்டத் துவக்குவது, சங்கு ஸ்தாபனம் நகரப்பிரவேசம் கிராமப்பிரவேசம் - கிருஹப் பிரவேசம் - நிருத்தா ரம்பம் கீதாரம்பம் - புல்லாங்குழல் - முதலியவாத்தியா ரம்பம். சில்ப சாஸ்திராப்பாஸனம் - நவரத் தனங்கள் - பசுக்களை வாங்குவது,. கிரயம் செய்வது - விலைக்கு வாங்குவது- பயிரிடுதல் - விதை விதைத்தல் - சிரார்த்தம் செய்தல் - மருந்து செய்தல் முதலிய காரியங்களைச் செய்ய சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

தயையுடையவனாவான். மேதாவியாவான். பசியால் வருந்துகிற வனாவான். க்ஷேமத்தையளிப்பவனாவான். நல்ல வழியில் செல்லுகிற வனாவான். சுகங்களையனுபவிப்பவனாவான். அரசர்களுக்கு வேண்டியவை களைச் செய்பவனாவான். அருளுடையவனாவான். ஸ்வல்பமாக பிள்ளை களையுடையவனாவான். மன அமைதியுடையவனாவான்., அன்னதானம் செய்பவனாதான். புகழுடையவனாவான், அரசர்களாலே பூஜிக்கப்படுகிற வனாவான். யௌனப் பருவமுடைய மங்கையர்களுக்கு வசயப்படுகின்ற வனாவான் வேறு தேசங்களின் (தன் தேசத்தை விட்டு வேறு தேசங்களின்) வசிப்பவனாவான். 90 வயது பராமாயுளையுடையவனாவான்.

**கேட்டை**

சத்துரு நகரத்தை அழிப்பது, மித்திரபேதம் செய்வது (பிறருடைய மனோபாலத்தை) ஊகித்து அறிவது நில், கத்தி, மூஸலம் (உலக்கை) முதலிய வைகளைச் செய்வது, சில்பங்கள் செய்வது ஹோமம் செய்வது, கபடமும்,

வக்கிரமும் நிறைந்த வித்தையை (ராஜ நீதியை) கற்பது, திருட்டு சாஸ்திரம் கற்பது அல்லது திருடுவது, தண்டிப்பது, ஆபிசாரம் செய்வது, பிறருடைய பணத்தை அபகரிப்பது. இது போன்ற மற்ற காரியங்களையும் கேட்டை நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.

கேட்டையானது குண்டலம் போன்ற வடிவமுடையது. 3 நட்சத்திரங்கள் கொண்டது. நோ - யா - யீ - யூ இவைகள் கேட்டையைக் குறிப்பிடு எழுத்துக்களாம்.

வெளுப்பு நிறம். 3 நட்சத்திரங்கள். குண்டலம் போன்ற வடிவமுடையது பெண் நட்சத்திரம். ராட்சஸ கணம். மான் யோனி. இந்திரன் தேவதை உபஜீவீ (அண்டிப்பிழைக்கின்ற) ஜாதி 4 கால்களுடையது. திர்யக்முகம் (சாய்வான் முகம்) நடுத்தரமான பார்வை. தீணமான (கொடூரமான) நட்சத்திரம். குளியல் வெட்டவெளி இந்திர மண்டலம். முள்ளிலவை மரம். சாதகம் பறவை ய, த இவைகள் எழுத்துக்கள். 14 நாழிகைக்கு மேலே 4 நாழிகை விஷ நாடி காலமாம். யாத்திரை செய்யக் கூடாது. அல்லது தயிர் சாதம் உண்டு எள்ளைத் தின்றுவிட்டு, தென் திசை - மேற்கு திசையில் பிரயாணம் செய்ய சுபகரமாகும்.

இதில் ஜீவரம் வந்தால் பிராண பயத்தையுண்டு பண்ணும். அல்லது ஒரு மாதகாலம் அரிஷ்டமாகும். அத்தோஷ பரிஹாரத்திற்காக, இந்திர தேவதையை பூஜிக்க வேண்டும். "இந்த்ரம் வோவிஸ்வதஸ்பரி" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து, சித்திரான்னத் தினாலேயும், நெய்யினாலேயும் காயத்ரீ மந்திரத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்து சந்தனம் மலர்களுடன் சித்திரான்னத்தை பலி கொடுக்க வேண்டும், ஒரு மாத காலத்திற்குள் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் புஷ்பவதியாகின்றவள் ஏழ்மையினாலேயே வருந்துவாள்.

இந்த நட்சத்திரத்தில் வீரச்செயல்கள் புரிவது. விஷப்பிரயோகம் அக்கினி பிரயோகம், ஆபிசாரம் செய்வது, யந்திரங்கள் மந்திரங்களை ஆராதிப்பது, யுத்தம் செய்வது, சூதாடுவது, வியாபாரம் செய்வது, திருடுவது யாத்திரை செய்வது. அல்லது திருடுவதற்குக் செல்லுவது

(பிறரால் செய்யப்பட்ட) பிரயோகங்களை விடுவிப்பது,. ஸ்தம்பனம் முதலியப் பிரயோகங்களை விடுவிப்பது, ஸ்தம்பனம் முதலியப் பிரயோகங்களைச் செய்யும் வழிகளைக் கூறும் சாஸ்திரங்களைக் கற்பது. பூதபிரேதாதிகளை, உச்சாடனம் செய்வது. (உச்சாடனம் - விரட்டியடிப்பது) வித்தையில் வாதம் செய்வது பெண்களை அபகரிப்பது, பிறருடைய பொருளை அபகரிப்பது பசுக்களை வாங்குவது விற்பது, முதலிய காரியங்களைச் செய்யச் சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

கருநிறமுடையவனாவான். அழுத்தமான கைப்பிடியையுடையவனாவான். (கையினாலே பிடித்தால் திமிறமுடியாது என்பது பொருள்) கல்வியை கற்பவனாவான். பல பிள்ளைகளுடையவனும் பல நண்பர்களுடையவனுமாவான். எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பவனாவான். உண்மையே பேசுகின்றவனாவான். பெண்களைச் சுற்றுகின்றவனாவான். மனக்கிலேசமுடையவனாவான். அதிகமாக பகைவர்களையுடையவனாவான். சடிதியில் கோபமடைகின்றவனாவான். நயமாகப் பேசுகின்றவனாவான். அரசர்களாலே பூஜிக்கப் படுகின்றவனாவான். பிராமணர்களையும் குருவையும் பூஜிப்பவனாவான். உடம்பில் மச்சமுடையவனாவான். 95 வயது பரமாயுளுடையவனாவான்.

**மூலம்**

பற்பல செடி, கொடி மரங்களைப் பயிரிடுவது, பயறு, கரும்பு, உளுந்து எள்ளு கடுகு இவைகளை விதைப்பது. மந்திரங்களைக் கற்றுக் கொள்வது. மருந்துண்பது, சகல ஆகமவித்தையை, தந்திர வித்தைகளைக் கற்றுக் கொள்ளுவது. திருமணம் செய்து கொள்ளுவதற்காக கன்னிகைகளை வரிப்பது, இவைகளை மூல நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.

மூல நட்சத்திரமானது அங்குசத்தை (மரவெட்டியை) போன்ற வடிவமுடைய 6 நட்சத்திரங்களைக் கொண்டதாகும். யே, யோ, பா, பீ, (பா 4, பீ 4) இவைகள் மூல நட்சத்திரத்தைக் குறிப்பிடும் எழுத்துக்களாகும்.

கருப்பு நிறம், 6 நட்சத்திரங்களைக் கொண்டது. அங்குசத்தைப் போன்ற வடிவமுடையது. சிம்மத்தைப் போன்றவன். நபும்ஸக நட்சத்திரம். ராட்சஸ

கணம். கிளி யோநி. நிருதி தேவதை. தாருணமான (கொடுமையான) நட்சத்திரம்,. கீழ்நோக்கானது நல்ல கண்களையுடையது. உள் பக்கம் சம நட்சத்திரம். குளியல் பட்டணம். வருண மண்டலம். ஸர்ஜம் விருஷம் (ஸர்ஜம் - மருதமரம், அல்லது சாலம் என்ற மரம்) பறவை சக்கிரவாகம் (நீர்க்கோழி அல்லது நீர்க்காடை) ப-ப 2 இவைகள் எழுத்துக்கள். இந்த நட்சத்திரத்தில் ஹநுமான் பிறந்தார். 20 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை காலம் விஷ நாடியாம். கந்தம் - மூலங்களைத் தின்றுவிட்டு, மேற்கு திக்கு-தெற்கு திக்குகளில் பிரயாணம் செய்ய சுப பலனாம். இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராண பயத்தையுண்டு பண்ணும். அல்லது 9 நாட்கள் துன்பத்தையளிக்கும்.

அந்த தோஷத்திற்கு பரிஹாரமாக, யாதுதான (நிருதி) தேவதையை பூஜிக்க வேண்டும். அதற்கு கருப்பு துணி. கருங்காலி. சந்தனம், நிலோத்பல மலர். மேஷ சிருங்க (ஆட்டுக் கொம்பு - அல்லது மேஷ சிருங்கமென்னும் ஒஷதி) தூபம். ரக்த ரஸம் கலந்த சோறு நைவேத்தியம் (இவைகளை சம்பாதித்துக் கொள்ள வேண்டும்).

"மோஷிணி பரா" என்ற மந்திரத்தினாலே ஷோட சோபசார பூஜை செய்து, கந்தம் - மூலம் (கிழக்குகள்) பழங்கள் - நெய் - இவைகளினாலே,. 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் மலர்களுடன் சக்கரைப் பொங்கலை பலி கொடுக்கவேண்டும். 9 நாட்களில் குணமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவதாக புஷ்பவதியாகின்றவள் புத்திரர்களை யடைவாள்,

இந்த நட்சத்திரத்தில், ருதுமதியாவது, பும்ஸவனம், ஜாதகர்மா ஸீமந்தம், நாமகரணம், அன்னப்பிராசனம், வித்தியாரம்பம், ஸமாவர்தனம், திருமணம். தைலம் தேய்த்துக் குளிப்பது குறிப்பிடும் நட்சத்திரம் அரை நட்சத்திரம் (சரிபாதியுருவமுடையது) வாயு மண்டலம். சூனியமான இடம், நாவல் மரம்' கிளி பறவை, ப - ப எழுத்துக்கள். இந்த நட்சத்திரத்தில் புஷ்பதந்தம் (தேவகஜம்) உண்டாயிற்று. 24 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை விஷ, நாடியாம். யாத்திரை செய்யக் கூடாது. அல்லது 16 நாழிகைக்குப் பிறகு நீரைக் குடித்து விட்டு. தெற்குதிக்கு, மேற்குதிக்குகளில் பிரயாணம் செய்ய

சுபகாரமாகும். இந்த நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால் பிராண பயத்தை யுண்டு பண்ணும், அல்லது ஒரு மாத காலம் தீமையையுண்டு பண்ணும். அந்த தோஷத்திற்குபரிஹாரமாக அப்தேவதைகளைப் பூஜிக்க வேண்டும். இதற்கு வெளுப்பு வஸ்திரம் (வெண்சந்தனம்) வெள்ளை அரளிப்பு. மனோசிலை தூபம்,. பால் கலந்த அன்னம்நைவேத்தியம் (இவைகளைக் கொள்ள வேண்டும்) "யத்திஞ்ச(சே) தம்" என்ற மந்திரம், அல்லது "இமம் மே வருண" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து சிவப்புச் சம்பாச் சோறு நெய் இவைகளினாலே, காயத்திரியினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் மலர்களுடன் பால் சோற்றை யாவது, எள்ளு கலந்த சோற்றையாவது பலி கொடுக்க வேண்டும். ஒரு மாத காலத்திற்குள் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவதாக பிரௌடையானவள் கனவனை இழந்து கெட்ட நடத்தையுடையவள் ஆவாள்.

இந்த நட்சத்திரத்தில் முதல் முதலாக தாசியை கிரகித்துக் கொள்ளுவது (வைத்துக் கொள்ளுவது) கரும்பு நடுவது. எழுத்து கற்பது, காது குத்துவது பகைவர்களை அடியோடு அழிப்பது, சிராரத்தம் முதலிய காரியங்களைச் செய்வது போன்ற காரியங்களைச் சிறந்த பயனையளிப்பதாகும்.

### *இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

சிறிது நீண்ட (உயரமான) சரீரமடையவானாவன். சிறிய (மெல்லிதனம்) விரல்களையுடையவனாவான். வணக்கமுடையவனாவான். அரசர்களாலே வெகுமதிக்கப்பட்டவனாவான்.

இவைகளைச் செய்வது, தங்க நகைகளையணிந்து கொள்வது யாகம் செய்வது, மரங்களை வைத்து வளர்ப்பது, சௌரம் செய்து கொள்ளுவது, மருந்து செய்வது உண்பது பயிரிடுவது விதை விதைப்பது, பாக்கு தென்னம் பிள்ளைகள், வெத்திலைக் கொடிகள் இவைகளை வைத்துப் பயிரிடுவது. வியாபாரம் செய்வது குளம் முதலிய ஜலாசயங்களை வெட்டுவது. குகையில் புகுவது பூதாதிகளை உச்சாடனம் செய்வது (விறட்டியடிப்பது) மந்திரங்களை பிரயோகிப்பது. யந்திரங்களை வரைவது, இவைகளைச் செய்ய சிறந்த பலனுடையத்தாகும்.

### இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்

தர்மத்தையுணர்ந்தவனாவான் செல்வம் படைத்தவனாவான். திருடுகின்றவனாவான். வெகுமதிக்கதக்கவனகவான். பந்துக்களிடத்தில் பிரியமுடையவனாவான். சிவப்பு நிறமுடையவனாவான். காமியாவான். அதிக ரோகமுடையனாவான். சபலசித்தமுடையவனாவான். வணக்கமுடைய வனாவான். ஸ்வதந்திரமாக இருப்பவனாவான். 92 வயது பரமாயுளை யுடையவனாவான்.

## பூராடம்

குளம்- குட்டை- மடு- கிணறு- ஒடை- இவைகளை வெட்டுவது பவழம்- முத்து - ரத்னங்கள். இவைகளைச் சேகரிப்பது, வீட்டுக் கதவுகளுக்குத் தாள்ப்பாள் போடுவது, ஆயுதங்களை சாணை பிடிப்பது. அல்லது தீட்டி துளையுண்டு பண்ணுவது, இவைகளை அப்தேவதையான நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சரிக்கும்பொழுது (பூராட நட்சத்திரத்தில்) செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள்.

பு-த-ப-ட இவைகள் பூராட நட்சத்திரத்தைக் குறியிடுகின்ற எழுத்துக்கள். வெளுப்பு நிறம். 4 நட்சத்திரங்களைக் கொண்டது. அரைவட்ட சந்திரனைப் போன்ற. வடிவமுடையது பெண் நட்சத்திரம். வாநர யோநி. அப்புகள் தேவதைகளாவார்கள். பிராஹ்மண ஜாதி. கீழ் நோக்கமான நட்சத்திரம் 4 கால்களுடையது. உக்கிரமானது, ஆகாசம் (ஆகாயத்தைக் விஷயங்களை அறிந்து கொள்ளுகின்றவனாவான், பிரஸித்தி பெற்றவனாவான். பொருளைத் தானே சம்பாதித்துச் சேர்த்தவனாவான் ஆவலுடையவனாவான். சிரிப்பில் பிரியமுடையவனாவான். 90 வயது பரமாயுளை உடையவனாவான்.

## உத்திராடம்

அழகாக வீடு கட்டுவது, தேவாத பிரிதிஷ்டையுடன் நீண்ட காலம் விளங்கிக் கொண்டிருக்க கூடிய தேவாலயங்களை நிர்மாணம் செய்வது, தேவதை முதலியவற்றை பூஜை செய்வது,. சாந்திகரமான காரியங்களைச் செய்வது, உத்ஸவங்களைச் செய்வது, அளங்காரங்களைச் செய்வது,

அபிஷேகங்களைச் செய்வது, ஸ்தம்ப பிரதிஷ்டை செய்வது, விதை விதைப்பது கொடிகள், செடிகள், வைத்துப் பயிரிடுவது எல்லைப் புறத்தை நிர்மாணம் செய்வது] அல்லது செப்பனிடுவது, ஆடை - ஆபரணங்களை அணிந்து கொள்ளுவது, சுப கரமான காரியங்களைச் செய்வது, திருமணம் செய்வது, முதலான சுபகாரியங்களை விசுவே தேவர்களை அதிதேவதையாகக் கொண்ட உத்திராட நட்சத்திரத்தில் செய்ய வேண்டும். உத்திராட நட்சத்திரமானது யானையின் தலை போன்ற வடிவம் உடையதாகும். இது 8 நட்சத்திரங்களைக் கொண்டது. பே-போ-ஜ-ஜீ இவைகள் உத்திராட நட்சத்திற்குரிய எழுத்துக்களாகும். சிவப்பு நிறம். 8 நட்சத்திரங்களுடையது. யானைத் தலையைப் போன்ற வடிவமுடையது பெண் நட்சத்திரம். மனிதகணம். கோ (பசுமாடு) யோநி. விஸ்வே தேவதைகள் தேவதைகளாவார்கள். 3 கால்களுடையது. மேல் நோக்கு நட்சத்திரம். மங்கலான பார்வையுடையது. பலா மரம். பாரது வாஜம் (சொம்போத்து) பறவை. ஸ்திரமான நட்சத்திரம். இடம் வெட்ட வெளி - இந்திர மண்டலம் மகாரம் எழுத்தாகும். இந்த நட்சத்திரத்தில் சல்யண பிறந்தான். 20 நாழிகைக்கு பிறகு. 4 நாழிகை விஷநாடீ காலமாகும். ஸக்துமாவைத் தின்று விட்டு [ஸக்து - நெல் வறுத்தமா] மேற்கு - தெற்கு திக்குகளில் பிரயாணம் செய்ய சுபமாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராண பயத்தை யுண்டு பண்ணும். அல்லது ஒரு மாத காலம் துன்பத்தையளிக்கும். இந்த தோஷத்திற்கு பரிஹாரமாக விஸ்வே தேவதைகளைப் பூஜிக்க வேண்டும். அதற்கு.. வெளுப்பு வஸ்திரம் பில் வசந்தனம் பஞ்சவர்கண (ஐந்து விதமான நிறங்களுடன் கூடிய) மலர்கள். விளாமிச்சை வேர் தூபம். பஞ்ச (ஐந்து) பறவை நைவெத்தியம். இவைகளை வைத்துக் கொள்ளவேண்டும். "விஸ்வேதேவாஸ ஆகாத" என்ற மந்திரத்தினாலே ஷோடசோபசார பூஜை செய்து, பயத்தம் பருப்புடன் பொங்கல், நெய் இவைகளினாலே, காயத்ரியினாலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் - மலர்களுடன் பாலுடன் கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். ஒரு மாத காலத்திற்குள் சுகமடைவான். வெளுப்பு பசுவை தானம் செய்ய வேண்டும்.

இந்த நட்சத்திரத்தில், முதலாவதாக பிரௌடை ஆனவள் பதிவ்ரதை யாகவும் புத்திரபாக்கியமுடைவளாகவுமிருப்பாள்.

இந்த நட்சத்திரத்தில் ருதுமதியாவது, பும்ஸவனம் - சிமந்தம், நாமகரணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம் சௌளம், உபநயனம். வேதாப்பியாஸம் சாஸ்திராப்பியாஸம், சமாவர்தனம். திருமணம், தைலகுளியல், ராஜ்யத்தை அடைதல் துணி அலங்காரங்களை செய்து கொள்ளுவது, பட்டாபிஷேகம் நகரம் கிராமங்களை அமைப்பதற்காக சங்குஸ்தாபனம் செய்வது, நகரப்பிரவேசம், கிராம்பிரவேசம், செடிகளை நடுவது விதை விதைப்பது தனம் தானியங்களைச் சேகரிப்பது, பசுக்களை விலைக்கு வாங்குவது, பூமியை தன்வசமாக்கிக் கொள்ளுவது அல்லது விலைக்கு வாங்குவது, பூமியை தன்வசமாக்கிக் கொள்ளுவது அல்லது விலைக்கு வாங்குவது, குளம் முதலிய ஜலாசயங்களைக் கல்பிப்பது, இது போன்ற நீண்ட காலமிருக்கக் கூடிய காரியங்களைச் செய்வது, முதலியவைகளைச் செய்ய சிறந்த பலனுடையதாகும்.

### *இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

சர்வஜ்ஞனாவான் (எல்லாவற்றையுமறிந்தவன் ஆவான்) சுகத்தை யனுபவிக்கத்தக்க மனமுடையவனாவான். எப்பொழுதும் சௌக்கியமும் சந்துஷ்டியும் உடையவனாவான்) நல்ல ஒழுக்கமுடையவனாவான். பருத்த பிருஷ்ட பாகங்களையுடையவனாவான். விரிந்த கண்களையுடையவனாவான். குணங்கள் நிறைந்தவனாவான். சிறந்த சுபவாமுடையவனாவான். ஸ்வல்பமான தூக்க முடையவனாவான். (ஆழ்ந்த நீடித்த தூக்கமில்லாதவனாவான்) கருணையுடையவனாவான். நன்கு பேசக் கூடியவனாவான் தர்மசீலனாவான். சூரனாவான். 90 வயது பரமாயுளையுடையவனாவான்.

## அபிஜித் நட்சத்திரம்

உத்திராடத்தில் பின்பகுதி, திருவோணத்தின் முன்பகுதி இவ்விரண்டும் சேர்த்து அபிஜித் என்னும் நட்சத்திரமாகும். இது 3 நாட்சத்திரங்களைக் கொண்டது. நார்சந்தியை போன்ற வடிவமுடையது இதில் பிறந்தவன், மிகச் சிறந்த அழகுடையவனும், சாதுக்களாலே விரும்பத்தக்கவனும்,

வணக்கமுடையனும், நல்ல புகமுடையவனும், அழகான வீட்டில் வசிப்பவனும் பிராமணர்கள் தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவனும், நன்றாக பேசக், கூடியவனும், தனது வம்சத்தில் அரசனுமாவான்.

## திருவோண நட்சத்திரம்

திருவோண நட்சத்திரத்தில், ஹோமம், யஞ்ஜதீக்ஷை விரதங்கள், வித்தியாரம்பம், சௌளம், உபநயனம். கர்பாதானம், கர்ணவேதனம், பிரயாணம், தேவதைகளின் பிரிதிஷ்டை இவைகளைச செய்ய வேண்டும்:

திருவோண நட்சத்திரமானது 3 ஹாரங்களைப் போன்றவடிவ முடையதாம், ஷி, ஷீ ஸெ, ஸொ, இவ்வெழுத்துக்கள், சிரவண நட்சத்திரத்திற்கரிய எழுத்துக்களாம். கருப்பு நிறம். வில்லைப்போன்ற வடிவமுடையது. புருஷ நட்சத்திரம், தேவகணம்,. வானரயோனி விஷ்ணு தேவதை பிராமண ஜாதி. 4 பாதங்களடையது. மேல் நோக்கு நட்சத்திரம். நல்ல கண்களுடையது, சர நட்சத்திரம். உள்ளே வெளிப்பக்கம். பட்டணம் இருப்பிடம். இந்திரமண்டலம். டோ எழுத்து. சம நட்சத்திரம். உள்ளே வெளிப்பக்கம். பட்டணம் இருப்பிடம், இந்திரமண்டலம். டோ எழுத்து. சம நட்சத்திரம் எருக்குமரம். காடை பறவை. இந்நட்சத்திரத்தில் அங்காரகனும் விபீஷணனும் பிறந்தார்கள். 10 நாழிகைக்குப் பிறகு 4 நாழிகை காலம் விஷநாடிகாலமாம்.

சம்பா அரிசிமாவைத் தின்றுவிட்டு தெற்கு - மேற்கு திக்குகளில் பிராயாணம் செய்ய நன்மையுண்டாகும்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் 11 நாள் துன்பத்தையுண்டு பண்ணும். அந்த தோஷத்திற்கு பரிஹாரமாக விஷ்ணுவை பூஜிக்க வேண்டும். இதற்கு, கருப்பு துணி, சந்தனம், கஸ்தூரி, பச்சைக்கர்பூரம். குங்குமப்பூ. முதலிய வாசனை பொருள் துளசி, தசாங்கதூபம், சம்பா அரிசிச்சோறு. இவைகளைச் சேகரித்துக் கொள்ள வேண்டும்.

"அதோதேவா" என்ற மந்திரத்தினாலேயாவது, "இதம் விஷ்ணு" என்ற மந்திரத்தினாலேயாவது ஷோ சோபசார பூஜை செய்வது அரசு

சமித்து, அரிசி நெய், இவைகளினாலே காயத்திரீ மந்திரத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்யவேண்டும். சந்தனம் மலர்களுடன பால் கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்ய 11 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரல், முதலாவது புஷ்பவதியாவது சிறந்ததாகும். இந்த நட்சத்திரத்தில், புமஸ்வனம், சீமந்தம், நாமகரணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம், சௌளம், உபனயனம். க்ஷௌரம் இவைகளைச் செய்வது, எண்ணை தேய்த்துக் கொண்டு குளியல் செய்வது. அக்ஷராப்யாஸம், வேதம், சாஸ்திரங்களைத் கற்றுக் கொள்ளுவது, புதிய வஸ்திரம் - ஆபரணம் முத்துக்களாலான ஆபரணங்கள் இவைகளை யணிந்து கொள்ளுவது அரசனுக்கு பட்டாபிஷேகம் செய்வது, பௌர்ணமி முதலிய விரதங்களைச் செய்வது, கிருஹப்பிரவேசம் செய்வது, வைஷ்ணவ தேவதைகளை பிரஷ்டை செய்வது, யாகங்கள் செய்வது. உபதேசம் செய்வது, சாந்திகரமான காரியங்களையும், பௌஷ்டி கரமாண காரியங்களையும் மஹோத்ஸவங் களையும் செய்வது, மந்திரங்களை அப்பியாஸம் செய்வது, பயிரிடத் துவங்குவது, விதை விதைப்பது, மருந்து உண்பது முதலிய காரியங்களைச் செய்ய சிறந்த பலனையளிப்பதாகும்.

### *இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

கருப்பான சரீரமுடையவனாவான். புஷ்டியுடையவனாவான். விசித்திரமான ஆடைகளை யணிந்து கொள்ளுகின்றவனாவான். வாசனைப் பொருள்களில் பிரியமுடையவனாவான். பிறர் மனைவியுடன் புணர்ச்சியல் பிரியமுடையவனாவான். உதாரமான சுவபாவமுடையவனாவான். பந்துக்களிடத்தில் அன்புடையவனாவான். அதிகமாக சிலவு செய்பவனாவான். அழகுடையவனாவான். நன்றாகப் படிப்பவனாவான். கெட்ட யோசனைகளைச் சொல்லுகின்றவனாவான். குல்மம் முதலிய ரோகங்களுடையவனாவான். வேறு தேசங்களில் வசிப்பவனாவான். பேராசையுடையவனாவான். அல்லது காமியாவான். மந்திரவாதம் செய்பவனாவான். செல்வம் அல்லது பெருந்தன்மையுடையவனாவமன். குஹ்யப் பிரதேசத்தில் (ஆண் குறியில்) மச்சம் உடையவனாவான். 90 வயது பரமாயுளையுடையவனாவான்.

## அவிட்ட நட்சத்திரம்

இந்த அவிட்ட நட்சத்திரத்தில், வித்தியாப்பியாஸம், உபநயனம், மைகள், மருந்துகள், வெண்குடை, படுக்கை ஆசனங்கள் சாப்பாடு, வேள்வியில் அபிஷேகம், சுபகரமானது, தோஷபரிகாரமானதும், புஷ்டிகரமுமான காரியங்கள் இவைகள் சித்திக்கும்.

அவிட்ட நட்சத்திரமானது மத்தளவடிவமான நான்கு நட்சத்திரங்களையுடையதாம், கா - கீ, கூ - கே இந்த எழுத்துக்கள் தனிஷ்டா நட்சத்திரத்திற்குரிய எழுத்துக்களாகும். வெளுப்பு நிறம் 4 நட்சத்திரங்களுடையது.. மிருதங்கத்தைப் போன்ற வடிவமுடையது பெண் நட்சத்திரம். ராட்சஸ கணம், சம்ஹயோனி, வசுக்கள் தேவதைகள் மேல் நோக்கு நட்சத்திரம். பொட்டைக்கண்,. அந்தரிக்ஷம் இடம், கிராமம் இருப்பிடம்,. இந்திர மண்டலம்,. வன்னி மரம். பறவை வண்டு,. த்ரய எழுத்துக்களாம். இந்த நட்சத்திரத்தில் துந்துபி வாத்தியம் உண்டாயிற்று.

10 நாழிகைக்குமேல் 4 நாழிகை காலம் விஷநாடியாகும். எள்ளுடன் அரிசியைத் தின்றுவிட்டு கிழக்கு வடக்கு திசையில் பிரயாணம் செய்ய சுபமாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜ்வரம் வந்தால் ஒரு மாதகாலம் அரிஷ்டமாம். அந்த தோஷபரிஹாரத்திற்கு வசக்களை பூஜிக்க வேண்டும். அதற்கு வெளுப்பு துணி, சந்தனம், தாமரைமலர், குங்கிலியதூபம், பாயஸம் நைவேத்தியம் இவைகள் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

''தராதாரம்'' என்ற மந்திரத்தினாலே, ஷோடசோபசார பூஜை செய்ய வேண்டும். அத்திசமித்து நெய் இவைகளினாலே காயத்ரீ மந்திரத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்யவேண்டும். சந்தனம் மாலைகளுடன் பாலுடன் அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்தால் ஒரு மாதத்தில் குணமாகும்.

இந்த நட்சத்திரத்தில், பெண்களுடன் புணர்ச்சி பெயரிடுதல், அன்னப்பிராசனம், காதுகுத்துதல், குடுமி வைப்பது, பூநூல் போடுவது,

தைலம் தேய்த்துக் குளிப்பது, புதிய ஆடை ஆபரணங்களையணிவது, 4 விதமான வாகனங்கள் - ஊஞ்சள் - குடை - சாமரம் இவைகளைத் துவக்குவது, விதை விதைப்பது, யானை முதலிய வாகனங்களைப் பழக்குவது. விலைக்கு வாங்குவது, விலைக்குக் கொடுப்பது இவைகளைச் செய்ய நல்ல பலனுண்டாம்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்களாவன*

சாஸ்திரத்தில் ஸ்வல்பப் பயிற்சியுடையவனாவான். தே ஜோ வனாவான், முயற்சியுடையவனாவான். பருத்த சரீரமுடையவனாவான். நாட்டியம் - பாட்டு-பெண்கள் இவைகளில் பிரிய முடையவனாவான். ஏழ்மையுடை யவனாவான். பொய் பேசுபவனாவான். அரசனுக்கு சேவகனாவான். தாது வாதம் செய்பவனாவான். கருணையற்றவனாவான். கெட்ட காரியங்களைச் செய்கின்றவனாவான். உஷ்ணமான உடலையுடையவனாவான். கோள் சொல்லுகிறவனாவான். 75 வருஷ காலம் ஜீவித்திருப்பவனாவான்.

## சதய நட்சத்திரங்கள்

நீர்த்தேக்கங்களை கல்பிப்பது, பூந்தோட்டம் வளர்ப்பது. பயிரிடுவது முதலிய காரியங்களைச் செய்வது. பவழம் - முத்து முதலியவைகளைச் சேகரிப்பது. குதிரைகளுக்கு பீடாபரிஹாரமான சாந்திகளைச் செய்வது ஜபம் ஹோமம், தானங்களைச் செய்வது, ஜபம் ஹோமம், தானங்களைச் செய்வது ஆகிய காரியங்களை சதய நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.

சதபிஷேக் என்னும் சதய நட்சத்திரமானது 100 நட்சத்திரங்களை யுடையதாம். இதனாலேயே இதற்கு சதாதார என்று பெயர். இது கோளத்தைப் போலிருப்பதாகும். கோ-ஸா - ஸி - ஸீ இவைகள் சதய நட்சத்திரத்திற்குரிய எழுத்துக்களாம் சிவப்பு நிறம், 100 நட்சத்திரங் களுடையது, புஷ்பவர்ஷத்தைப் போன்ற வடிவமுடையது,. நபும்ஸக நட்சத்திரம். ராட்சஸ கணம். குதிரையோனி, வருணன் தேவதை. சத்ரிய ஜாதி மேல் நோக்கு நட்சத்திரம். மங்கிய கண்ணுடையது, சர நட்சத்திரம் உள்ளே இருப்பதாம். சம நாட்சத்திரமாம், இருப்பிடம் வெட்ட வெளியாம்,

வருணமண்டலம் அடப்ப மரம். பறவை குயிலாம். ஷகாரம். எழுத்தாம். இந்த நட்சத்திரத்தில் வருணன் பிறந்தார். 18 நாழிகைக்குப்பிறகு 4 நாழிகை விஷ நாடியாம் அரிசியைத் தின்றுவிட்டு கிழக்கு வடக்கு திக்குகளில் பிராயணம் செய்ய நன்மையுண்டாம்.

இதில் ஜ்வரம் வந்தால் பிராண பயத்தையுண்டு பண்ணும் அல்லது 11 நாள் அரிஷ்டத்தையளிக்கும்.

அந்த தோஷ பரிஹாரத்தில் வருணனை பூஜிக்க வேண்டும். இதற்கு வெண்மையான துணி, தாமரை மலர், சந்தனம், கற்பூர தூபம், நெய்யுடன் அன்னம் நிவேதனம் இவைகள் வேண்டும். ''அவதேஹே'' என்ற மந்திரத்தினாலே ஷோட சோபசார பூஜை செய்து, தாமரை மலர்கள் நெய் இவைகளினாலே காயத்திரியினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் மலர்களுடன் பாலுடன் கூடிய அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். 11 நாட்களில் குணமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவது பிரௌடையானவள், பிள்ளைகளுடையவளாவாள். சிறிது கோபமுடையவளுமாவாள்.

இந்த நட்சத்திரத்தில் ஸ்திரீ ஸம்போகம், நாம கரணம் அன்னப் பிசரானம், சௌளம், உபனயனம், அக்ஷராரம்பம் சாஸ்திரங்களைக் கற்பது, தைலம், தேய்த்துக் குளிப்பது, அரசனுக்கு பட்டாபிஷேகம் செய்வது, யானை குதிரைகளை கிரஹிப்பது, முத்துக்களை வாங்குவது, அணிவது, கண்களுக்கு அஞ்சனங்களைத் தீட்டுவது, தேவதைகளை பிரதிஷ்டை செய்வது, அணைகள், கண்களுக்கு அஞ்சனங்களைத் தீட்டுவது, தேவதை களை பிரதிஷ்டை செய்வது, அணைகள், பாலங்களைக் கட்டுவது, நீர்க்குழாய்களை வைப்பது, பிள்ளையை சுவீகாரம் செய்து கொள்ளுவது வியாபாரம் செய்வது, கிரய விக்கிரயங்கள் செய்வது, பயிரிடுவது விதை விதைப்பது, முதலிய சுப காரியங்களைச் செய்ய சிறந்ததாகும்.

### இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்

அகண்ட உடலை யுடையவனாவான். உலகத்தினாலே கௌரவிக்கத்

தக்கவனாவான். பல குழந்தைகளுடையவனாவான். பந்துக்களுக்கு உபகாரம் செய்கின்றவனாவான். பகைவனை அழிப்பவனாவான். ஸ்திரமான (நிலையான) ஆயுளையுடைவனாவான். வழக்காடுவதில் சிறந்தவனாவான். ரத்த சம்பந்தமான ரோகமுடையவனாவான். அயோக்கியத்தனமான குண முடையவனாவான். ஸ்வல்பமான அறிவுடையவனாவான். நிலையற்ற மனமுடையவனாவான். சூரனாவான், நெஞ்சுறம் பெற்றவனாவான். சிறந்த பிள்ளைகளைப் பெற்றவனாவான். நீதியை நடத்துபவனாவான். ஸ்வல்பமரன. படிப்புயவனாவான். மிகுந்த கர்வமுடையவனாவான். 86 வயது பரமாயுளையுடையவனாவான்.

## பூரட்டாதி நட்சத்திரம்

வித்தியாரம்பம், யானைகளைப் பிடித்துக் கட்டுவது, வேதாளாதிகளை ஆவேசிக்கச் செய்வது, கல்பங்களைச் செய்வது அல்லது கல்பங்களை உபயோகிப்பது, தாதுவாதம் செய்வது, சூதாடத் துவங்குவது, ஆகாயத்தில் செல்லத்துவங்குவது, சாஸ்திரங்களை அப்பியஸிப்பது, இவைகளை பூரட்டாதி நட்சத்திரத்தில் செய்ய வேண்டும்.

பூரட்டாதி, உத்திரட்டாதி இவ்விரண்டும் நட்சத்திரங்களும் 2,2 நட்சத்திரங்களாம். இந்த 4 நட்சத்திரகளும் சச்சதுரமாக இருப்பவைகளாம் ஸே - ஸோ – தா - தீ - இவைகள் பூரட்டாதிக்குரிய எழுத்துக்களாம். கருப்பு நிறம் 2 நட்சத்திரம் – 3 கால் நட்சத்திரம். கட்டிலைப் போன்ற வடிவமுடையது. புருஷ நட்சத்திரம், மனிதகணம், சிம்மயோனி, அஜைகபாத் தேவதை. பிராம்ஹண ஜாதி. கீழ்நோக்கு நட்சத்திரம் நடுத்தரமான பார்வையுடையது. கடுமையானது. உள்ளுக்குள் இருப்பது சமமான நட்சத்திரம். இருப்பிடம் பட்டணம். இந்திர மண்டலம். மாமரம். பறவை மாடப்புறா. லகாரம் எழுத்தாம். இந்த நட்சத்திரத்தில் கர்ணன் பிறந்தான்.

16 நாழிகைக்குமேல் 4 நாழிகை காலம் விஷகடிகையாம். இந்த நட்சத்திரத்தில் யாத்திரை செய்யக் கூடாது. அல்லது தேனை உண்டு. கிழக்கு வடக்குதிக்குகளில் பிரயாணம் செய்ய சுபமாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் பிராண பயத்தையளிக்கும். அல்லது ஒரு மாதம் பீடிக்கும். இந்த தோஷபரிஹாரத்தி, அஜைகபா தேவதையை பூஜிக்க வேண்டும். அதற்கு சிவப்பு வஸ்திரம், குங்குமம் கலந்த அல்லது சிவப்பு நிறமான சந்தனம், எருக்கம்பூ தசௌஷகிதூபம் (10 மூலிகைகளாகிய தூபம்) தயிர் கலந்த அன்னம் நிவேதனம். இவைகள் அவசியமானவைகளாம்.

"சமக்நி" என்ற மந்திரத்தினாலே ஷோடசோசார பூஜை செய்து அன்னம்,. நெய் இவைகளினாலே, காயத்தீரி மந்திரத்தினாலே, 103 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம் புஷ்பமாலைகளுடன் பால் கலந்த அன்னத்தை பலி கொடுக்க வேண்டும். இவ்விதம் செய்தால் ஒரு மாதத்தில் குணமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதலாவது பிரௌடையானவள். விதவை (கணவனை இழந்தவள்) ஆவாள்.

இந்த நட்சத்திரத்தில், வித்தியாரம்பம் செய்வது கிராமத்தை வாங்குவது, ஏவல் செய்வது, திருடுவது, கலகம் செய்வது, சூதாடுவது, விவஹாரம் செய்வது (பகைவனைப் பிடித்து) கட்டுவது ஓடை - கிணறு - குளம் இவைகளை வெட்டுவது, பெரிய குகைக்குள் புகுவது, பகைவர்களுக்குள் பேதத்தையுண்டு பண்ணுவது. பூதம் - பிரேதம் - பிசாசம் இவைகளின் மந்திரங்களை பிரயோகிப்பது. இவைகளை விரட்டுவது. தாதுவாதம் செய்வது, முதலிய கொடூரமான காரியங்களைச் செய்வது, சிறந்ததாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

தாமரை மலரைப் போன்ற கண்களையுளையவனாவான். செல்வமுடையவனாவான். மிகவும் உதாரமான குணமடையவனாவான். பெண்களிடத்தில் பிரீதியுடையவனாவான். தானம் செய்யும் ஸ்வபாவமுடையவனாவான். பிரியமாகப் பார்க்கத்தக்கவனாவான். பக்கத்திலுள்ளவர்களிடத்தில் கவனத்துடனிப்பனாவான். அல்லது அலங்காரங்கள் செய்து கொள்ளுவதில் பற்றுதலுடையவனாவான். வெகுகாலம் ஜீவித்திருப்பவனாவான். பலவிதமான

சுகபோகங்களையும் அனுபவிப்பதற்கு வேண்டிய செல்வமுடையவனாவான். கழுத்தில் ரோகமுடையவனாவான். பசி தாகங்களைப் போக்கிக் கொள்ளுவதற்காக எல்வித காரியங்களையும் செய்யாதவனாவான். 96 வயது ஜீவித்திருப்பவனாவான்.

## உத்திரட்டாதி நட்சத்திரம்

வெகு காலம் நீடித்திருக்கக் கூடிய காரியங்கள், புஷ்டி கரமான காரியங்கள், மங்களகரமான காரியங்கள், திருமணம் யாகம், பிறருடையதை தன்னுடையதாக்கிக் கொள்ளுதல், அரசனுடைய பட்டாபிஷேகம், ஆடை ஆபரணங்களை அணிதல், ஆகிய காரியங்கள் உத்திரட்டாதியில் சந்திரன் ஸஞ்சரிக்கும் பொழுது செய்ய வேண்டும். அவைகள் சிறந்த பலனையளிப் பவைகளாம்.

பூரட்டாதி - உத்திரட்டாதி இவ்விரண்டு நட்சத்திரங்களும் ஒவ்வொன்றும் 2.2 நட்சத்திரங்களுடையவைகளாம். து, ம், டா, தா இவைகள் பூரட்டாதி நட்சத்திரம் எழுத்துக்களாம் வெளுப்பு நிறம், 2 நட்சத்திரங்கள், சத்தி வடிவமுடையது. புருஷ நட்சத்திரம் மனிதகணம், கோயோனி, அஹர்புத்தியன் தேவதையாவார். க்ஷத்திரிய ஜாதி மேனோக்கு நட்சத்திரம். அழகிய கண்கள் உடையது. நாலு பாதங்கள் உடையது. சம நட்சத்திரம் ஹகாரம் வீகாரங்கள் எழுத்துக்கள், இருப்பிடம் கிராமம். வாயுமண்டலம், வேம்பு மரம், பறவை குயில், இந்த நட்சத்திரத்தில் ஜடாயு பிறந்தார்.

24 நாழிகைக்கு மேலே 4 நாழிகை விஷ கடிகையாம். சம்பா அரிசியைத் தின்றுவிட்டு, கிழக்கு வடக்கு இந்த திக்குகளில் பிரயாணம் செய்ய சுபகரமாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் 7 நாள் அரிஷ்டத்தையளிக்கும். அதற்கு அஹார்புத்திய தேவதா சந்தி செய்ய வேண்டும். அதற்கு வெளுப்பு துணி, கருங்காலி கந்தம். தாமரைப் பூ, நெய்யும் குங்குலியமும் தூபம், சர்க்கரை பொங்கல் நிவேதனம், இவைகள் தேவையாம்

"விஷ்ணுர்யோனிம்'' என்ற மந்திரத்தினலே ஷோடசோபசார பூஜை செய்து, நெய் கலந்த உளுந்து, அல்லது உளுந்து, நெய் இவைகளாலே, காயத்ரியினலே 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். சந்தனம், மாலை இவைகளுடன், சர்க்கரைப் பொங்கலை பலி கொடுக்க வேண்டும். 7 நாட்களில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் முதல் பிரௌடையானவள், சௌபாக்கியமும் பிள்ளைகளுமுடைபவளாவாள்.

இந்த நட்சத்திரத்துல், பிரௌடையாவது, சீமந்தம் - பும்ஸவனம், நாமகரணம், அன்னப்பிராசனம், காதுகுத்துவது, முடி வைப்பது, பூநூல் போடுவது, சமாவர்தனம் (வேத விரதங்களை செய்து முடிப்பது) ஆபரணங்களை அணிவது, அலங்காரம் செய்து கொள்ளுவது அரசனுக்கு பட்டாபிஷேகம் செய்வது, சாந்திக பௌஷ்டிக கர்மாக்களைச் செய்வது, சிம்மாஸனம், 4 விதமான வாகனங்கள் ஊஞ்சள் அல்லது பல்லாக்கு இவைகளில் ஏறி உட்காருவது. படுக்கையை ஸ்தாபிப்பது (அதற்காக குறிப்பிட்ட இடத்தில் வைப்பது) பட்டணத்தில் பிரவேசிப்பது, பயிரிடுவது, விதை விதைப்பது, தானியங்களை சேகரிப்பது, முதலிய சுபகாரியங்களைச் செய்ய சிறந்த பயனையளிப்பதாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

காரியங்களை அறிந்து செய்கின்றவனாவான். நாட்டியம் - கீதம் - சாத்திரம் இவைகளில் பிரியமுடையவனாவான். யௌவனப் பருவமுடைய பெண்களிடத்தில் பிரியமுடையவனாவான். மனோ தைரியமுடையவனாவான். பகையை வெல்லுமாற்றலுடையவனாவான். சிறந்த புத்தியுடையவனாவான். மக்களுக்கு பயத்தையளிப்பவனாவான். செல்வமுடையவனாவான். அதிக போகியாவான். சந்தனம் மலர்களில் பிரியமுடயவனாவான். மெதுவாக நடப்பவனாவான் கூனனாவான். தன் மனைவியை வெறுப்பவனாவான். பந்துக்களை நிந்தனை செய்கின்றவனாவான். 90 வயது ஜீவித்திருப்பவனாவான்.

## ரேவதி நட்சத்திரம்

உபநயனம், க்ஷௌரம், திருமணம், வீடு நகரம் முதலான இருப்பிடங்களை அமைத்துக் கொள்ளுவது, யானை குதிரை முதலான வாகனங்களில் ஏறுவது, முதலிய காரியங்களை ரேவதி நட்சத்திரத்தில் செய்ய சுப பலன் உண்டாகும்.

ரேவதி நட்சத்திரமானது மீனைப்போன்ற தோற்றமுடைய 32 நட்சத்திரங்களையுடையதாம். தே- தோ- சா - சி. இவைகள் ரேவதி நட்சத்திரத்திற்குரிய எழுத்துக்களாம். சிகப்பு நிறம், 32 நட்சத்திரங்களுடையது. மீன் போன்ற வடிவமுடையது. தேவகணம், பெண் நட்சத்திரம், கஜயோனி, பூஷா தேவதை 4 பாதங்களுடையது. குறுக்கு முகம் பொட்டைக்கண், மிருதுஸ்வபாவம், வெளிப்பக்கம், சம நட்சத்திரம். இடம் பொட்டல் வருணமண்டலம். இலுப்பை மரம். பறவை மயில், சஷகாரம், எழுத்து. இந்த நட்சத்திரத்தில் அபிமன்யு பிறந்தான்.

30 நாழிகைக்கு மேலே, நான்கு நாழிகை விஷ நாடியாம். மாவைத்தின்று விட்டு கிழக்கு வடக்கு திக்குகளில் பிரயாணம் செய்ய சுபமாம்.

இந்த நட்சத்திரத்தில் ஜீவரம் வந்தால் ஒரு மாத காலம் அரிஷ்டமாம். அதற்கு பரிஹாரம் பூஷா என்னும் தேவதையை பூஜை செய்ய வேண்டும், அதற்கு தாமரை மலரைப் போன்ற நிறமுடைய சிவப்பு வஸ்திரம். செஞ்சந்தன கந்தம். மந்தாரைப்பூ, குங்குலிய தூபம், எள்ளுஞ்சாரம் நைவேத்தியம். இவைகள் அவசியமாம்.

"ஹம்ஹ: ஸசிஷத்" என்ற மந்திரத்தினாலே ஷோடா சோபசார பூஜை செய்து, எள்ளுஞ் சாதம், நெய் இவைகளினாலே, காயத்திரீ மந்திரத்தினாலே, 108 தடவை ஹோமம் செய்ய வேண்டும். ஒரு மாதத்தில் சுகமடைவான்.

இந்த நட்சத்திரத்தில் வேள்வி. பும்ஸவனம், நாமகரணம். அன்னப்பிராசனம், சௌளனம், உபநயனம், வேத சாஸ்திரப் பியாஸம், அஹராரம்பம்,

தையம் தேய்த்துக் குளிப்பது, வஸ்திரம் - ஆபரணங்களை அணிவது, சமாவர்தனம், ராஜாதிஷேகம், ராஜதர்சனம், சிம்மாஸனம், பல்லாக்கு, யானை, குதிரை முதலிய வாகனங்களில் ஏறுவது சாந்திகரமானதும், புஷ்டிகரமானதுமான காரியங்களைச் செய்வது, மந்திரங்களைக் கற்றுக் கொள்ளுவது, மருந்து உண்பது, நாட்டியம், கானம், வாத்தியம் இவைகளை பிரயோகிப்பது, விதை விதைப்பது, யாத்திரை செய்வது, முதலிய சுப காரியங்களைச் செய்ய நல்ல பலனுண்டாகும்.

*இந்த நட்சத்திரத்தில் பிறந்தவனுடைய குணங்கள்*

சௌபாக்கியமுடையவனாவான். தேஜோவானாவான். பருத்த சரீரமுடையவனாவான். நிறைந்த அங்கங்களையுடையவனாவான். கோபமுடையவனாவான். ஸ்த்ரீகளிடத்சுகாதி போகங்களையனுபவிப் பவனாவான். பணத்தை வீண் செலவு செய்கின்றவனாவான். பண்டிதனாவான். நெடுங்காலம் ஜீவித்திருப்பவனாவான். விசித்திரமான பகைவர்களையுடையவனாவான். பித்த சரீரமுடையவனாவான். அன்ன தானம் செய்கின்றவனாவான். பொறாமையுடையவனாவான். கொடுஞ் செயலுடையவனாவான். தைரியமுடையவனாவான் அயல் நாடு செல்லுகின்றவனாவான். சிவப்பு மயிருடையவனாவான். 84 வயது ஜீவித்திருப்பவனாவான்.

# நட்சத்திரங்களைப் பற்றிய பிற செய்திகள்

# பாகம்-3

## பொருள் அடக்கம்


1. ஆண் - பெண் - அலி நட்சத்திரங்கள்
2. நட்சத்திர பறவைகள்
3. நட்சத்திர மரங்கள்
4. சவ்விய - அபசவ்விய நட்சத்திரம்
5. நட்சத்திர தெய்வங்கள்
6. அஷ்டதிக்குகளில் வசிக்கும் நட்சத்திரங்கள்
7. வடகிழக்கில் வசிக்கும் நட்சத்திரம்
8. பஞ்ச பட்சி நட்சத்திரங்கள்
9. பஞ்ச பூத - பஞ்சவர்ண நட்சத்திரங்கள்
10. நட்சத்திர யோகினியும் - திசையும்
11. நட்சத்திர கோத்திரங்கள்
12. ஆண் - பெண் - அலி நட்சத்திரங்கள்
13. நட்சத்திர நாடிகள், ரஜ்ஜீகள்
14. மாதா, பிதா, குழந்தை அரிஷ்டம்
15. மாமன் அரிஷ்டம்
16. கேட்டையின் அரிஷ்டம்
17. கெண்டாந்த நட்சத்திரம்
18. நட்சத்திரம் தியாஜ்யம்
19. நட்சத்திர அமிர்த கடிகை

20. அக்னி நட்சத்திரம்
21. அஷ்டம் ராசிக் கூறு நட்சத்திரம்
22. கலைஞானபாத, வைநாசிக நட்சத்திரம்
23. அர்த்த மூல நாழிகை, பாடாவாரி நட்சத்திரம்
24. உஷ்ண நட்சத்திரங்கள்
25. லாட நட்சத்திரம்
26. மாரண நட்சத்திரம் I, II
27. சூலம் - மகா சூலம்
28. சலா வேதை
29. பால் உள்ள நட்சத்திரம்
30. மலட்டு நட்சத்திரம்
31. வாம வேதை - தக்ஷண வேதை - சமூக வேதை
32. கூடாத நாட்கள்
33. நட்சத்திர யோகம்
34 நட்சத்திர பார்வை
35, வேதை நட்சத்திரம், விதவை நட்சத்திரம்
36. ஏகார்கள நட்சத்திரம்
37. நட்சத்திர தேசங்கள்
38. பகை - நட்பு நட்சத்திரங்கள்
39. அபமிருத்யு நட்சத்திரம்
40. குரு தோஷம், உச்ச நிலை நட்சத்திரங்கள்
41. கீழ் நிலை - இடைநிலை நட்சத்திரங்கள்
42. அனற்சிகை, ஜலகஷ்க நட்சத்திரங்கள்
43. வேதக்கயிறு (ரஜ்ஜு), மாகேந்திரம்
44. அமிர்தம் இருக்கும் நாழிகைகள்
45. வருண மண்டலங்கள்

46. மாகேந்திர - வாயு - அக்னி மண்டலங்கள்

47. பாவ தினங்கள்

48. நட்சத்திர தொகை - வடிவம்

49. நட்சத்திர சூலம்

50. ஜன்மாதி நட்சத்திர பெயர் - அதற்குரிய கிரகம்

51. நட்சத்திர குலப்பிரிவு

52. நாம நட்சத்திர எழுத்துக்கள்

53. உறவினர்க்கு - மாதா - பிதா, பெற்றோர் அரிஷ்டம்

54. பாட்டன், அம்மான் அரிஷ்டம்

55. பூமி வசிய நாட்கள்- மூகூர்த்த நட்சத்திரம்

56. நட்சத்திர தாரா பலன்

57. ருது நட்சத்திர பலன்கள்

58. நல்ல காரியம் செய்ய உகந்த நட்சத்திரங்கள் (சீமந்தம், பெயர் சூட்ட, காது குத்த, அன்ன ப்ராசனம், மயிர்கழிக்க, வித்யாரம்பம், பதவி ஏற்க)

59. கோடி உடுத்த, வாகனம் ஏற, ஆபரணம் பூண, பொன்னேர் செலுத்த, விதை விதைக்க, கிழங்கு பயிரிட, பயறு வகை, கதிர் அறுக்க, களஞ்சி - யத்தில் தானியம் வைக்க - செலவிட, விருந்து

60. மனை கோல, கிணறு வெட்ட, பிரயாணம், மாங்கலியம் செய்ய

61. விவாகம், நிஷேகம், பும்சவனம், குழந்தையை தொட்டிலிட, உபனயனம், உழவு ஆரம்பிக்க

62. எருவிடல், மாடுவிட வாங்கல், விற்றல், கிரக ஆரம்பம், கிரகபிரவேசம், வியாதியஸ்தர்மருந்து சாப்பிட - குளிக்க

63. திருமணப் பொருத்த விபரங்கள் தினப் பொருத்தம்

64. கணம், மகேந்திரம். ஸ்திரீ தீர்கம்

65. நட்சத்திர யோனி பொருத்தம்

66. வேதைப் பொருத்தம்

67. ஆயுள் சோதனைப் பொருத்தம்

68. முழு சுபந்தரும் 18 நட்சத்திரங்கள்

69. சுபந்தரும் 11 நட்சத்திரங்கள்

70. சந்திர அவஸ்தை

71. சந்திர கிரியை

72. சந்திர வேளை

73. உலக தோஷம், பூகம்ப தோஷம்

74. லாட, வைதுருத, தோஷங்கள்

75. விபத்து, விரத்யுர, நிதன, கர்ம நட்சத்திரம்

76. சங்காதிக. சமுதாயக, வைநாசிக நட்சத்திரம்

77. மானச, அபிஷேக. கிராந்த நட்சத்திரம்

78. ஜன்ம நட்சத்திரம் - விதி விலக்கு

79. சுபத்திற்கு ஆகாத நட்சத்திரங்கள்

80. கர்ண வேதை, கண்ட நட்சத்திரங்கள்

81. ஒருகண், இருகண், குருட்டு நட்சத்திரம்

82. கிருக ஆரம்ப யோகம். யோக காலம்

83. உத்தம - மத்திம கிரக பிரவேச நட்சத்திரகள்

84. யாத்திரை செய்ய உத்தம நட்சத்திரங்கள்

85. திடஸ்வரூப நட்சத்திரம்

86. கிணறு வெட்ட உத்தம நட்சத்திரங்கள்

87. கெட்ட ஜனன நட்சத்திரம் (கண்டாந்த தாரை நட்சத்திரங்கள்)

88. நட்சத்திர அதிதேவதைகள் - குணங்கள்

89. மேல்நோக்கு, கீழ் நோக்கு, சமநோக்கு, மிஸ்ர நட்சத்திரங்கள்

90. சதாசி..ன் நாள், உக்ர நாள், துரிதநாள்

91. சர நாள், ஸ்திர, உபய, பய நாட்கள்

92. ஜல, சுட்க நாட்கள்

93. தலையற்ற, உடலற்ற, காலற்ற நாட்கள்

94. அபீஜித் நட்சத்திரம்

95. நட்சத்திர தோஷம்

96. நட்சத்திர வாரதோஷம்

97. தமையனுக்கு, சிறிய தகப்பனுக்கு தோஷம்

98. பாலாரிஷ்ட நட்சத்திரங்கள்

99. நட்சத்திர சந்தி, மாத சூன்யம்

100. வார சூன்யம், தனிஷ்டா பஞ்சனி

101. ஜனனத்தால் தோஷமுள்ள நட்சத்திரம்

102. மூல நட்சத்திர விருஷ விபாக பலன்

103. சொர்க - பாதாள - மத்ய மூலம்

104. விஷ கன்னிகை

105. விஷகன்னிகையின் பலன்

106. ஆயில்ய தோஷம்

107. வத-வைநாசிகம், பலன்கள்

108. துஷ்டதாரா தோஷ பரிகாரம்

109. ஜன்ம நட்சத்திரம் - ஆகாத சுபங்கள்

110. தினப்பொருத்தம்

111. ஏகதின பொருத்தம்

112. ஏக ராசி விஷயம்

113. கணப் பொருத்தம்

114. ராசியோனி

115. வேதைப் பொருத்தம்

116. நாடிப் பொருத்தம்

117. நட்சத்திர கிரக அம்சம் 7 வகை

118. வார சூன்ய நட்சத்திரம்

119. மாடு பொருத்தம்

120. 27 நட்சத்திரங்களில் செய்யும் சுபங்கள்

121. லப்தை நட்சத்திரங்கள்

122. நட்சத்திரப் பகை

123. நட்சத்திர அரிஷ்டம், கெடுதிக்கு தானம் செய்ய வேண்டிய விவரம் தனிப்பட்டியல்

124. நட்சத்திரங்களின் விஷ கடிகைகள்-

125. நட்சத்திரங்களின் அமிர்த கடிகைகள் தனிப்பட்டியல்-

126. மூலம், ஆயில்யம் பற்றிய தனிச் செய்திகள்-

127. சில நட்சத்திரங்களில் செய்யத்தக்கவை, தகாதவை

128. சில அசுப நட்சத்திரங்களில் மரணம் சம்பவித்தால் இறந்த வீட்டை மூட வேண்டிய மாதங்கள்-

129. கெண்டாந்த நட்சத்திரங்கள் வரிசைப்படி

130. ஆண், பெண் தோஷ நட்சத்திரம்

131. கெட்ட நட்சத்திரங்களில் மரணம் சம்பவித்தால் இறந்த வீடு மூடப்பட வேண்டிய மாதங்கள்

## நட்சத்திரங்கள் பொதுச் செய்திகள்

1. ***ஆண் நட்சத்திரங்கள்*** - அசுவனி, மிருகசீரிடம், பூசம், உத்திரம், சித்திரை, சுவாதி, கேட்டை, பூராடம், உத்திராடம். பூரட்டாதி.

2. ***பெண் நட்சத்திரங்கள்*** - கார்த்திகை, பூனர்பூசம், பூரம், அஸ்தம், விசாகம், மூலம், உத்திரட்டாதி முதலியனவாகும்.

3. ***அலி நட்சத்திரங்கள்*** - பரணி, ரோகிணி, திருவாதிரை, ஆயில்யம், மகம் அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி முதலியவை.

4. ***சவ்ய அபசவ்ய நட்சத்திரங்கள்***

***சவ்விய நட்சத்திரங்கள்:-***

அசுவினி புனர்பூசம் அஸ்தம் மூலம்

பரணி பூசம் சித்திரை பூராடம்

கார்த்திகை ஆயில்யம் சுவாதி உத்திராடம்

பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி

-ஆக - 15

***அபசவ்விய நட்சத்திரங்கள்:-***

ரோகிணி மகம் விசாகம்

மிருகசீரிடம் பூரம் அனுஷம்

திருவாதிரை உத்திரம் கேட்டை

-ஆக - 12

5, ***நட்சத்திர பறவைகள்:***

அசுவினி - ராஜாளி

பரணி - காக்கை

கார்த்திகை - மயில்

ரோகிணி - ஆந்தை

மிருகசீரிடம் - கோழி

திருவாதிரை - அன்றில்

புனர்பூசம் - அன்னம்

பூசம் - நீர்க்காக்கை

ஆயில்யம் - சிச்சிலிப்பறவை

மகம் - ஆண் கழுகு

பூரம் - பெண் கழுகு

உத்திரம் - கிளுவை சல்வேடு

அஸ்தம் - பருந்து

சித்திரை - மரங்கொத்தி

சுவாதி - ஆயப்பட்சி

விசாகம் - செவ்வாய்க் குருவி (வானம் பாடி)

அனுஷம் - சாதகப் புள்

கேட்டை - சக்கரவாகப் புள் (செம்பருந்து)

மூலம் - செம்போத்து (கௌதாரி)

பூராடம் - பேரண்டம்

உத்திராடம் - வலியன் (நரை)

திருவோணம் - வெண்டாழ் வான் குருவி

அவிட்டம் - பொன்வண்டு

சதயம் - அண்டங்காகம்

பூரட்டாதி - மூவலி (உள்ளான்)

உத்திரட்டாதி - கோட்டன்

ரேவதி - வல்லூறு

***நட்சத்திர மரங்கள்:-***

அசுவனி - எட்டி வைரம்

பரணீ - நெல்லி வைரம்

கார்த்திகை - அத்தி பால்

ரோகிணி - நாவல் பால்

மிருகசீரிஷம் - கருங்காலி வயிரம்

திருவாதிரை - செங்கருங்காலி வைரம்

புனர்பூசம் - மூங்கில் வைரம்

பூசம் - அரசு பால்

ஆயில்யம் - புன்னை பால்

மகம் - ஆல் பால்

பூரம் - பலாசு பால்

உத்திரம் - அலரி பால்

அஸ்தம் - அகத்தி பால்

சித்திரை - வில்வம் வைரம்

சுவாதி - மருது வைரம்

விசாகம் - வினா வைரம்

அனுஷம் - மகிழ வைரம்

கேட்டை - பராய் வைரம்

மூலம் - மரா (மூங்கில்) வைரம்

பூராடம் - வஞ்சி பால்

உத்திராடம் - பலா பால்

திருவோணம் - எருக்கு பால்

அவிட்டம் - வன்னி வைரம் *

சதயம் - கடம்பு வைரம்

பூரட்டாதி - தேமா பால்

உத்திரட்டாதி - வேம்பு பால்

ரேவதி - இலுப்பை பால்

* இக்குறியிட்டுள்ளவை பாலில்லா மரங்கள்

**நட்சத்திர தெய்வங்கள்:-**

அசுவினி - அசுவினி தேவர்

பரணி - துர்க்கை

கார்த்திகை - அக்னி

ரோகிணி - பிரும்மன்

மிருகசீரிடம் - சோமன்

திருவாதிரை - ருத்திரன்

புனர்பூசம் - அத்தி

பூசம் - குரு

ஆயில்யம் - ஆதிசேஷன்

மகம் - சுக்கிரன் (பித்ரு தேவதைகள்)

பூரம் - பார்வதி

உத்திரம் - அரியமா சூரியன்

அஸ்தம் - சாஸ்தா

சித்திரை - விஸ்வகர்மா

சுவாதி - வாயு (மருந்துக்கள்)

விசாகம் - இந்திராஙரி (குமரன்)

அனுஷம் - லட்சுமி

கேட்டை - இந்திரன்

மூலம் - நிருதிராட்சகன் (அசுரர்)

பூராடம் - அப்பு (வருணன்)

உத்திராடம் - விசுவதேவர்கள் (பிர்மா, கணபதி)

திருவோணம் - விஷ்ணு

அவிட்டம் - வசுக்கள்

சதயம் - வருணன்

பூரட்டாதி - குபேரன்

உத்திரட்டாதி - காமதேனு

ரேவதி - சனி

***கிழக்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்:-***

அசுவினி, ஆயில்யம், அனுஷம், பூரட்டாதி - ஆக-4. இதுவே இந்திர திசை - இந்த நட்சத்திரங்களை துவஜனுடைய நட்சத்திரங்கள் என்பார்கள்

***தென்கிழக்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்-***

பரணி, கேட்டை, மகம், உத்திரட்டாதி, ஆக 4. இதுவே, அக்னிதிக்கு இவற்றை தூமனுடைய நட்சத்திரங்கள் என்பார்கள்.

***தெற்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்:-***

கார்த்திகை, பூரம், மூலம், ரேவதி - ஆக 4. இதுவே இயமதிக்கு. இவற்றை சிம்மத்தின் நட்சததிரங்கள என்பர்.

*தென் மேற்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்*

மிருகசீரிடம், அஸ்தம், உத்திராடம், ஆக - 3. இது வருணதிக்கு, இவை ரிஷப (காளை) நட்சத்திரங்கள்.

*வடமேற்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்*

திருவாதிரை, சித்திரை, திருவோணம் - ஆக-3. இது வாயுதிக்கு- இவை கர்த்தப (கழுதை) நட்சத்திரங்கள்.

*வடக்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்:-*

புனர் பூசம், சுவாதி, அவிட்டம், ஆக - 3. இது குபேரதிக்கு. இவைகஜத்தின் (யானை) நட்சத்திரங்கள்.

*வடகிழக்கில் வசிக்கும் நட்சத்திரங்கள்;-*

பூசம், விசாகம், சதயம் ஆக-3 இது ஈசானதிக்கு இவை காகத்தின் நட்சத்திரங்கள்.

*பஞ்ச பட்சி நட்சத்திரங்கள் வளர்பிறை*

1. வல்லூறு - அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிசம்.
2. ஆந்தை - திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம்
3. காகம் - உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம்
4. கோழி - அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்
5. மயில் - திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, இதில் வல்லூறுக்கு ஆந்வையும் மயிலும் பகை. ஆந்தைக்கு காகம் & கோழி பகை காகத்துக்கு கோழி மற்றும் ஆந்தை பகை கோழிக்கு. மயிலும் - காகமும், மயிலும் வல்லூறும் கோழியும் பகை.

*தேய் பிறை*

1. மயில் - அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிசம்

2. **கோழி** - திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம்

3. காகம் - உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம்

4. ஆந்தை - அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம்.

5. வல்லூறு - திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

*பஞ்ச பூத நட்சத்திரங்கள்*

1. பிருதிவி (நிறம்) அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசிரீசம், ஆக 5

2. அப்பு (நீர்) - திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், ஆக 6

3. தேயு (தீ) - உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம் ஆக 6

4. வாயு (காற்று) கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம் ஆக 6

5. ஆகாயம் (வெளி) அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி ரேவதி ஆக 5

சதிபதிகளின் பூதமானது ஒன்றாக இருந்தால் நல்லது. அப்புவும் தேயுமாகில் கூடாது, மற்ற பூதங்கள்மாறி இருந்தால் சமம்,

**இதன் பலன் சதிபதிகள் ரோகமின்றி வாழ்தல்.**

*பஞ்சவர்ண நட்சத்திரங்கள்*

அந்தணன் - அசுவினி, புனர்பூசம், அஸ்தம் மூலம், பூரட்டாதி - ஆக - 5

சத்திரியன் - பரணி. பூசம், சித்திரை, பூராடம். உத்திராடம், ரேவதி-ஆக-5

வைசியன் - கார்த்திகை, ஆயில்யம், சுவாதி, உத்திராடம், ரேவதி ஆக - 5

சூத்திரம் - ரோகிணி, மகம், விசாகம், திருவோணம் ஆக 4

சண்டாளம் - மிருகசீரிடம், பூரம், அனுஷம், அவிட்டம் - ஆக 4

சங்கர்ம - திருவாதிரை, உத்திரம், கேட்டை, சதயம் - ஆக - 4

*நட்சத்திர யோகனிகளும் திக்குகளம்*

கிழக்கு - பிராம்ஹி - அசுவினி, ஆயில்யம், அனுஷம்,. பூரட்டாதி - ஆக 4

தென்கிழக்கு - கௌமாரி - பரணி, மகம், கேட்டை, உத்திரட்டாதி-ஆக 4

தெற்கு - வராஷீ - கார்த்திகை, பூரம், மூலம், ரேவதி ஆக 4

தென்மேற்கு - ஸித்தா - ரோகிணி, உத்திரம், பூராடம்-ஆக 3

மேற்கு - வைஷ்ணவி - மிருகசீரிடம், அஸ்தம், உத்திராடம் - ஆக 3

வடமேற்கு - மாஜேந்த்ரி - திருவாதிரை, சித்திரை, திருவோணம் - ஆக 3

வடக்கு - சாமுண்டி - புனர்பூசம், சுவாதி, அவிட்டம் - ஆக 3

வடகிழக்கு - மாஹேஸ்வரி - பூசம், விசாகம், சதயம் - ஆக 3

*நட்சத்திர கோத்திரங்கள்*

மரீசிகோத்திரம் - அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி ஆக -4

அத்திரி கோத்திரம் - மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம் ஆக-4

வசிஷ்ட கோத்திரம் ஆயில்யம், மகம், பூரம், உத்திரம் - ஆக 4

ஆங்கிரச கோத்திரம் - அஸ்தம், சித்திரை, சுவாதி, விசகாம்-ஆக - 4

புலஸ்திய கோத்திரம் - அனுஷம், கேட்டை, மூலம், பூராடம்- ஆக - 4

புலஹர் கோத்திரம் - உத்திராடம், அபிஜித், திருவோணம், அவிட்டம் ஆக - 4

கிருது கோத்திரம் - சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி

இதன் பலன் சதிபதிகளுக்கு ஒரே காத்திரம் இருக்கக் கூடாது, ஆக-4

## வம்ச விருத்தி

*ஆண் பெண், அலி நட்சத்திரங்கள்*

*ஆண் நட்சத்திரங்கள்*

அசுவினி, புனர்பூசம், பூசம், அஸ்தம், அனுஷம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி ஆக 8 நட்சத்திரங்கள் ஆகும்.

*ஸ்த்ரீ நட்சத்திரங்கள்*

பரணி, கிருத்திகை, ரோகிணி. திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், ரேவதி,

*அலி நட்சத்திரங்கள் -*

மிருகசீரிடம், மூலம், சதயம் ஆக - 3.

*நட்சத்திர நாடிகள்*

தட்சிண, பார்சுதேவ நாடி (வலது) (அரசன்) க்ஷத்ரியன் - அசுவினி,

திருவாதிரை, புனர்பூசம், உத்திரம், அஸ்தம், கேட்டை, மூலம், சதயம், பூரட்டாதி ஆக - 9.

மத்யேக நாடி நடு அந்தணன் - பரணி, மிருகசீரிடம், பூசம், பூரம், சித்திரை, அனுஷம், பூராடம், அவிட்டம், உத்திரட்டாதி ஆக - 9.

வாம பார்கவேத நாடி (இடது) வைசியன் - கார்த்திகை, ரோகிணி, ஆயில்யம், மகம், சுவாதி, விசாகம், உத்திராடம்,

திருவோணம், ரேவதி - ஆக - 9

விலக்கு - சுவாதி, திருவோணம், கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், மகம், அஸ்தம், அதுவிம, மூலம், ரேவதி ஆக - 10

*பிதா அரிஷ்ட நட்சத்திரங்கள்*

பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை, மூலம், பூராடம், ரேவதி என்னும் நட்சத்திரங்களின் முதற்பாதங்களிலும் கேட்டை 4,3 பாதத்திலும் குழந்தை பிறந்தால் தாய் தந்தைக்கு தோஷம்.

*மாதா அரிட்ட நட்சத்திரங்கள்*

பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை, மூலம் 4ம் பாதம், பூராடம், ரேவதி இரண்டாம் பாதங்களில் குழந்தை ஜனித்தால், தாய்க்கு அரிஷ்டம்

*குழந்தைக்கு அரிஷ்ட நட்சத்திரங்கள்*

பூசம் - 3 மகம், உத்திரம், அஸ்தம், சித்திரை - 3 மூலம், பூராடம் - 3ம் பாதம் ரேவதியின் மூன்றாம் பாதம், கேட்டை 4ம் பாதம் - இந்த நட்சத்திரங்களில் குழந்தை பிறந்தால் அக்குழந்தைக்கு அரிஷ்டம் ஆகும்.

*மாமன் அரிஷ்டம்*

பூசம், மகம், 2ம்பாதம் உத்திரம், அஸ்தம், சித்திரை, அனுஷம் 3ம் பாதம் பூராடம் 4ம் பாதம் சதயம் 1ம் பாதம், பூரட்டாதி 1ம் பாதம், ரேவதி 4ம்

பாதம் - இந்த நட்சத்திரங்களில் குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தாய்மாமனுக்கு அரிஷ்டமாம் (தோஷம்).

### கேட்டையின் அரிஷ்டம்

கேட்டையின் முதல் பாதம் தமையனுக்கும்

கேட்டையின் 2ம் பாதம் தம்பிக்கும்

கேட்டையின் 3ம் பாதம் தந்தைக்கும்

கேட்டையின் 4ம் பாதம் சிசுவிற்கும் அரிஷ்டம்.

### கண்டாந்த நட்சத்திரம்

அசுவதி, மகம், மூலம் முதல் பாதமும், ஆயில்யம் கேட்டை ரேவதியின் நான்காம் பாதமும் "கண்டாந்தம்" எனப்படும். இந்த நட்சத்திரங்களில் குழந்தை பிறந்தால் தாய், தந்தை அல்லது சிசு எவராவது ஒருவருக்கு அரிஷ்டம் ஏற்படும். சிசு உயிருடன் இருந்தால் பிற்காலத்தில் "ராஜயோகம்" அனுபவிக்கும். விரிவான பலன்களுக்கு.. இந்தநட்சத்திர பலனில் முதல் பகுதியில் பார்க்கவும்)

### நட்சத்திர தியாஜ்யம் - விஷ கடிகை

| நட்சத்திரம் | நாழிகை | நட்சத்திரம் | நாழிகை | நட்சத்திரம் | நாழிகை |
|---|---|---|---|---|---|
| அசுவதி | 50 | மகம் | 30 | மூலம் | 20,56 |
| பரணி | 24 | பூரம் | 20 | பூராடம் | 24 |
| கார்த்திகை | 30 | உத்திரம் | 18 | உத்திராடம் | 20 |
| ரோகிணி | 40 | அஜ்தம் | 22 | திருவோணம் | 10 |
| மிருகசீர்ஷம் | 14 | சித்திரை | 20 | அவிட்டம் | 10 |
| திருவாதிரை | 11, 21 | சுவாதி | 14 | சதயம் | 18 |
| புனர்பூசம் | 30 | விசாகம் | 14 | பூரட்டாதி | 16 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூசம் | 20 | அனுஷம் | 10 | உத்திரட்டாதி | 24 |
| ஆயில்யம் | 32 | கேட்டை | 14 | ரேவதி | 30 |

மேலே குறிப்பிட்ட நட்சத்திரகளுக்கு எதிரே குறிப்பிட்டிருக்கும் நாழிகைக்கு மேல் 4 நாழிகை தியாஜ்யம் - விஷகடிகை எனப்படும். அந்நேரங்களில் சுபகாரியங்கள் செய்யக் கூடாது.

### நட்சத்திர அமிர்த கடிகை - நல்ல நேரம்

| நட்சத்திரம் | நாழி | நட்சத்திரம் | நாழி | நட்சத்திரம் | நாழி |
|---|---|---|---|---|---|
| அசுவனி | 21 | மகம் | 20 | மூலம் | 16 |
| பரணி | 30 | பூரம் | 30 | பூராடம் | 10 |
| கிருத்திகை | 50 | உத்திரம் | 33 | உத்திராடம் | 14 |
| ரோகிணி | 14 | அஸ்தம் | 7 | திருவோணம் | 20 |
| மிருகசீர்ஷம் | 30 | சித்திரை | 16 | அவிட்டம் | 14 |
| திருவாதிரை | 40 | சுவாதி | 22 | சதயம் | 20 |
| புனர்பூசம் | 14 | விசாகம் | 20 | பூரட்டாதி | 10 |
| பூசம் | 16 | அனுஷம் | 14 | உத்திரட்டாதி | 18 |
| ஆயில்யம் | 40 | கேட்டை | 31 | ரேவதி | 12 |

மேலே குறிப்பிட்ட நட்சத்திரங்களுக்கு எதிரே குறிப்பிட்டிருக்கும் நாழிகைக்கு மேல் 4 நாழிகை அமிர்த கடிகையாகும். அந்த நேரங்களில் நல்ல காரியங்கள் செய்யலாம்.

### அக்னி நட்சத்திரம்

சூரியன், பரணி மூன்றாம் பாதம் முதல் ரோகிணி முதல் பாதம் வரையில் சஞ்சரிக்கும் காலம் அக்கினி நட்சத்திரம் ஆகும்.

*அஷ்டம ராசி கூறும் நட்சத்திரம்*

ஜன்ம நட்சத்திரத்திற்கு 16ம் நட்சத்திரம் முதல் 18ம் நட்சத்திரம் வரையில்.

*கல்ஞான பாத நட்சத்திரம்*

ஜன்ம நட்சத்திரத்திற்கு 16ம் நட்சத்திரத்தின் 4ம் பாதம்

*வைநாசிக நட்சத்திரம்*

ஜன்ம நட்சத்திரத்திற்கு 22ம் நட்சத்திரத்தின் 4ம் பாதம்

*அர்த்த மூல நாழிகை - நட்சத்திரம்*

மூல நட்சத்திரத்தின் முதல் 2 நாழிகைகள்

*பாடாவாரி நட்சத்திரம்*

அசுவதி, பரணி, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், திருவோணம் என்பனவாம்.

*உஷ்ண நட்சத்திரங்கள்*

1) அசுவதி, ரோகிணி, புனர்பூசம், மகம், அஸ்தம், ஆகிய 5 நட்சத்திரங்க களுக்கும் ஆரம்பத்தில் ஏழரை நாழிகைக்கு மேல் 15 நாழிகை வரையிலும்

2) பரணி, மிருகசீர்ஷம், பூசம், பூரம்' சித்திரை ஆகிய 5 நட்சத்திரங்களுக்கு கடைசியில் 5 நாழிகை வரையிலும்

3) கிருத்திகை. திருவாதிரை, ஆயில்யம், சுவாதி, உத்தரம், ஆகிய 5 நட்சத்திரங்களுக்கு 20 நாழிகைக்கு மேல் 30 நாழிகை வரையிலும்

4) விசாகம், மூலம், திருவோணம், பூரட்டாதி ஆகிய 4 நட்சத்திரகளுக்கு ஆரம்பத்தில் 8 நாழிகை வரையிலும்

5) அனுஷம், பூராடம், உத்திரட்டாதி, அவிட்டம் ஆகிய 4 நட்சத்திரங் களுக்கும் கடைசியில் 8 நாழிகை வரையிலும்

6) கேட்டை, ரேவதி, உத்திராடம், சதயம், ஆகிய 4 நட்சத்திரங்களுக்கு 20 நாழிக்கு மேல் 30 நாழிகை வரையிலும் உஷ்ணமாம்.

*லாட் நட்சத்திரம்*

சூரியன் நின்ற நட்சத்திரம் முதல் மூலம் வரை எண்ணி வந்த தொகை எத்தனையோ அதை பூராடம் முதல் எண்ணினால் எந்த நட்சத்திரம் வருகிறதோ அந்த நட்சத்திரம் "இலாட நட்சத்திரம்" ஆகும் இது தோஷ நட்சத்திரமாகும். இடத்திற்கு ஏற்ப, இதில் நின்ற கிரகங்களுக்கும் தோஷம் ஏற்படும்.

உதாரணமாக சூரியன் புனர்பூசத்தில் சஞ்சரித்தால் புனர்பூசம் முதல் மூலம் வரை எண்ணி வந்த தொகை 13. இந்த 13ஐ பூராடம் முதல் எண்ணினால் மிருகசீர்ஷ நட்சத்திரம் வரும். எனவே மிருகசீர்ஷம் இலாட நட்சத்திரம் ஆகும் இந்த கிரகமும், மிருகசீர்ஷத்திற்கு எரியவனான செவ்வாயும் தோஷம் அடைகிறார்கள்.

*மாரண நட்சத்திரம் - I*

சூரியன் நின்ற நட்சத்திரம் அதற்கு முன்னும் பின்னும் உள்ள நக்ஷத்திரங்கள் ஆகிய மூன்றும் மாரணமாம்,. ட அசுவதியில் சூரியன் நின்றால், ரேவதி, அசுவதி, பரணி மூன்றும் மாரண நக்ஷத்திரம் அர்த்த பிராணன்

மாரண நட்சத்திரத்திற்கு பிறகு 7 நட்சத்திரங்களும் முன்னால் உள்ள 7 நட்சத்திரங்களும் அர்த்த பிராணன் எனப்படும். உதாரணம் - மேற்படி கண்டபடி பரணிக்குப்பின் உள்ள 7 நட்சத்திரங்களும் (கிருத்திகை to ஆயில்யம் ), ரேவதிக்கும் பின்னால் உள்ள 7 நட்சத்திரங்களும் (பூராடம் to உத்திரட்டாதி ) அர்த்த பிராணன் ஆகும்.

*மாரண நட்சத்திரம் - II*

அர்த்த பிராணனுக்குத் முன்னும் பின்னுமான ஒரு நட்சத்திரமும் மாரணமாகும். உதாரணமாக அசுவதியில் சூரியன் நின்றால் மகம், மூலம் இவ்விரண்டும் மாரண நட்சத்திரமாகும்.

# வேதைப் பொறுத்தம்




ரவி நின்ற நட்சத்திரமும். அதற்கு இடம் வலம் மூன்றும் மாரணம் இதன் மேல் இடம் வலம் ஏழு நட்சத்திரங்களும் அர்த்த பிராணன் இதன் மேல் இடம் வலம் ஒவ்வொன்றும் மாரணம். இதன் மேல்

ன் மேல் 7
பித்து
தவும்.
க்கும்
ர்
நலம் எந்த
ர் திசையில்
யன்-மேற்கு,

ம் - *மகா சூலம்*

கிழக்கு மேற்காக 7 கோடுகளும், தெற்கு - வடக்காக அதன் மேல் 7 கோடுகளும் வரையவும். இடது பக்க கோட்டிலிருந்து ஆரம்பித்து கார்த்திகை முதல் 27 நட்சத்திரங்களையும் வரிசையாக எழுதவும். சந்திரன் நிற்கும் நட்சத்திரத்தின் கோட்டிற்கும் எதிரே இருக்கும் நட்சத்திரம் சுபர் நட்சத்திரமானால் சூலம் எனப்படும். பாபர் நட்சத்திரமானால் மகா சூலம் எனப்படும். சூலம், மகாசூலம் எந்த நட்சத்திரத்தில் சம்பவிக்கிறதோ அந்த நட்சத்திர நாயகனின் திசையில் பிராயாணம் செய்வது நன்மை தராது. கிரக திசையாவது சூரியன்-மேற்கு, வடமேற்கு

சந்திரன் -

செவ்வாய் -

புதன் -

குரு -

சுக்கிரன் -

சனி -

ராகு -

கேது -

ம் - *மகா சூலம் வரைபடம்.*

## சூலம் பார்க்கும் விதம்

ரவிநின்ற நட்சத்திரமும், அதற்கு இடம் வலம் மூன்றும் மாரணம். இதன்மேல் இடம் வலம் ஏழு ஏழு நட்சத்திரங்களும் அர்த்த பிராணன். இதன் மேல் இடம் வலம் ஒவ்வொன்றும் மாரணம். இதன் மேல் சூலம் பார்க்கும் விதம்.

சந்திரன் கிருத்திகையில் நின்றால் அக்கோட்டிற்கு எதிரே உள்ள திருவோணம் சுபர் நட்சத்திரம் (சந்திரனடையது). ஆதலால் சூலம்' சந்திரன் பூரட்டாதியில் இருந்தால் அதற்கு எதிரே உள்ள செவ்வாயின் நட்சத்திரமான சித்திரை பாவர் நட்சத்திரம். ஆதலால் மகா சூலம் என்று அறிய வேண்டும்.

## சவா வேதை நட்சத்திரம்

வரையும் விதம்: கிழக்கு மேற்காக 5 கோடுகளும் அதன் குறுக்கே தெற்கு வடக்காக 5 கோடுகளும் வரையவும் மூலைக்கு மூலை இரு கோடுகள் படத்தில் காட்டியபடி வரை. இடது பக்கத்திலிருந்து ஆரம்பித்து வரிசையாக நட்சத்திரங்களை எழுதவும். சந்திரன் இருக்கும் நட்சத்திற்கு எதிர்பக்கம் இருக்கும் நட்சத்திரத்தில் கிரகங்கள் நின்றால் அவை சவா வேதையாகும். (உ-ம்) சந்திரன் பரணியில் நின்றால் அதற்கு எதிர்முனையில் உள்ள கேட்டையில் நிற்கும் கிரகங்கள் சவா வேதை ஆகும். சந்திரன் சுவாதியில் இருப்பின் எதிரே உள்ள சதயத்தில் உ.ள்ள கிரகங்கள் சலா வேதை ஆகும்.

## பால் உள்ள நட்சத்திரங்கள்

கிருத்திகை, ரோகிணி, பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், ஹஸ்தம், பூராடம், உத்திராடம். திருவோணம், பூரட்டாதி உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 14ம் பாலுள்ள நட்சத்திரங்கள்.

## மலட்டு நட்சத்திரங்கள் OR வைரநட்சத்திரம்

அசுவதி பரணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் - ஆகிய 13ம் மலட்டு அல்லது வைரமுள்ள நட்சத்திரங்கள்.

## நித்திய கிரக வேதை

சந்திரன் நின்ற நட்சத்திரத்திற்கு 7ல் செவ்வாய் இருந்தால்

செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்கு 4ல் புதன் இருந்தால்

புதன் நின்ற நட்சத்திரத்திற்கு 5ல் குரு இருந்தால்

குரு நின்ற நட்சத்திரத்திற்கு 6ல் சுக்கிரன் இருந்தால்

சுக்கிரன் நின்ற நட்சத்திரத்திற்கு 8ல் சனி இருந்தால்

சனி நின்ற நட்சத்திரத்திற்கு 9ல் சூரியன் இருந்தால்

சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு 9ல் ராகு/கேது இருந்தால்

ராகு/கேது நின்ற நட்சத்திரத்திற்கு 9ல் சந்திரன் இருந்தால்.

-நித்திய கிரக வேதையாகும்.

(உ-ம்) விசாகத்தில் குரு நிற்க உத்திராடத்தில் (6), சுக்கிரன் இருந்தால் வேதை. அசுவதியில் சந்திரன் இருக்க புனர்பூச (7)த்தின் செவ்வாய் இருப்பது வேதை. இவ்வாறே கணக்கிட்டுக் கொள்க.

## தற்கால கிரக வேதை

சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு 15வது நட்சத்திரத்தில் கேது

கேது நின்ற நட்சத்திரத்திற்கு 18 வது நட்சத்திரத்தில் புதன்

புதன் நின்ற நட்சத்திரத்திற்கு 17 வது நட்சத்திரத்தில் சனி

சனி நின்ற நட்சத்திரத்திற்கு 12 வது நட்சத்திரத்தில் குரு

குரு நின்ற நட்சத்திரத்திற்கு 12 வது நட்சத்திரத்தில் ராகு

ராகு நின்ற நட்சத்திரத்திற்கு 13 வது நட்சத்திரத்தில் செவ்வாய்

செவ்வாய் நின்ற நட்சத்திரத்திற்கு 12 வது நட்சத்திரத்தில் சந்திரன்

சந்திரன் நின்ற நட்சத்திரத்தில் 12 வது நட்சத்திரத்தில் சூரியன்

இருந்தால் தற்கால கிரக வேதை ஆகும். (உ-ம்) சூரியன் பரணியில் இருக்கும் போது அதற்கு 15 வது நட்சத்திரமான விசாகத்தில் கேது இருந்தால் அந்த விசாகம் நட்சத்திரம் வேதையாகும். இவ்வாறே மற்றவைகளுக்கும் கண்டு கொள்க.

### *வாம வேதை நட்சத்திரங்கள்*

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் நான்காவது நட்சத்திரம் வாம வேதை நட்சத்திரமாகும். இவற்றில் உள்ள கிரகங்கள் தொல்லை தரும்.

அசுவதிக்கு - ரோகிணி, பரணிக்கு - மிருகசீர்ஷம், கிருத்திகைக்கு-திருவாதிரை, ரோகிணிக்கு - புனர் பூசம்.

வாம வேதை நட்சத்திரமாகும். இப்படியாக 27 நட்சத்திரத்திற்கு கண்டு கொள்க.

### *தட்சண வேதை நட்சத்திரங்கள்*

ஒவ்வொறு நட்சத்திரத்திற்கும் அதன் 18 வது நட்சத்திரம் தக்ஷிணவேதை நட்சத்திரமாகும். அசுவதிக்கு 18 வது நட்சத்திரம் கேட்டை, பரணிக்கு 18 வது மூலம்... கேட்டையும், மூலமும் தக்ஷிண வேதை நட்சத்திரங்களாகும். இப்படியாக மற்ற நட்சத்திரங்களுக்கும் கண்டு பிடிக்கவும்.

### *சமூக வேதை நட்சத்திரங்கள்*

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் அதனதன் 11 வது நட்சத்திரம் சமூக வேதை ஆகும். ரேவதிக்கு 11 வது நட்சத்திரமான மகம் சமூக வேதை. மற்றவைகளை இவ்வாறே கண்டு கொள்க.

சங்காத்ய நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 16 வது நட்சத்திரம்

சமுதாயக நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 18 நட்சத்திரம்

ஆதான நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 19 வது நட்சத்திரம்

தேசம் நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 24 வது நட்சத்திரம்

மாதை நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 25 வது நட்சத்திரம்

சாதி நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 26வது நட்சத்திரம்

அபிஷேக நட்சத்திரம் - ஜன்ம நட்சத்திரத்திற்கு 27 வது நட்சத்திரம்

### *கூடாத நாட்கள்*

| | | | |
|---|---|---|---|
| பரணி | கிருத்திகை | திருவாதிரை | ஆயில்யம் |
| மகம் | பூரம் | சித்திரை | சுவாதி |
| விசாக | கேட்டை | பூராடம் | பூரட்டாதி |

இந்த 12 நட்சத்திரங்களும் சுபகாரியங்களுக்கு ஆகாதவை. இந்த 12 நட்சத்திரங்களில் கடன் கொடுத்தால் திரும்பி வராது. பிரயாணம் மேற்கொண்டால் வருத்தம் அதிகமாகும். நோய் வாய்ப்பட்டால் அதன் கடுமை அதிகமாக இருக்கும்.

### *நட்சத்திர யோகம்*

ஒரு நாளில் என்ன நட்சத்திரம் வருகிறதோ அந்த நட்சத்திரம் வரை, அன்றையதினம்

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமையானால் | விசாகம் முதல் |
| திங்கட்கிழமையானால் | பூராடம் முதல் |
| செவ்வாய்கிழமையானால் | அவிட்டம் முதல் |
| புதன்கிழமையானால் | ரேவதி முதல் |
| வியாழனானால் | ரோகிணி முதல் |
| வெள்ளியானால் | பூசம் முதல் |
| சனியானால் | உத்திரம் முதல் |

எண்ணி வந்த தொகையை ஏழால் வகுக்க வேண்டும். மீதி

1. வந்தால் இருத்தை யோகம்
2. வந்தால் நாசம் யோகம்
3. வந்தால் மரணம் யோகம்
4. வந்தால் அமிர்த யோகம்
5. வந்தால் சுப யோகம்
6. வந்தால் சித்த யோகம்
7. வந்தால் பரிக யோகம்

என தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக ஞாயிற்றுக்கிழமை அசுவதி நட்சத்திரமானால், விசாகம் முதல் அசுவதி வரை எண்ணினால் 13 வருகிறது. இதை ஏழால் வகுக்க 13,7= மீதி 6 வருகிறது. 6 என்பது சித்த யோகம். எனவே அன்றைய தினம் சுபகாரியங்கள் செய்யலாம். திங்கட்கிழமை பரணி நட்சத்திரம் என்றால், பூராடம் முதல் பரணி வரை

எண்ணினால் 10. இதை ஏழால் வகுக்க மீதி 3. அன்றைய தினம் மரணயோகம். அன்று எதுவும் செய்யாதிருப்பது நல்ல தரும்.

மிச்சமின்றி வகுத்தால் 7ஆக வைத்துக் கொண்டு பலன் காணவேண்டும்.

*நட்சத்திர பார்வைகள்*

ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும், கிரகங்களைப் போலவே பார்வை உண்டு. சூரியன் நின்ற நட்சத்திரத்திலிருந்து 7-8-11-16-21-26 ஆம் நட்சத்திரங் களை பார்க்கும். உதாரணமாக சூரியன் சதயத்தில் இருந்தால் சதயத்திலிருந்து கிருத்திகை (7) ரோகிணி (8) புனர்பூசம் (11) உத்தரம் (16) அனுஷம் (21) திருவோணம் (21) ஆகிய நட்சத்திரங்களைப் பார்க்கும்.

சந்திரன் நின்ற நட்சத்திரத்திலிருந்து 4-8-10-15-18 ஆம் நட்சத்திரங் களைப் பார்க்கும்.

செவ்வாய் நின்ற நட்சத்திரம் 3-7-8-15ம் நட்சத்திரங்களைப் பார்க்கும்

புதன், குரு, சுக்கிரன், சனி, நின்ற நட்சத்திரங்கள் தன்னிலிருந்து 3-5- ஆம் நட்சத்திரங்களைப் பார்க்கும்.

முக்கியவிதி:- சனி நின்ற நட்சத்திரத்திற்கு 15, 16 ஆம் நட்சத்திரத்தில் அதிக பார்வை உண்டு. அவ்வாறே குரு நின்ற நட்சத்திரத்திற்கு 10, 19 ஆம் நட்சத்திரத்திற்கு அதிக பார்வை உண்டு.

***வேதை நட்சத்திரங்கள்***

சனியும், செவ்வாயும் நின்ற நட்சத்திரத்திற்கு-

5, 6, 7, 8, 12, 13, 14 ஆம் நட்சத்திரங்கள் தக்ஷணவேதை

17, 18, 19, 22 ஆம் நட்சத்திரங்கள் - வாமவேதை

2, 15, 16ஆம் நட்சத்திரங்கள் - கரண வேதை

3, 20, 21, 26 ஆம் நட்சத்திரங்கள் - நாற்கோண வேதை

4,9, 10, 11, 23, 24, 25, 27 ஆம் நட்சத்திரங்கள் - சமூக வேதை எனப்படும்.

***விதவை நட்சத்திரம்***

புனர்பூசம், பூசம் இவையிரண்டும் விதவை நட்சத்திரங்கள்.

***ஏகார்கள நட்சத்திரம்***

ஒன்றின் கீழ் ஒன்றாக 13 கோடுகள் வரையவும். அதன் நடுவில் ஒரு கோடு வரையவும். உச்சியிலிருந்து கார்த்திகையிலிருந்து ஆரம்பித்து வரிசையாக அபிஜித்து உட்பட 28 நட்சத்திரங்களையும் எழுதவும். இதுதான் ஏகார்கள் சக்கரம்.

கிரு

| | |
|---|---|
| பர ........................ | ........................ ரோகி |
| அசு ........................ | ........................ மிருக |
| ரேவ ........................ | ........................ திருவா |
| உட்தி ........................ | ........................ புனர் |
| பூரட் ........................ | ........................ பூசம் |
| சத ........................ | ........................ ஆயில் |
| அவி ........................ | ........................ மகம் |
| திருவோ ........................ | ........................ பூரம் |
| அபிஜி ........................ | ........................ உத்ரம் |
| உத்ர ........................ | ........................ ஹஸ் |
| பூரா ........................ | ........................ சித் |
| மூல ........................ | ........................ சுவா |
| கேட் ........................ | ........................ விசா |

அனு

ஜன்ம நட்சத்திரத்திற்கு எதிரே உள்ள நட்சத்திரத்தின், கடைசி 2 நாழிகை "ஆகுலம்" எனப்படும். இந்த ஆகுலம் கெடுதல் செய்யும். எனவே அந்த 2 நாழிகை நேரங்களையும் எந்த காரியம் செய்வதற்கும் விலக்க வேண்டும்.

(உ-ம்) ஜன்ம நட்சத்திரம் அசுவதி ஆனால் அதற்கு எதிரே உள்ள மிருகசீர்ஷம் ஆகும். ஜன்ம நட்சத்திரம் அனுஷமானால் எதிரே உள்ள கிருத்திகை ஆகும். இவ்வாறே ஒவ்வொருவரும் தத்தம் ஜன்ம நட்சத்திரத்திற்கு பார்த்துக் கொள்ளவும்.

*நட்சத்திர தேசங்கள்*

| | | | |
|---|---|---|---|
| அசுவதி | ஊர் | சுவாதி | -பருத்தி |
| பரணி | மரம் | விசாகம் | - முற்றம் |
| கிருத்திகை | - வனம் | அனுஷம் | - பாழ் வனம் |
| ரோகிணி | - காடிச்சால் | கேட்டை | - கடை |
| மிருகசீர்ஷம் | - கட்டிலின் கீழே | மூலம் | - குதிரை லாயம் |
| திருவாதிரை | - நிற்கும்தேரின்கீழ் | பூராடம் | - கூரை |
| புனர்பூசம் | - நெல் குதிர் | உத்திராடம் | - வண்ணான் துறை |
| பூசம் | - மனை | திருவோணம் | - கோயில் |
| ஆயில்யம் | - குப்பை | அவிட்டம் | - ஆலை |
| மகம் | - நெல்கதிர் | சதயம் | - செக்கு |
| பூரம் | –வெறும் வீடு | பூரட்டாதி | - தெரு |
| உத்திரம் | - தண்ணீர் | உத்திரட்டாதி | - அக்மினி மூலைவீடு |
| ஹஸ்தம் | - ஜலக்கரை | ரேவதி | - பூஞ்சோலை |
| சித்திரை | - வயல் | | |

இவை இருப்பிடங்கள் எனக் கொள்ள வேண்டும். ஒருவர் பிறந்த நட்சத்திரத்தைச் சொன்னவுடன் அவர் இருப்பிட சூழ்நிலையை புரிந்து கொள்ள இது உதவும்.

*நட்பு நட்சத்திரங்கள்*

ரோகிணி, திருவாதிரை, பூசம், அஸ்தம், மூலம், திருவோணம் உத்திரட்டாதி, ரேவதி, இந்த எட்டு நட்சத்திரங்களும் தங்களுக்குள் ஒன்றுக் கொன்று நட்பு உடையவை.

*பகை நட்சத்திரங்கள்*

அசுவதிக்கு - சித்திரை, மூலம்

பரணிக்கு - கேட்டை

கிருத்திகைக்கு - அனுஷம்

ரோகிணிக்கு - விசாகம்

மிருகசீர்ஷம் - சுவாதி

திருவாதிரைக்கு - அவிட்டம்

புனர்பூசத்திற்கு - திருவோணம்

பூசத்திற்கு - உத்திராடம்

ஆயில்யத்திற்கு - பூராடம்

மகத்திற்கு - ரேவதி

பூரத்திற்கு - உத்திரட்டாதி

உத்திரத்திற்கு - பூரட்டாதி

ஹஸ்தத்திற்கு - சதயம்

சித்திரைக்கு - அசுவதி, மூலம்

மூலத்திற்கு - அசுவதி, சித்திரை

இவை ஒன்றுக்கொன்று பகை நட்சத்திரங்கள். இவைகள் நட்பாக இருக்க எந்த சந்தர்பத்திலும் முடியாது. இந்த நட்சத்திரத்திலுள்ள கிரகங்களும் அவ்வாறே பகை பெறும்.

*அபமிருத்யு நட்சத்திரங்கள்*

பரணி, மூலம் - இரண்டாம் பாதம்

ரோகிணி, ஆயில்யம், உத்திரட்டாதி - மூன்றாம்பாதம்

மிருகசீர்ஷம், சுவாதி - நான்காம் பாதம்

திருவாதிரை, விசாகம் – இரண்டாம் பாதம்

ஆயில்யம், உத்திரட்டாதி - முதற்பாதம்

திருவோணம், உத்திரம் - மூன்றாம் பாதம்

பரணி, மூலம் - நான்காம் பாதம்

அவிட்டம், ஹஸ்தம் - முதற்பாதம்

அபமிருத்யு என்று வழங்கப்படும். இவை நல்ல காரியங்களுக்கு ஆகாதவை.

**குரு தோஷம்**

அமாவாசை திதியின் கடைசியாகவும்,. பிரதமை திதி ஆரம்பமாகவும் வரும் நட்கத்திரத்தில் விஷ கடிகை பொருந்தி இருந்தால் அது குரு தோஷம்.

*உச்ச நிலை நட்சத்திரங்கள்*

மிரகசீர்ஷம் சித்திரை, அவிட்டம் இம்மூன்றும் உச்சநிலை, நட்சத்திரங்கள்.

*கீழ் நிலை அல்லது பூமி நிலை நட்சத்திரங்கள்*

அசுவதி, மகம், மூலம்,

பரணி, பூரம், பூராடம்

கார்த்திகை, உத்திரம், உத்திராடம்,

இந்த 9 நட்சத்திரங்களும் கீழ்நிலை நட்சத்திரங்கள்

***இடை நிலை நட்சத்திரங்கள்***

| | | |
|---|---|---|
| ரோகிணி, | புனர்பூசம் | பூரட்டாதி |
| சதயம் | உத்திரட்டாதி | கேட்டை |
| அனுஷம் | திருவோணம் | சுவாதி |
| ஹஸ்தம் | விசாகம் | பூசம் |
| ஆயில்யம் | திருவாதிரை | ரேவதி |

**இந்த பதினைந்தும் இடைநிலை நட்சத்திரங்கள்**

***அனற்சிகை***

அசுவிதி ரோகிணி, புனர்பூசம், மகம் ஹஸ்தம் - 71/2 முதல் 15 நாழிகை பரணி, மிருகசீர்ஷம் பூசம், பூரம், சித்திரை - 55க்குமேல் 5 நாழிகை கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், உத்திரம், சுவாதி, - 21 க்குமேல் 9 நா. விசாகம், மூலம், திருவோணம், பூரட்டாதி - முதல் 8 நாழிகை கேட்டை, உத்திராடம், சதயம், ரேவதி - 20க்குமேல் 10 நாழிகை அனற்சிகை எனப்படும். இது கெடுதல் செய்யும்.

***ஜலகஷ்க நட்சத்திரம்***

| | | |
|---|---|---|
| மிருகசீர்ஷம், | சுவாதி | சதயம் |
| கேட்டை | விசாகம் | புனர்பூசம் |
| ஹஸ்தம், | திருவோணம் | பூசம் |
| சித்திரை | அவிட்டம் | ஆயில்யம் |

இவை 12ம் ஜல கஷ்க நட்சத்திரங்கள்

***தேவக்கயிறு (ரஜ்ஜு)***

| | | | | |
|---|---|---|---|---|
| பாத ரஜ்ஜு | இடை (தொடை) ரஜ்ஜு ஊரு | நாபி or உதர ரஜ்ஜு | கண்டரஜ்ஜு (கழுத்து) | சிரம் (தலை) ரஜ்ஜு |

| | | | | |
|---|---|---|---|---|
| அசுவிதி (ஆ) | பரணி (ஆ) | கிருத்திகை (ஆ) | ரோகிணி (ஆ) | மிருகசீரிஷம் |
| ஆயில்யம்(அ) | பூசம்(அ) | புனர்பூசம்(அ) | திருவாதிரை,(ஆ) | - |
| மகம்(ஆ) | பூரம்(ஆ) | உத்திரம்(ஆ) | ஹஸ்தம்(ஆ) | சித்திரை |
| கேட்டை(ஆ) | அனுஷம்(அ) | விசாகம்(அ) | சுவாதி(அ) | - |
| மூலம்(ஆ) | பூராடம்(ஆ) | உத்திராடம்(ஆ) | திருவோணம்(ஆ) | அவிட்டம் |
| ரேவதி(அ) | உத்திரட்டாதி(அ) | பூரட்டாதி(அ) | சதயம்(அ) | - |

ஆ : ஆரோகணம் அ : அவரோகணம்

இது திருமணப் பொருத்தத்தில் கணவனாகப் போகிறவனின் ஆயுளை (மாங்கல்ய பலத்தை) அறிய உதவும் அட்டவணை, ஆண் பெண் இருவரது நட்சத்திரமும் ஒரே ரஜ்ஜுவில் இருக்கக் கூடாது. இருவரது நட்சத்திரம்:-

தலை ரஜ்ஜுவில் இருந்தால் - கணவன் மரிப்பான்

கண்ட ரஜ்ஜுவில் இருந்தால் - மனைவி இருப்பாள்

நாபி ரஜ்ஜுவில் இருந்தால் - பிள்ளைகள் இறக்கும்; மலடியாவாள்.

தொடை ரஜ்ஜுவில் இருந்தால் - தரித்திரம் தாண்டவமாடும். மலடி

பாத ரஜ்ஜுவில் இருந்தால் - இருப்பிடத்துக்கு ஆகாது தம்பதிகள் எப்போதும் அலைந்து கொண்டே இருப்பார்கள். பொருள் அழியும்.

ஆண் – பெண் நட்சத்திரங்கள் ஒரே ரஜ்ஜுவானால் ஒன்று ஆரோகணத்திலும் மற்றொன்று அவரோகணத்திலும் வந்தால் மத்திம பொருத்தம்.

***மாகேந்திர நட்சத்திரம்***

இது திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கு உதவும். பெண் நட்சத்திரத்திலிருந்து எண்ணும் போது புருஷனின் நட்சத்திரம் 13, 16, 19, 22, 25 ஆக வந்தால் மகேந்திர பொருத்தம் உண்டு.

உதாரணம் : அசுவதி பெண் நட்சத்திரமானது ஹஸ்தம் (13) விசாகம்(16) மூலம் (19) திருவோணம், (22) பூரட்டாதி (25) என்பதுள் ஒன்றாக ஆண் நட்சத்திரம் மாகேந்திர பொருத்தம் உண்டு.

***அமிர்தம் இருக்கும் நாழிகைகள் - 2***

அசுவிதி — — —42 நாழிகைக்கு மேல்

பரணி, உத்திரட்டாதி 48 நாழிகைக்கு மேல்

கிருத்திகை, புனர்பூசம், மகம், ரேவதி - 54 நாழிகைக்கு மேல்

ரோகிணி, — — 52 நாழிகைக்கு மேல்

திருவாதிரை — — 35 நாழிகைக்கு மேல்

பூசம், சித்திரை, உத்திராடம் - 44 நாழிகைக்கு மேல்

அயில்யம் — — 50 நாழிகைக்கு மேல்

பூரம் — — 34 நாழிகைக்கு மேல்

உத்திரம் — — 42 நாழிகைக்கு மேல்

ஹஸ்தம், — — 40 நாழிகைக்கு மேல்

அனுஷம் — — 34 நாழிகைக்கு மேல்

மூலம் — — 40 நாழிகைக்கு மேல்

பூராடம் — — 44 நாழிகைக்கு மேல்

திருவோணம், அவிட்டம் - 34 நாழிகைக்கு மேல்

சதயம் — — 42 நாழிகைக்கு மேல்

பூரட்டாதி — — 40 நாழிகைக்கு மேல்

நான்கு நாழிகை நேரம் அமிர்தம இருக்கும், இதில் மிருகசீர்ஷம், சுவாதி, விசாகம் கேட்டை, இவற்றிற்கு அமிர்தம் தரப்படவில்லை.

முன்புதரப்பட்ட அமிர்த கடிகை நேரமும், இதுவும் வேறுபடும், எது பொருந்துகிறதோ அதை எடுத்துக் கொள்க.

*வருண மண்டல நட்த்திரங்கள்*

மிருகசீர்ஷம் திருவாதிரை மூலம் பூராடம்

சதயம் உத்திரட்டாதி ரேவதி

இந்த ஏழும் வருண மண்டலம்.

***தேவமண்டல நட்சத்திரங்கள்***

அசுவதி, ஹஸ்தம், மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், சுவாதி, அனுஷம், திருவோணம், ரேவதி - (9)

***மாகேந்திர மண்டலம்***

ரோகிணி புனர்பூசம் அனுஷம் கேட்டை

உத்திராடம் திருவோணம் அபிஜித்

இந்த ஏழும் மாகேந்திர மண்டலம்

***வாயு மண்டலம்***

அசுவதி ஆயில்யம் உத்திரம் ஹஸ்தம்

சித்திரை சுவாதி அவிட்டம்

-இந்த ஏழும் வாயு மண்டலம்

***அக்கினி மண்டலம்***

பரணி கிருத்திகை பூசம் மகம்

பூரம் விசாகம் பூரட்டாதி

-இந்த ஏழும் நெருப்பு மண்டலம்.

*பாவதினங்கள்*

பாவர் மத்திய நட்சத்திரமும்,

பாவர் இருக்கின்ற நட்சத்திரமும்,

மாதாந்தரத்தின் இரு நட்சத்திரங்களும்,

வருடாந்தரத்தின் 15 நட்சத்திரங்களும்,

பாவதினங்கள் ஆகும்.

*நர(மனித) மண்டலம்*

பரணி, ரோகிணி, திருவாதிரை, பூரம், உத்திரம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி - (9).

*அரக்கர் மண்டலம்*

கிருத்திகை, ஆயில்யம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம் (9)

சூரியாதி 9 கிரகங்களும் மேற்படி தேவர் - நர – அரக்க மண்டலங்களில் உள்ள நட்சத்திரங்களின் பாத சாரங்களில் நிற்கும் போது அந்தந்த மண்டலங்களில் இருப்பதாக அறியவும்

*நட்சத்திர தொகை - வடிவம்*

அசுவதி - - 6ம் குதிரைத் தலை போன்ற தோற்றம் உடையவை

பரணி - - 3ம் அடுப்பு போன்ற தோற்றம் உடையவை

கிருத்திகை - 6ம் கற்றை போன்ற தோற்றம் உடையவை

ரோகிணி - - 12ம் ஏர்க்கால் போன்ற தோற்றம் உடையவை

மிருகசீர்ஷம் - - 3ம் தேங்காய்க்கள் போன்ற தோற்றம் உடையது

திருவாதிரை - - 1ம் ராஜாமணி போன்ற தோற்றம் உடையவை

புனர்பூசம் - - 6ம் கடைவீதி போன்ற தோற்றம் உடையவை

பூசம் - - 4ம் கடைவீதி போன்ற தோற்றம் உடையவை

ஆயில்யம் - - 4ம் அம்மி போன்ற தோற்றம் உடையவை

மகம் - - 4ம் நுகம் போன்ற தோற்றம் உடையவை

பூரம், உத்திரம், - - 4ம் கட்டிற்கால் போன்ற தோற்றம் உடையவை

ஹஸ்தம் - - 4ம் கைத்தாளம் போன்ற தோற்றம் உடையவை

சித்திரை - - 1ம் புலிக்கண் போன்ற தோற்றம் உடையவை

சுவாதி - - 1ம் தீபம் போன்ற தோற்றம் உடையவை

விசாகம் - - 6ம் சுளகு போன்ற தோற்றம் உடையவை

அனுஷம் - - 4ம் முடப்பானை போன்ற தோற்றம் உடையவை

கேட்டை - - 4ம் ஈட்டி போன்ற தோற்றம் உடையவை

மூலம் - - 4ம் பொற்காளம் போன்ற தோற்றம் உடையவை

பூராடம், உத்திராடம் - 4ம் கட்டிற்கால் போன்ற தோற்றம் உடையவை

திருவோணம் - 3ம் முழுங்கோல் போன்ற தோற்றம் உடையவை

அவிட்டம் - - பலவும் தவிட்டுக் கூட்டம் போன்ற தோற்றம் உடையவை

சதயம் - - 4ம் பூங் கொத்து போன்ற தோற்றம் உடையவை

பூரட்டாதி, உத்திரட்டாதி - 4ம் கட்டிற்கால் போன்ற தோற்றம் உடையவை

ரேவதி - - 4ம் ஓடம் போன்ற தோற்றம் உடையவை

*நட்சத்திர சூலங்கள்*

அசுவதியும், திருவோணமும் - தெற்கே சூலம்

ரோகிணியும், பூசமும் - மேற்கே சூலம்

ஹஸ்தம், உத்திரமும் - வடக்கே சூலம்

கேட்டையும், அவிட்டமும் - கிழக்கே சூலம்

*ஜன்மாதி நட்சத்திரத்தின் பெயர்கள் - அதற்கு உரிய கிரகங்கள்*

பிறந்த நட்சத்திரம் முதல் எண்ணி 9 வரை வரும் நட்சத்திரங்கள் ஜன்ம நட்சத்திர வரிசை (முதல் பரியாயம்) என்றும், 10 முதல் 18 வரை வரும் நட்சத்திரங்கள் அது ஜன்ம நட்சத்திர வரிசை (2ம் பரியாயம்) என்றும்; 19 முதல் 27 வரை எண்ணி வருவது திரிஜன்ம நட்சத்திர வரிசை (3ம் பரியாயம்) என்றும் அழைக்கப் பெறும்.

இதில் ஜன்ம, அநுஜன்ம, திரிஜன்ம நட்சத்திரம் முதல் வேண்டிய நட்சத்திரம் வரை எண்ணி வருவது 2,4,6,8,9 என்று வந்தால் நல்லது, நன்மையும், வெற்றியும் தருக. 1,3,5.7 என வந்தால் அவை கெடுதல், விலக்க வேண்டும்.

1 வது ஜன்மம் - இதன் அதிபதி சூரியன்

2 வது சம்பத்து - இதன் அதிபதி புதன்

3 வது விபத்து; - இதன் அதிபதி ராகு

4 வது க்ஷேமம் - இதன் அதிபதி குரு

5 வது பிரத்யக்கு - இதன் அதிபதி கேது

6 வது சாதகம் - இதன் அதிபதி சந்திரன்

7. வது வதை - இதன் அதிபதி சனி

8 வது மைத்ரம் – இதன் அதிபதி சுக்கிரன்

9 வது பரம மைத்ரம் - இதன் அதிபதி செவ்வாய்

இதை தாரா பலன் என்றும் சொல்வர். சிலர் 9வது தாரை அசுபம் என்பர். முதல் பரியாயத்தில் [சுற்றில்] ஜன்ம தாரையும் இரண்டாம் பரியாயத்தில் விபத்து தாரையும், மூன்றாம் பரியாயத்தில் பிரத்யக்கு தாரையும், மூன்று பரியாயத்திலும் வதைத் தாரையும் 22வது நட்சத்திரத்தின் 4வது பாதமும் ஆகாதென்றும், மற்றவை நல்லது என்றும் கூறுவர்.

*நட்சத்திர குல பிரிவு*

முன்பு நட்சத்திரங்களின் பஞ்ச வர்ணங்கள் தரப்பட்டது. இங்கே இன்னொரு வகையான குலப்பிரிவு எழாகப் பிரிக்கப்பட்டு தரப்பட்டுள்ளன.

1. கிருத்திகை, பூரம், பூராடம், பூரட்டாதி - 4ம் பிரம்ம குலம்
2. ரோகிணி, மகம், அநுஷம், ரேவதி -4ம் அரச குலம்
3. அசுவதி, புனர்பூசம், ஹஸ்தம், அபிஜித் - 4ம் வணிககுலம்

(அபிஜித் என்பது உத்திராடத்தின் கடைசி 15 நாழிகையும், திருவோணத்தின் முதல் 4 நா 4 வினாடி சேர்ந்ததாகும்.
இது இப்போது வழக்கில் இல்லை)

4. பூசம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி -4ம் வேளாள குலம்
5. திருவாதிரை, சுவாதி, மூலம், சதயம் -4ம் ராக்ஷஸ குலம்
6. மிருகசீர்ஷம், சித்திரை, கேட்டை, அவிட்டம் -4ம் வேடர் குலம்
7. பரணி, ஆயில்யம், விசாகம், திருவோணம் -4ம் நீசகுலம்.

*நமநட்சத்திர எழுத்துக்கள்*

27 நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் பெயர் வைப்பதற்கு அந்தந்த நட்சத்திரங்களின் எதிரே தரப்பட்டிற்கும் எழுத்துக்கள் முதல் எழுத்தாக அமையும்படி பெயர்கள் வைப்பது சிறப்பான முறையாகும். பஞ்சாங்கங்களில் வேறுசில எழுத்துக்கள் சிறப்பான தரப்பட்டுள்ளன. அவற்றையும் விரும்புவோர் பயன்படுத்தலாம்.

| ஒரு பாடம் | மற்றொருபாடாந்தரம் | | | |
|---|---|---|---|---|
| | 1 ம்பாதம் | 2ம் பாதம் | 3ம் பாதம் | 4ம் பாதம் |
| அசுவதி சு-சூ-செ-சே-சை | சு | சே | கோ | ல |
| பரணி-சொ-சோ-சௌ | வி | லு | லே | லோ |
| கிருத்திகை அ-ஆ-இ-ஈ | ஆ | ஈ | ஊ | எ |

| | | | | |
|---|---|---|---|---|
| ரோகிணி - வ-வா-வி-வீ | ஓ | வா | வி | சு |
| மிருகசீர்ஷம் - வெ-வே-வை-வௌ | வே | வோ | க | கி |
| திருவாதிரை-கு-க | கு | க்க | ங | ச்ச |
| புனர்பூசம்-கெ-கே-கை | கே | கோ | ஹா | ஹீ |
| பூசம்-கொ-கோ-கௌ | ஹா | ஹே | ஹோ | ட |
| ஆயில்யம்-மெ-மே-மை | டி | டு | டே | டோ |
| மகம்-ம-மா-மி-மீ-மு-மூ | ம | மி | மு | மே |
| பூரம்-மொ-மோ-மௌ | மோ | ட | டி | டு |
| உத்திரம்-ப-பா-பி-பீ | டே | டோ | ப | பி |
| ஹஸ்தம் -பு-பூ | பு | ஷ | ண | ட்ட |
| சித்திரை -பெ-பே-பை-பொ-போ-பௌ | பே | போ | ர | ரி |
| சுவாதி-த-தா | ரு | ரே | ரோ | த |
| விசாகம்-தி-தீ-தை து-தூ-தெ-தே | தீ | தூ | தே | தோ |
| அனுஷம்-ந-நா-நி-நீ-நூ-நு | ந | நி | நு | நே |
| கேட்டை-கெ-கே-கை | நோ | ய | யி | யு |
| மூலம்-யு-யூ | யே | யோ | ப | பி |
| பூராடம் உ-ஊ-ஏ-எ-ஐ | பு | த்த | ப்ப | ட |
| உத்திராடம்-ஒ-ஓ-ஔ | பே | போ | ஜ | ஜி |
| திருவோணம் -க-கா-கி-கீ | க்கு | க்கு | க்கே | கோ |
| அவிட்டம்-ஞ ஞா-ஞ | க | கி | கு | கே |
| சதயம்-தொ-தோ-தௌ | கோ | ஸ | ஸி | ஸீ |
| பூரட்டாதி-நொ-நோ-நௌ | ஸே | ஸோ | த | தீ |
| உத்திரட்டாதி-யா | து | ச | ங | த |
| ரேவதி-ச-சா-சி-சீ | தே | தோ | ச | சீ |

*உறவினர்களுக்கு அரிஷ்டம்*

குறிப்பிட்ட நட்சத்திரங்களிலோ OR அவற்றின் பாதங்களிலோ குழந்தை பிறந்தால், அக்குழந்தையின் உறவினர்களுக்கு அரிஷ்டம் உண்டு, அவை என்னவேன்று கீழே பார்ப்போம்.

*மாதாவுக்கு அரிஷ்டம்*

பூசம் ஆயில்யம் மகம் சித்திரை பூராடம் உத்திராடம் ரேவதி-முதந்பாதத்திலும், உத்திரம் 2 விசாகம் இரண்டாம் பாதத்திலும் குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் தாய்க்கு அரிஷ்டம்.

*பிதாவுக்கு அரிஷ்டம்*

ஆயில்யம் - 3ம் பாதம் உ.த்திராடம் - 2ம் பாதம்

பூராடம் – 3ம் பாதம் ரேவதி - 2ம் பாதம்

உத்திரம் - 1ம் பாதம் அவிட்டம் - 4ம் பாதம்

அனுஷம் - 1ம் பாதம்

இவற்றில் குழந்தை பிறந்தால் தந்தைக்கு அரிஷ்டம்.

*பெற்றோர்க்கு அரிஷ்டம்*

பூராடம் முதல் பாதம்

சித்திரை முதல் பாதம்/2ம் பாதம்

உத்தரம் முதல் பாதம்

பூசம் 2ம் பாதம்

இவற்றில் சிசு ஜனித்தால் அரிஷ்டம் கூறவும்.

*பாட்டனுக்கு*

சித்திரை - 1ம் பாதம், விசாகம், அனுஷம், மூலம் 4ம் பாதம் - இவற்றில் சிசு ஜனித்தால் பாட்டனுக்கு அரிஷ்டம்

*அம்மானுக்கு*

ரோகிணி, சதயம், பூரட்டாதி - முதற்பாதம்

மகம் - 2ம் பாதம்

அனுஷம், மூலம் - மூன்றாம் பாதம்.. 4ம் பாதம்

பூராடம் - 4ம் பாதம்

இந்த நட்சத்திரங்களில் குழந்தை பிறந்தால் அதன் தாய் மாமனுக்கு கெடுதல் (அரிஷ்டம்) ஏற்படும்.

*பூமி வசிய நாட்கள்*

கடக லக்னமும் செவ்வாய்க் கிழமையும் கூடிய நாளில், பரணி திருவோணம், விசாகம், ஹஸ்தம், இந்த நட்சத்திரங்களின் நான்காம் பாதம் அமையும் போது "பூமி வசியம்" செய்தால் நிலபுலன்கள் வளமை பெருகும்.

*முகூர்த்த நட்சத்திரங்கள்*

ஜன்ம நட்சத்திரமும், ஜன்ம நட்சத்திரத்திற்கு 3-5-7-10-14-19-22-27ஆம் நட்சத்திரங்களும், சந்திரன், நிற்கும் ராசிக்கு எட்டாவது ராசியிலுள்ள 2/4 நட்சத்திரங்களும் முகூர்த்தத்துக்கு உகந்தவை அல்ல. இவற்றை விலக்க வேண்டும்.

பெண்ணின் 1,10,19ம் நட்சத்திரங்களும் ஆணின் 10ம் நட்சத்திரமும் முகூர்த்தத்திற்கு சிறந்தவை.

ருதுவான மூன்று நாட்களும், ஜன்ம நட்சத்திரமும். பரணி, திருவாதிரை. ஆயில்யம், மகம், பூரம், பூராடம், பூரட்டாதி, சித்திரை, சுவாதி, விசாகம் இந்த நட்சத்திரங்களும் முகூர்த்தத்திற்கு கூடாது என்பது இன்னொரு பாடமாகும்.

*நட்சத்திர தாரா பலன்*

ஒருவரின் ஜன்ம நட்சத்திரம் முதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணி வந்த தொகையை ஒன்பதால் வகுத்து வரும் மீதி 2,4,6,8 என்று வந்தால் உத்தமம். அன்றைய தினத்தில் செய்யும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். 1,3,5,7,9 எனவந்தால் அன்றைய தினத்தில் செய்யும், தொடங்கும், காரியங்கள் சுகபலனைத் தராது. 9ஆல் சரியாக மீதி இன்றி வகுபட்டால் 9 எனக் கொள்ள வேண்டும். சிலர் 9 பரம சுகம் என்பர் இத்துடன் முதல் பரியாயத்தில் ஜன்ம தாரையும், 2ம் பரியாயத்தில் விபத்து தாரையும், மூன்றாம் பரியாயத்தில் பிரத்யக்கும் தாரையும், மூன்று பரியாயத்திலும் வரை தாரையும் ஜன்மத்திலிருந்து 22வது நட்சத்திரத்தின் 4ம் பாதமும் ஆகாது என்பார்.

குறிப்பிட்ட நாளில் நாம் ஒரு காரியத்திற்காக போகும் போது அது வெற்றி தருமா அல்லது தோல்வி தருமா என்பதை அறிய இது உதவும், விவாகம், பிராயணத்திற்கு பிரத்யக்கு தாரை சுபம்.

இவ்வாறு ஒன்பதால் வகுத்து மீது

| | தாரை | பலன் | தாரை அதிபதி |
|---|---|---|---|
| 1 வந்தால் | ஜன்ம தாரை | கிலேசம் உண்டாகும்/ தேச நாசம் - | சூரியன் |
| 2 வந்தால் | சம்பத்து தாரை - | பணம் வரும் - | புதன் |
| 3 வந்தால் | விபத்து தாரை - | கெடுதல் ஆபத்து ஏற்படும் | ராகு |
| 4 வந்தால் | க்ஷேம தாரை - | நன்மை ஏற்படும் - | குரு |
| 5 வந்தால் | பிரத்யக்க தாரை | காரிய தன நாசம் ஏற்படும் - | கேது |
| 6 வந்தால் | சாதக தாரை - | தெய்வ அனுகூலம் உண்டாகும - | சந்திரன் |
| 7 வந்தால் | வாத தாரை - | கெடுதல் - | சனி |
| 8 வந்தால் | மைத்திர தாரை - | சுபங்கள் ஏற்படும் - | சுக்கிரன் |
| 9 வந்தால் | பரமமைத்திர தாரை - | அதிக சுகமுண்டு - | செவ்வாய் |

*ருது நட்சத்திர பலன்கள்*

ஒரு பெண் முதல் முதலாக ருது வாகும் போது அன்றைய நட்சத்திரத்தைக் கொண்டு பிற்காலத்தில் அவள் எப்படி இருப்பாள் என்பதை இதைக் கொண்டும் ஓரளவு அறியலாம். ஆனால் இவற்றை மாற்றி அமைக்கும் சக்தி ஜனன கால ஜாதகத்திற்கு உண்டு என்பது கவனத்தில் கொள்ள வேண்டும்.

அசுவதியில் ருதுவானால் - அவள் விதவையாவாள்

பரணியில் ருதுவானால் - புத்திரவதி

கிருத்திகையில் ருதுவானால் - மலடியாய் இருப்பாள்

ரோகிணியில் ருதுவானால் - நன்மைகளை அடைபவள்

மிருகசீர்ஷத்தில் ருதுவானால் - கணவனுக்கு இனியவளாக இருப்பாள்

திருவாதிரையில் ருதுவானால் - வெறுப்புள்ளவள்

புனர் பூசத்தில் ருதுவானால் - சுகம் உள்ளவள்

பூசத்தில் ருதுவானால் - சீரும் சிறப்பும் அடைவாள்

ஆயில்யத்தில் ருதுவானால் - வயறழிவு ஏற்படும்

மகத்தில் ருதுவானால் - கணவனுக்கு நல்லவளாய் நடப்பாள்

பூரத்தில், பூரட்டாதியில் ருதுவானால் - மலடியானவள்

உத்திரத்தில் ருதுவானால் - பிறருக்கு உபகாரம் செய்பவள்

ஹஸ்தத்தில் ருதுவானால் - நல்லவள்

சித்திரையில் ருதுவானால் - அறிவுள்ளவள்

சுவாதியில் ருதுவானால் - குடும்பம் பெருகியவள்

விசாகத்தில் ருதுவானால் - அமங்கல யோகம் உடையவள்

அனுஷத்தில் ருதுவானால் - நோயாளியானவள்

கேட்டையில் ருதுவானால் - பரஸ்திரீ

மூலத்தின் ருதுவானால் - நிறைய பால் உள்ளவள்

பூராடத்தில் ருதுவானால் - அடிமை தேடும்

உத்திராடத்தில் ருதுவானால் - தர்மம் செய்பவர்

திருவோணத்தில் ருதுவானால் - பாக்யவதி

அவிட்டத்தில் ருதுவானால் - பொருள் உள்ளவள்

சதயத்தில் ருதுவானால் - பொருளை அழிப்பவள்

உத்திரட்டாதியில் ருதுவானால் - தரித்திரம் உள்ளவள்

ரேவதியில் ருதுவானால் - நோயாளி.

***நல்ல காரியங்கள் செய்ய உகந்த நட்சத்திரங்கள்***

***சீமந்தம்***:

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம் உத்திராடம், திருவோணம் உத்திரட்டாதி, ரேவதி இவைகள் சீமந்தம் செய்ய ஏற்றவை, பிற சுப அமைப்புகளையும் கவனிக்க வேண்டும்.

***பெயர் சூட்ட:***

ரோகிணி' மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ரேவதி சிறந்தவை. மற்றவைகளை விலக்க வேண்டும்

***காதுகுத்த***:

மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை. உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களும் ஜென்ம நட்சத்திரத்திற்கு 12,16ஆம் நட்சத்திரங்களும் மற்ற முழுநட்சத்திரங்களும் உத்தமம்.

அன்னபிராசம்

ரோகிணி, புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை உத்திரம், சுவாதி, அனுஷம், உத்திராடம்,¯திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, அசுவதி, மிருகசீர்ஷம், அவிட்டம்,

மயிர் கழிக்க:

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, ஆகியவை நல்லவை தாயார் இருந்தால் வெள்ளிக்கிழமை கூடாது. செவ்வாய், சனி, ஞாயிறு ஜென்ம நட்சத்திரம், மனைவியின் கர்ப காலம் ஆகியவை கூடாது. சந்திரன், ஜன்மம், 6, 12ம் ராசியிலிந்தாலும் விலக்க வேண்டும். சிலர் திருமணமாகி ஓராண்டு வரையும் இந்த விரதம் அனுஷ்டிப்பதுண்டு.

வித்யாரம்பம்:

அசுவதி, ரோகிணி, திருவாதிரை, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம் சித்திரை, சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, நட்சத்திரங்கள் உத்தமம் மற்ற அமைப்பு களையும் கவனிக்கவும்.

பதவி ஏற்க:

அதிவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி. ரேவதி, நட்சத்திரங்கள் உத்தமம் மற்ற அமைப்புகளையும் கவனிக்க வேண்டும். கன்னி, துலா லக்னங்கள் கூடாது.

புதுத்துணி உடுத்த:

அசுவதி, ரோகிணி, புனர்பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், உத்திராடம், அவிட்டம், உத்திரட்டாதி, ரேவதி, 6மிடம், 8 மிடம் சுத்தம் அவசியம்.

*வாகனம் ஏற:*

ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், மகம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி, சூரிய உதயத்தில் ஏறுதல் நன்று.

*ஆபரணம் பூண;*

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், ஹஸ்தம், சித்திரை, அனுஷம், ரேவதி, உத்தமம், வளர்பிறையாக இருக்க வேண்டும்.

*பொன்னேர் செலுத்த:*

ரோகிணி, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், மூலம், உத்திராடம் உத்திரட்டாதி, ரேவதி.

*விதை விதைக்க:*

அசுவதி, பரணி, கிருத்திகை, திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி. ரேவதி.

*கிழங்குகள் பயிரிட:*

பரணி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம்.

*பயறு வகைகளுக்கு:*

சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம்.

*கதிர் அறுக்க:*

பரணி, ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, பூசம், மகம், உத்திரம் ஹஸ்தம், விசாகம், அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி, ஆகியவை உத்தமம் ஜன்ம நட்சத்திரம் கூடாது.

*களஞ்சியத்தில் தானியம் வைக்க:*

பரணி, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, மகம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், உத்திராடம், திருவோணம் உத்திரட்டாதி, சனிக்கிழமை நல்லது. சுமங்கலி அல்லது கன்னிப் பெண் வைக்க வேண்டும்.

*தானியம் செலவிட:*

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி, சனிக்கிழமை நன்று. வெள்ளிக்கிழமை கூடாது.

*விருந்து உண்ண:*

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, விசாகம் உத்தமம்.

*மனை கோல அகம் எடுக்க:*

ரோகிணி, மிருகசீர்ஷம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி. இவை உத்தமம் புனர்பூசம், பூசம், மூலம், அவிட்டம், சதயம், ரேவதி இவை மத்திமம். மற்ற நட்சத்திரங்கள் ஆகாதவை.

*கிணறு எடுக்க:*

ரோகிணி, மிருகசீர்ஷம், மகம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, கேட்டை,, பூராடம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகியவை. சிறந்தது ஐப்பசி மாதமும் சிறப்பு. இந்த நட்சத்திரங்களில் சித்திரை மாதம் கரை கட்ட சிறப்புடையது.

*பிரயாணம்:*

1) ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆகியவை கிழக்கில் பிரயாணம் செல்ல உத்தமம்.

அனுஷம், கேட்டை, மூலம், உத்திராடம், திருவோணம், ஆகியவை மேற்கில் செல்ல நல்லது.

உத்திரம், ஹஸ்தம் இரண்டும் தெற்கில் செல்லவும் அசுவதி, அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகியவை வடக்கில் பிராயணம் செய்யவும் நல்லது. இது ஒரு சாரார் அனுசரிக்கும் முறை.

2) அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி இவைகள் பிரயாணம் செய்ய ஏற்ற நட்சத்திரங்கள். புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகள் சிறந்தது. சூலம், யோகினி உள்ள திசையில் போகக் கூடாது. அவசியம் போக வேண்டுமானால் பரிகாரம் செய்து போகலாம்.

*மாங்கல்யம் செய்ய:*

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், மகம், உத்திரம், ஹஸ்தம், சுவாதி அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி இவை பொன்னை உருக்கி மாங்கலியம், செய்ய சிறந்த நட்சத்திரங்கள். 2 மிடம் சுத்தமாக இருக்க வேண்டும்.

*விவாகம்:*

ரோகிணி, மிருகசீர்ஷம், மகம், உத்திரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி இவை முதல் தரம் உத்தமம்.

ஆசுவதி, புனர்பூசம், பூசம் சித்திரை, அவிட்டம், சதயம், இவை இரண்டாந்தரமானவை மத்திமம்.

*குறிப்பு:*

பரணி, கிருத்திகை திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்கள் விலக்கப்பட்டவை. இவைகளின் உதயாதி விசேஷ குணங்கள் இருந்தாலும் இந்த நட்சத்திரங்களின் தோஷத்துக்கு பரிகாரமில்லை.

*நிஷேகம்:*

ரோகிணி, உத்திரம், ஹஸ்தம், சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, **ரேவதி** முதல் தரமானது. அசுவதி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம். இரண்டாந்தரமானவை. 1,7,8, மிடங்களில் சுத்தமாயிருக்க வேண்டும். ஜன்ம நட்சத்திரம் ஆகாது.

***பும்சவனம்:***

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம் அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, 8 மிடம் சுத்தமாயிருக்க வேண்டும். இது 3ம் மாதத்தில் செய்யும் சடங்கு.

*குழந்தையை தொட்டிலிடுதல்:*

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, 8மிடம் சுத்தம் அவசியம்.

***உபநயனம்:***

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம் சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி நல்லவை. உத்தராயணத்தில் செய்ய வேண்டும். 8 மிடம் சுத்தம் அவசியம்.

*விவசாயம் / உழவுத் தொழில் ஆரம்பம்:*

ரோகிணி, புனர்பூசம், உத்திரம், ஹஸ்தம், மூலம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி, அந்த நாளில் ஆகாச, பாதாள யோகினி இருக்கக் கூடாது.

*எருவிடல்:*

திருவாதிரை, புனர்பூசம், உத்தரம், சித்திரை, அனுஷம், உத்திராடம் உத்திரட்டாதி.

*மாடு முதலானவை வாங்கல் கொடுத்தல்:*

அசுவதி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், மகம், பூரம், விசாகம், அனுஷம், மூலம், பூராடம், திருவோணம், அவிட்டம் பூரட்டாதி, ரேவதி.

*கிரக ஆரம்பம்:*

ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம் மகம், உத்தரம், சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி.

*கிரகப்பிரவேசம்:*

ரோகிணி, மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம் உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி.

*வியாதியஸ்தர் மருந்து சாப்பிட:*

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், புனர்பூசம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி.

*வியாதியஸ்தர் குளித்தல்:*

அசுவதி, பரணி, கிருத்திகை, மிருகசீர்ஷம், திருவாதிரை, பூசம், பூரம், ஹஸ்தம், சித்திரை, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி.

## திருமணப் பொருத்த விவரங்கள்

*நட்சத்திர பொருத்தம்:*

இதை தினப் பொருத்தம் கூறலாம். பெண் ஜன்ம நட்சத்திரம் முதல் எண்ணும் போது 2,4,6,8,9, ஆம் நட்சத்திரங்களாக ஆண் நட்சத்திரம் அமைந்தால் இப்பொருத்தம் உண்டு, யோகமாகும். 9 முடிந்தபின் பத்திலிருந்து 1,2,3, எனவும் 18 முடிந்தபின் 19 லிருந்து 1,2,3 என எண்ணம் வேண்டும்.

பெண் நட்சத்திரம் முதல் புருஷ நட்சத்திரம் வரை எண்ணி வந்தது, 2, 4, 6, 8, 9, 11, 13, 15, 17, 18, 20, 24, 26 ஆனால் உத்தம் 12ம் நட்சத்திரத்தில் 1ம் பாதமும், 14ம் நட்சத்திரத்தில் 4ம் பாதமும், 16ம் நட்சத்திரத்தில் 3ம் பாதமும் தவிர மற்ற பாதங்கள் மத்திமம். இதில் சொல்லப்படாததும், அஷ்டம ரரசி நட்சத்திரங்களும் பொருந்தாது.

***கணப்பொருத்தம்:***

| தேவகணம் | மனிதகணம் | ராக்ஷஸகணம் |
|---|---|---|
| அசுவதி | பரணி | கிருத்திகை |
| மிருகசீர்ஷம் | ரோகினி | ஆயில்பம் |
| புனர்பூசம் | திருவாதிரை | மகம் |
| பூசம் | பூரம் | சித்திரை |
| ஹஸ்தம் | உத்தரம் | விசாகட் |
| சுவாதி | பூராடம் | கேட்டை |
| அனுஷம் | உத்திராடம் | மூலம் |
| திருவோணம் | பூரட்டாதி | அவிட்டம் |
| ரேவதி | உத்திரட்டாதி | சதயம் |

மேலே கொடுத்த அட்டவணையிலிருந்து ஆண், பெண், இருவரின் நட்சத்திரங்களுக்கும் என்ன கணம் என்று தெரிந்து கொண்டு.

இருவரும் ஒரே கணமானால் —உத்தமம்

ராக்ஷஸமும் தேவமும் ஆனால் —மனக்கஷ்டம், கலகதி

ராக்ஷஸமும் மனிதமும் ஆனால் —மரண யோகம்

மனிதமும் தேவமும் ஆனால் —மத்திமம்

பெண் மனித தேவ கணமும், ஆண் ராக்ஷஸ கணமுமானால், விவாகம் செய்யலாம் (சிலர்).

*மகேந்திர பொருத்தம்*

பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரம் முதல் எண்ணும் போது ஆணின் நட்சத்திரம் 1,4,7,10,13,16,19,22,25, என வந்தால் இப்பொருத்தம் உண்டு இதுதான் முதல்தரம் மற்றவை பொருந்தா.

*ஸ்த்ரீ தீர்கம் பொருத்தம்*

பெண் நட்சத்திரத்திற்கு 13வது நட்சத்திரத்திற்கு மேல் ஆண் நட்சத்திரம் அமைவது நல்லது 13க்குள் வருவது நல்லதல்ல. இப்பொருத்த, சரியில்லாமலிருந்தால் ஸ்திரீக்கு சுண்டம் இதனால் அன்யோன்ய ப்ரீதி, தீர்க்கமாங்கல்யம், ஆயுள் விருத்தி, அநுபோக சுகம்ம சர்வ சம்பத்கரம்

*நட்சத்திர யோனி (மிருகம்) பொருத்தம்*

அசுவதி—ஆண்குதிரை

பரணி—ஆண் யானை

கிருத்திகை—பெண் ஆடு

ரோகிணி—ஆண் பாம்பு

மிருகசீர்ஷம்—பெண் பாம்பு

திருவாதிரை—ஆண் நாய்

புனர்பூசம்—பெண் பூனை

பூசம்—ஆண் ஆடு

ஆயிலயம்—ஆண் பூனை

சித்திரை—ஆண்புலி

சுவாதி—ஆண் எருமை

விசாகம்—பெண் புலி

அனுவும்—பெண் மான்

கேட்டை—ஆண் மான்

மூலம்—பெண் நாய்

பூராடம்—ஆண் குரங்கு

உத்திரடம் மலட்டுபசு (கீரி)

திருகோணம் பெண் குரங்கு

| | |
|---|---|
| மகம்—ஆண் எலி | அவிட்டம்—பெண் சிங்கம் |
| ஆயில்யம்—ஆண் பூனை | சதயம்—பெண் குதிரை |
| மகம்—ஆண் எலி | பூரட்டாதி—ஆண் சிங்கம் |
| பூரம்—பெண் எலி | உத்திரட்டாதி—பசு |
| ஹஸ்தம்—பெண் எருமை | ரேவதி—பெண் யானை |

மேலே தரப்பட்டுள்ள அடடவணையைக் கொண்டு ஆண் பெண் இருவருக்கும் யோனி என்பதை தெரிந்து கொள்ளவும். ஆண் பெண் இருவருக்கும் ஆண் யோனியானால் ஆகாது (மத்திமம்) பெண்ணுக்கு பெண்யோனியும் ஆணுக்கு ஆண் யோனியாக இருப்பது நல்லது. மேலும் அவை ஒன்றுக் கொன்று பகை இல்லாமலும் இருக்க வேண்டும் பகை விபரம் வருமாறு.

யானைக்கு மனிதனும் சிங்கமும் பகை

குதிரைக்கு பசுவும் எருமையும் பகை

எருமைச்சுடர், பசு, மான், நாய், புலி பகை

குரங்குக்கு ஆடு (நாய்) பகை

எலிக்கு பூனையும் பாம்பும் பகை

பாம்புக்கு கீரியும் ஆடும் பகை

மானுக்கு பசு நட்பு

ஆட்டுக்கு குதிரை நட்பு

நாய்க்கு மனிதன் நட்பு

பெண்ணுக்கு
க்கும் பகை
ானியானால்

## வேதைப் பொறுத்தம்




பொருத்தம்
த நட்சத்திர

திரம் பெண்
அமைத்தால்
ாது வேதை
ாம் செய்யக்

மகம்—ஆண் எலி

ஆயில்யம்—ஆண்

மகம்—ஆண் எலி

பூரம்—பெண் எலி

ஹஸ்தம்—பெண்

மேலே தரப்பட்
இருவருக்கும் பே
இருவருக்கும் ஆ
பெண்யோனியும்
அவை ஒன்றுக்
விபரம் வருமாறு.

யானைக்கு மனித

குதிரைக்கு பசுவு

எருமைச்சுடர், பசு

குரங்குக்கு ஆடு (

எலிக்கு பூனையும்

பாம்புக்கு கீரியும்

மானுக்கு பசு நட்

ஆட்டுக்கு குதிரை

இவை அல்லாதவை சமம், புருவனுக்கு பெண் யோனியும், பெண்ணுக்கு ஆண் யோனியுமாக இருந்தால் பொருந்தாது. இருவருக்கும் பகை யோனியானாலும் பொருந்தாது. இருவருக்கும் ஆண் யோனியானால் மத்திமம் இதன் பலன் அன்யோன்ய வசியம் பக்கம் 61 பார்.

*ரச்சுப் பொருத்தம்*

முன்னால் தரப்பட்டுள்ளது

**வேதைப் பொருத்தம்**

முன்னால் தரப்பட்டுள்ளது.

நட்சத்திர வேதைகள் பற்றி முன்பு பார்த்தோம். ஆண்-பெண் பொருத்தம் பார்க்கும் போது இன்னொரு முறை அனுசரிக்கப்படும். அந்த நட்சத்திர வேதையைவிட இது தெளிவானது.

கோட்டின் ஒரு பகுதி மூளையில் இருக்கும் நட்சத்திரம் பெண் நட்சத்திரமாகவும் எதிர் முனையில் ஆண் நட்சத்திரமாக அமைத்தால் மேதை, சமய அமைத்தால் மண வாழ்வு சிறப்பாக அமையாது வேதை இருந்தால் மற்ற பொருத்தங்கள் இருந்தாலும் திருமணம் செய்யக் கூடாது.

அசுவதி மகம் மூலம் மூன்றும் பரஸ்பர வேதை

பரணிக்கும் ரேவதிக்கும் பரஸ்பர வேதை

ரோகினிக்கும் பூராட்டாதிக்கும் பரஸ்பர வேதை

ரோகிணிக்கும் பூரட்டாதிக்கும் பரஸ்பர வேதை

மிருகசீர்ஷத்திற்கும் சதயத்திற்கும் பரஸ்பர வேதை

திருவாதிரைக்கும் சித்திரைக்கும் பரஸ்பர வேதை

புனர்பூசத்திற்கும் ஹஸ்த்திற்கும் பரஸ்பர வேதை

பூசத்திற்கும் உத்திரத்திற்கும் பரஸ்பர வேதை

ஆயில்யத்திற்கும் பூரத்திற்கும் பரஸ்பர வேதை

சுவாதிக்கும் அவிட்டத்திற்கும் பரஸ்பர வேதை

விசாகத்திற்கும் திருவோணத்திற்கும் பரஸ்பர வேதை

அனுஷத்திற்கும் உத்திராடத்திற்கும் பரஸ்பர வேதை

ஆயில்யத்திற்கும் பூராடத்திற்கும் பரஸ்பர வேதை.

**ஆயுள் சோதனைப் பொருத்தம்**

பெண் நட்சத்திரம் முதல் புருஷன் நட்சத்திரம் வரை எண்ணி வந்த தொகையை ஏழால் பெருக்கி வந்த தொகையை 27ஆல் வகுக்கவும் இதில் வந்த மீதியையும்.

இவ்வாறே புருஷன் நட்சத்திரம் முதல் பெண் நட்சத்திரம் வரை எண்ணி வந்த தொகையை ஏழால் பெருக்கி வந்தாவ் 27ஆல் வகுத்து வந்த மீதியையும் கணித்துக் கொள்ளவும் யாருடைய மீதித் தொகை குறைவாக இருக்கிறதோ அவர் முதலில் மரணம் அடையக் கூடும் எனலாம்.

(உ-ம்) பெண் - அசுவதி ஆண் - உத்தரம் என்றால்.

அசுவதி முதல் உத்தரம் வரை 12* 7 = 84 ॥ 3 3/27

உத்தரம் முதல் அசுவாதி வரை 17* 7 = 119/27 = 4 11/27

பெண்ணுக்கு மீதி 3 ஆண் மீதியை 11 விட குறைகிறது ஆகவே பெண் கணவனுக்கு முன் மரணமடையலாம் எனக் கொள்ள வேண்டும்.

### முழு சுபந்தரும் நட்சத்திரங்கள்

| | | |
|---|---|---|
| அசுவதி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| ரோகினி | ஹஸ்தம் | திருவோணம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

இந்த 18 நட்சத்திரங்களும் எல்லா காரியங்களுக்கும் நன்மை தருபவை இவற்றில் சீமந்தம், காது குத்தல், மனை கோலல், திருமணம், வாசற்கால் வைத்தல் போன்ற சுப காரியங்களைச் செய்யலாம்.

### 11 சுப நட்சத்திரங்கள்

ரோகினி, மிருகசீர்ஷம் மகம், உத்திரம், ஹஸ்தம், சுவாதி அனுஷம், மூலம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி - இந்த 11 நட்சத்திரங்களும் பிறவேளைகள் காலங்கள் சுபமாக அமைந்தால் நன்மையான காரியங்கள் செய்யலாம்.

### சந்திர அவஸ்தை

ஒவ்வொரு நட்சத்திரத்தின் 60 நாழிகைக்குள்ளும் ஒவ்வொரு நாழிகைப் பகுதியில் சந்திரன் நிற்கப் பிறந்தவர்கள் பற்றிய பொதுப் பலன்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1 முதல் 5 நாழிகைவரை—வெளியூர், வெளிதேவ வாசம்

6 முதல் 10 நாழிகை வரை—உயர்ந்த ராஜ சிநேகிதம் கிட்டும்

11 முதல் 15 நாழிகை வரை—பிராண ஹானி

16 முதல் 20 நாழிகை வரை—பூபாலத்துவம்

21 முதல் 25 நாழிகை வரை—குல நட்பு பேணுபவன்

26 முதல் 30 நாழிகைவரை—நோயுள்ளவன்

31 முதல் 35 நாழிகைவரை—ஆஸ்தானந்த ஆள்பவன்

36 முதல் 40 நாழிகை வரை—மீதியான

41 முதல் 15 நாழிகை வரை - க்ஷுத்பாதி
46 முதல் 50 நாழிகை வரை - யுவதி வான்
51 முதல் 55 நாழிகை வரை - இனிய சயன சுகமுள்ளவன்
56 முதல் 60 நாழிகை வரை - முறையற்ற உணவு உண்டவன்

இவை பொதுவால் எல்லா நட்சத்திரங்களுக்கும் உள்ளவை அந்த நட்சத்திர பயன்களில் இந்த நாழிகையில் பிறந்தவர்களிடம் இந்த பே பாவம் அதிகமாக இருக்கும்.

*நட்சத்திரக்கிரியை (சந்திரக் கிரியை)*

சந்திரன் திற்கும் நட்சத்திரத்தின் 60 நாழிகையினுள்ள ஒவ்வெ நாழிகையிலும் பிறந்தவர்கள், தத்தம் ஜனன பலனால் எவ்வ விளங்குவார்கள் என்பதைக் குறிப்பது சந்திரகிரியை எனப்படும். அ

| பிறந்தநாழிகை | அதன் பலன் |
|---|---|
| 1 | தன் இடம் விட்டு நீங்குதல் |
| 2 | தபசு |

| | |
|---|---|
| 3 | பரஸ்திரீகளை நாடுபவன் |
| 4 | திருடும் குணம் உள்ளவன் |
| 5 | வாகன யோகம் உடையவன் |
| 6 | சிம்மாசன யோகம் உடையவன் |
| 7 | அரசயோகம் உடையவன் |
| 8 | எதிரிகளை வெற்றி கொள்பவன் |
| 9 | தண்டிப்பவன் |
| 10 | குணவான் |
| 11 | பலமற்றவன் |
| 12 | தலையில் காயம் உள்ளவன் |
| 13 | கை, கால் ஊனமுற்றவன் |
| 14. | காவலில் வைக்கப் படுபவன் |
| 15 | நஷ்டம் ஏற்படும் |
| 16 | அரசு யோகம் |
| 17 | வேதாப்பியாசங்கள் செய்தவன் |
| 18 | அதிக உறக்கம் உள்ளவன் |
| 19 | எல்லோருக்கும் நன்மை செய்பவன் |
| 20 | தர்மகர்த்தா |
| 21 | சத்வசியன் |
| 22 | நிதிதேடுபவன் |
| 23 | தர்மவான் |
| 24 | புகழ் பெற்றவன் |
| 25 | எதிரிகளை அழிப்பவன் |

26 வியாதியஸ்தன்

27 எதிரிகளை வெல்பவன்

28 சுயதேவ சஞ்சாரன்

29 அடிமை வேலை செய்பவன்

30 வினிஷ்டார்த்தன்

31 ஆஸ்தானியாபவன்

32 மந்திரியாவான்.

33 பிறர் நிலத்தை ஆள்பவன்

34 மனைவி உடையவன்

35 யானைக்குப் பயந்தவன்

36 போருக்குப் பயந்தவன்

37 மிகவும் பயந்தவன்

38 விலைகள் செய்பவன்

39 அன்ன தாதா

40 சுக்கினிகள்

41 எப்போதும் பசி உள்ளவன்

42 புஷ்டியான உணவை உண்பவன்

43 வித்வான்

44 மாம்சானன்

45 அஸ்திரகாயம் உள்ளவன்

46 விவேகி

47 விளையாட்டுப் பிரியன்

| | |
|---|---|
| 48 | சூதாடுபவன் |
| 49 | ராஜயோகம் உள்ளவன் |
| 50 | துக்கம் உள்ளவன் |
| 51 | சயன சுகம் உள்ளவன் |
| 52 | எதிரிகளால் கௌரவம் அடைபவன் |
| 53 | உறவினரால் ஒதுக்கப்பட்டவன் |
| 54 | தியானம் செய்பவன் |
| 55 | மனைவியுடன் இருப்பவன் |
| 56 | மிருஷ்டான்ன போஜி |
| 57 | க்ஷீரபோஜி |
| 58 | புண்ணியவான் |
| 59 | சுவஸ்த்த சித்தன் |
| 60 | சகல சுகங்களும் கிடைக்கப் பெற்றவன் |

***சந்திர வேளை***

இது ஒவ்வொரு நட்சத்திரத்தின் நாழிகையையும் 36 பாகங்களாக்கி வரும் நா 1.40யில் பிறந்தவர்களின் குணங்களைக் கூறுவது.

| பாகம் | பலன் |
|---|---|
| 1 | தலைரோகம் உள்ளவன் |
| 2 | சந்தோஷமாயிருப்பவன் |
| 3 | யாகம் செய்பவன் |
| 4 | சுகவான் |
| 5 | கண்-நோய் - உள்ளவன் |

| | |
|---|---|
| 6 | சுகவான் |
| 7 | பெண்களுடன் ரமிப்பவன் |
| 8 | உக்கிர ஜ்வரம் |
| 9 | பொன் ஆபரணம் பூணுபவன் |
| 10 | துக்கம் உடையவன் |
| 11 | விஷம் உண்பவன் |
| 12 | நதனன் |
| 13 | வயிற்று வலி உடையவன் |
| 14 | ஜலக்கிரீடை செய்பவன் |
| 15 | சந்தோஷம் உள்ளவன் |
| 16 | சித்திரக் காரன் |
| 17 | குரோதம் உடையவன் |
| 18 | கூத்தாடுபவன் |
| 19 | ஆஜிபோஜி |
| 20 | உறக்கம் மிகுந்தவன் |
| 21 | சங்கீதப் பிரியன் |
| 22 | பல்வலி உள்ளவன் |
| 23 | சண்டைப் பிரியன் |
| 24 | பைத்தியக் காரன் |
| 25 | அரசன் |
| 26 | ஜலக்கிரீடை செய்பவன் |
| 27 | மக்கள் விரோதி |

| | |
|---|---|
| 28 | திருடர் பயம் உள்ளவன் |
| 29 | சாஸ்திரங்கள் அறிந்தவன் |
| 30 | சுதந்திரம் உடையவன் |
| 31 | யுத்தத்தினால் ஜீவிப்பவன் |
| 32 | பாபங்கள் செய்பவன் |
| 33 | புண்ணியங்கள் செய்பவன் |
| 34 | குரூர காரியங்கள் செய்பவன் |
| 35 | மிகவும் சந்தோஷம் உடையவன் |
| 36 | மிகவும் சந்தோஷம் உடையவன் |

இவையும் நட்சத்திர பலனில் விசேஷமாக பொருந்திவரும் பலன்களாகும்.

### உலக தோஷம்

சூரியன் இருக்கிற நட்சத்திரத்திற்கு 9வது நட்சத்திரம் தோஷமாகும். சூரியன் அசுவதியில் இருந்தால் மூலம் 19வது நட்சத்திரமாக வருகிறது. இது எந்த சுப காரியங்களுக்கும் குறிப்பாக மூகூர்த்தத்திற்கும் ஆகாது.

### பூகம்ப தோஷம்

சூரியன் இருக்கிற நட்சத்திரத்திற்கு ஒன்பதாவது நட்சத்திரம் பூகம்ப தோஷம் உடையது. சூரியன் அசுவதியில் இருந்தால் அதிலிருந்து ஒன்பதாவது நட்சத்திரமான ஆயில்யம் பூகம்பதோஷம் உடையது. இதுவும் சுப காரியங்களுக்கு விலக்கப்பட்டது.

### வாட தோஷம்

இதனைக் கண்டு பிடிக்க சூரியன் நின்ற நட்சத்திரத்திலிருந்து மூலம் வரையில் எண்ண வேண்டும். வந்த எண்ணிக்கையை பூராடம் முதல் மறுபடியும் எண்ணினால் வரும் நட்சத்திரம் லாட தோஷம் உடையது இது தோஷமாகும். (உ-ம்) சூரியன் அசுவதில் இருந்தால் மூலம் வரை

எண்ணி வந்த தொகை 19. இதை பூராடம் முதலாக எண்ணினால் வரும் பூரம் லாட தோஷம் உள்ள நட்சத்திரமாகும்.

*வைதுருத தோஷம்*

சூரியன் நின்ற நட்சத்திரத்திற்கு 14வது நட்சத்திரம் வைதுருத தோஷம் உடையது. சூரியன் ரேவதியில் இருந்தால் ஹஸ்தம் வைதுருத தோஷம் அடையும்

*விபத்து நட்சத்திரம்*

ஜன்ம நட்சத்திரத்திலிருந்து 3வது நட்சத்திரம், 12ம் நட்சத்திரத்தின் முதற்பாதம், 21ம் நட்சத்திரத்தின் முதற்பாதம் இம்மூன்றும் விபத்து நட்சத்திரங்களாகும்.

*பிரத்தியுக் நட்சத்திரங்கள்*

ஜன்ம நட்சத்திரத்திலிருந்து எண்ணிவரும் 5வது நட்சத்திரம் 14ம் நட்சத்திரன் 4ம் பாதம், 23ம் நட்சத்திரத்தின் நான்காம் பாதம். இம்மூன்றும் பிரத்தியக்கு நட்சத்திரங்கள்.

*நிதன நட்சத்திரம்*

ஜமன் நட்சத்திரத்திலிருந்து ஏழாவது நட்சத்திரம்

*கர்ம நட்சத்திரம்*

ஜனிக்கும் போது சந்திரன் எந்த நட்சத்திரத்தில் இருக்கிறதோ அது ஜன்ம நட்சத்திரமாகும். இதற்கு 10வது நட்சத்திரம் கர்ம நட்சத்திரம்.

*சாங்காதிக நட்சத்திரம்*

ஜன்ம நட்சத்திரத்திலிருந்து 16வது நட்சத்திரம்

*சமுதாயக நட்சத்திரம்*

ஜன்ம நட்சத்திரத்திலிருந்து 18வது நட்சத்திரம்

### வைநாசிக் நட்சத்திரம்

ஜன்ம நட்சத்திர பாதத்திலிருந்து எண்ணி வரும் 88வது பாத நட்சத்திரம் வைநாசிகமாகும். இது தோஷமுள்ளது. பூசம் 4ம் பாதம் ஜன்ம நட்சத்திரமானது பூராடம் 3ம் பாதம் வைநாசிகம்.

### மானச நட்சத்திரம்

ஜன்ம நட்சத்திரற்கு 27 வது நட்சத்திரம்

### அபிஷேக நட்சத்திரம்

ஜன்ம நட்சத்திரற்கு 27வது நட்சத்திரம். மேலே சொல்லப்பட்ட விபத்து முதல் அபிஷேகம் வரை "கர்த்திரு", "கர்த்கரு" "தோஷங்கள்" எனப்படும். இவைகளை எந்த நல்ல காரியங்கள் செய்யும் போதும் விலக்க வேண்டும். முகூர்த்த சமயங்களில் அவசியம் கவனித்து கடைபிடிக்க வேண்டும்.

### கிராந்த நட்சத்திரங்கள்

கோசாரத்தில் சூரியன், செவ்வாய். சனி. ராகு, கேது முதலிய கெட்ட கிரகங்கள் இருக்கும் நட்சத்திரங்கள் "கிராந்த நட்சத்திரங்கள்" எனப்படும். இவை தோஷமுள்ளவை முகூர்த்தம் வைக்கக் கூடாது.

### ஜன்ம நட்சத்திரம் - சில விதிவிலக்குகள்

ஜன்ம நட்சத்திரம் முகூர்த்தங்களுக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது ஆனால் சில விதி விலக்குகள் உண்டு. தேவ பூஜை, தேவ பிரதிஷ்டை, மந்திர உபதேசம். அன்ன மூட்டல், சௌளம், உபனனம். நிலம் வாங்கல், பொன்னேர் பூட்டல், கல்வித் தொடக்கம் பதவி ஏற்பு முதலியவைகளுக்கு ஜன்ப நட்சத்திரம் ஏற்றது. 59ம் பக்கம் பாக்க.

### சுபத்திற்கு ஆகாத நட்சத்திரங்கள்

பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், கேட்டை, மூலம், பூரட்டாதி, திருவாதிரை, விசாகம், இந்த 11 நட்சத்திரங்களும் எந்த சுப காரியங்களுக்கும் ஏற்றதல்ல. எதுவும் தொடங்கினால் நற்பலன் தராது

ஆனால் மகத்தில் திருமணம் செய்யலாம். மூலத்தில் திருமணமும், பயணமும் செய்யலாம் என்பது ஒரு விதிவிலக்கு.

### *கர்ண வேதை நட்சத்திரங்கள்*

மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சித்திரை, உத்தரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், ரேவதி, உத்திரட்டாதி, என்னும் 2 நட்சத்திரங்களும், "கர்ண வேதை" யாகும். இவையும் தோஷமாகக் கருதி சுபங்களில் விலக்கப்படும்.

### *கண்ட நட்சத்திரம்*

ஒரு நாளில் இரண்டு நட்சத்திரமாக அமைவது இது இதுவும் முகூர்த்தத்திற்கு விலக்கப்பட வேண்டும்.

### *இரு நேத்திர நட்சத்திரங்கள்*

அசுவதி முதல் அன்றைய நட்சத்திரம் வரை எண்ணி வந்த தொகையுடன். ஞாயிறு முதல் அன்றைய கிழமைவரை எண்ணி வந்த தொகையைக் கூட்டவும் இதை ஒன்பதால் வகுத்து வரும் மீதி 1,2,3,4 எனவந்தால் அந்த நட்சத்திரம் இரு நேத்திர நட்சத்திரம் எனப்படும்.

மேற்படி கழித்ததில் மீதம் 5,6,7 என வந்தால் அது ஒற்றைக்கண் நட்சத்திரம் எனப்படும்.

மேற் கண்டபடி வந்த மீதி 8,9 என அமைந்தால் அது குருட்டு நட்சத்திரம் எனப்படும்.

(உ.ம்) சனிக்கிழமை மூலம் என்றால், அசுவது முதல் மூலம் வரை எண்ணி வந்தது 19. ஞாயிறு முதல் சனி வரை 7ஆக 19+7=26 இதை ஒன்பதால் வகுத்தால் மீதி 8, ஆகவே மூலம் குருட்டு நட்சத்திரம்.

கண்வியாதிகளுக்கும், பிற காரியங்களுக்கும் இவற்றை கவனித்து அறிய வேண்டும்.

### கிருக ஆரம்ப யோகங்கள்

ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம், ஆயில்யம், பூராடம், உத்திராடம், திருவோணம் இவைகளில் குரு சஞ்சாரமாயிருந்தால் புத்திர யோகம்

திருவாதிரை, புனர்பூசம், சித்திரை, விசாகம், அவிட்டம், சதயம், இவைகளில் சுக்கிரன் சஞ்சாரமாயிருந்தால் தானிய விருத்தி ஏற்படும்.

அசுவதி, ரோகிணி, மிருகசீர்ஷம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, இவைகளில் புதன் சஞ்சார காலமானால் ஐஸ்வர்யம் விருத்தியாகும்.

பரணி, சுவாதி, அனுஷம், கேட்டை, பூரட்டாதி, உத்திரட்டாதி, இவைகளில் சனி சஞ்சாரமானால் பூதவாசம் உண்டாகும்.

### கிரக ஆரம்ப யோக காலம்

பரணி 3,4 பாதங்களிலும், கிருத்திகை, 1,2,3,4 பாதங்களிலும், ரோகிணி முதுற்பாதத்திலும் சூரிய சஞ்சாரகாலம் மிகவும் சிறந்த யோகமாக சொல்லப் படும். இந்த யோகத்தோடு. கடக லக்னத்தில் குருவும் சந்திரனும் சஞ்சரிக்க, வியாழக்கிழமையில் தொடங்கும் யோகம் இது. இதில் வீடு கட்டவும், புதுவீடு கட்டவும், கிரகப்பிரவேசம் செய்யவும் ராஜயோகம் ஏற்படும்.

### உத்தம கிரகப் பிரவேச நட்சத்திரங்கள்

ரோகிணி, மிருகசீர்ஷம், சித்திரை, அனுஷம், உத்தரம், அவிட்டம், சதயம், ரேவதி நட்சத்திரங்களுடன் லக்கினமும் தினமும் ரிஷப மிதுனங்களாக அமைவது.

### மத்திம கிரகப் பிரவேச நட்சத்திரங்கள்

அசுவதி, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், சுவாதி, திருவோணம், ஆகிய நட்சத்திரங் களுடன் சிம்மம், கன்னி, விருச்சிக லக்னமும் ஒன்று கூடிய நாட்கள்.

### யாத்திரை செய்ய உத்தம நட்சத்திரங்கள்

அசுவதி, மிருகசீர்ஷம், புனர்பூசம். பூசம், ஹஸ்தம், அனுஷம். திருவோணம், அவிட்டம், ரேவதி ஆகியவை உத்தமம்.

ரோகிணி, மூலம், உத்திரம், உத்திரட்டாதி ஆகியவை மத்திமம்.

*திட ஸ்வருப நட்சத்திரங்கள்*

இது யாத்திரைக்கு வழிகாட்டும் நட்சத்திர யோகம். சூரியன் இருக்கும் நட்சத்திரம் முதல் பயணம் புறப்படும் நட்சத்திரம் வரை எண்ணி வந்த தொகையை ஏழால் வகுக்க வேண்டும். வரும் மீதம்.

1 ஆனால் க்ஷேமம்

2,7 ஆனால் பிரஹரம் அசுபம்

3 ஆனால் விசனம்

4 ஆனால் ஆயுள் விருத்தி

5 ஆனால் நிர்பயம்

6 ஆனால் தேசப் பிராயணம்

(உம்) சூரியன் இருப்பது அதிவதி ஆனால் பிராயண நட்சத்திரம், மிருகசீர்ஷம் என்றும் கொண்டால் 5 என வருகிறது. அது நிர்பயம் பிரயாணம் செய்ய உத்தம தினம். இதில் வேதை. ஆகாத நட்சத்திரங்களை விலக்கவும். நெடுத்தூர பயணங்களுக்கு இது மிகவும் அவசியம்.

*கிணறு வெட்ட உத்தமமான நட்சத்திரங்கள்*

ரோகிணி, மிருகசீர்ஷம், மகம், உத்தரம், ஹஸ்தம், சித்திரை, கேட்டை, உத்திராடம், பூராடம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 11ம் கிணறு வெட்ட சுபமான நட்சத்திரங்கள்.

*கெட்ட ஜனன நட்சத்திரம்*

(கண்டாந்தர தார நட்சத்திர அரிஷ்டம்)

மூலம் :1) ஞாயிற்றுக் கிழமையில் மூல நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணால் மாமனாருக்கு கண்டமுண்டு.

2) மூல நட்சத்திரத்தில் ஆதியந்த நாழிகையை 15 சம பாகமாக பங்கிட்டு அதில் ஆண் OR பெண் பிறந்த வேளை:-

1 வது பாகமானால்-தகப்பனுக்கு கண்டம்

2 ஆனால் தகப்பனின் சகோதரனுக்கு கண்டம்

ஆனால்–சகோதரியின் புருஷனுக்கு கண்டம்

4 ஆனால்-தகப்பன் வழி பாட்டனுக்கு கண்டம்

5 ஆனால்-தாய்க்கு கண்டம்

6 ஆனால்-தாயின் சகோதரிக்கு கண்டம்

7 ஆனால்-தாயின் சகோதரனுக்கு கண்டம்

8 ஆனால் – தகப்பனின் சகோதரனுடைய மனைவிக்கு கண்டம்

9 ஆனால் - சர்வமும் நாசம்

10 ஆனால் – கால் நடைகள் நாசமடையும்

11 ஆனால் – வேலையாட்கள் நாசம்

12 ஆனால் - பிறந்தவருக்கே கண்டம்

13 ஆனால் - மூத்த சகோதரனுக்கு கண்டம்

14 ஆனால் - சகோதரிக்கு கண்டம்

15 ஆனால் - தாய்வழி பாட்டனுக்கு கண்டம்

3) மூல நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் பிறந்த ஆண் / பெண் குழந்தையின் தகப்பனுக்கும் புத்திரருக்கும் கண்டம்.

2ம் பாதமானால் தாய்க்கு சீக்கிரமே கண்டம், 3ம் பாதமானால் தன நாசம், 4ம் பாதமானால் சௌக்கியம்.

4) மூலத்தில் எந்த பாதத்தில் பிறந்தாலும் ஆண் அல்லது பெண் பிறந்தால் மாமனாருக்கு கண்டம் என்பர் சிலர். ஆனால் இது முகூர்த்த நூல்களில் இல்லை மூலம் 1க்கு மட்டும்தான் தோஷம் சொல்லப்பட்டுள்ளது.

கேட்டை

1) செவ்வாய்க் கிழமையில் கேட்டை நட்சத்திரத்தில் ஒரு பெண் பிறந்தால் மூத்த சகோதரனுக்கு கண்டம்.

2) ஆண் / பெண் பிறந்த பாதம் 1 ஆனால் மூத்த சகோதரனுக்கும், 2 ஆனால் மூத்தவர்களின் கடைசீ சகோதரனுக்கும், 3 ஆனால் தகப்பனுக்கும், 4 ஆனால் பிறந்தவருக்கும் கண்டம்.

3) கேட்டையில் எந்த பாதத்தில் பிறந்தாலும் கண்டம் என்பர் சிலர். இதுவும் முகூர்த்த நூல்களில் இல்லை.

4) கேட்டையின் ஆதியந்த நாழிகையை 10 சம பாகமாக பங்கிட்டு அதில் ஆண் அல்லது பெண் பிறந்தது.

முதல் பாகமானால் - தாய் வழி பாட்டிக்கு கண்டம்

2ம் பாகமானால் - தாய் வழி பாட்டனுக்கு கண்டம்

3ம் பாகமானால் - தாயின் சகோதரனுக்கு கண்டம்

4ம் பாகமானால் - தாய்க்கு கண்டம்

5ம் பாகமானால் - பிறந்தவருக்கு கண்டம்

6ம் பாகமானால் - கால் நடை நாசம், தன நாசம், குடும்பநாசம

7ம் பாகமானால் - குடும்பம் நாசமடையும் (மாத்ருபித்ரு குடும்பம்)

8ம் பாகமானால் - வம்சமே நாசமடையும் / மூத்த சகோதர நாசம்

9ம் பாகமானால் - மாமனாருக்கு கண்டம்

10ம் பாகமானால் - சர்வமும் நாசம்

ஆயில்யம்: -

1) ஆயில்யத்தில் ஒரு ஆண் அல்லது பெண் பிறந்தது முதல் பாதமானால் யாருக்கும் தோஷம் இல்லை. 2 ஆனால் - தன நாசம், 3 ஆனால் ஆண் ஆனால் தாய் தகப்பன் இருவருக்குமே கண்டம், பெண் ஆனால் தாய்க்கு மட்டும் கண்டம், 4 ஆனால் - தாய், தகப்பன், பிறந்தவர் எல்லோருக்கும் கண்டம்

2) ஆயில்யம் எந்த பாதமானாலும் மாமியாருக்கு கண்டம் என்பர் சிலர் இது முகூர்த்த நூல்களில் இல்லை

இனி மற்ற நட்சத்திர தோஷங்களைக் காண்போம்.

அசுவதி: அசுவதியில் ஆண் அல்லது பெண் பிறந்த பாதம்

1க்கு - தகப்பன், புத்திரன் கண்டம்

2க்கு - தாய்க்கு கண்டம்

3க்கு - தன நாசம்

4க்கு சௌக்கியம் உண்டு

பரணி ; பரணியில் 1 முதல் 3ம் பாதம் வரை பிறந்தது ஆண் ஆனால் தகப்பனுக்கும், பெண் ஆனால் தாய்க்கும் கண்டம். 4ம் பாதத்திற்கு தோஷம் இல்லை.

ரோகிணி : ஆண், பெண், ரோகிணியின் எந்த பாதத்தில் பிறந்தாலும் மாமனுக்கு கண்டம்

பூசம் : 1) பூச நட்சத்திரத்தில் கடக லக்னத்தில் எந்த பாதத்திலாகிலும் ஆண் அல்லது பெண் பிறந்தால் தகப்பனுக்கு கண்டம்.

2) பூசத்தில், கடக லக்னத்தில், ஆண் / பெண் பிறந்தது நட்சத்திர பாதம் 1-தகப்பனுக்கு கண்டம், 2-தாய்க்கு கண்டம், 3- முத்தவர்களுக்கு கண்டம், 4 - தாயின் சகோதரனுக்கு கண்டம்.

3) பூசத்தில் 2 & 3ம் பாதத்தில் பிறந்தவர் ஆண் ஆனால் தகப்பனுக்கு பெண்ணானால் தாய்க்கும் கண்டம். பூசம் 2ம் பாதத்தில் ஜனனமானால்தாயை பெற்ற பாட்டிக்கு அரிஷ்டம், அவருக்கு உண்டாகாமல் போனால் அத்தோஷம் அம்மானை சேரும்.

மகம்: மக நட்சத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறந்தது பாதம் 1க்கு தந்தை, புத்திரன் கண்டம் கண்டம், 2க்கு தாய் கண்டம், 3க்கு தனநாசம் 4க்கு சௌக்யம்.

உத்தரம்: உத்தரத்தில் ஆண் அல்லது பெண் பிறந்த பாரம் 1 ஆனால் தகப்பனுக்கு கண்டம், 2 ஆனால் ஆண் ஆனால் தந்தைக்கும், பெண் ஆனால் தாய்க்கும் கண்டம் 3 & 4 பாதத்திற்கு தோஷமில்லை.

ஹஸ்தம்: அஸ்த நக்ஷத்திரத்தில் ஆண்/பெண் பிறந்த பாதம் 1-2க்கு தோஷமில்லை, 3க்கு ஆண் ஆனால் தந்தைக்கும் பெண் ஆனால் தாய்க்கும் கண்டம் 4க்கு தோஷமில்லை.

சித்திரை; சித்திரையில் ஆண் / பெண் பிறந்தது எந்த பாதமானாலும் மைத்துனைக்கு கண்டம்

பூராடம்; 1) பூராடத்தில் எந்த பாதத்திலாகிலும் தனுசு ஜன்ம லக்கினமாகி ஆண் அல்லது பெண் பிறந்தால் தகப்பனுக்கு கண்டம்.

2) ஆண் அல்லது பெண், ஜன்ம லக்னம் தனுசாகி பூராடத்தில் பிறந்திருந்தால் பாதம் 1 ஆனால் தகப்பனுக்கு 2 ஆனால் தாய்க்கும், 3 ஆனால் மூத்தோர் கண்டம் ஆணானால் தந்தைக்கும் பெண் ஆனால் தாய்க்கும் கண்டம் 4ஆனால் தாயின் சகோதரனுக்கு கண்டம்.

உத்திரட்டாதி: இதில் ஆண் அல்லது பெண் பிறந்தது பாதம் 1க்கு ஆண் ஆனால் தந்தைக்கும் பெண் ஆனால் தாய்க்கும், கண்டம், பாதங்கள் 2,3,4க்கு தோஷமில்லை.

ரேவதி: ரேவதியில் ஆண் அல்லது பெண் பிறந்தது பாதம் 1,2,3க்கு தோஷமில்லை பாதம் 4க்கு தாய், தகப்பன், பிறந்தவர் மூவருக்குமே கண்டம் என்பர், சிலர் ஆண் ஆனால் தந்தைக்கும், பெண் ஆனால் தாய்க்கும் கண்டம் என்பர்.

## நட்சத்திர அதிதேவதைகள் குணங்கள்

| | | |
|---|---|---|
| அசுவதி | அஸ்வினிதேவதை | துரிதம் |
| பரணி | யமன் | உக்ரம் |
| கிருத்திகை | அக்னி | தீக்ஷண்யம் |
| ரோகிணி | பிரம்மா | ஸ்திரம் |
| மிருகசீர்ஷம் | சந்திரன் | மிருது |
| திருவாதிரை | ருத்ரன் | தீக்ஷணம் |
| புனர்பூசம் | அதிதி | சரம் |
| பூசம் | பிரஹஸ்பதி | துரிதம் |
| ஆயில்யம் | ஆதிசேஷன் | தீக்ஷண்யம் |
| மகம் | பிதுர்தேவதை | உக்ரம் |
| பூரம் | பகன் | உக்ரம் |
| உத்திரம் | அரீயமான் | ஸ்திரம் |
| ஹஸ்தம் | சூரியன் | துரிதம் |
| சித்திரை | இந்திரன் | மிருது |
| சுவாதி | வாயு | சரம் |
| விசாகம் | இந்திராக்னி | தீக்ஷண்யம் |
| அனுஷம் | மித்ரன் | மிருது |
| கேட்டை | தேவேந்திரன் | தீக்ஷண்யம் |
| மூலம் | அசுரணன் | தீக்ஷண்யம் |
| பூராடம் | வருணன் | உக்ரம் |
| உத்ராடம் | விசுவாதேவர் | ஸ்திரம் |
| அபிஜித் | பிரம்மா | |

| | | |
|---|---|---|
| திருவோணம் | விஷ்ணு | சரம் |
| அவிட்டம் | வசுக்கள் | சரம் |
| சதயம் | வருணன் | சரம் |
| பூரட்டாதி | அநுசரணன் | உக்ரம் |
| உத்திரட்டாதி | அஹிர்புத்தி | ஸ்திரம் |
| ரேவதி | பூஷா | மிருது |

ஆவணி மூலம்: ஆவணி மாதம் மூலம் நக்ஷத்திரம் வரும் நாளில் சூரிய உதயகாலத்தில் மேகங்களால் சூரியன் மறைந்திருந்தால் க்ஷேமம். வெயில் எரிக்குமாயின் க்ஷாமம்.

### கீழ்நோக்கு (அதோ முகம்) நட்சத்திரங்கள்

பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி. இந்த 9ம் அதோமுக நட்சத்திரங்களாகும். இவைகளில் குளம், கிணறு, வேலி எடுக்கவும், புதையல் எடுக்கவும், களஞ்சியத்தில் தானியம், சேர்க்கவும், கிரகபிரவேசம் செய்யவும், சொக்கட்டான் ஆடவும், கணிதம் ஆரம்பிக்கவும் உத்தமம்.

### மேல்நோக்கு (ஊர்துவமுகம்) நட்சத்திரங்கள்

ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்தரம், உத்ராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி - இந்த ஒன்பதும் ஊர்துவமுகம் எனப்படும், இந்த நட்சத்திரங்களில் உப்பரிகை, கொடிமரம், வாசற்படி, வீதி, யானை, குதிரை கொட்டம், பந்தல், தோட்டம், பட்டாபிஷேகம், வாகன வியாபாரம், அதிகாரம் வாங்கல் முதலியன செய்ய ஆரம்பிக்க உத்தமம்.

### சம நோக்கு (த்ரிய முகம்) நாள்

அசுவதி, மிருகசீரிடம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி அனுஷம், கேட்டை, ரேவதி, - இந்த ஒன்பதும் சமநோக்கு நாளாகும். இதில் யானை, குதிரை, ஒட்டகம், எருமை, கழுதை, மாடு, கிரயம் வாங்கவும், மேய்க்க விடவும் ஏற்றம், துறவு, கால்வாய் வெட்டவும், தூண், வாசற்கால் நாட்டவும் உத்தமம்,

*சுபாவ (மிஸ்ர நாள்) நட்சத்திரம்*

கிருத்திகை, விசாகம். இவையிரண்டும் சுபாவ நட்சத்திரங்களாம். இதில் அபிஷேகம் செய்தும், விதை விதைத்தல், ஊர்வலம் விடுதல், மரம், செடி கொடி வைத்தல், சாந்தி கர்மம் செய்யவும் உத்தமம்.

*சதாசிவன் நாள்*

ரோகிணி, பூசம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், உத்திராடம்' திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி-இந்த 9ம்.

*உக்கிர நாள்*

பரணி, மகம், பூரம், பூராடம், பூரட்டாதி இவை ஐந்தும் உக்கிர நாட்களாகும். இதில் விஷப்பிரயோகம், சத்திர (ஆயுதம்) பிரயோகம் முதலிய உக்கிர காரியங்கள் செய்ய உத்தமம்.

*துரித நாள்*

அசுவதி, பூசம், ஹஸ்தம் இம்மூன்றும் துரித நாட்களாகும். இதில் விவகாரம் தீர்த்தல், நகை பூணல், விளையாட்டு, மருந்து சாப்பிடுதல், மருந்து கொடுத்தல், ஞான வித்தை பிழை திருத்தல், பிரயாணம் செய்தல் முதலியன உத்தமம்.

*சர நாள்*

சுவாதி, திருவோணம், புனர்பூசம், அவிட்டம், சதயம் இவ்வைந்தும் சர நாட்களாகும். இவை யானை குதிரை ஊஞ்சல், ரதம் முதலியவை ஏறுதல், தோட்டத்திற்கு போதல் செய்ய உத்தமம்.

*ஸ்திர நாள்*

உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, ரேவதி இந்நான்கு ஸ்திர நட்சத்திரங்களாகும். இவை விதை விதைக்க, நகர் பிரவேசம், ராஜ்யாபிஷேகம் செய்ய, தோட்டம் வைக்க உத்தமம்.

*உபய (மிருது) நாள்*

மிருகசீரீடம், சித்திரை, அனுஷம், ரேவதி. இவை நான்கும் உபய நட்சத்திரங்களாகும். இவை சிநேகம், ஸ்திரி சங்கமம் செய்ய, நகை பூண புது வஸ்திரம் தரிக்க. சங்கீதம் கற்க மற்றும் பற்பல நற்காரியங்கள் செய்ய உத்தமம்.

*பயநாள்*

திருவாதிரை, ஆயில்யம், கேட்டை, மூலம். இந்நான்கும் பய நாட்களாகும் இவற்றில் பிசாசு ஓட்டவும், புதையல் எடுக்கவும் செய்ய உத்தமம்.

*ஜல நாள்*

மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், ஆயில்யம். ஹஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம். இந்த 12ம் ஜல நாட்களாகும். சிலர் ரோகிணியும் பூராடமும் ஜல நட்சத்திரங்களென்று கூறுவர்.

*சுட்க நாள்*

அசுவதி, பரணி, கிருத்திகை, ரோகிணி, திருவாதிரை. மகம். பூரம், உத்திரம், அனுஷம், மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த 15ம் சுட்க நட்சத்திரங்கள். சிலர் அவிட்டமும் சதயமும் சுட்க நாளென்று கூறுவர்.

*தலையற்ற நட்சத்திரங்கள்*

புனர்பூசம், விசாகம், பூரட்டாதி(3)

உடலற்ற நட்சத்திரம்

மிருகசீர்ஷம், சித்திரை, அவிட்டம்(3)

காலற்ற நட்சத்திரங்கள்

கிருத்திகை, உத்திரம், உத்திராடம்(3)

தலையற்ற, உடலற்ற, காலற்ற 9 நட்சத்திரங்களிலும் புணர்ச்சி, மனை முகூர்த்தம், யாத்திரை, கிரகபிரவேசம், காது குத்தல், விவாகம், வியாபாரம். கும்பாபிஷேகம் போன்ற சுப காரியங்களைச் செய்யக்கூடாது.

### அபிஜித்து நட்சத்திரம்

உத்திராடம் 4ம் பாதத்தில் கடைசி 15 நாழிகையும், திருவோணம் நட்சத்திர முதல் பாதத்தில் முதல் 4நா 4விகடியும் ஆக 19நா 4விகடிகை கொண்டது அபிஜித் நக்ஷத்திரம்.

### நக்ஷத்திர தோஷம்

ரோகிணியில் பிறந்தால்—தாய் மாமனுக்கு தோஷம்

மூலத்தில் பிறந்தால்—மூத்தவர்களுக்கு தோஷம்

கேட்டையில் பிறந்தால்—தாய்க்கு தோஷம்

விசாகத்தில் பிறந்தால்—தாய்க்கு தோஷம்

### நக்ஷத்திர வார தோஷம் (குழந்தைக்கு தோஷம்)

1) ஞாயிறன்று—பரணியில்

திங்களன்று—சித்திரையில்

செவ்வாயன்று—உத்திரத்தில்

புதனன்று—அவிட்டத்தில்

வியாழனன்று—கேட்டையில்

வெள்ளியன்று—பூராடத்தில்

சனியன்று—ரேவதியில் குழந்தை பிறந்தால் அக்குழந்தைக்கு தோஷம்.

## 2) ஜனன தோஷம்

1) சூரியனும், செவ்வாயும் இருக்கும் நட்சத்திரத்திலிருந்து எண்ணி வரும் 7-10-15வது நட்சத்திரம்.

2) சந்திரனும், புதனும் இருக்கும் நட்சத்திரத்திலிருந்து எண்ணி வரும் 8-18-24வது நட்சத்திரம்.

3) குரு, சுக்கிரன் இருக்கும் நட்சத்திரத்திலிருந்து எண்ணி வரும் 7-9வது நட்சத்திரம்.

4) சனி இருக்கும் நட்சத்திரத்திலிருந்து எண்ணி வரும் 5-11-26வது நட்சத்திரம்

5) ராகு, கேது இருக்கும் நட்சத்திரத்திலிருந்து எண்ணி வரும் 7வது நட்சத்திரம்.

— இவற்றில் குழந்தை ஜனித்தால் அக்குழந்தை பிழைக்காது,

### தமையனுக்கு தோஷம்

ஆயில்யம் 2ம் பாதம் ஜனித்த குழந்தையின் தமயனுக்கு தோஷம்.
சிறிய தகப்பனுக்கு தோஷம்.
மூலம் முதல் பாதம் ஜனித்த குழந்தையின் சிறிய தகப்பனாருக்கு தோஷம்.

### பாலாரிஷ்ட நக்ஷத்திரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அசுவதி | பரணி | கிருத்திகை | ரோகிணி | மிருகசீர்ஷம் |
| பூசம் | மகம் | உத்தரம் | ஹஸ்தம் | சித்திரை |
| விசாகம் | அனுஷம் | கேட்டை | மூலம் | உத்திராடம் |
| அவிட்டம் | சதயம் | உத்திரட்டாதி | | |

— இந்த 18 நட்சத்திரங்களிலும் ஒரு குழந்தை ஜனித்தால் அதற்கு பாலாரிஷ்டம் உண்டு என சொல்லப்படும்,

### நடசத்திர சந்தி

ஒரு நட்சத்திரத்தின் கடைசி 1/2 நாழிகையிலிருந்து அதற்கு அடுத்து வரும் நட்சத்திரத்தின் முதல் 1/2 நாழிகை வரையில உள்ள காலம் "நட்சத்திர சந்தி" காலம் எனக் கூறப்படும்.

### மாத சூன்யம்

சித்திரை - அஷ்டமி திதி, ஏகாதசி, ரோகிணி, கும்பம்

வைகாசி - துவாதசி, சித்திரை, சுவாதி, உத்திராடம், மீனம்

ஆனி - திரயோதசி, புனர்பூசம், ரிஷபம்

ஆடி - சஷ்டி, அவிட்டம், மிதுனம்

ஆவணி - அமாவாசை, பூர்ணை, பூராடம், மேஷம்

புரட்டாசி - சப்தமி, சதயம், பூரட்டாதி, ரேவதி, கன்னி, தனுசு

ஐப்பசி - நவமி, பூரட்டாதி, விருச்சிகம்

கார்த்திகை - பஞ்சமி, கிருத்திகை, பூசம், மசம், துலாம்

மார்கழி - துவிதியை, நவமி, அனுஷம், உத்திரட்டாதி, விசாகம், தனுசு

தை - பிரதமை, ஹஸ்தம், திருவாதிரை, ஆயில்யம், கடகம்

மாசி - சதுர்த்தி, தசமி, மூலம், துரவோணம், மகரம்

இப்படி வரின் "மாத சூன்யம்" எனப்படும், சுப காரியங்கள் செய்யக் கூடாது.

### வார சூன்யம்

ஞாயிற்றுக்கிழமைக்கு வார சூன்யம்-பரணி

திங்கள்கிழமைக்கு வார சூன்யம்-சித்திரை

செவ்வாய்கிழமை வார சூன்யம்-உத்திராடம்

புதன்கிழமைக்கு வார சூன்யம்-அவிட்டம்

வியாழன்கிழமைக்கு வார சூன்யம்-கேட்டை

வெள்ளிகிழமைக்கு வார சூன்யன்-பூராடம்

சனிகிழமைக்கு வார சூன்யம்-ரேவதி

*தனிஷ்டா பஞ்சமி*

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்னும் பிதுர்பாகமாகிய தனிஷ்டா பஞ்சமிக்கு - 6 மாதம்

விகற்பாகமாகிய ரோகிணிக்கு - 4 மாதம்

கிருத்திகை, உத்திரத்திற்கு - 3 மாதம்

மிருகசீர்ஷம், புனர்பூசம், சித்திரை, விசாகம், உத்திராடத்திற்கு-2மாதம்

மேற்கண்ட நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் அந்த வீட்டை எதிரில் கொடுத்துள்ள கால அளவிற்கு மூடி வைக்க வேண்டும். இதற்கு பரிகாரம்-வெண்கல கிண்ணத்தில் நல்லெண்ணையை விட்டு தானம் செய்து, அதற்கு குறித்த காலம் வரையில் மாலையில் கற்பூர தீபா ஆரத்தி செய்ய வேண்டும்.

*ஜனனத்தால் தோஷமுள்ள நட்சத்திரம் - மூலம்*

1) கேட்டை நட்சத்திரத்தின் கடைசி 2 நாழிகை மூல நட்சத்திரத்தின் முதல் 2 நாழிகை உள்ள காலம் "அபுக்த மூலம்" எனப்படும். இந்த காலத்தில் ஜனித்த சிசுவை அன்னியர் காப்பாற்ற வேண்டும்.

2) மூலா நட்சத்திரம் 1ம்பாதம் ஜனனம் — பிதாவுக்கு தோஷம்

மூலா நட்சத்திரம் 2ம்பாதம் ஜனனம் — மாதாவுக்கு தோஷம்

மூலா நட்சத்திரம் 3ம்பாதம் ஜனனம் — தன நாசம்

மூலா நட்சத்திரம் 4ம்பாதம் ஜனனம் — சுபம் தோஷமில்லை

*மூலா நட்சத்திர விருக்ஷவிபாக பலன்*

மூலம் 1 முதல் 4 நாழிகையில் பிறந்தால் - சர்வநாசம்

மூலம் 4 முதல் 7 நாழிகையில் பிறந்தால் - ஸ்தம்பம் - தனநாசம்

மூலம் 11 முதல் 10 நாழிகையில் பிறந்தால் - தோல்பட்டை - சகோதர நாசம்

மூலம் 21 முதல் 8 நாழிகையில் பிறந்தால் - கொம்பு - மாத்ரு நாசம்

மூலம் 29 முதல் 9 நாழிகையில் பிறந்தால்-இலை - சேவகாதி - ஜனம் - உள்ளவன்

மூலம் 38 முதல் 5 நாழிகையில் பிறந்தால்-புஷ்பம்-ராஜ சன்மானம்

மூலம் 43 முதல் 6 நாழிகையில் பிறந்தால் - பலம் - பூமிலாபம்

மூலம் 49 முதல் 11 நாழிகையில் பிறந்தால்-தளை-அற்பாயுள்

***சொர்க மூலம்***

வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்களில் வருகிற மூல நட்சத்திரம் "ஸ்வர்க மூலம்" என்று பெயர். இதில் ராஜ்ய சம்பத்து உண்டு.

***பாதாள மூலம்***

ஆனி, புரட்டாசி, ஐப்பசி, பங்குனியில், வரும், மூலம் "பாதாள மூலம்" எனப்படும். குடும்ப நாசமும், தனநாசமும் ஏற்படும்.

***மத்திய மூலம்***

சித்திரை, ஆடி, மார்கழி, தை மாதங்களில் வரும் மூலம் "மத்திய மூலம்" எனப்படும் - சர்வநாசம்.

சுக்கில பக்ஷத்தில் மூலா நட்சத்திரம் சுபம் என்றும், கிருஷ்ண பக்ஷத்தில் வரும் மூலா நட்சத்திரம் தோஷம் என்றும் சிலர் கூறுவர். இது சரியல்ல

*விஷகன்னிகை*

ஆயில்யம், கிருத்திகை, சதயம் என்ற நக்ஷத்திரங்களில் ஒன்றும், செவ்வாய், சனி ஞாயிறு என்ற கிழமைகளில் ஒன்று துவிதிகை திதியும் சேருமானால் அதில் ஜனித்த பெண் விஷ கன்னிகை எனப்படுவாள்.

1) சனிவாரம்-ஆயில்யம்-துதிகை சேர்ந்த நாளிலோ

2) செவ்வாய்கிழமை - சதயம் - சப்தமி திதி சேர்ந்த நாளிலோ

3) ஞாயிற்றுக்கிழமை-விசாகம்-துவாதசி திதி சேர்ந்த நாளிலோ எந்த பெண் ஜனிக்கிறாளோ அவள் விஷ கன்னிகை ஆகிறாள். இவை மூன்றும் விஷ யோகங்கள் எனப்படும். விஷ யோகத்தில் பிறந்தவள் விஷ கன்னிகை ஆவாள்.

*விஷ கன்னிகையின் பலன்கள்*

விஷ கன்னிகையாக பிறந்தவளுக்கு புத்திரன் (சந்தானம்?) உண்டாகாது. இது ஒருவித தோஷம். ஆனால் அவளுக்கு உள்ள "வைதல்ய தோஷம்" விலகிவிடும்.

நட்சத்திர விஷ கன்னிகை தோஷத்தைத் தவிர, சில கிரக நிலைகளாலும் இத்தோஷம் ஏற்படுகிறது. எல்லா விஷ கன்னிகை தோஷத்திற்கும் பலன் ஒன்றுதான்.

ஆதலால் விஷகன்னிகை தோஷத்தை நட்சத்திரங்கள், ஜனன கால கிரக நிலை இரண்டைக் கொண்டும் அறிய வேண்டும்.

பரணி நக்ஷத்திரத்தில் — ஞாயிற்றுக் கிழமையிலும்

சித்திரை நஷத்திரத்தில் — திங்கட் கிழமையிலும்

கேட்டை நக்ஷத்திரத்தில் — வியாழக் கிழமையிலும்

மூலம் நக்ஷத்திரத்தில் — செவ்வாய்க் கிழமையிலும்

பூராடம் நக்ஷத்திரத்தில் — வெள்ளிக் கிழமையிலும்

அவிட்டம் நக்ஷத்திரத்தில் — புதன் கிழமையிலும்

ரேவதி நக்ஷத்திரத்தில் — சனிக்கிழமையிலும்

-பெண் குழந்தை பிறந்தால் அது விஷயோகம் எனப்படும். ஆண் பிறந்தால் குல நாசமும், சகல நாசமும் உண்டாகும். ஜனன காலத்தில் மேற்படி நட்சத்திரங்களை குரு பார்த்திருந்தாலும் நல்ல ஸ்தானதிபர்கள் பார்த்திருந்தாலும் முற்கூறிய தோஷம் கிடையாது.

மூல நட்சத்திரத்தில் முதல் பாதம்-பிறந்த பெண் - தன் மாமனாரையும் கொல்வாள்.

ஆயில்யத்தில் முதல் பாதம் பிறந்த பெண் - தன் மாமியாரைக் கொல்வாள்.

கேட்டையில் முதல் பாதம் பிறந்த பெண்-தன் கணவனின் தமையனை கொல்வாள்.

விசாகத்தில் 4வது பாதம் பிறந்த பெண் - தன் கணவனின் தம்பியை கொல்வாள்.

*விதிவிலக்கு*

ஆயில்யம், விசாகம், கேட்டை, மூலம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்களுக்கே மேற்படி தோஷம் உண்டு. ஆண்களுக்கு மேற்படி தோஷம் கிடையாது. விவாஹ காலத்தில் அப்பெண்ணிற்கு அந்தந்த நட்சத்திரத்திற்குரிய உறவினர்கள் உயிருடன் இல்லையானால் தோஷம் கிடையாது. விவாகம் செய்யலாம்,

மேலும் ஆயில்யம் 4ம் பாதம், விசாகம் 3ம் பாதம், மூலம் 4ம் பாதத்தில் பிறந்த பெண்ணிற்கு மேற்படி தோஷம் கிடையாது. அந்தந்த உறவினர்களுக்கு சுபத்தைத் தருவாள். ஆகையினால் இப்பெண்களுக்கு அவ் உறவினர்கள் இருந்தாலும் விவாகம் செய்யலாம் என்பது கருத்து.

## ஆயில்ய தோஷம்

ஆயில்யத்தில் முதல் 5 நாழிகை வரை சிரசு-இதில் ஜனிந்தால் ராஜ்ய சம்பத்து லாபம்.

5க்கு மேல் 7 நாழிகை வரை-முகம் - இதில் பிறந்தால் பித்ருநாசம்.

அதற்கு மேல் 2 நாழிகை வரை- நேத்ரம் - இதில் பிறந்தால் மாத்ரு நாசம்.

அதற்கு மேல் 3 நாழிகை வரை - புஜம் – இதில் பிறந்தால் பித்ரு பக்தி

அதற்கு மேல் 8 நாழிகை வரை-கைகள்-இதில் பிறந்தால் விசேஷ சக்தி

அதற்கு மேல் 11 நாழிகை வரை – மார்பு - இதில் பிறந்தால் தனநாசம்

அதற்கு மேல் 6 நாழிகை வரை • தொடை-இதில் பிறந்தால் சன்யாசம்

அதற்கு மேல் 9 நாழிகை வரை-குதம்-இதில் பிறந்தால் சம் போக ப்ரீதி

அதற்கு மேல் 5 நாழிகை வரை - பாதம் - இதில் பிறந்தால் தனம் சம்பத்து.

ஆயில்யம் 1ம் பாதம் - சுபம்

ஆயில்யம் 2ம் பாதம் - தனநாசம்

ஆயில்யம் 3ம் பாதம் - மாத்ரு நாசம்

ஆயில்யம் 4ம் பாதம் – பித்ரு நாசம்

## திருமணப் பொருத்தம்

### நட்சத்திர பொருத்தம் (வத-வைநாசிகம்)

பெண் நட்சத்திரத்திற்கு ஏழாவதாக வரும் புருஷ நட்சத்திரம் வதம் என்றும், புருஷ நட்சத்திரத்திற்கு 22வதாக வரும் பெண் நட்சத்திரம் வைநாசிகம் என்றும் பெயர் பெறும். அப்படி ஏற்படும் நட்சத்திங்களுள் விவாகம் செய்யக் கூடாது. ஆனால் சில நக்ஷத்திரங்களுக்கு விதி விலக்கு உண்டு.

*பெண் நக்ஷத்திரம் ஆண் நக்ஷத்திரம் பலன்*

1) பரணி-பூசம்-சௌக்யம் உண்டாகும் உத்தமம்
2) ரோகிணி-மகம்-புத்திரலாபம் உண்டாகும் உத்தமம்
3) திருவாதிரை-உத்தமம்-சுகத்தைத் தரும் உத்தமம்
4) புனர்பூசம்-ஹஸ்தம்-வம்ச விருத்தி உத்தமம்
5) பூசம்-சித்திரை-சுகத்தைத் தரும் உத்தமம்
6) பூரம்-அனுஷம்-சுகத்தைத் தரும் உத்தமம்
7) மூலம் பூரட்டாதி-சம்பத்து லாபம் உத்தமம்
8) பூராடம்-உத்திரட்டாதி-விசுவாச விருத்தி உத்தமம்
9) பூரட்டாதி-ரோகிணி-புத்திரலாபம் உத்தமம்
10) அசுவதி-புனர்பூசம்-ஸ்திரீ பிரஜை உண்டாகும்-மத்திமம்
11) சுவாதி-உத்திராடம்-ஸ்திரீ பிரஜை உண்டாகும்-மத்திமம்
12) விசாகம்-திருவோணம்-ஸ்திரீ பிரஜை உண்டாகும் மத்திமம்
13) உத்திராடம்-ரேவதி-போகம் உண்டாகும்-மத்திமம்
14) கிருத்திகை-ஆயில்யம்-கெடுதல் கூடாது
15) மிருகசீர்ஷம்-பூரம் தரித்திரம் ஏற்படும் கூடாது
16) ஆயில்யம்-சுவாதி கெடுதல் ஏற்படும் கூடாது
17) மகம்-விசாகம் கெட்ட பிள்ளை பிறக்கும் கூடாது
18) உத்திரம்-கேட்டை-வைரம் உண்டாகும் கூடாது
19) ஹஸ்தம்-மூலம்-தரித்திரம் ஏற்படும் கூடாது
20) சித்திரை-பூராடம் கெடுதல் ஏற்படும் கூடாது
21) அனுஷம்-அவிட்டம் கெடுதல் ஏற்படும் கூடாது
22) கேட்டை-சதயம் கெடுதல் ஏற்படும் கூடாது
23) திருவோணம்-அசுவதி-ஸ்திரீ-புருஷர் விலகல் கூடாது
24. அவிட்டம்-பரணி கெடுதல் ஏற்படும் கூடாது
25. சதயம்-கிருத்திகை கெடுதல் ஏற்படும் கூடாது
26. உத்திரட்டா-மிருகசீர்ஷம் வைதவ்யம் ஏற்படும் கூடாது
27. ரேவதி-திருவாதிரை-வைரம் உண்டாகும் கூடாது.

இவ்வாறு சுப அசுப பலன்களைக் கண்டறிந்து சேர்க்க வேண்டும். சிலர் முதல் பரியாயத்தில் ஏழாவது நக்ஷத்திரம் அதிக தோக்ஷம் என்றும், 2வது பரியாயத்தில் மத்திம தோஷம் என்றும், 3வது பரியாயத்தில் அல்ப தோஷம் என்றும் கூறுவர்.

சந்திரன் பலிஷ்டனாய், சத் கருமம் பெற்று, சுபர் திருஷ்டி பெற்றிருந்தால் பிராயசித்தத்தால் விபத்து தாராதி தோஷங்கள் அதி அல்பமாக இருக்கும் [கீழே பார்க்க]

*துஷ்ட தாரா பல தோஷத்திற்கு பரிகாரம்*

விபத்து தாரை - முதல் பரியாயத்தில் கெட்டது. விலக்க வேண்டும். 2ம் பரியாயத்தில் முதல் பாதம் கெடுதல் - மற்ற பாதங்களுக்கு வெல்லம் தானம் செய்தால் தோஷ நிவர்த்தி.

பிரத்யக்குதாரை நெய் தானம் செய்தால் தோஷ நிவர்த்தி 2ம் பரியாயத்தில் 4ம் பாதம் கெடுதல் 3ம் பரியாயத்தில் பரிகாரந்தால் தோஷ நிவர்த்தி.

*வதைத்தாரை - மூன்று பரியாத்திலும் கெடுதல்*

1, 3, 5, 7வது தாரைகளை முதல் பரியாயத்தில் விலக்க வேண்டும். ஏழாவது தாரை 3 பரியாயத்திலும் விலக்க வேண்டும். இவைகள் கெடுதலைத் தரும்.

*ஜன்ம நக்ஷத்திரம் - ஆகாத சுபங்கள்*

ஜன்ம நக்ஷத்திரத்தில் - நூதன வஸதிராதி - ஆபரணம் பூணுல், அலங்காராதி செய்தல், நூதன அன்ன போஜனம், அன்ன பிராசனம், கீத கானம் நாட்டியம், வித்யாரம்பம், வாகன ஏற்றம், கிரக ஆரம்பம், கிரக பிரவேசம், மந்திர ஆரம்பம், கடன் தீர்த்தல், பிரயாணம், சீமந்த விவாஹாதி சுபகாரியங்கள், வைத்திய ஆரம்பம், கர்ப்பிணி பெண் காரியாதிகள், அப்பியஞ் ஜன ஸ்தானம், நிஷேயம் முதலிய காரியங்கள் தியாஜ்யம் கெட்டது.

*தினப் பொருத்தம்*

பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரம் முதல் ஆணின் ஜன்ம நக்ஷத்திரம் வரை எண்ணி வந்தது 2,4,6,8,9,11,13,15,17,18,20,22,24,26,27 இவைகளில் எதுவாக வந்தாலும் உத்தமம்; சிலர் 17யும் சிலர் 27யும் நீக்குவார்கள்- 1,5,10,14,19,13 இவைகளில் எது வந்தாலும் மத்திமம். 37,12,16,21,25 இவைகளில் எது வந்தாலும் தீது.

*ஏகதினப்பொருத்தம்*

ரோகிணி, திருவாதிரை, பூசம், மகம், ஹஸ்தம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி இந்த 8ல் ஏதாவது பெண் - ஆண்களுக்கு ஒரே நட்சத்திரமானால் உத்தமம்.

சிலர் விசாகம் பொருந்தும் என்றும் சிலர் ஹஸ்தம் பொருந்தாது என்றும் கூறுவர்,

அசுவதி, கிருத்திகை, மிருகசீர்ஷம், புனர்பூசம், உத்திரம், சித்திரை, அனுஷம், உத்திராடம் இந்த எட்டு நட்சத்திரங்களில் ஏதாவது ஏக நட்சத்திரமாக வந்தால் மத்திமம்.

பரணி, ஆயில்யம், பூரம், சுவாதி, விசாகம், கேட்டை, மூலம், பூராடம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, இந்த 11ம் ஏக நட்சத்திரமாக வந்தால் தீது. தம்பதிகளுக்கு நன்மை இல்லை.

ராசி அல்லது பாதம் வேறுபட்டால் குற்ற மில்லை. விசாகம் உத்தமம் என்பது சில நூலின் கருத்து.

ஏக நட்சத்திரம் 2 ராசியில் வந்தால் புருஷராசி முந்தியது சுபம்.

*ஏகராசி விஷயம்*

ஸ்திரீ - புருஷர்களுக்கு ஒரே ஜன்ம ராசி ஆனால், அந்த ராசியில் முதலில் புருஷ நட்சத்திரமும் அதற்குப்பின் ஸ்திரியின் நட்சத்திரமும் வந்தால் உத்தமம். ஸ்திரி புருஷர்களுக்கு ஒரே ராசியில் ஒரே பாரதமானால் மரணம்.

ஏகராசில் 2 நட்சத்திரமானால் அதில் அசுவதி, கிருத்திகை, மிருகசீஷம், மகம், அஸ்தம், சுவாதி, பூராடம், சதயம், இந்த எட்டும் பெண் நட்சத்திரம் முந்தியது, சுபம்

*வத வைநாசிகம்*

பாணி, திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், மூலம், பூராடம், உத்திராடம், இந்த எட்டில் ஆணின் அல்லது பெண்ணின் நட்சத்திரம் இருந்தால் ஏழாவது வததாரை தோஷமில்லை.

பெண்ணின் நட்சத்திரம் முதல் எண்ணும் போது 22 வதாக வரும் ஆணின் நட்சத்திரம் நைநாசிகம் என்ற தோஷத்தை அடைகிறது. இது கெடுதல்.

ரோகிணி - பூரட்டாதி, புனர்பூசம் - அசுவதி, பூரம் – பரணி, மகம் - ரேவதி, உத்திராடம் - திருவாதிரை, ஹஸ்தம் - புனர்பூசம், சித்திரை - பூசம், அனுஷம் - பூரம். உத்திராடம் - சுவாதி. பூரட்டாதி - மூலம், உத்திரட்டாதி- பூராடம், ரேவதி - உத்திராடம். இந்த 12க்கும் வைநாசிக தோஷம் கிடையாது.

*கணப் பொருத்தம்*

இதன் பலன் கிரீடா நுகூலம், சோபன கரம், சரீர சுகம்

பெண் மனிதகணம் - ஆண் தேவகணம் – **உத்தமம்**

பெண் தேவகணம் – ஆண் மனுஷ்ய கணம் நல்லது

பெண் ராக்ஷஸம் - ஆண் மனிதகணம் – கூடாது.

பெண் ராக்ஷஸம் - ஆண் தேவகணம் கூடாது

பெண் தேவகணம் - ஆண் ராக்ஷஸம் கூடாது

பெண் நக்ஷத்திரத்திலிருந்து புருஷன் நக்ஷத்திரம் 14க்கு மேற்படின் பெண் ராக்ஷஸம்தீதில்லை என்பர் சிலர்.

24க்கு மேல் புருஷ நட்சத்திரம் வரின் இருவருக்கும் ராசியாதிபதிகள் நட்பு, ஆட்சி, பெற்றிருப்பின் பெண் ராக்ஷஸ கணத்தால் தோஷமில்லை என்று சிலர் கருத்து,

*ராசி யோனி*

மேஷம், ரிஷபம் இரண்டும் — மிருக யோனி (பசு)

மிதுனம், கன்னி, துலாம், தனுசு, கும்பம் ஐந்தும் — மனித யோனி

கடகம், விருச்சிகம் இரண்டும் — கீடயோனி (புழு)

மகரம், மீனம் இரண்டு — பக்ஷி யோனி

சிம்மம்-

அந்தந்த ஜாதி யோனி உத்தமம். பசு — மனித யோனி மத்திடமம். கிரீ பக்ஷ யோனி அதமம்.

கிரீட — பக்ஷ யோனிக்கும், மிருக யோனிக்கும், மனித யோனிக்கும் சேர்க்கலாகாது.

**வேதைப் பொருத்தம்**

அசுவதியிலிருந்து 18 வது நட்சத்திரமான கேட்டை

பரணி முதல் 16 வது நட்சத்திரமான அனுஷம்

கிருத்திகை 14வது நட்சத்திரமான விசாகம்

ரோகிணி 12வது நட்சத்திரமான சுவாதி

# வேதைப் பொறுத்தம்



திரு
ரோ
மிரு
திருவா
புன
பூச
ஆயி
பர
அசு
மகம்
பூரம்
ரேவ
உத்ரம்
உட்தி
ஹஸ்
பூரட்
சித்
சத்
சுவா
அனு
அனு
திருஓ
அவி
விசா
உத்ரம்
பூரா
மூல
கேட்

# வேதைப் பொறுத்தம்




வேண்டும்.
ர வேதை
த்தில் ஒரு
தையாகும்.

ு வாழுதல்

*பரஸ்பர வேதைகள்*

இதே மாதிரி ஒவ்வொன்றையும் ஊகித்து அறிய வேண்டும். முக்கோணத்தில் உள்ள மிருக சித்தி, அவிட் மூன்றும் பரஸ்பர வேதை பொருந்தாது. நட்சத்திரம் மாறி இருந்தால் நல்லது. கூஷ கட்டத்தில் ஒரு நட்சத்திரத்திற்கு எதிர் கோடு முனையில் உள்ள நட்சத்திரம் வேதையாகும்.

அசுவதிக்கு - கேட்டை

பரணிக்கு - அனுஷம்

பலன் - துக்க நாசம் நடுவில் பிரியாமல் சேர்ந்து வாழுதல்

கிருத்திக்கை - விசாகம்

ரோகிணி - சுவாதி

திருவாதிரை - திருவோணம்

வேதை இருப்பின் ஸ்திரீ துக்கத்தையும்
வைதவ்யத்தையும் அடைவாள்.

புனர்பூசம் - உத்திராடம்

பூசத்திற்கு - பூராடம்

ஆயில்யம் - மூலம்

மகத்திற்கு - ரேவதி

பூரத்திற்கு - உத்திரட்டாதி

உத்ரம் - பூரட்டாதி

ஹஸ்தம் - சதயம்

**வேதைப் பொருத்தம் - இன்னொரு முறை**

பச்சைய சேகரம் என்ற நூலில் இருந்து:-

பெண்ணின் நட்சத்திரம் முதல்

அசுவதிக்கு - விசாகம்

பரணிக்கு - சுவாதி

கிருத்திகை - உத்திராடம்

ரோகிணி - பூராடம்

மிருகசீர் - மூலம்

திருவாதிரை - கேட்டை

புனர் பூசம் - அனுஷம்

பூசம் - திருவோணம்

ஆயில்யம் — அபிஜித்

மகத்திற்கு — ரேவதி
பூரத்திற்கு — உத்திரட்டாதி
உத்திரம் — பூரட்டாதி
ஹஸ்தம் — சதயம்
சித்திரை — அவிட்டம் வேதையாகும்.

## நாடிப பொருத்தம்

| இடது நாடி இடகலை | மத்திமநாடி சுழிமுனை | வலதுநாடி பிங்கலை |
|---|---|---|
| பார்சுவநாடி | மத்திம பார்சுவ் | வாம பார்சுவ நாடி |
| அசுவதி | பரணி | கிருத்திகை |
| திருவாதிரை | மிருகசீர்ஷம் | ரோகிணி |
| புனர்பூசம் | பூசம் | ஆயில்யம் |
| உத்திரம் | பூரம் | மகம் |
| ஹஸ்தம் | சித்திரை | சுவாதி |
| கேட்டை | அனுஷம் | விசாகம் |
| மூலம் | பூராடம் | உத்திராடம் |
| சதயம் | அவிட்டம் | திருவோணம் |
| பூரட்டாதி | உத்திரட்டாதி | ரேவதி |

ஆண் பெண் ஒரே நாடியாக இருந்தால் விவாகம் செய்யக் கூடாது; இதில் மத்திம நாடியில் ஸ்திரீ புருஷ நக்ஷத்திரங்கள் இருந்தால் புருஷனுக்கு ஆகாது. இரண்டும் பார்சுவ நாடியில் இருந்தால் ஸ்திரீக்கு ஆகாது. மத்திம நாடியாகில் பிராமணர்களுக்கும். வலது புற நாடி க்ஷத்திரியர்களுக்கும்; இடபுற நாடி வைசியர்களுக்கும் இருக்கக் கூடாது; ஆண் பெண் இருவருக்கும் ஒரே நாடியாகில் முதல் பரியாயமானால் ஒரு வருஷத்திலும், 2ம் பரியாயமாகில் 2 வருடத்திலும், 3ம் பரியாயமானால் 3 வருடத்திலும் கெடுதல் சொல்லப்படுகிறது. இதில் ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, பூசம், விசாகம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 8 நக்ஷத்திரங்களுக்கும் ஏக நாடி தோஷமில்லை;

நாடிப் பொருத்தம் என்பது கன்னிகையின் தாலிக் கயிறாகவும்; ராசிப் பொருத்தம் ஆண் பெண்ணின் நேசம் என்றும் சொல்லப்படுவதால் இவ்விரண்டு பொருத்தங்களும் அவசியம் பார்க்க வேண்டும்.

## விருக்ஷப் பொருத்தம்

புத்திர சந்தான் விருத்தி உண்டாகும். சதி-பதிகள் இருவருக்கும் பால்

உள்ள விருக்ஷமாயின் நன்று. இருவரும் வைர (பகை) விருக்ஷமாயின் தீது. பெண் பால் விருக்ஷமும் புருஷன் வைர விருக்ஷமாயின் பிள்ளை உண்டாகும். ஆனால் பெண் வைரமும் ஆண் பால் ஆகில் பிள்ளை உண்டாகாது.

எந்த நக்ஷத்திரம் பால் உள்ளவை, வைரம் உள்ளவை என்பதை பக்கம் 2ல் காண்க.

*பஞ்சபக்ஷி பொருத்தம்*

எந்த நட்சத்திரத்திற்கு எந்த பக்ஷி என்பதும் எந்த பக்ஷிக்கு எவை பகை என்பதையும் பக்கம் 4ல் காண்க.

ஆண் பெண்ணினுடைய நக்ஷத்திரப் பட்சிகள் ஒன்றுக்கொன்று பகையாக இருந்தால் தள்ளுபடி செய்ய வேண்டும். பகையின்றி இருந்தால் நன்று

*தனிபக்ஷி பொருத்தம்*

பெண்-ஆண் நட்சத்திரங்களின் பட்சிகள் உறவாக இருப்பின் நல்லது. பகையாகில் தீது. பக்ஷிகள் பொருத்த பலன் சதிபதிகன் பகையில்லாமல் உறவாக இருந்து வாழ்க்கை நடத்துவது.

*ஜாதிப் பொருத்தம்*

தம்பதிகளின் நட்சத்திரங்கள் ஒரே ஜாதியாகில் உத்தமம். பெண் நட்சத்திரம் புருஷ நட்சத்திரத்தைக் காட்டிலும் உயர்ந்த ஜாதியானால் அதமம் கூடாது. ஈன ஜாதியானால் மத்திமம்.

பச்சையசேகரர்படி ஜாதிப் பொருத்தம் வருமாறு:

அசு, பர, அனு, கேட் — க்ஷத்திரிய குலம்

கிரு, ரோகி, பூரட்டாதி — வைசிய குலம்

மிரு, திருவா, அவி, உட்தி — பிரம்மண குலம்

புன, பூச, ரேவதி — வேளாளர்

ஆயி, மக, உத், திருவோண — நீசன், பாசண்டி

பூரம், உத்ரம் — சண்டாளன்

ஹஸ்தம், சித், சதயம் — வேசி குலம்

சுவா, விசா, மூல, பூரா — விப்ரன்

இவைகளில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, வேளாளன் நான்கும் உயர்ந்த ஜாதி, சண்டாள, வேசி, விப்பிர, பாசண்டியும் தாழ்ந்த ஜாதி, இதன் பலன் இனஜன பத்துக்களுடன் சுமுகமாக இருத்தல்.

*லிங்கப் பொருத்தம்*

அசுவதி, கிருத்திகை, ரோகிணி, புனர்பூசம், பூசம், ஹஸ்தம், அனுஷம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி இந்த 10ம் ஆண் (புருஷலிங்கம்)

பரணி, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், சிந்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், ரேவதி இந்த 14ம் பெண் (ஸ்திரீலிங்கம்)

சதயம், மூலம், மிருகசீர்ஷம் இந்த மூன்றும் நபும் சகலிங்கம் (அலி)

ஆண் - பெண் புருஷலிங்கம். ஸ்திரீலிங்கமாயிருந்தால் நல்லது. ஒரு லிங்கமாயிருந்தால் போக பாக்யம் குறைவு. இதன் பலன் தம்பதிகள ஒரே லிங்கமாயிருந்தால் பரஸ்பரம் ப்ரீதி அதிகரிக்கும்.

*நக்ஷத்திர கிரக அம்சம் 7 வகை*

ரோகிணி, உத்திரம், உத்ராடம், உத்திரட்டாதி, - சூரியன் அம்சம்,

புனர்பூசம், சுவாதி, திருவோணம், அவிட்டம், சதயம்- - சந்திரன் அம்சம்

மகம், பூரம், பரணி - செவ்வாய் அம்சம்

கிருத்திகை, விசாகம், பூராடம், பூரட்டாதி - புதன் அம்சம்

அசுவதி, பூசம், ஹஸ்தம் - குரு அம்சம்

மிருகசீர்ஷம், சித்திரை, அனுஷம், ரேவதி - சுக்கிரன் அம்சம்

திருவாதிரை. ஆயில்யம், கேட்டை, மூலம் - சனி அம்சம்

*வார சூன்யம் நட்சத்திரங்கள்*

ஞாயிறு - பரணி, மிருகசீர்ஷம், மகம், விசாகம், அனுஷம், கேட்டை

திங்கள் - கிருத்திகை, மகம், விசாகம், அனுஷம், பூராடம், பூரட்டாதி

செவ்வாய் - திருவாதிரை, கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம்

புதன் - அசுவதி, பரணி, கிருத்திகை, மூலம், திருவோணம், அவிட்டம்

வியாழன் - மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், பூராடம், ரேவதி

வெள்ளி - ரோகிணி, மிருகசீர்ஷம், பூசம். ஹஸ்தம், விசாகம், அனுஷம், அவிட்டம்

சனி - புனர்பூசம், பூசம், உத்தரம், ஹஸ்தம், ரேவதி

*மாடு பொருத்தம்*

அசுவதி - வெள்ளை மயிலை

பரணி - கருப்பு, சிவப்பு

கிருத்திகை - கருப்பு, பில்லை, செவிலி

ரோகிணி - கருமயிலை, செம்மரை

மிருகசீர்ஷம் – பில்லை, செவுலி

திருவோணம் – சிவப்பு, செம்மரை

புனர்பூசம் - பில்லை, வெள்ளை

பூசம் - மயிலை, வெள்ளை

ஆயில்யம் - மயிலை, வெள்ளை

மகம் - செவலை, வெள்ளை

பூரம் - செவலை, வெள்ளை

**உத்திரம்** - செவலை, பல நிறம் கலந்தது

ஹஸ்தம் - கருப்பு, மயிலை

சித்திரை - கருமயிலை, பில்லை

சுவாதி - கருப்பு, வெள்ளை

விசாகம் - பில்லை, மயிலை

அனுஷம் - மயிலை, பலநிறம் கலந்தது

கேட்டை – கருப்பு, பலநிறம் கலந்தது

மூலம் - கருப்பு, சிவப்பு

பூராடம் - கருமயிலை

உத்திராடம் - செவலை, கருப்பு

திருவோணம் - பில்லை, செவலை

அவிட்டம் - வெள்ளை, செம்மரை

சதயம் - சிவப்பு பல நிறம் கலந்தது

பூரட்டாதி - கருப்பு, செம்மரை

உத்திரட்டாதி – சிவப்பு, பில்லை

ரேவதி - கருப்பு, செவலை, மயிலை

எருமையில் - கிருத்திகை, உத்திரம், அனுஷம், சதயம், ரேவதி இந்த நட்சத்திரகாரர்களுக்கு நரை எருமை பொருந்தும்.

### *27 நட்சத்திரங்களில் செய்யும் சுபகாரியங்கள்*

அசுவதி – பூ முடித்தல், கர்பாதானம், விவாகம், பட்டாபிஷேகம், வாகனம் வாங்க, விதை விதைக்க, மரம் வைக்க,

தியாஜ்யம் 50 - யாத்திரை செய்ய, சூதகமனை புகுதல், வித்யாரம்பம், உபநயனம், தானியம் வாங்க, வாகனம் ஏற, கோடி உடுக்க, ஆபரணம் பூண, சமுத்தியாத்திரை, பும்சவனம், நிஷேகம், தானியம் செலவிட, மாடு வாங்க, வியாதியஸ்தர் மருந்துண்ண.

பரணி - தீர்த்த யாத்திரை செய்ய, மூலிகை உபயோகிக்க,

தியாஜ்யம் 24 - அடுப்பு போட, கதிர் அறுக்க, மாடு வாங்க, ஆயுதப் பிரயோகம், தானியம் களஞ்சியத்தில் வைக்க, வியாதியஸ்தர் குளிக்க.

கிருத்திகை - சாசனம் எழுத, ஹோம ஆரம்பம், சுரங்கம் வெட்ட

தியாஜ்யம் 30 - ஆயுதப் பிரயோகம், கடன் தீர்க்க

ரோகிணி - ருது சாந்தி, பும்சவனம், சீமந்தம், விஷ்ணு பலி

தியாஜ்யம் 40 - நாம கரணம், ஆலய ஆரும்பம் செய்ய, ஆடை, ஆபரணம் பூண, தரனியங்கள் இருப்பு வைக்க வித்யாரம்பம், உபநயனம், விவாகம், முடிசூட்ட கிருஷி ஆரம்பம், விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் வாங்க, வாகனம் ஏற, ஆயுதம் பயில, வாஸ்துவிட, கிரகப் பிரவேசம், குளம் - கிணறு வெட்ட, ஆயுதப் பிரயோகம் செய்ய, மாங்கல்யம் செய்ய, தொட்டிலில் குழந்தையை விட, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண, யாத்திரை செய்ய.

மிருகசீர்ஷம் - விசாகம், ருது சாந்தி, சீமந்தம், நாமகரணம், அன்ன பிராசனம், உபநயனம், யாத்திரை

தியாஜ்யம் 14 - சூதகமனை புக, காது குத்தல், முடி சூட்டல், தானியம் வாங்க, வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, வாஸ்து விட, கிரக பிரவேசம்; குளம் - கிணறு வெட்ட, சமுத்திர யாத்திரை, பும்சவனம், விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் களஞ்சியத்தில் வைக்க, தானியம் செலவிட, மாடு வாங்க, வியாதியஸ்தர் மருந்துண்ண, வியாதியஸ்தர் குளிக்க.

திருவாதிரை - சூளைக்கு நெருப்பு வைக்க, மந்திரம் ஜபிக்க

தியாஜ்யம் 21 - காது குத்த, வித்யாரம்பம், ஆயுதப் பிரயோகம், தொட்டிலில் குழந்தையை விட, தானியம் களஞ்சியத்தில் வைக்க வியாதியஸ்தர் குளிக்க.

புனர்பூசம் - பூ முடிக்க, சீமந்தம், நாமகரணம், காது குத்த

தியாஜ்யம் 30 - விருந்துண்ண, உபநயனம், சூதக மனை புகுதல், வித்யாரம்பம், முடி சூட்ட, கிருஷி ஆரம்பம், தானியம் வாங்க, வாகனம் ஏற, கோடி உடுக்க, ஆயுதம் பயிற்ற, வாஸ்து விட, கிரக பிரவேசம், மாங்கல்யம் செய்ய, விவாகம், நிஷேகம், பும்சவனம், எருவிட, மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண, யாத்திரை,

பூசம் ருது சாந்தி, நாமகரணம், அன்னபிராசனம்

தியாஜ்யம் 20 - யாத்திரை, சபைகூட, வாஸ்து விட, பும்சவனம்

வித்யாரம்பம், சீமந்தம், காது குத்த, முடி சூட்ட உபநயனம், கிருஷி ஆரம்பம், விதை விதைக்க, தானியம் வாங்க, ஆபரணம் பூண், கோடி உடுக்க, கிரகபிரவேசம் ஆயுத பிரயோக; மாங்கல்யம் செய்ய; விவாகம், தொட்டிலில் குழந்தையை விட; எருவிட; கதிர் அறுக்க; தானியம் செலவிட மாடு வாங்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண; குளிக்க யாத்திரை.

ஆயில்யம் தியாஜ்யம் 32 - நவக்கிரக் சாந்தி, கிணறு வெட்ட, ஆயுதப் பிரயோகம், ஜபம் பூர்த்தி.

மகம் தியாஜ்யம் 30 - மந்திரப் பிரயோகம், விவாகம், விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் வாங்க, வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, வாஸ்து விட, குளம், கிணறு வெட்ட, ஆயுதப் பிரயோகம் செய்ய, மாங்கல்யம் செய்ய, தானியம் களஞ்சியத்தில் வைக்க தானியம் செலவிட மாடு வாங்க

பூரம் தியாஜ்யம் 20 - ஆயுதப் பிரயோகம், சித்திரை எழுத, கிரக உபாதை நீக்க, மாடு வாங்க; வியாதியஸ்தர் குளிக்க.

உத்தரம் தியாஜ்யம் 18 - கர்பாதானம், பூ முடித்தல்; வித்யாரம்பம், அன்னப் பிராசனம், சூதக மனை புக, நாமகரணம், காது குத்த, உபநயனம் முடி சூட்ட; விவாகம், கிருஷி ஆரம்பம்; விதை விதைக்க, தானியம் மாடு வாங்க, வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, கோடி உடுக்க, வாஸ்து விட, கிரகப் பிரவேசம், குளம் - கிணறு வெட்ட, மாங்கல்யம் செய்ய; பும்சவனம், தொட்டிலில் குழந்தையை விட, எருவிட, கதிர் அறுக்க, தானியம் செலவிட, களஞ்சியத்தில் வைக்க; கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்து உண்ண.

ஹஸ்தம் தியாஜ்யம் 21 - ருதுசாந்தி; கர்பாதானம்; காது குத்த, ஏர் உழ, மந்திரம் ஜபிக்க; கிணறு எடுக்க, கிரக ஆரம்பம்; சூதகமனை புக. நாமகரணம்; வித்யாரம்பம், உபநயனம், முடி சூட்ட; விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் மாடு வாங்க; வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, கோடி, ஆபரணம் பூண; கிரகப் பிரவேசம்; சமுத்திர யாத்திரை, மாங்கல்யம் செய்ய, விவாகம், பும்சவனம், சீமந்தம், தானியம் செலவிட; களஞ்சியத்தில் வைக்க. வியாதியஸ்தர் குளிக்க; மருந்துண்ண.

சித்திரை தியாஜ்யம் 20 - கர்பாதானம், பூமுடிக்க, நாமகரணம், முடிவாங்க, ஔஷதங்கள் உண்ண, சூதகமனை புக; காது குத்தல், வித்யாரம்பம், உபநயனம், முடி சூட்ட, தானியம்; மாடு வாங்க; வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற; ஆபரணம் பூண், கோடி உடுக்க; கிரகப் பிரவேசம்; குளம், கிணறு வெட்ட, ஆயுதப்பிரயோகம்; பும்சவனம்; எருவிட; தானியம் செலவிட. வியாதியஸ்தர் குளிக்க.

சுவாதி தியாஜ்யம் 14 - கர்பாதானம்; பூ முடிக்க; முடி வாங்க, விவசாயம்; கிரகப் பிரவேசம் செய்ய; சூதகமனை புக. வித்யாரம்பம்,

உபநயனம், முடி சூட்டல், விதை விதைக்க, தானியம், மாடு வாங்க, வாகனம் ஏற. ஆயுதம் பயிற்ற, கோடி உடுக்க, வாஸ்து விட, கிரகப் பிரவேசம், சமுத்திர யாத்திரை, ஆயுதப் பிரயோகம், மாங்கல்யம் செய்ய, விவாகம், பும்சவனம், தானியம் செலவிட, கிரக ஆரம்பம், மருந்துண்ண.

விசாகம் தியாஜ்யம் 14 - தானியம் அளக்க, குளம், கிணறு செப்பனிட, விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம் வாங்க, கோடி உடுக்க, தானியம் செலவிட, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

அனுஷம் தியாஜ்யம், 10 - ருதுசாந்தி, பூ முடிக்க, பட்டாபிஷேகம், தூண் நாட்ட, தேவதா பிரதிஷ்டை, சூதகமனை புகுதல், நாமகரணம், வித்யாரம்பம், உபநயனம், விவாகம், விதை விதைக்க, தானியம் வாங்க வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, ஆபரணம் பூண, கோடி உடுக்க, வாஸ்து விட, சமுத்தியாத்திரை, மாங்கல்யம் செய்ய, பும்சவனம், எருவிட, கதிர் அறுக்க, தானியம் செலவிட, மாடு வாங்க, களஞ்சியத்தில் வைக்க, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் குளிக்க.

கேட்டை தியாஜ்யம் 14 - சூளை போட, ஆபரணம் அழித்து செய்ய, இயந்திரம் செய்ய, வாகனம் மாற்ற, மாடு வாங்க, குளம் - கிணறு வெட்ட, ஆயுதப் பிரயோகம், வியாதியஸ்தர் குளிக்க.

மூலம் தியாஜ்யம் - ருது சாந்தி, பூ முடிக்க, விருந்துண்ண, தோட்டம் வைக்க, நாமகரணம், விவாகம், கிருஷி, ஆரம்பம் விதை விதைக்க, தானியம் வாங்க, கிரகப் பிரவேசம், பும்சவனம், மாடு வாங்க, தானியம் செலவிட, வியாதியஸ்தர் குளிக்க, யாத்திரை போக,

பூராடம் தியாஜ்யம் 24 - கணித ஆரம்பம், கரும்பு நட, முத்து - பவழம் வாங்க, கிணறுகளை சீர்படுத்த, கடன் தீர்க்க, ஆயுதப் பிரயோகம், மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

உத்திராடம் தியாஜ்யம் - கர்பாதானம், பூ முடிக்க, நாமகரணம், சீமந்தம், கோடி உடுக்க, சங்கு ஸ்தாபனம், சூதகமனை புக, காது குத்தல், உபநயனம், முடி சூட்டல், விவாகம், கிருஷி ஆரம்பம், விதை விதைக்க, வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, வாஸ்து விட, கிரக பிரவேசம், குளம், கிணறு, வெட்ட பும்சவனம், குழந்தையை தொட்டிலிட, எருவிட, கதிர் அறுக்க, தானியம் செலவிட, களஞ்சியத்தில் வைக்க, கிரக ஆரம்பம்.

திருவோணம் தியாஜ்யம் - ருது சாந்தி, பும்சவனம், சீமந்தம், உபநயனம், நாமகரணம், விவாகம், காது குத்த, விஷ்ணுபலி, கோடி உடுக்க, சூதகமனை புக, வித்யாரம்பம், முடி சூட்ட, விதை விதைக்க, கதிர் அறுக்க, தானியம், வாகனம் ஏற, ஆயுதம் பயிற்ற, வாஸ்துவிட, குளம், கிணறு வெட்ட, சமுத்திர யாத்திரை, மாங்கல்யம் செய்ய, ஆயுத பிரயோகம்.

அவிட்டம் தியாஜ்யம் 10 - பூ முடித்தல், நாமகரணம், உபநயனம், முடி சூட்டல், வாகனம் ஏற, தேவதா பிரதிஷ்டை, வித்யாரம்பம், கிரகப் பிரவேசம், தானியம் வாங்க, கோடி உடுக்க, சமுத்திர யாத்திரை, விவாகம், மாங்கல்யம் செய்ய, நிஷேகம், பும்சவனம், காது குத்த, விதை விதைக்க, தானியம் செலவிட, வியாதியஸ்தர் மருந்துண்ண / குளிக்க.

சதயம் தியாஜ்யம் 18 - குதிரை வாங்க, வியாபார கணக்கு முடிக்க பூமி வீடு வாங்க, நாமகரணம், வாகனம் ஏற, வித்யாரம்பம், விதை விதைக்க, தானியம்/மாடு வாங்க, வாஸ்து விட, கிரகப் பிரவேசம்' மாங்கல்யம் செய்ய, விவாகம் பும்சவனம், தொட்டிலில் குழந்தையை விட, கிரக ஆரம்பம், வியாதியஸ்தர் மருந்துண்ண / குளிக்க, யாத்திரை.

பூரட்டாதி தியாஜ்யம் 16 - மந்திரம் ஜபிக்க, கவல ஏற்றம் நட, மாடு வாங்க, வியாதியஸ்தர் குளிக்க.

உத்திரட்டாதி தியாஜ்யம் 24 - ருது சாந்தி, பும்சவனம், உபநயனம், விவாகம், காது குத்த, சீமந்தம், சூதகமனை பூக. நாமகரணம், வித்யாரம்பம், கிருஷி ஆரும்பம், விதை விதைக்க, தானியம வாங்க, வாகனமேற, ஆயுதம் பயில கோடி உடுக்க, வாஸ்துவிட, கிரகப் பிரவேசம், குளம், கிணறு வெட்ட, குழந்தையை தொட்டிலிட, எருவிட, கதிர் அறுக்க, தானியம் களஞ்சியத்தில் வைக்க/செலவிட, கிரக ஆரம்பம், யாத்திரை, வியாதியஸ்தர் மருந்துண்ண.

ரேவதி தியாஜ்யம் 30 - மேற்படியுடன் முடி சூட்ட, ஆபரணம் பூண சமுத்திர யாத்திரை, அசுவ சாந்தி, மாங்கல்யம் செய்ய, மாடு வாங்க.

*நட்சத்திர தேசங்கள்*

ரேவதி, அஸ்வினி, பரணி - சீனம் முதலான வடகீழ்திசை தேசங்கள்

கிருத்திகை, ரோகிணி, மிருக - யமுனை, சரஸ்வதி நதிதீரம், மத்திய பிரதேசம்.

திருவாதிரை, புனர்பூசம், பூசம் - மிதிலை, மகதம், கீழ்திசை ராஜ்யங்கள்

ஆயில்யம், மகம், பூரம் - விதர்பம், கலிங்கம், வங்கம், கோசலம் ஆந்திரம்

உத்தரம், ஹஸ்தம், சித்திரை - காவேரி, தாம்பிர பரணி நதிதீரம், கேரளம், கோஷம், அவந்தி, நாசிக், இலங்கை

சுவாதி, விசாகம், அனுஷம் - சிந்து, காம்போஜம்

கேட்டை, மூலம், பூராடம் - பிலேச்சம், பாஞ்சாலம்

உத்திராடம், திருவோணம், அவிட்டம் - லாட தேசம் மாண்டவ்யம், ஆஸ்மகம், மட்டீரம்

சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி - திரிகர்த்தம், குருதேசம், கேகேயம், 6 பர்வதக்ளாகிய கைலாசம், இமயம், மேரு, தனுஷ்மான், கிரௌஞ்சம், வாசுமன்

பலன் - பாபிகளான சூரியன், செவ்வாய், சனி, ராகு, கேது இவர்கள் எந்த நட்சத்திரத்தில் சஞ்சரிக்கிறார்களோ, அந்த நட்சத்திரத்திற்குரிய தேசங்களும், அங்குள்ள மக்களும் மற்ற ஜீவராசிகளும் அப்போது கஷ்டப் படுவார்கள்,. சுபர்களான சந்திரன், புதன், குரு, சுக்கிரன் சஞ்சரிக்கும் போது சுகம் உண்டு.

***நவக்கிரகங்கள் லப்தை (உதைப்பு) நட்சத்திரங்கள்***

கிரகம் சூரியன் சந்திரன் செவ் புதன் குரு
சந்திரன் சனி ராகு கேது
இருக்கும் 12 வலம் 22 இடம் 3 வலம் 7 இடம் 6 வலம்
5 இடம் 8 வலம் 9 இடம் 9 இடம்
நட்சத்திரம்.

1. அசுவதி உத்ரம் புனர் கிருத்தி
திருவோ திருவா சதயம் பூசம் பூராட பூராட

2. பரணி ஹஸ்தம் பூசம் ரோகிணி அவிட்ட
புனர் பூரட்டாதி ஆயில் உத்ரா உத்ரா

3. கிருத்தி சித்திரை ஆயில் மிருக சதயம்
பூசம் உத்ரட் மகம் திருவொ திருவோ

4. ரோகி சுவாதி மகம் திருவாதி பூரட்டா ஆயில்
ரேவதி பூரம் அவிட்ட அவிட்ட

5. மிருக விசாக பூரம் புனர் உத்ரட்
மகம் அசுவதி உத்ரம் சதயம் சதய

6, திருவா அனுஷம் உத்ரம் பூசம் ரேவ
பூரம் பரணி ஹஸ்த பூரட்டா பூரட்

7 புனர் கேட்டை ஹஸ்த ஆலல் அசுவதி
உத்ரம் கிருத்தி சித்தி உத்தி உத்திரட்

8. பூசம் மூலம் சித்தி மகம் பரணி
ஹஸ்த ரோகி சுவாதி ரேவதி ரேவதி

9. ஆயில் பூராடம் சுவாதி பூரம்
கிருத்தி சித்திரை மிருக விசாக அசுவ அசுவ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | மகம் | உத்ராட | விசாகம் | உத்ரம் | ரோகி |
| | சுவாதி | திருவா | அனுஷ | பரணி | பரணி |
| 11. | பூரம் | திருவே | அனுஷம் | ஹஸ்த | மிருக |
| | விசாகம் | புனர் | கேட்டை | கிருத் | கிருத் |
| 12. | உத்ரம் | அவிட்ட | கேட்டை | சித்திரை | |
| | திருவா | அனுஷ | பூசம் | மூலம் | ரோகி |
| 13 | ஹஸ்தம் | சதயம் | மூலம் | சுவாதி | புனர் |
| | கேட்டை | ஆயில் | பூராட | மிருக | மிருக |
| 14. | சித்தி | பூரட்டாதி | பூராடம் | விசாக | பூசம் |
| | மூலம் | மகம் | உத்ரா | திருவா | திருவா |
| 15. | சுவாதி | உத்ரட் | உத்ரா | அனுஷ | ஆயில் |
| | பூராட | பூரம் | திருவோ | புனர் | புனர் |
| 16. | விசாக | | ரேவதி | திருவே | கேட்டை |
| | மகம் | உத்ராட | உத்ரம் | அவிட் | பூசம் பூசம் |
| 17. | அனுஷ | அசுவதி | அவிட் | மூலம் | பூரம் |
| | திருவே | ஹஸ்த | சதயம் | ஆயில் | ஆயில் |
| 18. | கேட் | பரணி | சதயம் | பூராட | உத்ரம் |
| | அவிட்ட | சித்தி | பூரட்டா | மகம் | மகம் |
| 19. | மூலம் | கிருத்தி | பூரட்டா | உத்ராட | ஹஸ்த |
| | சதயம் | சுவாதி | உத்ரட் | பூரம் | பூரம் |
| 20. | பூராடம் | ரோகி | உத்ரட் | திருவோ | சித்தி |
| | பூரட்டா | விசாக | ரேவதி | உத்ரம் | உத்ரம் |
| 21. | உத்ராட | மிருக | ரேவதி | அவிட்ட | சுவாதி |
| | உத்ரட் | அனுஷ | அசுவதி | ஹஸ்த | ஹஸ்த |
| 22. | திருவோ | திருவோ | அசுவ | சதயம் | விசாக |
| | ரேவதி | கேட்டை | பரணி | சித்தி | சித்தி |
| 23. | அவிட்ட | புனர் | பரணி | பூரட்டா | அனுஷ |
| | அசுவதி | மூலம் | கிருத்தி | சுவாதி | சுவாதி |
| 24. | சதயம் | பூசம் | கிருத்தி | உத்ரட் | கேட்டை |
| | பரணி | பூராட | ரோகி | விசாக | விசாக |

25. பூரட் ஆயில் ரோகி ரேவதி மூலம்
கிருத்தி உத்ராட மிருக அனுஷ அனுஷ
26. உத்ரட் மகம் மிருக அசுவதி பூராடம்
ரோகி திருவோ திருவா கேட்டை கேட்டை
27. ரேவதி பூரம் திருவா பரணி
உத்ராட மிருகசீ அவிட்ட புனர் மூலம்

விளக்கம் - மேலே சொன்னது பொதுவாக 'லத்தை'' எனப்படும். முதல் மேலிருந்து கீழ் அவர் அவர் ஜன்ம நட்சத்திரங்கள் உள்ளன. இடமிருந்து வலம், சூரியன் முதல் கேது வரை கோள்களும் அவை ஒருவர் ஜென்ம நட்சத்திரத்திலிருந்து முன்னதாகவே (தலை கீழாகவோ அல்லது இடமாகவோ) அல்லது நேராகவோ உள்ள நின்ற நட்சத்திர எண்ணும் கீழ்நட்சத்திரப் பெயரும் உள்ளன.

*லத்தை பலன்*

*நட்சத்திர பகை*

அசுவதிக்கு - மகமும், மூலமும் பகை
பரணிக்கு - கேட்டை பகை
கிருத்திகை - அனுஷம் பகை
ரோகிணி - விசாகம் பகை
மிருகசீர்ஷம் - சுவாதி பகை
திருவாதிரை - அவிட்டம் பகை
புனர்பூசம் - திருவோணம் பகை
பூசம் - உத்திராடம் பகை
ஆயில்யம் - பூராடம் பகை
மகம் - மூலம், அஸ்வினி பகை
பூரம் - ரேவதி பகை
உத்தரம்,- உத்திரட்டாதி பகை
ஹஸ்தம் - பூரட்டாதி பகை
சித்திரை - சதயம் பகை
சுவாதி - மிருகசீர்ஷம் பகை
விசாகம் - ரோகிணி பகை
அனுஷம் - கிருத்திகை பகை
கேட்டை - பரணி பகை

மூலம் - அஸ்வினி, மகம் பகை

பூராடம் - ஆயில்யம் பகை

உத்திராடம் - பூசம் பகை

திருவோணம் - புனர்பூசம் பகை

அவிட்டம் - திருவாதிரை பகை

சதயம் - சித்திரை பகை

பூரட்டாதி - ஹஸ்தம் பகை

உத்திரட்டாதி - உத்தரம்

ரேவதி - பூரம்

முன் பக் த் தொடர்ச்சி உதாரணமாக ஒருவன் ஜென்ம நட்சத்திரம் அஸ்வனி என்றால் 12வது நட்சத்திரத்தில் சூரியன் அதாவது ஒருவன் நட்சத்திரம் அசுவனி என்றால் அதன் 12வது நட்சத்திரத்தில் சூரியன் வந்தால் அது அவருக்கு சூரியனால் லத்தையாகும். அதாவது அந்த நட்சத்திரத்தைக் கடக்கும் வரை அவருக்கும் ஆகாத காலமாகும். இப்படியே இது சூரியலத்தை பலன்.

***லத்தைபலன்***

1. லத்தை இரு புறமும் (முன்னும் பின்னும் ஏற்பட்டால் அப்பொழுது நோயும் நஷ்டமும் ஏற்படும் (எந்த கோனாலும் ஏற்பட்டாலும்)
2. சூரியனின் லத்தா காலத்தில் முழு வியாபார நஷ்டமாம்.
3. குருவின் லத்தா காலத்தில் மரணமும் ஏற்படலாம்.
4. ராகு, கேது, லத்தா காலத்தில் எல்லா விதமான கஷ்டங்களும் ஏற்படும்.
5. சுக்கிரனின் லத்தா காலத்தில், சண்டை சச்சரவுகள் உண்டாகும்.
6. சந்திரனின் லத்தா காலத்தில்,மான கௌரவ பங்கம் ஏற்படும்.
7. புதனால் லத்தை ஏற்படும் போது, பதவி நாசம், வேண்டாத கஷ்டங்களும் ஏற்படும்.

***தானம்***

27 நட்சத்திரங்களில் பிறந்தவர்களும் நட்சத்திர விஷ கடிகை, கண்டாந்தம் இன்னும் நட்த்சதிரத்தால் ஏற்படும் அரிஷ்டங்கள் கஷ்டங்கள் போக பரிகாரமாக செய்ய வேண்டிய தானங்கள் "தான சிந்தாமணி" என்ற கிரந்தத்தில் கண்டபடி பின்வருமாறு.

***1. அஸ்வனி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள்***

அசுவனி நட்சந்திரம் கூடிய நாளில் குதிரை பூட்டிய தேரைத் தானம்

செய்ய வேண்டும், யானைகளும் குதிரைகளும் நிறைந்த குலத்தில் தேஜோவனாகப் பிறப்பான்.

### 2. *பரணி*

திலதேனுபவை (எள் மற்றும் பசுவை) பிராமணனுக்குத் தானம் செய்கிறவன் ஏராளமான பசுக்களை அடைவான். மறுமையில் புகழை அடைவான் (பரணி நாளில் செய்ய வேண்டும்)

திலதேனு! கம்பளியினால் பசுவைப் போன்று உரப்பை தைய்ந்து, அதனுள் எள்ளை நிறைத்து தானம் பண்ணுவதுமாம்.

### 3. *கார்த்திகை*

கார்த்திகை நட்சத்திரத்தன்று நல்ல நெய்யுடனும் பாயசத்துடனும் சாதுக்களான பிராமணர்களுக்கு திருப்திகாரமான போஜனம் பண்ணி வைக்கிறவன், உத்தமமான லோகங்களை இறப்புக்குப்பின் அடைவான்.

### 4. *ரோகிணி*

இதில் ஏற்படும் கஷ்டங்கள் தீர ரோகிணி நட்சத்திரத்தில் உரைந்தினாலே க்ஷயங்களுடன் நெய்யுடனும் பிராமணர்களுக்கு போஜனம் பண்ணி வைக்க வேண்டும், குடிப்பதற்குப் பால் கொடுக்க வேண்டும்.

### 5. *மிருகசீரிஷம்*

சந்திரனைத் தேவதையாகக் கொண்ட மிருகசீரிஷ நட்சத்திரத்தில், கன்றுடன் கூடிய கறவைப் பசுவைத் தானம் செய்ய வேண்டும். இப்படிச் செய்கிறவன், திவ்யமான விமானத்தில் ஏறிக் கொண்டு உத்தமமான ஸ்வர்க்க லோகத்தை அடைவான்.

### 6) *திருவாதிரை*

திருவாதிரை நட்சத்திரத்தில் தைலத்துடன் கிருசிரத்தைத் தானம் செய்ய வேண்டும். அதாவது ஸ்நாநம் செய்வதற்கு அவருக்கு வெல்லம் கலந்த எள்ளு சாதத்தைப் பரிமாற வேண்டும். அப்படிச் செய்கிறவன் கத்தி முனை போலும், மலையைப் போலும் பயங்கரமான துக்கங்கள் மற்றும் இடையூறுகளை சுலபமாகக் கடப்பான்.

### 7) *புனர்பூசம்*

அபூவம் எனப்படும வடை அதிரசம் போன்ற பணியாரத்தை நெய்யில் பக்குவம் செய்து அதில் நெய்யை விட்டு புனர்பூசம் நட்சத்திரத்தில் தானம் பண்ணுகிறவன் புகழடைவனாகவும் நல்ல அழகுடையவனாகவும் இருப்பான் உணவுக்குப் பஞ்சமில்லாத குடும்பத்தில் பிறப்பான்.

### 8) பூசம்

பூச நட்சத்திரத்தில் தங்கள் அல்லது தங்க நகையைத் தானம் செய்கிறவன். கண்ணுக்குப் புலப்படாத உத்தம லோகங்களில் சந்திரன் போன்று பிரகாசிப்பான்.

### 9) ஆயில்யம்

சர்ப்பங்களை அதி தேவதையாய்க் கொண்ட ஆயில்ய நட்சத்திரத்தில் வெள்ளி அல்லது காளை மாட்டைத் தானம் பண்ண வேண்டும். இதனால் எல்லாவிதமான பயங்களிலிருந்து விடுதலை அடைந்து சாஸ்திரங்களைக் கற்றுணர்தவனாவான்.

### 10) மகம்

மக நட்சத்திரத்தில் எள்ளுடன் கூடிய மடக்குகளைத் தானம் செய்கிறவன் பசுக்களுடையவனாகவும், பிள்ளைகளுடையவனாகவும் இருப்பான்.

### 11) பூரம்

பூர நட்சத்திரத்தில் உபவாசமிருப்பவன் தேன் பாகு கலந்த பக்ஷங்களை, பிரமணனுக்கு தானம் பண்ணுகிறவன் சகல விதமான சௌபாக்யங்களையும் அடைவான். தேன்பாகு - தேன் பதத்தில் திரண்டு வரும் வெல்லப்பாகு.

### 12) உத்திரம்

மூன்று உத்திரங்களிலும், எந்த தானத்தை எவன் செய்தாலும் எப்பொழுது அளவு கடந்த பலனை நிச்சயம் அனுவிப்பான்.

### 13) ஹஸ்தம்

ஹஸ்தம் நட்சத்திரத்தில் உபவாசமிருந்து 4 யானைகளுடன் கூடிய ரதத்தை தானம் செய்கிறவன் துக்கங்களை சுலபமாகக் கடப்பான். கத்தி முனைபோன்ற மலைஅளவு தொல்லைகளையும் சுலபமாகக் கடந்துவிடுவார்கள்.

### 14) சித்திரை

சித்திரை நட்சத்திரத்தில் லக்ஷணங்களையுடைய காளையுடைய காளையை அல்லது வெள்ளை நிறப்பசுவையோ தானம் பண்ணுபவன். தேவ மகளிர்களுடன் அவர்கள் உலகத்தில் அவர்களுடன் தேவலோக நந்தவனத்தில் கிரீடை பண்ணுவார்கள்.

### 15) சுவாதி

சுவாதி நட்சத்திரத்தில் பணத்தையும் தனக்கு மிகவும் இஷ்டமானப் பொருளையும் தானம் செய்கிறவன் உத்தம லோகங்களை அடைவான். இங்கும் அதிகப் புகழும் அடைவான்.

### 16) விசாகம்

விசாக நட்சத்திரத்தில், காளை மாட்டையும், அதனுடன் கூடிய பசுவையும் தானியம் வஸ்த்திரம் முதலியவற்றுடன் கூடிய வண்டியையும் பித்ருருக்களையும் தேவர்களையும் செய்விட்டான் திருப்தி படுத்தபவன் ஆவான். பரலோகத்திலும் எல்லையற்ற போகங்களை அனுபவிப்பான். கஷ்டமடையமாட்டான். சுவர்க்கலோகத்தை அடைவான். நிச்சயம் நல்லவையே அடையவேண்டும்.

### 17 ஆனுஷம்

அனுஷ நட்சத்திரத்தில் வஸ்திரத்துடன் போர்வையைத் தானம் செய்கிறவன் ஆயிரம் புகங்கள் சுவர்க்கலோகத்தில் வசிப்பான்.

### 18) கேட்டை

கேட்டை நட்சத்திரத்தில் கருணைக் கிழங்குடன் கீரையை பிராமணர்களுக்குத் தானம் செய்கிறவன். மிருத்யுவை வென்று தான் விரும்பும் உல்கத்தையடைவான்.

### 19) மூலம்

மூல நட்சத்திரத்தில் மனதை அமைதியாக வைத்துக் கொண்டு கிழங்குகள், பழங்கள் இவற்றைப் பிராமணர்களுக்குத் தானம் செய்கிறவன், தனது பித்ருக்களைப் பிரீதி செய்கிறவன் தனக்கு உகந்த சத்கதியை அடைவான்.

### 20) பூராடம்

பூராட நட்சத்திரத்தில் உபவாசமிருந்து தயிருடன் கூடிய பாத்திரங்களை, நல்ல குலத்தில் பிறந்த, வேதமறிந்த, நல்ல ஒழுக்கமுள்ள பிராமணனுக்கு தானம் பண்ணுபவன் உத்தம பிரசித்தமான பிராமண குலத்தில் பிறப்பான் பிள்ளை பேரர்கள், கால்நடைச் செல்வம் இவற்றுடன் செல்வந்தனாகவும் இருப்பான்.

### 21) உத்திராடம்

உத்திராட நட்சத்திரத்தில் ஜலம் விட்டுக் கடைந்த தயிர், நெய்' ஏராளமான தேன் பாகு இவைகளை, உத்தமமான சகலலோகங்களையும் அடைவான்.

### 22) அபிஜித்

அபிஜித் என்னும் நட்சத்திரத்தில் தேனும் நெய்யும் கலந்த பாலை, தார்மீகர்களாகவும் வித்துவான்களுமான நல்லவர்களுக்கும் தானம் பண்ணுபவன். சுவர்க்க லோகத்தில் பெருமையுடன் வசிப்பான்.

அபிஜித் என்பது உத்திராட நட்சத்திரத்தின் 4வது பாதம் திருவோண நட்சத்திரத்தில் முதல் 4 நாழிகை காலமும் கொண்ட பகுதியாகும்.

### 23. திருவோணம்

திருவோண நட்சத்திரத்தில் வஸ்த்திரத்திற்குள் கும்பனியை வைத்துத் தானம் பண்ணுபவன் வெளிப்பான விமானத்தில் சுவர்க்கத்தில் அங்கு பெருமையுடன் வசிப்பான்.

### 24. அவிட்டம்

அவிட்ட நட்சத்திரத்தில் மாட்டு வண்டியை மன அமைதியுடன் (மாடுகளுடன்) தானம் செய்கிறவனும், புத்தாடையைத் தானம் பண்ணுபவனும் மறுபிறவியில் ராஜியத்தை அடைவான்.

### 25. சதயம்

சதய நட்சத்திரத்தில் சந்தனம் அல்லது பரிமளப் பொருள், கருங்காலிச் சந்தனம், செஞ்சந்தனம் இவற்றைத் தானம் செய்கிறவன். தேவ மங்கையர் வசிக்கும் உலகை அடைவான். சுகிப்பான் எப்பொழுதும் சுகந்த சந்தனத்தையும் அடைவான்.

### 26. உத்திரட்டாதி

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் வெள்ளாட்டு மாமிசத்தைத் தானம் பண்ணுபவன், சகல பித்ருக்களையும் திருப்தி பண்ணுபவனாவன். பரலோகத்தில் எல்லையற்ற சுகபோகங்களை அனுபவிப்பவன் ஆவான்.

### 27. ரேவதி

ரேவதி நட்சத்திரத்தில் பால் கறப்பதற்கு வெண்கலப் பாத்திரத்துடன் பசுவைத் தானம் பண்ணுபவன் மறு பிறவியில் சகல அபிஷ்டங்களையும் பெறுவான் பசுக்களையும் அடைவான்.

### 1. கிருத்திகை முதலிய 17 நட்சத்திரங்களில் விஷ நாடி பிரவேச காலம் ஜ்யோதிஷ வித்தியாமாதவீயத்தில்)

கிருத்திகை முதலிய நட்சத்திரங்களில் அது முதல் 30,40,14.21,30, 20,32,30,20,18,21,20,14,14,10,14,20,24,20,10.10,28,16,24,30.50,24 இந்த நாழிகைக்கு பிறகு விஷநாடி பிரவேச காலமாகும். கீழே கூறிய நாழிகைக்கு மேல் 4 நாழிகை காலம் விஷநாடி காலமாகும்.

## கிருத்திகை முதலிய நக்ஷத்திரங்களில் விஷநாடி கால விவரம்

| நட்சத்திரம் | விஷநாடி காலம் |
|---|---|
| கிருத்திகை | 30 - 34 |
| ரோஹிணீ | 40 - 44 |
| மிருகசீர்ஷம் | 14 - 18 |
| திருவாதிரை | 21 - 25 |
| புனர்பூசம் | 30 - 34 |
| பூசம் | 20 - 24 |
| ஆயில்யம் | 32 - 36 |
| மகம் | 30 - 34 |
| பூரம் | 20 - 24 |
| உத்திரம் | 18 - 22 |
| ஹஸ்தம் | 21 - 25 |
| சித்திரை | 20 - 24 |
| ஸ்வாதி | 14 - 18 |
| விசாகம் | 14 - 18 |
| அனுஷம் | 10 - 14 |
| கேட்டை | 14 - 18 |
| மூலம் | 20 - 24 |
| பூராடம் | 24 - 28 |
| உத்திராடம் | 20 - 24 |
| திருவோணம் | 10 - 14 |
| அவிட்டம் | 10 - 14 |
| சதயம் | 28 - 32 |
| பூரட்டாதி | 16 - 20 |
| உத்திரட்டாதி | 24 - 28 |
| ரேவதி | 30 - 34 |
| அசுவதி | 50 - 54 |
| பரணி | 24 - 28 |

2. கிருத்திகை முதலான 27 நட்சத்திரங்களில் அமிருதநாடி பிரவேச காலங்கள் (ஜ்யோதிஷத்தில் வித்யாமாதவீயத்தில்)
கார்த்திகை முதலிய 27 நட்சத்திரங்களில் முறையே,.
24, 22, 8, 15, 24, 14, 27, 24, 14, 12, 15, 8, 14, 8, 4, 8, 14, 14, 14, 4, 4, 4, 10, 18, 24, 12, 18, 30 இந்த நாழிகைகளுக்குப் பிறகு 4 நாழிகை காலம் அமிருத நாடி காலமாகும்.

கிருத்திகை முதலிய நட்சத்திரங்களில் அமிருதநாடி கால விவரம்

| நட்சத்திரம் | அமிருதநாடி காலம் |
|---|---|
| கார்த்திகை | 24 - 28 |
| ரோகிணி | 22 - 26 |
| மிருகசீருஷம் | 8 - 12 |
| திருவாதிரை | 15 - 19 |
| புனர்பூசம் | 24 - 28 |
| பூசம் | 14 - 18 |
| ஆயில்யம் | 27 - 31 |
| மகம் | 24 - 28 |
| பூரம் | 14 - 18 |
| உத்திரம் | 12 -16 |
| ஹஸ்தம் | 15 -19 |
| சித்திரை | 8 - 12 |
| ஸ்வாதி | 14 - 16 |
| விசாகம் | 8 - 12 |
| அனுஷம் | 4 - 8 |
| கேட்டை | 8 - 12 |
| மூலம் | 14 - 18 |
| பூராடம் | 14 - 18 |
| உத்திராடம் | 14 - 18 |
| திருவோணம் | 4 - 8 |
| அவிட்டம் | 4 - 8 |
| சதயம் | 4 - 8 |

| | |
|---|---|
| பூரட்டாதி | 10 - 14 |
| உத்திரட்டாதி | 18 - 22 |
| ரேவதி | 24 - 28 |
| அசுவதி | 12 -16 |
| பரணி | 18 - 22 |

*3) அபுக்த மூலம் எனப்படும் விருத்தாவயவ மூலத்தின் ஸ்வருபம்*

கேட்டை நட்சத்திரத்தின் இறுதியில் ஒரு நாழிகை காலமும், மூல நட்சத்திரத்தின் ஆரம்பத்தில் இரண்டு நாழிகை காலமும், அபுக்த மூலம் எனப்படும்.

*4. அபுக்த மூலத்தில் பிறந்ததால் உண்டான தோஷத்திற்கு பரிஹாரமான சந்தி (ஜாதகாபரணத்தில்)*

அந்த காலத்தில் பிறந்த குழந்தையின் முகத்தை, ஷேமத்தை விரும்பும் தகப்பன், 8 அம்மாவாஸ்யை காலம் அதாவது 8 மாதகாலம் பார்க்கக் கூடாது. ஆகவே, அந்த தோஷம் நீங்கம் பொருட்டு, சாந்திகர்மாவானது கூறப்படுகிறது.

100 துவாரமுடைய கடத்தில், சதௌஷதி மூலங்களையும் (100 விதமான ஔஷதிகளின் வேர்களையும்) ஸ்ப்த மிருத்துக்களையும் (ஸமுத்திரம் 1, கங்கை காவேரி போன்ற நதி 2, ஜலாசயம் ஏரி குளம் போன்றது 3, நண்டு வளை 4, புத்து 5. வருஷம் அல்லது பசுவின் கொம்பு 6, யானையின் தந்தம் 7, இந்த ஏழு இடங்களிலிருந்து ஸ்ம்பாதித்த மண்) இவைகளையும் போட்டு பிராம்ஹணர்கள் அதற்குரிய ஜபம் செய்ய, அந்த கடத்தின் துவாரங்களிலிருந்து விழும் ஜலத்தில், குழந்தையின் தகப்பனும், அந்தப் பெண் குழந்தையும் ஸ்நாநம் செய்ய வேண்டும் அதற்குரிய ஜபம், ஹோமம், தானம், இவைகளையும் செய்ய வேண்டும். இவ்விதம் செய்தால் தோஷங்கள் அகன்று சுபங்களுண்டாகும் நிச்சயம்.

புத்திமான்கள், விருத்தாவயவ மூலத்தில் பிறந்த சிசுவுக்கு, தோஷ பரிஹாரார்த்தமாக இவ்வித சாந்தியைக் கூறியுள்ளார்கள். ஷேமத்தை விரும்புகிறவர்கள், முனிவர்கள் கூறியுள்ளதை ஸ்த்யமென்று கருதவேண்டும்.

*5. மூலம் ஆயில்யம் இந்த 2 நட்சத்திரங்களில் பாடபேதத்தில் ஜனித்தவர்களின் மாறுபட்ட பலன்கள் (ஜாதகாபரணத்தில்)*

மூல நட்சந்திரத்தில் முறையே 1, 2, 3-வது பாதங்களில் பிறந்தவர்கள்

முறையே பிதா - தாய் - மகன் இவர்களுக்கு அரிஷ்டத்தை அளிப்பவனாவான், (மகன் என்பதற்கு பிறந்தவனின் மூத்த சகோதரன் என்பது பொருள்)

4-வது பாதமானது மிகவும் சுப பலனை யளிப்பதாகும்: ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவனுக்கு, இதற்கு நேர் மாறுதலான பலனைக் கொள்ள வேண்டும். முதல் பாதம் சுப பலனையளிப்பதாகும் 3-வது பாதம் மகனுக்கு அரிஷ்டம், 3வது பாதம் தாய்க்கு அரிஷ்டம். 4வது பாதம் தகப்பனுக்கு அரிஷ்டம் அளிக்கும் என்பதாகும்.

### *6. மூலத்துடன் திதி வாரங்களின் சேர்க்கையினாலே உண்டாகும் பலன்கள் (ஜாதகாபரணத்தில்)*

மூல நட்சத்திரத்துடன், கிருஷ்ண பக்ஷம் திருதியை தசமி, சுக்லபக்ஷம் பஞ்சமி, இவைகள் செவ்வாய்கிழமை, சனிக்கிழமை, புதன்கிழமை இவைகளுடன் சேர்ந்தால் அத்தகைய மூலத்தில் பிறந்தவன், அந்த குலத்திற்கே அழிவையுண்டு பண்ணுகின்றவனாவான்,

இத்தகைய மூலத்தில் ஜனிக்கும் பொழுது அது பகலாக இருந்தால் பிதாவுக்கும். சாயங்காலமாக இருந்தால் மாமனுக்கும், இரவாக இருத்தால் பசுக்களுக்கும், காலை வேளையாக இருந்தால் ஸ்நேகிதர்களுக்கும் அரிஷ்டத்தையுண்டு பண்ணுவதாகும்.

### *7. பலபேதத்தைக் குறிக்கின்ற புருஷாகிருதி மூலம் ஆயில்யங்களின் ஸ்வரூபம்*

மூலம் ஆயில்யம் இவைகளின் கூடுதல் நாழிகையை, ஓர் புருஷ வடிவமாகக் கல்பித்துக் கொண்டு, அதன் நாழிகைகளை உச்சியில் 5, முகத்தில் 5, தோள்களில் 2, புஜங்களில் 8: கரங்களில் 8, ஹிருதயத்தில் 8, நாபியில் 2, குஹயப்பிரதேசத்தில் 10, முழங்கால்களில் 6, பாதங்களில் 6 என பகிர்ந்து கல்பித்துக் கொண்டு பலன்களைக் கூற வேண்டும். (சிரம் முதல் பாதம் வரையில் முறையே) நாழிகைகளின் கூடுதல் $5+5+2+8+9+8+2+10+6+6=60$)

உச்சிக்குரிய நாழிகையில் பிறந்தவன் குடையையடைவான். முகத்திற்குரிய நாழிகையில் பிறந்தவன், தகப்பனைக் கொல்லுவான். தோளுக்கரிய காலத்தில் பிறந்தவன் சுமை தூக்குவான். பாஹு (மேல்கை புஜம்)வுக்குரிய காலத்தில் பிறந்தவன் ஒருவித காரியமும் செய்யமாட்டான். கரங்களுக்கு (கீழ் கைகளுக்கு) உரிய காலத்தில் பிறந்தவன் கொலை புரிவான். அல்லது கொலை செய்தவனைப் போலிருப்பான். ஹிருதயத்திற்குரிய காலத்தில் பிறந்தவன், ராஜ்யத்தை யடைவான். நாபிக்குரிய காலத்தில் பிறந்தவன்

அல்பாயுளுடையவனாவான். குஹ்யப் பிரதேசத்திற்குரிய காலத்தில் பிறந்நவன் ஆச்சரியப்படத்தக்க சுகங்களையடைவான். முழங்காலுக்குரிய காலத்தில் பிறந்தவன், ஊர்கள் சுற்றுவதில் பிரியமுடையவனாவான். பாதங்களுக்குரிய காலத்தில் பிறந்தவன், அல்பாயுளுடையவனாவான். இவ் விதமாக அந்தந்த நாழிகைகளில் பிறந்தவனுடைய பலன்களை முனிவர்கள் கூறியிருக்கிறார்கள் என்பதை புத்திமான்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த பலன்கள் மூல நட்சத்திரத்தில் பிறந்தவனுக்குக் கூறப்பட்டவைகளாம்

ஆயில்யத்தில் பிறந்தவனுக்கு இதற்கு நேர் விரோதமான பலன்களைக் கொள்ள வேண்டும்.

### *8. மூலம், ஆயில்யம் இந்த 2 நட்சத்திரங்களின் மூஹர்ந்த நாயகர்களின் பெயர்கள்*

ராக்ஷஸன் 1, யாதுதானன் 2, ஸோமன் 3, சுக்கிரன் 4, பணிசன் 5, பிதா (பிதிருதேவதைகள்) 6, மாதா (மாதிரு தேவதைகள்) 7, யமன் 8, காலன் 9, விச்வேதேவர்கள் 10, மஹேசன் 11, ஸர்பன் 12, குபேரன் 13, இந்திரன், 14, மேகம் 15, திவிகரன் 16, கந்தர்வன் 17, யமதேவன் 18, பிரும்ஹா 19 விஷ்ணு 20, யமன் 21, ஈசுவரன் 22,. இந்திரன் 23, பவனன் 24, முனிவர்கள் 25, ஷண்முகன் 26, பிருங்கிரிடி என்னும் முனிவர் 27, கௌரீ தேவி 28, ஸரஸ்வதீ 29, பிரஜாபதி 30, இவர்கள் முறையே, மூல நட்சத்திரத்தின் மற்றும் ஆயில்ய நட்சந்திரத்தின் மூஹர்த்தங்களின் அதிநாயகர்களாவார்கள்.

குழந்தையானது கேட்டை நட்சத்திரத்தில் பிறததானால் அந்தக் கேட்டையின் மூக்ஷர்த்த அதிதேவதைகளை, மூல நட்சத்திரத்திற்குக் கூறியிருப்பதைப் போல் தலைகீழாக (80ல் இருந்து 1 வரையில்) கொள்ள வேண்டும்.

இந்த மூகூர்த்தங்களில் 1, 2, 6, 8, 9, 12, 23 ஆகிய 7 மூகூர்த்தங்களில் குழந்தை பிறந்தால், அந்த சிசுவானது, கலநாசத்தையுண்டு பண்ணுவதாகும்.

### *ஜென்ம நட்சத்திரத்தில் செய்யத்தக்கவை*

வித்யாரம்பம், சௌளம், அன்னப்பிராசனம், யஞ்யம், உபநயனம், பட்டாபிஷேகம், நிலம் வாங்குதல் முதலானது சிறந்ததாகும்.

### *ஜென்ம நட்சத்திரத்தில் செய்யத்தகாதவை*

விவாஹம், கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், மருந்து சாப்பிடல் முதலானது கூடாது.

### பெண்களுக்கு மட்டும் ஜென்ம நட்சத்திர பலன்

பெண்களுக்கு மட்டும் விவாஹம், ஜென்ம நட்சத்திரம் வந்தால் செய்யலாம் என்பது விதி,. ஜென்ம வாரத்தில் செய்யக் கூடாது.

### ஜென்ம நட்சத்திரம்

ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் ஒரே நட்சத்திரமிருப்பின் அது சிறந்தது அல்ல, பரிஹாரம் புண்ணியஸதலம் சென்று வருதல்.

### தோஷ மற்ற காலம்

சூரிய உதயம் அதாவது உஷக்காலத்தில் திதிதோஷமும் அபிஜித் காலத்தில் அதாவது 12 1/2 நாழிகைக்கு மேல் 1 நாழிகைக்குள் நட்சத்திர தோஷமும், அஸ்தமனக் காலத்தில் லக்ன தோஷமும், இரவில் வாரதோஷமும் கிடையாது

### கெண்டாந்திர தாரா நட்சத்திரங்கள் வரிசைப்படி

**அசுவனி**

அசுவனியில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1க்கு தகப்பனார்க்கு கெண்டம், புத்திரன் கெண்டம், பாதம் 2க்கு தாய்க்குக் கெண்டம், பாதம் 3க்கு தனநாசம், பாதம் 4க்கு சுக சௌக்கியம்.

**பரணி**

இதில் பாதம் 1-2-3 பிறந்ததர்கள் ஆண் ஆனால் தகப்பனார்க்குக் கெண்டம், பெண் ஆனால் தாய்க்குக் கெண்டம், பாதம் 4க்கு தோஷமில்லை.

**ரோகிணி**

ஆண், பெண் ஏந்த மாதத்தில் பிறந்தாலும் மாமன் (அம்மான்) கெண்டம், நெய், நல்லெண்ணை, விளக்கெண்ணை மண்சட்டியில் கூட்டி வெள்ளிக்கம்பி முறுக்கி குழந்தைக்கு தலைவழியாக போட்டு கால் வழியாக 3 முறை எடுத்து வெள்ளி கம்பியை முறுக்கி எண்ணெயில் போட்டு தாய் குழந்தை உருவத்தை எண்ணையில் அம்மான் பார்த்தால் சாந்தி மாலை கோவிலில் திரிச்சல் போட்டு விளக்கு ஏற்றி கோவில் சுத்த நல்லது.

**பூசம்**

இந்த நட்சத்திரத்தில் கடக லக்கினத்தில் எந்த மாதத்தில் பிறந்தாலும் தகப்பனுக்கு கெண்டம்,

2ம் பாதத்தில் ஆண் குழந்தை பிறந்தால் தகப்பனாருக்கு கெண்டம். பெண் ஆனால் தாய்க்கு கெண்டம்.

**மகம்**

இந்த நட்சத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறப்பது பாதம் 1, ஆனால் தகப்பனாருக்கும், பாதம் 2 ஆனால் தாயாருக்கும், பாதம் 3 ஆனால் தன நாசமும், பாதம் 4 ஆனால் சுக சௌக்கியம் ஏற்படும்.

**உத்திரம்**

இந்த நட்சத்திரத்தில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1க்கு தகப்பனாருக்கும், 2ம் பாதம் ஆண் ஆனால் தகப்பனாருக்கும் கெண்டம், பெண் ஆனால் தாயாருக்கும் கெண்டம். 3, 4ம் பாதம் ஆனால் தோஷமில்லை.

**ஆஸ்தம்**

இந்த நட்சத்திரத்தில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1,2 தோஷமில்லை. 3ம் பாதம் ஆண் ஆனால் தகப்பனாருக்கு கெண்டம், பெண் ஆனால் தாயாருக்கு கெண்டம். 4ம்பாதம் ஆனால் தோஷமில்லை.

**சித்திரை**

இந்த நட்சத்திரத்தில் ஆண் (அல்லது) பெண் பிறப்பது பாதம் 1-2-3 ஆண் ஆனால் தகப்பனாருக்கு கெண்டம், பெண் ஆனால் தாயாருக்கு கெண்டம். 4ம் பாதம் ஆனால் தோஷமில்லை. (பிதாவுக்கு) நிம்மதி குறைவு

**பூராடம்**

இந்த நட்சத்திரத்தில் எந்த பாதமாயினும் தனுர் லக்கினமென்றால் தகப்பனாருக்கு கெண்டம், ஆண், பெண் எதுவாயினும் தோஷமாகும்; பாதம் 1க்கு தகப்பனார் கெண்டம், பாதம் 2க்கு தாயாருக்கு கெண்டம், பாதம் 3க்கு மூத்தோர் கெண்டம், பாதம் 4க்கு தாய் சகோதரருக்கு கெண்டம்.

**உத்திரட்டாதி**

இந்த நட்சத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறப்பது பாதம் 1க்கு ஆண் ஆனால் தாயாருக்கு கெண்டம். 2-3-4 பாதமானால் எவருக்கும் தோஷம் கிடையாது.

**ரேவதி**

இந்த நட்சத்திரத்தில் ஆண் அல்லது பெண் பிறப்பது பாதம் 1-2-3 ஆனால் தோஷமில்லை, பாதம் 4 ஆனால் தாய் - தந்தையார் உடன் பிறந்தவர்களுக்கு கெண்டம், சிலர் ஆண் ஆனால் தகப்பனாருக்கும் பெண் ஆனால் தாய்க்கும் கெண்டம் என்பார்கள்:

## அனுஷம் நட்சத்திரம்

அனுஷம் நட்சத்திரம் ஆண், பெண் ஜெனனமாயின் மாமியருக்கு ஆகாது.

விசாகம் - மைத்துனருக்கு ஆகாது.

கேட்டை - ஜேஷ்ட புத்திரனுக்கு ஆகாது.

மூலம் - மாமனாருக்கு ஆகாது

ஜேஷ்ட நிவர்த்தி - ஜேஷ்டகுமாரத்தி ஜேஷ்ட மாதம்

(ஆனி) அந்த மூன்றும் சேரக்கூடாது.

*விருந்துண்ண நாள் (பலன்)*

திங்கள், புதன், வெள்ளி, சனி, உத்தமம், வியாழன், வெறுப்பும், ஞாயிறு பகை கூடாது (திதி) வளர்பிறை (சுக்லபஷம்) அஷ்டமி நவமி கூடாது மற்ற திதிகள் உத்தமம் நட்சத்திரம் ரோகிணி.

மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், உத்திரம், அஸ்தம் சித்திரை, அனுஷம் உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, உத்தமம் (லக்கினம்) ரிஷபம், மிதுனம் கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு மகரம், கும்பம், உத்தமம்.

***கெட்ட நட்சத்திரங்களில் மரணம் சம்பவித்தால் இறந்த வீடு முடிப்பட வேண்டிய மாதங்கள்.***

அவிட்டம், 6மீ கிருத்திகை 3மீ, ரோகிணி 5 மீ சதயம் 6மீ புனர்பூசம் 3மீ மகம் 5மீ பூரட்டாதி 6மீ உத்திரம் 3மீ, மிருகசிரீஷம் 2மீ, உத்திரட்டாதி 6மீ ரேவதி 6மீ, சித்திரை 2மீ, விசாகம் 3மீ, உத்திராடம் 3மீ இவை திரிபாத, நட்சத்திரங்களாம்.

## இத்துடன் மூன்றாம் பாகம் முற்றும்